பேராசிரியரின்

வைணவப்பயணம்

ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

EBOOK
மின்நூல்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்

தொண்டைநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறுகளும்

சோழநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்



ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN:978-81-943850-2-8

பேராசிரியரின் வைணவப்பயணம்
ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தொகுப்பு
நூற்றாண்டுக்குழு

ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

பேராசிரியரின் வைணவப்பயணம் ~ ஒரு திறனாய்வு

All rights are reserved. No part of the publication may be reproduced,
stored in a retrieval system(including but not limited to computers,
disks, external drives, electronic or digital devices, e-readers, websites),
or transmitted in any form or by any means(including but not limited to
cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical,
recording, electronic, digital versions) without the prior written permission of the publisher,
not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதல் பதிப்பு — நவம்பர் 2019

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

NA SUBBU REDDIAR 100 EDUCATIONAL TRUST
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN:978-81-943850-2-8

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்

12.8.1928 <><> 29.12.2015

தமிழண்ணல்

(இராம பெரியகருப்பன்)

(பேராசிரியரின் கெழுதகை நண்பர்)

பொருளடக்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக
ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)

ஆய்வேடு

Compilation of Project Reports submitted by the Recipients of '**NSR100 Kamatchi Ammal Fellowship**' provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in the Department of Folklore, Tamil University, Thanjavur, Tamilnadu

வ.எண்	மாணாக்கர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	இரா வித்யா பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும் பாண்டியநாட்டுத் திருப்பதிகள்
02	ஆ ஜெயாம்பிகா தொண்டைநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறுகளும் தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
03	மு சுமிதா சோழநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும் சோழநாட்டுத் திருப்பதிகள்

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான ***"கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு"*** எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** மற்றும் **NSR100 Research Fellowship** வழங்கி வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நாட்டுப்புறவியல் துறை பரிந்துரைத்த மூன்று ஆய்வியல் நிறைஞர்கட்கு ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் ஆய்வியல் நிறைஞர்கட்கு நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும், உதவித்தொகையும் வழங்கப்பெற்றன.

திறனாய்வு செய்த மாணாக்கர்கள்:

இரா வித்யா

ஆ ஜெயாம்பிகா

மு சுமிதா

ஆய்வேட்டின் தலைப்புகள்:

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்

தொண்டைநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறுகளும்

சோழநாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்

தெரிவு செய்யப்பெற்ற பேராசிரியரின் நூல்கள்:

பாண்டியநாட்டுத் திருப்பதிகள்
தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
சோழநாட்டுத் திருப்பதிகள்

அவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று

பேராசிரியரின் வைணவப்பயணம்
ஒரு திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2018-2019)
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நூலாக வெளியிடப் பெறுகின்றன. நூலின் ஒரு படி ஒவ்வொரு மாணாக்கர்கட்கும், 3 படிகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பெற இருக்கின்றன.

நூற்றாண்டுக்குழு

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து, திருவரங்கம்
பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை
முடிய 20 திருத்தலங்களை பற்றியும், அங்குப்
பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார
எம்பெருமான்களைப் பற்றியும் விளக்குகின்றார்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-1-6

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1 1981

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் ஜி இராமாநுஜம்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் ஜி. இராமாநுஜம்)

''சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்'' என்று முமுட்சுப்படி பேசும். இதுவே சேதநருக்கு நலம் அளிப்பதெனக் கொண்டனர் ஆழ்வார் பெருமக்கள். இந்த அர்ச்சாவதார எம்பெருமான்களை 108 என்று கணக்கிட்டு கூறுபவர்களின்மீது பாசுரங்கள் பாடிப் போற்றியுள்ளார்கள். இந்த எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ள சோழ நாட்டுத் திவ்விய தேசங்கள் 40. இந்த நூல் திருவரங்கம் பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை முடிய 20 திருக் கோயில்களைப் பற்றியும் அங்குப் பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களைப் பற்றியும் கூறுவது. ஏனைய 20 திருத்தலங் கள் பற்றி அடுத்த பகுதியில் வெளிவரும் போலும்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் என்பதை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயின்றபோதே அறிவேன். வைணவ சமயத்தைச் சார்ந்த நான் இன்று வைண சமயத்தில் பேராசிரியர் ரெட்டியார் இவ்வளவு ஊற்றம் பெற்றிருப்பதையும் ஆழ்வார் பாசுரங்களில் மிகவும் ஆழங்கால் பட்டிருப்பதையும் காணும்போது எனக்குப் பெரு வியப்பு ஏற்படுகின்றது. ஆழ்வார் பாசுரங்களில் இவர் தன்னைப் பறிகொடுத்திருப்பதை நூலெங்கும் காணலாம். ஆங்காங்கு வைணவ தத்துவக் கருத்துகளை எடுத்துக் காட்டியிருப்பது இத்திருத்தலப் பயண நூலுக்கு பொலிவும் அழகும் ஊட்டி யிள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறும் 'மாயோன்' தமிழ் நாட்டில் கண்ணனாக வளர்ந்ததையும் இதுவே தமிழ் நாட்டார் கிருஷ்ணபக்திக்கு முதலிடம் தந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் (பக்கம்-15) ஆசிரியர் சுட்டியுள்ளது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

வைணவ சமயம் கூறும் அர்த்த பஞ்சக ஞானம் (பக். 31-33) சரீர - சரீரிபாவனை (பக். 36-39, 142-144) இதனை விளக்க ஈட்டாசிரியர் காட்டும் எடுத்துக் காட்டு (பக். 41-42), இறைவன் மூன்று காரணங்களாக இருக்கும் நிலை (பக். 46-47), பெரிய பிராட்டியாரின் புருஷகாரம் (பக். 68), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பெற்ற வரலாறு (பக். 74-75), வைணவ தத்துவ விளக்கம் (பக். 138-140) அழகின் தத்துவமே ஆண்டவன் தத்தும் (பக். 152-155) போன்ற கருத்துகள் நூலினைப் படிப்போருக்கு ஓரளவு வைணவதத்துவம் பற்றிய சிறு சிறு விளக்கங்களாக அமைந்திருப்பது போற்றத் தக்கது. ஆங்காங்குக் காட்டப் பெற்றுள்ள பாசுரங்களின் விளக்கம் படிப்போரிடம் பிரபந்தத்தைப் பயிலவேண்டும் என்ற அவாவை எழுப்புவதாக அமைந்துள்ளது. வியாக்கியாதாக்கள் கூறியுள்ள குறிப்புகளைச் சுட்டி உரைத்திருப்பது வியாக்கியானங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை நம்மிடம் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்நூல் படிப்போருக்கு ஆராவமுதமாய், தெவிட்டாத தெள்ளமுதமாய் இனிக்கின்றது என்று கூறின், அது மிகையாகாது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவைப் பாடுபட்டுப் பெற்றவர். அத்துறைகளில் எல்லாம் பன்னூல்களை எழுதிக் குவித்திருக்கின்றார். இன்றும் எழுதிக் கொண்டே இருக்கின்றார். பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் தன் முயற்சியால் நிறுவி அதன் தலைவராக இருந்து பணியாற்றியவர். இதில் இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெறவேண்டியது. இவருடைய பல துறை அறிவு, ஆட்சித் திறன், விடா முயற்சி, எண்ணியதைச் செய்து முடிக்கும் திண்ணிய ஆற்றல் இவை யனைத்தும் ஒருங்கே யமைந்து ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அதைச் சிறப்புற வளர்க்கும் திறன் இவரிடம் அமைந்து கிடப்பதை நேரில் பார்க்கின்றேன். இத்தனைக்கும் மேலாக, இவருடைய தெய்வ பக்திக் கொப்பத் தமிழ் பக்தியும் இவரிடம் நிறைய உண்டு. பலதுறை அறிவு நூல்கள் தமிழில் பெருகினாலன்றி தமிழ் ஏற்றம் பெறாது என்ற அதிராக் கொள்கையை யுடையவர். இவர், எல்லாம் இறைவன் செயலால் தான் நடைபெறும் என்ற நம்பிக்கையுடையவர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் தமிழ்ப் பணியாற்றியதால் திருவேங்கடவன் திருவருள் இவர்மீது வெள்ளங் கோத்திருப்ப

தாகவே கருதுகின்றேன். ஓய்வு காலத்திலும் தளராது எழுதி வருவதைப் பாராட்டுகின்றேன். அதுவும் தத்துவம், சமயம் இவைபற்றிய நூல்களை எழுதி வருவது பாராட்டற் பாலது. வயதிற்கும் ஏற்றது. இவர்தாம் முயற்சி வெல்க. இவர் நோய் நொடியின்றி நெடிது வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒல்லும் வகையெல்லாம் பணியாற்றவேண்டும் என்று இறைவனை நினைந்து வாழ்த்துகின்றேன்.

ஜி. இராமாநுஜம்

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து,
திருத்தலங்களின் பெருமைகளை விளக்கியிருக்கும்
பாங்கு நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச்
சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை
நம்மிடம் எழுப்புகின்றது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-2-3

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2 1981

வழங்கியோர்:

பு.ரா.கோகுலகிருஷ்ணன்
தலைமை நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்



அணிந்துரை

சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி
பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி) பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சியின் விளைவிலே வெளிவருகிறது. உழைப்பால் உயர்ந்து, உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப் பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும், அறிவாற்றலும், ஆழ்ந்து ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள். சமய நூல்கள் செந்தமிழைப் பெரிதும் வளர்த்துள்ளமை நம் தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாடாகும். சைவ நெறியும், பௌத்த நெறியும், சமண நெறியும், வைணவ நெறியும் இன்பத்தமிழ் பாடி எண்குணத்தான் பெருமையினைத் தமிழிலே போற்றி மகிழ்ந்துள்ளது.

'தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதிய' *பெருமை வைணவப் பாசுரங்களுக்கு மிக உண்டு.* ***'வேதம் அனைத்திற்கும் வித்தாகும் சோதை தமிழை'*** *வில்லிபுத்தூராரின் கோதையின் திருப்பாவையில் கண்டு மகிழ்கின்றோம். திருப்பதிக்கும், தென்மண்டலத்திலே இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டும் வைணவம் சொந்தமல்ல. சோழநாட்டுத் திருப்பதிகளைக் கண்ணுறுங்கால் வைணவம் செழித்து வளர்வது நன்கு புலப்படும் என்பதனைப் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை நம் கண்முன் தம் எழுத்தோவியத்தின் மூலம் சித்திரித்துக் காட்டுகின்றார். இந்நூலில் அருமையான வைணவ தத்துவங்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதியுள்ள பான்மை ரெட்டியார் அவர்களுடைய ஆழமான அறிவினை எடுத்துக்காட்டுகின்றது.* ***'திராவிட சிசு'*** *என்று ஆதிசங்ககரரால்*

வழங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ஒரு குறளாய் இருநில மூவடிமண் வேண்டி என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்தார என்ற நிகழ்ச்சியைப் பேராசிரியரின் இந்த நூல் மூலம் அறிந்து வியப்புற்றேன்.

இறைவனுடைய அபய முத்திரை குற்றம் புரிந்தவாகளையும் திருத்தும் தன்மைத்து என்று பொருள்பட ரெட்டியார் அவர்கள் அபய முத்திரையை விளக்கி,

உங்கள் குறங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா. என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்.

என்பது அன்பைக் காட்டும் வாத்சலயத்தின் விளக்கம் என்று எழுதியுள்ள பான்மை நம்மையெல்லாம் கவர்கின்றது. இதே கருத்தை நாவுக்கரசர்,

"பிழைத்தோர் பிழைப்பு அறியவல்ல அடி"

என்று இறைவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடுகின்றார்.

திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழுப்புகின்றது. குறிப்பாக, **'தலைச்சங்காடு'** என்ற திருப்பதியை திரு. ரெட்டியார் அவர்கள் உதாரணத்தோடும், தகுந்த ஆதாரங்களோடும் விளக்கி, இவ்விடம் ஒரு காடாக இருந்ததாகவும், காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து சிறந்த சங்குகள் இங்கு விற்பனைச் செய்யப்பட்டனவாகவும், அதனால் இந்த இடம் **'தலைச்சங்கம்'** என்று பெயர் பெற்றுப் பிறகு **'தலைச்சங்கக்காடு'** — தலைச் சங்காடு என்று மருவியது என்பதனை அழகாக எடுத்து விளக்குகின்றார். இத்தகைய அருமையான விளக்க உரைகள் எம்பெருமான் எழில் உருவத்தின் தத்துவங்களையும், அவர் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் பெருமைகளையும் எடுத்து இயம்புகின்றன.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்ல தமிழறிஞர். அறிவு எப்போதுமே ஓய்வதில்லை. உள்ளத்தில் இளமையும், அதன் காரணமாகச் சிந்திக்கும் திறமையும், இவற்றிற்கெல்லாம் மேலாக ரெட்டியார் அவர்களுடைய ஆழ்ந்த

படிப்பும், அவர்தம் தமிழ்ப் பணியை, ஆராய்ச்சித் திறனைத் தொடர்ந்து செய்யத் தூண்டுகிறது. இத்தகைய அறிவாற்றல் நிறைந்தவர்களுடைய பணி நம்முடைய சமுதாயத்திற்கு மிகவும் தேவை. ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகள் பலவற்றையும் இவ்வையகம் அறியும்படி விளக்க உரைகள் எழுதுவார் என்ற நம்பிக்கை எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் உண்டு.

வாழ்க சுப்புரெட்டியார் அவர்கள்! வளர்க அவர்தம் தெய்விகத் தமிழ்த் தொண்டு!

— பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சென்னை — 20

30–06–1981.

சோழ நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (எம்..ஃ.பில்.,)

பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

மு. சுமிதா

பதிவு எண் : 4442

நெறியாளர்

முனைவர் நா. மாலதி

உதவிப் பேராசிரியர்

நாட்டுப்புறவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010

நவம்பர் - 2019

நன்றியுரை

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற கொள்கை உடைய தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பில் அனுமதித்து அப்பட்டத்தை நிறைவு செய்ய எனக்கு வாய்ப்பளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய பதிவாளர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து கொடுத்து ஆய்வு செம்மையுறக் கருத்துக்கள் பல கூறி வழிகாட்டி ஐயங்களுக்குச் சரியாக விளக்கம் அளித்த மதிப்பிற்குரிய ஆய்வு நெறியாளர் பேராசிரியர் முனைவர் நா.மாலதி அவர்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வு செய்ய அனுமதி அளித்த மொழிப்புல முதன்மையர், மற்றும் துறைத் தலைவர் முனைவர் இரா.காமராசு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு தொடர்பான செய்திகளை வழங்கி ஊக்கமளித்த நாட்டுப்புறவியல் துறை பேராசிரியர்கள், அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய என் கல்வி வாழ்க்கைக்கு வழிகாட்டி என்னை செம்மைப்படுத்திய என் பெற்றோர் நா.முருகையன், மு.செல்வராணி, மற்றும் சகோதரன் மு.வெற்றிவேல், மு.ஐயப்பன், அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்விற்கு முழு வழிகாட்டியாக இருந்து உதவிய என் அன்பு தோழி ச.அருணா மற்றும் அன்பு சகோதரனான மோகன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு தொடர்பான நூல்களைத் தந்து உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்

(மு.சுமிதா)

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1
1.	தல வரலாறு	5
2.	வழிபாட்டு முறைகள	51
3.	வழக்காறுகள்	87
	முடிவுரை	117
	துணை நூற்பட்டியல்	120
	பின்னிணைப்பு 1. வினாநிரல் 2. தகவலாளர் பட்டியல் 3. நிழற்படம்	

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஆ.	-	ஆய்வேடு
உ.ஆ.	-	உரையாசிரியர்
கு.வ.வ.வ.	-	குந்தவை வளநாடு வரலாறும் வழிபாடும்
குறள்.	-	திருக்குறள்
சோ. நா. தி.	-	சோழநாட்டுத் திருப்பதிகள் (பாகம். 1)
சோ. வ.	-	சோழர் வரலாறு
த. நா.	-	தமிழக நாட்டுப்புறவியல்
த. நா. பா.	-	தமிழர் நாட்டுப் பாடல்கள்
த. நா. வ.	-	தமிழ் நாட்டு வரலாறு
த. த. பு.	-	தமிழில் தலபுராணங்கள்
தெ. ச. ம.	-	தெய்வங்களும் சமூக மரபுகளும்
தொல். பொரு.	-	தொல்காப்பியம் பொருளதிகாரம்
நா. சு. ப.	-	நா. சுப்புரெட்டியரின் பன்முகம்
நா. பு.	-	நாட்டுப்புறவியல்
நா. வழக். க. ஆ.	-	நாட்டார் வழக்காற்றில் களஆய்வு
நா. வ. சி. அ.	-	நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்
நூற்.	-	நூற்பா

ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
ப. ஆ.	-	பதிப்பாசிரியர்
ப. த.	-	பண்பாட்டு தளங்கள்
பா.	-	பாடல்
ம.	-	மலர்கள்
மேலது.	-	மேற்கூறியது
வா. ம.	-	வாழும் மரபுகள்
வை. தி.	-	வைணவ திவ்ய தேசம் 1
வை. தி. ம.	-	வைணவ திருத்தல மகிமை 108
வை. செ.	-	வைணவச் செல்வம்

முன்னுரை

காவிரி நதி நீர் பாயும் சோழ நாடானது இயற்கை வளங்களையும், கலைகளையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் உள்ளடக்கியது. நம் முன்னோர் மரபில் வாழ்ந்த அரச மரபினர் விட்டுச் சென்ற தொழில் எச்சங்கள் நமக்கு சான்றாகவும் ஆவணங்களாகவும் கிடைத்துள்ளன. அவைகளின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் செய்திகளை வெளிக் கொண்டு வருவதற்கும் வழிவகை செய்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமையான நம்பிக்கைகள், மரபுகள், வாழ்வியல்கள், கோவில்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஆகியவற்றின் மூலம் மனிதனின் அடிப்படைத் தேவைகளையும், இறை வழிபாட்டையும் அறிந்துக் கொள்ளலாம். முதல் இயலான தலவரவாற்றில் சோழ நாட்டுத் வைணவத் திருப்பதிகள் உருவான வரலாறும், வழிபாட்டு முறைகளும், இறை நம்பிக்கைகளும், ஆலயத்தின் பெருமைகளையும், புராணச் செய்திகளையும், வைணவத் திருத்தலங்களின் நிலவியல் அமைவுகளையும், திருவிழாக்களையும், அறிந்துக் கொள்ள முடிகிறது. சுப்புரெட்டியாரின் கண்ணோட்டத்தில் உருவான வைணவ சடங்கு சம்பிரதாயங்களையும், சோழ நாட்டு நாட்டுப்புறக் கோவில்களில் காணப்படும் நாட்டார் தெய்வ வழக்காறுகளையும் நாட்டார் சொற்களையும் அவை வழங்கும் விதங்களையும் அறிய முடிகிறது. சுப்புரெட்டியார் குறிப்பிடுவது போல சோழநாட்டு திருப்பதிகள் இருக்கும் இடம், மூலவர் தாயார் விபரங்கள், ஆழ்வார்கள் மங்களசாசனம் செய்த விபரங்கள், எவர் எவர்க்கு மூலவர் பிரதியட்சம் ஆனார் என்ற விபரங்கள், தலபுராணம், தல விமான அமைப்பு, தல விருட்சம், தல தீர்த்தம், போக்குவரத்து வசதிகள், ஆகியவை குறிப்பிடப்படபட்டுள்ளது. எனவே வைணவத் தலங்களின் விபரங்கள் அனைத்தும் அறிந்துக் கொள்ள முடிகிறது. மனதில் அத்தலத்திற்கே சென்று திருமாலை வழிபடும் உணர்வினையும் பெற முடிகிறது.

திருமால் கோவில்கள் சோழநாட்டில் ஏராளமாகக் காணப்பட்டாலும் காலத்தின் அடிப்படையில் வரலாறு விளக்கும் விதமாகச் சிலவகை கோவில்களே திருப்பதிகளாகப் அமைந்துள்ளன. அவைகளைப் பற்றிய சான்றுகள் வெளி நாட்டுக் குறிப்புகளிலும் காணப்படுகின்றன. வைணவத் திருப்பதிகளின் வழிபாடுகள் கோவில்களைப் புனரமைப்பதற்கும், உறவுகளை இணைப்பதற்கும், இறை நெறிகளை வெளிக் கொண்டு வருவதற்கும் மன அமைதிக்காக உருவாக்கப்பட்ட பண்டைய தமிழர்களின் முறையாகும். சிலைகள் அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடத்தப் படுகின்றன. பொருளாதார ரீதியாகவும் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. கோவில்களின் வருமானத்தைப் பெருக்கி கொள்வதற்கும், புதிய கட்டிடங்களை உருவாக்கி கொள்வதற்கும் வழிவகை செய்கின்றன. வைணவப் புராணங்களின் ஆகமங்கள் செய்து முடிக்கப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறையானது சாதி சமய

ஒற்றுமையைக் கடைப்பிடிப்பதோடு சமூக நல்லிலக்கணத்தை உருவாக்குகின்றன. கோவிலில் அமைந்துள்ள வைணவச்சாரியார்களின் வழிக்காட்டுதல் மூலம் பக்தர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்க திருமாலை பிரார்த்தனை செய்துக் கொள்ளுதலும், தோஷங்கள் விலக பூஜைகள் செய்தலும் நடைபெறுகின்றன. திருமாலுக்கு நடக்கும் சிறப்பு பூஜைகள் மக்களிடையே பக்தி உணர்வைத் தூண்டுகின்றன.

சோழ நாட்டு மக்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், பழமொழிகள், பேச்சுக்கள், நாப்புரட்டுகள், விடுகதைகள், தெய்வங்களின் தோற்றப் பின்னணி கதைகள், நாட்டு வளம் சார்ந்த செய்திகள், ஆகியவை மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை வழிபடும் முறைகள், தெய்வங்களுக்குத் தாலாட்டுப் பாடல்கள், இறை வழிபாட்டு பாடல்கள், தூது பாடல்கள், ஆகியவை பாடி பூஜைகள் செய்கின்றனர். நாட்டார் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் விழாக்கள், நாட்டார் தெய்வங்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கிடா வெட்டுதல், முளைப்பாரி எடுத்தல், எசவுக்குடம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், மாட்டுச்சீட்டுப் போடுதல், தேர்த்திருவிழா நடத்துதல், போன்றவை சோழ நாட்டு நாட்டுப்புறத் தெய்வங்களை வணங்க மக்களின் வழக்காறுகளாக விளக்கப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் நாட்டுப்புறத் தெய்வங்களில் இவ்வழக்காறுகள் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இவையே வழக்காறுகளாக மூன்றாவது இயலில் கூறப்பட்டுள்ளன.

ஆய்வு தலைப்பு

“சோழ நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும்” என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு நோக்கம்

சோழ நாட்டு வைணவத் திருப்பதிகளில் காணப்படும் தல வரலாறு, சோழ நாட்டுத் திருப்பதிகளின் வழிபாட்டு முறைகள், சோழ நாட்டுப்புறத் தெய்வங்களின் வழக்காறுகள், ஆகியவற்றை வெளிக்கொணர்வதே ஆய்வு நோக்கம் ஆகும்.

ஆய்வுக் கருதுகோள்

ஆய்வு அணுகுமுறை விளக்கமுறை ஆய்வாகவும், வரலாற்று முறை ஆய்வாகவும் அமைந்துள்ளது. இதில் கள ஆய்வு முறையும், நேர்காணல் முறையும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு மூலங்கள்

பேராசிரியர் நா.சுப்புரெட்டியர் அவர்கள் எழுதிய சோழ நாட்டுத் திருப்பதிகள் என்னும் நூலை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வ பகுப்பின் விளக்கம்

சோழ நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும் என்ற தலைப்பில் முதலாவது இயலாகத் **"தல வரலாறு"** அமைந்துள்ளது. இந்தத் தல வரலாறுகளை முழுமையாகக் நோக்கும் போது கோவில் பெருமைகளையும், ஆழ்வார் பாசுரங்களையும், பற்றி அறிய முடிகிறது. அது மட்டும் அல்லாமல் புராண வரலாறுகளையும், ஊரின் சிறப்புகளையும், இயற்கை வளங்களையும், மேலே கொடுக்கப்பட்டுள்ள தலவரலாறுகள் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

"வழிபாட்டு முறைகள்" என்னும் இரண்டாம் இயலில் வைணவத் திருப்பதிகளின் வழிபாடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. வைணவத் திருப்பதிகளில் திருமாலுக்கு ஒவ்வொரு நாளும் எத்தனைக் காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன. வார வழிபாட்டின் சிறப்பு பூஜைகள் எவ்வாறு நடைபெறுகின்றன. பெருமாளுக்குப் படைக்கப்படும் உணவு முறைகள் மற்றும் வைணவத் திருப்பதிகளில் காணப்படும் திருவிழாக்கள், மாதாந்திர திருவிழா முறைகள், குடமுழுக்கு பற்றிய விவரங்கள், தீர்த்தவாரி திருவிழா, திருவிழா அன்று நடைபெறக்கூடிய சிறப்பு பூஜைகள், பூஜை செய்வோரின் பண்புகள், கோவில் வருமானமும் செலவீடும், பெருமாளை வழிபடும் முறைகள், வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள், போன்றவை இவ்வியலில் விளக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

"வழக்காறுகள்" என்னும் மூன்றாவது இயலில் வழக்காறுகள் பற்றிய விளக்கம், சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே காணப்படும் வழக்காறுகள், சோழ நாட்டின் இயற்கை வளம், சோழ நாட்டின் எல்லைகள், சோழநாட்டுப்புற தெய்வங்களின் நாட்டுப்புற தெய்வ வழிபாடு, சோழ நாட்டுப்புற தெய்வங்களான விளக்கேற்றி அம்மன் வழிபாடு, விளக்கேற்றி அம்மனுக்கு அவ்வூர் மக்கள் விளக்கேற்றுதல், விளக்கேற்றுவதால் நடைபெறும் நன்மைகள், அம்மனுக்கு காப்புக்கட்டுதல் தேர்த்திருவிழா நடத்துதல், தேர்கட்டுதல் மதுக்காட்டுதல், பள்ளாடல் என்னும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் மாட்டுச்சீட்டு எழுதும் முறை, பொங்கள் வைத்தல் மாட்டுச்சீட்டு போடுவதால் ஏற்படும் நன்மைகள், விளக்கேற்றியம்மனை வழிபட்டால் ஏற்படும் நன்மைகள், போன்றவை வழக்காறுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாடியம்மனை வழிபடும் மக்கள் நாடியம்மனுக்குப் பொங்கல் வைத்தல், பாலி போடுதல், அதாவது முளைப்பாரி எடுத்தல், முளைப்பாரி எடுப்பதால் ஏற்படும் நன்மைகள், எசவுக்குடம் எடுத்தல்,

போன்றவை அவ்வூர் மக்களிடையே நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற தெங்வங்களில் ஒன்றான அய்யானாரை வழிபடும் மக்கள் அய்யனாருக்குச் சிறப்பு விடுதல் அதாவது உயிர் பலியிடுதல் போன்ற செயல்களைச் செய்து வருகின்றனர். அய்யனாரை வணங்கும் மக்கள் அய்யனாரின் மீது நம்பிக்கை கொண்டு அய்யனார் முன்பு பூப்போட்டுப்பார்த்தல், ஆணையிடுதல் என்பது சத்தியம் செய்தல், பல்லிக் குறிபார்த்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர். இவையே வழக்காறுகளாக இவ்வியலில் விளக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

இயல் - 1

தல வரலாறு

சோழ நாட்டு திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும் என்ற தலைப்பில் முதலாவது இயலாகத் தலவரலாறு அமைந்து உள்ளது. இதில் தலப்புராணங்கள் பற்றிய விளக்கம், தமிழில் தலப்புராணம் சிறு விளக்கம், சைவ வைணவ பற்றிய குறிப்பு, தலப்புராணத்திற்கு நூல் எழுதிய ஆசிரியர் விளக்கம், பேராசிரியர் நா.சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறு, வைணவத்தில் நா.சுப்புரெட்டியாரின் ஈடுபாடு, சோழ நாட்டு வைணவத் தலங்களின் எண்ணிக்கை, இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு தலங்களிலும் தலத்திற்குச் செல்லும் வழி, அங்குள்ள மூலவர், தாயார் பற்றிய விவரங்கள், ஒவ்வொரு தலத்திற்கும் பாடல் பாடிய ஆழ்வார்கள், ஒவ்வொரு தலங்களின் புராண வரலாறு ஆகியவை விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

தலப்புராணம் பற்றிய விளக்கம்

பழைய வரலாறுகளுள் பெரும்பாலும் இறையருள் தொடர்புடைய செய்திகள் மிகுந்துள்ளவையே புராணங்கள் எனப்பெறும். மிக எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய கருத்துக்களை யாவரும் உணரும்படி நுல் வடிவில் வைத்து விளக்குதலும் கடினமான செய்திகளை விளக்க ஓர் உருவம் கொடுத்து எளிய இனிய கதைகளாகக் கூறுதலும், மனித வாழ்க்கையில் நடக்கும் சில உண்மை நிகழ்வுகளையும் விளக்கிக் கூறுவதாகவும் அமைவது தலவரலாறு ஆகும். தலம் என்பது கோவில் அமைந்து இருக்கும் இடத்திற்குத் தலம் என்று பெயர் அத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன் தோன்றிய நிலையைக் கூறுவது வரலாறு ஆகும்.[1]

தமிழில் தலப்புராணங்கள் சிறு விளக்கம்

மக்களால் வழங்கப்பெறும் பழங்கதைகளை நல்லிசைப் புலவர்கள் கேட்டுத் தங்கள் கற்பனையாலும் நாவன்மையாலும் அதனை விளக்கியும் விரித்து யாவரும் விரும்பும் வண்ணம் தொடர்நிலை செய்யுள் காப்பியமாகச் செய்கின்றனர். இந்தத் தொடர்நிலை காப்பியங்களைத் தான் தமிழில் தலப்புராணமாக வழங்கப்பெறுகின்றன. பழமை, பழங்கதை என்பதையே புராணம் உணர்த்தும் கடவுள் பற்றிய புராணங்கள் அனைத்தும் பெரும்பாலும் பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தனவாகவே அமைகின்றன. இதில் இறையருள் தலங்களைச் சிறப்பிக்கும் புராணங்கள் பெரும்பாலும் தமிழுக்கு உரியவையாக அமைகின்றன. என்றும் தமிழில் முதற் தலப்புராணமாக இலக்கியங்கள் தோன்றி அமைந்துள்ளன. எனினும் எண்ணிக்கை

அமைப்பிலும் சிறப்பிடம் தலப்புராணங்கள் தமிழுக்கே உரிய இலக்கிய வகையாக வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது எனினும் தமிழ் இடைக்கால வடமொழிச் சார்பு கருதி மான்மியம், மகாத்மியம், போன்ற வடமொழிப் பெயர்களைப் தாங்கினாலும் இவை தமிழ் இலக்கியச் சிறப்புடனே காணப்படுகின்றன. தமிழ் தலப்புராணங்கள் நூற்றுக்கணக்கில் காணக்கிடைக்கின்றன இவையெல்லாம் முதலில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு வந்து பின்னர் செய்யுள் வடிவில் பெருகி ஏட்டிலும் எழுதி வைக்கப்பெற்றன. பிற்காலத்தில் உரைநடை வளர்ச்சியின் காரணமாக வசன நடையிலும் இப்புராணங்கள் நூல்களாக மலர்ந்தன. இவ்வகையில் கி.பி 12-ம் நுற்றாண்டு தொடங்கி 20-ம் நுற்றாண்டு வரையில் சுமார் 400 செய்யுள் நடையிலான தமிழ்ப்புராணங்கள் பற்றி நம்மால் அறிய முடிகிறது. ஆனால் தமிழ் புராணங்கள் படிப்பதற்கு மிக எளிமையாகவும், மேன்மேலும் படிப்பதற்கு ஆர்வமும் தரக்கூடிய வகையில் தமிழ் தலப்புராணங்கள் அமைந்துள்ளன.[2]

சைவ, வைணவ புராணம் பற்றிய விளக்கம்

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் சிவபெருமான். இவர் சைவ சமயத்தின் முதற்கடவுளாக வணங்குகின்றனர். எனவே சிவபெருமானைப் பசுபதி என்றும் அழைக்கின்றனர் பசு என்பது உயிர்களையும்,பதி என்பது உயிர்களின் தலைவனான சிவபெருமானையும் குறிக்கும். எனவே சிவபெருமான் ஒருவரே உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தலைவனாகவும் இருக்கின்றார். என்ற உண்மையைக் கடைப்பிடித்து சிவபெருமானை வழிபடுகிற வழியே சைவ சமயம் ஆகும். சிவபெருமானது திருவடியை அடைய ஏற்ற வழியைக் காட்டும் சமயமாக சைவ சமயம் விளங்குகிறது என்பதை ஆன்றோர்கள் சுட்டுகின்றனர்.

“வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையொடுஞ் சைவமாஞ் சமயஞ் சாறு
முழ்பெறலரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவா ரருள்பெற்றாரே”3

எனச் சிவஞான சித்தியாரும்,

“சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொரு ளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பற்குச் சேரவாருஞ் சகத்தீரே.”[4]

எனத் தாயுமான சுவாமிகளும் அழைப்பர்.

“ஈண்டுநாற்பிறப்பினெழுவகைத் தோற்றத் தொன்பத்து நான்கெனுமிலக்க
மாண்டபல் பவத்திற் பன்முறைவினையான் மறிதரு முயிர்களை யெடுப்ப
வாண்டருளமல னநாதியிலுலக மாக்குழி யருத்தலத்தீர்த்தம்
காண்டகுமுர்த்தி யென்னமுன் றுருவாய்க் கண்ணகனுலகெலாங்கதித்து”5

இப்பாடல் வரிகள் சிவபெருமான் இந்தப் பரந்த உலகத்தில் தலம், தீர்த்தம், மூர்த்தி, என்னும் மூன்றின் வடிவமாய் விளங்கினார் என்பதை விளக்குகிறது.

இந்த மூன்றின் வடிவாய் விளங்கிய சிவபெருமானை மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் அதனை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவே சைவ புராணங்கள் தோன்றியுள்ளன. சைவ புராணங்கள் ஒவ்வொன்றிலும் சைவ சமயம் தொடர்பாக மக்கள் அறிய வேண்டிய செய்திகள் அனைத்தையும் சைவ தலப்புராணங்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. இயல்பாகவே தமிழ்நாட்டில் சைவர் மிகுதியாக இருந்த காரணத்தால் அவற்றிற்கான புராணங்களும் மிகுதியாக இருந்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

வைணவ புராணம்

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுபவர்கள் வைணவர்கள் ஆவார். ஆறு சமயங்களுள் திருமாலை முழு முதற் கடவுளாக வழிபடுபவர்கள் வைணவர்கள் எனப் பெயர் பெற்றனர். எனவே வைணவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்த ஒன்றாகவும் கருதப்படுகிறது. ஒன்பதாம் நுற்றாண்டில் நாதமுனிகள் காலத்தில் இருந்து தொடங்கி பின்னர் இராமனுசர் காலம் வரையில் வைணவப் பரம்பரை பிறந்து வளர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே வேதத்தின் சாரமாக வைணவ சமயம் விளங்குகிறது. வேதத்தின் சாரமாக விளங்குவன நம்மாழ்வாரின் திருப்பாசுரங்கள், திருவிருத்தம், இருக்கு வேத சாரம் எனவும் திருவாசிரியம் யசுர் வேத சாரம் எனவும், பெரியதிருவந்தாதி அதர்வண வேதசாரம் எனவும், ஆகம விதிகளின்படி உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை, ஆகிய இவைகள் அனைத்தும் வைணவ மதத்திற்கு உரியவையாகவும் விளங்குகிறது.[6]

வைணவ நுல்களாகக் கருதப்பெறுவது பதினெண்புராணங்களுள் ஒன்றான விஷ்ணுபுராணம், பாகவதம், நாரதீயம், காருடம், ஆகிய நான்கும் இதிகாசங்களில் பாரதமும், இராமயணமும், விஷ்ணு சகஸ்ரநாமம், என்ற தோத்திர நூலும் பன்னிரண்டு ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய பிரபந்தமும் அதனை விளக்க வந்த உரை நுல்களும் தான் வைணவ நூல்களாகக் கருதப்படுகின்றன. இருப்பினும் பதினாறாம் நுற்றாண்டில் ஏற்பட்ட சமய எழுச்சியின் காரணமாகப் பல பெரும் நூல்களும் வைணவத்தில் தோன்றலாயின. இதில் இரண்டு பாகவதங்கள் குறிப்பிடத்தக்கதாகும் வைணவத்தில் கூடற்புராணமும், திருக்குருகை மான்மியமும்

தலப்புராணங்களாகத் தோன்றின. இவ்விரண்டு புராணங்களுக்கு அடுத்து வைணவத்தில் தோன்றிய தலப்புராணங்கள் மிக மிகக் குறைவு.[7]

மேலும் பதினாறாம் நுற்றாண்டில் வைணவர்கள் தங்கள் கூட்டத்தைப் பெருக்குவதிலும் கோவில்களை அமைப்பதிலும் வழிபாட்டை நெறிப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்டு இருந்தனர். சாத்திரங்களை விளக்குவதிலுமே தங்களது முழு கவனத்தைச் செலுத்தினர். நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் பெருமையையும் சாத்திரங்கள் வியாக்கியானங்களின் பெருமையையும் போற்றிய அளவுக்கு இவர்கள் தலங்களின் பெருமையை மிகுதியாகப் போற்றவில்லை என்பதே உண்மை. எனவே சைவ புராணங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. ஆனால் வைணவ புராணங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளன என்பதைப் புராணங்களின் வழியாக அறிய முடிகிறது. எண்ணிக்கையில் குறைவாக வைணவ புராணங்கள் கிடைத்தாலும் அப்புராணங்கள் உள்ளடக்கத்தில் மிகச் சிறந்தனவாக அமைந்துள்ளன. ஆனால் பல வைணவத் தலங்களுக்குப் பிற்காலத்தில் உரைநடையில் தலப்புராணங்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றுக்கு மூலநுலாகப் பழைய புராணங்களைக் கொண்டே எழுதப்பெற்றுள்ளன.[8]

தலப்புராணத்திற்கு நுல் ஆசிரியர் விளக்கம்

ஒரு நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணம் அந்நாட்டில் தோன்றும் புலவர் பெருமக்களின் சிறப்பே முக்கியக் காரணமாகும். இந்நிலையில் தமிழ் மொழியில் தோன்றிய பேராசிரியர்கள் பலரும் நினைக்கத்தக்கவர்கள் காலந்தோறும் ஆட்சி செலுத்திய சங்க நூலாசிரியர்களும் வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் காலந்தோறும் நினைக்கத்தக்கவர்களாக உள்ளனர். இவ்வகையில் தமிழ் தலப்புராணங்களை இயற்றியளித்துள்ள ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். இன்று கிடைக்கக்கூடிய செய்யுள் நடையிலான தலப்புராணங்கள் சிலவற்றிற்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எனினும் இருநூறுக்கும் மேற்பட்ட தலப்புராண ஆசிரியர்களைப் பற்றி நாம் அறிய முடிகிறது.[9]

முதன் முதலில் தமிழில் தலப்புராணமாகக் கன்னிவான புராணம் தோற்றம் பெற்றது. இதன் ஆசிரியர் கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரைத் தலைவன் பரசதபக்கோளரி. இவர் குலோத்துங்கன் காலத்தவர் என்பதைக் கல்வெட்டுச் செய்தியால் அறிகிறோம். இந்நூல் இங்கு கிடைக்கவில்லை. இரண்டாவதாகத் திருவா

லவாயுடையார் திருவிளையாடல் புராணம் என்னும் நூல் இன்று நமக்குக் கிடைக்கும் பழமையான தலப்புராண நூலாகும்.இதன் ஆசிரியர் கி.பி முன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த பெரும்புகழ் பெற்ற புலியூர்நம்பி ஆவார். எனவே தமிழ் புராணங்கள் எழுதிய ஆசிரியர்கள் தற்பொழுது இல்லையென்றாலும் அந்த நூலாசிரியர் பெயர்களும், அவர்கள் எழுதிய நூல்களும் பல ஆண்டுகள் கடந்து

நிலைத்து நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது. தமிழ் புராண வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டு ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் இக்காலத்தில் 22 ஆசிரியர்கள் 41 புராணங்களைத் தோற்றுவித்துள்ளனர் என்பது வியக்கத்தக்கது.[10]

பதினேழாம் நூற்றாண்டில் தலப்புராணங்கள் எழுதுவதில் வல்லவராக சைவ எல்லப்ப நாவலரும், சிவப்பிரகாச சுவாமிகளும், பரஞ்சோதி முனிவரும் சிறப்பிடம் பெறுகின்றனர் பதினெட்டாம் நூற்றாண்டில் தலப்புராண வளர்ச்சிக்குப் பெருங்காரணமாகத் திகழ்ந்தவர்கள் சிவஞான முனிவரும், கச்சியப்ப முனிவரும் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனிப்பெரும் புலவராக விளங்கித் தமிழ் தலப்புராண வரலாற்றிலே மிகுதியான எண்ணிக்கையில் தலப்புராணங்களை இயற்றி சாதனை புரிந்தவர்களுள் மிக முக்கியமானவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவார். இவர் தலப்புராணம் எழுதுவதில் முதன்மையானவராகவும் திகழ்கிறார் மேலும் தலப்புராண நூலாசிரியர்களாகச் சொக்கலிங்கஞ் செட்டியார், நிரம்ப அழகிய தேசிகர், பொன்னாயிரங் கவிராய மூர்த்திகள், ஆதியப்பனார், கச்சியப்ப முதலியார், தஞ்சை சுப்பிரமணிய ஐயர், சிவஞான முனிவர்கள், அசலாம்பிகை அம்மாள் ஆகியோர் மட்டும் அல்லாமல் தலப்புராண ஆசிரியர்கள் இருநூறுக்கும் மேற்பட்டோர் இருக்கின்றனர் என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. தலப்புராணங்களுக்கு நூல் எழுதியவர்களுள் நா.சுப்புரெட்டியாரும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் 108 வைணவ திவ்விய தேசங்களை ஆய்வு செய்து தலப்புராணங்களை எழுதியுள்ளார்.[11] இவரைப் பற்றி விரிவான செய்திகள் வாழ்க்கை வரலாற்றில் கொடுக்கப்பட உள்ளது.

நா.சுப்புரெட்டியாரின் வாழ்க்கைவரலாறு

நா.சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள “சோழ வளநாடு சோறுடைத்து” .என்ற பெருமை பெற்ற சோழநாட்டின் தலைநகர் திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள பெரகம்பியில் 1916-ல் பிறந்தார். இவருடைய தந்தையார் திரு நல்லப்பரெட்டியார்,தாயார் திருமதி காமாட்சி அம்மாள் ஆவார். இவர் மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்ததால் தாய்மாமன் தயவிலும், தாயின் அரவணைப்பிலும் கோட்டத்தூரில் வளர்ந்து அங்கு உள்ள தொடக்கப்பள்ளியில் சேர்ந்து படித்தார். அதன் பிறகு துறையூரில் உள்ள நடுநிலைப் பள்ளியிலும் முசிறியில் உள்ள ஜில்லாபோர்டு உயர்நிலைப் பள்ளியிலும் சேர்ந்து படித்து தேர்ந்தார். பின்னர் திருச்சியில் உள்ள புனித ஜோசப் கல்லுரியில் வேதியியல் பிரிவில் பயின்று இளங்கலை பட்டம் பெற்றார். அதன் பிறகு சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து எல்.டி பட்டம் பெற்றார். இவருக்குத் தாய்மொழி தெலுங்காக இருந்தாலும்

தமிழின் மீது இருந்த தனியாத ஆர்வம் காரணமாக இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டங்களையும் பெற்றார். இவரது கல்வி பணி முதலில் பள்ளி தலைமையாசிரியராகவும், பின்னர் கல்லூரி பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராகவும் பின்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர், துறைத்தலைவர் எனப் பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் வரை இவரது பணி விரிவடைந்துள்ளது. மேலும் இவர் சென்னை அகாதெமி வெளியிட்ட தமிழ் அகர முதலியின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம் எமிரைட்ஸ் பேராசிரியராகவும் பணியாற்றினார். மேலும் இவரைப் பண்பாட்டு கலாச்சார மையம் கௌரவ இயக்குனராகவும் இவரைப் பெருமைப்படுத்தியது.[12]

சாகித்திய அகாதெமி ஆலோசனைக்குழு உறுப்பினர், தமிழக அரசு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழு உறுப்பினர், சென்னை, மதுரை, அண்ணாமலை, பெங்களூர், மைசூர், திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக்கழகங்களில் அகாதெமிக் கவுன்சில் உறுப்பினர் எனப் பல்வேறு பதவிகளை வகித்தார்.[13]

இவர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாகக் காரணமாகவும் இருந்தவர். எனவே இவரைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்க வேண்டும் என்று அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் விரும்பினார். ஆனால் இவர் அதனை ஏற்கத் தயக்கம் காட்டினார். ஏனெனில் தஞ்சை தமிழப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி ஏற்றுக் கொள்வது பெருமையான விஷயம் தான். ஆனால் நான் தராசு தட்டைப் போன்று நடுவுநிலையோடு செயல்படுவேன்.எது சரியோ அதை மட்டுமே செய்வேன் என்று கூறினார் எனவே பேராசிரியர் நா. சுப்புரெட்டியார் நேர்மையானவர், கண்டிப்பானவர் என்பதுடன் சட்ட விதிகளுக்கு மாறாக எதையும் செய்யத் துணியாதவர். எதற்கும் ஆசைப்படமாட்டார் என்பதற்கு இவை அனைத்தும் ஒரு உதாரணமாகவும் உள்ளது.[14]

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பெற்ற விருதுகள்

இவர் தமிழக அரசின் கலைமாமணி விருது, திரு.வி.க விருது, சி.பா.ஆதித்தனார் விருது, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் டி.லிட் பட்டம்,ஆய்வு மையத்தின் இராமனுஜர் விருது, கம்பன் கழகத்தின் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருது, இராஜா.சர் அண்ணாமலை செட்டியார் விருது, உலகத் திருக்குறள் மையத்தின் திருக்குறள் விருது, எனப் பல விருதுகளைப் பெற்ற பெருமையுடையவர்.[15]

பேராசிரியர் நா.சுப்புரெட்டியார் எழுதிய நூல்கள்

இவர் பணியில் இருந்து 36 ஆண்டுகள், ஓய்விற்குப் பிறகு 29 ஆண்டுகள் என இவரது தமிழ்ப் பணி 65 ஆண்டுகள் தொடர்ந்தது. அவரது வாழ்நாளில் இவர் எழுதிய மொத்த நூல்களின் எண்ணிக்கை 135 ஆகும். இவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் 2008-ல் கலைஞர் அவர்கள் ருபாய் 5 இலட்சம் தொகையை வழங்கி அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்கினார். இந்த 5 இலட்சம் தொகையை வைப்பு நிதியாக்கி அதில் வரும் வட்டியில் இருந்து பள்ளியில் படிக்கும் முதல் மூன்று மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவர் பத்துக்கும் மேற்பட்ட அறக்கட்டளைகளையும் நிறுவியுள்ளார். சான்றோர்கள் பலருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்.[16]

நா.சுப்புரெட்டியாரின் இல்லறவாழ்வு

இவர் செல்லப்பாப்பா என்ற நங்கையை இல்வாழ்க்கை துணைவியாக 1936-ல் ஏற்றார். இவருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் குழநதை பாக்கியம் இல்லாமல் இருந்தது. உறவினர்கள் கோவில் குளங்களுக்குச் சென்று வரும்படி அவரிடம் சொன்னார்கள். அதன்படி அவர் இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், திருச்செந்தூர், மதுரை, பழனி, ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, திருப்பதி, ஆகிய இடங்களுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொண்டார். அதன் பயனால் 1949-ல் துறையூரில் இராமலிங்கம் என்ற மகனையும், 1952-ல் காரைக்குடியில் இராமகிருஷ்ணன் என்ற மகனையும் பெற்று வளர்த்து படிக்க வைத்து திருமணமும் செய்து வைத்து அழகு பார்த்தார். சென்னையில் உள்ள முதல் மகன் இராமலிங்கம் அவர்களுக்கு இரண்டு மகள்களும், இரண்டாவது மகன் இராமகிருஷ்ணன் அவர்களுக்கு இரண்டு மகன்களும் உள்ளனர். பேராசிரியர் அவரது இரண்டு மகன்களின் பேரக்குழந்தைகளையும், கண்டு இன்புற்றார்.[17]

நா.சுப்புரெட்டியாரின் வெளீயீடு

இவரது வெளீயீடுகள் கவிஞர் உள்ளம்,தமிழ் பயிற்றும் முறை, கலிங்கத்துப்பரணி, அணுவின் ஆக்கம், காலமும் கவிஞர்களும், மனித உடல், கல்வி உளவியல், அறிவுக்கு விருந்து, இளைஞர் வானொலி, அதிசய மின்னணு, தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை, இல்லற நெறி, முத்தொள்ளாயிர விளக்கம், மலைநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், வைணவ உரைவளம், வைணவச் செல்வம் போன்ற இன்னும் எண்ணில் அடங்காத நூல்களை வெளியிட்டுள்ளார். எனவே நா. சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டும் மாணவர்களுக்குப் பயனுள்ள வகையில் பல

அறக்கட்டளைகளை நிறுவியும், பல சாதனைகளையும், பல அரிய பெரிய செயல்களையும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[18]

நா.சுப்புரெட்டியாரின் வைணவ ஈடுபாடு

நா.சுப்புரெட்டியார் அவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் தமிழ் வளர்க்கும் சான்றோர்களுள் தமக்கென தனி இடம் பெற்று திகழ்கின்றவர். பேராசிரியர் நா.சுப்புரெட்டியார் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இப்பேராசிரியரின் அனுபவ செறிவும் தமிழ்ப்புலமையும் அருள் நெறியும் தான் அவரை வைணவத்தின் மீது பற்றுக் கொள்ள காரணமாக இருக்கிறது. இவர் சைவ மரபினர் ஆயினும் இவர் சமயப் பொது நோக்கம் சார்ந்தவர். தாயுமான அடிகளின் சமரச ஞானத்திற்குத் திரு பேராசிரியர் ரெட்டியார் இலக்கியமாகத் திகழ்கிறார். இவர் வைணவத் திரு உலகுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். என வைணவ செல்வம் என்ற நூலில் உள்ள வாழ்த்துரையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.[19]

பி.எச்.டி க்குப் பதிவு செய்து கொண்ட அன்றே ஆழ்வார் பெருமக்கள் மங்களசாசனம் செய்த 108 திவ்விய தேசங்களைச் சேவிக்க வேண்டுமென்று என்ற எண்ணம் நா.சுப்புரெட்டியார் அவர்களின் உள்ளத்தில் தோன்றியது. அப்போது காரைக்குடியில் மூன்றாவது பருவம் படித்து வந்த அவருடைய இளைய மகன் அவருடன் செல்ல முதன் முதலில் சோழ நாட்டு யாத்திரை 1965-ல் செப்டம்பரில் தொடங்கியது. இவர் சோழ நாட்டில் திருவரங்கம், உறையூர் உத்தமர் கோவில், திருவெள்ளறை, அன்பில், திருப்பேர்நகர், போன்ற ஆறு திவ்விய தேசங்களையும், பாண்டிய நாட்டில் திருக்கோட்டியூர், திருமெய்யம் திருப்புல்லாணி திருக்கூடல், திருமோகூர், திருமாலிருஞ்சோலை, ஸ்ரீவில்லிப்புத்தூர், திருத்தன்கால் ஆகிய திவ்விய தேசங்களையும், சேவிக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்

பேராசிரியர் நா.சுப்புரெட்டியார் அவர்கள் மீண்டும் 1968-ல் ஜீலை திங்கள் அன்று அவருடைய மனைவி, மூத்த மகன் மற்றும் இளைய மகன் ஆகிய அனைவரும் குடும்பத்துடன் சென்று சோழ நாட்டு திருப்பதிகளில் திருவாரூரில் தங்கி திருக்கண்ணங்குடி, திருநாகை, திருக்கண்ணமங்கை, என்ற திருத்தலங்களையும், திருக்குடந்தையில் தங்கி திருக்குடந்தை, திருவிண்ணகர், நந்திபுரவிண்ணகரம், திருநறையூர், திருச்சேறை, திருவெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, ஆதனூர், திருத்தலங்களையும் தஞ்சையில் தங்கி திருத்தஞ்சை, திருக்கண்யூர், என்ற திருத்தலங்களையும் நா.சுப்புரெட்டியார் அவர்கள் சேவித்துள்ளார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது.

இவர் ஏற்கனவே, மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள் என்ற நூல்களை வெளியிட்டுள்ளார். அதில் சோழ நாட்டுத் திருப்பதிகள் என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாகப் பிரித்து இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இந்த இரண்டு பகுதிகளில் முதல் பகுதியில் 20 தலங்களையும் இரண்டாம் பகுதியில் 20 தலங்களையும் வெளியிட்டுள்ளார்.[20]

இதில் முதல் பகுதியில் உள்ள 20 தலங்களையும் இரண்டாம் பகுதியில் உள்ள ஒரு தலத்தினையும் ஆய்வு எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.இந்த 21 வைணவத் தலங்களின் தல வரலாறுகளைப் பற்றி விரிவாகக் காணலாம்.

சோழ நாட்டு வைணவ தலங்கள்

108 வைணவ திவ்விய தேசங்களில் மிக அதிக அளவில் 40 திவ்விய தேசங்களைக் கொண்டது சோழநாடு. இங்கு எழுந்தருளிய பெருமான்கள் அனைவருமே இயற்கை எழில் கொஞ்ச வயல் வெளிகளுக்கிடையே கோவில் கொண்டவர்கள் எனவே இவ் இயற்கைவளம் செழித்து ஓங்குகின்ற சோழ நாட்டில் உள்ள 40 திவ்விய தேசங்களைப் பேராசிரியர் நா.சுப்புரெட்டியார் ஆய்வு செய்து இரண்டு பகுதிகளாகப் பிரித்து இதில் முதற்பகுதியில் 20 தலங்களின் சிறப்பினையும் இரண்டாம் பகுதியில் இருபது தலங்களின் சிறப்பினையும் ஒவ்வொரு தலங்களிலும் பெருமாள் எழுந்தருளி இருக்கும் நிலையினையும், தலம் இருக்கும் இடத்தினையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இவர் சோழநாட்டு திருப்பதிகள் என்னும் தலைப்பில் நூல்களையும் வெளியிட்டுள்ளார். எனவே இவர் வெளியிட்டுள்ள சோழநாட்டு திருப்பதிகள் என்ற நூலை அடிப்படையாக வைத்துக் கொண்டு முதல் இயலாகத் தலவரலாறு அமைகின்றது.

சோழ நாட்டு திவ்விய தேசங்கள் **40** அதில்,ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தலங்கள்,

1. அணி அரங்கத்து அரவணைப் பள்ளியான்
2. உறையூர் அழகிய மணவாளன்
3. கரம்பனூர் உத்தமன்
4. திருவெள்ளறை அஞ்சன வண்ணன்
5. அன்பில் திருவடி அழகியநம்பி
6. திருப்பேர் கிடக்கும் திருநாரணன்
7. திருத்தஞ்சை எம்பெருமான்
8. கண்டியூர் கமலநாதன்
9. திருக்குடந்தை ஆராவமுதன்

10. திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்
11. நந்திபுர விண்ணகரத்துநாதன்
12. நறையூர் நின்ற நம்பி
13. திருச்சேறை எம்பெருமான்
14. வெள்ளியங்குடி கோலவில் இராமன்
15. புள்ளம் புதங்குடி புனிதன்
16. ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன்
17. ஆற்றங்கரைக் கிடக்கும் கண்ணன்
18. நாகை அழகியார்
19. கணமங்கைக் கற்பகம்
20. திருஇந்தளூர் அந்தணன்
21. திருக்கண்ணங்குடி கண்ணன்

1. அணி அரங்கத்து அரவணைப் பள்ளியான்

தலம் இருக்கும் இடம்

விழுப்புரத்தில் இருந்து திருச்சி செல்லும் கார்டு லைன் ரெயில் மார்க்கத்தில் ஸ்ரீரங்கம் உள்ளது. சேலம், கோவை, மதுரை, சென்னை போன்ற பகுதியில் இருந்து பேருந்து திருச்சிக்கு வந்து பின் ஸ்ரீரங்கத்திற்கு நகரப் பேருந்து மூலமும் செல்லலாம்.

மூலவர்:

ஸ்ரீரங்கம் கோவிலில் கருவறைப் பகுதியில் மூலவராக ஸ்ரீரங்கநாத பெருமாள் எழுந்தருளியுள்ளார். இவர் பிரணவாகார விமானத்தின் கீழ் படமெடுத்த ஆதிசேஷன் படுக்கையில், அனந்தசயனத் திருக்கோலத்துடன், வலது கையைத் திருமுடியில் வைத்த வண்ணமும் துயில் கொண்ட நிலையில் காட்சி அளிக்கிறார். கீழே உற்சவமுர்த்தி திருமகள் மண்மகளோடு காட்சி தருகிறார். நாபிக் கமலத்தில் எப்போதும் இருக்கும் பிரமதேவனும் இல்லாமல், தனிமை விரும்பிய பெருமகனாகக் காட்சி தருகிறார்.[21]

ஸ்ரீரங்கநாதர் பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளன், என்ற வேறுபெயர்களும் இவருக்கு உண்டு. இவர் ஆதிசேஷன் மேல் பள்ளிக்கொண்டு தெற்கு நோக்கி முகத்தினைக் காட்டி புஜங்க சயனத் திருக்கோலம் கொண்டு இருக்கிறார். இவர் உத்ஸவராக நம்பெருமாள் என்ற சிறப்பு பெயருடன் காட்சியளிக்கிறார்.[22]

தாயார்

இங்குத் தாயாராக ஸ்ரீரங்கநாயகி எழுந்தருளி காட்சிதருகிறார். இங்கு ஆழ்வார்கள் பலருக்கும் முனிவர்களுக்கும், கருடப்பகவானுக்கும், தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

பாசுரம் பாடியவர்கள்

ஸ்ரீரங்கநாத பெருமாள் கோவிலுக்கு ஒன்பது ஆழ்வார்கன் பாசுரங்கள் பாடியுள்ளனர். திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், பொய்கையாழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார், ஆகியோர் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்து உள்ளனர்.

ஸ்ரீரங்கத்தின் சிறப்பு

ஸ்ரீவைணவத் ஷேத்திரங்களில் 108 வது ஷேத்திரம் ஆகும். அதில் முதன்மையானது ஸ்ரீரங்கம். 108 திவ்விய ஷேத்திரங்களும் ஒரு மகா விருட்சம் போன்றது. அந்த மகா விருட்சத்திற்கு வேர் போன்றது ஸ்ரீரங்கம். ஒரு விருட்சத்தின் வேரில் நீர் ஊற்றினால் அத்தண்ணீர் விருட்சம் பூராவும் பரவுதலைப்போல் ஸ்ரீரங்கத்தை மட்டும் சேவித்தால் மற்ற 108 திவ்விய தேசங்களையும் சேவித்த பலன் கிட்டும் என்பது சான்றோர் வாக்கு.[23]

தல வரலாறு

ஸ்ரீராமனால் வணங்கப்பட்டவர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள். திரேதயுகத்தில் இஷ்வாகு வம்சத்து அரசர்களால் பிரம்ம தேவனிடம் பெற்று பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீரங்க விமானம் ஸ்ரீராமபிரானால் விபீஷணருக்கு பரிசாகக் வழங்கப்பட்டது. ஸ்ரீராமபிரானிடமிருந்து பூஜா பாத்திரங்களைக் பெற்றுக் கொண்ட விபீஷணன். இலங்கை செல்லும் வழியில் காவிரி நதி தென்பட்டது. அப்போது நடுப்பகல் நேரமாதலால் அந்த நேரத்தில் செய்ய வேண்டிய கடமைகளைக் செய்து முடிக்க எண்ணினான் விபீஷணன். தலை மீது வைத்திருந்த ஸ்ரீரங்க விமானத்தைச் சந்திர புஷ்கரணியை அடுத்துள்ள அனந்த பீடத்தில் எழுந்தருளச் செய்து விட்டு நித்தியக் கடன்களைக் முடித்து நம்பெருமாளுக்கு உச்சிக்கால பூஜையைச் செய்து முடிக்க எண்ணினான். அப்போது நல்ல சுப வேளையில் ஸ்ரீரங்கப்பெருமான் அங்கு நிலைப்பெற்று எழுந்தருளியுள்ளார். அப்போது அங்கு வந்த முனிவர்களும், பக்தர்களும் ஸ்ரீரங்கநாதன் அங்கு எழுந்தருளியிருப்பதைக் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். அதே சமயத்தில் ஸ்ரீரங்கநாதர் அங்கு எழுந்தருளிய செய்தி அறிந்து அங்கு வந்த தாமாவர்மா என்ற மன்னனும் மாந்தர் அனைவரும் ஆனந்தத்துடன் சேவிக்கும் பொருட்டு ஸ்ரீரங்க விமானம் இங்கேயே இருக்கட்டும் என வேண்டினார்கள்.

அதற்கு விபீஷணன் நாளைப் பொழுது விடிந்ததும், முதல் பிரம்ம உற்சவத்தைக் கொண்டாட வேண்டும். இங்கு தாமதிக்க மாட்டேன் எனக் கூறி புறப்பட ஆயத்தமானான். பிரம்ம உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாட நாங்கள் இங்கேயே ஆவன செய்கின்றோம். என தா்மாவா்மாவும் ஏனையோரும் சொன்னார்கள். தா்மாவா்மா கூறியதைக் கேட்டு விபீஷணன் சம்மதித்தான். பிரம்ம உற்சவத்தைச் சிறப்பாக செய்து முடித்தான். அதன் பின்னா் இலங்கைச் செல்ல ஆயத்தமாகிய விபீஷணன் ஸ்ரீரங்கவிமானத்தை எடுக்க முயல அது அசையவே இல்லை. உடனே ஸ்ரீரங்கநாதரிடமே தனக்கு நேர்ந்ததை வருத்தமுடன் சொல்ல ஸ்ரீரங்கநாதனும் அவனுக்குக் கீழ்கண்டவாறு கூறினார்.[24]

ஒரு சமயம் இமயமலைச் சாரலில் நதி கன்னிகளாகக் கங்கை, காவிரி, சரஸ்வதி, யமுனை ஆகிய நதிகள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அப்போது வானத்தில் கந்தா்வன் ஒருவன் பறந்து வந்துக் கொண்டு இருந்தான். அவன் நதி கன்னிகளைப் பார்த்து வணங்கினான். அப்போது நதி மகளிர்க்கு யாரைப் பார்த்து கந்தா்வன் வணங்கினான் என்ற குழப்பம் தோன்றியது. அப்போது காவிரியும், கங்கையும் விவாதம் செய்து கொண்டு இருந்தனர். இவா்களின் விவாதத்தைத் தீா்த்துக் கொள்ள நாராயணனிடம் சென்று முறையிட்டனர். அப்போது நாராயணன் கங்கையே உயா்ந்தவள் எனக் கூறினார். இதனால் கோபம் கொண்ட காவேரி பெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தார். பெருமாள் காவேரியின் தவத்தினைக் கண்டு வியந்து உன் தவத்தின் காரணம் என்ன என்று காவிரியை நோக்கி கேட்டார். அதற்கு காவேரி தான் கங்கையை விடப் புனிதமானவளாக ஆக வேண்டும். என்றும் கூறினாள். அதற்குப் பெருமாள் ஒரு நாள் நீ இருக்கும் இடத்தில் பள்ளி கொள்ளப் போவதாகவும் அப்போது கங்கையை விட புனிதமானவளாகவும், என் கழுத்துக்கு நீ மாலையாகவும் ஆவாய் என்று கூறினார். இதனை விபீஷணனிடம் கூறி காவிரியைப் புனிதப்படுத்த இங்கேயே தோன்றி விட்டதாகவும் இவ்விடத்தை விட்டு அகலப்போவதாகவும் நீ இருக்கும் இலங்கை உள்ள தென்திசை நோக்கி தாம் பள்ளி கொள்ளப் போவதாகவும் கூறினார். இந்நிகழ்வு நடந்த இடமே ஸ்ரீரங்கம் ஆகும். இத்தலத்தில் அரங்கநாதா் ஆதிசேஷனைப் பாம்பு அணையாகக் கொண்டு சூரியன் உதயமாகும் மேற்கு திசையில் தன் தலை இருக்குமாறும், தென்றல் வீசிடும் தென்திசையில் இருக்கும் இலங்கையைப் பார்த்த படியும் குபேரன் இருக்கும் இடமான வடதிசையையும், திருமகள் தன் பின்புறமாக இருப்பதையும், உணா்த்திடும் நிலையில் வைத்து தனது வலது கரத்தைத் தன் பாதங்களை நோக்கியபடி வைத்து கிடந்த கோல காட்சியைத் தந்தருள்கிறார். தற்போது கூட ஸ்ரீரங்க இராஜ கோபுரத்தின் உச்சியில் நின்று பார்த்தால் தென் திசையில் இருக்கும் அரங்கநாதரின் பார்வை இலங்கையை நோக்கி சென்றிடுவது புரியும் வகையில் அமைந்து இருக்கிறது.

காலப்போக்கில் ஸ்ரீரங்கநாதர் கோவிலின் அரங்க விமானமும் ஸ்ரீரங்கநாதரும் காவிரிக்குள் புதையுண்டு போனதாகவும் அவ்விடத்திற்கு வேட்டையாட வந்த சோழ மன்னர் ஒருவரின் காதில் கிளி ஒன்று இரகசியமாகக் கூறியதாயும் அது கேட்ட சோழ மன்னன் அரங்க விமானத்தையும் ஸ்ரீரங்கநாதரையும் வெளியில் கொண்டு வந்து பின் கோவிலைக் கட்டியதாகவும் தனக்கு இரகசியமாக அரங்கநாதர் மற்றும் அரங்க விமானம் புதையுண்ட தகவலைக் கூறிய கிளியின் நினைவாகக் கிளி மண்டபம் கட்டியதாகவும் வரலாற்றில் கூறப்படுகிறது.

2.உறையூர் அழகிய மணவாளன்

தலம் இருக்கும் இடம்

இக்கோவில் திருச்சி மாவட்டத்தில் உறையூர் என்னும் ஊரில் உள்ளது.இது திருச்சியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இக்கோவில் அமைந்துள்ளது.திருச்சி பேருந்து நிலையத்தில் இருந்து அதிக அளவில் பேருந்துகள் இவ்வூருக்குச் செல்கின்றனர். உறையூர் சோழ அரசர்களின் தலைநகரமாகவும் விளங்கியது. இந்த கோவில் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டு 108 திவ்விய தேசங்களில் இக்கோவில் இரண்டாவதாவும் அமைந்துள்ளது.

கோவில் அமைப்பு

உறையூர் அழகிய மணவாளன் கோவில் திராவிட பாணியில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவில் கிரானைட் சுவரால் சூழப்பட்டுள்ளது. இக்கோவில் அனைத்து சிவ ஆலயங்களையும் உள்ளடக்கியது. அழகிய மணவாளப் பெருமாள் கோவில் 5 அடுக்கு இராஜ கோபுரம் கொண்டவையாக உள்ளது. இது கி.பி 8-ம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மூலவர்

இத்தலத்தில் உள்ள மூலவர் மணவாளப் பெருமாள் நின்ற கோலத்துடன் பிரயோகச் சக்கரத்துடன் வடக்கு முகம் காட்டி காட்சி தருகின்றார். இவர் இரவிதர்மாவுக்கும் தேவர்கள் அனைவருக்கும் பிரதியட்சம் ஆனவர்.

தாயார்

தயாரின் பெயர் கமலவள்ளி நாச்சியார் ஆகும். இவரை உறையூர் வள்ளி என்றும் அழைக்கப்படுகின்றனர். நாச்சியார் திருமணக்கோலத்துடன் வடக்கு முகம் நோக்கியபடி காட்சி தருகின்றார். பங்குனி உத்திரத்து அன்று முதல் நாளன்று எம்பெருமானுக்கும் நாச்சியாருக்கும் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றது. திருப்பாணாழ்வாருக்கும் இக்கோவிலில் தனிச் சந்நிதி உள்ளது.[25]

பாசுரம் பாடியவர்

திருமங்கையாழ்வார் மற்றும் குலசேகரத்தாழ்வார் ஆகியோர் இத்தலத்துக்குப் பாசுரங்கள் பாடி இக்கோவிலில் மங்களசாசனம் செய்துள்ளனர்.

தல வரலாறு

ஒருகாலத்தில் பகைவர் நாட்டைச் சேர்ந்த யானை ஒன்று யுத்தம் செய்ய வந்த போது உறையூரில் ஒரு கோழி ஒன்று அந்த யானையை எதிர்த்து தனது கால் நகங்களாலும் அழகினாலும் யானையின் கண்களைக் குருடாக்கி அந்த யானையைத் தோற்கடித்து ஓடச் செய்தது. அதன் காரணத்தால் முதலில் கோழியர் என்றும் பின்னர் அடைமொழியாகத் திரு சேர்த்து திருக்கோழி என்ற பெயர் வந்ததாக வரலாறு கூறுகின்றது.

ஒரு சமயம் தர்மாவர்மா என்ற சோழ அரசனின் வம்சத்தில் வந்த நந்தசோழன் என்ற சோழ மன்னன் உறையூரை ஆண்டு வந்தான். அவருக்குத் திருவரங்கத்தில் இருக்கும் பெருமாளின் மீது மிகுந்த பக்தி கொண்டு இருந்தார்.இவருக்குக் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது.இதனால் மிகவும் வருந்தி ஒவ்வொரு நாளும் மனமுருகி பெருமாளிடம் தனது குறையைத் தீர்த்து வைக்கும் படி வேண்டினார். அம்மன்னனின் வேண்டுதலை ஏற்று மணம் இறங்கி அவரின் குறையைத் தீர்க்கத் திருவுள்ளம் கொண்டார் பெருமாள் பக்தர்க்கு இரங்கும் உள்ளம் கொண்டு மகாலட்சுமி உறையூரில் உள்ள தாமரை பொய்கையில் குழந்தையாகத் தோன்றி காட்சி அளித்தார்.அப்போது அந்த வழியாக வேட்டைக்குச் சென்ற நந்தச்சோழன் அந்த கமலப்பொய்கையின் அருகே வர அங்கே ஒருகுழந்தையின் அழுகுரல் கேட்டு அங்கு சென்று பார்த்தான்.அங்கே குழந்தையின் அருகில் யாரும் இல்லாத காரணத்தினால் அந்த மன்னன் குழந்தையை எடுத்துச் சென்று வளர்த்தான். குழந்தை கமலப்பொய்கையில் கிடைத்ததால் அக்குழந்தைக்குக் கமலவள்ளி நாச்சியார் என்று பெயர் வைத்தார். நாச்சியாரும் வளர்ந்து கன்னிப் பருவம் எய்தினாள். நாச்சியாரைத் தன்னுடன் இணைத்துக்கொள்ளத் திருவுள்ளம் கொண்ட அரங்கநாதர் நாச்சியார் தனது தோழியுடன் பலாசனவனம் ஒன்றில் உலாவி வரும் வேளையில் அழகிய மணவாளப் பெருமாளாக குதிரையில் அமர்ந்து அந்த பலாசன வனத்திற்குள் உலா வந்தார். அவரைக் கண்ட நாச்சியார் அவர் மீது காதல் கொண்டாள். அன்று பெருமானை நினைத்து திகைத்து துடிக்கலானாள். அப்போது நந்தச்சோழன் தன் மகளின் நிலையினை அறிந்து கதறினார். அப்போது அரங்கபெருமாள் சோழ மன்னனின் கனவில் தோன்றி உன்னுடைய மனக்குறையைத் தீர்க்கவே திருமகளே கமலவள்ளி நாச்சியாராக வந்ததையும் நாச்சியாரைத் தான் ஏற்றுக் கொள்ளும் தருணம் வந்ததாகவும் அவனிடம் சொல்லி நாச்சியாரைத் திருமணக் கோலத்துடன் திருவரங்கம் அழைத்து வருமாறும் சொன்னார்.சோழ

மன்னனும் பெருமாள் கூறியது போல நாச்சியாரைத் திருவரங்க கோவிலுக்கு அழைத்து சென்றான். கர்ப்பக் கிரகத்தில் நுழைந்த கமலவள்ளி நாச்சியார் அரங்கநாதனுடன் இரண்டறக் கலந்து விட்டார். இதனைக் கண்ட நந்தச்சோழன் தன் மகளின் பேற்றினை நினைத்து மகிழ்ச்சி அடைந்து உறையூரில் கமலவள்ளி நாச்சியாருக்கு ஆலயம் எழுப்பினான். கமலவள்ளி நாச்சியாரை அழகிய மணவாளப்பெருமாள் திருமணம் புரிந்து கொண்டதை நினைவு கூறும் முகமாகத் திருக்கல்யாண உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.[26]

3.கரம்பனூர் உத்தமன்

தலம் அமைந்துள்ள இடம்

இக்கோவில் திருச்சியில் இருந்து துறையூர் செல்லும் வழியில் உள்ளது. பிரம்மாண்ட புராணத்தில் இத்தலத்தைப் பற்றி விரிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. இக்கோவில் 108 திவ்விய தேசங்களில் கரம்பனூர் உத்தமர் கோவில் மூன்றாவது இடத்தில் உள்ளது. கதம்ப மரத்தின் உருவில் எம்பெருமாள் நின்றதை உணர்ந்து பிரம்மா பெருமாளுக்குப் பூஜை செய்த தலமாக உள்ளதால் இக்கோவிலைத் திருக்கதம்பனூர் என அழைக்கப்பட்டு பின்னர் இப்பெயர் மருவி திருக்கரம்பனூர் எனச் சொல்லப்பட்டு வருகிறது.இக்கோவிலுக்கு அருகாமையில் இரயில் நிலையம் உள்ளது.

மூலவர்

இத்தலத்து மூலவராகப் புருஷோத்தமர் கிடந்த கோலத்தில் புஜங்க சயனம் கொண்டு மக்களுக்குக் காட்சி தருகின்றார்.இவர் கதம்ப முனிவர், உபரிசரவசு, திருமங்கையாழ்வார், ஆகியோருக்குப் பிரதியட்சம் பெற்றவர்.

தாயார்

இத்திருத்தலத்தில் தாயாராகப் பூர்வாதேவியான பூரணவல்லி தாயார் இக்கோவிலில் காட்சி தருகிறார்.

பாசுரம் பாடியவர்

திருமங்கையாழ்வார் ஒரு பாசுரத்தால் இக்கோவிலினை மங்களசாசனம் செய்துள்ளார்.

தல வரலாறு

கரம்பனூர் உத்தமர் கோவிலில் மும்மூர்த்திகள் ஒரே தலத்தில் தோன்றி காட்சி அளிக்கின்றனர். எம்பெருமான் உத்தமராகவும், சிவன் பிச்சாடனாகவும் காட்சி

அளிக்கிறார்.இத்தலத்தில் சிவன், பிரம்மா, விஷ்ணு, ஆகியோர் காட்சி தருகின்றனர். இக்காட்சியை வேறு தலங்களில் காண முடியாது. சைவ வைணவ ஒற்றுமை கண்ட தலமாகவும் இது போற்றப்படுகிறது. இத்தலத்தில் உள்ள மூலவரான எம்பெருமான் புருஷர்களின் உத்தமராவும் இருந்தார். ஏகபத்தினி விரதனாகவும் இருந்தவர். ஸ்ரீ இராமபிரான். இதன் காரணமாய் மூலவருக்குப் புருஷோத்தமர் என்ற திருநாமம் உண்டானது. ஒரு காலத்தில் சிவனுக்கும் பிரம்மாவுக்கும் ஐந்து தலைகள் இருந்தனவாம். ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மூன்றினையும் வென்று தெளிந்திட்ட ஞானப் பிழம்பு தான் ஆதிசிவம். இந்த ஞானமே வடிவான சிவபெருமானின் மனதில் பிரம்மா மீது பொறாமை உண்டானது.தனக்கு இணையாகப் பிரம்ம தேவருக்கும் ஐந்து தலைகள் இருப்பதைக் கண்டு பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எரிந்தார். பிரம்மாவின் தலை ஒன்றைக் கிள்ளியதால் கிள்ளப்பட்ட பிரம்மாவின் தலை கபாலமாகி பிரம்மஹத்தி தோசத்தால் சிவனின் கையோடு ஒட்டிக் கொணடது. ஓட்டிக் கொண்ட கபாலத்தைத் திருவோடாக ஏந்தி பிச்சை எடுத்து உண்ணும் பிச்சாண்டவராக சிவபெருமான் ஆனார். சிவன் பிச்சை கிண்ணத்துடன் உத்தமர் கோவிலுக்கு வந்தார். முடிவில் மகாலட்சுமி தாயார் பிச்சை இடவும் பிரம்மஹத்தி தோஷம் முடிவுக்கு வந்தது. சிவனின் சாபம் நீங்கிய காரணத்தால் சிவன் பிட்சாடன மூர்த்தியாகச் சேவை சாதிக்கிறார். விஷ்ணு ஒரு முறை பிரம்மாவின் அர்ப்பணிப்பைச் சோதிக்க முடிவு செய்தார். பெருமாள் திடீரென கடம்ப மரமாக மாற்றிக் கொண்டு திருகரம்பனூர்க்கு வந்தார். மரத்தில் இருப்பது பெருமாளே என்பதை உணர்ந்து கொண்ட பிரம்மா உடனே அந்த மரவடிவில் இருக்கும் பெருமாளுக்குப் பூஜை செய்யத் தொடங்கினார். பிரம்மாவின் அர்ப்பணிப்பைக் கண்ட பெருமாள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார் .எனவே பிரம்மாவுக்கு அங்கேயே சன்னதி அமைக்க அனுமதித்தார். எனவே மூலவராகப் பெருமாளும் பிச்சாண்டராக சிவனும், பெருமாளுக்குப் பூஜை செய்து வணங்கியவராகப் பிரம்மாவும் காணப்படுகின்றனர். இதனால் தான் இத்தலத்தை மும்மூர்த்திகள் ஒற்றுமை கண்ட தலம் எனவும் அழைக்கப்படுகின்றன.[27]

4.திருவெள்ளறை அஞ்சன வண்ணன்

தலம் இருக்கும் இடம்

திருவெள்ளறை கோவில் 108 திவ்விய தேசங்களில் நான்காவது இடத்தில் உள்ளது.இது திருச்சி துறையூர் சாலையில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இக்கோவில் 50 அடி உயரமுள்ள ஒரு வெள்ளை பாறை மலையில் உள்ளது. திருவெள்ளறை கோவில் ஸ்ரீரங்கம் கோவில் தோன்றியதற்கு முன்னதாகவே இக்கோவில் தோன்றியதாகப் புராணங்களின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே இத்தலத்தை ஆதி வெள்ளறை எனவும் அழைக்கப்படுகிறது.

மூலவர்

மூலவரான புண்டரீகாஷன் நின்ற கோலத்துடன் கிழக்கு முகம் கோக்கியபடி காட்சி தருகின்றார். இத்தலத்து பெருமாள பெரிய திருவடியான கருடனுக்கும், பூமாதேவிக்கும், மார்க்கண்ட முனிவருக்கும், சிபிச் சக்கரவர்த்திக்கும், பிரம்மா, உருத்திரன் ஆகியோருக்கும் இத்தலத்து பெருமாள் பிரதியட்சம் பெற்றவர்.

தாயார்

இங்கு செண்பகவல்லி தாயார் தனிக் கோவில் நாச்சியாராகக் காட்சி அளிக்கிறார். உற்சவத் தாயார் பங்கஜவல்லி ஆவார்.

பாசுரம் பாடியவர்

இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆகியோர் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனர்.

தல வரலாறு

சூரிய வம்சத்தில் வந்த அயோத்தி நாட்டின் மன்னனாக இருந்தவர் சிபிச்சக்கரவர்த்தி. ஒரு சமயம் தன்னுடைய வீரர்களுடன் ஒரு நாள் திருவெள்ளறை ஊரில் பாறை பகுதியில் தங்கி இருந்தார் அந்தப் பகுதியில் தங்கி இருக்கும் போது ஒரு வெள்ளைப் பன்றி ஒன்று அவர் பாதையை கடந்து சென்றது. அவர் அதைத் துரத்தினார். அப்பன்றியானது ஒரு குகை துளைக்குள் மறைந்தது. அப்போது மார்க்கண்டேய முனிவர் அங்கு தவம் செய்து கொண்டு இருந்தார். மன்னர் நடந்த சம்பவத்தை முனிவரிடம் கூறினார். அப்போது முனிவர் பன்றி மறைந்த இடத்தைப் பாலால் பூஜை செய்யுமாறு மன்னரிடம் கூறினார். அவரும் அவ்வாறு செய்யும் போது அங்கு பெருமாள் நின்ற கோலத்தில் மன்னருக்கும், மார்க்கண்டேய முனிவருக்கும் காட்சி தருகிறார். பின்னர் முனிவர் மன்னரிடம் 3700 வைணவர்களைக் கொண்டு கோவில் கட்டுமாறு அவரிடம் கூறினார். மன்னரும் சரி என்று கூறிக் 3700 வைணவர்களை அழைத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். அவ்வாறு வைணவர்களை அழைத்து வரும் போது போக்குவரத்தில் வைணவர் ஒருவர் இறந்துவிட்டார். இதனை நினைத்து மன்னர் மிகவும் கவலைப்படுகிறார். அப்போது வைணவராகப் பெருமாள் தோன்றி 3700 வைணவரில் என்னையும் கணக்கிடுமாறு கேட்டுக் கொண்டார். இத்தலத்தை வேதகிரி என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு அழைக்கப்பட காரணம் முனிவருக்கும் மன்னருக்கும் காட்சி அளித்த காரணத்தால் ஸ்வேதகிரி எனவும் அழைக்கப்பட்டது.[28]

5.அன்பில் திருவடி அழகிய நம்பி

தலம் இருக்கும் இடம்

சோழ நாட்டில் உள்ள 108 திவ்விய தேசங்களில் ஐந்தாவது தலமாக இக்கோவில் விளங்குகிறது. இக்கோவில் திருச்சி விழுப்புரம் இரயில் நிலையத்தில் இருந்து லால்குடி என்ற ஊருக்கு எட்டு கிலோ மீட்டர் துரத்தில் உள்ள கொள்ளிட ஆற்றின் வடக்கரையில் திரு அன்பில் அமைந்துள்ளது. திருச்சி,கல்லணை, கும்பகோணத்தில் இருந்தும் இத்தலத்திற்குப் பேருந்து முலம் சென்றிடலாம்.

மூலவர்

இங்கு மூலவராக வடிவழகிய நம்பி பெருமாள் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக கிழக்கு முகம் நோக்கியபடி காட்சி தருகின்றனர். இவர் வால்மீகி முனிவர், பிரம்மா, ஆகியோருக்குப் பிரதிட்சம் ஆனவர்.

தாயார்

இங்கு தாயாராக அழகியவல்லி நாச்சியார் காட்சி தருகிறார். ஆண்டாள் திருமணக் கோலத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

பாசுரம் பாடியவர்

இத்தலத்திற்குத் திருமழிசையாழ்வார், ஒரு பாசுரத்தால் மங்களசாசனம் செய்துள்ளார்.

தல வரலாறு

உலகங்கள் அனைத்தையும் படைத்தவர் படைக்கும் கடவுளான பிரம்மா வால்மீகி முனிவர் பாவ விமோட்சனம் கருதி மாபெரும் காப்பியமான இராமயணத்தைப் படைத்தார். இவர்கள் இருவருமே எம்பெருமானின் திருவடிவம் மற்றும் கல்யாண குணங்களை அடிப்படையாகக் கொண்டே படைத்திட்டனர். இவ்விருவரும் அன்பில் பின்னனியில் தான் தத்தம் தொழில்களைச் செய்தனர். அதன் காரணமாகவே இத்தலம் அன்பில் என்ற பெயரினைப் பெற்றது. படைப்பாளர்களாகிய இருவரின் பார்வைக்கு எம்பெருமானும் அழகு உள்ளவர்களாக எண்ணி வடிவழகி நம்பியாகவும், எஅழகியவல்லி நாச்சயாரகவும் இத்தலத்தில் காட்சி தந்திருக்கின்றனர். இத்தலத்திற்குப் பிரம்மாவின் சாபம் நீங்க உறையூர் உத்தமர் கோவிலுக்குச் சென்ற சிவபெருமான் அங்கு மகாலெட்சுமியிடம் உணவினைப் பெற்ற காரணத்தால் சாபம் நீங்கிய பிறகு அங்கிருந்து அன்பில் கோவிலுக்கு வந்ததாகவும் அங்கு அழகிய வல்லி நாச்சியாரையும், வடிவழகிய நம்பியையும் வழிப்பட்டதாவும் சொல்லப்படுகிறது. இக்கோவிலின் முக்கியத் தீர்த்தமாக மண்டுக தீர்த்தம்

இருக்கிறது. இங்குள்ள பெருமாளுக்கு அன்பினாலே வந்த பெருமாள் என்ற சிறப்பு பெயரும் உண்டு.

6.திருப்பேர் கிடக்கும் நாரணன்

தலம் இருக்கும் இடம்

கோவிலடி என்றழைக்கப்படும் திருப்பேர் நகர் 108 திவ்விய தேசங்களில் ஆறாவது இடத்தில் உள்ளது.இக்கோவில் அன்பில் என்ற ஊரில் இருந்து கொள்ளிடத்தைக் கடந்துநான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இக்கோவிலுக்கு இலால்குடியில் இருந்து பூதலூர் இரயில் நிலையத்தில் இருந்து இறங்கி கோவிலடிக்குச் செல்லலாம். அது மட்டுமல்லாமல் தஞ்சாவூரில் இருந்து கும்பகோணம் பேருந்தில் ஏறி திருக்காட்டுப்பள்ளி சென்று அங்கிருந்து கல்லணை செல்லும் பேருந்தின் மூலமாகவும் செல்லலாம்.

மூலவர்

மூலவராக அப்பாலரெங்கநாதர் பெருமாள் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாக மேற்கு திசை நோக்கி காட்சியளிக்கிறார். இவருக்கு அப்பக்குடத்தான் என்ற பெயரும் உண்டு. இவர் உபமன்யுவுக்கும், பராசரர் முனிவருக்கும் பிரதியட்சம் பெற்றவர்.

தாயார்

இங்கு தாயாராகக் கமலவல்லி தாயார் எழுந்தருளியுள்ளார். இவருக்கு இக்கோவிலில் தனிக் கோவில் உளளது. இவருக்கு இந்திரா தேவி என்ற வேறு பெயரும் உண்டு.

பாசுரங்கள் பாடியவர்

இத்தலத்திற்கு ஆழ்வார்கள் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனர். அவர்கள் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆகியோர் ஆவார்.

கோவில் வரலாறு

இது பஞ்சரங்க ஷோத்திரங்களில் இது இரண்டாவது தலமாக விளங்குகிறது. முற்பிறவி காரணமாகத் துர்வாச முனிவரின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளானான். உபமன்யு என்ற மன்னன் இதனால் நாடு நகரங்களை இழந்து கடும் துயரத்தில் வாடினான். செய்வதறியாது திகைத்த உபமன்யு துர்வாச முனிவரிடம் சென்று, மன்றாடி வேண்டினான். திருமாலின் திருவுள்ளத்தால் துர்வாச முனிவருக்கும்

உபமன்யுவிற்கு உதவ வேண்டும். என்ற எண்ணம் தோன்றியது. அவரும் உபமன்யுவிடம் தானங்களில் உயர்ந்த அன்னதானத்தைப் பலாசவனம் (புரசங்காடு) என்று அழைக்கப்படும் பரமவித்ரமான இடத்தில் செய்து வந்தால் சாபம் நீங்கப்பெறும் என்று திருவாய் மலர்ந்தார். அதன்படி மன்னன் உபமன்யு அன்னதானத்தை இப்பகுதியில் தொடர்ந்து செய்து வந்தான்.ஒரு நாள் உபமன்யு பெற்ற சாபம் நீங்கக்கூடிய காலம் கனிந்த நன்னாளில் ஸ்ரீமத்நாராயணன் வயதான அந்தணர் வேடத்தில் மன்னன் முன் தோன்றி அன்னதானம் கேட்க, தயாராக இருந்த அன்றைய அன்னதானத்திற்காகச் செய்து வைத்திருந்த அனைத்து உணவு வகைகளையும் அந்த முதியவர், சிறிது நேரத்திலேயே உண்டு முடிக்க, ஆச்சரியமடைந்த மன்னன், ஐயா, பொறுத்தாளுங்கள்! உணவு முழுவதும் தீர்ந்துவிட்டது. தங்களுக்குப் பசியாற இன்னும் என்ன வேண்டும்.என்று பதட்டத்துடன் வினவ **“ஒரு குடம் அப்பம் வேண்டும்”** என்று கேட்டார். முதியவர் அந்தணர் வேடம் தரித்து வந்திருப்பது அனந்தசயனனே, என்பதை உணர்ந்து மன்னனும் விரைவாக அப்பம் தயாரித்து கொடுத்தான். அப்பம் நிரம்பிய குடத்தை உபமன்யுவிடமிருந்து பெற்ற பெருமாள் மன்னனுக்கு காட்சி கொடுத்து அருள, மன்னனும் சாபம் நீங்கப் பெற்று இழந்த இராஜ்ஜியத்தையும், செல்வங்களையும் மீண்டும் பெற்று மகிழ்ந்தான் என்பது தலபுராணமாகும். உபமன்யுடமிருந்து அரங்கன் அப்பக்குடத்தைப் பெற்றதால் எமபெருமானுக்கு **“அப்பக்குடத்தான்”** என்ற திருநாமம் ஏற்பட்டது. ஸ்ரீரங்கம் திவ்விய ஷேத்திரம் தோன்றியதற்கு முன்பே நிர்மாணிக்கப்பட்டது. ஸ்ரீரங்கம் கோயிலுக்கு ஆதியாக அடியெடுத்து வைத்த தலம் என்பதால் கோவிலடி என்றும் வணங்கப்படுவதாகத் தல வரலாறு தெரிவிக்கின்றது. நம்மாழ்வார் மோட்சம் பெற்ற தலமாகவும் விளங்குகிறது.

7.கண்டியூர் கமலநாதன்

தலம் இருக்கும் இடம்

கண்டியூர் கமலநாதன் கோவில் 108 திவ்விய தேசங்களில் ஏழாவது இடத்தில் உள்ளது. இது தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் தஞ்சாவூரிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. திருக்கண்டியூர் என்னும் இத்திருத்தலம் குடமுருட்டி நதிக்கரையில் அமைந்துள்ளது. பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆகிய மும்மூர்த்திகளுக்கும் தனித்தனியே ஆலயம் அமைந்த ஒரே ஊர் திருக்கண்டியூராகும். எனவே இத்திருத்தலம் திரிமூர்த்தி தலம் என்று அழைக்கப்படுகிறது.

திருக்கோவிலின் அமைப்பு

இத்திருக்கோவிலின் ராஜகோபுரம் மூன்று நிலைகளையும், எண்ணற்ற சுதை சிற்ப வேலைகளுடன் அமைந்துள்ளது. இராஜ கோபுரத்தை அடுத்து பலிபீடம், கொடிமரம் அமைந்துள்ளது. தென்கிழக்கு பிராகரத்தில் ஆழ்வார்கள் சன்னதியில் திருமங்கையாழ்வார் நடுநாயகமாகவும் மற்ற ஆழ்வார்களை கொண்ட சன்னதியாகவும் அருகில் வேதாந்த தேசிகனுக்கு தனி சந்நிதியும் அமைந்துள்ளது. ஸ்ரீ ஆண்டாள் சன்னதி பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் சூடிக்கொடுத்த சுடர்கொடியாம் ஸ்ரீ ஆண்டாள் சன்னதி அமைந்துள்ளது.[29]

தலச்சிறப்பு

இத்தலத்தைப் பற்றி பிரம்மாண்ட புராணத்தில் எட்டு அத்தியாயங்களிலும், திருமங்கையாழ்வார் பாசுரத்திலும், சிவபுராணத்திலும் காளமேகப் புலவர் பாடலிலும் நாயன்மார் திருமுறைகளிலும் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அந்தாதியிலும் காணக் கிடைக்கிறது.

மூலவர்

ஸ்ரீ ஹர சாப விமோசனப் பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு முகம் நோக்கி காட்சி தருகிறார். அழகிய திருவிண்ணாழியாழியால் சூழப்பட்டது. கர்ப்ப கிரகத்தில் மிக்க அழகு ததும்பும் திருமேனியோடு கம்பீரமாக ஸ்ரீதேவி, பூதேவி, சகிதமாக ஸ்ரீஅரசாபவிமோசனப்பெருமாள் சேவை சாதிக்கிறார். இவருக்குக் கமலநாதன், பலிநாதன், பிருகுநாதன், என்ற வேறு பெயர்களும் உண்டு.

தாயார்

கமலவல்லித் தாயார் என்ற திருநாமத்தோடு தனி சன்னதியாகக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இங்கு ஆஞ்சநேயர் சன்னதி, ஸ்ரீஆண்டாள் சன்னதி, ஏகாதசி மண்டபம், சக்கரத்தாழ்வார் சன்னதி ஆகியவை காணப்படுகிறது.

பாசுரங்கள் பாடியவர்

திருமங்கையாழ்வார் ஸ்ரீஹரசாப விமோசனப் பெருமாள் கோவிலுக்குத் திருமங்கையாழ்வார் பாடல்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனர். சிவனுடைய சாபம் தீர்த்த வரலாற்றை முதல் இரண்டு அடிகளிலும், பின்னர் உலகமேத்தும் கண்டியூர் பெருமானை சேவித்தால் உயர்வு நிச்சயம் என்றும், பிண்டியர், உண்டியார், கண்டியூர், மண்டினார் என்று பர்மா, சிவன் இருவரும் கண்டியூர் பெருமானைச் சரண் புகுந்தனர் எனப் பாடியுள்ளார்.[30]

தல வரலாறு

உலகைப் படைக்கும் பிரம்மாவிற்கும், சிவனுக்கும் ஐந்து முகங்கள் இருந்தன.அதனால் சிவபெருமானுக்கு ஈடாகத் தன்னையும் நினைத்து கர்வம் அடைந்திருந்த பிரம்மதேவனைக் கண்டு கோபமடைந்த பார்வதி தேவியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு முறை பிரம்மதேவனுடைய ஐந்தாவது முகத்தினைச் சிவபெருமான் கண்டனம் செய்ய சிவபெருமானுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அது மட்டுமல்லாமல் பிரம்மாவின் கபாலம் சிவபெருமானின் கையில் ஒட்டிக்கொண்டது.சதுர் முகன் ஆகிவிட்ட பிரம்மதேவன் கோபமடைந்து எனது மண்டை ஒடு உன் கையிலேயே ஒட்டிக்கொண்டது. பிரம்மஹத்யா பாதகனாக நீ நூறு ஆண்டுகள் பூமியில் சஞ்சரிக்கக் கடவாய் என்று ஈஸ்வரனை சபித்தார்.பிறகு பச்சாதாபமடைந்து பகவான் ஸ்ரீமந் நாரயணனுடைய அனுக்கிரகத்தால் இந்த சாபம் உன்னை விட்டு விலகும். என்று சாபவிமோசனத்திற்கு வழியும் சொல்லிக் கொடுத்தார்.

பிரம்ம கபாலம் சிவபெருமான் கையில் ஒட்டிக்கொண்டது. பிரம்மதேவனும் பகவானைப் பிராத்திக்க ஸ்ரீமத் நாராயணன் மனமுவந்து நீ இப்பூமண்டலத்தைப் பிரதஷிணம் செய்து எனது ஷோத்திரங்களுக்குச் கிரமமாகச் செல்ல வேண்டும். அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடியும், அங்கு எழுந்தருளியுள்ள பகவானையும் சேவித்து திருஅஷ்டாக்ஷரத்தை ஜபிக்க வேண்டும். அங்குள்ள விமானங்களையும் வணங்கி வலம் வர வேண்டும்.அத்தகைய எமது ஷோத்திரங்கள் நான்கு வகைகள் உள்ளன. இவைகளில் திவ்விய ஷேத்திரம் நூற்றியாறு உள்ளன. அவைகளுள்ளும் முக்கியமான ஷேத்திரம் எட்டாகும். இவைகளுக்குள் எந்த ஷேத்திரத்தை அடைந்து புண்ணிய தீர்த்தத்தில் நீராடி பிரம்ம சிரக்ககபாலத்தைப் புண்ணிய தீர்த்தத்தால் நிரப்பும்போது அது அசைந்து கொடுக்கிறதோ அதே ஷேத்திரம் உமது சாபத்தைத் தீர்க்கும் பாபத்தையுமழிக்கும். அதுவே எட்டு ஷேத்திரங்களுக்கும் மிகவும் சிறந்தது என்று கூறி மறைந்தார். தயாநிதியான பகவான் திருவாய் மலர்ந்தருளிக் கேட்ட பரமேஸ்வரன் பிரம்மஹத்தி தோஷத்தால் உருமாறி பிரம்ம கபாலத்தைக் கையில் ஏந்தி தீர்த்த யாத்திரை புறப்பட்டார். பல திருக்கோயில்களில் மூர்த்தியைத் தரிசித்து திருக்குளங்களில் மூழ்கி பிரார்த்தனை செய்தார். ஆனால் கபாலம் ஈசனின் கையை விட்டு அகலவில்லை. அது நிரம்பவில்லை. குடைசியாகப் பரமேஸ்வரன் காவிரியின் தென்கரையில் உள்ள திருக்கண்டியூருக்கு வந்து சேர்ந்தார். உலகமேத்தும் கண்டன ஷேத்திரத்தை அடைந்தும்பத்ம தீர்த்த கரையைக் கண்டதும் கபாலம் சிறிது அசைய தொடங்கியது. அது சமயம் அசரீரியாக ஒலித்த பகவானின் வார்த்தையைக் கேட்டு மேற்கு அமைந்துள்ள ‘‘கதாதீர்த்தம்’’ என்ற புண்ணிய தீர்த்தத்தில் நீராடினார்.பிரம்ம கபாலம் தானாகவே நீர் நிரம்ப பெற்று தீர்த்தத்தில் நழுவி விழுந்தது. ஆகாசத்தில் துந்துபி வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அப்போது

ஈஸ்வரன் கிழக்கு திக்கில் உள்ள ''பத்ம'' தீர்த்தத்தில் நீராடி பிரம்மஹத்தி தோஷத்தினின்றும் விடுப்பட்டு உத்தமனான தன்னுடைய சுயரூபத்தை அடைந்தார். அரனுடைய சாபம் தீர்த்து அருள் புரிந்த பெருமாள் ஆதலால் இவ்வூரில் அரசாபஹரன் என்ற திருநாமம் ஏற்பட்டன. எனவே அவரவர் செய்த பாவம் அவரவர்களே அனுபவிக்க வேண்டும் என்பது இத்தலத்தின் முலம் விளங்குகிறது.[31]

8.திருக்குடந்தை ஆராவமுதன்

தலம் இருக்கும் இடம்

108 வைணவ திவ்விய தேசங்களில் எட்டாவது இடத்தில் உள்ளது. இக்கோவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் உள்ளது. இவ்வூரினைக் குடந்தை என்று அழைக்கப்படுகிறது. இக்கோவிலுக்குப் பல ஊர்களில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இத்தலத்திற்கு அருகில் பல திவ்விய தேசங்களும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

மூலவர்

இத்தலதது மூலவர் வலது திருக்கையை திருமுடியின் கீழ் அமர்த்தி அழகு வெள்ளம் அலைக்கொள்ள கிழக்கே திருமுக மண்டலத்துடன் சாரங்கபாணி கிடந்த கோலத்தில் உத்தானசயனத்தில் கிழக்கு திசை நோக்கியபடி பாம்பணை மீது பள்ளி கொண்டருள்கிறார். இவருக்கு உத்தாநசாயி, ஆராவமுதன், அபர்யாப்தாமிருதன் என்ற பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் ஹேம முனிவருக்குப் பிரதியட்சம் பெற்றவர் ஆவார்.

தாயார்

ஸ்ரீகோமலவல்லி தாயார் நாச்சியார் திருநாமம். கோமளவல்லி என்பதன் தமிழ்பதம் பொற்கொடி என்பதாம். போற்றாமரை திருக்குளத்தில் அலதரித்தப்படியால் தாயாரை பொய்கையில் பூத்த பொற்கொடி என்பது சாலப் பொருந்தும். நான்கு திருக்கைகளுடன் அருளே வவொக அழகே தேக்கமாய் புன்முறுவலுடன் அமுதன் கருவறைக்கு வலது பக்கததில் தனிக் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். தாயாரின் அவதார தலமானதால் ஸ்ரீகோமலவல்லித் தாயாரைத் தரிசனம் செய்தப் பிறகே ஆராவமுதனை தரிசனம் செய்வது இத்திருக்கோவிலின் மரபாக உள்ளது.[32]

பாசுரம் பாடியவர்

பெரியாழ்வார், பேயாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ,பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், ஆகியோர் பாடல் பாடி இத்தலத்துக்கு மங்களசாசனம் செய்துள்ளனர்.[33]

திருக்கோவில் வரலாறு

இத்திருக்கோவில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலான தொன்மையும் பழமையும் வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க திருக்கோவிலாகும். திருமழிசை ஆழ்வாருக்கு நேரில் காட்சி தந்து அவரது வேண்டுகோளுக்கு இணங்கி சயனித்துள்ள மூலவர் சற்று எழுந்தருளியிருக்கும் நிலையில் உத்தானசாயியாய் கருவறையில் எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோவில் உள்சுவற்றில் மகேந்திரவர்ம பல்லவனால் கட்டப்பட்ட மண்டபம் உள்ளது. அதற்கு சான்றாக சிம்ம உருவம் செதுக்கப்பட்ட தூண்கள் உள்ளன.[34]

தல வரலாறு

கும்பகோணம் என்ற பெயர் வந்ததற்கான காரணம் படைக்கும் கடவுள் பிரம்மா ஒரு கும்பத்தில் அமுதத்தையும், வித்துகளையும் ஜீவராசிகளையும் அடைத்து மேரு மலையின் உச்சியில் வைத்து விட்டார்.ஒரு சமயம் வெள்ளம் ஏற்பட்டபோது அக்கும்பம் தென்திசை நோக்கி வந்தது. உடனே சிவன் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அக்கும்பத்தினை ஓர் அம்பினால் எய்த அக்கும்பம் உடைந்து குடத்தில் இருந்த அமுதம் இரண்டு பிரிவாக பிரிந்து சென்று ஒன்று மகாமக குளமாகவும் இரண்டாவது பிரிவு பொற்றாமரை குளமாகவும் மாறியது. பின்னர் உடைந்த கும்பத்தின் ஓடுகளும் அமுதமும் சேர்ந்து லிங்கம் உருப் பெற்றதாக சொல்லப்படுகிறது. இதனை கும்பேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது.உடைந்த கும்பத்தின் முக்கினாலே கும்பத்தின் கோணம் எனப் பொருள் கொள்ளப்பட்டு பின்னர் கும்பகோணம் எனப் பெயர் வந்ததாம். [35]

அப்போது இத்தலத்தில் முனிவர்கள் பலர் யாகம் செய்து கொண்டு இருந்தனர்.யாகத்தின் அவிர்பாகத்தை சிவன், பிரம்மா, விஷ்ணு இவர்கள் மூவருள் யாருக்கு கொடுக்க வேண்டும் என்ற குழப்பம் நேர்ந்தது. இவர்களுள் சிறந்தவர் யார் என அறிந்து அவருக்கு இந்த அவிர்பாகத்தைக் கொடுக்க வேண்டும் என எண்ணினர். மூவருள் எவர் சிறந்தவர் எனக் கண்டறிய பிருகு முனிவரை அனுப்பினர். முதலில் சிவனையும், நான்முகனையும் சோதித்து அவர்களால் அவமதிக்கப் பெற்று அதன் காரணமாய் அவ்விரு மூர்த்திகளையும் சபித்து விட்டு வைகுண்டம் வந்தார். இங்கு விஷ்ணு தன்னைக் கவனித்திடாமல் இருப்பதைக்கண்டு கோபம் கொண்டார் .உடனே பிருகு முனிவர் திருமகள் குடிக்கொண்டுள்ள ஸ்ரீமத் நாராயணனின் திரு மார்பில் தம் காலால் எட்டி உதைத்து விட்டார்.பிருகு முனிவர் நாராயணனை உதைத்ததை கண்டு எம்பெருமான் அவர் மேல் கோபம் கொள்ளாமல் என்னை உதைத்ததால் அவர் பாதங்கள் வலிக்குமே என்று அவருடைய திருக்கரங்களால் நமஸ்கரித்தார். அப்போது

பிருகு முனிவர் காலில் அமைந்து இருந்த அகந்தையான விழியையும் பிடுங்கி விட்டார். அதனைப் பார்த்த மகாலெட்சுமி தான் குடிக்கொண்டு இருக்கும் நாராயணனின் திருமார்பில் உதைத்தும் முனிவரைத் தண்டிக்காமல் பெருமாள் சாந்தமாக முனிவரின் பாதத்தை பிடித்து விட்டதைக் கண்ட திருமகள் மிகவும் கோபம் கொண்டு பெருமானைவிட்டு பிரிந்து விட்டார்.திருமகளைப் பிரிந்த பெருமாள் இப்பூவுலகில் ஸ்ரீநிவாசனாக அவதாரம் எடுத்து திருமகளைத் தேடி வருகிறார். திருமகளைக் காண முடியாத நிலையில் திருப்பதிக்குச் சென்று விட்டார். அங்கு ஆகாசராஜனின் மகளான பத்மாவதி தேவியைத் திருமணம் செய்து கொண்டார். இது இவ்வாறு இருக்க நாரத முனிவர் வாயிலாக பத்மாவதி தேவியை மணந்து கொண்ட செய்தியைக் கேட்ட மகாலெட்சுமி கடுமையான கோபத்துடன் திருமலைக்கு விரைகிறார். லட்சுமியின் கோபத்திற்குப் பயந்து பெருமாள் திருமலையில் இருந்து புறப்பட்டு கும்பகோணத்திற்கு வந்து ஒரு பாதாள குகையில் ஒழிந்துக் கொண்டாராம். திருமலையில் பெருமாள் இல்லாததை உணர்ந்த திருமகள் எம்பெருமானைத் தேடி கும்பகோணம் வந்தார்.அங்கு பெருமாளைக் காணாமல் வருந்துகிறார். உடனே மகாலெட்சுமிக்கு முன்னொரு காலத்தில் திருமால் பிருகு முனிவருக்குத் திருமகளே மகளாகப் பிறப்பார் எனக் கூறிய வார்த்தை நினைவுக்கு வந்தது.

மகாலெட்சுமி சாரங்கபாணி திருக்கோவிலில் ஒரு பொற்றாமரை குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தில் மகாலெட்சுமி சிறுகுழந்தையாக அவதரித்தார். பிருகு முனிவர் கும்பகோணத்தில் ஹேம முனிவராகப் பிறந்து இருக்கிறார். அவர் பொற்றாமரைக் குளத்திற்குச் சென்ற போது ஹேம முனிவர் ஒரு பெண் குழந்தை இருப்பதைக் கண்டு அக்குழந்தையை வீட்டிற்கு எடுத்து வந்து கோமளவல்லி என்ற திருநாமம் சூட்டி அன்புடன் வளர்த்து வரலானார். இது நடந்து சில வருடங்கள் ஆனதுக்குப் பிறகு ஒரு நாள் எம்பெருமாள் ஹேம முனிவருக்கும் கோமளவல்லிக்கும் நேரில் காட்சி அளித்து கோமளவல்லி தாயாரை மணம் செய்துக் கொண்டு பிருகு முனிவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார். எனவே எந்த பிருகு முனிவரின் காரணமாக வைகுண்டத்தில் திருமாலும் திருமகளும் பிரிய நேரிட்டதோ அதே பிருகு முனிவரே திருக்குடந்தையில் பிரிந்த தம்பதியரைச் சேர்த்து வைக்க காரண கர்த்தாவாக விளங்கினார் என்பதை அறிய முடிகிறது.

9.திருத்தஞ்சை மாமணிக்கோவில்

தலம் இருக்கும் இடம்

108 வைணவ திவ்விய தேசங்களில் மூன்றாவது தலமாகத் தஞ்சையில் உள்ள மாமணிக் கோவில் விளங்குகிறது. தஞ்சையில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இது மூன்று கோவில்கள் ஒரே கோவிலாக விளங்குகிறது. நீலமேகப்பெருமாளாகவும், மணிக்குன்ற பெருமாளாகவும், வீரநரசிம்ம பெருமாளாகவும்

மூன்று கோவில்கள் காணப்படுகின்றன. இம்மூன்று கோவில்களும் ஒரே திவ்விய தேசமாக திருத்தஞ்சை மாமணிக்கோவில் விளங்குகிறது. இது தஞ்சையில் இருந்து 3 கிலோ மீட்டர் துரத்தில் வெண்ணாற்றங்கரையில் அமைந்துள்ளது.

மூலவர்

தஞ்சை மாமணிக்கோவில் மூலவரான நீலமேகப்பெருமாள் வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு கோக்கி காட்சி தருகின்றார்.இவர் பராசர முனிவருக்குப் பிரதியட்சம் பெற்றவர்.தஞ்சை மணிக்குன்ற பெருமாள் கோவில் மூலவராக மணிக்குன்ற பெருமாள் வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சி தருகின்றார். இவர் மார்க்கண்டேய முனிவருக்குப் பிரதியட்சம் பெற்றவர். தஞ்சை வீர நரசிம்ம கோவில் மூலவர் நரசிம்மர் ஆவார். இவர் மார்க்கண்டேய முனிவருக்குப் பிரதியட்சம் பெற்றவர்.

தாயார்

நீலமேகப்பெருமாள் கோவில் தாயாராகச் செங்கமலவல்லி காட்சி தருகிறார். மணிக்குன்ற பெருமாள் கோவில் தாயாராக ஸ்ரீ அம்புஜவல்லி தாயார் காட்சி அளிக்கிறார். வீரநரசிம்ம கோவிலில் தஞ்சை நாயகி தாயாராகக் காட்சி கொடுக்கிறார்.

பாசுரங்கள் பாடியவர்

இக்கோவிலுக்கு நம்மாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார். ஆகியோர் மங்களசாசனம் செய்துள்ளனர்.

தலவரலாறு

இத்தலம் 108 வைணவ திவ்விய தேசங்களில் மூன்றாவது இடத்தில் உள்ளது.கிருதயுகம் என்னும் ஊரில் ஒரு சமயம் மது என்னும் அரக்கன் அவ்வூரை ஆட்சி செய்து வந்தான்.இவனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். இம்மூவரும் சிவபெருமானை நினைத்து பெரும் தவம் புரிந்தனர்.பல வரங்களையும் பெற்றனர். சிவபெருமானிடம் பெற்ற வரத்தினைக் கொண்டு அங்குள்ள முனிவர்கள், தேவர்கள், இந்திரன் ஆகியோரைக் கொடுமைப்படுத்தி வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு இருக்கும் நேரத்தில் பராசரர் என்ற முனிவர் வைகுண்டத்தில் இருக்கும் எம்பெருமானைப் பூவுலகில் நேரில் கண்டு வணங்க வேண்டும் என்ற விருப்பத்தின்படி தஞ்சையில் உள்ள விண்ணாற்றங்கரையில் தவம் செய்து வந்தார்.அங்கு இருந்த அரக்கர்கள் பராசர முனிவரின் தவத்தைக் கலைத்து அவருக்குப் பல இன்னல்கள் புரிந்து வந்தனர்.உடனே முனிவர் பெருமானை நோக்கி தன்னுடைய தவம் கலையாமல் இருக்க உதவி புரிய வேண்டும் என்று பெருமாளிடம் கேட்க அவர் தன்னுடைய

வாகனமான கருடனை அனுப்பினார்.கருடனால் அவர்களை எதிர்த்து சண்டையிட முடியாமல் போனக் காரணத்தினால் பெருமானே நேரில் தோன்றி தஞ்சகனின் கழுத்தைச் சீவினார்.அப்போது தஞ்சகன் தன் கழுத்தை சீவும் முன் பெருமாளிடம் ஒரு வரம் ஒன்றைக் கேட்டான். தான் உங்களிடம் தண்டனை பெற்ற இடம் தன் பெயராலேயே அழைக்கப்படவேண்டும். என்று வேண்டினான். பெருமான் இதனை ஏற்று தஞ்சகன் என்ற பெயரை கொண்டு தஞ்சாகனூர் என்று அழைக்கப்பட்டு பின் தஞ்சாகூராகி பின்னர் தஞ்சாவூர் எனத் தோன்றியது. பின்னர் அவனை அடுத்து கஜமுகன் யானையின் உருவம் கொண்டு பெருமானைத் தாக்க முயன்றான். அப்போது பெருமாள் நரசிம்ம உருவம் எடுத்து கஜமுகனைக் கொல்ல எண்ணிய போது அவன் இறக்கும் தருணம் வரும் ரேது அவ்வரக்கன் திருநாடு தருமாறு பெருமானை வேண்டினான். பெருமாள் அவன் கேட்டதைக் கொடுத்தருளினார்.பெருமாள் கஜமுகனைக் கொல்வதற்காக யாளியாகிய நரசிம்ம ரூபத்தில் நின்றதால் இப்பதிகம் தஞ்சையாளி எனப் பெயர் பெற்றது. தனது இரண்டு சகோதரர்களும் மாண்டு விட்டதைக் கண்ட தண்டகாசுரன் வேகமாகச் சென்று பாதாள லோகத்துக்குள் சென்று மறைந்து கொண்டான். உடனே பெருமாள் வராக அவதாரம் எடுத்து பூமியை பிளந்துக் கொண்டு பாதாள லோகம் வரை சென்று தண்டகாசுரனைத் தேடி பிடித்துக் கொன்றார். தண்டகாசுரன் பெருமாள் காலில் வீழ்ந்த இடம் என்பதால் இது தண்டகாரண்யம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு மூன்று அசுரர்களையும் கொன்று பெருமாள் மார்க்கண்டேய முனிவருக்கும் பராசர முனிவருக்கும் நேரில் காட்சி அளித்து சேவை சாதித்த தலமாக இத்தலம் விளங்குகிறது.

10.திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்

தலம் இருக்கும் இடம்

திருவிண்ணகர் தலம் 108 வைணவ திவ்விய தேசங்களில் 10-வது இடத்தில் உள்ளது. இத்தலம் கும்பகோணத்திற்கு அருகில் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்திற்குச் செல்ல கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. ராகுஸ்தலம் என்னும் நாகநாதசுவாமி திருக்கோவிலுக்கு அண்மையிலேயே உள்ளது.

மூலவர்

மூலவராக ஒப்பிலியப்பர் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கியவாறு காட்சி தருகின்றார். வடக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்திலும் காட்சியளிக்கிறார். இவரை உப்பிலியப்பன், ஸ்ரீநிவாசன், திருவிண்ணகரப்பன், ஒப்பிலியப்பன், என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் மார்க்கண்டேய முனிவர், காவிரி, கருடன், தர்ம தேவதை ஆகியோருக்குப் பிரதியட்சம் ஆவார்.

தாயார்

தாயாராக நாச்சியார் வடக்கு நோக்கி அமா்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளினாா். இங்கு பிராட்டிக்கு பூமிதேவி, பூதேவி, பூமி நாச்சியா், தரணிதேவி, வஸூந்தரை, என்ற திருநாமங்கள் உண்டு

பாசுரம் பாடியவர்

இத்தலத்தையும் இவ்வெம்பெருமைகளையும் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பேயாழ்வார், பொய்கையாழ்வார் ஆகியோர் இக்கோவிலுக்குப் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனா்.

தலவரலாறு

திருவிண்ணகா் ஒப்பிலியப்பன் கோவில் 108 திவ்விய தேசத்தில் பத்தாவது இடத்தில் உள்ளது. திருபாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடையும் போது அதில் மகாலெட்சுமியும் துளசி தேவியும் தோன்றினா். எம்பெருமான் லட்சுமி தேவியைத் தூக்கி மாா்பில் தாங்கிக் கொண்டாா். இது கண்ட துளசி தேவி எம்பெருமானிடம் தனக்கும் அவருடன் சோ்ந்து வாழ இடம் ஒதுக்க வேண்டி பிரார்த்தனை செய்தாள்.அப்போது எம்பெருமான் துளசி தேவியிடம் வெகு காலம் இலட்சுமி தவம் இருந்து தன் மாா்பில் இடம் கொண்டதாகவும் கூறி அதனால் நீ மாா்க்கண்டேய முனிவா் தவம் செய்யும் வனத்திற்குச் சென்று துளசி செடியாகத் தங்கி இருக்குமாறும் அப்போது துளசிக்கும் தன்னிடத்தில் இடம் கிடைக்கும் என்று கூறி அருள் செய்தாா்.எம்பெருமான் அருள் கிடைத்த நாள் முதல் துளசியானவள் கும்பகோணத்திற்கு அடுத்துள்ள திருநாகேஸ்வர விண்ணகரில் துளசி செடியாய் வாழ்ந்து எம்பெருமானை அலங்கரித்திட தயாா் ஆனாள். அன்று முதல் துளசி அா்ச்சனைக்கும் எம்பெருமானுக்கு மாலையாகவும் தொடுத்து அணியப்பட்டு வருகிறது.ஒரு நாள் மாா்க்கண்டேய முனிவா் திருநாகேஸ்வர தலத்தில் துளசி காடாக மண்டியிருந்த இடத்தில் பூமாதேவியைத் தன் மகளாகப் பெற வேண்டும் என்று கடும் தவம் புரிந்தாா். ஒரு நாள் முனிவா் புஷ்கரணியில் நீராடிக்கொண்டு இருக்கும் போது மகாலட்சுமி தாயாா் துளசி செடியில் அருகே பெண் குழந்தையாக அவதரித்தாா்.அக்குழந்தையை மாா்க்கண்டேய முனிவா் தம்முடன் எடுத்துச் சென்று பூமாதேவி எனப் பெயா் சூட்டி வளா்த்தாா். தாயாரும் வளா்ந்து பெரியவள் ஆனாள்.

ஒரு நாள் எம்பெருமான் முதியவராகப் தோன்றி தள்ளாடியபடி மாா்க்கண்டேய முனிவா் வீட்டிற்கு வந்தாா். முனிவரும் அம்முதியவரை வரவேற்று, உபசாரம் செய்து வேண்டுவது யாது? என்று வினவினாா். அப்போது முனிவரின் மகளான பூமாதேவியை மணம் முடித்து தருமாறு வேண்டினாா். அப்போது முனிவா் தன்னுடைய மகளை ஒரு முதியவருக்கு மணமுடித்து கொடுக்க எனக்கு விருப்பமில்லை என்று

கூறினார். அது மட்டும் இல்லாமல் பூமாதேவியின் இளமை, அவள் ஒன்றும் அறியாச் சிறுமி சரியாக உப்பிட்டு கூட சமைக்க தெரியாது. எனவே தயவு செய்து திருமணப் பேச்சை எடுக்காதீர் எனக் இறைஞ்சினார். ஆனால் முதியவர் உன் மகள் உப்பில்லாமல் சமைத்தாலும் கூட அது எனக்கு அமுதமே என்று கூறி உமது பெண்ணை திருமணம் செய்து கொள்ளாமல் இந்த இடத்தை விட்டு செல்ல மாட்டேன் என்று கூறி அவ்விடத்திலே அமர்ந்து விட்டார். செய்வது அறியாது நின்ற முனிவர் பரமனை மனதில் நினைத்தார். உடனே கிழ அந்தணர் ரூபத்தில் வந்தது பரம்பொருளே என்பது அவருக்கு தெரிந்தது. முனிவர் கண்ணை திறந்து பார்க்கும் போது பெருமாள் இளமைக் கோலத்தில் அரையில் ஜொலிக்கப் பெற்றார். உடனே முனிவர் தம் தவம் பலித்ததை எண்ணி பூமாதேவியைப் பெருமானுக்கு திருமணம் செய்து வைத்தார். இவ்வாறே திருவிண்ணகரில் காட்சி தருவதாகத் தல வரலாறு கூறுகின்றது.

11.நந்திபுர விண்ணகரத்து நாதன்

தலம் இருக்கும் இடம்

நந்திபுரவிண்ணகரத்து நாதன் கோவில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருநந்திபுர விண்ணகரத்து கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலுக்குச் செல்லும் வழியில் ஒரு வாய்க்கால் உள்ளது.இந்த வாய்க்காலைக் கடந்து தான் இக்கோவிலுக்குச் செல்ல வேண்டும். இக்கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன. இக்கோவிலை நாதன் கோவில் என்று அழைத்தால் மட்டுமே அங்கிருப்பவர்களுக்குப் புரிகிறது.

மூலவர்

இத்தலத்து மூலவராக ஜெகநாதர் வீற்றிருந்த கோலத்தில் மேற்கு நோக்கி சேவை தருகின்றார். இத்தலத்து பெருமாள் நந்திதேவருக்கும், சிபிச் சக்கரவர்த்திக்கும் நேரில் காட்சி அளித்துள்ளார்.

தாயார்

இத்திருத்தலத்தில் செண்பகவல்லி தாயார் காட்சி தருகிறார்.

மங்களசாசனம்

இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்து உள்ளார்.

தலவரலாறு

இக்கோவில் 108 வைணவ திவ்விய தேசங்களில் 11 வது தலமாக இக்கோவில் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு நந்திபுர விண்ணகரம் மற்றும் நாதன் கோவில் என்ற இரண்டு பெயர்கள் வந்ததற்குத் தனித் தனியாகக் கதைகள் உள்ளன.

நந்திபுரவிண்ணகரம் பெயர்க்காரணம்

நந்திதேவர் சிவபெருமானுக்கு வாகனமாகவும்,சிவன் உறையும் கைலாய பர்வதத்தைக் காக்கும் காவலராகவும சிவனடியார்களின் தலைவராகவும் நந்தி விளங்குகின்றது. இவர் பக்தியில் சிறந்தவர்.வலது கையில் ஜப மாலையையும், இடது கையில் சூலத்தையும் ஏந்தியவர். மத்தளம் வாசிப்பதில் வல்லவர். இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த நந்திதேவர் ஒரு நாள் ஸ்ரீமந் நாராயணனைத் வணங்குவதற்காக வைகுண்டம் சென்றார். அப்போது வைகுண்ட எம்பெருமானின் வாசலை ஜயன், விஜயன், என்ற துவாரபாலகர்கள் காத்து நின்றனர். துவார பாலகர்களின் அனுமதி பெறாமல் நந்தி தேவர் வைகுண்ட வாயிலைக் கடந்து சென்று விட்டனர். அதனால் கோபம் கொண்ட துவார பாலகர்கள் உடலைக் கொல்ல முடியாத அளவுக்கு வெப்பம் தகிக்கும்படி சாபமிட்டனர். நந்திதேவரும் வேறு வழி தெரியாதபடி சிவபெருமானைப் பணிந்து நடந்தது அனைத்தையும் கூறினார். அதற்குச் சிவன் விஷ்ணுவின் துவாரபாலகர்கள் விட்ட சாபம் விஷ்ணுவே சாபம் விட்டதற்குச் சமம்.அதனால் இப்பூவுலகில் செண்பகாரண்யம் என்ற ஊரில் பகவான் விஷ்ணுவைக் குறித்து தவம் இருந்தால் சாபம் தீரும் எனத் தெரிவித்தார். அதன்படி நந்தீ செண்பகாரண்யத்தில் ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து கடும் தவம் புரிந்தார். நந்தியின் தவத்தை மெச்சிய பரமன் நேரில் தோன்ற நந்தியின் சாபத்தைத் தீர்த்தார். நந்தியின் விருப்பப்படி செண்பகாரண்யத்தில் கோவில் கொண்டும், நந்தியின் ஞாபகர்த்தமாக இத்தலம் நந்திபுர விண்ணகரம் என அழைக்கப்பட்டதாகப் பவிஷ்ய புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு நாள் திருப்பாற்கடலில் பரந்தாமனின் பாதார விந்தகங்களைப் பிடித்துக் கொண்டு இருந்த போது பிராட்டிக்குப் பெருமானின் மார்பில் நித்திய வாசம் செய்ய வேண்டும் என்ற ஆசை வந்ததாம் அந்த ஆசையை நிறைவேற்றி கொள்ள பெருமானிடம் வரம் ஒன்று வேண்டினாராம்.அதற்கு பெருமாள் செண்பகாரண்யம் என்ற இடத்தில் தவம் மேற்கொள்ளுமாறு கூறினார்.அதன் படி பிராட்டியார் செண்பகாரண்யத்தில் தவம் செய்ய ஒரு நாள் பிராட்டிக்கு நேரில் காட்சி அளித்து தனது நெஞ்சில் ஏந்திக் கொண்டாராம். அவ்விடமே நாதன்கோவில் என்றும் நந்திபுர விண்ணகரம் எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

12.நறையூர் நின்ற நம்பி

தலம் இருக்கும் இடம்

திரு நறையூர் என்று அழைக்கப்படும் நாச்சியார் கோவில் கும்பகோணத்தில் இருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இக்கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் அதிகம் உள்ளன. இங்கு தாயார் ஆட்சி செய்கின்ற தலமாகவும், மனைவிக்கு அடங்கிய மணவாளனாக எம்பெருமான் வாழும் தலமாகவும் அமைந்துள்ளது.

மூலவர்

மூலவர் இத்தலத்து பெருமாள் திருநறையூர் நம்பி நின்ற கோலத்தில் தாயாரை மணம் புரியும் கோலத்துடன் கிழக்கு முகம் காட்டி காட்சி தருகிறார்.இவருக்கு வாசுதேவர் ஸ்ரீநிவாசன் என்ற பிற பெயர்களும் உண்டு.

தாயார்

இத்தலத்து தாயார் வஞ்சுளவல்லி, நம்பிக்கைநாச்சியார், என்ற பெயர்களுடன் பெருமாளுக்குப் பக்கத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

பாசுரம் பாடியவர்

இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் மட்டும் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளார்.

தலவரலாறு

மேதாவி என்ற முனிவர் ஒரு காலத்தில் திருநறையூர் என்ற தலத்தில் வாழ்ந்து வந்தார். அப்போது திருமகள் எனக்கு மகளாகப் பிறந்திட வேண்டும் என்று நெடுங்காலமாக கடும் தவம் புரிந்தார். தவத்தின் காரணமாக மணி முத்தா நதிக்கரையின் அருகிலிருந்த ஒரு வஞ்சுள மரத்தடியில் சிறு குழந்தையாகத் தோன்றினார். குழந்தையின் வடிவழகை கண்ட முனிவர் இது திருமகளின் அம்சமே என்று உணர்ந்து அதனை அவர் வீட்டிற்கு எடுத்துச் சென்று வளர்த்தார். குழந்தை வஞ்சுள மரத்தடியில் கிடைத்த காரணத்தால் அக்குழந்தையை வஞ்சுளவல்லி என பெயரிட்டு அழைத்தார். அக்குழந்தை வளர்ந்து மணப்பருவத்தை எட்டியது. திருமகளை விட்டு பிரிந்த பரமன் திருமகளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என எண்ணி அதற்கான தருணம் வந்து விட்டதை உணர்ந்தார். எனவே பெருமாள் தனது அம்சங்களான சங்கர்ஷணன், பிரத்யும்ணன், அருடுத்தன், புருஷோத்தம்மன், வாசுதேவன், என்ற வடிவத்தினைக் கொண்டு ஐவரும் மேதாவி முனிவரின் குடிலுக்கு விருந்தினர்களாக வந்தனர். முனிவர் ஐவரையும் வரவேற்று

நன்கு உபசரித்து அமுது பரிமாறினார். அவர்கள் ஐவரும் உணவு உண்டு கை கழுவும் போது வாசுதேவன் என்பவர் கை கழுவ தண்ணீர் ஊற்றிய வஞ்சுளவல்லி கையை பிடித்து இழுத்ததோடு மட்டும் இல்லாமல் கட்டியும் அணைத்துள்ளார். இதனைக் கண்டு வஞ்சுளவல்லி பதற்றம் அடைந்து அலறினார். தன்னுடைய பெண்ணின் அலறல் சத்தத்தைக் கேட்டு முனிவர் அங்கு ஓடி வந்தார். அங்கு நடந்ததைக் கண்ட முனிவர் வாசுதேவனுக்குச் சாபம் கொடுக்க எண்ணிய போது அதற்குள் அங்கு இருந்த நான்கு பேரும் வாசுதேவனுடன் ஒன்றாக இணைந்து எம்பெருமானாகப் பீதாம்பரம் அணிந்து கையில் சங்கினை ஏந்திய வண்ணம் காட்சி அளித்தார் .உடனே முனிவர் பெருமாளுக்குத் தன் மகளான வஞ்சுளவல்லியை மணம் முடித்துக் கொடுத்தார். வஞ்சுளவல்லியை மணம் முடித்து கொடுப்பதற்கு முன் முனிவர் மூன்று வரங்களைத் தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். முதல் வரமாகத் திருநறையூர் தலத்திற்கு வஞ்சுளவல்லி தாயாருடன் எழுந்தருளி அங்கு வரும் பக்தர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும். இரண்டாவதாக இக்கோவிலில் நடத்தப்படும் அனைத்து விழாக்களுக்கும் மகளான நாச்சியாருக்கே முதலிடம் தர வேண்டும் எனவும், மூன்றாவதாக திருமகளே பெண்ணாகப் பெற்ற தனக்கு பரமபத வாழ்வை அளிக்க வேண்டும் என்றும் வரம் கேட்டார். அதனை ஏற்று அன்று முதல் தாயாரே ஓரடி முன்னால் எழுந்தருள்வது வழக்கமாகவும் உள்ளது.

13.திருச்சேறை எம்பெருமான்

தலம் இருக்கும் இடம்

திருச்சேறை என்ற இத்தலம் கும்பகோணத்தில் இருந்து பதினோரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நாச்சியார் கோவிலில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதாம். திருச்சேறை தலம் முடிகொண்டான் ஆற்றுக்கும் குடமுருட்டி ஆற்றுக்கும் இடையில் அமைந்துள்ளது. இத்தலம் 108 வைணவ திவ்விய தேசங்களில் 13-வது இடத்தில் உள்ளது.

மூலவர்

இத்திருக்கோவிலில் மூலவராக ஸாரநாதன் நின்ற கோலத்தில் கிழக்கு முகம் நோக்கிய படி சேவை தருகின்றார். இவர் காவிரி மற்றும் மார்க்கண்டேய முனிவர் ஆகியோருக்குப் பிரதியட்சம் ஆனவர்.

தாயார்

இத்தலத்து தாயார் சாரநாயகியாகக் காட்சி தருகிறார்.

பாசுரங்கள் பாடியவர்

திருமங்கையாழ்வார் இக்கோவிலுக்குப் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனர்.

தல வரலாறு

ஒரு நாள் உலகம் அழியக்கூடிய அளவுக்கு வெள்ளம் வந்த போது அதில் இருந்து வேதங்களையும் ஜீவ உற்பத்தி செய்வதற்கான வித்துக்களையும் காப்பதற்காக பிரம்மதேவன் புனித தலங்களில் உள்ள மண்ணை எடுத்து குடம் செய்தார். ஆனால் அனைத்து குடங்களும் உறுதி இல்லாமல் உடைந்து விடுகிறது. எனவே ஒரு நாள் வியாசர், மார்க்கண்டேய முனிவர், பராசரர், ஆகிய முனிவர்கள் தவம் செய்து புனிதப்படுத்திய திருச்சேறை பகுதியில் இருந்து மண்ணை எடுத்து பிரம்மா குடம் செய்ய அது உறுதியாக இருந்ததாம். உடனே பிரம்ம தேவன் உயிரினங்களைக் காப்பதற்காக வித்துக்களையும் வேதங்களையும் அடைத்து வைத்து மீண்டும் படைப்புத் தொழிலைச் செய்தாராம். பிரம்மதேவன் குடம் செய்ய மண் எடுக்கப்பெற்ற காரணத்தால் இத்தலம் திருச்சேறை என்று அழைக்கப்பட்டதாகப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

திருச்சேறையில் பெருமாள் கோவில் கொண்ட விதம், ஒரு நாள் கங்கை, யமுனை, சரஸ்வதி, சிந்து, கொண்டு இருந்தனர். அப்போது அவ்வழியே வந்த கந்தர்வன் ஒருவன் அங்கு விளையாடி கொண்டு இருந்த மகளிர் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்தான். அப்போது அவர்களுக்குள் திடிரென ஒரு சந்தேகம் வந்ததாம்.யாருக்குக் கந்தர்வன் வணக்கம் வைத்தான் என்று அவர்களுக்குள் விவாதம் ஏற்பட்டது. இந்த விவாதத்தில் கங்கை, காவிரி, இவர்கள் இருவரையும் தவிர மற்றவர்கள் விலகி கொண்டார்கள். இவர்கள் இருவரும் பிரம்ம தேவனிடம் தீர்ப்பு கூறுமாறு வேண்டினார். பிரம்மா சில செயல்களை எண்ணிப் பார்த்து கங்கையே புனிதமானவள் எனக் கூறினார். கங்கை நதியை போன்று தானும் புனிதம் பெற வேண்டும் என எண்ணி திருச்சேறையில் உள்ள அரச மரத்தடியில் திருமாலைக் குறித்து காவேரி கடும் தவம் இயற்றினார். காவிரியின் தவத்தை கண்டு வியந்த பரமன் ஒரு சிறு குழந்தையாக அவதாரம் எடுத்து காவிரி தவம் இருக்கும் இடத்தை தவழ்ந்து வந்தார்.காவிரிக்கு வந்து இருப்பது திருமாலே என்று அறிந்து அவரை வணங்கினாள். உடனே பெருமாள் கருட வாகனத்தில் ஐந்து தேவியர்களுடன் ஒன்றாக இணைந்து காவிரிக்கு நேரில் காட்சி அளித்து வேண்டுவது என்ன என்று கேட்க காவிரி மூன்று வரங்கள் வேண்டும் என்று வினவினார். முதலாவதாகப் பெருமான் திருச்சேறை மண்ணில் தோன்றி மக்களுக்கு காட்சி அளிக்க வேண்டும் என்றும், இரண்டாவதாகத் திருச்சேறையில் வாழும் அனைத்து மக்களும் புனிதம் அடைந்தது பரமபத வாழ்வை அடைய வேண்டும் என்றும், மூன்றாவதாகத் தான்

கங்கையை விடப் புனிதமானவளாக மதிக்கப்பட வேண்டும். என்று வரம் கேட்டார். பெருமாள் காவிரிக்கு வரம் அளித்தபடியே திருச்சேறையில் எம்பெருமான் எழுந்தருளி காட்சி அளிப்பதாகப் புராணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

14.திருவெள்ளியங்குடி கோலவில் இராமன்

தலம் இருக்கும் இடம்

இக்கோவில் 108 வைணவ திவ்விய தேசங்களில் 14-வது தலமாக இக்கோவில் விளங்குகின்றது. இத்தலத்து பெருமாளை தரிசித்து வணங்கினால் 108 தலத்தில் உள்ள பெருமானையும் சேவித்த பலன் கிடைக்கும் என்று புராண வரலாறு கூறுகின்றது. இக்கோவிலுக்குக் கும்பகோணத்தில் இருந்து சேங்கானூர் என்ற ஊரில் இக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன.

மூலவர்

கோமளவல்லி இராமர் கிடந்த கோலத்துடன் கையைத் தலையில் வைத்துக் கொண்டு கிழக்கு முகம் நோக்கி காட்சி அளிக்கிறார்.

தாயார்

திருவெள்ளியங்குடி கோலவில் இராமன் கோவிலில் மரகதவல்லி தாயாராக இத்தலத்தில் காட்சி அளிக்கிறார்.[36]

பாசுரங்கள் பாடியவர்

திருமங்கையாழ்வார் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளார்.[37]

தலவரலாறு

நவகிரகங்களுள் சுக்ரனாகிய வெள்ளி எம்பெருமானை நோக்கி தவம் இருந்து சேவித்ததால் இத்தலத்திற்கு வெள்ளியங்குடி என்ற பெயர் உண்டானது. இககோவிலில் உள்ள பெருமான் சுக்ரன், பிரம்மா, இந்திரன், மார்க்கண்டேய முனிவர்,பராசரர் முனிவர், அசுரர் குல மயன், ஆகியோருக்கு இத்தலத்து பெருமான். பிரதியட்சம் பெற்றவர் ஆவார். இதில் அசுரகுல மயன் என்பவர் இராவணனின் மனைவியான மண்டேதரியின் தந்தை ஆவார். இவர் மகாபாரதம் நடைப்பெற்ற காலத்தில் அர்ச்சுணனிடம் அடைக்கலம் ஆனவர். பாண்டவர்கள் யாகம் நடத்த மணிமண்டபத்தை நிர்ணயித்தது தலைவன் மயன் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மயன் அசுரர்களுக்காக வானில் தவழும் திரிபுரத்தையும் இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் அமுத கிணற்றையும் மயன் படைத்தார். அப்போது இதனை அறிந்த பெருமான் பசுவாகவும், பிரம்மா பசு கன்றாகவும் உருவெடுத்துச் சென்று

அந்த அமுதக்கிணற்றில் உள்ள அமுதத்தினை உண்டு அக்கிணற்றினை வறண்டு போக வைத்தனர். அமுத கிணறு வறண்டதைக் கண்ட மயன் இராமபிரானைத் தரிசித்திட வேண்டி திருவெள்ளியங்குடி தலத்திற்கு வந்தார். அப்போது பெருமான் தன் கையின் மீது தலையை வைத்துக் கொண்டு கையில் சங்கு சக்கரம் இல்லாது கோலவில் இராமனாகப் புஜங்க சயனத்தில் மயனுக்குக் காட்சி அளித்ததாக வரலாறு கூறுகின்றது. திருவெள்ளியங்குடியில் கோலவில் இராமனாகக் காட்சி அளித்ததால் திருவெள்ளியங்குடி கோலவில் இராமன் என்ற பெயர் வழங்கப்பட்டதாம்.

15. புள்ளம் பூதங்குடி புனிதன்

தலம் இருக்கும் இடம்

அறுபடை வீடுகளுள் ஒன்றான சுவாமி மலையில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் திருப்புள்ளம் பூதங்குடி உள்ளது. இது கும்பகோணத்தில் இருந்து சுவாமி மலை வழியாக திருவைகாவூர் செல்லும் பேருந்து மார்க்கத்தில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.இத்தலம் மடத்தில் அமைந்துள்ளது. அங்கு தங்கும் வசதிகளும் உண்டு.[38]

மூலவர்

வல்வில் இராமர் கிடந்த கோலத்தில் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கியபடி சேவை தருகின்றார்.

தாயார்

பொற்றாமரையாள் நாச்சியாராக தனிக் கோவில் கொண்டு காட்சி அளிக்கிறார்.

பாசுரங்கள் பாடியவர்

திருமங்கையாழ்வார் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளார்.

தலவரலாறு

இத்தலம் 108 வைணவ திவ்விய தேசங்களில் இத்தலம் 15-வது இடத்தில் உள்ளது. இத்தலத்தில் உள்ள எம்பெருமான் கையில் கோதண்டத்தை வைத்துக் கொண்டு பிராட்டியைப் பிரிந்த நிலையில் சேவை தருவதாக இத்தலம் அமைந்துள்ளது. சூரியனின் மகனான ஜடாயு தசரதனின் மகனான இராம, இலஷ்மண, பரத, சத்ருக்னன், ஆகியோர் ஜடாயு மீது பெருமதிப்பு வைத்திருந்தனர். அவரைத் தன் தந்தை போலவே பார்த்து வந்தனர். இவ்வாறு இருக்க கைகேயி கேட்ட வரத்தால் இராமபிரான் சீதாதேவியுடன் இலக்குவனும் காட்டுக்குச் செல்கின்றனர்.

அப்போது சீதாதேவி வீட்டில் தனியே இருக்கும் வேளையில் இராவணன் சீதாதேவியைக் கடத்தி செல்கிறான். இதனைப் பார்த்த ஜடாயு இராவணனிடம் சென்று சண்டையிட்டான். ஜடாயு இராவணனிடம் சண்டையிடும் போது இராவணன் ஜடாயுவை வெட்டி விடுகிறான். ஜடாயு உயிருக்குப் போராடிய நிலையில் தரையில் விழுந்து கிடக்கிறான். அப்போது இராமன் சீதையைத் தேடிக்கொண்டு வரும் போது ஜடாயு நடந்தது அனைத்தையும் கூறி இராமன் மடியிலே உயிரை விடுகிறான். இராமன் ஜடாயுவுக்கு இறுதிக் கடன் செய்ய நினைக்கும் போது சடங்குகள் செய்வதற்குப் பிராட்டி தன்னுடன் இல்லை என்று வருந்துகின்றார். அப்போது பூமி பிராட்டி பொற்றாமரையில் வந்து நின்றாராம். பூமி தேவி காட்சி அளிக்க இராமன் ஜடாயுவுக்கு இறுதி சடங்குகளைச் செய்து முடித்தாராம். ஜடாயுவாகிய பறவைக்கு மோட்சம் கொடுத்து அதன் உடலுக்கு இறுதி சடங்குகளைச் செய்து பரிஹாரம் செய்து கொள்வதற்காக இத்தலத்தில் தங்கியதன் காரணமாக இத்தலம் புள்ளம் பூதங்குடி என அழைக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. முன்னொரு காலத்தில் கிருத்திரராஜன் என்பவர் பெருமானை நேரில் தரிசிக்க வேண்டும். என்ற காரணத்தால் தவம் இருந்தார். (கிருத்திரராஜன்-பறவைகளின் அரசன்) எனவே தவதிதினைக் கண்டு வியந்த பரமன் நேரில் காட்சி அளித்து திருப்புள்ளம் பூதங்குடியில் காட்சி அளித்தாராம். இத்தலத்து மூலவர் திருமங்கையாழ்வாருக்கு நேரில் தோன்றி காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

16.ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன்

தலம் இருக்கும் இடம்

திருஆதனூர் திருத்தலம் 108 வைணவத் திவ்விய தேசங்களில் 16-வது தலமாக இத்தலம் விளங்குகின்றது. இக்கோவிலுக்குக் கும்பகோணம் வழியாகவும் சுவாமிமலை வழியாகவும் செல்லலாம். புள்ளம் பூதங்குடி திருத்தலத்திற்கு அருகாமையில் இத்தலம் உள்ளது. இத்தலத்து எம்பெருமானைத் தரிசித்து விட்டு புள்ளம் பூதங்குடிக்குச் சென்று விட முடியும். கும்பகோணத்தில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

மூலவர்

இக்கோயிலின் மூலவர் ஆண்டளக்குமையன் என அழைக்கப்படுவர். ஆண்டு அளக்கும் ஐயன் என்பது பொருள் ஆகும். இத்தலத்து பெருமாள் கிடந்த கோலத்தில் புஜங்க சயனமாகக் கிழக்கு நோக்கி காட்சி அளிக்கிறார்.

தாயார்

இத்தலத்து தாயார் ரெங்கநாயகி ஆவார்.

பாசுரங்கள் பாடியவர்

திருமங்கையாழ்வார் இக்கோவிலுக்குப் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனர்.

தலவரலாறு

இத்தலத்து பெருமாள் பள்ளி கொண்ட கோலத்தில் காட்சி தரும் பெருமாள் ஸ்ரீ ஆண்டளக்கும் ஐயன் என அழைக்கப்படுகிறார். இத்தலத்தில் உள்ள பெருமாளுக்கு படியளக்கும் பரமதயாளன் என்ற சிறப்பு பெயரும் உண்டு. இத்தலத்தில் உள்ள பெருமாள் பள்ளிக் கொண்ட கோலத்தில் தலைக்குக் கீழாக மரக்கால் ஒன்றினையும் இடது கையில் எழுத்தாணியுடன் ஒலைச்சுவடியையும் ஏந்தி ரெங்கநாயகி தாயாருடன் இத்தலத்தில் காட்சி அளிக்கிறார். இவர் பார்வையில் இருந்து ஒரு அணு கூட அசையாதபடி கணக்கு பார்த்து படியளந்திடுவதால் இவருக்கு உலகுக்குப் படியளந்த பெருமாள் கோலம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஒரு சமயம் பிருகு மகரிஷி மகாலெட்சுமியேதனக்கு பிறக்க வேண்டும். என தவம் இருந்தார். என தவம் இருந்தார். ஒரு சமயம் வைகுண்டத்தில் திருமகள் முன்பு முன்பு விதயாதரப் பெண் இன்னிசை இது கண்டு மகிழ்ச்சியடைத்த லெட்சுமி தான் அணிந்த மலர் மாலை ஒன்றினை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். அப்பெண்ணிடம் இருந்த மலர் மாலையினை வாங்கப் பிருகு முனிவர் அப்பெண்ணை வணங்கினார். உடனே முனிவரே வணங்குவதைக் கண்டு அப்பெண் மலர் மாலையைப் பிருகு முனிவரிடம் கொடுத்தார். பிருகு முனிவர் அந்த மாலையை இந்திரனுக்குத் தர அவனோ அதைத் தனது யானையான ஐராவதத்தின் மீது வைக்க யானை அம்மாலையைத் தூக்கி எறிந்து காலில் போட்டு மிதித்து விடுகிறது. இதனைக் கண்டு பிருகு முனிவர் கோபம் கொண்டு இந்திரனைப் பூமியில் மானுடனாய் வேண்டும். என இந்திரன் வேண்ட இலட்சுமிதேவி பிருகு முனிவருக்கு மகளாக பிறக்கப் போவதாகவும் அந்த அவதாரத்தில் தனக்கும் பெருமாளுக்கும் நடக்கும் திருமணத்தைக் காணும் போது இந்திரனின் சாபம் நீங்கும் என்றும் கூறுகிறார். எனவே பிருகு முனிவருக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து மகாலட்சுமியின் திருமணக்கோலத்தை இத்தலத்தில் காணும் போது தான் இந்திரனின் சாபம் நீங்கியது. பிருகு முனிவரின் தவத்தின் காரணமாகத்தான் மகாலட்சுமி பிறந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்திரனின் சாபம் நீங்கிய தலமாக இத்தலம் விளங்குகிறது.

ஒரு நாள் திருவரங்கத்தில் அரங்க நாதருக்கு மதில் கட்டும் பணியில் ஈடுபட்டு இருந்த திருமங்கையாழ்வாருக்குப் பணம் தட்டுப்பாடு ஏற்பட்டு இருந்தது. இதனை நினைத்து ஆழ்வார் பெருமானை வேண்ட அவர் கொள்ளிடக் கரையில்

வந்து பணம் வாங்கி கொள்ளுமாறு கூறினார். ஆதன் படி கொள்ளிடக் கரைக்குக் கூலி ஆட்களை அழைததுச் செல்ல அங்கு ஒரு வணிகா் தலைப்பாகையுடன் அமா்ந்துக் கொணடு இருந்தாா். ஆவரின் கையில் ஒரு காலி மரக்கால், ஏடு, எழுத்தாணி, இருந்தது. ஆவா் ஆழ்வாரிடம் அரங்கநாதன் தன்னை உதவ அனுப்பி இருப்பதாகக் கூநினாா்.அதன் பிறகு வணிகா் பணியாளா்களுக்குக் கூலியாக இக்காலி மரக்காலை எடுத்து மணலை அளந்து கொடுத்தால் உண்மையாக உழைத்தவா்களுக்குப் பொன்னாகவும் உழகைக்காமல் ஏமாற்றியவா்களுக்கு மணலாகவும் தோன்றும்.என்று கூறினாா். அவா் கூறியது போலவே சிலருக்கு மண்ணாகவும் சிலருக்குப் பொன்னாகவும் இருந்தது. மணலைப்பெற்றவா்கள் வணிகரை அடிக்க வர வணிகா் ஓடினா். ஆழ்வாரும் அதனைப் பின் தொடா்ந்து ஓடினாா். பின்னா் ஆதனூா் தலத்தில் வந்து நின்று வணிகராக வந்தததுு தானே என்றுகூறி ஏட்டில் எழுதி ஆழ்வாருக்கு அருளினாா். இதுவே இத்தலம் பற்றிய வரலாறு ஆகும்.[39]

17. ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன்

தலம் இருக்கும் இடம்

இக்கோவில் ஆற்றங்கரையைக் கடந்து ஒரு கிலோ மீட்டா் துரம் நடந்து சென்று தான் இத்தலத்திற்குச் செல்ல வெண்டும். மாயவரத்தில் இருந்து திருப்புகலூா் என்னும் ஊருக்குச் சென்று அங்கிருந்து ஆற்றைக் கடந்து இத்தலத்திற்குச் செல்ல வேணடும். இக்கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன.

மூலவா்

இங்கு நீலமேகப்பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறாா். இவருக்கு இன்னொரு பெயரும் உண்டு. சௌாிராஜன் என்ற பெயரும் உண்டு.

தாயாா்

கண்ணபுர நாயகி தாயாராக எழுந்தருளியுள்ளாா். இத்தலத்தில் தாயாருக்குத் தனி சந்நிதி உள்ளது

பாசுரங்கள் பாடியவா்

இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வாா், பெரியாழ்வாா், ஆண்டாள், குலசேகர ஆழ்வாா், ஆகியோா் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்துள்ளனா்.

தலவரலாறு

நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கண்ணபுரத்தில் உள்ளது. இக்கோவில் மிகவும் பழமை வாய்ந்த கோவிலாகவும் அமைந்துள்ளது. இக்கோவிலை சவுரிராஜபெருமாள்

கோவில் என்றும் அழைக்கப்படுகின்றனர். கிருஷ்ணாரண்யத்தில் பல ரிஷிகள் தவம் செய்து வந்தனர். விகடாஷரன் என்ற கொடிய அசுரன் தன் இனத்தாருடன் விலங்குகள் வடிவில் இவர்களைக் கொன்று வந்தான்.இந்த அசுரர்களை ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தம்முடைய சக்கரத்தால் அழித்தார். இவ்வாறு கொல்லுவதற்கு ஏவுகின்ற நிலையிலேயே இப்போதும் இப்பெருமானது தீருக்கையில் சக்கரம் அமைந்துள்ளது. இதை ப்ரயோக சக்கரம் என்பர்.

இந்திரனுடைய நணபனான உபரிசரவசு என்ற வேந்தன் திருக்கண்ணபுரத்தை அமைத்துத் திருகோவிலையும் நிறுவினான். தனது திருமகளாகிய பத்மினியை ஸ்ரீ சௌரிராஜப்பெருமாளுக்கு வைகாசி விசாகத்தன்று திருமணம் கன்னிகாதானம் செய்து கொடுத்தான் அதனால் பெருமாளின் இடது கை ஏந்தின நிலையில் இருக்கும் அதளை ஹஸ்தம் என்பர்.

இத்தலத்து உற்சவமுர்த்தி எப்போதும் தலையில் சவுரி அணிந்தருக்கிறார். ஒரு நாள் பெருமாளைச் சேவிக்க வந்த சோழ மன்னனுக்கு பிரசாதமாகக் கொடுக்க பூமாலை இல்லாமல் தவித்த அர்ச்சகர் தாம் சற்று முன்பு தேவதாசிக்கு அனுப்பியிருந்த புஷ்பத்தைக் கொண்டு வரச் செய்து அதனை மன்னனுக்கு அளித்தார். அதில் கருப்பான கேசம் இருக்கக் கண்ட மன்னர் அர்ச்சகரைக் கடிந்தான். ஆர்ச்சகரும் பெருமானுக்கு எப்போதும் சுழற்கற்றை உண்டு. அதில் அணிவித்த மாலை இது என்றார்.கோபம் கொண்ட மன்னன் மறுநாள் காலை வரும் போது முடி இருப்பதைக் காட்ட வேண்டும். என்று கூறிச் சென்றார். அர்ச்சகரைச் சோழ மன்னனது கடுந்தண்டனையில் இருந்து விடுவிக்கப் பெருமாள் கருத்த மயிர்கற்றையுடன் காட்சியளித்தார்.[40]

18. திருக்கண்ணங்குடி கண்ணன்

தலம் இருக்கும் இடம்

இத்தலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. இக்கோவில் ஆழியூர் என்ற இடத்தில் இறங்கி ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். இக்கோவிலுக்குக் கீவளூர் வழியாகவும் செல்லலாம். இக்கோவிலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் உண்டு. இத்தலம் 108 திவ்விய தேசங்களில் பதினெட்டாவது தலமாக இக்கோவில் விளங்குகின்றது.

மூலவர்

மூலவராக லோகநாதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு திசை நோக்கி காட்சி தருகிறார்.[41]

தாயார்

இத்தலத்தில் லோகநாயகி தாயார் எழுந்தருளி காட்சி தருகிறார்.

பாசுரங்கள் பாடியவர்

இத்தலத்துக்குத் திருமங்கையாழ்வார் பாசுரங்கள் பாடி மங்களசாசனம் செய்து உள்ளனர்.

தலவரலாறு

இத்தலம் இருக்கும் பகுதி புராண காலத்தில் கிருஷ்ணாரண்யம் என்று அழைக்கப்படுகிறது. திருக்கண்ணங்குடி பஞ்ச ஷோத்திரங்களில் ஒன்றாக இத்தலம் அமைந்துள்ளது. இங்கு தேவர்களுக்குக் குருவான வசிஷ்ட முனிவர் கிருஷ்ணர் பக்தியில் அதிக ஈடுபாடு கொண்டதால் தனது பக்தியின் உருவால் கிருஷ்ணரை வெண்ணெய்யில் விக்ரகம் செய்து அதனை வழிபடுவதையே வழக்கமாகக் கொண்டு இருந்தார். இப்படியே ஒரு நாள் வழிபாடு நடத்திக் கொண்டு இருக்கும் போது எம்பெருமான் சிறுவனாக உருவெடுத்து வெண்ணெய்யில் செய்த விக்ரகத்தைப் பிட்டு விழுங்கி கொண்டு இருந்தார். முனிவர் வழிபாடு முடிந்ததும் கண் விழித்து பார்த்தார். அச்சிறுவன் வழிபட்டு வந்த விக்ரகத்தை முழுவதும் சாப்பிட்டு விட்டு ஒடத் தொடங்கினான். அதனைக் கண்ட முனிவர் அதிர்ச்சி அடைந்து அவன் மீது கடும் கோபம் கொண்டார். முனிவர் அவனைத் துரத்திக் கொண்டு ஒட அச்சிறுவன் மேற்கு திசை நோக்கி ஒடினான். அப்போது அங்கு ஒரு மகிழ மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் அடியில் முனிவர்கள் தவம் செய்து கொண்டு இருந்தனர். அச்சிறுவனை முனிவர்கள் பாசத்தினைக் காட்டி அவனை விடாமல் கட்டி போட்டனர்.அச்சிறுவன் தான் கட்டப்பெற்ற இடத்திலேயே தாமோதர நாயகனாக லோக நாயகனாக காட்சி அளித்தாராம். முனிவர்கள் பலரால் பாசக் கயிற்றினால் கட்டப் பெற்று இருந்த கண்ணபிரான் குடிக் கொண்ட தலமானதால் அவர் பெயராலே திருக்கண்ணங்குடி என அழைக்கப்படுகிறது.[42]

19. நாகை அழகியார்

தலம் இருக்கும் இடம்

இத்தலம் 108 திவ்விய தேசங்களில் பத்தொன்பதாவது இடத்தில் உள்ளது.இத்தலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. இக்கோவிலுக்குச் செல்ல அனைத்து ஊர்களில் இருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

மூலவர்

மூலவராக நீலமேகப் பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு நொக்கி காட்சி அளிக்கிறார். இவர் கையில் கதாயுகம் காணப்படுகிறது. இத்தலத்தில் உற்சவர்களாகச் சௌந்தர்ய இராஜனும், கஜலட்சுமி தாயாரும் உள்ளனர்.

தாயார்

இத்தலத்துத் தாயாராக சௌந்தர்யவல்லி எழுந்தருளி காட்சி தருகிறார்.

பாசுரங்கள் பாடியவர்

இத்தலத்துக்குத் திருமங்கையாழ்வார் பாடல் பாடி மங்களசாசனம் செய்துள்ளார்.

தலவரலாறு

இத்தலம் கடற்கரை பகுதியை ஒட்டிக் காணப்படுகிறது. இத்தலம் இருக்கும் பகுதியை புராணக் காலத்தில் சௌந்தர்ய ஆரண்யம் எனப் அழைக்கப்பட்டுள்ளது.[43] ஆதிசேஷன் என்ற பாம்பு வரம் பெற்ற இடம் கடற்கரை என்பதால் நாகை என்றும் பட்டினம் என்பது கடற்கரையைக் குறிக்கும். இதனாலேயே இத்தலத்தை நாகை அழகியார் என்று அழைக்கப்படுகிறார். உத்தானபாதன் என்ற அரசனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இவருக்கு சுநீதி, சுருசி, என்ற இரு மனைவிகள் இருந்தனர். முதல் மனைவி சுநீதிக்குதுருவன் என்ற மகனும் இரண்டாவது மனைவிக்கு உத்தமன் என்ற மகனும் இருந்தனர். சுருசி மீது அளவு கடந்த மோகம் கொண்டு இருந்த அரசன் அவளையும் அவளுடைய மகனையும் நன்றாகப் பார்த்துக் கொண்டு வந்தார். ஆனால் துருவனை அவர் மிகவும் உதாசனப்படுத்தி வந்தார்.ஒரு நாள் தாயிடம் நடந்ததை துருவன் தன் தாயிடம் கூறினான்.அதற்கு அவள் பரம்பொருளான பெருமானை நினைத்து தவம் செய்தாலே தான் இதற்கு தீர்வு கிடைக்கும் என்றாள். அப்போது நாரத முனிவர் அங்கு வந்தார்.அவர் துருவனிடம் முனிவர் பெருமானை நினைத்து தவம் நெய்தால் தான் உன் ஆசை நிறைவேறும்.என்று கூற அவனும் ஊன் உறக்கம் இல்லாமல் தவம் செய்தான்.துருவனின் தவத்தைக் கண்டு மெச்சிய பரமன் அவனுக்கு வரம் அளித்தது மட்டும் அல்லாமல் 22 ஆண்டுகள் புவியை ஆட்சி செய்து இறுதியில் துருவ நட்சத்திரமாகப் பிரகாசிக்குமாறு வரம் அளித்தார். துருவனுக்கு நேரில் காட்சி அளித்த தலமாகவும் இத்தலம் விளங்குகிறது.[43]

20. கணமங்கை கற்பகம்

தலம் இருக்கும் இடம்

இத்தலம் 108 வைணவ திவ்விய தேசங்களில் 20-வது தலமாக இத்தலம் விளங்குகிறது. இத்தலம் கும்பகோணத்தில் இருந்து நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.திருச்சேறையில் இருந்து இருபத்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்குக் கும்பகோணம், திருவாரூர் வழியாகவும் செல்லலாம். அங்கு தங்கும் வசதிகள் உண்டு.

மூலவர்

மூலவராக பக்தவத்ஸல பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு திசை நோக்கி காட்சி தருகிறார். இவருக்குப் பத்தராவிப் பெருமாள் என்ற பெயரும் உண்டு.

தாயார்

இங்கு தாயாராக அபிஷேகவல்லி தாயார் பெருமானுடன் எழுந்தருளி காட்சி தருகிறார்.

பாசுரம் பாடியவர்

திருமங்கையாழ்வார் இத்தலத்துக்குப் பாடல் பாடி மங்களசாசனம் செய்துள்ளார்.

தலவரலாறு

ஒரு முறை தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடையும் போது அதில் காமதேனு, உச்சைச்சிரவசு என்னும் வெள்ளைக் குதிரை, ஐராவதம் என்ற வெள்ளை யானை, கற்பகவிருட்சம், திருமகள் ஆகிய அனைவரும் தோன்றினர். அப்போது திருமகள் பெருமானைக் கண்டு அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினாள். அதனை நேரிடையாக அவரிடம் பேச நாணம் கொண்ட திருமகள் பெருமாளைக் குறித்து தவம் செய்தாள். அவளின் தவத்தைக் கண்டு மெச்சிய பரமன் முப்பத்து முக்கோடி தேவர்கள் அனைவரும் ஒன்று கூட லஷ்மி வனத்தில் திருமகளைத் திருமணம் செய்து கொண்டாராம். அதுமட்டும் இல்லாமல் அவரை வணங்கும் அடியவர்களுக்கு என்றும் காட்சி அளித்து அருள்பாலிக்க வேண்டும். என்ற எண்ணம் கொண்டு பெருமாள் திருகண்ணமங்கை தலத்திலே தங்கி விட்டதாகக் கூறப்படுகிறது. கண்ணன் தனது மங்கையான திருமகளை அடைந்த காரணத்தினால் இத்தலத்திற்குத் திருக்கண்ணமங்கை என்ற பெயரினைப் பெற்றதாம்.[44]

21.திருஇந்தளூர் அந்தணன்

தலம் இருக்கும் இடம்

மயிலாடுதுறை தற்போது மாயவரம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இத்தலத்தை திருஇந்தளூர் என்று சொன்னால் யாருக்கும் தெரியாது. மாயவரம் பரிமளரெங்கன் கோவில் என்று கேட்டால் தான் அனைவருக்கும் தெரியும். இத்தலத்திற்குச் செல்லும் வழியில் காவிரி பாய்ந்து வருகிறது. இத்தலத்தில் உறையும் பெருமாள் சந்திரனின் சாபம் தீர்த்ததாகச் சொல்லப்படுகிறது. சாபம் நீங்கிய காரணத்தால் பெருமாளிடம் தன்பெயராலே இத்தலம் வழங்கப்பட வேண்டும். என்று வேண்டியதால் இத்தலம் திருஇந்தளூர் என வழங்கப்பட்டதாம்.

மூலவர்

இத்தலத்துப் பெருமாள் பரிமளரங்கநாதர் கிடந்த கோலத்தில் வீர சயனமாக கிழக்கு திசை நோக்கி காட்சி தருகிறார். இவருக்கு மருவினியடைந்தன், அந்தியரங்கன், சுகந்தவன நாதன், போன்ற பெயர்களும் உண்டு. அவர் சந்திரனுக்குச் சாபம் தீர்த்தவரும் ஆவார்.

தாயார்

இத்தலத்தில் தாயார் பரிமளரங்கநாயகி காட்சி அளிக்கிறார். இவருக்கு வேறு பெயர்களும் உண்டு.

தலவரலாறு

ஒரு காலத்தில் வேதங்கள் நான்கினையும் விஷ்ணு பிரம்மாவுக்கு உபதேசம் செய்து படைக்கும் தொழிலை நல்லபடியாக நடத்தி வருமாறு விஷ்ணு பிரம்மாவுக்குக் கட்டளை இட்டார்.ஒரு சமயம் படைப்பு தொழிலை நடத்தி வந்த பிரம்மாவுக்குத் தேவர்கள் அனைவரையும் விடத் தானே உயர்ந்தவன் என்ற எண்ணம் தோன்றியதாம். அதனை அடக்க வேண்டும்.என எண்ணிய பரமன் தன்னுடைய தொடையிலிருந்து இரண்டு அசுரர்களை உண்டாக்கினாராம். அவ்அரக்கர்கள் மகாவிஷ்ணுவின் காதில் உள்ள அழுக்கினைக் கொண்டு படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த அசுரர்கள் இருவரும் பிரம்மா வாசம் செய்யும் மலரினை ஆட்டித் துன்புறுத்தினர்.அவர்கள் செய்ததனைக் கண்டு பிரம்மா மட்டும் இல்லாமல் அனைத்து தேவர்களும் பயப்பட ஆரம்பித்தனர்.பின்னர் அசுரர்கள் இருவரும் பிரம்மனிடம் சண்டையிட்டு வேதங்களைப் பறித்து சமுத்திரத்தின் அடியில் ஒழித்து வைத்து விட்டாராம். தான் செய்த தவறினை உணர்ந்து பிரம்மதேவன் வேதங்களை மீட்டுத் தருமாறு வேண்டினார். விஷ்ணு மச்சாவதாரம் எடுத்து அசுரர்கள் இருவரையும் கொன்று சமுத்திரத்தில் இருந்து வேதங்களை மீட்டு வந்தனர். அசுரர்கள்

தொட்டதால் வேதங்களின் மேல் துருநாற்றம் வீசத் தொடங்கியது. உடனே வேதம் காவரி கரையில் ஸ்ரீமந் நாராயணனை நினைத்து தவம் செய்ததாம் வேதத்தின் தவத்தினை மெச்சிய பரமன் நேரில் காட்சி அளிக்க வேதம் தன் மீது படிந்து இருந்த கெட்ட துருநாற்றத்தினை நீக்குமாறு வேண்டியதாம். உடனே பெருமாள் துர்நாற்றத்தை நீக்கியதோடு அட்டும் இன்றி பக்தர்களுக்கு இத்தலத்திலே தங்கி காட்சி தருவதாகவும் வேதத்தில் மாசு நீக்கப்பட்ட காரணத்தால் இத்தலம் சுகந்தாரண்யம் என்றும் இத்தலத்தில் உறையும் பெருமாள் சுகந்தவனநாதன் என்றும் அழைக்கப்படுகிறது.[45]

இவ்வாறு ஒவ்வொறு தல வரலாறுகளை நோக்கும் போது இப்பிறவியில் செய்த பாவச் செயல் அடுத்த பிறவியில் தம்மை தாக்கும் என்பது தெளிவாக விளங்குகிறது."முற்பகல் செய்யும் பிற்பகல் விளையும்" என்பது பழமொழி. சென்ற பிறவியில் பாவம் செய்பவர்கள் மறுபிறவியில் அதனை அனுபவிக்க வேண்டிய நிலை உருவாகின்றது. எதுவுமே நிலையானது அல்ல. புண்ணியம் செய்தால் நல்வினையும், பாவம் செய்தால் தீவினையும் ஏற்படுகிறது. என்பதே அவரவா் வாழ்க்கையில் பாடமாகக் காண்பிக்கின்றன.

பேராசிரியா் நா. சுப்புரெட்டியாா் அவா்கள் சோழநாட்டு திருப்பதிகள் என்னும் நூலின் வாயிலாக தலவரலாறு பற்றி கூறுவதாவது ஒவ்வொரு தலத்திலும் ஆழ்வாா்கள் பாடல் பாடி மங்களசாசனம் செய்தது பற்றியும் அத்தலத்தில் இறைவன் தோன்றிய பெருமைகளையும், மனித வாழ்வியலையும் எடுத்துக் காட்டியுள்ளாா்.

தொகுப்புரை

சோழநாட்டுத்திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும் என்ற தலைப்பில் முதல் இயலாக தலவரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. இத்தலவரலாறுகளை முழுமையாக நோக்கும் பொழுது கோவில் பெருமைகளையும், ஆழ்வாா் பாசுரங்களையும், பற்றி அறிய முடிகிறது. அவை மட்டும் இல்லாமல் புராண வரலாறுகளையும், ஊரின் சிறப்புகளையும் மேலே கொடுக்கப்பட்டுள்ள தலவரலாறுகள் மூலம் விளக்கமாக அறிந்து கொள்ள முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. தமி. தல. புரா.	-	41
2. மேலது,	-	42 – 43
3. மேலது,	-	86
4. மேலது,	-	87
5. மேலது,	-	87
6. மேலது,	-	88
7. மேலது,	-	88
8. மேலது,	-	90
9. தமி. தல. புரா.	-	100
10. மேலது,	-	101
11. மேலது,	-	102
12. ந. சுப்பு. பன்.	-	157
13. மேலது,	-	158
14. மேலது,	-	159
15. மேலது,	-	159
16. மேலது,	-	161
17. மேலது,	-	162
18. மேலது,	-	160
19. வைணவ செல்வம்	-	2
20. சோழ நாட்டுத் திருப்பதிகள்	-	9
21. ஸ்ரீரங்கம் கோவில் வரலாறு	-	4
22. 108 வை.தி. ம.	-	72
23. ஸ்ரீரங்கம் கோவில் வரலாறு	-	1
24. மேலது,	-	1-2
25. 108. வை.தி.ம.	-	67
26. வை. தி. தே.	-	192
27. 108 வை. தி. ம.	-	65
28. வை. தி. தே.	-	214

29. அர. பெ. திரு. வர	-	3
30. மேலது,	-	5
31. மேலது,	-	6
32. ஸ்ரீ சார. கோவி. தி. வ.	-	4
33. மேலது,	-	3
34. மேலது,	-	10
35. வை. திவ்ய.	-	271
36. 108 வை. தி. ம.	-	136
37. மேலது,	-	136
38. மேலது,	-	61
39. வை. திவ்ய	-	242
40. ஸ்ரீ சௌ. பெரு. தி. வ.	-	9
41. வை. திவ்ய	-	408
42. 108 வை. தி. ம.	-	125
43. வை. திவ்ய	-	331
44. 108 வை. தி. ம.	-	141
45. வை. திவ்ய. தேச.	-	365

இயல்-2

வழிப்பாட்டு முறைகள்

சோழ நாட்டு திருப்பதிகள் என்னும் தலைப்பில் இரண்டாவது இயலாக வழிபாட்டு மரபுகள் அமைந்துள்ளது.மனித வாழ்க்கையில் வழிபாடு என்பது இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. இவ்வியலில் வழிபாடு என்பது பற்றிய விளக்கம், வழிபாட்டு மரபு, ஒவ்வொரு தலத்திலும் பெருமாள் எவ்வாறு வழிபடப்படுகின்றன. என்பது பற்றியும், பூஜை காலங்கள் எத்தனை என்பது பற்றியும், பூஜை எத்தனை முறை நடக்கின்றன என்பது பற்றியும், ஒரு நாள் பூஜை, முறைகள் பற்றியும், பூஜை மொழி பற்றியும், வார சிறப்பு நாட்கள் பற்றியும், ஆண்டு சிறப்பு நாட்கள் பற்றியும், பூஜை செய்வோரின் பண்புகள் பற்றியும், வழிபடும் முறைகள் ஆகியவைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வழிபாடு

மனிதன் தன் எண்ணத்தை நிறைவு செய்து கொள்ளப் பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகிறான். அதில் ஒன்று தான் வழிபாடு. வழிபாடு என்பதன் பொருள் பாடு என்பது நாம் படும் அனுபவத்தைக் கூறுவதால் பாட்டு என்பது இடைக்குறை இலக்கணப்படி பாடு என ஆயிற்று. வழி என்பது ஒரு இலக்கைக் குறித்து அழைத்து செல்வதாகும்.அதாவது நாம் எண்ணிய இலக்கை நாம் பெறுதலின் பொருட்டு நம்மை அழைத்து செல்லும் நெறியே வழிபாடு ஆகும். தொழுவது என்பது உயர்ந்ததை எண்ணி போற்றுவதாகும். இவை இரண்டு சொற்களையும் கொண்டு நாம் எண்ணியதைப் பெறும் பொருட்டு பின்பற்றப்படுவது வழிபாடு ஆகும். உதாரணமாக மெய் -உடல் தூய்மை செய்து நீராடி, வாய்- திருநாமம் நவின்று நாவே நீ மூரலாய், கண்- இறை திரு எருவம் கண்டு முக்கு- நறுமணப்புகை நுகர்ந்து செவி - இறைப் புகழ் கேட்டு மனம்-களவு, காமம், பொய் நீங்கி, புத்தி- இறை வழிபாடு நெறியறிந்து என இவை அனைத்தும் இயைந்து இறை குறித்து இயங்கும் நெறிமுறையே வழிபாடு என்பர். மனிதனுடைய நம்பிக்கை, தேவை, எதிர்பார்ப்பு, இவைகளைக் கொண்டு வழிபாடு தொடங்குகிறது.[1]

வழிப்பாட்டு மரபுகள்

இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள், தொல்பொருள்கள், கலை ஓவியங்கள், சிதைத்தும் சிதையாமலும் நிற்கும் கோயில்கள், போன்ற சான்றாதரங்களைக் கொண்டு பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை தமிழர் தம் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு மரபுகளையும் அறிந்து கொள்ள முடியும். இனக்குழு மக்களிடையே ஆங்காங்கே வழிபாடுகள் நிகழ்ந்த நிலை, ஆரியர்களின்

வருகையால் ஆரிய- திராவிட தெய்வங்கள் கலந்த நிலை, வழிபாடுகள் சைவ வைணவ சமய நிறுவனங்களாக வளர்ச்சி பெற்ற நிலை, பௌத்த சமண மதங்கள் வளர்ச்சி பெற்ற நிலை, சைவ, வைணவ சமயங்கள் மக்கள் இயக்கமாகச் செயல்பட்டு அந்த சமயங்களின் செல்வாக்கை வேரறுக்க முயன்ற நிலை, கிறித்துவ, இசுலாமிய நிறுவன சமயங்கள் வந்து வேருன்றிய நிலை, என்று இவ்வாறு தமிழகத்தின் பல்வேறு வழிபாட்டு மரபுகள் வளர்ந்து நிலைக் கொண்டு அறிகிறோம். தொல்பழங்காலந் தொட்டே வழிபடப்பட்டு வருவதும் இன்றும் பெருபான்மை மக்களின் வழிபாட்டு மரபாகக் காணப்படுகிறது. இதில் வைணவ மத வழிபாடு புத்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆரியர்களின் வேதக்கால புராணங்கள், மந்திரங்கள், ஆகியவற்றின் அடிப்படையிலும் வழிபாடு பின்பற்றப்படுகிறது. இதில் திருமால் வழிபாடு பக்தியை அடிப்படையாகக் கொண்டு தான் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த திருமால் வழிபாடு வைணவ சமயத்தில் மேலோங்கி காணப்படுகிறது எனவே வைணவ சமயத்தில் வழிபாட்டு மரபு எவ்வாறு இருக்கின்றன. என்பதைக் காணலாம்.[2]

வைணவ வழிபாட்டு மரபு

வைணவ சமயத்தில் முதற் கடவுளான திருமாலை அடிப்படையாகக் கொண்டு வழிபாடு கடைபிடிக்கப்படுகிறது. வைணவம் தன்னைத் தகவமைத்துக் கொள்ள சமுதாயத்துக்குள் ஊடுருவிச் சென்றது. அனைத்து தரப்பு மக்களையும் தன்பால் ஈர்க்கும் நிலையைச் செய்தது. அடியார் வழிபாடு வைணவத்தில் குறிப்பிட்டு சொல்ல முடியாத அளவுக்கு புனரமைக்கப்பட்டது. எனவே வைணவத்தை தழுவிய அடியார்களுக்கு பணிந்து நடத்தல், அவர்களுடைய பற்றதலை மதித்தல், முகமலர்ச்சி கண்டு மகிழ்தல், இவை அனைத்தும் மெய்யான வைணவ இலக்கணமாகும். வைணவத்தில் வேறு வழிபாடும் இருக்கிறது. இது சரணடைதல், என்றும் அழைக்கப்படுகிறது.இதனைப் பிரபக்தி என்றும் அழைப்பர். இராமனுஜரும் இதற்கு முன்னூரிமை அளித்துள்ளார். எனவே ஆழ்வார்களே அடியார்களாகப் கருதப்படுவதனால் வைணவத்தில் வழிபாடு மேலோங்கி இருந்தது. அப்போது இந்திய நாகரிகம் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்ற நாகரிகமாகவும் உள்ளது. இந்நாகரிகத்தில் நிலவி வந்த வளர்ச்சியான பண்பாட்டுத் தன்மை என்பது காலங்கள் தோறும் எவ்வித தொய்வின்றி தொடர்ச்சியாகப் வளர்ச்சினைப் பெற்றுள்ளது. மதம் என்பது தொடக்க கால மனிதனின் வெளிப்பாடாகக் கொண்டு உருப்பெற்றதாகும்.சிந்து சமவெளி நாகரிகத்துடன் தொடர்ந்து வந்த வேதக் காலத்தில் இருந்து மதத்தின் வளர்ச்சி நிலை என்பது வழிபாட்டாளர்கள் தன்மைக்கு ஏற்ப மாற்றம் பெற்றுள்ளது. இந்தியாவில் வழிபாட்டிற்கு உரிய காலம் என்பது கி.பி 3-ம் நூற்றாண்டில் புத்த மதத்தினைச் சார்ந்து வெட்டுவிக்கப்பட்ட குடவரையாகும். அக்குடவரைகள் பிற்காலத்தில் இந்து மதக் கோவில்களுக்கும் கட்டுமானக்

கோவில்களும் முன்னோடியாக அமைந்துள்ளது. எனவே கோவிலின் வடிவங்கள் இடம், காலம், நம்பிக்கை, ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலையிலும் பல்வேறு வேறுபாடுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன.[3]

இந்து மத வழிபாட்டு வடிவங்கள் புத்த மதத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். வேதகால ஆரியர்கள் தாக்கத்தின் காரணமாக இந்து மதம் உருவ வழிப்பாட்டிற்கு தன்னை உட்படுத்திக் கொண்டது. இந்து மதத்தில் சண்மதங்கள் என்ற கூறப்படும் சைவம், வைணவம், சாக்தம், சவுரம், மதங்களே உருவ வழிப்பாடு தோற்றம் பெற்றது. இதில் குறிப்பாக சைவத்தின் சிவலிங்க வழிபாடும், வைணவத்தில் நாராயண வழிபாடும், இந்தியா முழுமையும் தோற்றம் பெற்றுள்ளது. தமிழகப் பண்பாட்டு. வரலாற்றில் மதத்தின் செயல்பாடு என்பது முக்கிய கூறாகவே இருந்து வந்துள்ளது. மர வழிபாடு, குறியீடு வழிபாடு, இயற்கை வழிபாடு, நீத்தார் வழிபாடு, என்று பல்வேறு வகையில் வழிபாட்டு மரபு மக்கள் தங்களின் வாழ்வியலின் தேவைக்காக ஒவ்வொரு நிலப்பகுதியிலும் குடியேறிய திணை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வழிபாடு தோற்றம் பெற்றது. இதில் காடுறை பகுதிக்கு இணையாக மாயோன் வழிபடப் பட்டார்.

தமிழக வழிபாட்டு மரபில் மாயோன், மால் என்ற வழிபாடு தோற்றம் பெற்று வந்த வைணவம் வட இந்தியாவில் நாராயணன், என்ற பெயரில் வழிபடபட்டு வந்தது. தமிழகத்தில் மேற்கூறிய வழிபாட்டிற்கான காலமும், சான்றுகளும் சங்க இலக்கிய காலத்தில் இருந்து வந்துள்ளது. எனவே சங்க இலக்கியச் சான்றுகளாக

“மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பீர்
றாவா விழுப்புகழ் பூவை நிலையும்”[4]

சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து பக்தி இலக்கிய காலத்தில் திருமால் வழிபாடு பூதத்தாழ்வார் தொடங்கி கடைசி ஆழ்வாரான திருமங்கையாழ்வார் வரையிலும் புகழ்ந்துரைக்கப்பட்டது. வைணவத்தின் வளர்ச்சிக்குப் பக்தியிலிருந்த ஆழ்வார்கள் பாசுரங்களின் அடியில் தங்களின் பங்களிப்பை வழங்கினர்.இப்பாசுரங்கள் தமிழகம் மட்டுமின்றி பிறபகுதிகளில் அமைந்திருந்த வைணவக் கோவில்களின் கருவறைப் படிமத்தினையும் புராண மற்றும் பிற சிறப்புகளையும் ஒருங்கிணைத்துப் போற்றுபவையாக அமைந்திருந்தது. அவ்வாறு ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பட்ட தமிழக வைணவக் திருத்தலங்கள்,

- தொண்டைத் நாட்டுத் திருத்தலம்
- நடு நாட்டுத்திருத்தலம்
- சோழநாட்டுத் திருத்தலம்
- தென்னாட்டு திருத்தலம்

என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் சோழநாட்டு திருத்தலங்களாக 40 ஆகும். இதில் உள்ள பத்து தலங்களைக் கொண்டு இரண்டாவது இயலாக வழிபாட்டு மரபு என்னும் இவ்வியல் விளக்கப்பட்டுள்ளது. அதில் முதல் தலமாகத் திருக்கண்டியூர் கொடுக்கப்பட்டுள்ளது.

1.திருக்கண்டியூர்தலம்

பூஜை முறைகள்

வைணவ முறையைப் பின்பற்றி வழிபாடு நடத்தப்படுகிறது. வைணவ சமயத்தைச் சார்ந்தவர்கள் தான் பெருமாளுக்குப் பூஜைகள் செய்து வருகின்றனர்.இங்கு பெருமாளுக்கு நான்கு முறையான வழிபாடு நடைப்றெுகிறது. அவையே

1.கால சந்தி வழிபாடு

2.உச்சி கால வழிபாடு

3.சாயரட்சை வழிபாடு

4.அர்த்த ஜாம வழிபாடு[5]

ஆகியவை ஆகும். தினசரி நாட்களில் இவ்வழிபாடு முறை பின்பற்றப்படுகிறது. திருவிழாக் காலங்களில் வழிபாடு முறை மாறுபடும்.

நாள் வழிபாடு

ஹர சாப விமோச்சன பெருமாளுக்குத் தினமும் நான்கு கால பூஜை நடத்தப்படுகிறது. முதல் காலமாக காலையில் காலசந்தி என்ற பூஜை நடத்தப்படுகிறது.இப்பூஜை 9.00 மணியிலிருந்து 9.30 வரை நடத்தப்படுகிறது. இதில் பெருமாளுக்கு மலர் மாலைகள் வைத்து அலங்காரம் செய்த பிறகு தீபாராதனை காட்டி பச்சை பால் வைத்து வழிபடப் படுகிறது.

இரண்டாவது காலமாக உச்சி காலத்தில் பூஜை நடத்தப்படுகிறது. இப்பூஜை 11.30 மணியில் இருந்து 12 மணி வரையிலும் இப்பூஜை செய்யப்படுகிறது. இதில் பெருமாளுக்குப் பருப்புசாதம், ஏதேனும் ஒரு காயினை வைத்து சமைத்து பெருமாளுக்கு நிவேதனமாகப் படைக்கப்படுகிறது.

மூன்றாவது காலமாக சாயரட்சை பூஜை நடைபெறுகிறது. இப்பூஜை மாலை நேரத்தில் 6.00 மணியிலிருந்து 6.30 வரைக்கும் இப்பூஜை நடைபெறுகிறது.

இப்பூஜையில் பெருமாளுக்கு நிவேதனமாகப் பொங்கல் வைத்து திபாராதனை காட்டி வழிபாடு நடைபெறுகிறது.

நான்காவது காலமாக அர்த்த ஜாம பூஜை நடைப்பெறுகிறது. இந்த அர்த்த ஜாமப் பூஜையில் சர்க்கரை பொங்களும், காயந்த பாம் வைத்து வழிபாடு நடைபெறுகிறது. இது அல்லாமல் பெருமாளுக்கு வழிபடுவோர் கற்பூரம், பத்தி, வெற்றிலை, மாலை, ஆகியவை அவரவா் வசதிக்கேற்ப வாங்கி வருவா். பெருமாளுக்கு அபிஷேகங்கள் கிடையாது என்பதால் தைலக்காப்பு வழிபாடு சிறப்பாக நடைப்பெறுகிறது.

ஒவ்வொரு முறையும் வழிபாடு முடிந்த பிறகு பெருமாளை வழிபட வரும் பக்தர்களுக்கு முதலில் துளசித் தீர்த்தம் தந்து தலையில் சடாரி (இராமர் பாதுகை) வைக்கப்பட்டு பின்னா் குங்குமம் தரப்படுகிறது. இவற்றைத் தவிர தினமும் வழிபாடு முடிந்தவுடன் காலையில் தயிர் சாதமும் மாலை நேரங்களில் சர்க்கரைப் பொங்கலும் சனிக் கிழமை அன்று தயிர் சாதமும் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

வார வழிபாடு

ஒவ்வொரு வார சனிக்கிழமையும் பெருமாளுக்கு உகந்த சிறப்பு நாட்களாக கருதப்படுகிறது. தினசரி நாட்களில் வழிபாடு நடப்பது போலவே வார சிறந்த நாளான சனிக்கிழமையும் வழிபாடு நடத்தப்படுகிறது. சனிக்கிழமை அன்று வழிபடுவது நல்லது என்று மக்கள் நம்புகின்றனா். சனிக்கிழமை அன்று நான் நேரில் சென்று பார்த்த போது அன்று விடுமுறை நாள் என்பதால் வழிபடுவோர் அதிகமாகவே காணப்பட்டனர். அன்று அர்ச்சனையை நேரில் சென்று பார்த்தபோது தினசரி நாட்களில் நடப்பது போலவே அன்றும் அர்ச்சனை நடைபெற்றது. அன்று பிரசாதமாகத் தயிர் சாதம் வழிபாட்டாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

சித்திரை :- வருடப்பிறப்பு - பஞ்சாங்கபடணம் பௌர்ணமி(கபால மோட்ச உற்சவம் கருடசேவை

வைகாசி :- வைகாசி தாயார் உற்சவம், வைகாசி விசாகம் பெருமாள் தாயார் சேர்ந்த கருடசேவை

ஆனி :- சுதர்சன ஜெயந்தி(சக்கரத்தாழ்வார்)

ஆடி :- ஏகாதசி – ஜேஸ்டாபிஷேகம், ஆடிபூரம் - ஆண்டாள் புறப்பாடு

ஆவணி :- ஸ்ரீஜெயந்தி பவித்ரோசவம்

புரட்டாசி :- நவராத்திரி தேசிகன் உற்சவம்

ஐப்பசி :- தீபாவளி, ஊஞ்சல் உற்சவம் - 5நாட்கள்

கார்த்திகை :-திருக்கார்த்திகை, திருமங்கையாழ்வார் நட்சத்திரம் உற்சவம்.

மார்கழி :- ஏகாதசியை முன்னிட்டு இராபத்து, பகல்பத்து.

தை :- வெள்ளி – ஊஞ்சல் சங்கராந்தி கனு அன்று

மாசி :- மாசிமகம் தீர்த்த வாரி

பங்குனி :- உத்திரத்தைத் தேர்தினமாகக் கொண்டு பதினாறு தினங்கள் ப்ரமோற்சவம்[6]

பூஜை மொழி

ஸ்ரீ ஹர சாப விமோசனப் பெருமாள் கோவிலில் இனிய தமிழில் சைவ வைணவ பேதமின்றி அர்ச்சனையும் வழிபாடும் நடைபெறுகின்றது. இக்கோவிலின் கருவறைக்கு முன்பாகவே தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. நேரில் அர்ச்சனையைக் கவனித்தபோது தமிழில் மூலவர் திருநாமத்தினைக் கூறி அங்கு தோன்றிய ஸ்ரீதேவி, பூதேவி பற்றிக் கூறி தமிழில் அர்ச்சனைப் செய்யப்படுகிறது. சில நேரங்களில் உற்சவ மூர்த்திக்கு சமஸ்கிருதத்திலும் அர்ச்சனை செய்யப்படுகிறது. இக்கோவிலில் சமஸ்கிருத மொழியில் அர்ச்சனை என்ற நிலை சற்றே மாற்றம் அடைந்து இனிய தமிழிலும் அர்ச்சனை என்ற நிலை தற்போது காணப்படுவதை அறிய முடிகிறது.

பூசை செய்வோர் பண்புகள்

கோவிலுக்குப் பிராமணர்களே பூசை செய்வதற்கென நியமிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது திரு கண்ணன் பட்டர் என்பவர் தலைமை அர்ச்சகராக மாத ஊதிய அடிப்படையில் பணி புரிகிறார். இவருக்குத் துணையாகப் பகுதி நேரப் பணியாளராக இரு குருக்கள் பணிபுரிகின்றனர். இவர் வழிபட வரும் பக்தர்களை அன்புடன் நடத்துகிறார். பல்வேறு துன்பங்களை மனதில் தாங்கிக் கொண்டு பெருமானை வழிபட வரும் பக்தர்களுக்கு ஆறுதல் கூறுதல், நற்சொல் கூறுதல், பெருமாளின் பெருமைகளைக் கூறுதல், நம்பிக்கையை வளர்த்தல், போன்ற

செயல்கள், வாயிலாக அவா்களைப் அமைதிப்படுத்தி அனுப்புகின்றனா். பூஜை செய்வோரின் இத்தகைய செயல்கள் வழிபடுவோரை வழிபடு தெய்வத்துடன் பற்று கொள்ளத் தூண்டுகிறது. இது கோவில் வளா்ச்சிக்கு இன்றியமையாததாகிறது.

வழிபடும் முறைகள்

பிரம்மாண்ட புராணத்தின்படி சகல சாப தோஷ நிவா்த்தி ஸ்தலமாக கண்டியூா் உள்ளது. பிரம்மஹத்தி, ஸ்வா்ணதேயம், குருதாரகமளம் போன்ற மகா பாபங்களை புரிந்தவா்கள் இங்கு வந்து கதா தீா்த்தம் என்ற தீா்த்தங்களில் நீராடி ஹரசாபகரனை சேவிக்கிறாா்களோ அவா்களுடைய பாபங்கள் நீங்கும் என்பது ஐதீகம். பித்ரு தோஷம் உள்ளவா்கள் அமாவாசைகளில் நீராடி தத்யோன்னம், பாயாசம் இவற்றை நிவேதனம் செய்தால் தோஷங்கள் நீங்கிவிடும்.

ஏகாதசியன்று துளசீ தளம் பறிக்கக்கூடாது. அதனால் முதல் நாளே துளசி தளம் எடுத்து வைத்துக் கொண்டு காலையில் குளித்து பின் சொா்க்க வாசல் சென்று வர வேண்டும்.[7]

2.தஞ்சை மாமணிக் கோவில்

பூஜை காலங்கள்

இக்கோவில் 108 வைணவ திவ்விய தேசங்களில் மூன்றாவது தலமாக திகழ்கிறது. இங்கு மூன்று அவதாரமாகப் பெருமாள் காட்சியளிக்கிறாா். அவையே நீலமேகப் பெருமாளாகவும், மணிக்குன்றப் பெருமாளாகவும், வீர நரசிம்மப் பெருமாளாகவும், தனித்தனியே கோவில் கொண்டு எழுந்தருளி உள்ளாா். இங்கு நீலமேகப்பெருமாளுக்கு இரண்டு காலங்கள் வழிபாடு நடத்தப்படுகிறது. முதல் காலமாகக் காலையில் காலசந்தி பூஜையும், மாலையில் சாயரட்சை பூஜையும் என இரண்டு காலங்கள் நடைபெறுகிறது.

மணிக்குன்றப் பெருமாளுக்கு இரண்டு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. காலையில் காலசந்தி பூஜையும், மாலையில் சாயரட்சை பூஜையும் என இரண்டு காலங்கள் பெருமாளுக்குப் பூஜைகள் நடைப்பெறுகின்றன.

வீர நரசிம்ம பெருமாளுக்கு நான்கு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. காலையில் காலசந்தி பூஜையும், உச்சிகாலப் பூஜையும், மாலையில் சாயரட்சை பூஜையும், இரவில் அா்த்த் ஜாம பூஜையும், என நான்கு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன.

நாள் வழிபாடு

தினசரி காலங்களில் நீலமேகப் பெருமாளுக்கு இரண்டு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. காலையில் காலசந்தி பூஜை 7.00 மணியில் இருந்து 8.30 வரையிலும் பூஜை செய்து வழிபாடு நடைபெறுகிறது. மாலையில் சாயரட்சை பூஜையும் வழிபாடும் நடைபெறுகிறது. காலையில் பச்சை பால் வைத்து பெருமாளுக்கு வழிபாடு நடைபெறுகிறது. மாலையில் சித்ரா அன்னம் வைத்தும் பெருமாளுக்கு வழிபாடு நடைபெறுகிறது. இங்குள்ள நீலமேகப் பெருமாளுக்கு அபிஷேகம் கிடையாது. தைலக்காப்பு வழிபாடு சிறப்பாக நடைபெறும்.

மணிக்குன்ற பெருமாளுக்கு இரண்டு வேளைகள் பூஜைகள் நடைபெறுகிறது. காலையில் காலசந்தி பூஜையும் மாலையில் சாயரட்சை பூஜையும் நடைபெறுகின்றது. இவருக்கும் காலையில் பால் வைத்தும் மாலையில் சித்ரா அன்னம் வைத்தும் நிவேதனமாகப் படைக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

வீர நரசிம்ம பெருமாளுக்கு மட்டும் நான்கு காலங்கள் பூஜை நடத்தப்படுகிறது. காலையில் காலசந்தி பூஜை 6.00 மணியிலிருந்து 6.30 வரைக்கும் பெருமாளுக்குப் பூஜை செய்து வழிபாடு நடைபெறுகிறது. இப்பூஜையில் பெருமாளுக்குத் தீபாராதனை காட்டி பச்சை பால் வைத்து வழிபாடு நடத்தப்படுகிறது. இரண்டாவது காலமாக உச்சிகாலத்தில் வழிபாடு நடைபெறுகிறது. இந்த வழிபாடு 11.30 மணி முதல் 12.00 மணி வரை நடத்தப்படுகிறது. மூன்றாவது காலமாக மாலையில் சாயரட்சை பூஜை நடைபெறுகிறது. இது 6.00 மணியில் இருந்து 7.00 மணி வரையிலும் நடைபெறுகிறது. நான்காவது காலமாக அர்த்தஜாம பூஜை நடைபெறுகிறது. இப்பூஜையில் பெருமாளுக்குக் காய்ந்த பால் வைத்து வழிபாடு நடைபெறுகிறது. இங்குப் பெருமாளுக்கு நிவேதனமாகப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம், ஆகியவை வைத்து படைக்கப்படுகிறது. இவ்வாறு படைக்கப்பட்ட உணவைப் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. வழிபடும் பக்தர்கள் பெருமாளுக்குத் துளசிமாலை, வெற்றிலை, பாக்கு, பத்தி, தயிர், முதலியன அவரவர் வசதிகேற்ப வாங்கி வருவர். இக்கோவிலில் ஒவ்வொரு பெருமாளுக்கும் பூஜை முடிந்த பிறகு வழிபடுவோருக்கு முதலில் துளசிதீர்த்தம், துளசியும், தலையில் சடாரி(இராமர் பதுகை) வைக்கப்பட்டு பின்னர் குங்குமம் தரப்படுகிறது.

பூசை மொழி

இங்குள்ள பெருமாள் கோவிலில் பூசையை நேரில் கவனித்த போது ஒவ்வொரு பெருமாளுக்கும் மூலவர் திருநாமம் கூறப்பட்டு அங்கு எழுந்தருளிய தாயார் திருநாமம் கூறப்பட்டு அங்கு எழுந்தருளிய பெருமாளின் புராண வரலாறுகளை கூறி அர்ச்சனை நடைபெறுகிறது. இங்கு இருக்கும் மூன்று பெருமாளுக்கும்

அபிஷேகம் கிடையாது. தைலக்காப்பு வழிபாடு நடைபெறுகிறது. இதில் பெருமாள் அழகு மிகுந்த பொலிவுடன் காட்சி அளிக்கிறார்.

வாரசிறப்பு நாட்கள்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை வழிப்பாட்டிற்குரிய சிறப்பு நாளாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் மக்கள் கூட்டம் மிகுதியாகக் இருக்கும். சுனிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் வழிபடுவோர் அதிகம் வருகின்றனர். சனிக்கிழமையில் எல்லா நாட்களிலும் பூஜை நடப்பது போலவே அன்றும் நடத்தப்படுகிறது. சனிக்கிழமை பெருமாளுக்கு உகந்த நாள் என்பதால் மக்கள் கூட்டம் அன்று அதிகமாகவே இருக்கும். அன்று பெருமாளுக்குத் தயிர்சாதம், புளியோதரை, பொங்கல், ஆகியவை நிவேதனமாகப் படைக்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

இங்கு எழுந்தருளிய மூன்று பெருமாளுக்கும் ஒரே மாதிரியான உற்சவம் நடைபெறுகிறது. சித்திரை மாதம் 10-ஆம் நாள் ப்ரம்ம உற்சவம் சுவாமி புறப்பாடு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வைகாசி மாதம் 23-ம் தேதி கருடசேவை புறப்பாடு உற்சவம் நடைபெறுகிறது. ஆடி மாதம் வெள்ளிக் கிழமையும் தை மாத வெள்ளிக்கிழமையும் ஊஞ்சல் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. நவராத்திரி அன்றும் ஒன்பது நாட்கள் ஊஞ்சல் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசி அன்று சிறப்பு உற்சவமாக சொர்க்க வாசல் திறப்பு நடைபெறுகிறது. பிரதோச வழிபாடு மிகக் சிறப்பாகக் இக்கோவிலில் நடைபெறும். இங்குள்ள பெருமாளுக்கு அபிஷேகம. கிடையாது.தைலக்காப்பு நடைபெறுகிறது. சாம்பிராணி தைலம், சந்தன ஆயில் தைலம் பூசப்பட்டு பெருமாள் பொலிவுடனும், பளப்பளப்பாகவும் காணப்படுகிறார். பங்குனி மாதம் பெருமாளின் நட்சத்திரமான உத்திரம் நட்சத்திரத்தில் பெருமாளுக்கு சிறப்பு வழிபாடு சிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது.

பூசை செய்வோர் பண்புகள்

இக்கோவிலில் பிராமணர்களே பூஜை செய்வதற்கென நியமிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது இருவர் அர்ச்சகர்களாக இருந்து வந்தனர். அவர்களில் நரசிம்மன் என்பவரும் பட்டர் என்பவரும் அர்ச்சகர்களாக இருந்த வருகின்றனர். இவர்கள் இருவரும் பத்து ஆண்டுகளாக இக்கோவிலுக்குப் பூஜைகள் செய்துக் கொண்டு வருகின்றனர். தஞ்சை மாமணிக் கோவிலில் இருக்கும் மூன்று பெருமாளுக்கும் அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனர். திரு நரசிம்மன் மற்றும் பட்டர்

அவர்களை கவனித்த போது பெருமாளை வழிபட வரும் பக்தர்களுக்குப் பெருமாளின் பெருமைகளைக் கூறி அவர்களுக்கு நம்பிக்கையை வளர்த்தல் போன்ற செயல்கள் வாயிலாக அவர்களை அமைதி படுத்தி அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதன் முலம் அங்குள்ள பெருமாளின் மீது பற்றுக் கொள்ளத் துண்டுகிறது.

வழிபடும் முறைகள்

இங்குள்ள முன்று பெருமாளிடம் வேண்டிக் கொண்டு செல்லும் பக்தர்கள் அவர்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதாக நம்பும் போது தங்கள் வாக்களித்தப்படி உரிய காணிக்கைகளை உரிய முறையில் பின்பற்றுகின்றனர். அங்கு இருக்கும் தல விருட்சத்தில் மஞ்சள் கயிறு கட்டி தாயாருக்கு வளையல், மஞ்சல், குங்குமம், ஆகியவை வாங்கிச் சென்று வழிபடுதல் போன்ற முறைகளை ஆதிக் காலத்தில் இருந்து இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றனர். பெருமாளுக்குத் துளசி வைத்து வழிபடுதல், அன்று முதல் இன்று வரை பின்பற்றப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பது உண்மையாயிற்று.

3.திருப்பேர்நகர் கோவிலடி

பூஜை காலங்கள்

கோவிலடி என்னும் அப்பக்குடத்தான் கோவிலில் நான்கு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன. அவையாவன காலசந்தி, உச்சி காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் என நான்கு காலங்கள் பூஜைகள் நடத்தப்படுகின்றன.[8]

நாள் வழிபாடு

கோவிலடி அப்பக்குடத்தான் கோவிலில் தினசரி நாட்களில் நான்கு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன. முதலில் காலையில் திருமஞ்சனம் ஏழு மணிக்கு நடைபெறுகிறது. விஸ்வருப காலசந்தி 8.30 மணி அளவில் நடைபெறுகிறது. அப்பூஜையில் பெருமாளுக்குப் பால் வைத்து வழிபாடு நடைப்பெறுகிறது.

இரண்டாவது காலமாக உச்சி காலத்தில் பூஜை நடைப்பெறுகிறது. இப்பூஜை 11.00 மணியிலிருந்து இப்பூஜை நடைபெறுகிறது. உச்சி காலத்தில் நடக்கும் பூஜையில் பெருமாளுக்கு நிவேதனமாகப் பருப்பு சாதம், ஏதேனும் ஒரு காய் வைதது படைக்கப்பட்டு தீபராதனை காட்டி வழிபாடு நடைபெறுகிறது. பின்பு கோவில்நடை 12.00 மணியின் போது மூடப்படுகிறது. பின்பு கோவில் நடைத் திறப்பு மாலை நான்கு மணி அளவில் திறக்கப்படுகிறது.

மூன்றாவது காலமாக சாயரட்சை பூஜை நடைபெறுகிறது. இப்பூஜை 6.30 மணி அளவில் நடைபெறுகிறது. அப்பூஜையில் பெங்கல், புளியோதரை, கொண்டக்கடலை, ஆகியவை வைத்து வழிபாடு நடைபெறுகிறது.

நான்காவது காலமாக அர்த்த ஜாமத்தில் பூஜை நடைபெறுகிறது. இதனை அர்த்த ஜாமப் பூஜை எனவும் கூறுகின்றனர்.இப்பூஜையில் அப்பக்குடத்தான் பெருமாளுக்கு அப்பம் நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. இங்கு பெருமாளை வழிபட வரும் பக்தர்களுக்கு பூஜை முடிந்த பிறகு தலையில் சடாரி என்ற இராமர் பதுகை வைக்கப்பட்டு பின்னர் துளசி தீர்த்தம் கொடுக்கப்படுகிறது. இப்பூஜை முறைகள் உறசவ காலங்களில் இது போன்று இல்லாமல் மாறுபடும். இங்கு வரும் பக்தர்கள் பெருமாளுக்குத் துளசி மாலை கொண்டு வழிபடுவது வழக்கமாக உள்ளது. இங்கு வழிபட வரும் பக்தர்களுக்கு அப்பம் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

பூஜை மொழி

இங்கு இனிய தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறது. அர்ச்சனையை நான் நேரில் கவனித்த போது அங்கு இருக்கும் அப்பக்குடத்தான் பெருமாளுக்குத் தீபாராதனை காட்டி பட்டாச்சாரியார் அங்கு இருக்கும் மூலவர் அப்பாலரஙகநாதர் என்றும் தாயார் ஸ்ரீ பூமிதேவி, பெருமாளின் பக்கத்தில் அமர்ந்து இருக்கிறார். என்று கூறியும் அவரின் தோற்ற வரலாற்றினையும் கூறி பெருமாளுக்கு அர்ச்சனை செய்யப்பட்டது. பூஜை முடிவில் பூஜை மொழி சமஸ்கிருதத்திலும் சொல்லப்பட்டது. இங்கு கமலவல்லி நாச்சியாருக்குத் தனி சந்நிதி கொண்டு எழுந்தருளி உள்ளார். துயாரின் திருநாமம் கூறி தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது.

வார சிறப்பு நாட்கள்

சனிக்கிழமை பெருமாளுக்கு உகந்த நாளாகவும் அதனை அடுத்து செவ்வாய், வெள்ளிக்கிழமை, வழிப்பாட்டிற்கு உரிய சிறப்பு நாளாகவும் கருதப்படுகிறது. கமலவல்லி நாச்சியாருக்கு ஆடி வெள்ளி கிழமைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகக் உள்ளது. இந்த நாட்களில் மக்கள் கூட்டம் மிகுதியாக இருக்கும். ஆடி வெள்ளிக்கிழமை தாயாருக்குத்திருமஞ்சனம் செய்யப்படுகின்றது. அன்று நாச்சியாருக்குச் சந்தன அபிஷேகம், மஞ்சள் அபிஷேகம் திபாராதனை ஆகியவை நடைப்பெறுகிறது. பெருமாளுக்கு அபிஷேகம் கிடையாது. வார சிறப்பு நாளான சனிக்கிழமை தைலக்காப்பு திருமேனியில் மக்களுக்குக் காட்சி அளிக்கிறார்.மற்ற நாட்களை விடப் பெருமாளுக்குச் சனிக்கிழமை சிறப்பு வாய்ந்த நாளாக உள்ளது. அன்று பெருமாளை வழிபட்டால் தோஷங்கள் தம்மை வந்து அண்டாமல் இருக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

1.சித்திரை மாதம் :- அக்ஷய திரிதியை அன்று கருட சேவை

உடையார் பகவத்ராமாநுஜர் திருநட்சத்திரம் உடையார் உட்பிரகாரம் எழுந்தருளல்

2. வைகாசி :- விசாகம் (மாங்காய்ப்பால்) விசாகம் நம்மாழ்வார் திருநட்சத்திரத்தில் நம்மாழ்வார் சன்னதி பிரகாரம்

எழுந்தருளல்

3.ஆனி :- ஜேஷ்டாபிஷேகம் (தைலக்காப்பு)

பெருமாள் திருமஞ்சனம்

4.ஆடி :- நான்கு வெள்ளியும், தனிக்கோவில் தாயார் உள்வீதி (உட்பிரகாரம்) எழுந்தருளல், ஆடி 18 (ஆ)

28 தீர்த்தவாரி ஆடிப்பூரம் ஆண்டாள் திருநட்சத்திரம்

5.ஆவணி :- பாஞ்சராத்திர ஸ்ரீ ஜெயந்தி

உறியடி பெருமாள் உபயநாச்சியாருடன் எழுந்தருளி உறியடி உற்சவம் கண்டருளல்

6.புரட்டாசி :- நவராத்தரி உற்சவம்

விஜயதசமி ஸ்வாமி குதிரை வாகனத்தில் எழுந்தருள அம்பு விடுதல்

7.ஐப்பசி :- தீபாவளி

8.கார்த்திகை :- கைசிகதுவாதசி,

பாஞ்சராத்திர தீபம் (சுடலை) பெருமாள் உபய நாச்சியாருடன்

திருவீதி எழுந்தருளி சொக்கப்பானை கண்டருளல்,

திருமங்கை மன்னன் (கலியன்) திருநட்சத்திரம்

9.மார்கழி :- அத்யான உற்சவம் 20 நாட்கள் ஏகாதசி பரமபதவாசல் திறப்பு கூடாரவல்லி

10.தை :- தை மாசப்பிறப்பு : தை கருடன் திருவீதி உலா

கனுப்பங்கள், தாயாா் கனுவைத்தல்

கனுகுதிரை வாகனம் திருவீதி உலா

தை வெள்ளி தனிக்கோவில் தாயாா் உள்வீதி

எழுந்தருளல்

11.மாசி :- மகம்,தீா்த்தவாாி பெருமாள் எழுந்தருளல்

12.பங்குனி :- பிரம்மோற்சவம் : 12 நாட்கள்

பங்குனி உத்ரம் திருத்தோ்

7ம் நாள் திருகல்யாண மாஹோற்சவம்

பிரமோற்சவத்தில் தினமும் இரவு கைத்தலசேவை

உண்டு.[9]

பூசை செய்வோா்

அப்பாலரங்கநாதா் கோவிலில் பூஜை செய்வதற்கெனப் பிராமணா்களே நியமிக்கப்பட்டு இருக்கின்றனா். இக்கோவிலில் தற்போது பட்டாச்சாாியாா் என்பவா் தலைமை அா்ச்சகராக மாத ஊதிய அடிப்படையில் பணிபுாிகிறாா். இவருக்குத் துணையாக இருவா் பணிபுாிகின்றனா். இவா் வழிபடுவோரை அன்புடன் நடத்துக்கின்றனா். இவரை கவனித்த போது வழிபடுவோருக்கு ஆறுதல் கூறுதல், நற்சொல் கூறுதல் போன்ற செயல்கள், அவா்களிடம் நம்பிக்கையை வளா்த்து அவா்களை அமைதிப்படுத்தி அனுப்புகின்றனா். எனவே பூஜை செய்வோாின் இத்தகைய செயல்கள் அப்பெருமாளின் மீது நம்பிக்கையை வேருன்றி தெய்வத்துடன் பற்று கொள்ளத் தூண்டுகின்றது.

வழிபடும் முறை

அப்பாலரங்கநாதா் கோவிலில் திருமணத் தடை உள்ளவா்கள் இரண்டு துளசி மாலைகள் கொண்டு வந்து பெருமாளுக்குச் சாற்றி வணங்கி ஒரு மாலையை தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்று அப்பாலரங்கனை நினைத்த பூஜை செய்தால் விரைவில் திருமணம் நடக்கும். என்பது உண்மையாகும். உடல் நிலை சாி இல்லாதவா்கள் முன்று சனிக் கிழமைகள் இத்திருத்தலம் வந்து நெய் தீபம் ஏற்றி வழிப்பட்டால் உடல் நலிவு நீங்கப்பெறுவா்கள். கணவா் மனைவியிடையே மனகசப்பு

உள்ளாகித் துன்பப்படுவார்கள். அவர்கள் வெள்ளிக்கிழமையிலும் திருவோண நட்சத்திரத்தன்றும் ஸ்ரீ கமலவல்லித் தாயார் சந்நிதியில் நெய்தீபம் ஏற்றி வழிபட தோஷம் விலகி வாழ்வில் மாற்றம் ஏற்படும்.

குழந்தை பேறு இல்லாதவர்கள வளர்பிறை நாட்களில் வெண்ணெய் மற்றும் கற்கண்டு கோபால கிருஷ்ணனுக்கு நிவேதனம் செய்து இதனை 10 குழந்தைகளுக்கு பிரசாதமாக வழங்கிவிட்டு அப்பிரசாதத்தைச் சாப்பிட விரைவில் மழலைப்றேு ஏற்படுவது கண்கண்ட உண்மையாகும்.இங்குள்ள பெருமாளுக்குத் தினமும் அப்பம் நிவேதனமாகப் படைக்கப்பட்டு பெருமாளை வழிபட்டு வருகின்றனர்.[10]

4.திருக்கண்ணபுரம்

பூசை காலங்கள்

இக்கோவிலில் ஆறு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. முதல் காலம் காலை 7.00 மணிக்கு பூஜை நடைப்பெறுகிறது. இரண்டாம் காலம் காலை 9.00 மணிக்கு பூஜை நடைப்பெறுகிறது. முன்றாம் காலம் உச்சிக் காலம் 11.00 மணிக்கு பூஜை நடைப்பெறுகிறது. நான்காம் காலம் சாயரட்ஷை பூஜை நடைபெறுகிறது. இப்பூஜை மாலை நான்கு மணிக்கு நடைப்பெறுகிறது. ஐந்தாம் காலம் இராக்காலம் இரவு 8.00 மணிக்குப் பூஜை நடைபெறுகிறது. ஆறாவதுகாலம் அர்த்தஜாமம் இரவு 9.00 மணிக்குப் பூஜை நடைபெறுகிறது.

நாள் வழிபாடு

திருக்கண்ணபுரம் பெருமாள் கோவிலில் தினசரி ஆறு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. முதல் காலமாக காலை 7.00 மணிக்கு திருக்காப்பு நீக்குதல் நடைப்பெறுகிறது. ஸ்ரீசௌரிராஜப் பெருமாளுக்கு சுப்ரபாதம், ப்ரபத்தி மங்கள சுலோகம், விஸ்வருப சேவை, தோசை தளிகை சமர்பித்தல், விற்றுமுதல், ஆழ்வார் ஆசன்யங்கள், மற்றும் திருமங்கையாழ்வார், உடையவர் சன்னதி அமுது செய்தல். போன்றவை நடைபெறுகிறது.

இரண்டாம் காலமாக காலையில் கால சந்தி காலை 9.00 மணிக்கு நடைப்பெறுகிறது. புண்யவாசனம், திருவாராதனம், யக்ஞோபவீதம் சாற்றுதல், திருப்பாவை சேவை துவக்கம்,ஸ்ரீ பெருமாள், ஸ்ரீதாயார், ஸ்ரீராமர், ஸ்ரீஆணடாள், அக்கோவிலை சுற்றியுள்ள சுற்றுக் கோவில்கள், அனுமான் சன்னதிக்குக் கூரத்தாழ்வார் ஸ்ரீ உடையார் அமுது செய்வித்த பிறகு ஸ்ரீபெலி சாய்த்து திருப்பாவை சாற்று நடைபெறும்.

மூன்றாம் காலமாக உச்சி கால பூஜை நடைப்பெறுகிறது. உச்சி காலத்தில் பகல் 12.00 மணிக்கு திருவாராதனம், தளிகை சத்தன்னம், மற்றும் சலிப்பேரி அலங்காரக் கட்டளை தளிகை சமா்ப்பித்து அமுது செய்வித்தல் திருக்காப்பு சோ்த்தல் ஆகியவை நடைபெறுகிறது.

நான்காம் காலம் சாயரட்சை பூசை மாலை 4.00 மணிக்கு நடைப்பெறுகிறது. சன்னதி திருக்காப்பு நீக்குதல், திருமாலை சமா்ப்பித்தல், இரவு 7.00 மணிக்கு திருவாராதனம், வேதபாராயணம், புளியோதரை, சுண்டல், வடை தளிகை,ஆகியவை சமா்ப்பித்து வினியோம், பகுதிவிற்று முதல் நான்காவது காலம் பூஜை முறைகள் ஆகும்.

ஐந்தாம் காலமாக இரண்டாம் காலம் இரவு 8.00 மணிக்கு திருவாராதனம் நடைப்பெறுகிறது. தளிகை சுத்தன்னம் படைக்கப்படுகிறது. இநத மளிகை சுத்தன்னம், ஸ்ரீதாயாா், ஸ்ரீபெருமாள், ஸ்ரீராமா், கோயிலை சுற்றிக் இருக்க கூடிய அனைத்து சந்நிதிகளுக்கும் ஸ்ரீஉடையாா் அமுது படைத்தல் ஆகியவை நடைபெறுகிறது.

ஆறாவது காலமாக அா்த்தஜாம பூஜை நடைப்பெறுகிறது. அா்த்தஜாமத்தில் இரவு 9.00 மணிக்கு பெருமாளுக்குப் பால், மற்றும் முனியோதரன் பொங்கல், ஸ்ரீபெருமாள், ஸ்ரீதாயாருக்கு அமுது செய்வித்தல் நடைபெறுகிறது. மணியம் சௌாிராஜபெருமாள் முன்பு விற்பனை- மண்ணு புகழ் பாசுரங்கள் சேவித்து திருக்காப்பிடல் நடைபெறுகிறது.

இக்கோவிலுக்கு வந்து வழிபடும் பக்தா்களுக்கு தினமும் துளசி தீா்த்தம் கொடுக்கப்பட்டு தலையில் இராமா்பாதுகை வைக்கப்பட்டு குங்குமம் வழங்கப்படுகிறது. இன்றும் அா்த்த ஜாம பூஜையில் இன்றும் முனியாதரையன் பொங்கல் பெருமாளுக்கு நிவேதனமாகப் படைக்கபபடுகிறது. கோவிலுக்கு வரும் பக்தா்களுக்கு பொங்கள், புளியோதரை, தயிா்சாதம், ஆகியவை பிரசாதமாக கொடுக்கப்படுகிறது.[11]

பூஜை மொழி

தமிழிலும் சமஸ்கிருத்திலும் அா்ச்சனை செய்யப்படுகிறது. அா்ச்சனையை நேரில் கவனித்த போது திரு பட்டாச்சாரியாா் அா்ச்சகராக இருக்கிறாா்.ஆச்சனையை நேரில் கவனித்தபோது ஸ்ரீசௌாிராஜ பெருமாளின் திருநாமத்தைக் கூறி அங்கு எழுந்தருளிய தாயாா் திருநாமத்தைக் கூறி இத்தலத்தில் பெருமாள் தோன்றிய விவரஙடகளை தமிழில் கூறி தீபாராதனை வழிபாடு நடைபெற்றது. பின்பு வைணவ சைவ பேதமின்றி ஆச்சனையும் வழிபாடும் நடைபெறுகின்றன.

வார சிறப்பு நாட்கள்

ஒவ்வொரு வாரமும் சனிக் கிழமை வழிபாட்டிற்கு உரிய சிறப்பு நாளாக கருதப்படுகிறது. பெருமாளுக்கு தயிர்சாதம் வைத்து நிவேதனம் செய்யப்படுகிறது. பிரதி அம்மாவசை வரும் சனிக்கிழமை அங்கு இருக்கும் நித்ய புஷ்கரணியில் நீராடி சேவிப்பது புனிதமான ஒன்றாக கருதப்படுகிறது. சனிக்கிழமை பெருமாளுக்கு உகந்த நாள் என்பதால் அனறு மக்கள் கூட்டம் மிகுதியாகவே இருக்கும். ஆனால் தினசரி நாட்களில் பூஜை நடப்பது போலவே சனிக்கிழமையும் பூஜை நடைபெறுகிறது. திருவிழாக் காலங்களில் இவை மாறுபடும். பிரதி வெள்ளிக் கிழமை தோறும் கண்ணபுரத்தாயாருக்கு அலங்காரம் செய்யப்பட்டு புறப்பாடு நடைப்பெறுகிறது.

ஆண்டு சிறப்ப நாட்கள்

வைகாசி மாதம் பிரம்ம உற்சவம் பௌர்ணமி திதியில் நடைப்பெறுகிறது. துவாஜாரோகணம் முதல் விடையாற்றி முடிய பன்னிரண்டு தினங்கள் வாகனாதிகளுடன் விமரிசையாய் நடைபெறுகிறது. இந்த உற்சவம் ஸ்தல புராணத்தில் வைகாசி மாதம் பூர்ணிமை அனுஷ நடசத்திரத்தில் வசுவின் பெண்ணான பத்மினி நாயகியைப் பெருமாள் புரிந்து கொண்டதால் அந்த கல்யாண உற்சவமே தற்போது பிரம்ம உற்சவமாக நடத்தப்பட்டு வருகிறது. ஆயினும் இது தன்னில் எட்டாவது உற்சவம் சாயங்காலம் பத்மினி தேவியின் கல்யாண உற்சவமும் தனித்தனியாக நடத்தப்பட்டு வருகிறது. நித்ய புஷ்கரணியில் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

மகா உற்சவம் மாசி மாதம் பௌர்ணமி திதி ஒன்பதாம் நாள் சமுத்திரத்தில் தீத்த்த வாரியுடன் நடைப்பெறுகிறது. துவாஜாரோகணம் இந்த உற்சவத்திலும் உண்டு. வாகனாதிகளுடன் விமரிசையாய் நடக்கும்.இன்த உற்சவம் தலபுராணம் பதினைந்தாவது அத்தியாயத்தின் படி சமுத்திர ஷோத்திரத்தின் எல்லையாய் அமைந்திருக்கும் கருடபர்வதத்தின் வேண்டுகோளின்படி பிரதிவருடம் கருட ரூபராய் சேவையளிக்க ஏற்பட்டதகையால் இது புராண சம்பந்தம் பெற்ற உற்சவமே ஆகும். இவ்உற்சவம் பதின்முன்று தினங்களில் முடிவுறுகிறது. இந்த உற்சவத்தில் கடைசி நாள் பெருமாள் நித்ய புஷ்கரணியில் அழகிய தெப்பத்தில் சேவை தந்தருள்வது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

மார்கழி மாதம் சௌரிராஜபெருமாளுக்கு அத்ய யந உற்சவம் முடிந்து பின் ஒன்பது தினங்கள் உற்சவம் நடைபெறுகிறது. இதில் ஏகாதசி பெருமாள் நாச்சியா திருக்கோலத்திலும் பிரகாரப் புறப்பாடு நடைபெறுகிறது. மறுதினம் பெருமாள் சன்னதியில் இருவருமான சேர்த்தி உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.[12]

மாத உற்சவங்கள்

மாதந்தோறும் தமிழ்மாத வருடப்பிறப்பு, ஏகாதசி, அமாவாசை, ஹஸ்தம், இவற்றில் பஞ்சவர்ப புறப்பாடு பிரகாரத்தில் நடைப்பெறுகிறது. இந்த ஐந்து நாடகளிலே தான் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கண்ணபுரத்தாயாருக்கு புறப்பாடு நடைபெறுகிறது. சித்திரை மாதம் அட்சய திரிதியையும், சித்திரா பௌர்ணமியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதம் திருவாடிப்பூரம், பதினெட்டாம் பெருக்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆவணி மாதம் ஸ்ரீஜெயந்தி உற்சவம், உறியடி உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தைலக்காப்பு அபிஷேகம் முடிந்து திருமஞ்சனம் நடைபெறுகிறது. புரட்டாசி மாதம் நவராத்திரி, பவித்ரோ உற்சவம் 5 நாட்கள் பௌர்ணமி அன்று கருடரூபராய் நித்திய புஷ்கரணியில் திாத்தவாரி நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் தீபாவளி திருவிழா கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை உற்சவம் நடைபெறுகிறது.தை மாதம் உத்ராண்ய புண்ய காலம், புஷகரணியில் தீாத்தவாரி நடைபெறுகிறது. மறு நாள் கனு, பாரிவேட்டை, அதற்கு அடுத்த நாள் மட்டையடி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. பங்குனி மாதம் பங்குனி உத்திரம் ஸ்ரீசௌரிராஜ பெருமாள் ஸ்ரீகண்ணபுரத் தாயாா் சன்னதிக்கு எழுந்தருளி திருமஞ்சனம் மாலையில் சேர்த்தி உற்சவம் நடைபெறுகிறது. குடமுழக்கு திருவிழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது.[13]

பூஜை செய்வோர் பண்புகள்

ஸ்ரீசௌரிராஜபெருமாள் கோவிலுக்குப் பூசை செய்வதற்கு எனப் பிராமணா்களே நியமிக்கப்பட்டு வருகின்றனா். திரு கண்ணன் பட்டர் என்பவா் தலைமை அா்ச்சகராக இருந்து வருகிறாா். இவரக்குத் துணையாக இருவா் இருக்கின்றனா்.இவா்கள் வழிபட வரும் பக்தா்களை அன்புடன் வழிநடத்தி செல்கின்றனா்.

வழிப்பாட்டு முறைகள்

திருக்கண்ணபுர பெருமாளுக்கு தினமும் இரவு **முனியாதரையான் பொங்கள்** வைத்து வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீ கண்ணபுர தாயாருக்குத் தினமும் பால் மற்றும் பொங்கள் வைத்து வழிபாடு நடைப்பெறுகிறது. தோஷத்தை போக்கி கொள்ள அங்குள்ள நித்திய புஷ்கரணியில் நிராடி பெருமாளை வழிப்பட்டால் தோஷங்கள் விலகி வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும் என்பது ஐதீகம்.

5.திரு அன்பில்

பூஜை காலங்கள்

அன்பில் கோவிலில் அன்பினாலே வந்த பெருமாளுக்கு நான்கு காலங்கள் பூசைகள் நடத்தப்படுகின்றன.காலையில் காலசந்தி பூஜை, உச்சிக்கால பூஜை, சாயரட்சை பூஜை, அர்த்த ஜாம பூஜை என நான்கு காலங்கள் பூஜை நடைப்பெறுகின்றன.

நாள் வழிபாடு

தினசரி நாட்களில் நான்கு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. காலையில் காலசந்தி பூஜை நடைபெறுகிறது. 8.00 மணியிலிருந்து 9.00 மணி வரையிலும் நடைப்பெறுகிறது. இப்பூஜையில் பெருமாளுக்கு நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து 10.00 மணிக்கு திருமஞ்சன வழிபாடு நடைப்பெறுகிறது.

இரண்டாவது காலமாக உச்சிகாலத்தில் பூஜை நடைபெறுகிறது. இது 11.00 மணியிலிருந்து 12.00 மணி வரையிலும் வழிபாடு நடைபெறுகிறது. இதில் பெருமாளுக்குப் பருப்பு சாதம் வைத்து அதனுடன் ஏதேனும் ஒரு காயினை சமைத்து நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. அதன் பிறகு பெருமாள் 2.30 வரையிலும் சேவை சாதிக்கிறார்.

மூன்றாவது காலமாக சாயரட்சை பூஜை நடைபெறுகிறது. இதில் மாலை நேரத்தில் 6.00 மணியிலிருந்து 6.30 வரையிலும் நடைபெறுகிறது. இப்பூஜையில் பெருமாளுக்குப் பொங்கல் நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. இரவு மங்கள ஆரத்தி நடைபெறுகிறது.

அதனைப் தொடர்ந்து அர்த்தஜாம பூஜை நடைபெறுகிறது. இப்பூஜையில் பெருமாளுக்கு காய்த்த பால் வைத்து வழிபாடு நடைபெறுகிறது. பூஜை முடிந்த பிறகு வழிபடுவோருக்கு முதலில் துளசி தீர்த்தம் வழங்கப்பட்டு தலையில் இராமர் பாதுகை வைக்கப்படுகிறது. பின்னர் வாசலில் மஞ்சள் வைக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்குப் பிரசாதமாக சனிக்கிழமை தயிர்சாதமும் மற்றைய நாட்களில் புளியோதரை, பொங்கள் பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது.

வார சிறப்பு நாட்கள்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை வழிப்பாட்டிற்கு உரிய சிறப்பு நாளாகக் கருதப்படுகிறது. சனிக்கிழமை பெருமாளுக்கே உரிய நாளாக ஆதிக் காலத்தில்

இருந்து இன்று வரை மக்கள் வழிபடப்பட்டு வருகின்றனர். காரணம் தனக்கு எவ்வித துன்பமும் நேர்ந்து விடக் கூடாது என்பதே ஆகும் தைலக்காப்பு அபிஷேகத்தின் போதும் மட்டுமே வழிபாடு மற்றும் கால நிர்ணயம் மாறுபடும்.மற்றைய நாள்களில் தினசரி நாட்களில் நடைபெறுவது போலவே வார சிறப்பு நாளான சனி கிழமையும் நடைபெறும். சனிக் கழமை பெருமாளுக்கு நிவேதனமாகத் தயிர்சாதம் படைக்கப்பட்டு வழிபாட்டாளர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

தமிழ் மாதமான மாசி மாதம் மாசிமகம் தீர்த்தவாரி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மாசி விசாகத்தில் கருட சேவை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி திருவிழா 10 நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

திரு அன்பில் திவ்விய தேசத்தில் விஜய வருடம் மிருகசீரிச நட்சத்திரத்தில் இராபத்து உற்சவம் 4-வது நாள் பிரமாண்டமாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதம் பெரிய தழிகை சிறப்பாக நடைப்பெறுகிறது. தைலக்காப்பு அபிஷேகம் ஆடி மாதம் நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் ஊஞ்சல் உற்சவம், தீபாவளி, சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பங்குனி உத்தரத்தை தேர்த்தினமாகக் கொண்டு பதினாறு தினங்கள் பெருமாளுக்குப் பிரம்ம உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. இது ஆண்டாண்டு காலமாக இவை அனைத்தும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

பூசை மொழி

பூஜை மொழி நாலாயிர திவ்விய பிரபந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அர்ச்சனை செய்யப்படுகிறது. அர்ச்சனையை நேரில் கவனித்த போது திருஅன்பில் தலத்தில் மூலவர் திருநாமம் சொல்லப்பட்டு அங்கு எழுந்தருளி இருக்கும் தாயாரின் திருநாமம் கூறப்பட்டு தீபாராதனைக் காட்டி அர்ச்சனை தமிழில் நடைபெறுகிறது. ஆனால் முதன் முதலில் கிரந்த மொழியில் தான் அர்ச்சனை நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

வழிபடும் முறை

திரு அன்பில் தலத்தில் உள்ள பெருமாளுக்கு துளசியை முதன்மையாகக் கொண்டு மக்கள் சுந்தர ராஜ பெருமாளுக்கு துளசியைக் கொண்டு சென்று வழிப்படுகின்றனர். பித்ரு தோஷம் நீங்குவதற்காக அப்பம், தயிர் சாதம் ஆகியவை நிவேதனமாக வைத்து வழிப்பட்டால் பித்ரு தோஷம் நீங்கும் இவ்வழிமுறைகளை இன்றும் பின்பற்றிக் கொண்டு வருகின்றனர். அமாவசை அன்று தயிர்சாதம், புளியோதரை, ஆகியவை நிவேதனமாகப் படைக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

இத்தலத்தில் திருமணக்கோலத்தில் இருக்கும் ஆண்டாளை வழிப்பட்டால் விரைவில் திருமணம் நடக்கும் என்பது உண்மையாகும். இத்தலத்தில் இருக்கும் தலவிருட்சத்தில் பெண்கள் விளக்கு ஏற்றி மஞ்சள் கயிறு மற்றும் வளையல் ஆகியவை மரத்தில் கட்டி வழிபாடு நடைபெறுகின்றன.

6. திருவிண்ணகர் ஒப்பிலியப்பன்

பூஜை முறை

ஸ்ரீ வைகாநஸ பூஜை முறைப்படி இவ்வாலயத்தில் பூஜைகளும் விசேஷ உற்சவங்களும் நடத்தப்படுகின்றன. தினந்தோறும் ஆறு காலம் பூஜை நடக்கின்றது. இந்த சந்நிதி வடகலை ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தது. இதில் தேசிகனுக்கு மிக முக்கியத்துவம் உண்டு. பெருமாள் பிராட்டி கண்டருளும் பற்பல உத்ஸவங்களில் பெரும்பாலும் தேசிகன் உடன் எழுந்தருள்வது நெடுநாளைய வழக்கம்.[14]

பூஜை காலங்கள்

ஆறு காலங்கள் பூஜை நடைப்பெறுகின்றன. பூஜைக் காலங்கள் காலையில் நடைத்திறப்பு காலை 6.00 மணிக்கு திறக்கப்படுகிறது. அப்போது விஸ்வரூப தரிசனம் நடைப்பெறுகிறது. திருப்பாவை சாற்று முறை காலை 7.00 மணிக்கு நபைப்பெறுகிறது. திருவாராதனம் காலை 8.00 மணிக்கு நடைபெறுகிறது. உச்சிக்காலம் பகல் 12.00 மணிக்கு பூஜை நடைபெறுகிறது. நடை சாற்றுதல் மதியம் 1.00 மணிக்கு சாற்றப்படுகிறது. பிறகு நடை திறப்பு 4.00 மணிக்கு திறக்கப்படுகிறது. நித்திஙானு சந்தானம் இரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது. திருவாராதனம் இரவு 8.00 மணிக்கு நடைப்பெறுகிறது. அர்த்த ஜாம பூஜை இரவு 9.00 மணிக்கு நடைபெறுகிறது. இப்பூஜை காலங்கள் திருவிழாக் காலங்களில் மாறுப்படும்.

நாள் வழிபாடு

தினசரி ஆறு காலங்கள் ஒப்பிலியப்பன் கோவிலில் பூஜை நமைப்பெறுகின்றன. காலையில் முதலில் விஸ்வரூப சேவை நடக்கும். இத்தலத்து எம்பெருமானுக்கென்றே அமைந்துள்ள சுப்ரபாதம் - ப்ரபத்தி – மங்களம் ஆகியவை விஸ்வரூப சேவை மையத்தில் எல்லோரும் கேட்டு இன்புறுமாறு ஒலிப்பெருக்கியின் வாயிலாக ஒதப்படும். அதனைத் தொடர்ந்து திருப்பாவை வேதம் சாற்றும் முறை, அதன் பின் பெரிய ஆராதனம் நடக்கும். அப்பொழுது எல்லா சந்நிதிகளுக்கும் நிவேதனம் நடைபெறும். ஆதனை தொடர்ந்து நண்பகலில் கடைசி காலமாக உச்சி காலத்தில் பூஜை நடைபெறும். மாலையில் முதற்கால பூஜை நடைப்பெறும். அப்பொழுது

நித்தியாநுஸந்தாநமும் வேதபாராயணமும் சாத்தும் முறையும் நடைப்பெறும். அதன் பின் இரண்டாவது கால பூஜை விசேஷமாய் நடக்கும். அப்பொழுது மற்ற சந்நிதிகளுக்கும் நிவேதனம் உண்டு. அதன் பிறகு இரவில் கடைசி காலப் பூஜை அர்த்த சாமத்தில் நடைப்பெறுகிறது. இவ்வாறு தினசரி ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன.

இத்திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேற்றுவதற்காகப் பிரார்த்தனை உற்சவங்கள் தினமும் நடைப்பெறுகின்றன. தங்க கருட சேவை, திருக்கல்யாண உற்சவம், கருட சேவை, நித்திய ஆராதனம், ஆகியவை செய்யப்படுகின்றன. முலவர் திருமஞ்சனம், உற்சவர் திருமஞ்சனம் முதலியவையும் செய்யப்படுகின்றன. இங்கு வழிபட வரும் பக்தர்களுக்கு முதலில் தீர்த்தம் வழங்கப்பட்டு அதன் பிறகு தலையில் இராமர் பாதுகை வைக்கப்பட்டு அதன் பிறகு இத்தலத்து முலவரை வணங்குகின்றனர். கருவறையில் முலவர் மற்றும் தாயார் திருநாமம் சொல்லப்பட்டு தீப வழிபாடு நடைபெறுகின்றன. வமிபாடு முடிந்த பிறகு துளசி கையில் கொடுக்கப்படுகிறது.

பூஜை மொழி

திருவிண்ணகர ஒப்பிலியப்பன் கோவிலில் பூஜையை நேரில் கவனித்த போது தமிழில் பெருமாளுக்குப் பூஜை நடைபெற்றது. நேரில் அர்ச்சனையைக் கவனித்த போது இத்தலத்து பெருமாள் திருநாமம் உப்பிலியப்பன் என்றும் இங்கு பூமிதேவி எழுந்தருளி இருக்கும் நிலையினைக் கூறி உப்பில்லாமல் உண்ட பெருமாள் எனவும் இத்தலத்து பெருமைகளைக் கூறி அர்ச்சனை நடைபெறுகிறது.

வார சிறப்பு நாட்கள்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை வார சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது. தினசரி நாட்களில் பூஜை நடப்பது போலவே வார சிறப்பு நாளான சனிக்கிழமையும் பூஜை நடைபெறுகிறது. சனி அன்று வழிபட்டால் துன்பங்கள் வந்து சேராமல் நல்லதே நடக்கும் என்று மக்கள் நம்புகிளன்றனர். வார சிறப்பு நாளான சனிக்கிழமை அன்று நான் நேரில் சென்ற போது அன்று மக்கள் கூட்டம் சற்று மிகுதியாகவே காணப்பட்டது. அங்கு இருக்கும் முதியவரை ஏன் சனிக்கிழமைகளில் மட்டும் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகின்றனர் எனக் கேட்ட போது அவர் சனி தோஷம் பிடித்துக் கொள்ளாமல் இருப்பதற்காகவும் பயத்தின் காரணமாகவும் மக்கள் அதிகமாக வார சிறப்பு நாட்களில் வழிப்பட வருகின்றனர். ஆனால் தினசரி நாட்களில் பூஜை நடப்பது போலவே அன்றும் பூஜைகள் நடைபெறுகின்றன. திருவிழாக்காலங்களில் மட்டுமே பூஜை முறை மாறுபடும்.

ஆண்டு சிறப்பு நாட்கள்

வைகாசி மாதம் :- திருவோணம் வஸந்த உற்சவம் சாத்தும் முறை சேஷவாகனம் (முந்திய அனுசம்) நட்சத்திரத்தில் தொடங்கி ஆறு நாள் உற்சவம் திருநந்தவனம் வஸந்த மண்டபத்தில் நடைப்பெறுகிறது.

ஆடி மாதம் :- ஜேஸ்டாபிஷேகம் நான்கு நாட்கள் மூலவர், உற்சவர் கவசம் களைந்து திருமஞ்சனம் நடைப்பெறுகிறது. 4ம் நாள் திருநாள் மாலை தொட்டி திருமஞ்சனம்

ஆவணி மாதம் :- திருவோணம் - பவித்ர உற்சவ சாத்துமுறை சூர்யோதய கருடசேவை (முந்திய கேட்டை தொடங்கி ஐந்து நாட்கள் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது)

புரட்டாசி மாதம் :- திருவோணம் பிரம்ம உற்சவம் சாற்றும் முறை கோரதம் சித்திரை நட்சத்திரத்தில் தொடங்கி ஒன்பது நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது. அன்று தேசிகன் அவதார உற்சவமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஐப்பசி மாதம் :- திருவோணத்தில் திருக்கல்யாண உற்சவம் தொடங்கித் தற்கால முறைக்கு ஏற்ப பல்வகை இசை நிகழ்ச்சிகளுடன் பன்னிரண்டு நாட்கள் உற்சவம் சிறப்பாக நடந்து வருகிறது.

மார்கழி மாதம் :- பகல் பத்து நாட்களும், இரவு பத்து நாட்களும், இயற்பாசத்து முறை ஒரு நாளும், ஸ்ரீ தேசிகன் பிரபந்தம் சாத்து முறை ஒரு நாளும் என இருபத்திரண்டு நாட்கள் உற் சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தை மாதம் :- திருவோணம் நட்சத்திரத்தன்று தெப்ப உற்சவம் சாத்தும் முறை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த தெப்ப உற்சவம் கேட்டை நட்சத்திரத்தில் தொடங்கி ஐந்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாப்படுகிறது.

பங்குனி மாதம் :- எம்பெருமான் ஏகாதசி கூடிய திருவோணம் நட்சத்திரத்தன்று பகல் பன்னிரண்டு மணிக்கு இத்தலத்வில் அவதரித்தார். இந்த அவதார தினத்தில் திருத்தேருடன் ஒன்பது நாட்கள் பிரம்ம உற்சவம் ஆண்டுத்தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. எனவே ஒவ்வொரு மாதத்து திருவோணம் நட்சத்திரமும் இத்தலத்துக் பெருமாளுக்கு மிக விசேஷ தினமாகும்.[15]

வழிபடும் முறைகள்

எல்லா மாதத்து சிரவணத் திருநாட்களிலும் பலநூறு பக்த கோடிகள் வருகை புரிந்து முற்பகலில் திருக்குளத்தில் நீராடிப் பெருமாளின் அவதார நட்சத்திர

நன்னாளில் பெருமானைச் சேவித்துப் பகல் 11.00 மணியளவில் மூவகை தீபம் கொண்ட சிரவண தீபம் தரிசித்து பெருமானை வழிபடுகின்றனர். ஆலயத்திற்கு வந்தோ அல்லது அவரவர் இருக்குமிடத்திலோ அத்திருநாட்களில் உணவைப் பெருமாளுக்குப் படைத்து உண்டு முடிப்பது சிரவண விரதமாகும் இது வழிப்பாட்டு முறைகளில் சிறந்த ஒன்றாகும்.[16]

7. நறையூர் நம்பி

பூஜை முறை

ஸ்ரீ வைகாநஸ ஆகம முறைப்படி பூஜைகள் நடைப்பெறுகின்றது. ஆறு காலங்கள் பூஜைகள் நடைப்பெறுகின்றன. தென்கலை ஆசார்ய சம்பிரதாயம், வடகலை சம்பிரதாய ஆசாரியர்கள் திரு அருளிச் செயலை அனுசந்திப்பதில் உரிமையும் மரியாதையும் உண்டு.[17]

பூஜை காலங்கள்

நாச்சியார் கோவிலில் ஆறு காலங்கள் பூஜை நடைபெறுகின்றது. காலை 7.00 மணிக்கு விஸ்வரூபம், காலை 9.00 மணிக்கு காலசந்தி, 12.00 மணிக்கு உச்சிக்காலம், மாலை 6.30 மணிக்கு வடைதளிகை, இரவு 7.30 மணிக்கு சாயரட்சை, இரவு 9.3ளு0 மணிக்கு அர்த்தஜாமம் என ஆறு காலங்கள் பூஜை நடைபெறுகின்றன.

நாள் வழிபாடு

தினசரி ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றது. காலை ஏழு மணிக்கு விஸ்வரூப நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து காலை ஒன்பது மணிக்கு காலசந்தி பூஜை நடைபெறுகிறது. மூன்றாம் காலமாக பன்னிரண்டு மணிக்கு உச்சி காலத்தில் பூஜை நடைபெறுகிறது. அப்போது அறக்கட்டளைகள் முலம் மதியம் உச்சி காலத்திற்கு பின்பு தேசாந்திரிகளுக்குத் தயிர்சாதம் அளிக்கப்படுகிறது. மாலை மூன்று மணிக்கு திருமாலை வடைதளிகை நடைபெறுகிறது. இரவு ஏழு மணிக்கு சாயரட்சை பூஜை நடைபெறுகிறது. இரவு ஒன்பது முப்பது மணிக்கு அர்த்தஜாமப் பூஜை நடைபெறுகிறது. ஊருக்கு வெளியே ஓர் அனுமன் சந்நிதியும் உள்ளது. அவருக்குப் பெருமாளுக்கு சமர்ப்பித்த அமுதுபடி கைவேத்தியமும் தினப்படி பூஜையும் நடைபெறுகிறது. இக்கோவிலில் நடக்கும் ஒவ்வொரு சடங்கிற்கும் மூன்று படிகள் உள்ளன. அலங்காரம், உணவு பிரசாதம், மற்றும் விளக்குகளை அசைத்தல், போன்றவை ஒவ்வொரு முறை பூஜையிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. சீனிவாச பெருமாள் மற்றும் நாச்சியார் இருவருக்கும் ஒவ்வொரு நாளும் வழிப்பாட்டின் கடைசி கட்டத்தின் போது நாதஸ்வரம் மற்றும் தள வாத்தியங்கள்

இசைக்கப்படுகின்றன. இங்கு வழிப்பட வரும் பக்தர்களுக்கு முதலில் துளசி தீர்த்தம் கொடுக்கப்பட்டு பின்பு, தலையில் இராமர் பாதுகை வைக்கப்பட்டு பின்னர் குங்குமம் தரப்படுகிறது. பின்பு வழிபட வரும் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

பூஜை மொழி

நாச்சியார் கோவிலில் பூஜை தமிழில் நடைப்பெறுகின்றது. பூஜையை நேரில் கவனித்தப்போது வைணவ பூசாரிகள் பெருமாளுக்கு விளக்கினை அசைத்தப்படியே அவர் இங்கு முலவராக நிவாசஸன் வடிவழகிய நம்பி இரு திருக்கைகள் மட்டும் கொண்டு பஞ்ச சம்காரம் என்ற ஸ்ரீ வைணவ இலச்சினை செய்ய முற்படுவதுபோல் தரிசனம் கிழக்கு முகமாய் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார் என்று கூறியும்,பெருமாளின் வலப்பக்கத்தில் தமது வலது திருக்கையில் வரத முத்திரையுடன் இடது திருக்கையைத் தொங்க விட்டுக் கொண்டு நிள்ற திருக்கோலத்தில் நாச்சியார் எழுந்தருளியுள்ளார். இவ்வாறு நாச்சியார் மூலவர் பெருமாளுடன் மூலஸ்தானத்திலே நின்ற திருக்கோலத்துடன் காட்சி தருகிறார் என்று தமிழில் கூறி அர்ச்சனை நடைபெறுகிறது.

வார சிறப்பு நாட்கள்

ஒவ்வாரு வார சனிக் கிழமையும் பெருமாளுக்கு வார சிறப்பு நாளாக வழிப்பட படுகிறது. அன்றும் தினசரி நாட்களில் பூஜை நடப்பது போலவே வழிபாடு நடைப்பெறுகிறது. பெருமாளுக்கு உணவு பிரசாதம் படைத்து வழிபாடு நடைப்பெறுகிறது. உச்சி காலத்திற்குப் பிறகு தயிர்சாதம் பெருமாளுக்குப் படைக்கப்படுகிறது. ஊருக்கு வெளியே ஒரு அனுமன் சந்நிதி உள்ளது. அவருக்கு பெருமாளுக்குப் படைத்த அமுதபடி, தினமும் உணவு பிரசாதம் படைப்பது போல் வார சிறப்பு நாளான சனிக்கிழமையும் படைக்கப்படுகிறது. ஆனால் வார சிறப்பு நாட்களான சனிக்கிழமை மட்டும் மக்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்படுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

சித்திரை மாதம் உடையார் திருநட்சத்திரம் அன்று சிறப்பாக திருவிழாக் கொண்டாடப்படுகிறது. அதனைத் தொடர்ந்து திருவாதிரை தினத்தன்று ஸ்ரீ பெருமாள், தாயார் ஸ்ரீ உடையார் சன்னதிக்கு எழுந்தருளுகின்றனர். வைகாசி மாதம் விசாகம் நட்சத்திரத்தன்று முன் பத்து நாட்கள் வசந்த திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதத்தில் அமாவாசை ஆரம்பமாகும் காலத்தில் மகம் நட்சத்திரத்திற்கு சுதர்சன ஹோமம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதம் பவித்ரோற்சவம்

நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று கருடன் சன்னதியில் சிறப்பு ஹோமம், பூஜை நடைப்பெறுகிறது. அப்போது பெருமாளும் தாயாரும் கருடனின் சந்நிதிக்கு எழுந்தருளுகின்றனர். ஆடி மாதம் கருடசுவாதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆவணி மாதம் திருக்கல்யண உற்சவம் சிறப்பாக நடைப்பெறுகிறது. விசாக திரு நட்சத்திரத்தன்று திருக்கல்யாணமும் அதனைத் தொடர்ந்து முன்றாம் நாள் புஷ்ப பல்லக்கும் நடைப்பெறுகிறது.

புரட்டாசி மாதம் நவராத்திரி திருவிழா நடைப்பெறுகிறது. ஸ்ரீ வேங்கடமுடையான் சுவாமிக்கு இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. இது பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறும். புரட்டாசி மாதம் தேசிகர் உற்சவம் திருவோண நட்சத்திரத்தன்று ஆரம்பம் ஆகிறது.

ஐப்பசி மாதம் மணவாள மாமுனிவருக்கு உற்சவம் நடைபெறுகிறது. இவ்உற்சவம் ஐப்பசி மாதம் மூல நட்சத்திரத்தன்று ஆரம்பம் ஆகிறது.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.கார்த்திகை தினத்தன்று சொக்கபனை மற்றும் ஸ்ரீ பெருமாள் தாயார் திருவீதி புறப்பாடு நடைபெறுகிறது.

மார்கழி மாதம் தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. தெப்பத் திருவிழா நான்காம் நாள் கல்கருட சேவை ஏகாதசி, துவாதசி, ஸ்ரீ பெருமாள் மற்றும் தாயார் எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெறுகிறது.

தை மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று அருள் மிகு கருடபகவானுக்கு லட்சார்ச்சனை நடைபெறுகிறது. தை முதல் அம்மாவாசை முதல் ஆரம்பமாகி இராபத்து பகல் பத்து உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. தை மாதம் கணு உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று தீர்த்தவாரி சிறப்பாக நடைபெறுகிறது.

மாசி மாதம் சக்கரத்தாழ்வார்க்கு மகம் நட்சத்திரம் அன்று திருமஞ்சனம் நடைப்பெறுகிறது.

பங்குனி மாதம் திருத்தேர் திருவிழா நடைப்பெறுகிறது. அப்போது நான்காம் நாள் கல்கருட சேவை நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து ஒன்பதாம் நாள் பௌர்ணமி உத்திரம் கூடிய நன்நாளில் ஸ்ரீ பெருமாள் தேருக்கு எழுந்தருளி தீர்த்தவாரி சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் சுவாதி தீபம் பெருமாளுக்கும், தாயாருக்கும் ஏற்றப்படுகிறது. இவ்வாறே ஒவ்வொரு ஆண்டு சிறப்பு நாட்களாக நாச்சியார் கோவிலில் வழிபாடு நடைபெறுகிறது.[18]

வழிபடும் முறைகள்

நறையூர் நம்பி எம்பெருமான் கருடப்பகவான் மீது அமர்ந்து திருவீதி கண்டருளும் பெரிய திருவடி தரிசனம் என்றும் சிறப்புடையது. இங்கு கருட வழிபாடு என்றும் சிறப்பாக காணப்படுகிறது. இந்த கருடனுக்கு கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகுசட்டம், முதலியவைகளை வாழைச்சாற்றில் கலந்து கருடனது திருமேனியில் சாற்றுவோர் எல்லா அஷ்ட சித்திகளையும் நிச்சயம் பெறுவார். அவ்வாறு செய்யும் போது கருடனது திருமேனி சர்ப்பங்களில் பட்டு முதலிய சித்திர வஸ்திரங்களை சமர்பித்து வழிபடுவோர்க்கு எண்ணிய நலன்கள் கைக்கூடும். கருட பகவானை ஆடி சுக்கில திதியில் வணங்குகிறவர்களுக்கு பிள்ளையே இல்லாதவர்களுக்கு நல்ல பிள்ளை பிறக்கும் என்றும் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவன் எளிதில் கிட்டுவான். இவரது திருநட்சத்திரம் என்பதால் அன்று கருடனுக்கு அர்ச்சனை செய்வது நல்லதாகும். இவர் நினைப்பும், வழிபாடும் உள்ள இடத்தில் என்றும் வெற்றியே நிலவும் என்பதாகும். இத்தலத்தில் சிறப்புபெற்ற புனித மரங்கள் நான்கு உள்ளன. மகிழ மரம், அரச மரம், வஞ்சுள மரம், வில்வ மரம், ஆகும். மகிழ மரத்தின் அடியில் தானம் செய்து வணங்கினால் நல்ல அறிவு வளர்ச்சியும்,சிறந்த நற்பலன்களையும் பெற முடியும். ஆரச மரத்தை கண்ணால் கண்டு வழிப்பட்டால் அஷ்டமாசித்திகள் உண்டாகும். வஞ்சுள மரம் இம்மரத்தை சுற்றி ஒரு முறை வலம் வந்து வணங்கினால் உலகையே சுற்றிய பேறு கிடைக்கும். அதோடு மட்டும் அல்லாமல் இத்தலத்ததில் வஞ்சுள மரத்தை வணங்குபவர்களுக்கு நம்பி எம்பெருமான் திருவருளும் இலட்சுமி கடாஷமும் பெருகும். அடுத்ததாக வில்வ மரம் இம்மரத்தின் அடியில் தானம் செய்து வணங்கினால் வீடு பேறு அடைவார்கள். இம்மரத்தைக் கட்டி அணைத்துக் கொள்ளும் மாந்தர்களுக்கு மலடு நீங்கி குழந்தைப்பேறு கிட்டும் அது மட்டும் அல்லாமல் நோயற்ற வாழ்வும் வாழலாம். என்பதே ஆகும்.[19]

8.சாரங்கப்பாணி திருக்கோவில்

இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள முலவர் ஸ்ரீ ஆராவமுதனை "ஏரார்கோலம் திகழக்கிடந்தாய்" என்றும் நான்கு திருக்கரங்களுடன் சேவை சாதிக்கும் உற்சவரை "நாற்றோளெந்தாய்" என்றும் நம்மாழ்வார் மங்களசாசனம் செய்தமையால் இத்திருத்தலம் "உபயப்ராதன திவ்வியதேசம்" என்று அழைக்கப்படுகிறது. இச்சிறப்பு வாய்ந்த திருத்தலத்தில் வழிபாடு எவ்வாறு இருக்கின்றன, என்பதைப் பார்ப்போம்.[20]

பூஜை முறை

சாரங்கபாணி திருக்கோவிலில் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி அனைத்துப் பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

பூஜை காலங்கள்

சாரங்கபாணி திருக்கோவிலில் ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. காலை 8.00 மணிக்கு திருவனந்தால் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து 9.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலும் காலசந்தி பூஜை நடைபெறுகிறது. பகல் 12.00 மணிக்கு உச்சிக்காலத்தில் பூஜை நடைபெறுகிறது. மாலை ஆறு மணியிலிருந்து ஆறு முப்பது மணி வரையிலும் நித்யானுசந்தானம் பூஜை சிறப்பாக நடைபெற்றது. இரவு 7.30 மணியிலிருந்து 8.00 மணி வரைக்கும் இரண்டாம் காலம் பூஜை நடைபெறுகிறது. இரவு 9.00 மணிக்கு அர்த்தஜாமத்தில் பூஜை நடைபெறுகிறது.

நாள் வழிபாடு

தினசரி சாரங்கபாணி திருக்கோவிலில் ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன.காலை 7.00 மணிக்கு விஸ்வருப பூஜை நடைபெறுகிறது. காலை 8.00 மணிக்கு திருவனந்தால் காலை 8.00 மணிக்கு நடைபெறுகிறது. திருப்பாவை சேவாகாலம் காலை 8.மணிக்கு நடைபெறுகிறது.

காலசந்தி திருவாராதனம் காலை 9.00 மணியிலிருந்து 9.45 மணி வரையிலும் றடைபெறுகிறது. ஊச்சி கால பூஜை நண்பகல் 12.00 மணிக்கு நடைப்பெறுகிறது. இப்பூஜைகள் முடிந்த பிறகு கோவில் நடை சாற்றப்படுகிறது. பின்பு நடைத்திறப்பு மாலை 4.30 மணிக்கு திறக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து நித்யானு சந்தான சேவகாலம் பூஜை மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது. அதன் பிறகு தோசை தளிகை நடைபெறுகிறது. இரண்டாம் காலம் திருவாராதனம் இரவு 7.30 மணியிலிருந்து 8.00 மணி வரையிலும் திருவாராதனப்பூஜை நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து 9.00 மணிக்கு அர்ததஜாம பூஜை நடைபெறுகிறது. நடைச்சாற்றுதல் இரவு 9.30 மணிக்கு சாற்றப்படுகிறது. இத்திருக்கோவிலில் வந்து வழிபடுவோருக்கு முதலில் துளசி தீர்த்தம் வழங்கப்பட்டு தலையில் இராமர் பாதுகை வைக்கப்பட்டு பின்னர் பிரசாதமாக குங்குமம் வழங்கப்படுகிறது. இப்பூஜை காலங்கள் குறிப்பாக திருவிழாக்காலங்களில் மாறுபடும்.

வார வழிபாடு

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை வார சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது. வார சிறப்பு நாட்களில் உற்சவ காலங்கள் தவிர மற்ற தினங்களில் பெருமாளுக்கு புறப்பாடு உண்டு. வார சிறப்பு நாட்களில் ஸ்ரீ கோமளவல்லி தாயார் புறப்பாடும் தொன்று தொட்டு நடைப்பெற்று வருவது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வாரத்தில் சிறப்பு நாளான சனிக் கீழமையில் சாரங்கபாணி திருத்தலத்தில் சென்று வழிப்பட்டால் பெருமாளையும் தாயாரையும் வழிபட்டால் ஜாதக தோஷம் மற்றும் மன வேறுபாடுகளால் பிரிந்த தம்பதியா் ஒன்று சேரவும் மாங்கல்ய பலம் கூடவும் மக்கள் வார சிறப்பு நாளான சனிக்கிழமையில் மக்கள் அதிகமாக இத்தலத்து பெருமானை வழிபட வருகின்றனா். இங்கு வந்து வழிபடும் பக்தா்களுக்கு தோசை தளிகை பிரசாதமாகப் வழங்கப்படுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

சித்திரை மாதம் அட்சய திருதியையின் போது 12 நாட்கள் கருட சேவை சைத்ரோத்சவம் சிறப்பாக நடைப்பெறுகிறது. சித்திரை நட்சத்திரத்தில் திருத்தோ் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வைகாசி மாதம் வஸந்த உற்சவம் ஏழு நாட்களுக்கு பெருமாளுக்கு பௌா்ணமியில் வெள்ளி இரதமும், இரண்டு நாட்களுக்கு தாயாரும் கடைசி தினத்தில் பெருமாளும், தாயாரும் எழுந்தருளுவாா்கள்.

ஆனி மாதம் சுவாதிநட்சத்திரத்தில் பரதத்வநிா்தாரண உற்சவம் சிறப்பாகக் ஸ்ரீ பெருமாள் கருட வாகனத்திலும் பெரியாழ்வாா் யானை வாகனத்திலும் எழுந்தருளி காட்சி தருகின்றனா்.

ஆடி மாதம் ஸ்ரீ ஆண்டாளுக்கு மூன்று நாட்களுக்கு திருவாடிப்பூரம் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பெருமாளுக்கு பவித்ரோத்சவம் ஏகாதசி, ஜேஸ்டாபிஷேகம், பதினெட்டாம் பெருக்கன்று நடைபெறுகிறது. பெருமாள் அல்லது பாதூகை காவிரிக்கு எழுந்தருள்வது வழக்கமாக உள்ளது.

ஆவணி மாதம் ஸ்ரீ ஜெயந்தி உற்சவமும் உறியடி உற்சவமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

புரட்டாசி மாதம் தாயாருக்கு நவராத்திரி உற்சவம் நடைபெறுகிறது. அதனைக் தொடா்ந்து தேசிகன் உற்சவம், சரஸ்வதி பூஜை தினத்தில் பொற்றாமரை தினத்தில் பொற்றாமரையில் ப்ரதக்ஷணம் நடைபெறுகிறது.

ஐப்பசி மாதம் தீபாவளி உற்சவம் மற்றும் மூலவா் புனுகு காப்பு திருவிழா கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தீப உற்சவம், மற்றும் ஆழ்வாருக்கு அத்யாயன பட்டோலை வாசித்தல், ஊஞ்சல் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மார்கழி மாதம் பகல்பத்து இராபத்து வைகுண்ட ஏகாதசி கந்தா்வக்குடை 15ஆம் சேவை பரமபதநாதன் சேவை நம்மாழ்வாா் திருவடி தொழல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 19ஆம் நாள் சேவை சங்கரமண உற்சவம் கொடியேற்றுதல் சிறப்பாக நடைபெறுகிறது.

தை மாதம் 1ஆம் தேதி தைப் பொங்கள் திருத்தேர் உற்சவம் நடைபெறுகிறது. தை மாதம் தாயாருக்கு கனு உற்சவம் 11 நாட்கள் அம்மாவாசை தினத்தன்று பொற்றாமரையில் பிரதட்ஷனம் இரதசப்தமி நடைபெறுகிறது.

மாசி மாதம் மாசி மகத்தன்று தெப்போற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பங்குனி மாதம் தாயாருக்குப் பிரம்மோற்சவம் பங்குனி உத்திரத்தில் தாயாா் வெள்ளி ரதத்தில் உட்பிரகாரம் சுற்றி வருதல் பெருமாள் பொற்றாமரை ப்ரதட்ஷனம் திருக்கல்யாண உற்சவம் விடையாற்றி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.[21]

பூஜை மொழி

பூஜை மொழி இனிய தமிழில் நடைப்பெற்றது பூஜையை நேரில் கவனித்தப்போது இரு திருக்கைகளுடன் வலது திருக்கையை திருமுடியின் கீழ் அமா்த்தி அழகு வெள்ளம் அலைக்கொள்ள கிழக்கே திருமுக மண்டலத்துடன் உததான சயனத்தில் அமா்ந்து பாம்பனை மீது பள்ளிக் கொண்டு அருள்கிறாா். என்றும்கோமலவல்லி தாயாா் என்பது நாச்சியாா் திருநாமம் கோமளவல்லி தாயாா் நான்கு திருக்கைகளுடன் அருளே வடிவாக அழகே தேக்கமாய் புன்முருலுடன் அமுதன் கருவறைக்கு வலது பக்கத்தில் தனிக்கோயில் தாயாராகக் கொண்டு எழுந்தருளி இருக்கிறாா். என்று கூறிக் கொண்டே தீபராதனை நடைபெறுகிறது.

வழிபடும் முறைகள்

இத்தலத்து பெருமானை வழிபடுவோா்களின் கொடிய பாவங்கள் அனைத்தும் அழிந்து விடுகின்றன. கோமளவல்லி தாயாருக்கு திருமஞ்சனம் செய்து புடவை சாத்தினால் பெண்களுக்கு திருமண பிராப்தம் கைக்கூடும் என்பது நம் கண்ணால் பாா்க்கும் உண்மையாகும். இத்திருக்கோவிலில் ரூ 5000 செலுத்தினால் அந்த

தெரமாகையினைக் கொண்டு வங்கியில் முதலீடு செய்து வரும் வட்டி தொகையினைக் கொண்டு பக்தர்கள் விரும்பும் ஒரு குறிப்பிட்ட நாளில்நித்தியாராதனை கட்டளை பிரசாதம் செய்து வழங்கப்படுகிறது. இத்தலத்தில் பெருமாள் கருவறையில் ஆதிசேஷன் மேல் பள்ளிக் கொண்டிருக்கும் குழந்தை உருவத்தின் உள்ள கிருஷ்ண விக்கிரகம் மிகுந்த சிறப்பு வாய்ந்தது. நீண்ட நாட்களாக மகப்பேறு இல்லாத தம்பதிகள் இவ்விக்கிரகத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்தால் விரைவில் மகப்பேறு உண்டாகும். இன்று இந்தியாவில் மகப்பேறு இல்லாத தம்பதியர் இத்திருக்கோவிலுக்கு வந்து கிருஷ்ணன் விக்கிரகத்தை கையில் வைத்துக் கொண்டு வழிபாடு செய்து மகப்பேறு அடைந்துக் கொண்டு இருப்பது. அன்றாட நிகழ்வாக அமைந்துள்ளது.[22]

9. சாரநாத பெருமாள்

பூஜை முறை

பாஞ்சராத்திர ஆகம முறைப்படி பெருமாள், தாயார், ஆழ்வார்களுக்கும் பூஜைகளும் திருவிழாக்களும் நடைப்பெறுகின்றன.[23]

நாள் வழிபாடு

தினமும் ஆறு காலங்கள் பூஜை நடைப்பெறுகின்றன. காலையில் திருவனந்தால் நடைபெறுகிறது அதனைத் தொடர்ந்து காலையில் 9.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலும் காலசந்தி பூஜையும், பகல் 12.30 மணிக்கு உச்சி கால பூஜையும், மாலை 6.00 மணியிலிருந்து 6.30 வரைக்கும் நித்யானு சந்தானம் பூஜையும், இரண்டாம் கால பூஜையாக 7.30 மணியிலிருந்து 8.00 மணி வரையிலும் நடைபெறுகிறது. இரவு 9.00 மணிக்கு அர்த்தஜாம பூஜை நடைபெறுகிறது. இதில் பெருமாளுக்கும், தாயார் மற்றும் ஆழ்வார்களுக்கும் தினசரி தளிகையுடன் ஆறு கால பூஜை பஞ்ஜசராத்திர ஆகமத்தின் படி நடைபெறுக. இத்தலத்திற்கு வழிபட வரும் பக்தர்களுக்கு முதலில் துளசி தீர்த்தம் வழங்கப்பட்டு பின்னர் தலையில் இராமர் பாதுகை வைக்கப்படுகிறது. பிரசாதமாகக் குங்குமம் வழங்கப்படுகிறது.

வார வழிபாடு

ஒவ்வொரு வார சனிக்கிழமையும் வார சிறப்பு நாளாக கருதப்படுகிறது. தினசரி நாட்களில் நடப்பது போலவே வார சிறப்பு நாளான சனிக்கிழமையும் பெருமாளுக்கு ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றது. ஸ்ரீதேவி பூதேவிகளுடன் நிருஸம்மர் தனியாக அர்த்த மண்டபத்தில் எழுந்தருளி இருக்கிறார். இவருக்கு

ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமையும், பானக பூஜையும், ஒவ்வொரு வார புதன் கிழமையும் வெள்ளைப் பூக்களால் அர்ச்சனையும் நடைபெறுகிறது.

பூஜை மொழி

சாரநாத பெருமாள் கோவிலில் இனிய தமிழில் பூஜை நடைபெறுகிறது. கையில் தீபத்தினை அசைத்துக் கொண்டே இத்தலத்தில் மூலவராக சாரநாதப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார் என்று கூறியும், தாயாராக ஸ்ரீதேவி, பூதேவி தாயாராக காட்சியளிக்கிறார். என்று கூறி தமிழில் வழிபாடு நடைபெறுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

காவிரிக்கு தை மாதம் பௌர்ணமி கூடிய பூச நட்சத்திரத்தன்று தோன்றி வரம் அளித்ததால் 108 வைணவத் தலங்களில் இத்தலத்தில் மட்டுமே தை பூசத்தன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. இதற்கு முன்பாக முதல் எட்டு நாட்களுக்கு கொடியேற்றத்துடன் தினம் காலையில் பல்லக்கிலும், மாலையில் எல்லா வாகனத்திலும் வேத திவ்யபிரபந்த கோஷ்டியுடன் புறப்பாடும், ஒன்பதாம் நாள் தைப் பூசத்தன்று பெரிய தேரோட்டமும், அதன் பிறகு பத்தாம் நாள் துவாதச ஆராதனையுடன் பிரம்மோற்சவம் முடிவடைகின்றது. இது அல்லாமல் அட்சய திரிதியை அன்று காலையில் கருட சேவை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதம் ஜேஸ்டாபிஷேகமும் மற்றும் அதன் மறுநாள் 108 கலச திருமஞ்சனம் நடைபெறுகிறது.வைகாசியில் வஸந்த உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசியில் நவராத்திரி உற்சவம், மார்கழியில் 20 நாட்களுக்கு அத்யயன உற்சவங்களும் நடைபெறுகின்றன. இத்துடன் பெருமாளுக்கு மாதபிறப்பு, அமாவாசை, ஏகாதசி ஆகிய நாட்களில் பஞ்சபருவ புறப்பாடும், மற்றும் பூசத்தன்று பெருமாளுக்கு புறப்பாடும் ஊஞ்சல் சேவையும் சிறப்பாகக் கொணடாடப்படுகிறது. இத்துடன் எல்லா வெள்ளிக் கிழமைகளில் புறப்பாடும், ஊஞ்சல் சேவையும் உண்டு.

மேலும் சித்திரையில் ஐந்து நாட்களுக்கு எம்பெருமானார் உற்சவமும், ஐப்பசியில் பத்து நாட்களுக்கு மணவாள மாமுனிகளுக்கு உற்சவமும் நடைபெறுகின்றன.[24]

வழிபடும் முறைகள்

சாரநாத பெருமாள் கோவிலிவ் ஆதிஷேன் பீடத்தில் சிறியதாக சந்தான கிருஷ்ணனும்,ஆஸ்தானத்தில் இருக்கின்றார். இவரை கல்கண்டுடன் வெண்ணெயால் பூஜித்து சிறிது நேரம் இந்த கிருஷ்ணனை வழிபட்டால் தம்பதிகள் கையில்

வைத்திருத்தால் விரைவில் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பது கண்கூடா அனுபவம் ஆகும். ஸ்ரீ தேவி பூதேவிகளுடன் நிருஸம்மா் தனியாக மூலவிக்கிரகங்களாக அர்த்த மண்டபத்தில் எழுந்தருளி இருக்கிறாா். இவருக்கு ஒவ்வொரு வார புதன் கிழமையும் வெள்ளை பூக்களால் அர்ச்சனை செய்து வழிபட்டால் எல்லா காரியங்களும் கைகூடும்.என்பதே ஆகும்.[25]

10. நந்திபுர விண்ணகரம்

பூஜை முறை

நந்திபுர நாதன் கோவிலில் பஞ்சராத்திர ஆகமத்தின் படி பூஜைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

நாள் வழிபாடு

தினமும் ஆறு காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன. காலை 8.00 மணிக்கு திருவனந்தல் நடைபெறுகிறது. அடுத்தாக காலசந்தி பூஜை நடைபெறுகிறது. அது காலை 9.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலும் நடைபெறுகிறது. புகல் 12.30 மணிக்கு உச்சிகாலத்தில் பூஜை நடைபெறுகிறது. உச்சிகாலத்தில் பெருமாளுக்கு தளிகை சமா்பிக்கப்படுகிறது. மாலை 6.00 மணியிலிருந்து 6.30 மணி வரையிலும் நித்யானுசந்தனம் பூஜை நடைபெறுகிறது. இரண்டாம் கால பூஜையாக 7.30 மணியிலிருந்து 8.00 மணீ வரையிலும் நடைபெறுகிறது. இரவு 9.00 மணிக்கு அர்த்த ஜாமத்தில் பூஜை நடைப்பெறுகிறது. ஒவ்வொரு சடங்கிற்கும் மூன்று படிகள் உள்ளன. அலங்காரம், நிவேதனமாக உணவு பிரசாதம், தீபராதனைக் காட்டி விளக்கினை அசைத்தல், போன்றவை நடைபெறுகிறது. வுழிபாட்டின் கடைசி கட்டத்தின் போது நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகியவை இசைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் வழிபாடு முடிந்தவுடன் முதலில் துளசி தீர்த்தம் வழங்கப்பட்டு தலையில் இராமா் பாதுகை வைக்கப்பட்டு பின் குங்குமம் தரப்படுகிறது. இது காலம் காலமாகத் தினசரி வழிபாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வார வழிபாடு

ஒவ்வொரு வார சனிக்கிழமையும் சிறப்பு நாளாக வழிபடப்படுகிறது. தாயாருக்கு வெள்ளிக்கிழமை சிறப்பு நாளாக வழிபாடு நடைபெறுகிறது. ஒவ்வொரு வார சனிக்கிழமையும் பெருமாளுக்கு நிவேதனமாகத் தயிர்சாதம்,புளிசாதம், ஆகியவை நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. கோவிலுக்கு வழிபட வரும் பக்தா்களுக்கு பிரசாதமாக தயிர்சாதம் புளி சாதம் ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வாரமும் இத்தலத்து பெருமாளை வணங்குவதற்காகப் பெண்களே அதிகம்

வருகின்றனர். இத்தலத்து பெருமாளை வார சிறப்பு நாட்களில் வந்து வணங்கினால் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடைபெறும். என்றும் நரம்பியல் தொடர்பான பிரச்சினைகள் தீரவும், பிரிந்தவர் ஒன்று சேரவும், நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வரவும், அடிக்கடி வார சிறப்பு நாட்களில் மக்கள் அதிகமாக வருகின்றனர்.

பூஜை மொழி

இனிய தமிழில் பூஜை நடைபெறுகிறது. பூஜையை நேரில் கவனித்தப் போது இத்தலத்தில் மூலவர் ஸ்ரீ ஜெகன்நாதப் பெருமாள் காட்சியளிக்கிறார். என்றும் இவரை விண்ணகரப் பெருமாள் என்றும் அழைக்கப்படுகிறது. மூலவர் தனது முகத்தை மேற்கு திசையை நோக்கி உட்கார்ந்த நிலையில் தனது சேவையைக் கொடுக்கிறார் என்றும் இத்தலத்து தாயாராக செண்பகவல்லி தாயார் காட்சி அளிக்கிறார் என்று தீபத்தினை அசைத்தபடி பெருமாளுக்கு வழிபாடு நடைபெறுகிறது.

ஆண்டு சிறப்பு நாட்கள்

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு நாட்களைக் கொண்டு ஜெகன்நாத பெருமாளுக்கு திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் பவித்ரோட்சவம் ஜூலை மாதம் கொண்டாடப்படுகிறது. இந்த உற்சவத்தின் போது தெய்வத்தின் பண்டிகை படங்கள் ஊர்வலமாக எடுக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நிகழ்ச்சியின் போது செய்யப்படுகின்றன. வைகுண்ட ஏகாதசி டிசம்பர் ஜனவரி மாதங்களில் இத்திருக்கோவிலில் பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதம் தீபாவளி உற்சவம், மூலவர் புனுகு காப்பு ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தீப உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாத வெள்ளி கிழமைகளில் செண்பகவல்லி தாயாருக்கு மங்களகரமான நாளாக கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதம் அட்சய திருதியையின் போது 12 நாட்கள் கருட சேவையும் சித்தரை நட்சத்திரத்தில் திருத்தேர் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மாசி மாதம் மாசி மகத்தன்று தீர்த்தவாரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.[35]

வழிபடும் முறை

ஒவ்வொரு வார வெள்ளி கிழமைகளிலும் செண்பகவல்லி தாயாருக்கு அபிஷேகம் செய்து தாயாரை வழிப்பட்டால் அவர்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அஷ்டமி நாளில் இத்தலத்து பெருமாளை வழிபட்டு இத்திருக்கோவிலை பார்வையிட்டால் கணவன் மனைவி இடையே உள்ள பிரச்சினைகள் அனைத்தும் அகன்று விடுமாம். அது மட்டும் அல்லாமல் இத்தலத்து பெருமானை வழிபட்டால்

நீதிமன்ற பிரச்சினைகள் நரம்பியல் தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் அகன்று விடும் என்பது கண்கண்ட உண்மையாக உள்ளது.

தொகுப்புரை

சோழநாட்டுத் திருப்பதிகளில் வழிபாடுகள் நீர் நெருப்பைக் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. தலங்களில் வழங்கப்படும் பிரசாதங்கள் தலத்துடன் தொடர்புடையதாகவே வழங்கப்படுகின்றன. சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒரு நாள் வழிபாட்டை ஆறு காலங்களாகப் பிரிக்கின்றனர். சனிக்கிழமை சிறப்பு வழிபாடாக நடைப்பெற்றுக் கொண்டு வருகிறது. பெரும்பாலும் கோவில் அர்ச்சகர்களாலே வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. தேர்த் திருவிழாவின் போதும் ஆழ்வார்கள் நட்சத்திரத்தின் போதும் வெளி ஊர்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வந்து மக்கள் திருவிழாவைச் சிறப்பிக்கின்றனர். தேர்த் திருவிழாவின்போது வைணவக் கோவில்களுக்கு கொடி மரத்திற்கு கொடியேற்றப்படுகிறது. அன்னதானமும் வழங்கப்படுகிறது. வைணவத் திருக்கோவில்கள் புனரமைக்கப்படும் போது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சிறப்பு குடமுழுக்கு விழாவை நடத்துகின்றனர். திருமால் வழிபாடுகளில் மரபு வழிபாடுகள் பின்பற்றப்படுகின்றன. இறைவனை தெய்வக் குளத்தில் நிராடச்செய்து பல்லக்கில் வைத்து உலா வருகின்றனர். வைணவத் திருப்பதிகள் பெரும்பாலும் நாராயண நாமத்தை அடிப்படையாகக் கொண்டு பூஜைகள் நடைப்பெறுகின்றன. வைணவத் திருப்பதிகளுக்கு வெவ்வேறு மாதிரியான உணவுகள் திருமாலுக்கு படைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு வைணவத் திருப்பதிகளுக்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பு உண்டு. எனவே வைணவத் திருப்பதிகளில் நடக்கும் திருவிழாக்கள் பற்றியும், வழிபாடு முறைகள், நாள் வழிபாடு, வார வழிபாடு பற்றியும் விரிவாக இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

சான்றெண் விளக்கம்

1.பண்பாட்டு தளங்கள்	-	10
2.ம.வ.வை.கோ.வ.ம.க.ஆ.	-	51
3.மேலது	-	.52
4.தொல்.பொருள்.	-	5
5.அருள்மிகு அரசாப விமோசனப் பெருமாள் திருத்தல.வ	-	13
6.மேலது	-	14
7.மேலது	-	15-16
8.ஸ்ரீ அப்பாலரங்கநாதர் கோவில் திருத்தல வரலாறு	-	11
9.மேலது	-	12-13
10.மேலது	-	7
11.ஸ்ரீ சௌராராஜ பெருமாள் திருக்கோவில் தலவரலாறு	-	11
12.மேலது	-	12
13.மேலது	-	13
14.அருள்மிகு. ஓப்பிலியப்பன் கோவில் திருத்தல வரலாறு	-	12
15.மேலது	-	15
16.மேலது	-	31
17.ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் திருத்தல வரலாறு	-	12-13
18.மேலது	-	16-17
19.மேலது	-	33
20.ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி திருக்கோவில் தலவரலாறு	-	2

21.மேலது - 14

22.மேலது - 16

23.அருள்மிகு சாரநாத பெருமாள் கோவில் தல வரலாறு - 3

24.மேலது - 4

25.மேலது - 2

இயல் - 3

வழக்காறுகள்

சோழநாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறும் என்ற தலைப்பில் மூன்றாவது இயலாக வழக்காறுகள் அமைந்துள்ளன. இதில் வழக்காறுகள் விளக்கம், சோழநாட்டின் வழக்காறுகள், சோழ நாட்டின் இயற்கை வளங்கள், சோழ நாட்டின் எல்லைகள், நாட்டுப்புறவியல் விளக்கம், நாட்டுப்புறவழிபாடு, நாட்டுப்புற தெய்வங்களின் சிறுதெய்வ வழிபாடு, நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறபழமொழிகள், நாட்டுப்புறவிடுகதைகள், நாட்டுப்புறநம்பிக்கைகள், நாட்டுப்புறபழக்கவழக்கங்கள், ஆகியவை இவ்வியலில் வழக்காறுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது

வழக்காறுகள்

மானுடம் தோன்றிய காலம் தொட்டே நாட்டுப்புற வழக்காறுகள் தோன்றி விட்டன. இவ்வகை வழக்காறுகள் காலம் காலமாக மரபு ரீதியாக பின்பற்றக்கூடியது ஆகும். புராணக் கதைகள், பழமரபு கதைகள், நாட்டார் கதைகள், நகைப்புகள், பழமொழிகள், விடுகதைகள் இன்னிசை உச்சாடனங்கள், மந்திரங்கள், வாழ்த்துக்கள், சாபங்கள், சபங்கள், சபதங்கள், வசவுகள், எதிருரைகள், இடித்துரைகள், நையாண்டிகள், பாராட்டுக்கள், நாப்புரட்டுக்கள், வரவேற்புரைகள், விடைப்பெறும் வாய்ப்பாடுகள், நாட்டார் வழக்காறுகளுடன் அடங்கும். நாட்டார் ஆடைகள், நாட்டார் நம்பிக்கைகள், நடனம், நாட்டார் நாடகம், நாட்டார் கலை, நாட்டார் மருத்துவம், நாட்டார் இசை, நாட்டார் பாடல்கள், நாட்டார் பேச்சு, நாட்டார் உவமைகள். நாட்டார் உருவகங்கள், பட்டப்பெயர்கள், போன்றவையும் நாட்டார் வழக்காறுகளுள் அடங்கும்.

வாய்மொழி காப்பியங்களிலிருந்து கையெழுத்துப் புத்தகம் மற்றும் கவிதை வரைவில் உள்ளவைகளும், கல்லறை வாசகங்களும், கழிவறைப் பாட்டுகளும் வேடிக்கை பாட்டுகளும், பந்தடி ஒலிப்பாடல்களும், கால் தூக்கி ஆட்டும் பாடல்களும், குழந்தைகளை முழங்காலில் வைத்து தூக்கி தூக்கிப் போட்டு பாடும் பாடல்களும் நாட்டார் பாடல்களுள் அடங்கும். விளையாட்டுகளும் சைகைகளும், குறியீடுகளும், செபங்களும், நடைமுறை நகைப்புகளும், நாட்டார் சொற்பிறப்பியல்புகளும், உணவு பட்டியல்களும், மெத்தை உருவரைகளும், வீடுகளும், களஞ்சியங்களும், வேலிகளின் வகைகளும், கூவி விற்போர் குரலொலிகளும், விலங்குகளை அழைப்பதற்கு அல்லது கட்டளையிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் மரப்பொலிகளும் பட்டியலுக்குள் அடங்கும். திருவிழாக்கள், சிறப்பு மிகு நாட்கள், குறித்த வழக்கங்கள், போன்றவை மாபெரும் வடிவங்களாகும். இந்தப்

பட்டியல்கள் நாட்டார் வழக்காற்று வடிவங்களின் மாதிரியையே கொண்டுள்ளது. ஏல்லா வடிவங்களும் இதற்குள் அடங்கிவிடவில்லை என்று குறிப்பிடுகிறார். டண்டிஸ்[1]

வில்லியம் பாஸ்கம் என்ற மானிடவியலாரின் கூற்றுப்படி மானிடவியலில் நாட்டார் வழக்காற்றியல் என்ற தொடர் புராண மரபு கதைகள், பழமரபு கதைகள், நாட்டார் கதைகள், பழமொழிகள், கலைகள், கைத்தொழில்கள், உடைகள், விட்டு வகைகள், சமையற்கலைகள், வரையுருவக் கலைகள், குழைத்து செய்யப்படும் சிற்பம், முதலிய கலைகளையும் தொழில் நூட்பவியல், பொருளியல், சமுதாய அரசியல் அமைப்புகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது.[2]

வழக்காறுகளின் வகைகள்

வழக்காறுகள் மூன்று வகையாக வகைப்படுத்தலாம். என்கிறார் தே. லூர்து,

1.வாய்மொழி இலக்கியங்கள்

நாட்டுப்புறப் பாடல்களில் குழந்தைப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஏற்றப்பாடல்கள், கண்ணடிப்போர் பாடல்கள், தெம்மாங்கு பாடல்கள், ஒப்பாரி பாடல்கள், மாரடிப்பாடல்கள், கும்மிப் பாடல்கள், போன்றவை. வில்லுப்பாடல்கள், மரபுவழி பாடல்கள், போன்ற கதைப்பாடல்கள்: பழமொழிக் கதைகள், புராணக்கதைகள், போன்றவை மேலும் பழமொழிகள், விடுகதைகள், போன்றவை நாட்டுப்புற இலக்கியங்களுள் அடங்கும்

2.பொருள்சார் பண்பாடு

மரபு வழி சமுகங்களில் ஆடவரும் பெண்டிரும் தங்கள் வீடுகளைக் எப்படிக் கட்டுகின்றனர்?. தங்கள் உணவுகளை எவ்வாறு தாயாரிக்கின்றன. விவசாய வேளைகளையும் மீன் பிடித்தலையும், எவ்வாறு நடத்துகின்றன. நீர்வளத்தை எவ்வாறு உருவாக்குகின்றன? தங்களின் கருவிகளை எவ்வாறு வடிவமைக்கின்றனர். தங்களுடைய தட்டு முட்டுப் பொருள் பாத்திரங்களையும், இருக்கைகளையும் எப்படி வடிவமைக்கின்றன? என்ற வினாக்களுக்கு வழக்காறுகள் விடையளிக்கின்றன.

மண் வீடுகள் செப்புநாட்டு கோட்டைகள், தமிழகக் கோயில்கள், போன்றவையும் வழக்காற்றின் பாடப்பொருளாக உள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொன்வினைக் கொல்லர்களும், இரும்பு வினைக் கொல்லர்களும், மரத்தச்சர்களும், பரம்பரையாக மரபு வழி முறைகளிலிலே தொழில் புரிகின்றனர். தேர்கள், சப்பரங்கள், கட்டில்கள், வள்ளல்கள், படகுகள், தோணிகள் போன்றவையும் மரபு வழியிலேயே செய்யப்படுகின்றன. மேலும் பாய் முடைதல், மண்பாண்டம்

செய்தல் போன்ற நெட்டி வேலைகள், கண்ணாடி வேலைகள், பனையோலைத் தொழில்கள், போன்றவையும் வழக்காற்றில் அடங்கும்.

3.வாய்மொழி இலக்கியத்தையும் பொருள் சார் பண்பாட்டையும் சார்ந்த நாட்டார் சமுதாய

வழக்கங்கள் என்ற பிரிவும் நாட்டார் வழக்கற்றில் அடங்கும். இங்கு தனி மனிதத் திறமையும், நிகழ்த்துதலையும் விட குழுவினரிடையே சமூக ஊட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தமிழ் நாட்டாரைப் பொறுத்தவரை குடும்பங்கள், ஊர்கள், கோவில்கள் தொடர்பான பல வழக்கங்கள் உள. கோவில்கள் தொடர்பான பல வழக்கங்கள் உள. பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, போன்ற கடந்து செல்லும் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் உள. பெயர் வைத்தல், காது குத்துதல், நினைவு நாள், நோய்களுக்கேற்ற சடங்குகளும் உள. இவை குறித்த வழக்கங்களும் உள. மேலும் இசை, நடனம், ஆடை, அணிகள், சாமியாட்டம், அலகு குத்துதல தேரோட்டம், தெப்பக்கட்டு, மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு, எருதுவிரட்டு, வண்டிபந்தயம், கரகாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், முதலிய சமயச் சார்புடைய நிகழ்வுகளும் வழக்காற்றில் அடங்கும். மேலும் பிள்ளையார் பந்து, ஒட்டுப்பந்து, கிட்டிப்புள், பம்பரம், கோலி, சில்லாக்கு, கிளித்தட்டு, கண்ணாமூச்சி, கொலைக்கொலையாம் முந்திரிக்காய், பல்லாங்குழி, தாயம், பதினைந்தாம் புலி, கல்லாங்காய், போன்ற விளையாட்டுகளும் வழக்காற்றில் அடங்கும்.[3]

ஆக வழக்காறு என்பது மனிதனின் சொல், செயல், சிந்தனை படைப்புகளையும் பாடப்பொருளையும் கொண்டது.

வழக்காற்றின் வரம்பு

வழக்காற்றின் பாடப்பொருளை பார்த்தாலே அதன் வரம்பு நாள்தோறும் வளர்ந்து வருவது தெரியும். மனிதன், சமூகம், சமயம், பண்பாடு, தொழில்நுட்பம், நுண்கலை போன்ற துறைகளில் முன்னேற அவற்றைப் பற்றிய புதிய புதிய வழக்காறுகள் தோன்றிய வண்ணம் உள்ளன.

சமூகம்

(எ-டு) அன்று,

“பிள்ளைப் பதினாறும் பெற்றுப்

பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்”[4]

என்று வாழ்ந்திருந்தனர் தமிழ் மக்கள்

இன்று,

“ஒன்று பெற்றால் ஒளிமயம்

ஆதிகம் பெற்றால் அல்லல்மயம்” என்றும்:

“நாமே இருவர்

நமக்கேன் ஒருவர்”

என்றும் கூற ஆரம்பித்து விட்டனர்.

தொழில்நுட்பம்

அன்று, ***“கற்றது கைமண்ணளவு***

கல்லாதது உலகளவு”

கூறி வந்த தமிழர்

இன்று ***“கற்றது கால்குலேட்டர் அளவு***

கல்லாதது கம்பியூட்டர் அளவு”

என்று கூறுகின்றனர்.

நூண்கலை

அன்று ***“சித்திரமும் கைப்பழக்கம்”***

என்று கூறிய தமிழர்

இன்று ***“எங்கும் மெஷின் எதிலும் மெஷின்”***

என்று கூறுவதைக் காண்கிறோம்.

எனவே வழக்காறு வளர்ந்து கொண்டே வருகிறது என்பது புலனாகிறது. வுழக்காறுகள் குழு, இனம், தேசம், ஊர், என வரிவடைந்து கொண்டே செல்கிறது.

சோழ நாட்டின் எல்லைகள்

சோழநாடு என்பது தஞ்சை, திருச்சிக் கோட்டங்களைக் கொண்ட நிலப்பரப்பாகும். வடக்கும் தெற்கும் வெள்ளாறுகள், கிழக்கே கடல், மேற்கே கோட்டைக்கரை இதற்கு எல்லைகள் ஆகும். கோட்டக்கரை என்பது ஆற்றங்கரை மீது அமா்ந்த கோட்டை என்பது பொருள். அதாவது ஆற்றங்கரை மிக உயர்த்தி கோட்டைப் போலவே கட்டப்பெற்ற அரண் அமைப்பாகும். இச்சோழநாடு தஞ்சை, திருச்சி, கும்கோணம், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. இச்சோழ நாடு தட்டையான சமவெளி, மலைகள் அற்றது.

சோழ நாட்டின் இயற்கை வளங்கள்

சோழ நாட்டின் இயற்கை வளமாக காவிரி ஆறு மிகச் சிறப்பாக சொல்லப்பட்டுள்ளது. இச்சிறப்பு மிக்க காவிரி ஆறு கடலருகில் பல கிளைகளாகப் பிரிந்து கடலை அடைகின்றது. அந்த இடத்தில் காவிரியால் தேக்கப்படும் வண்டல் மண் நாட்டைச் செழுமைப்படுத்துகிறது. காவிரியும் அதன் கிளைகளும் கடலொடு கலக்கும் இடம் நீண்ட சமவெளியாகும். அந்த இடம் பார்க்க பண்புடையது. சோழ நாட்டில் நெல் வயல்கள் மிகுந்து காணப்படுகின்றன. மாமரங்கள், தென்னை மரங்கள், பழமரங்கள், என்பன. நன்றாகச் செழித்து வளருகின்றன. இப்படிப்பட்ட சோழ வள நாட்டில் காடுகளே இல்லை. யுானை படுக்கும் அளவுள்ள இடத்தில் விளையும் பயிர் “எழு வரை உண்பிக்கும் வளமுடைய சோணாடு” என்று ஆவூர் கிழார் அறைந்துள்ளார். ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தன்று. என்று பொருநர் ஆற்றுப்படை ஆசிரியார் கூறியுள்ளார். இச்செழுமையான சோழ வளநாட்டிற்கு காவிரி ஆறே முக்கிய காரணமாக உள்ளது. குாவிரித் தாயை செவிலித்தாய் என்ன ஒம்பும் தீம்புனர்கன்னி என்று போற்றும் தகைமை உடையதாய காவிரி சோழ குடிகளுக்கு செவிலித் தாயாக அமைந்ததில் வியப்பு இல்லை. காவிரி ஆற்றில் ஆண்டுதோறும் புது நீா் தேக்கம் வரும் போது பதினெட்டு படிகளும் நீரில் மறையுமாம். அந்த நாளையே பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பதினெட்டாம் பெருக்கு என்று காவிரிக்கு வணக்கம் செய்துள்ளனர். இச்சிறப்பு வாய்ந்த சோழ நாட்டில் காவிரியைப் பெண்ணாக உருவகப்படுத்திப் பாடப்பெற்ற காவிரிப் பாக்களை சிலப்பதிகாரத்தில் காண முடிகிறது.[8]

சோழ நாட்டில் எண்ணிலடங்காத சிற்றூர்கள் உள்ளன. பொய்யாதளிக்கும் பொன்னி ஆற்று வளத்தால் சிற்றூர்கள் நெற்களஞ்சியமாக விளங்கின. வயல்களில் அல்லி மலர்கள் பூத்துக் கிடந்தன. எருமைகள் மறையும் அளவுக்கு செஞ்சாளப் பயிர்கள் வயலை அழகு செய்தன. சோழ நாட்டில் இருக்கும் சிறு ஊர்களைச் சுற்றியும் மா, பலா, வாழை, தென்னை, சமுக மரங்கள் செழித்து வளர்ந்தன. அவைகள் அனைத்தும் நிறைந்த பயனைத் தருகின்றன. அறுவடைக்கு முன் கண்ணை கவரத்தக்க அணிகலன்களை அணிந்த மகளிர் வயல்களைக் காவல் புரிந்தனர். ஆநல் மணிகளை தின்ன வந்த பறவைகளைத் துரத்த தம் அணிகளை வீசி எறிந்தனர். சிறிய பிள்ளைகள் கால்களில் தண்டை ஓசையிட விளையாட்டுப் பொருட்களை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டு இருந்தனர்.

சோழ நாட்டில் புகார் என்ற நகரம் ஒன்று இருந்தது. இப்புகார் போன்ற நகரங்களில் மாடமாளிகைகள், மிகுந்து காணப்படுகின்றன. அவற்றன் சுவர்கள் மீது தெய்வங்கள், விலங்குகள், இவற்றைக் குறிக்கும் வியக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்று இருந்தன. பல மாளிகைகள், அழகிய பூஞ்சோலைகள் சூழப்பெற்று

இருந்தன. அச்சோலைகளில் பூஞ்சோலைகள், ஆழமற்ற கிணறு அல்லது குளம், பளிங்கு அறை, அல்லது அழகிய அறை, செய்குன்று, இன்னபிறவும் இன்ப விளையாட்டுகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன.[5]

சோழ நாட்டின் சிறப்பு

சோழர் என்பவர் தம் தமிழகத்தின் கீழ் பகுதியில் சோழ மண்டலத்தைத் தொன்று தொட்டு ஆட்சி புரிந்து வந்த அரச மரபினர் ஆவார். இவர்கள் எக்காலத்தும் சோழ நாட்டை ஆட்சி புரியும் உரிமை எவ்வேந்தரால் முதன் முதலில் கைக் கொள்ளப்பட்டதென்று தெரியவில்லை. சோழர்கள் இராமயண பாரத காலங்களிலும் இவற்றிற்கு முந்திய நாட்களிலும் அவர்கள் மிகச் சிறப்புடன் விளங்குகின்றனர். என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. இருப்பினும் கி.மு மூன்றாம் நூற்றாண்டின் கல்வெட்டுகளில் சோழரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பெரிப்ளுஸ் என்ற நூலிலும் தாலமி என்பவரது வரலாற்றுக் குறிப்பிலும் இவர்களது உயரிய செய்திகள் காணப்படுகின்றன. இத்துணைத் தொன்மையும், சிறப்பும் வாய்ந்த சோழர் குடியினர் வளம் நிறைந்த சோழ மண்டலத்தைத் தமக்குரியதாகக் கொண்டு பண்டைக்கால முதல் ஆட்சி நாட்டை காவிரி நாடு என்றும் அறிஞர்களால் பாரட்டப்படுகிறது. ‘நெல்லுடையான் நீர் நாடர்கோ’ என்ற பழம் பாடல் பகுதியும், சோழவளநாடு சோறுடைத்து என்று ஔவையார் திருவாக்கு ஈண்டு நோக்கற் பால்வாழும் நெல்லுமையால் குடியுயர்தலும், குடியுயாதலால் கோன் உயர்தலும் இயல்பேயாம்.ஆகவே,

“வளவனாயினும் அளவறிந்தழித்துண்” என்னும் முதுமொழிக்கு ஏற்ப செல்வத்தின் மேல் எல்லைக்கோர் எடுத்துக்காட்டாகச் சோழக்குடியினார் கூறப்பட்டு இருக்கின்றனர். செல்வ வளத்தில் முவேந்தர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்தவர்களுள் சோழர்களே குறிப்பிடத்தக்கவர்களாகப் காணப்படுகின்றனர்.[6]

நாட்டார் வழக்காறு

நாட்டார் வழக்காறு என்பது கிராமம், மக்கள் வாழும் பகுதி, காணப்படும் சான்று ஆவணங்கள், இனவரைவியல், பதிவுகள், ஆகியவை வட்டார வழக்குகளைத் தாங்கி இருக்கின்றன. இவ்வாறு நம் முன்னோர்கள் வழங்கிய வட்டார வழக்குகளை இன்றைய மக்களும் வழங்கி வருகின்றனர். இதில் folk என்ற சொல் நாட்டார் என்ற சொல்லுக்குப் பொருத்தமான ஒன்றாகவும் அமைந்துள்ளது. Lore என்ற சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லாக வழக்காறு அமைந்துள்ளது. வழக்காறு என்பது மக்கள் வாழும் பகுதிகளில் பரவலாக வழங்கி வரக்கூடிய பண்பாடு, பழக்கவழக்கங்கள், பண்பாட்டு எச்சங்கள், நடைமுறை வாழ்வியல் அமைப்புகள், தெய்வங்கள், பழமொழிகள், விடுகதைகள், வழக்கத்திலுள்ள நம்பிக்கைகள்,

சடங்குகள், விளையாட்டுக்கள், ஆகியவை அடங்குவதே வழக்காறு ஆகும். இவ்வழக்குகள் அனைத்தும் வாய்மொழியாகப் பரப்பபடுவன, மரபுவழிப்பட்டன, எழுத்தின்றிக் பரம்பரையாகச் சொல்லப்படுவன. வழக்காறு ஆகும். நாட்டார் வழக்காறுகள் இன்றளவும் வாய் வழியாகப் பல தலைமுறைகள் நம் முன்னோர்களால் வாழ்ந்தவவன்னம் இருக்கின்றன. எனவே வாய்மொழியாக பரப்பபட்டு இன்றளவும் நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் வழக்காறுகளே நட்டார் வழக்காறுகள் ஆகும். இதில் உள்ள நாட்டார் வழக்காறுகள் சோழ நாட்டில் வாழ்ந்த மக்களிடையே எவ்வாறு காணப்படுகின்றன. என்பதை பின் வருமாறு விளக்கம் அளிக்கப்படுகின்றன.

சோழ நாட்டு மக்களின் வழக்காறுகள்

சோழப் பேரரசு தென் இந்தியாவின் பெரும் பகுதியைக் கொண்டு இருந்தது. மேலும் சோழர்களுடைய காலக்கட்டத்தில் தெலுங்கு, கன்னடம், கேரளம், போன்ற மாநிலங்களும் இவர்களுடைய ஆட்சி பகுதிக்கு உட்பட்டதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஒரு நாட்டின் சமூதாய அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவது என்பது இயல்பு. குறிப்பாக சொல்ல வேண்டுமெனில் அந்நாட்டு சமுதாய அமைப்பியல் என்பது அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, அவர்களுடைய வாழ்க்கையில் படிப்படியாக ஏற்படக்கூடிய பண்பாட்டு மாற்றங்கள், வழக்காறுகள், ஆகியவற்றைக் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. இதனை ஒப்பு நோக்குகின்ற வகையில் சோழப் பேரரசர் காலத்திய சமுதாயமும் விளங்குகின்றன.

சமூகப் பரிவுகளைப் பொறுத்த வரையில் சோழ பேரரசர் கால சமூதாய அமைப்புகளில் பல ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. உயர்ந்தவர், தாழ்ந்தவர், என்ற வேறுபாடு இவர்களுடைய காலக்கட்டத்தில் காணப்பட்டது.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாக சிறந்த பண்பாட்டு நிலையில் அமைந்து இருந்த தமிழ் சமூதாய அமைப்பு இவர்களுடைய சமுதாய வேற்றுமை, மற்றும் சாதிகளின் பிறப்பு அடிப்படையில் சீர்க்குலையத் தொடங்கியது. என்று சொன்னால் மிகையாகாது. ஆனால் அன்றைய சமூதாயமானது. தமக்கென சில நெறிமுறைகளையும், மரபுகளையும், பல பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் கொண்ட ஒரு கூட்டமைப்பாக விளங்கின.

சோழநாட்டு மக்களின் வழக்காறுகளாக அவர்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், பொழுதுப்போக்குகள், நம்பிக்கைகள், வழிபாட்டு தெய்வங்கள்,

சோழநாட்டு மக்களின் உணவு முறைகள், மக்களின் தொழில், போன்றவைகளில் சோழ நாட்டு மக்களின் வழக்காறுகளாக,

சோழ நாட்டு மக்களின் வாழ்க்கை முறை பல சடங்குகள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இதில் திருமணச்சடங்கு மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. சோழர் காலத்தில் வாழ்ந்த மக்கள் திருமணத்தின் போது மணமகளுக்குப் பொன்னும் பொருளும் மணமகன் வீட்டில் இருந்து அளிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஆகவே இவ்வாறு அளிக்கப்படும் பரிசமானது ‘‘வதுவை முலைவிலை’’ என்று அழைக்கப்படுகிறது.[7]

இவ்வாறு பொண்ணுக்குத் திருமணத்தின் போது சீதனமாகப் பொன்னும் நிலமும் அளிக்கும் வழக்கம் இருந்து உள்ளது. இதற்குச் சான்று பகர்கின்ற வகையில் கீழ்க்காணும் வரிகள் அமைந்து உள்ளன.

திருமணத்தின் போது பொண்ணுக்கு (பெண் வழிச் செல்வம்) சீதனமாக அவளது தந்தையால் அளிக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர்.[8]

சோழ நாட்டில் அக்காலத்தில் உடன்கட்டை என்பது ஒரு பெரும் வழக்காக இருந்தது. அவ்வழக்கானது சோழர் காலத்தில் தான் பின்பற்றப்பட்டு வருகின்றது. என்பதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகளால் அறிய முடிகிறது. இதனை ஒப்பு நோக்கும் வகையில்,

முதலாம் பராந்தகன் காலத்தில் வீர சோழ இளங்கோவன் என்ற கொடும்பாளூர்க் குறுநில மன்னனின் மனைவியான கங்க மாதவியார் என்பவள் தீப்பாய்ந்து உயீர் நீத்த செய்தியை அல்லூர்க் கல்வெட்டு கூறுகிறது.[9]

சோழ நாட்டில் வாழ்ந்த மக்கள் ஆடைகள் ஆண் மக்கள் முழங்கால் வரை ஆடை அணிந்து கொள்வார்கள். துலையில் தலைப்பாகை அணிந்துக்கொண்டு இடுப்பில் சிறிய துண்டினைக் கச்சமாக கட்டுவது வழக்கமாக அக்கால சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே இருந்தது. பொதுவாக மேலாடை அணியும் வழக்கம் சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே ஆண் மக்களிடம் இல்லை. சோழ நாட்டில் வாழந்த பெண்கள் கொய்சுகம் அதாவது வைத்து சேலை அணிந்து இருந்தனர். சோழ நாட்டு மக்கள் அணிந்து இருந்த ஆடைகளைப் பல பெயர்கள் இட்டு அழைக்கின்றனர். அவையாவன பைந்துகில், பொலன்கலை, வான்தூசு, பொன்றாத பட்டு, என மரகதத்திற் கட்டுங்கரை, பட்டுதுகில் என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளது. மகளிர் மேலாடையாக மேகலை அணிந்து இருக்கின்றனர். மகளிர் அணிந்த மேகலை பஞ்சினாலும், பட்டினாலும், அமைந்து மணிகள் கோர்க்கப்பட்டவையாக அமைந்துள்ளது. பெண்கள் அணியும் மேகலை வீரசீகை,

கலாபம், பொன்கலை, நித்திலக்கோவை, காஞ்சி, என்ற பல பெயர்கள் வைத்து அழைக்கப்படுகிறது.

சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே நெய்தல் தொழில் சிறப்புற்றுக் காணப்படுகிறது. அவர்கள் ஆடைகளுக்கு வண்ணம் இடும் தொழிலில் சிறப்புற்று காணப்படுகின்றனர். அக்காலத்தில் நெய்தல் தொழில் நிகரில்லாத தொழிலாக விளங்கியுள்ளது. நெய்தல்தொழில் செய்யும் மக்கள் பருத்தியிலும் பட்டிலும் ஆடைகளை நெய்து தந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

சோழநாட்டு மக்களின் பழக்கவழக்கமாக மரபு ரீதியான பழக்கவழக்கங்களை பின்பற்றிக் கொண்டு வருகின்றனர். சமுதாய நெறிமுறைகளில் சமுதாய ஒப்புதலின் அடிப்படையில் உருவான பழக்கங்களை ஒவ்வொரு மரபினரும் நெறிமுறைப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். சோழர் காலத்தில் வாழ்ந்த மக்கள் பல வகையான மரபு ரீதியான பழக்க வழக்கங்களைப் பின்பற்றிக் கொண்டு வந்திருக்கின்றனர். குழந்தைகள் பிறந்ததும் அக்குழவிக்கு மண்பொட்டு வைத்து நீராட்டிய பிறகு மருந்து ஊற்றினர். அதன் பிறகு நாளும் நேரத்தையும், வைத்துக் கொண்டு ஜோதிடர் முலம் கணித்தனர். குழந்தை பிறந்து பன்னிரண்டாம் நாள் அக்குழந்தைக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். குழந்தையை திண்ணைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்த நாளினைப் பெரிய விழவாகக் கொண்டாடப்படுகின்றன. அக்காலத்தில் வாழந்த மக்கள் குழந்தைக்குத் தங்க காப்பு, அணிவித்தல் அரைஞாண் அணிவிப்பதும், ஐம்படைத் தாலி போரில் வென்ற பெண்ணுக்கு அணிவிப்பது வழக்கமாக இருந்தது.[10]

சோழர் காலத்தில் வாழ்ந்த மக்கள் பன்னிரண்டு வயது நிறைந்தவுடன் பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது வழக்கமாக உள்ளது. திருமணத்திறகென நல்ல நாள் பார்க்கும் பழக்கம் இருந்தது. மணமகளுக்குத் தாலி அணிவிக்கும் மரபு பின்பற்றகப்பட்டு வருகிறது. இன்றும் மரபை மாற்றாமல் பழமையான சடங்கினை முன்னோர்கள் இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றனர். சோழர் காலத்தில் சமுதாயத்தின் தொடக்க நிலையில் திருமணத்தின் போது வரதட்சணை வற்புறுத்தி வாங்கும் வழக்கம் பெருகி வந்து இருக்கின்றன. ஆனால் இன்றைய சோழ வளநாட்டில் இன்றையக் காலக்கட்டத்தில் சாதி மறுப்பு திருமணங்கள் ஆதரிக்கப்படுகின்றன. கைம்பெண்களுக்கு மதிப்பு கொடுத்து அவர்கள் வாழ்வில் மேம்பாடு அடைய வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சோழ நாட்டு மக்களின் முதன்மையான உணவாக அரிசி விளங்குகிறது. அவர்கள் நெல்லை விளைவித்தனர். அரிசி சோற்றினை வல்சி எனவும் வழங்கப்பெற்றனர். இவர்கள் பால், தயிர் வெண்ணெய், நெய், போன்றவைகளை சோழ நாட்டு மக்கள் உணவாகப் பயன்படுத்தினர். சோழ நாட்டில் வாழ்ந்த ஏழை

மக்கள் அரிசி கஞ்சினையும் குடித்து வந்தனர். இவர்கள் உணவாக வரகு, தினை, கிழங்கு, தேன், ஆடு, கோழி, புலால் உணவு, மீன் ஆகியவற்றைக் உணவாகக் உட்கொண்டு வாழ்ந்து வந்தனர்.[11]

சோழர்களின் விருந்து உபசரிப்பு முறைகளாக இக்காலத்து மக்கள் அவர்களின் வீட்டிற்கு வரும் சுற்றத்தார்களிடம் அன்பு செலுத்தி அவர்களின் தேவை நிறைவேறும் அளவிற்கு விருந்து படைத்தனர். அவர்களுக்குக் கிடைத்த பொருள்களை அனைவருக்கும் கொடுத்து பகுத்து உண்டனர். முக்கள் வறுமை நிலையினை அடையாதவாறு செல்வச் செழிப்பை அடிப்படையாகக் கொண்டு இன்முகத்தோடு உணவு படைத்தனர். இதற்குச் சான்று பகரும் வகையில் திருவள்ளுவர்,

“விருந்து புறத்தாத தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற றண்டு[12]

இந்த குறளின் மூலம் அறிய முடிகிறது.

சோழ நாட்டில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களை எரிப்பதும், புதைப்பதும் வழக்கமாகக் கொண்டு இருந்தனர். இறந்தவர்களுக்கு திதி கொடுக்கும் வழக்கம் சோழநாட்டு மக்களிடையே காணப்படுகிறது. இறந்தவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வழக்கம் சோழ நாட்டில் இன்றும் நிலவி வருகிறது. இறந்தவர்களின் புகைப்படத்திற்கு முன்பு விரும்பிய உணவைப் படைக்கின்றனர். இந்நாட்டு மக்கள் இறந்தவர்களுக்குக் கோவில் சமாதி, நடுகல், போன்றவைகளைக் கட்டி வைத்தும் வழிபாடு செய்கின்றனர்.

சோழநாட்டு மக்கள் கிராமியக் கலைகளைக் கண்டு களிப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். கோவில் திருவிழாக்களிலும் தெருக்கூத்துகளைக் கண்டு களித்து இரசித்தனர். கிராமத்து திண்ணைகளில் நடைபெறும் விளையாட்டு நிகழச்சிகளையும் கண்டு களித்து இன்புற்றனர். ஏறுதழுவுதல், உறி அடித்தல், பொங்கல் விழா, போன்ற இன்னும் பற்பல நிகழ்வுகளையும் பொழுதுபோக்கு நிகழ்வுகளாகக் கொண்டு இன்புற்று வாழ்திருந்தனர்.

இந்நாட்டு மக்களின் தெய்வ வழிபாடாக கொற்றவை வழிபாடு, முருகன் வழிபாடு, ஐயனார் வழிபாடு, காத்தவராயன் வழிபாடு சோழநாட்து மக்களிடையே காணப்பட்டு இருக்கிறது. கலிங்கத்துப்பரணியில் போர் காலங்களில் கலிங்க மன்னன் போருக்குச் செல்லும் முன் கொற்றவை தெய்வத்தை வழிபட்டு பின் போருக்குச் செல்வது வழக்கமாக இருந்திருக்கிறது. இந்நாட்டு மக்கள் வழிபடும் தெய்வங்களுக்கு ஆடு, சேவல், புலால் உணவு, ஆகியவற்றைப் படைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர்.

இன்றும் நாட்டுப்புற மக்களிடையே நாட்டுப்புற தெய்வங்களுக்குப் பலியிடுதல், இறைச்சி படைத்தல், போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சோழநாட்டு மக்களிடையே பல வகையான நம்பிக்கைகள் காணப்பட்டு வந்திருக்கின்றன. நல்லநேரம் பார்த்தல், கண்ணேறு கழித்தல், கனவில் நம்பிக்கை, நோன்பு வைத்தல், ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டு இருந்திருந்தனர். கனவில் காணும் நிகழ்ச்சிகள் பலிக்கும் எனவும் நம்பினர். நல்லன விளையவும் தீயன விலகவும் மக்கள் நோன்புகளை மேற்கொண்டனர். எனவே சோழ நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினைப் பின்பற்றி இன்று உள்ள மக்களும் வாழ்ந்து வருகின்றனர். என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.[13]

நாட்டுப்புறவியல் விளக்கம்

நாட்டுப்புறவியல் பண்பாட்டியல் என்பது கிராம மக்களின் அனுபவத்தின் பொக்கிஷமாக காணப்படுகிறது. மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தைப் பிணைத்துப் வைக்கின்றது. கிராமத்தில் வாழும் மக்களின் தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றன. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதி பலிக்கிறது.

நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும், பற்றி அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புறவியல் ஆகும். நாட்டுப்புறம் என்பது கற்காத கிராமியப் பகுதிகளையே குறிக்கும். நாட்டுப்புறத்தில் வாழும் மக்களைத் தான் நாட்டுப்புறத்தான், பட்டிக்காட்டான், பாமரன், ஊர்மகன், எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் நாட்டுப்புறவியலை folklore என்று அழைக்கின்றனர். இந்த ஆங்கிலச் சொல்லை 1846-ல் வில்லியம் தாமஸ் என்பவர் முதன் முதலில் பயன்படுத்தயினார். இச்சொல்லை பாப்புலர் ஆன்டிகுட்டிஸ் அல்லது பாப்புலர் லிட்ரேச்சர், என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த சொற்களில் நாட்டுப்புறவியலுக்கு முழுமையான பொருள் விளக்கம் இல்லை. எனவே தான் இந்த சொற்கள் கைவிடப்பட்டு folklore என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நாட்டுப்புறவியலைப் பற்றி அறிஞர் வில்லியம் ஆர் பாஸ்கம் என்பவர் கூறுவதாவது, மானிடவியல் முறையில் நாட்டுப்புறவியல் என்ற வார்த்தைக்கும் புராணக்கதைகள், கட்டுக்கதைகள், நாட்டுப்புறக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், கலைகள் பாற்பட்ட கணக்கற்ற கூறுகள், பற்றிய அறிவு என்று பொருள் கொள்ளலாம். இவை பேச்சு வழக்கில் அமைந்திருக்கும். இலக்கியத்தைப்போல நாட்டுபுற இயலும் கரல வடிவம் கொண்டுள்ளது. இது

இசையோடும், ஆடலோடும், ஓவியத்தோடும், கைத்தொழில் பொருட்களோடும் தொடர்புடையது. ஆனால், வெளிப்படுத்தும் வழிமுறை வேறுப்பட்டிருக்கும் என்று பாஸ்கம் கூறுவதாக கூறப்பட்டுள்ளது.[14]

எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டுப்புற மக்கள் தமது பாடல்களில் தம்மை நாட்டுப்புறம் என்று அழைத்துக் கொள்வது கருதத்தக்கது. ஒரு பரிகாசப் பாட்டில் கொழுந்தியாள் மாப்பிள்ளையைக் கேலி பண்ணும் போது

"அக்காளைக் கட்டிக்கிட்டு
வற்றாத சீர் பெற்றார்
நாகரீகம் அவருக்கில்லை
நாட்டுப்புற வழக்கத்திலே"[15]

என்ற நாட்டுப்புறம் பற்றிக் அழகாக இப்பாடல் விளக்குகிறது. எனவே நகரத்தில் வாழ்பவருக்கும் நாட்டுப்புறத்தீல் வாழ்பவருக்கும் உள்ள வேறுபாட்டையும் இப்பாடல் விளக்கி கூறுகிறது.

நாட்டுப்புற வழிபாடுகள்

"கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லாத் தெய்வ வணக்கமும் எண்ணையே அடைகிறது" என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளைக் கூட எண்ணிவிடலாம். ஆனால் தெய்வங்களையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதினும் அரிது.

நாம் தெய்வத்திற்கு வணக்கம் வைப்பதற்குக் காரணம் அச்சமும், அன்பும், தான் ஆகும். ஆதிக்காலத்தில் மனிதன் இயற்கையில் காணும் தீ, குடி, பெருமழை, பூகம்பம், போன்ற அச்சம் தரும் நிகழ்ச்சிகளுக்கும், நோய்களுக்கும் காரணம் உலகில் உலவும் ஆவிகளே காரணம் என்று நம்பியிருந்தனர். இந்த ஆவிகளின் சீற்றத்தை தணிக்க மனிதன் மரம், செடி, இடி, தீ, பெருமழை, பூகம்பம் ஆகியவற்றைக் கொண்டு வழிபட்டனர்.[16]

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி ஆனால் இன்று கோவில் இல்லாத ஊர்களும் இல்லை. இது மட்டுமில்லாமல் மக்கள் குடி இல்லாத ஊர்களில் கூட கோவில்கள் இருக்கின்றன. மண்ணில் பிறக்கும் மனிதன் தனக்கு வரும் துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும், இன்பமாக வாழவும் பல செயல்களை செய்கிறான். அச்செயல் எத்தகையதாக இருந்தாலும் அது அவனது வாழ்க்கை மேம்பாட்டிற்காக அதனைச் செய்ய முற்படுகிறான். இந்த வகையில் தன்னைக் காத்துக் கொள்வதற்காகச் சுற்றியுள்ள மரங்களையும், செடி,

கொடிகளையும், மண்ணையும், விண்ணையும், மலையையும், கடலையும், வணங்குகிறான். இவ்வாறு மனிதன் இயற்கையை வணங்கும்போது அவற்றால் அவன் பயன்பெற்று இருந்தால் அதனைப் போற்றி அதற்கு மரியாதை செய்கிறான். அத்தகைய போற்றுதலே வழிபாடாக மாறி இருக்கிறது. இப்படி தான் வழிபாடு மனிதனிடம் தோன்றி இருக்க முடியும்.[17]

இந்த வகையில் நாட்டுப்புற வழிபாடானது. தெய்வமாக இருந்தாலும், முன்னோா் வழிபாடாக இருந்தாலும், இயற்கை வழிபாடாக இருந்தாலும் நாட்டுப்புற மக்கள் அவற்றை வழிபடும் முறையானது அவா்களின் அவா்களின் விருப்பத்திற்கேற்ப அமைகின்றது. நாட்டுப்புற வழிபாடு இந்த முறையில் தான் வழிபாடு செய்ய வேண்டும் என்ற கட்டுபாடு எதுவும் கிடையாது. ஆனால் வழிபாடு திருவிழா நடைபெறும் போது சில செயல்கள் தொடா்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற வழிபாடு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டும். என்ற நிலை எதும் இல்லை. ஆனால் வழிபாடு திருவிழா நடைபெறும் போது சில செயல்கள் தொடா்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுபுற வழிபாடு குறிப்பிட்ட முறைகளில் நடைபெற வேண்டும். என்ற நிலை எதுவும் இல்லை. விருப்பப்பட்டால் எந்த நாளாக இருந்தாலும் எவா் வேண்டுமாணாலும் சென்று பூஜைகள் செய்யலாம். சில நேரங்களில் அவரவா் வீட்டு விசேஷ தினங்களில் பொங்கள் வைத்து பூ வைத்து மஞ்சல் குங்குமம் வைத்து கற்பூரம் ஏற்றி வழிபாடு செய்கின்றனா்.

நாட்டுப்புற வழிப்பாட்டிற்கு என்று யாரும் நியமிக்கப்படுவதில்லை. யாா் வேண்டுமானாலும் வழிபாடு செய்யலாம். பெரும்பாலும் நாட்டுப்புற தெய்வங்களுக்கு சிலைகள் இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் அது முறையான வடிவம் கொண்டதாக இருக்காது. நாட்டுப்புற தெய்வங்களுக்கு நாட்டுப்புற மக்கள் காணிக்கையாக இரத்தம், மாமிசம், கள், போன்றவற்றையே படைக்கப்படுகின்றனா். பலியிடுதலும் பொங்கி படைத்தலும் நாட்டுப்புற வழிப்பாட்டின் சிறப்பியல்பாக அமைந்துள்ளது. துன்பம் வருகிற பொழுது வேண்டிக் கொள்வா். அதே நேரத்தில் அந்த வேண்டுதல் நிறைவேறியதும் நோ்த்திக்கடனாக வேப்பிலை, பாவாடை அணிதல், மொட்டையடித்தல், குதிரை போன்ற சிலைகள் செய்து வைத்தல் போன்றவற்றை நாட்டுப்புற மக்கள் செய்கின்றனா். நாட்டுப்புறத்தில் இருக்கும் கோவில்களுக்கென தனியான பூசாரியும் இல்லை. இவ்வழிபாட்டில் அருள் வந்தோா் சாமியாடி ஆசி வழங்குவதும், கடந்த காலம், எதிா்காலம், பற்றி அவா்கள் கூறுவதும் உண்டு. எனவே நாட்டுப்புற வழிபாடு என்பது எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி தங்களிடம் கிடைக்கின்ற பொருட்களைப் படைத்து, தங்களையும் வணங்கும் தெய்வத்தையும், திருப்தி படுத்தி கொள்ளும் நிலையிலேயே அமைகின்றது. நாட்டுப்புற வழிபாட்டில் சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என இரண்டாக காணப்படுகின்றன. இதில் சிறு தெய்வ வழிபாடு இவ்ஆய்வுக்கு எடுத்துக்

கொள்ளப்பட்டு இவ்வழிபாட்டில் மக்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், போன்றவை எவ்வாறு இருக்கின்றன. என்பதை விரிவாகக் காணலாம்.

சிறுதெய்வ வழிபாடு

தனக்கு உதவி செய்த, உதவி செய்யும் இயற்கை, மனிதர்கள், முன்னோர், கண்ணிற்கு புலப்படாத சக்தி, முதலானவையையே நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங்களாக வழிபடுகின்றனர். இதனையே சிறுதெய்வங்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிறுதெய்வ வழிபாடு என்பது பழமை வாய்ந்த மரபு ரீதியாக நம் முன்னோர்கள் வழிவழியாக வணங்கப்பட்டு வரும் தெய்வங்களைத் தான் ‘‘சிறுதெய்வங்கள்’’ என்றும் அழைக்கப்படுகின்றனர். சிறுதெய்வ வழிபாடு என்பது சமூகத்தில் அனைத்துப் பிரிவினரிடமும் காணப்படுகிறது. பொதுவாக பிராமணர் அல்லாத அனைத்துச் சமயத்தினரிடமும் சிறுதெய்வ வழிபாடு காணப்படுகிறது.[18]

சிறு தெய்வ கோவில்கள் பெரும்பாலும் அளவில் சிறியதாகவேக் காணப்படுகிறது. பெரும்பாலும் மரம், செடி, கொடி, புதருகளையுமே, சிறு தெய்வமாகக் கருதி வழிபாடு நடைப்பெறுகிறது. சிறுதெய்வங்களில் பெண் தெய்வங்கள் வடக்கு நோக்கிய முகத்தினை வைத்துக் கொண்டும், ஆண் தெய்வங்கள் கிழக்கு நோக்கிய முகத்தினைக் கொண்டும் காணப்படுகிறது. சிறுதெய்வங்களின் பெயர்கள் பெரும்பாலும் பெருந்தெய்வங்களின் பெயர்களிலிருந்து தெளிவாகவே வேறுபட்டுக் காணப்படுவதை நம்மால் அறிய முடிகிறது. சிறுதெய்வ வழிப்பாட்டில் ஆண் தெய்வங்களின் பெயர்கள் அய்யன், அப்பன், அடியன், சாமி, முதலிய பொதுவான பெயர்களைக் கொண்டே அதிக அளவில் காணப்படுகின்றன. அதாவஹுத கருப்பையா, இருளப்பன், பனையடியான், கருப்பசாமீ, போன்றவையாகும். பெண் தெய்வங்கள் அம்மன், நாச்சி, போன்ற பொதுவான பெயர்களைக் கொண்டே காணப்படுகிறது. அதாவது முத்தாளம்மன், கௌரியம்மன், பெரியநாச்சி, போன்றவை ஆகும்.

சிறுதெய்வங்கள் பொதுவாக ஊர் எல்லை, குளக்கரை, கண்மாய், வயற்புறம், நெடுஞ்சாலை ஒரம், ஆகிய இடங்களில் அமைந்து காணப்படுகின்றன. இந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்களாக காணப்படுகிறது. சிறுதெய்வங்கள் எதுவாக இருந்தாலும் ஆயுதங்களை ஏந்தி இருப்பது சிறுதெய்வங்களுக்கே உரிய பண்பாகும். சிறுதெய்வ வழிப்பாட்டில் பிராமணர் அல்லாத பூசாரிகளே காணப்படுகின்றனர். சிறுதெய்வக் கோவில்களில் சாமி ஆடுவோர் ஆண்களாக இருப்பின் அவர்கள் வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டும் பெண்களாக இருப்பின் தலை காணப்படுகிறது. சிறுதெய்வ வழிபாட்டில் இரத்தப்பலி கொடுத்தல்

நடைபெறுகிறது. அய்யனார் போன்ற இரத்தப் பலி பெறாத தெய்வங்கள் அக்கோவிலில் இருந்தால் அதனைத் திரையிட்டு மறைத்து விடுகின்றனர். இப்படிப்பட்ட இரத்தப் பலி பெறாத தெய்வங்களை நாட்டுப்புற வழக்கு மரபில் "சுத்தமுக தெய்வம்" என்று கூறுவர்.[19]

சிறுதெய்வங்களுக்கு நேர்த்தி கடன் செலுத்தும் வகையில் மக்கள் நெல் முதலிய தானியங்கள் தரப்படுகின்றன. பின்னர் அங்குள்ள கோவில்களுக்கு நேர்த்தி கடனாக ஆயுதங்களை வாங்கி வைத்து நேர்த்தி கடன் செலுத்துகின்றனர். எனவே சிறுதெய்வ வழிப்பாடு மக்களால் எவ்வாறு வழிபட்டனர் என்பது இதன் மூலம் தெளிவாக விளங்குகிறது. அடுத்ததாக நாட்டுப்புற தெய்வங்கள் பற்றியும் சோழ நாட்டுப்புற தெய்வங்கள் பற்றியும் பார்ப்போம்.

நாட்டுப்புற தெய்வங்கள்

தனக்கு உதவி செய்த, உதவி செய்யும் இயற்கை, மனிதர்கள், முன்னோர்கள், கண்ணிற்குப் புலப்படாத சக்தி, முதவலானவையே நாட்டுப்புற தெய்வங்களாக அமைகின்றன. நாட்டுப்புற தெய்வங்களாக ஊர் தெய்வம், குலதெய்வம், முன்னோர் வழிபாடு, சாதி தெய்வ வழிபாடு, எல்லைதெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, போன்ற பல பிரிவுகளாக நாட்டுப்புற மக்களிடையே வழிபாடு பின்பற்றப்பட்டு வருகிறது. நூட்டுப்புற தெய்வங்களாக அங்களம்மன், மாரியம்மன், ஏகௌரியம்மன், விளக்கேற்றியம்மன், நாடியம்மன், காத்தாயி அம்மன், ஆகாய அய்யனார், வீரன், மலையேறியம்மன், கோடியம்மன், அய்யனார், அங்காள பரமெஸ்வரி அம்மன், போன்ற இன்னும் 2500க்கும் மேற்பட்ட நாட்டுப்புற தெய்வங்கள் காணப்படுகின்றன. சோழநாட்டுப்புற தெய்வங்கள் பற்றிய விளக்கம் பின் வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

சோழ நாட்டுப்புற தெய்வங்கள்

விளக்கேற்றியம்மன்

அருள் மிகு விளக்கச்சி அம்மன் என்றழைக்கப்படும் விளக்கேற்றி அம்மன் சோழ மன்னர்களின் ஆட்சி காலம் முதலாக இன்று வரையிலும் சோழ நாட்டு மக்கள் நாளும் வழிப்பட்டு வருகின்றனர். இக்கோவில் இராஜ மன்னார்குடிக்கு செல்லும் வழியில் குந்தலை வளநாட்டின் சாலையில் தென்புறமாக வடக்கு நோக்கிய பார்வையில் அமைந்து இருக்கிறது. இத்திருக்கோவில் குந்தவை நாட்டின் தாய் கிராமமான பனையக்கோட்டையின் வடபுறத்தில் வளமான குளங்களுக்கு எதிர் புறத்தில் பெரிய நிலப்பரப்பிற்கு நடுவில் பத்து கரைக்காரர்களும் பத்து கீராம

மக்களும் நாடி வருகின்ற பக்தர்களுக்கும் விளக்கேற்றி வைக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்கி வருகின்றது.

இச்சிறப்பு வாய்ந்த விளக்கேற்றி அம்மன் குந்தவை வளநாட்டின் தாய் தெய்வமாகும். இந்நாட்டை குழந்தை வளநாடு எனவும் வழங்கப்படுகிறது. அங்குள்ள விளக்கேற்றி அம்மனுக்கு சிறப்பாக மிகுந்த நம்பிக்கையுடன் நாள்வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு, ஆண்டு வழிபாடு, சிறப்பு வழிபாடு, நாட்டு வழீபாடு, என்று வழிபாடு செய்யப்பட்டு, திருவிழாக்கள் எடுத்து வருகின்றனர்.[20]

வீட்டில் விளக்கேற்றுதல்

விளக்கேற்றியம்மனை நம்பிக்கையோடு வழிப்பட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று அங்கு வாழும் மக்கள் நம்புகின்றனர். அது மட்டும் இல்லாமல் தங்களின் வம்சம் தழைக்க வேண்டும் என்று விளக்கேற்றி அம்மனை மனதில் நினைத்துக் கொண்டு வீட்டில் விளக்கேற்றி அம்மனை வழிபடுகின்றனர். குந்தவை வளநாட்டு மக்கள்.

நாட்டிற்கு விளக்கேற்றுதல

சோழ நாட்டு மக்கள் வேண்டும் காலத்தில் மழை அளிக்கக்கூடிய குந்தவை நாட்டு மக்களட விளக்கேற்றி அம்மனைப் போற்றி வருகின்றனர்.மெழை இல்லாமல் வறட்சியாக இருக்கும் காலத்தில் மக்களுக்கும், கால்நடைகளுக்கும், துன்பம் ஏற்படுகிற காலத்தில் சோழ நாட்டு மககள் கலந்து பேசி சிறிய அளவிலான தீிருவிழா நடத்தலாம் என்று அந்நாட்டு மக்கள் முடிவு செய்து விளக்கேற்றி அம்மனின் தேர்ச்சட்டத்தினை எடுத்து வெளியில் போட்டால. மழை வரும் என்பது அந்நாட்டு மக்களிடம் இன்றளவும் இருந்து வரும் நம்பிக்கையாகும்.[21]

தொன்மை

விளக்கேற்றி அம்மனின் வழிப்பாட்டு தொடக்கத்தை அறுதியிட்டுக் கூற முடியாது. அவ்வாறு சொல்ல இயலாத நிலையில் சோழர்கள் ஆட்சி நலன் கருதி பிரிக்கப்பட்ட நாடுகளில் இந்த குந்தவை வளநாடும் ஒன்றாகும். குந்தவை என்பது அரசியின் பெயர் என்பதால் இவ்வள நாட்டின் பெயரைக் குந்தவை என அழைக்காமல் குழந்தை வளநாடு என்றே மக்கள் அழைத்து வருகின்றனர். சோழ மன்னர்கள் வழிபாட்டில் இந்த அம்மன் இருந்ததற்கான சிறப்பு மன்னர்கள் செல்லும் இராச பாதையில் அமைந்திருக்கின்றது.

விளக்கேற்றி அம்மனுக்கு வழிபாடு செய்து தீருநீறு வழங்கும் போது அங்குள்ள பூசாரி முதலில் அரண்மணையில் யாரேனும் வந்திருக்ககிறீர்களா? எனறு

கேட்ட பிறகு தான் தஞ்சாவூரில் இருந்து யாராவது வந்து இருந்தால் முதலில் அவர்களுக்குத் திருநீறு வழங்கி அதன் பிறகு மரபு படி கரைக்காரர்களை அழைத்து அவர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுகிறது. அவ்வாறு நடைபெறுவதைக் காணும் போது விளக்கேற்றி அம்மனின் தொன்மையும் மரபும் காப்பாற்றப்பட்டு வருகிற மாண்பும் வெளிப்படுகிறது[22]

விளக்கேற்றி அம்மன் உடன் இருக்குத் தெய்வங்கள்

விளக்கேற்றி அம்மன் உடன் பிறப்பாக உடன் இருக்கும் தெய்வங்கள் மகா காளியம்மன், அழகாளியம்மன், சூலப்பிடாரியம்மன், முதலான தெய்வங்களும், சூரப்பன் வீரன் முதலான ஏவல் காவல் தெயவங்களும் குந்தவை வளநாட்டு மக்களுக்கு காட்சி அளித்து அருள் பாலிக்கின்றனர்.

பந்தக்காட்சி திருவிழா

ஆரம்பக் காலத்தில் தீப்பந்தங்களைக் கொண்டு அதன் ஒளியினால் தேர் திருவிழா நடத்தியமையால் அத்திருவிழாவிற்கு பந்தக்காட்சி திருவிழா எனப் பெயர் ஏற்பட்டது. மக்கள் அனைவரும் ஒன்று கூடி திரவிழா நடத்த முடிவு செய்தவுடன் முதலில் அம்மனுக்கு பூப்போடுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பூப்போடுதல

முதல் நிகழ்ச்சியாக சாமியின் கழுத்தில் மாலைப்போடுதல் நிகழ்ச்சி நடைப்பெறும். இதனையே பூப்போடுதல் என்று அழைக்கப்படுகின்றனர். அவ்வூரில் இருக்கும் முத்து மாரியம்மனுக்கும், முக்கறை மாரியம்மனுக்கும் மாலை போட்ட பின்னர் முதன்மை தெய்வமாக இருக்கும் விளக்கச்சி அம்மனுக்கு பூப்போடுகின்றனர். ஒரே நாளில் முன்று தெய்வங்களுக்கும் பூப்போடுதல் நிகழ்ச்சி திங்கள் கிழமை அன்று நடைபெறுகிறது.[23]

காப்பு கட்டுதல்

பூப்போட்ட எட்டாம் நாள் திங்கள் கிழமை காப்புக் கட்டுதல் நடைபெறுகிறது. அவ்வூரில் இருக்கும் பத்துக் கரைக்காரர்களும் மரபு வழியாக பறையர் இனத்தை சேர்ந்தவர்கள் காப்பு காரர்களாக பத்துப்பேர் கோவிலுக்கு வந்து காப்பு கட்டிக் கொள்கின்றனர். அவர்களுக்கு துணையாக இளங்காப்புகாரர்களாக பத்து பேரும் மொத்தம் இருபது பேரும் கோவிலுக்கு எதிரே உள்ள தாமரைக் குளத்தில் குளித்துவிட்டு நெற்றியில் பட்டைப் போட்டுக் கொண்டு கோவிலுக்கு முன்னா வரிசையாக நிற்க கோவில் பூசாரி முதலில் அம்மன் கையில் வெள்ளிக் காப்பை அணிவிப்பார். பின்னா பூசாரி கையில் காப்புக் கட்டப்படும். ஆதன் பிறகு

காப்புகாரர்களுக்கும் இளற்காப்புகாரர்களுக்கும் நூலால் காப்புக் கட்டப்படும். இறுதியாக பறை, மேளம், கொம்பு, அவைகளுக்கும் காப்புக் கட்டப்படுகிறது. விளக்கேற்றி அம்மன் கோவிலுக்கு காப்பு கட்டும் அதே நேரத்தில் மற்ற கிராமத்துக் கோவில்களில் உள்ள சாமிகளுக்கும் காப்புக் கட்டுதல் நடைபெறுகிறது. காப்புக் கட்டிக்கொண்டவர்கள் வாய் திறந்து பேச மாட்டாகள். அவர்களுக்கு தேவையானவற்றைக் இளங்காப்புக்காரர்கள் கவனித்துக் கொள்வர். இவர்களுக்கு நரு நாளைக்கு இரு வேளை மட்டும் தான் சாப்பாடு. சூப்பாடு போடும் போது மிகவும் பயபக்தியோடு போடுவார்கள். இவர்கள் சாப்பிட்டு வைத்த மீத சாப்பாட்டை இளங்காப்புகாரர்கள் சாப்பிடுவார். காப்புக்கட்டிக்கொண்டவரின் மனைவி வீட்டிலேயே விரதம் மேற்கொண்டிருப்பார். காப்புக்காரர் இரவில் கோவிலின் எதிரிலேயே தங்கி இருக்க வேண்டும். வீட்டிற்குச் செல்லக் கூடாது.[24]

தேர்க்கட்டுதல்

காப்புக் கட்டுதல் முடிந்த பின்னர் அந்தந்த ஊரில் தூக்கும் தேர்கள் கட்டப்பெறும். மூங்கில்களில் ஆனது. ஒவவொரு தேரும் முப்பது அடி உயரத்திற்கு குறையாமல் அங்குள்ள ஆசாரிகளால் கட்டப்படுகிறது. வண்ணன் தேர்களுக்குத் துணி கட்டுகின்றனர். பரியாரி அவற்றன் மீது கண்ணாடி பதித்த துணிகளைக் கட்டுவார். தேரினை தோளில் வைத்து தூக்குவதற்கு ஏற்ப பெரிய நீளமான வாறைகள் வைத்துக் கட்டப்படுகிறது. இடையில் தாங்குவதற்கு ஆயகோல் தயாரிக்கப்படும்.

பந்தக்காட்சி தேர்திருவிழா

விளக்கேற்றி அம்மன் கோவிலுக்குக் காப்பு கட்டிய எட்டாம் நாள் தாய்க்கிராமமான பனையக்கோட்டையில் திருருவிழா நடைபெறும். அங்குள்ள மக்கள் மிகப்பெரிய அளவில் பந்தக்காட்சித் தேர்த்திருவிழா என்று விளம்பரம் செய்யப்படுகிறது. அங்கு வாழும் மக்கள் கிராமங்களில் தேர் வருவதற்கு தடையாக உள்ள மின்சாரக் கம்பிகளை அகற்றுதல், தெருக்களில் வளர்ந்து இருக்கும் மரக்கிளைகளை வெட்டி சரி செய்கின்றனர்.

ஒவ்வொரு வீட்டிற்கும் நிறைய விருந்தினர்கள் வந்திருப்பார்கள். ஊர்களில் புதிதாக நிறைய கடைகள் தோன்றியிருக்கும். அங்குள்ள பத்து கிராமமும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் கொண்டு காணப்படுகிறது. பத்து ஊர்களில் இருந்தும் தேர்கள் சிவன் கோவிலுக்கு வந்துவிடும். சிவன் கோவிலுக்கு வந்து சேர்ந்த பின்னர் திருவிழாத் திடலுக்கு தேரினைக் துக்கிக் கொண்டு வருவார்கள்

திருவிழாத் திடலில் பன்னெடுங்காலமாகத் தேர்கள் வைப்பதற்கென்றே ஒரு வெள்ளைக் கல் வைக்கப்படுகின்றனர். அந்தந்த ஊர் தேர்களின் முன்னால் அவரவர் கொண்டு வந்த கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்துவர். விழாக்குழுவினர் பொய்க்கால் குதிரையாட்டம், பூத ஆட்டம், புலி ஆட்டம், பொம்மலாட்டம், போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றனர். அதன் பிறகு பலவண்ண வான வேடிக்கை நடைபபெறும்.

வானவேடிக்கை முடிந்த பின்னர் அந்தந்த ஊர்க்காரர்கள் அவரவர் தேர்களை ஆராவாரத்தோடு தங்கள் ஊர்களுக்குத் தூக்கிச் செல்வார்கள். அந்தந்த ஊர்க்காரர்களின் தேருக்கு முன்னால் தேங்காய் உடைத்து ஆடு, கோழி, வெட்டுவார்கள். அப்படி செய்யும் போது தெருவில் யார் வீட்டில் முதலில் செய்வது இரண்டாவது யார் செய்வது என மரபு அவர்களிடையே காணப்படுகிறது. அதில் சிறிது மாற்றம் நேர்ந்தாலும் மிகப்பெரியக் கலவரமே நடந்துவிடும். தேரும் அந்த இடத்தை விட்டு நகராது. ஒரு தெருவிலிருந்து அடுத்த தெருவிற்கு தேரினைக் கொடுக்கும் போது அந்த ஊர் எல்லையிலிருந்து கொடுக்க வேண்டும். இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் சந்தித்து, பத்து கிராமத்துக்கும் விளக்குச்சி அம்மன் தன் எல்லையைச் சுற்றச் சென்று பத்து ஊர் மக்களும் வழிபாடு நடத்தி பின்னர் தாய்க் கிராமமான பனையக்கோட்டைக்கு வந்து சேரும்.[25]

பள்ளாடல் நிகழ்ச்சி

விளக்கச்சி அம்மன் தன்னுடைய ஊர் எல்லையை ஒரிடத்தில் அமர்ந்த பின்னர் அதற்கு முன்னால் பள்ளாடல் என்ற கதைப்பாடல் நிகழ்ச்சி நடத்தப்பெறுகிறது. அந்நிகழ்ச்சியானது அந்தக் கோவிலுக்குப் பொட்டுக் கட்டிக் கொண்டவர்கள் தான் இந்த பள்ளாடல் கதைப்பாடல் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இந்நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்கு சோழ நாட்டிலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறது. திருவிழாக்காலங்களில் வந்து பள்ளாடல நிகழ்த்துவார்கள்.26

மதுக்காட்டல்

காப்புக் கட்டியவர்கள் அவர்களின் மனைவியோடு முட்டையிட்டுக் கொண்டு இருக்கும் கோழியைச் சமைத்து அதனை ஒரு பானையில் வைத்தும் அதன் மேல் தமு வகைகளை ஒரு பானையில் வைத்தும் பெண்கள் திறந்த மார்போடு இடுப்பில் மட்டும் துணி கட்டிக்கொண்டு அரண்டு பானைகளையும் தலையில் சுமந்துக் கொண்டு மேளத்தாளத்தோடு தேர்களுக்கு முன்னால் வந்து ஆடல் பாடல் நிகழ்ச்சி நடத்துவார்கள்.[27]

காப்பறுத்தல்

மதுக்காட்டல் நிக்ழச்சிக்குப் பின்னர் சிறிய தேரில் எல்லா சாமிகளையும் வைத்துக் கொண்டு அந்த ஊரின் வடக்கே உள்ள திடலில் அம்மனை வடக்கு முகமாக வைத்துப் அங்கு ஆடு பலியிட்டு அந்த அற்த இரத்தத்தை சோற்றில் ஊற்றி பிசைந்து நினச்சோறு படைத்த பின்னர் விளக்கச்சி அம்மன் கோவில் தேரை வடக்கு முகமாக வைத்து விளக்கச்சி அம்மன் கோவிலுக்கு தூக்கி வந்து பறைசாத்தி பின்னா ஒவ்வொருத்தருக்காக காப்புக்களை அறுப்பர். இவ்வாறு அறுக்கப்பட்ட காப்புகளை கோபுரத்தின் கீழ் திசையில் குழி வெட்டி அதனை புதைத்து விடுவர். இவ்வாறே காப்பறுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பழக்கவழக்கம்

குந்தவை வளநாட்டில் தொடர்ந்து நடைமுறையிலருந்து வரும் பல்வேறு கிராம நிர்வாக நடைமுறை பழக்கவழக்கங்களில் சிறப்பிடம் பெறுவது பொங்கள் மூன்றாம் நாள் விழாவான மாட்டுச்சீட்டு போடும் நிகழ்ச்சி ஆகும். மாட்டுச்சீட்டு போடுதல் தஞ்சாவூர் மாவட்டத்தில் பரவலாக நடைப்பெற்று வந்தாலும் குந்தவை வளநாடு என்னும் பத்து ஊர் கொண்ட கூட்டமைப்பில் சிறப்பாகக் செயல்பட்டு வருகிறது.

மாட்டுச்சீட்டு எழுதும் முறை

முதலில் பனை ஒலையில் எழுத்தாணியைக் கொண்டு எழுதுவார். ஓலை முக்கால் அங்குலம் அகலமும் மூன்றை அங்குளம் நீளமும் இருக்கும். பனை ஒலையின் ஒரத்தில் துளையிடப்பட்டு இருக்கும். தெருவில் இருக்கும் அத்துணை குடும்பத்தார்க்கும் ஓலைச்சீட்டு உண்டு. அந்த ஓலையில் குடும்பத் தலைவர் பெயரே எழுதப்பட்டிருக்கும். ஓலைச்சீட்டுகளில் பெண்களின் பெயர்கள் எழுதமாட்டார்கள். சிறிய குழந்தையாயிருந்தாலும் ஆண்கள் பெயரையே எழுதுவார்கள்.[28]

சிறப்புத்தன்மை

பொங்கல் திருநாளைவிட, முக்கியமான நாளாக, மாட்டுச்சீட்டு போடுதலுக்கு முக்கியத்துவம் தருவர். இந்நாளுக்காக எதிர்பார்த்திருப்பர்கள். இதில் தான் ஓராண்டில் ஏற்பட்டிருக்கும் அனைத்துச் சிக்கல்களும் தீர்வுக் காணப்படும். தெருவின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் அங்கீகாரம் கொடுக்கப்படும். பிரிந்து இருக்கின்றவர்களை இணைத்து வைப்பர். அன்று தான் மனக்குறைகளும் வேறுபாடுகளும் போக்கிக் கொள்ளப்படுகின்றன. மாடுகள் விரதத்தோடு இருப்பதால் தங்களது சிக்கலில்பிடிவாதம் காட்டாமல் அனைவரையும் இதற்கான முடிவுக்கு வரச்

சொல்கிறார்கள். மாட்டுச்சீட்டு நடத்தும்போது முதலில் சீட்டு விழுபவருக்கு முதல் மரியாதை செய்யப்படுகிறது. தெருவில் முதல் மரியாதை என்பது ஏழை பணக்காரன் என்றெல்லாம் பார்க்காமல் பொது நிலையில் வைத்து வழங்கப்படுவது மாட்டுச்சீட்டின் சிறப்பம்சமாகும் இத்தகைய நல்ல செயல்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு மாட்டுச்சீட்டு போடுதல் நிகழ்ச்சி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.[29]

நாடியம்மன் வழிபாடு

நாட்டுப்புற தெய்வ வழிபாடு நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுக்கூறுகளில் ஒன்று. நாட்டுப்புற மக்கள் மரபு வழியாகவே தெய்வங்களுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் திருவிழாக்கள் நடத்தி வருகின்றனர். அதில் சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்றும் பிரித்து வழிபாடுகள் நடத்தி வருகின்றனர். தமிழகத்தில் ஆண் தெய்வங்களை விடப் பெண் தெய்வங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. இத்தெய்வங்களையே நாட்டுப்புற மக்கள் அதிகமாக வழிபட்டு வருகின்றனர். பெண் தெய்வங்களை அம்மன் என்று அழைப்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. பெண் தெய்வமான அம்மனுக்கு ஆடி மாதம் உகந்த மாதம் ஆகும். இம்மாதத்தில் தான் அம்மன் கோவிலுக்கு சிறப்பு வழிபாடுகளும் பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெறுகின்றன. எனவே நாடியம்மன் கோவில் வழிபாடு பற்றி விளக்கப்படுகிறது.

நாடியம்மன் கதை

அக்கா தங்கை இருவர் இருக்கின்றனர். அக்காவுக்கு இரண்டு பிள்ளைகள் தங்கைக்கு பிள்ளை இல்லை. ஒரு நாள் அக்காவின் பிள்ளைகளைப் பார்ப்பதற்காகத் தங்கை ஆலங்குடி வருகிறாள். கங்கை வருவதைப் பார்த்த அக்கா, தன் பிள்ளைகளைப் பார்த்துப் பொறாமைப்படுவாள் என்று தோஎங்கே என்று கேட்கும் போது அதுங்களெல்லாம் விளையாடப் போய்விட்டன என்று சொல்லுகிறாள். சரி நான் வீட்டுக்கு போகிறேன் என்று சொல்லி வீட்டு கங்கை மன வருத்தத்துடன் ஒரு சாபத்தையும் விட்டு செல்கிறாள். துங்கை விட்ட சாபத்தால் பிளளைகள் இருவரும் கல்லாகி விட்டனர். பிள்ளைகளை வீட்டில் வைத்துக் கொண்டு இல்லை என்று சொன்னது பொய்தான் என்னை மன்னிச்சு, என் பிள்ளைகளை உயிர் எழுப்பு என்று தங்கையிடம் கேட்க கல்லான பிள்ளைகள் மீது தண்ணீரைத் தெளித்து உயிர் உண்டாக்கினாள் தங்கை இக்கதையை நாட்டுப்புற மக்கள் இன்றும் கூறி வருகின்றனர். இதில் அக்கா பெரிய நாடியம்மன் என்றும் தங்கை சிறிய நாடியம்மன் என்றும் கூறுகின்றனர்.

வழிபாட்டு முறைகள்

ஆடி மாதம் ஆண்டு தோறும் இரண்டு நாடியம்மனுக்கும் திருவிழா நடத்துகின்றனர். திருவிழா நடைபெறும் போது இக்கோவிலுக்குச் சொந்தமான ஆறு கிராமங்களின் தலைவர் கூட்டம் கூட்டி திருவிழா எடுப்பதைப் பற்றி முடிவு செய்து, ஊர் மக்களுக்கு அறிவிக்கின்றனர். இக்கிராம மக்கள் கும்மிப் பாடல் வாயிலாக என்று கும்மிய

"ஊரெல்லாம் கூட்டம் கூடி
உத்தமிக்கே காப்புகட்டி
நாட்டாரெல்லாம் கூட்டம் கூடி
நாயகிக்கே காப்புக்கட்டி
நாட்டாருக்கே தண்ணிப்பந்தல்
போட்டாளாம் நாடியம்மா"[30] *(வா.ம.ப.128)*

அடித்துப் பாடுகின்றனர். ஆடி மாதம் கடைசி செவ்வாய்கிழமை அம்மனுக்கு லெட்சார்ச்சனை முடிந்து எட்டாம் நாள் பலி போட அறிவிக்கப்படுகிறது.

பாலி போடுதல்(முளைப்பாரி எடுத்தல்)

பாலிபோடுதலை முளைப்பாரி என்றும் கூறுகின்றனர். பாலிபோட அறிவிக்கப்பட்டவுடன் வீட்டில் உள்ள பெண்கள் விரதத்துடன் ஒரு புதிய தட்டில் சாணி எருக்கொண்டு ஒன்பது வகையான தானிய வகைகளைத் தூவி இருட்டறையில் வைத்து காலை மாலை இரண்டு வேளைகளிலும் தண்ணீர் ஊற்றி வர வேண்டும். பாலிபோட்ட எட்டாம் நாள் பாலி படைத்தல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகின்றது. பாலி படைத்தலின் போது நாட்டுப் பண்டாரம் முன்னிலையில், ஒரு குளத்தங்கரையில் வைத்து பாலி படைக்கப்படுகிறது. பாலி படைக்கும் பொழுது அம்மனை நினைத்து தம் குடும்பத்தில் எந்தவிதமான தீங்கும் வரக்கூடாது என்று வேண்டி குளத்தில் போட்டுவிட்டு வீட்டிற்கு வந்து விரதத்தை முடித்துக் கொள்கின்றனர்.[31]

எசவுக்குடம்

பாலிபோட்ட எட்டம் நாள் செவ்வாய்க்கிழமை காலையில் ஆலங்குடி மக்கள் அவரவர் வீடுகளில் தென்னம்பானை வெட்டி வைத்திருப்பார்கள். ஊருக்கு ஒரு பண்டாரம் போய் தென்னம் பாளையில் மேல் பகுதியைச் சீவி குடத்தில் வைத்துவிட்டு வந்து விடுவார்கள். அந்த ஊர் மக்கள் வேண்டுதல் நிறைவேறவும், நிறைவேறிய வேண்டுதலின் பொருட்டு "எசவுக்குடம்" முதன்முதலில் வைத்தவர்கள் மண்பானையில் தான் மதுக்கொண்டு போக வேண்டும். இந்த மண்பானைக்குப் பெயர் தான் எசவுக்குடம் என்று பெயர். அவ்வூர் மக்கள் எசவுக்குடத்தை எடுத்துக் கொண்டு திட்டப் பொட்டல்" என்ற இடத்திற்கு வரும் போது அடுத்த நாள் வந்து விடுகிறது.

திட்டப்பொட்டலில் எல்லா ஊர் மக்களும் ஒன்நு கூடி எசவுக்குடத்தை ஓரிடத்தில் வைத்து கும்மியடித்து *பாடல் பாடுகின்றனர். பாடல் வரிகள்*

"வச்சா மதுக்கொடத்தே
வாசலெல்லாம் தாங்காமெ
போட்டா மதுக் கொடத்தெ
பூமியெல்லாம் தாங்காமெ"[32]

என்று கும்மிக் கொட்டி பாட்டுப் பாடுகின்றனர். மதுக்குடத்தை பல வண்ணங்களுடன் அழகாக அலங்காரம் செய்த மதுக்குடத்தை தூக்கிக் கொண்டு திட்டப்பொட்டல் திடலில் ஒன்றாகக் கூடுகன்றனர். அத்திடலுக்கு எல்லா ஊர் மக்களும் வந்த பிறகு ஊர் வாரியாக ஆட்டுக்கிடா பலிக் கொடுக்கப்பட்டு, பூஜை செய்து மதுக்குடத்தை கோவிலுக்குத் தூக்கி வருகின்றனர். இந்த மதுக்குடத்துக்குள் தானியங்களைப் போட்டு அம்மனுக்குத் தானியத்தால் பூசை செய்கின்றனர். எசவுக்குடம் கொண்டு வந்த மக்கள் குடத்தை அப்படியே கோவிலில் விட்டு விட்டுச் சென்று விடுகின்றனர்.

நம்பிக்கைகள்

பாலி போடுதல் பெரும்பாலும் கன்னிப் பெண்களே போடுகின்றனர். பெண்கள் திருமணம் ஆக வேண்டும் என்றும் பாலி நன்கு செழித்து வளர்ந்தால் வாழ்க்கையும் செழிப்புடன் இருக்கும் என்றும் மக்கள் நம்புகின்றனர். சீன்ன நாடியம்மன் கோவிலுக்கு எதிராக ஒரு பெரிய பாராங்கல் உள்ளது. திரமணம் ஆகாதப் பெண்கள் திருமணம் ஆக வேண்டியும், குழந்தைப் பேறு வேண்டியும் அக்கோவில் குளத்தில் தண்ணீர் எடுத்து வந்து அம்மனுக்கு நேரராக உள்ள கல்லில் உட்கார்ந்து அம்மனை வேண்டித் தலையில் ஊற்றிக் கொள்ள வேண்டும். இப்படி மூன்று வாரங்கள் அல்லது ஆறு வாரங்கள் செய்தால் அம்மனின் அருளால் நல்லது நடக்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.

பழமொழி

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழியின் சிறப்பிற்கேற்ப ஆடி மாதம் விவசாயிகள் விதைத் தூவும் காலம் வேளாண'மைக்கு உகந்த காலமாகவும் ஆடி மாதம் விளங்குகிறது. "பட்டம் தப்பினால் நட்டம்" அதனால் அந்தப் பட்டத்தில் விதைத் தூவினால் நல்ல விளைச்சலைத் தரும் என்று நினைக்கின்றனர். அதனால் இம்மாதத்தில் நாடியம்மனை வழிப்பட்டால் நல்ல மழைபெய்யும் என்றும் பயிர்கள் செழித்து வளரும் என்றும், அவ்வூரில் உள்ள மக்களுக்குக் காவல் தெய்வமாக இருப்பதாலும் இம்மாதத்தில் இவ்வம்மனுக்குத் திருவிழாவும் பூஜையும் நடத்தி வருகின்றனர்.

இம்மாதம் நல்ல மழை பெய்து, நெல்கதிர்கள் விளைந்து, நல்ல விளைச்சலைத் தரும். இதனையே பின்வரும் நாட்டுப்புறப்பாடல் விளக்குகிறது.

"எல்லாலம்மா கொளங்கலெல்லா
அரக் கொளங்க காக்கொளங்க
நம்மாளம்மா கொளங்களெல்லாம்
வில்லேந்தி மட தொறக்க
எல்லாலம்மா வயலெல்லாம்
அரச்சாவி காச்சாவி
நம்மாரம்மா வயகளெல்லாம்
முத்தடிச்சு பொலித் தூத்தலாம்"[33]

கலை நிகழ்ச்சிகள்

ஆடி மாதத்தில் முப்பது நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கால சூழ்நிலைக்குப் ஏற்ப கலை நிகழ்ச்சிகள் மாறுப்பட்டாலும், பொம்மலாட்டம், கரகாட்டம், போன்ற நாட்டுப்புற கலைகளும் வள்ளித் திருமணம், அரிச்சந்திரமயமான காண்டம்,, அர்ச்சுணன் தவசு, போன்ற நாடகங்களும் இன்றும் இக்கோயில்களில் நடைபெற்று வருகின்றன. இன்றும் கிராம மக்கள் தமது பண்பாடுகளிலிருந்து மாறுபடாமல் திருவிழாவையும் பூஜைகளையும் நடத்தி வருகின்றனர். அம்மனின் அருளால் தங்களது துயரமெல்லாம் விலகி விடுகின்றன. என்ற நம்பிக்கையில் பாலி எடுத்தல், மதுக்குடம் எடுத்தல் போன்றவைகளை நடத்துகின்றனர்.இவ்வாறு பெரிய நாடியம்மன் நகர வாசனையும், சின்ன நாடியம்மன் கிராம வாசனையும் பெற்று வருகின்றன.

ஆகாய அய்யனார்

நாட்டுப்புற வழிபாட்டில் அய்யனாருக்கு முக்கிய இடம் வகிக்கிறார். அய்யனார் நாட்டுப்புறங்களில் காவல் தெய்வமாக காணப்படுவதால் இத்தெய்வம் கிராமங்களின் எல்லைப் புறங்களில் வைத்து வழிப்படப்படுகின்றன. ஆகாய அய்யனார் பட்டுக்கோட்டையில் உள்ள வெண்டாக்கோட்டை என்ற கிராம மக்களால் வழிபட்டு வருகின்றன. ஆகவே வெண்டாக்கோட்டை மக்களால் வழிப்பட்டு வரும் ஆகாய அய்யனார் வழிபாடு பற்றி சேகரித்த தகவல்களைக் காண்போம்.

இந்த வெண்டாக்கோட்டை கிராமம் பட்டுக்கோட்டையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த கிராமத்திற்கு செல்லும் சாலையில் கிராம எல்லையின் வலது புறத்தில் ஒரு பெரிய ஏரி அமைந்துள்ளது. அந்த ஏரியின் வலது புறத்தில் பல வகையான மரங்கள் அடர்ந்த சிறுகாடு அமைந்துள்ளது. அந்த காட்டுப் பகுதியில் தான் அய்யனார் கோவில் உள்ளது. அதில் ஒரு பகுதி ஏரியும் மற்ற

மூன்று பகுதிகள் வயல்வெளிகள் சூழ்ந்து இருக்கின்ற ஊரின் எல்லையில் இக்கோவில் அமைந்துள்ளது.

கோவில் அமைப்பு

ஆகாய அய்யனார் கோவில் சிறு மண்டபக் கோவிலாக அமைந்துள்ளது. மூல விக்கிரகம் இருக்கும் இடத்தில் சிறுகுடம் அமைக்கப்பட்டுள்ளது. கதவுகள் இல்லை. இரவு நேரங்களில் காவலுக்குச் சென்று வருவதாகக் கூறப்படுகிறது. அதற்கு முன்பு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கோவிலின் வலது புறம் சின்ன மடப்பள்ளி அறை உள்ளது. வெளியில் வலதுபுறம் அழகிய கூந்தல் பனை, மண்டபத்தின் மேல் இரு மூலைகளிலும் அய்யனார் யானையில் அமர்ந்திருப்பது போன்ற காட்சியுடன் கூடிய சிலை வடிவமைக்கபட்டுள்ளது. அங்குள்ள கூந்தல் பனையின் கீழ் குதிரை, யானை மற்ற பரிவார தெய்வங்களும் உள்ளன.

பரிவார தெய்வங்கள்

அய்யனாரின் எதிரில் சற்றுத் தொலைவில் முன்னடியான் உள்ளது. இது அய்யனாரின் சேவகன் முன்னோடும் தெய்வங்கள் இட்ட வேலையைச் சட்டெனச் செய்வாராம். வீரனார், தூண்டில்காரன், மூன்று குதிரைகள், இரண்டு யானைகள், நான்கு வைரவர், ஆகிய பரிவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பூஜை முறைகள்

இந்த அய்யனார் கோவிலில் திருவிழா என்று எதுவும் நடைபெறுவதில்லை. திங்கள், வெள்ளி கிழமைகளில் மட்டும் கற்புர ஆரத்தி நடைபெறும்.அபிஷேகம் என்பது பொது மக்கள் செய்யும் போது மட்டுமே அபிஷேகத்தின் போது ''சிறுகுடம்'' போன்ற வடிவத்தில் உள்ள மூல விக்ரகத்தைச் சந்தனம் பூசி, கண்ணடக்கம் வைத்து, குங்குமத்தினால் முகத்தின் மற்ற பாகங்களை அலங்காரம் செய்து அந்தக் குடத்திற்கு சந்தனக்காப்பு அபிஷேகம் நடைபெறுகிறது.

சிறப்பு விடுதல் (உயிர் பலியிடுதல்)

உயிர் பலியிடும் வழக்கத்தையே **"சிறப்பு விடுதல்"** என்று அழைக்கப்படுகின்றனர். அய்யனாருக்கு கிடா, சேவல் போன்றவை பலியிடப்படுகின்றன. முன்னடியான் முன்பு பலியிடுதல் நடைபெறுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் தான் இதனை செய்கின்றனர். பலியிடுவதற்கான ஆயுதங்கள் அவரிடமே இருக்கின்றனர். ஆடு வெட்டப்படுவதற்கு முன்போ, வெட்டப்பட்ட பிறகோ அய்யனார் இருக்கும் இடத்திற்கு எடுத்துக் கொண்டு போவதில்லை. சர்க்கரைப் பொங்கல், பழங்கள் வைத்தே அய்யனாருக்குப் படையல் நடக்கிறது. ஆனால்

உயிர்ப் பலியிடுதலை அங்குள்ள மக்கள் சிறப்பு விடுதல் என்று அழைக்கப்படுகின்றனர். அய்யனார் கோவிலுக்குப் பலியிடப்படும் உயிரினங்களைக் வீட்டிற்கு எடுத்துச் சென்று சமைக்க வேண்டும். அதன் மாமிசங்களை விற்கவோ எல்லைத்தாண்டி அடுத்த கிராமத்திற்குக் கொண்டு செல்லவோ கூடாது என்பது தகவலாளர் மூலம் தெரியவந்தது.[34]

பொங்கலிடுதல்

அய்யனார் கோவிலுக்குப் பொங்கல் வைக்க பெண்கள் பொங்கல் வைக்க கூடாது. என்றும் ஆண்கள் மட்டுமே பொங்கல் வைக்க வேண்டும் என நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆதற்கான பொங்கல் பானை அவர்களிடமே இருக்கும். அர்ச்சனை, அபிஷேகப் பொருட்கள் வாங்கி வரும் பொறுப்பு அவர்களிடமே ஒப்படைக்கப்படுகிறது. அய்யானாருக்கு நெய்வேத்தியம் படைப்பதற்கு அய்யரே சின்னப்பானையில் மடப்பள்ளி அறையில் பொங்கள் வைத்து அதை மட்டுமே சாமியிடம் வைத்து நெய்வேத்தியம் செய்கிறார். பொது மக்கள் செய்யும் பொங்கல் வெளியில் வைக்கும் பொங்கல் வெளியில் வைத்து சாம்பிராணிக் காட்டப்படும். நெய்வேத்தியப் பொங்கலுக்கான பொருட்களைப் புரோகிதரே எடுத்து வந்து விடுகிறார். அதற்கான செலவுத் தொகையைக் கொடுத்து விட வேண்டும்.

நம்பிக்கை

ஆகாய அய்யனாரை நினைத்து எது செய்தாலும் நல்லப்படியாக நடக்கும். நினைத்தக்காரியம் கைக்கூடி வரும், பில்லி சூனியம் விலக்கப்படும் என்று நம்புகின்றனர். சிறுமிகளும் ஆண்களும் மட்டுமே வணங்கி வந்த அய்யனாரை இப்போது பெண்களும் அய்யனாரை இப்போது பெண்களும் நேரில் சென்று வழிபடுகின்றனர். பெண்கள் மாத விலக்கு அன்று அந்த ஏரியில் குளிக்கக் கூடாது. அப்படி குளித்தால் ஏதேனும் வேதனையை அனுபவிக்க நேரிடும். என அஞ்சுகின்றனர். ஆகாய அய்யனார் கோவில் எல்லையில் சாலையின் வழியாகக் குதிரையின் மீது அமர்ந்து யாரும் வருவதில்லை.அப்படி வந்தால் கோவில் இருக்கும் இடத்தில் குதிரை மீதிலிருந்து இறங்கி நடந்து செல்வது வழக்கமாக உள்ளது. அதை மீறி வந்த ஒருவர் அந்த இடத்தில் குதிரையின் மேலிருந்து வீசி எறியப்பட்டு அதனால் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதாகத் தெரிய வந்தது. இன்னும் குதிரை வண்டிகள் அந்தக் கிராமத்திற்குள் வருவதில்லையாம். இதுவே அந்தக் கிராமத்து மக்களுக்கு அய்யனார் மீதிருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.[35]

மஞ்சல் துணியில் பணமுடிப்பு

குழந்தைகள், சிறுவர் சிறுமியர் காய்ச்சல் வந்து அவதிப்படும் போது இரவு நேரங்களில் பயந்து அழும் போது ஒன்றரை ரூபாய் மஞ்சல் துணியில் முடிந்து வைத்து அய்யனாரை நினைத்து திருநீறு பூசி விடுவதாகக் தெரிகிறது.

பூக்கட்டி பார்த்தல்

நல்ல காரியங்கள் செய்வதற்கு வெண்டாக்கோட்டை அய்யனாரை நினைத்து எடு என்று சிறுவர் சிறுமியரை எடுக்கச் சொல்லி அதன்படி செய்கின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் பிறக்கப்போவது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்பதைப் பூப்போட்டு தெரிந்து கொள்கின்றனர். அதனை அனுபவப் பூர்வமாக உணர்ந்ததாகச் சிலர் இதைக் கூறுகின்றனர்.

பல்லிக் குறிபார்த்தல்

அய்யனார் கோவிலில் மாலைக்கட்டிப்போட்டு பல்லியிடம் உத்தரவு கேட்பதும் உண்டு. உத்தரவு கொடுக்கவில்லை என்றால் எப்படிப்பட்ட காரியமாக இருந்தாலும் நிறுத்திவிடுகின்றனர்.

ஆணையிடுதல்

சத்தியம் செய்தல் என்றும் கூறுவதுண்டு. பொதுவாக உன் மீது சத்தியமாக, என் மீது சத்தியமாக, குழந்தையின் மீது சத்தியமாக என்று கூறுவது போல் இறைவன் மீது சத்தியம் செய்வதும் உண்டு,பொய்யாக ஆணையீட்டால் தெய்வக் குற்றத்திற்கு ஆளாக நேரிடும். என அஞ்சுவர். இந்தப் பகுதியில் வாழும் மக்கள் வெண்டாக்கோட்டை அய்யனாருக்கு சத்தியமாக என்று ஆணையிடுவது உண்டு. இந்த அய்யனாருக்குச் சத்தியம் செய்தால் அதை மதித்து ஒத்துக் கொள்கின்றனர். பொல் சத்தியம் பண்ணமாட்டார்கள் என நம்புகின்றனர்.36

காணிக்கை செலுத்துதல்

கிராம எல்லை ஆரம்பிக்கும் இடத்தில் சாலையின் ஒரத்தில் உண்டியல் வைக்கப்பட்டுள்ளது. அதன் வழியில் செல்லும் வழிபோக்கர்கள் காணிக்கையை உண்டியலில் போடுகின்றனர். மேலும் மாடு, கோழி, போன்றவையும் வேண்டுதலின் பேரில் கோவிலில் விடுகின்றனர். அக்கோவிலுக்கு நேந்து விட்ட மாட்டிற்கு வெண்டாக்கோட்டை அய்யனார் என்ற முத்திரையைச் சூடு கம்பியின் மூலம் போட்டு விடுகின்றனர். பின்னர் அதனை விற்று விடுகின்றனர். கோழியும் அப்படியே விற்கப்பட்டு கோவில் நிதியில் சேர்க்கப்படுகிறது.

தொகுப்புரை

சோழ நாட்டு மக்களிடையே காணப்படும் பழக்கவழக்கங்கள், பழமொழிகள், பேச்சுக்கள், விடுகதைகள், தெய்வங்களின் தோற்றப் பின்னனி கதைகள், நாட்டு வளம் சார்ந்த செய்திகள், ஆகியவை மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன.அதனையே வழக்காறுகளாகவும் சொல்லப்பட்டு வருகிறது. நாட்டுப்புற மக்கள் நாட்டார் தெய்வங்களைக் வழிபடும் முறைகள், தலாட்டுப் பாடல்கள், இறை வழிப்பாட்டு காடல்கள், துதிப்பாடல்கள், நாட்டார் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கிடா வெட்டுதல், ஆகியவை நாட்டுப்புற தெய்வங்களுக்கிடையே வழக்காறுகளாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் நாட்டுப்புற தெய்வங்களாக நாடியம்மன் வழிபாடு, விளக்கேற்றியம்மன் வழிபாடு, அய்யனார் வழிபாடு ஆகிய தெய்வங்களைக் மக்கள் எவ்வாறு வழிபடுகின்றனர் என்பது பற்றி விளக்கம் இவ்வியலில் கொடுக்கப்பட்டுள்ளது. நாடியம்மனுக்கு வழிபாடு செய்யும் போது மக்கள் அம்மனுக்குப் பூஜைகள் செய்தல், காப்புக்கடடிக் கொள்ளுதல், தீ மிதித்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர். நாடியம்மன் கோவிலுக்கு முளைபாரி எடுத்தலை பாலி போடுதல் எனவும் மக்கள் கூறுகின்றனர். இது நாடியம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகள் ஆகும். பின்னர் எசவுக்குடம் எடுத்தல் போன்றவையும் அவ்வூர் மக்களிடையேக் காணப்படுகிறது. விளக்கேற்றி அம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகளாக அம்மனுக்கு காப்புக்கட்டுதல், பூப்போடுதல், பள்ளாடல் என்னும் கதைப்பாடல் நிகழ்ச்சி நடத்துதல் போன்ற மதுக்காட்டல், மாட்டுச்சீட்டு போடும் முறைகளைக் பின்பற்றுதல் போன்றவை வீட்டிற்கு விளக்கேற்றுதல், நாடடிற்கு விளக்கேற்றுதல், பொங்கலிடுதல், தேர்க்கட்டுதல், பந்தக்காட்சித் தோத்திருவிழா நடத்துதல் போன்றவை விளக்கேற்றி அம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகளாகும். நுாட்டுப்புற தெய்வமான ஆகாய அய்யனாருக்கு அய்யனாரை வழிபடும் மக்கள் பொங்கலிடுதல், சிறப்புவிடுதல் என்பது அதாவது அய்யனாருக்கு உயிர் பலியிடுவதைத் தான் அவ்வுர் மக்கள் சிறப்பு விடுதல் என்று கூறுகின்றனர். அய்யானரை வணங்கும் மக்கள் அய்யனாரின் மீதுள்ள நம்பிக்கையால் பூப்போட்டுப் பார்த்தல், காணிக்கை செலுத்துதல், பல்லி குறிப்பார்த்தல், அய்யனாருக்கு பொங்கலிடுதல், போன்ற செயல்களைக் செய்கின்றனர். இவ்வாறு மக்களீடையே காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு செயல் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள், பழமொழிகள் பேச்சு வழக்குகள் போன்றவையே வழக்காறுகள் ஆகும்.

சான்றெண் விளக்கம்

1.நா.வ.ஒ.அ	-	3
2.நா.வ.க.ஆ	-	27
3.நா.வ.சி.அ	-	38
4.தமி.நா.பா	-	276
5.சோழர்.வர	-	87
6.மேலது	-	87
7.தமி.நா.வர	-	100
8.மேலது	-	100
9.மேலது	-	101
10.மேலது	-	150
11.மேலது	-	151
12.குறள்	-	22
13.தமி.நா.வர	-	152
14.நா.பு	-	14
15.மேலது	-	20
16.தமி.நா.பு	-	42
17.மேலது	-	40
18.தெ.ச.ம	-	152
19.மேலது	-	153
20.குந்.வள.வழி.வர	-	20

21.மேலது	-	21
22.மேலது	-	23
23.மேலது	-	30
24.மேலது	-	31
25.மேலது	-	33
26.மேலது	-	34
27.மேலது	-	34
28.மேலது	-	39
29.மேலது	-	41
30.வா.மரபுகள்	-	128
31.மேலது	-	129
32மேலது	-	129
33.மேலது	-	132
34.மேலது	-	137
35.மேலது	-	138
36.மேலது	-	139

முடிவுரை

காவிரி நதி நீர் பாயும் சோழ நாடானது இயற்கை வளங்களையும், கலைகளையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் உள்ளடக்கியது. நம் முன்னோர் மரபில் வாழ்ந்த அரச மரபினர் விட்டுச் சென்ற தொழில் எச்சங்கள் நமக்கு சான்றாகவும் ஆவணங்களாகவும் கிடைத்துள்ளன. அவைகளின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் செய்திகளை வெளிக் கொண்டு வருவதற்கும் வழிவகை செய்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமையான நம்பிக்கைகள், மரபுகள், வாழ்வியல்கள், கோவில்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஆகியவற்றின் மூலம் மனிதனின் அடிப்படைத் தேவைகளையும், இறை வழிபாட்டையும் அறிந்து கொள்ளலாம். முதல் இயலான தலவரவாற்றில் சோழ நாட்டுத் வைணவத் திருப்பதிகள் உருவான வரலாறும், வழிபாட்டு முறைகளும், இறை நம்பிக்கைகளும், ஆலயத்தின் பெருமைகளையும், புராணச் செய்திகளையும், வைணவத் திருத்தலங்களின் நிலவியல் அமைவுகளையும், திருவிழாக்களையும், அறிந்து கொள்ள முடிகிறது.

பேராசிரியர் நா.சுப்புரெட்டியாரின் கண்ணோட்டத்தில் உருவான வைணவ சடங்கு சம்பிரதாயங்களையும், சோழ நாட்டு நாட்டுப்புற கோவில்களில் காணப்படும் நாட்டார் தெய்வ வழக்காறுகளையும் நாட்டார் சொற்களையும் அவை வழங்கும் விதங்களையும் அறிய முடிகிறது. சுப்புரெட்டியார் குறிப்பிடுவது போல சோழநாட்டு திருப்பதிகள் இருக்கும் இடம், மூலவர் தாயார் விபரங்கள், ஆழ்வார்கள் மங்களசாசனம் செய்த விபரங்கள், எவர் எவர்க்கு மூலவர் பிரதியட்சம் ஆனார் என்ற விபரங்கள், தலபுராணம், தல விமான அமைப்பு, தல விருட்சம், தல தீர்த்தம், போக்குவரத்து வசதிகள், ஆகியவை குறிப்பிடப்படடுள்ளது. எனவே வைணவத் தலங்களின் விபரங்கள் அனைத்தும் அறிந்து கொள்ள முடிகிறது. மனதில் அத்தலத்திற்கே சென்று திருமாலை வழிபடும் உணர்வினையும் பெற முடிகிறது.

திருமால் போவில்கள் சோழநாட்டில் ஏராளமாகக் காணப்பட்டாலும் காலத்தின் அடிப்படையில் வரலாறு விளக்கும் விதமாக சிலவகை கோவில்களே திருப்பதிகளாகப் அமைந்துள்ளன. அவைகளைப் பற்றிய சான்றுகள் வெளி நாட்டுக் கறிப்புகளிலும் காணப்படுகின்றன. வைணவத் திருப்பதிகளின் வழிபாடுகள் கோவில்களைப் புனரமைப்பதற்கும், உறவுகளைப் இணைப்பதற்கும், இறை நெறிகளைக் வெளிக் கொண்டு வருவதற்கும் மன அமைதிக்காக உருவாக்கப்பட்ட பண்டைய தமிழர்களின் முறையாகும். சிலைகள் அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடத்தப்படுகின்றன. பொருளாதார ரீதியாகவும் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. கோவில்களின் வருமானத்தைப் பெருக்கி கொள்வதற்கும், புதிய கட்டிடங்களை உருவாக்கி கொள்வதற்கும் வழிவகை செய்கின்றன. வைணவப்

புராணங்களின் ஆகமங்கள் செய்து முடிக்கப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறையானது சாதி சமய ஒற்றுமையைக் கடைப்பிடிப்பதோடு சமூக நல்லிலக்கணத்தை உருவாக்குகின்றன. கோவிலில் அமைந்துள்ள வைணவச்சாரியார்களின் வழிக்காட்டுதல் மூலம் பக்தர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்க திருமாலை பிரார்த்தனை செய்துக் கொள்ளுதலும், தோஷங்கள் விலக பூஜைகள் செய்தலும் நடைபெறுகின்றன. திருமாலுக்கு நடக்கும் சிறப்பு பூஜைகள் மக்களிடையே பக்தி உணர்வை தூண்டுகின்றன.

சோழ நாட்டு மக்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், பழமொழிகள், பேச்சுக்கள், நாப்புரட்டுகள், விடுகதைகள், தெய்வங்களின் தோற்றப் பின்னனி கதைகள், நாட்டு வளம் சார்ந்த செய்திகள், ஆகியவை மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங்களைக் வழிபடும் முறைகள், தெய்வங்களுக்கு தாலாட்டுப் பாடல்கள், இறை வழிபாட்டு பாடல்கள், தூதி பாடல்கள், ஆகியவை பாடி பூஜைகள் செய்கின்றன. நாட்டார் தெய்வகளுக்கு எடுக்கப்படும் விழாக்கள், நாட்டார் தெய்வங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கிடா வெட்டுதல், முளைப்பாரி எடுத்தல், எசவுக்குடம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், மாட்டுச்சீட்டுப் போடுதல், தேர்த்திருவிழா நடத்துதல், போன்றவை சோழ நாட்டு நாட்டுப்புற தெய்வங்களை வணங்க மக்களின் வழக்காறுகளாக விளக்கப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் நாட்டுப்புற தெய்வங்களில் இவ்வழக்காறுகள் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் நாட்டுப்புற தெய்வங்களாக நாடியம்மன் வழிபாடு, விளக்கேற்றியம்மன் வழிபாடு, அய்யனார் வழிபாடு ஆகிய தெய்வங்களைக் மக்கள் எவ்வாறு வழிபடுகின்றனர் என்பது பற்றி விளக்கம் இவ்வியலில் கொடுக்கப்பட்டுள்ளது. நாடியம்மனுக்கு வழிபாடு செய்யும் போது மக்கள் அம்மனுக்கு பூஜைகள் செய்தல், காப்புக்கடடிக் கொள்ளுதல், தீ மிதித்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர். நாடியம்மன் கோவிலுக்கு முளைபாரி எடுத்தலை பாலி போடுதல் எனவும் மக்கள் கூறுகின்றனர். இது நாடியம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகள் ஆகும். பின்னர் எசவுக்குடம் எடுத்தல் போன்றவையும் அவ்வூர் மக்களிடையேக் காணப்படுகிறது. விளக்கேற்றி அம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகளாக அம்மனுக்கு காப்புக்கட்டுதல், பூப்போடுதல், பள்ளாடல் என்னும் கதைப்பாடல் நிகழ்ச்சி நடத்துதல் போன்ற மதுக்காட்டல், மாட்டுச்சீட்டு போடும் முறைகளைக் பின்பற்றுதல் போன்றவை வீட்டிற்கு விளக்கேற்றுதல், நாடடிற்கு விளக்கேற்றுதல், பொங்கலிடுதல், தேர்க்கட்டுதல், பற்தக்காட்சித் தோத்திருவிழா நடத்துதல் போன்றவை விளக்கேற்றி அம்மனை வழிபடும் மக்களிடையே காணப்படும் வழக்காறுகளாகும். நூட்டுப்புற தெய்வமான

ஆகாய அய்யனாருக்கு அய்யனாரை வழிபடும் மக்கள் பொங்கலிடுதல், சிறப்புவிடுதல் என்பது அதாவது அய்யனாருக்கு உயிர் பலியிடுவதைத் தான் அவ்வூர் மக்கள் சிறப்பு விடுதல் என்று கூறுகின்றனர். அய்யானரை வணங்கும் மக்கள் அய்யனாரின் மீதுள்ள நம்பிக்கையால் பூப்போட்டுப் பார்த்தல், காணிக்கை செலுத்துதல், பல்லி குறிப்பார்த்தல், அய்யனாருக்கு பொங்கலிடுதல், போன்ற செயல்களைக் செய்கின்றனர். இவ்வாறு மக்களிடையே காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு செயல் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள், பழமொழிகள், பேச்சு வழக்குகள் போன்றவையே வழக்காறுகள் ஆகும்.

துணை நூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

1. **தேவராகன்** - **வைணவ திவ்விய தேசம்**
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,
சென்னை.
2006.

துணைமை ஆதாரங்கள்

1. **சேவியர் அந்தோனி. சே. ச செல்வராசு. கே. ஏ** - **வாழும் மரபுகள்,**
தன்னானே பதிப்பகம்,
பேங்களூர்.
2001.
2. **இராமாநுஜன்** - **ஸ்ரீ சௌரிராசபெருமாள் கோவில் திருத்தல வரலாறு,**
திருக்கோயில் வெளீயிடு,
திருக்கண்ணபுரம்,
நாகை.
2016.
3. **காமராசு. இரா** - **பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் பன்முகம்.**
சாகித்ய அகாதெமி,
சென்னை.
2017.

4. **கௌமாரீஸ்வரி** - **சோழர் வரலாறு**
நாம் தமிழர் பதிப்பகம்,
சென்னை.
2009.

5. **சண்முகசுந்தரம்** - **நாட்டுப்புறவியல்**
காவியா பதிப்பகம்,
சென்னை.
1994.

6. **சண்முகம். ஆ** - **பண்பாட்டு தளங்கள்**
நாட்டுப்புறவியல்
ஆய்வுகள்,
அகல் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை.
2002.

7. **சற்குணவதி** - **தமிழக நாட்டுப்புறவியல்**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
2004.

8. **சுப்புரெட்டியார். நா** - **சோழ நாட்டுத் திருப்பதிகள்,**
பாகம். 2
1981.

9. **சுப்புரெட்டியார். நா** - **வைணவச் செல்வம்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.
1995.

10. **சுப்பிரமணியன். ச. வே** - **தொல்காப்பியம் தெளிவுரை,**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
1998.

11. **ஆசிரியர் குழு** - **தமிழ்நாட்டு வரலாறு,**
சோழர் பெரு வேந்தர்,
தமிழ் வளர்ச்சித் துறை,
குறளகம், சென்னை.

12. **தாத்தாச்சாரியார். என்.எஸ்** - **அருள்மிகு ஸ்ரீ வஞ்சுள வல்லி தாயார் சமேத ஸ்ரீ நிவாசப் பெருமாள் திருக்கோயிலல் வரலாறு,**
திருக்கோவில் வெளியீடு,
நாச்சியார் கோவில்,
2016.

13. **பரமசிவன். தொ** - **தெய்வங்களும் சமூக மரபுகளும்**
நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை.
1995.

14. **பகவதி சுப்பு. எம். ஏ** - **திருக்குறள் தெளிவுரை**
சங்கர் பதிப்பகம்,
சென்னை.
2014.

15. ஸ்ரீராதேசிகாசார்ய சுவாமிகள் - **அருள்மிகு ஒப்பிலியப்பன் திருக்கோயில் ஸ்தல வரலாறு.**
திருக்கோயில் வெளியீடு,
திருநாகேசுவரம்,
கும்பகோணம்.
1760 – 65.

16. மாதவன். வே. இரா - **தமிழில் தலபுராணங்கள்.**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
தமிழ் பல்கலைக்கழகம்,
குடியிருப்பு வளாகம்,
1995.

17. மாத்பூதேஸ்வரன். எஸ்.எஸ் - **தஞ்சாவூர். 108 வைஷ்ணவ திருத்தல மகிமை.**
நர்மதா பதிப்பகம்,
சென்னை.
2004.

18. ரவி சந்திரன் - **திருப்பேர் நகர் கோவிலடி ஸ்தல வரலாறு.**
கோவிலடி,
திருக்காட்டுப்பள்ளி,
தஞ்சை.

19. லூர்து. தே - **நாட்டார் வழக்காற்றில் கள ஆய்வு.**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
1988.

20. லூர்து. தே - **நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள்.**
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
பாளையக்கோட்டை,
1997.

21. வானமாமலை. நா - **தமிழர் நாட்டுப் பாடல்கள்.**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை.

22. வீரமணி - **மயிலாடுதுறை வட்ட வைணவக் கோயில்களின் வரலாறு மற்றும் தல சிறப்புகள்.**
சென்னை.

23.	-	-	**அருள்மிகு சாரநாத பெருமாள் திருகோவில் தல வரலாறு.** திருக்கோவில் வெளியீடு, திருச்சேறை, கும்பகோணம்.
24.	-	-	**ஸ்ரீ ரங்கம் கோவில் வரலாறு.** வாசவி பப்ளிகேஷன்ஸ், ஸ்ரீரங்கம்.
25.	-	-	**அரசாப விமோசனப் பெருமாள் திருக்கோவில் திருத்தல வரலாறு.** திருகோவில் வெளியீடு, திருக்கண்டியூர், தஞ்சாவூர். 2011.
26.	-	-	**ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி திருக்கோவில் தல வரலாறு.** திருக்கோவில் வெளியீடு, கும்பகோணம், தஞ்சாவூர். 1966.

வினா நிரல்கள்

பெயர் : நரசிம்மன்

ஊர் தஞ்சாவூர் : (வெண்ணாற்றங்கரை அருகில்)

சந்தித்த இடம் : தஞ்சை மாமணிக்கோவை

தேதி நேரம் : 24.08.2019 மணி 11. 30 காலை

1. வைணவத் திவ்ய தேசத்தில் இது எத்தனை யாவது திருத்தலம்?

மூன்றாவது திருத்தலம், மூன்று அவதாரமாக பெருமாள் காட்சி அளிக்கிறார்.

2. தஞ்சை மாமணிக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் மூலவர் யார்?

நீலமேகப்பெருமாள், நரசிம்மபெருமாள், மணிகுண்டர் பெருமாள்.

3. தாயார் யார்?

செங்கமல வல்லி, அம்புஜவல்லி, தஞ்சை நாயகி.

4. ஆழ்வார்கள் எத்தனைப்பேர் பாசுரங்கள் பாடியுள்ளனர்.

மூன்று ஆழ்வார்கள் பாசுரங்கள் பாடியுள்ளனர். நம்மாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்.

5. தலம் தோன்றிய வரலாறு கூறுங்கள்?

கிருதயுகம் என்னும் ஊரில் மது என்னும் அரக்கன் இருந்தனர். அவனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். இவர்கள் மூவரும் சிவபெருமானிடம் பெற்ற வரத்தினைக் கொண்டு,

அங்குள்ள தேவர்கள், முனிவர்கள், இந்திரன் ஆகியோரைக் கொடுமைப்படுத்தி வாழ்ந்து வந்தார்கள். அப்போது பராசரர் முனிவர் தவம் செய்து கொண்டு இருந்தார். அவர் தவத்தை கலைக்கும் நோக்கத்தில் பல இன்னல்களை செய்து வந்தனர். பராசரர் முனிவர் வைகுண்டத்தில் இருக்கும் பெருமாளை நோக்கி என்னுடைய தவம் கலையாமல் இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார். அவரின் வேண்டுகோளுக்கு இணங்க, கலமேகப் பெருமாளாகவும், நரசிம்ம பெருமாளாகவும் மணிகுன்ற பெருமாளாகவும் அவதாரம் எடுத்து மூன்று அசுரர்களையும் வதம் செய்தார். இவ்வாறு மூன்று அசுரர்களையும் கொண்டு முனிவருக்கு காட்சி அளித்த தலமாக திருதஞ்சை மாமணிக்கோவில் விளங்குகிறது.

6. பெருமாளுக்கு ஒரு நாள் எத்தனை முறை பூஜைகள் நடை பெறுகின்றன?

4 காலங்கள் பூஜைகள் நடைபெறுகின்றன.

7. பெருமாளுக்கு படைக்கப்படும் உணவுகள் யாவை?

தயிர்சாதம், புளிசாதம், சித்ரா அன்னம் போன்றவை.

8. இத்தலத்து பெருமாளை வணங்குவதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

திருமணம் நடைபெறும், குழந்தைப் பேறு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

9. வார சிறப்பு நாளான சனிக்கிழமை பூஜை முறைகள் மாறுபடுமா?

இல்லை; தினசரி நாட்களில் நடப்பது போலவே நடைபெறும் திருவிழாக் காலங்களில் மட்டும் பூஜை முறைகள் மாறுபடும்.

10. திருதஞ்சை மாமணிக்கோவில் தீர்த்தம் என்ன?

அம்ருத தீர்த்தம், கன்னிகா புஷ்கரினி, ஸ்ரீ ராம தீர்த்தம், சூரிய புஷ்கரணி.

11. இத்தலத்து பெருமாள் யாருக்கு பிரதிஷ்டம் பெற்றவர்?

பராசர முனிவர், மார்கண்டடேய முனிவர்.

12. திருத்தஞ்சை மாமணிக்கோவில் விமானம் என்ன?

சொந்தர்ய விமானம், வேத சுந்தர விமானம், மணி கூட விமானம்.

13. பண்டையக் காலத்தில் மரபு ரீதியாகப் பூஜைகள் ஒரே மாதிரியாக நடைபெற்று வருகிறதா?

ஆம்.

14. குடமுழுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.

15. பெருமாளுக்கு அபிஷேகம் உண்டா?

அபிஷேகம் கிடையாது. தைலக்காப்பு நடைபெறும்.

16. பெருமாளை வணங்கவரும் பக்தர்களுக்குப் பிரசாதமாக முதலில் வழங்கப்படுவது என்ன?

குங்குமம், துளிசி, தீர்த்தம் ஆகியவை வழங்கப்படுகிறது.

தகவலாளர் பட்டியல்

வ. எண்	பெயர்	பால்	வயது	தொழில்	ஊர்
1.	கண்ணன் பட்டர்	ஆண்	55	அர்ச்சகர்	திருக்கண்டியூர்
2.	இரங்கராஜன்	ஆண்	45	அர்ச்சகர்	திருக்காட்டுப்பள்ளி
3.	பட்டாச்சாரியார்	ஆண்	60	அர்ச்சகர்	திருக்காட்டுப்பள்ளி
4.	நரசிம்மன்	ஆண்	50	அர்ச்சகர்	தஞ்சாவூர்
5.	ராககோபாலசாரி	ஆண்	50	அர்ச்சகர்	திருச்சேறை
6.	பழனிச்சாமி	ஆண்	55	கோவிலில் வேளை பார்ப்பவர்	திருக்கண்ணபுரம்
7.	கோகுலச்சாரி	ஆண்	60	அர்ச்சகர்	கும்பகோணம்
8.	இரங்கசாச்சாரியார்	ஆண்	60	அர்ச்சகர்	கும்பகோணம்
9.	கோபாலகிருஷ்ணன்	ஆண்	58	அர்ச்சகர்	கும்பகோணம்
10.	வேங்கடநாதன்	ஆண்	53	அர்ச்சகர்	கும்பகோணம்

ஸ்ரீ அரசாப விமோச்சன பெருமாள் கோவில்

ராஜகோபுரம்

கருவறைத் தோற்றம்

கோவில் கொடிமரம் மற்றும் முன்பகுதி

தஞ்சை மாமணிக்கோவில

வீரநரசிம்மர் கருவறைத் தோற்றம்

கோவில் பின் வாசல்

மணிக்குன்ற ருெமாள் கருவறைத் தோற்றம்

மணிக்குன்ற பெருமாள் கோவில் நுழைவாயில்

கோவில் பின்பகுதி

நீலமேகப்பெருமாள் கோவில்

கருவறைத் தோற்றம்

வெளிப்புறத்தோற்றம்

துயார் சன்னதி

தலவிருட்சம்

அருள்மிகு அப்பாலரெங்கநாத சுவாமி திருக்கோவில்



கோவில் ராஜகோபுரம்

கோவில் மதில்சுவர்



கோவில் கொடிமரம் மற்றும் முன்பகுதி

திருஅன்பில் கோவில்

கோவில் கருவறை செல்லும் வழி

கோபுர நுழைவாயில

கொடிமரம் மற்றும் முன்பகுதி

ஆண்டாள் சன்னதி

கருவறைத் தோற்றம்

அருள்மிகு ஒப்பிலியப்பன் கோவில்



ராஜகோபுரம்

கருவறைத் தோற்றம்

நாச்சியார் கோவில் ராஜகோபுரம்

கொடிமரம் மற்றும் முன்பகுதி

கருவறை நுழைவாயில்

ஸ்ரீ சராநாத பெருமாள் கோவில்

சாரநாயகி தாயார் சன்னதி



கோவில் நுழைவாயில்



கருவறைத் தோற்றம்

ஸ்ரீசாரங்கபாணி திருக்கோவில் ராஜ கோபுரம்



ஜெகந்நாதபெருமாள் கோவில

.



ராஜகோபுரம்

கருவறைத் தோற்றம்

திருக்கண்ணபுரம் சௌரிராஜ பெருமாள் கோவில

ராஜகோபுரம்

கருவறைத் தோற்றம்

பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

துண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டின்
18 வைணவ திவ்விய தேசங்களைத் தாம் சென்று
தரிசித்ததோடு நில்லாது நம்மையும்
தன்னோடு கூடவே தம் அருமையான
எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ
தரிசனம் செய்து வைக்கின்றார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939561-1-3

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் 1977

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் பா ச கைலாசம்
உச்ச நீதிமன்றம், புதுதில்லி



அணிந்துரை

ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்,
(உச்ச நீதிமன்றம் புதுடில்லி.)

தண்ணார் தமிழளிக்கும் தண்பாட்டி நாட்டின் பதினெட்டு திவ்விய தேசங்களைத் தாம் சென்று தரிசித்ததோடு நில்லாமல் நம்மையும் தன்னோடு கூடவே தம் அருமையான எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ தரிசனம் செய்துவைக்கின்றார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். திருக்கோட்டியூரிலே தொடங்குகின்ற இவர்தம் பக்திப் பயணம் திருக்குறுங்குடியிலே போய் முடிவடைகின்றது. இத்தனைத் திருப்பதிகளையும் இவரோடு தரிசிக்கின்ற நாம் 'மறந்தும் புறந்தொழா மாந்தராய்' மாறி விடுகின்றோம்.

'தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்வோர்கள்' நிறைந்த திருக்கோட்டியூரிலேயே நமக்கு எட்டெழுத்து உபதேசம் ஆகிவிடுகின்றது. 'புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்ற சரணாகதி தத்துவம் தொடர்கின்றது. 'சோராத காதல் பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும் பாராது' அவனுக்குப் பல்லாண்டு பாடும் பான்மையினை நினைத்து நெகிழ்கின்றோம். 'தான் அறப் பெய்யும் காளமேகத்தைத்' திருமாலிருஞ் சோலை மலையிலே 'அறு கால் வரி வண்டுகள் ஆயிரம் நாமம் சொல்லிச் சிறுகாலையிலே பாடும்'

அருமையை அநுபவிக்கின்றோம். 'மாயனை – மன்னு வடமதுரை மைந்தனை—தூய பெரு நீர் யமுனைத் துறைவனை—வாயினால் பாடி – மனத்தினால் சிந்தித்து— அறிவொன்று மில்லாத ஆயர்குலத்துப் பெண்களின்' நிலையிலிருந்து அநுபவித்த ஆண்டாளின் அருள் வெள்ளத்திலே கும்மாளம் அடித்து விட்டு திருத்தண்காலூர் சென்று அப்பனைத் தரிசிக்கின்றோம்.

'இதுவோ திருநகரி ஈதோ பொருநை? இதுவோ பரம பதத்து எல்லை—இதுவோதான், வேதம் பகர்ந்திட்ட மெய்ப் பொருளின் உட் பொருளை, ஓதும் சடகோபன் ஊர்' என்று நம்மை மறந்து ஆழ்வார் திருநகரிலேயே நின்று விடுகின்றோம். வானுற வளர்ந்து விளங்கிய திவ்வியமான பேரொளியைக் கண்டு நம்மாழ்வாரைத் தெரிந்து கொண்டு தனது குருவாக ஏற்றுக் கொண்ட மதுரகவி பிறந்த மண்ணிலே— திருக்கோளூரிலே வைத்தமா நிதியைக் கண்டு மகிழ்கின்றோம். சிறுவர்களின் விளையாட்டின் சுவையிலே ஈடுபட ஆசைப்பட்டு அங்கிருந்த பெரிய திருவடியை 'சற்றே நகர்ந்திடு, கருடா' என்று கூறிய மகர நெடுங்குழைக் காதனின் விளையாட்டு ஆசையை எண்ணி வியக்கின்றோம். 'குழகன்' என்றால் மகானாக இருக்கும் தனது மேன்மையினைப் பாராது சிறியாரோடும் கலந்து பழகுபவன் என்று பொருள் சொல்லும் பேராசிரியர் சுப்புரெட்டியார் நாம் அப் பொருளில் உணர்ந்து உருகி 'அவன்' அழகையும் அருளையும் பருகும் வகையில் அப் பேரருளாளனின் பெருமையனைத்தையும் உணர்த்தி விடுகின்றார்.

கீதையின் பதினெட்டு அத்தியாயங்கள் பதினெட்டு யோகங்களைச் சொல்வது போல இவர்தம் பதினெட்டுக் கட்டுரைகளும் பல்வேறு பக்தித் திருப்பதிகளின் பெருமை களை விளக்குகின்றன. திருமந்திரத்தின் பெருமையை— நலந்தரும் சொல்லை – பரத்துவம், வியூகம், விபவம்,

அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற எம்பெருமானின் ஐந்து நிலைகளை—பக்தி, பிரபத்தி வழிகளை பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய வினைகளின் தொகுதியை - எம்பெருமானின் திருமேனியாக வைணவ சித்தாந்தம் பேசும் சித்து அசித்துபற்றி—சகல வேத சாரத்தைத் தன்னுள்ளேயே அடக்கி வைத்துள்ள முதல் பதமாகிய பிரணவம் பற்றி மிகவும் எளிதிலே புரிந்து கொள்ளும் வகையில் மிக அழகாக விளக்கியிருக்கும் நேர்த்தி உள்ளத்தைக் கவர்கிறது. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத அழகிய தீந்தமிழ் உள்ளத்தின் ஆழத்திலே ஒரு குளுமையை ஏற்படுத்துகிறது. வைண நூல்களை எவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார் பேராசிரியர் சுப்புரெட்டியார் என்பது புரிகின்றது. இது போல இன்னும் பல நூல்களை எழுதி மொழிக்கும் முதல்வனுக்கும் தொண்டாற்றிய வண்ணமிருக்க எம்பெருமான் அருள் புரிய வேண்டுகிறேன்.

—ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டப் பேற்றிற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

இரா.வித்யா

பதிவெண் 5944

நாட்டுப்புறவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்-613 010

நவம்பர் 2019

நன்றியுரை

'பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறும் வழக்காறும்' என்னும் தலைப்பில் நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பளித்த தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் **முனைவர் கோ.பாலசுப்ரமணியன்** அவர்களுக்கும், பதிவாளர் (பொ.) **முனைவர் கு.சின்னப்பன்** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வு செய்ய எனக்கு வாய்ப்பளித்து இவ்வாய்வின் தொடக்கம் முதல் இறுதி வரை ஏற்பட்ட ஐயங்களை நீக்கி ஆய்வு செம்மையாக அமையும் வண்ணம் நல்வழி காட்டிய என் ஆய்வு நெறியாளருமான **முனைவர் நா.மாலதி** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது ஆய்விற்கு வழிகாட்டிய மொழிப்புல முதன்மையர் மற்றும் நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் **முனைவர் இரா.காமராசு** அவர்களுக்கும் இணைப் பேராசிரியர் **முனைவர் ஆ.சண்முகம்பிள்ளை** அவர்களுக்கும், உதவிப் பேராசிரியர் **முனைவர் சீமான் இளையராஜா** அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

எனது ஆய்வுக்குத் தேவையான பல நூல்களைத் தந்துதவிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கும், துறை நூலகத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெறும் அளவிற்கு என்னை உயர்த்திய என் பெற்றோர் **திரு த.இராஜேந்திரன்-திருமதி இரா.கலைச்செல்வி**,

என் சகோதரன் **இரா.மணிகண்டன்** மற்றும் **பா.இன்பா, தா.ஹிதாயத்துல்லா, சபாம்மா** ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்கு உதவிய ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவ, மாணவிகளுக்கும், என் நண்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வுத் தொடர்பான தகவல்களை அளித்து உதவிய தகவலாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-இரா.வித்யா

பொருளடக்கம்

இயல்			பக்கம்
	முன்னுரை	...	1
1.	தல வரலாறு	...	7
2.	வழிபாட்டு முறைகள்	...	64
3.	வழக்காறுகள்	...	96
	முடிவுரை	...	115
	துணைநூற்பட்டியல்	...	116
	பின்னிணைப்புகள்	...	118

1. வினாநிரல்
2. தகவலாளர் பட்டியல்
3. புகைப்படங்கள்

முன்னுரை

108 வைணவ திவ்ய தேசங்களில் பாண்டிநாட்டுத் திருப்பதிகளான மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கேரளாவின் தென் பகுதியை கொண்ட பாண்டிய நாட்டின் பதினெட்டு வைணவ தலங்களின் வரலாறு, வழிபாட்டு மரபு, சடங்குகள், திருவிழாக்கள் போன்றவை பழங்காலம் முதல் இன்று வரை தொன்று தொட்டு வம்சாவழியாக மக்கள் வழிபடும் முறைகளை விளக்குகின்றன.

இறைவன் திருமால் மீது மக்கள் அனைவரும் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களும் அவனது பாசுரங்களைப் பாடியும் புகழைப் பாடியும் வணங்குகின்றனர்.

வைணவத்தின் முழுமுதற் கடவுளான விஷ்ணுவின் புகழை உலகறியச் செய்தவர்கள் ஆழ்வார்கள் அவர்களின் பாசுரங்களின் வாயிலாகவே வைணவ மதம் தழைத்தோங்கப்பட்டு இறைவன் திருமாலின் புகழ் மண்ணுலகம் தொடங்கி விண்ணுலகம் வரை சென்று அனைத்து மக்களும் வணங்கும்படி சிறப்பித்து பேசப்படுகிறது.

பாண்டிய நாட்டின் பதினெட்டு தலங்களின் சிறப்பு, இயற்கை வளம், ஆழ்வார்களின் பாசுரங்கள், திருமாலின் சிறப்பு இவற்றை மனமுருகத் தழுவிநின்ற ந.சுப்புரெட்டியார் அவர்கள் மனத்தில் தோன்றிய எண்ணத்தில் உருவாகிய இறைவன் திருமாலின் பெருமைகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தும் சிறப்பித்துக் கூறுகிறார்.

ஆய்வுத் தலைப்பு

'பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறும் வழக்காறும்' என்பது ஆய்வுத் தலைப்பாகும்.

ஆய்வின் நோக்கம்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறும் வழக்காறும் என்ற இவ்வாய்வில் பாண்டிய நாட்டு திருப்பதிகளான பதினெட்டுத் தலங்களின் வரலாறும் வழிபாட்டு மரபுகளும், திருவிழாக்கள், பூஜைகள், சடங்குகள் போன்றவை எவ்வாறு அமைகின்றன என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச் சிக்கல்

108 வைணவ திவ்ய தேசங்களில் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் பதினெட்டுத் தலங்களில் உள்ள திருமாலின் சிறப்புப் பற்றி மக்கள் கூறுவதும் திருமாலின் வழிபாட்டு மரபுகள், பூஜைகள், சடங்குகள், திருவிழாக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது போன்ற சிக்கலான வினாக்களுக்கு விடைகளைக் காணும் வகையில் இவ்வாய்வின் போக்கு அமைந்துள்ளது.

கருதுகோள்

உலகிலேயே தொன்மைச் சான்றான இறை வழிபாட்டு முறைகள், தலைமுறையாகத் தொடர்ந்து வரும் வழிபாட்டுச் சடங்கு முறைகள், பூஜைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவை வைணவ மதத்தின் அடிப்படையாகக் கொண்டு மக்களால் வணங்கப்படும் இறைவன் திருமாலின் சிறப்பு, புகழ் பற்றி கூறுவதை விளக்குவதாக அமைந்துள்ளது.

பழங்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட இறைவழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் தற்போதும் காணப்படுகின்றனவா என்பதைப் பற்றியும் சமுதாயத்தில் இன்று வைணவர்களின் நிலைப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது? வழிபாட்டு சடங்குகளில் மாற்றம் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்னும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வின் போக்கு அமைகிறது.

சான்று மூலங்கள்

இவ்வாய்விற்குப் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் பதினெட்டுத் தலங்களில் களப்பணி மேற்கொண்டதன் மூலம் தேர்வுசெய்யப்பட்ட தகவலாளர்களிடம் பெற்ற தகவல்களும், இவ்வாய்வு தொடர்புடைய நூல்களும் இவ்வாய்விற்குச் சான்று மூலங்களாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

முதன்மைத் தரவுகள்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளான மதுரை மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த வைணவத் தலங்களான பதினெட்டுத் தலங்களுக்குச் சென்று வைணவ அர்ச்சகர்களிடமும் மற்றும் அங்குள்ள பிற இனத்தவர்களிடமும் களஆய்வு செய்து சேகரிக்கப்பட்ட தரவுகள் இவ்வாய்வுக்கு முதன்மைத் தரவுகளாக அமைந்துள்ளன.

துணைமைத் தரவுகள்

இவ்வாய்விற்கு 108 வைணவ திவ்யதேசம், ஆழ்வார்களின் பாசுரங்கள், வைணவத்தைப் பற்றிய பிற நூல்கள், திருமால் பற்றிய பிற நூல்கள் போன்றவற்றில் சேகரித்த செய்திகள் ஆய்விற்குத் துணைமைத் தரவுகளாக அமைந்துள்ளன.

ஆய்வுக் களம்

'பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறும் வழக்காறும்' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விற்குப் பாண்டிய நாட்டுத் தலங்களான பதினெட்டு தலங்களும் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வுக்குரிய ஆய்வுக்களமாகப் பாண்டிய நாடான மதுரை மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த பதினெட்டு வைணவத் தலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 108 வைணவத் திவ்யதேசங்களில் பாண்டிய நாட்டுத் திவ்யதேசங்களில் காணப்படும் வைணவத் தலங்கள் சிறப்புடையதாகக் கூறப்படுகின்றன. அங்கு உறையும் இறைவன் திருமாலின் சிறப்பும் அனைத்து மக்களாலும் போற்றப்பட்டு வணங்கப் படுகின்றன.

'பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறும் வழக்காறும்' என்னும் பொருண்மையில் அமைந்த இவ்வாய்வு களப்பணியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

இவ்வாய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. தலவரலாறு
2. வழிபாட்டு முறைகள்
3. வழக்காறுகள்

இயல் – 1

'தல வரலாறு' என்ற முதல் இயலில் தலத்தில் தோன்றப்பட்ட இறைவன் திருமாலின் சிறப்பு மற்றும் இறைவன் திருமாலின்

அவதாரங்கள், பல அரக்கர்களை வதம் செய்த நிகழ்வுகள், பக்தர்களுக்கு ஏற்படும் துன்பத்தை நீக்கும் தன்மைகள், அத்தலத்தின் சிறப்பாகத் தோன்றப்படும் விமானம், தீர்த்தங்கள், மூல விருட்சங்கள் போன்றவை பற்றி சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

இயல் – 2

'வழிபாட்டு முறைகள்' என்ற இரண்டாவது இயலில் வைணவர்கள் வழிபடும் மரபுகள், திருவிழாக்கள், பூஜைகள், சடங்கு முறைகள், பூஜைக்கால முறைகள், பூஜைப் பொருட்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

இயல் – 3

'வழக்காறுகள்' என்ற மூன்றாவது இயலில் திருமாலைப் பற்றிய கதைகள், பாடல்கள், நாடகங்கள், பழமொழிகள், புராணச் செய்திகள், இலக்கிய இலக்கணச் செய்திகள், கருத்துக்கள் பற்றிய வழக்காறுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஆய்வின் பயன்

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பதினெட்டுத் தலங்களில் உறையும் திருமாலின் சிறப்பும் பெருமையும் இவ்விறைவனை மக்கள் வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளும், வீடுபேறு என்ற முக்தியை அடைய இறைவன் திருமாலின் வேதங்கள் பற்றியும் இவ்வாய்வின் வாயிலாக விரிவாகவும் முழுமையாகவும் பிற மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

ஆய்வு முறை

இவ்வாய்வு வைணவத்தின் தொன்மையும் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளான பதினெட்டு தலங்களின் சிறப்பையும் அங்கு உறையும்

இறைவன் திருமாலின் சிறப்பையும் பற்றி முழுமையாக கூறப்பட்டுள்ளது. மூன்று இயல்களும் விளக்கமுறை ஆய்வு அடிப்படையில் அணுகி ஆராயப்பட்டுள்ளது.

இயல் – 1

தல வரலாறு

வைணவம் சிறப்பு

வைணவம் என்பது 108 திவ்யதேசங்களில் குடிகொண்டிருக்கும் திருமாலின் புகழைப் பாடும் ஆழ்வாரின் சிறப்பும் பாசுரமும் சிறப்பித்துக் கூறப்படும் செய்தியை விளக்குகின்றன.

ஸ்ரீவைஷ்ணவம் என்பது விஷ்ணுவைப் பரம்பொருளாகவும் முழுமுதற் கடவுளாகவும் பரப்பிரம்மமாகவும் கொண்ட மதம் வைணவம் ஆகும்.

விஷ்ணு என்றால் எங்கும் பரவி நிறைந்து நிற்பவன் என்று பொருள். திருமால் இந்த உலகத்தைக் காத்தருள பத்து அவதாரங்களைப் புரிந்தார். இவருக்குப் பக்தர்கள் ஏராளமான பெயர்களைச் சூட்டி வழிபடுகின்ற சிறப்பு வைணவத்தின் சிறப்பாகும்.

திருமாலின் சிறப்பாக எட்டெழுத்து மந்திரமான (ஓம் நமோ நாராயணாய) இந்த உலகத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் கட்டுப்பாடாக அமைக்கும் மந்திரமாகப் பக்தர்களால் உச்சரிக்கப் படுகிறது. இவை வைணவத்தின் பிரணவ மந்திரமாகப் பேசப்படுகிறது. நாலாயிர திவ்யபிரபந்தத்தின் பேரண்டம் வைணவம் ஆகும். திருமால் இந்த உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் காத்து இரட்சிப்பதில் உலகளந்த பெருமாளாகக் காட்சியளிக்கின்றான். இவனது புகழைப் பாட

பன்னிரு ஆழ்வார்கள் இந்த உலகில் தோன்றப்பட்டன. இவர்களின் வாழ்க்கை அர்ப்பணிப்பே வைணவ மதத்தைத் தழைத்தோங்கச் செய்தது.

விளையாட்டுக் குழந்தையாகப் பிறந்து இன்றளவும் வைகுண்டத்தை ஆட்சி செய்யும் கடவுளாக வைணவத் தலைவனாகப் பக்தர்களால் சிறப்பித்துப் பேசப்படுகின்றன.

நரகாசுரனைக் கொன்று, உலக மக்களைக் காத்து, அறம் தழைக்கச் செய்தவன் மகாவிஷ்ணுவாகிய திருமால் ஆகும். இவ்வுலகில் 10 அவதாரங்களைப் பிறந்தவன் திருமால் ஆவான். இதில் சிறப்பாகக் கூறப்படுவது இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் ஆகும்.

இராமாவதாரத்தில் பகவான் சாதாரண மனிதனாகவே வாழ்ந்து காட்டினான். பரம்பொருளின் அவதாரம் என்பதைத்தான் எந்த ஒரு செயலிலும் எடுத்துக் கூறவில்லை. இதற்கு நேர்மாறாக, கிருஷ்ணா-வதாரத்தில் கண்ணன் பல இடங்களில் தான் பரம்பொருளின் அவதாரம் என்பதைத் தனது லீலைகளின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளான்.

இப்படிப்பட்ட இறைவனின் திருநாமங்களை உலகில் பரப்பி வைணவத்தையும் திருமாலையும் புகழ்ந்து பல பாசுரங்களை இயற்றி வைணவ மதத்தின் தூண்களாக விளங்கியவர்கள் ஆழ்வார்கள்.

நாலாயிர திவ்யபிரபந்தம் என்னும் நூலில் திருமாலின் புகழைப் பாடி வைணவ மதத்தை உலகறியச் செய்தவர்கள் ஆழ்வார்கள். வைணவத்தின் முழுமுதற் தெய்வமாகிய திருமாலை ஆழ்வார்கள் குழந்தையாகவும் தலைவனாகவும் எல்லையில்லாப் பேராற்றலாகவும் போற்றிப் பாடுகின்றார். ஆழ்வார்கள் பல்வேறு காலங்களில் தோன்றிய பல்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் அவர்களின் ஒட்டுமொத்த

குறிக்கோள் திருமாலைப் போற்றி அவன் திருவடி மூலம் வைணவ மதத்தை பரப்புவதை நோக்கமாகக் கொண்டனர்.

ஆழ்வார்களால் பாடல் பெற்ற வைணவத் தலங்களே 108 திவ்ய தேசங்கள் எனப்படும். ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களின் மூலம் திருமால் உறையும் 108 திருக்கோயில்களைப் பற்றி மங்களாசாசனம் செய்துள்ளனர்.

இந்த 108 தலங்களில், பரமபதம், பாற்கடல் தவிர்த்த ஏனைய திவ்யதேசங்கள் இம்மண்ணுலகின் உள்ளவை. இந்த 108 திவ்யதேசங்கள் இருக்கும் இடங்களைப் பழம் பாடல் ஒன்று கூறுகிறது.

ஈரிருபதாஞ் சோழம், ஈரொன்பதாம் பாண்டி,
ஓர்பதின்மூன்றாம் மலைநாடு, ஓரிரண்டாம்-சீர்நடுதாகு
ஆறொடீரெட்டுத் தொண்டை அவ்வட
நாடாறீரண்டு கூறும் திருநாடு ஒன்றாக் கொள்

இந்தப் பாடலின்படி சோழ நாடு 40 திவ்ய தேசம் பாண்டிய நாடு 18 ஆகவும் மலைநாடு 13 ஆகவும் நடு நாடு 2 ஆகவும் தொண்டை நாடு 22 ஆகவும், வடநாடு 12 ஆகவும், திருநாடு 1 ஆகவும் கூறப்படுகிறது.

வடநாட்டில் திருத்தலங்களின் வரிசையில் விந்தியமலை தெற்கே அஹோபிலம் எனப்படும் சிங்கவேள் குன்றமும் திருமலை எனப்படும் திருவேங்கடமும் காணப்படுகின்றன.

திருமால் சிறப்பு

இவ்வுலகில் வாழும் வைணவ மத மக்களுக்கு முழுமுதற் கடவுளாக வணங்கப்படுபவன் திருமால் ஆவான். இவன் எல்லையில்லா பேராற்றல் உடையவன். பக்தர்கள் மீது அன்பும் கருணையும் ஆற்றலும்

வழங்கக்கூடியவன். கோவிந்தா என்றவுடன் நினைவில் நிற்பவன். ஓம் நமோ நாராயணா என்னும் மந்திரத்திற்கு உரியவன். கோகுலத்தில் நிறைந்தவன், பசுக் கூட்டங்களுக்கு இடையில் வாழ்ந்தவன். பால், தயிர், வெண்ணெய்க்கு உரியவன், பல அவதாரங்களைப் புரிந்தவன், பல அசுரர்களைக் கொன்று வெற்றி கொண்டவன், விண்ணுலகும் மண்ணுலகும் ஆண்டவன், திருப்பாற்கடலைக் கடைந்து நரகாசுரனை வென்றவன், எவராலும் அடிமுடி தொட முடியாமல் கனலாய் காட்சியளித்தவன், பல லீலைகளைப் புரிந்தவன், மகாபாரதம், இராமாயணம் என்னும் இதிகாசம், புராணம் இவற்றின் புகழுக்கு உரியவன், பத்து அவதாரங்களைப் புரிந்தவன், பக்தர்களால் போற்றப்படுபவன், தூணிலும் துரும்பிலும் நிறைந்து நிற்பவன் திருமால் ஆவான்.

இத்தனைப் புகழுக்கும் உரியவனான திருமால் 108 வைணவ திவ்ய தேசங்களிலும் ஆழ்வார்களின் 4000ம் பாசுரங்களில் சிறப்பித்துப் பாடப் பட்டுள்ளார். பக்தர்கள் இறைவன் திருமால் மீது மிகுந்த பற்றும் பரிவும் பக்தியும் அதிகமாகக் கொண்டுள்ளனர். கூப்பிட்ட உடனே ஓடி வந்த தன் துன்பங்களை நீக்கும் தன்மை கொண்டவன் திருமால் மட்டுமே ஆவான் என நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். நோய் நொடிகள் நீக்கியும் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளித்து வாழ்வில் பேரானந்தத்தை அடையவும் வீடுபேறு அடையவும் இறைவன் திருமாலை மனதார வணங்கி அவன் திருவடி சரண் அடைவோம் எனப் பக்தர்கள் போற்றுகின்றனர். கன்னியர்கள் தங்கள் வாழ்வில் சகல செல்வங்களையும் நல்ல துணைவனையும் பெற மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்து திருமாலை வணங்குகின்றனர். இத்தனைப்

புகழுக்கும் சிறப்பிற்கும் உரியவன் திருமால் ஆவான். இத்திருமாலின் புகழை ஆழ்வார்கள் மட்டும் இன்றி இன்று பல பக்தர்களும் சிறப்பித்துப் போற்றுகின்றனர்.

அவ்வாறு 108 வைணவ திவ்ய தேசங்களைச் சிறப்பித்தும் தரிசனம் செய்தும் 108 வைணவ திவ்ய தேச திருப்பதிகள் என்று போற்றி ஆழ்வாரின் சிறப்பும் திருமாலின் சிறப்பும் ந.சுப்புரெட்டியாரால் கூறப்பட்டுள்ளது. திருமாலோடு இயற்கையைப் போற்றியும் இவர் மனதில் எழுந்த திருமாலின் பக்தி உணர்வும் வெளிப்பாடாகப் போற்றப்பட்டுள்ளது.

பாண்டிய நாட்டுத் தலங்கள் 18

108 வைணவ திவ்யதேசங்களில் பாண்டிய நாட்டு வைணவ தலங்கள் 18 ஆகும். அவை பக்தர்களால் மிகவும் சிறப்பித்துப் போற்றப்படும் தலம் ஆகும். திருமாலின் பல அவதாரங்களையும் லீலைகளையும் விளக்கும் தலம் பாண்டிய நாட்டுத் தலம் ஆகும். இவை தற்போது பழைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டத்தில் நிலப்பரப்பு ஆகும். இவை அனைத்தும் திருமாலின் சிறப்பை முழுவதும் விளக்கக்கூடிய தலம் ஆகும். பாண்டிய நாட்டு வைணவத் தலங்கள் எல்லாம் மிகவும் பிரம்மாண்டமானவையாகக் காட்சியளிக்கின்றன. மற்ற திவ்ய தேச தலங்கள் அளவில் சிறியவை ஆகும்.

பாண்டி நாட்டுத் திருப்பதிகள் திருக்கோட்டியூர், மதுரை, கூடலழகர் ஆகியவை மூன்று தலங்களால் ஆனவை. இதில் ஒவ்வொரு தலத்திலும் பெருமாள் ஒவ்வொரு திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார்.

திருக்கோஷ்டியூரில் முதல் தளத்தில் பகவான் பாற்கடல் வண்ணனாகவும், 2வது தளத்தில் நின்ற கோலத்தில் ஸ்ரீமன் நாராயணனாகவும், மூன்றாவது தளத்தில் அமர்ந்த திருக்கோலத்தில் பரமபதநாதனாகவும் அருள் பாலிக்கின்றார்.

இதைப் போலவே கூடல் மாநகரில் முதல் தளத்தில் வீற்றிருந்த கோலத்தில் வியூக சுந்தரராஜனாகவும் இரண்டாவது தளத்தில் நின்ற திருக்கோலத்தில் சூரியநாராயணனாகவும், மூன்றாவது தளத்தில் பள்ளிகொண்ட பெருமாளாகவும் காட்சியளிக்கிறார். இதுபோன்ற மூன்று அடுக்குகளால் ஆன திருப்பதிகள் சோழ நாட்டில் காணப்படவில்லை.

பாண்டி நாட்டு திருப்பதிகள் மலை, ஆறு, கடல் என்ற மூன்று இயற்கைச் சூழல்களிலும் அமைந்துள்ளது.

திருப்புல்லாணி கடற்கரையிலும், திருமாலிருஞ்சோலை மலைப் பகுதியிலும் ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம் ஆகியவை நதிக் கரையிலும் அமைந்துள்ளன.

ஆழ்வார்களில் பெரியாழ்வார், பிராட்டியின் அம்சமாக அவதரித்த ஆண்டாள், வேதத்தைத் தமிழ் செய்த நம்மாழ்வார் மற்றும் மதுர கவியாழ்வார் ஆகிய நால்வரும் அவதரித்தது பாண்டிய நாட்டு மண்ணிலே தான்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலத்தின் புகழையும் பெருமையும் சொல்லி மாளாது.

திருப்புல்லாணியில் வீற்றிருக்கும் ஆதி ஜெகந்நாதப் பெருமானைத் தொழுது புத்திர காமேஷ்டி யாகம் செய்த பின்பே தசரதனுக்கு இராம பிரான் மகனாகப் பிறந்தார்.

பன்னிரு ஆழ்வாரின் சிறப்பு

108 திருப்பதிகளில் பரமபதம், திருப்பாற்கடல் இரண்டும் நிலவுலகில் இல்லாதது. மீதமுள்ள 106 திவ்யதேசங்களில் கடற்கரையில் 7 திவ்யதேசமும் மலைசெய் குன்றின் மீது 19 திவ்யதேசமும் சாதாரண நிலப்பகுதியில் 80 திவ்ய தேசங்களும் காணப்படுகின்றன.

திருமால் எடுத்த பத்து அவதாரங்களில் மச்சம், கூர்மம், பரசுராமன், பலராமன், கல்கி ஆகிய ஐந்து அவதாரங்களும் தசாவதாரங்களில் ஏனைய அவதாரமான வராகம், நரசிம்மம், வாமனம், இராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்களும் ஆழ்வார்களால் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன.

வைணவ மதத்தின் தூண்களாகக் காணப்பட்டவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவார்கள். வைணவத்தின் முழுமுதற் கடவுளாகிய திருமாலை ஆழ்வார்கள் குழந்தையாகவும் தலைவனாகவும் எல்லையில்லாப் பேராற்றலாகவும் போற்றிப் பாடுகின்றனர். பன்னிரு ஆழ்வார்களின் பெயர்கள்:

1. *பொய்கை ஆழ்வார்*
2. *பூதத்தாழ்வார்*
3. *பேயாழ்வார்*
4. *திருமழிசை ஆழ்வார்*
5. *நம்மாழ்வார்*
6. *மதுரகவி ஆழ்வார்*
7. *குலசேகர ஆழ்வார்*

8. பெரியாழ்வார்

9. ஆண்டாள்

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார்

11. திருப்பாணாழ்வார்

12. திருமங்கை ஆழ்வார்

பொய்கை ஆழ்வார் முதல் திருவந்தாதி 100 பாசுரங்களும் பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதி 100 பாசுரங்களும் பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி 100 பாசுரமும் திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தம் 120, நான்முகன் திருவந்தாதி 96 நம்மாழ்வார் திருவாய்மொழி 1102 பாசுரம் திருவிருத்தம் 100 பாசுரம், திருவாசிரியம் 87 பாசுரம் பெரிய திருவந்தாதி 87 பாசுரம் பாடியுள்ளார்.

மதுரகவியாழ்வார் கண்ணி நுண் சிறுதாம்பு 11 பாசுரம்

குலசேகர ஆழ்வார்

பெருமாள் திருமொழி 105 பாசுரமும், பெரியாழ்வார். பெரியாழ்வார் திருமொழி 461 பாசுரமும், ஆண்டாள் திருப்பாவை 30 பாசுரமும், தொண்டரடிப் பொடி ஆழ்வார் திருமலை 45 பாசுரமும், திருப்பள்ளி எழுச்சி 10 பாசுரமும், திருப்பாணாழ்வார் அமலனாதி பிரான் 10 பாசுரமும், திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி 1084 பாசுரமும், திருக்குறுந்தாண்டகம் 20 பாசுரமும், திருநெடுந்தாண்டகம் 30 பாசுரமும் திருவெழு கூற்றிருக்கை 1 பாசுரமும், சிறிய திருமடல் 40 பாசுரமும், பெரிய திருமடல் 78 பாசுரமும், திருவரங்கத்து அமுதனார் இராமானுஜ நூற்றந்தாதி 108 பாசுரமும், பன்னிரு ஆழ்வார்களால் 4000 பாசுரங்கள் பாடப் பட்டுள்ளன. இவை பன்னிரு ஆழ்வார்களின் புகழ்ச் சிறப்பாகும். இப்பாசுரங்கள் யாவும் ஆழ்வார்கள் திருமால் மீது கொண்டுள்ள அளவு

கடந்த பேராற்றலை விளக்குகின்றன. ஆழ்வார்களும் வைணவத்தின் கடவுளாகவே போற்றப்படுகின்றன. வைணவ இறைவனான திருமாலுக்கு ஒப்பானவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள். திருமாலின் புகழைப் பாடி தங்களின் வீடுபேறு அடையும் பாக்கியம் கொண்டவர்கள் ஆழ்வார்கள் மோட்சம் என்னும் விமோசனம் பெற வைகுண்டத்தை ஆளும் திருமாலின் மீது பக்தியாற்றலைப் பெருக்கி பாசுரங்களின் வாயிலாகத் தங்களின் புகழைத் தழைத்தோங்கச் செய்தனர்.

திருவரங்கம் ஸ்ரீரங்கநாதனைவிட பெரிய பெருமாளாக சயனத் திருக்கோலத்தில் எம்பெருமான் பள்ளி கொண்டுள்ள திருமெய்யம் என்ற திருப்பதியும், சித்திர கோபுரம் எனப்படுவதும் மோட்சம் தரும் தெற்கு வீடாகத் திகழ்வதும், வைகுண்ட ஏகாதசியைப் போன்று கைசிக ஏகாதசியால் புகழ்பெற்றதும் திருமங்கையாழ்வார் பரமபதம் அடைந்த திருக்குறுங்குடி என்ற திருப்பதியையும், வைணவத்தை வளர்க்க தந்தையும் மகளுமாகப் பெரியாழ்வார் ஆண்டாள் என்ற திருநாமம் பூண்டு அவதரித்த புண்ணிய பூமியான ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பல திவ்ய தேசங்களைத் தன்னகத்தே கொண்டது பாண்டி நாடு ஆகும். இப்புகழுக்குரிய பாண்டிய நாட்டுத் தலங்களின் திருப்பதிகளின் பெயர்களாக ந.சுப்புரெட்டியார் கூறுவன:

1. திருக்கோட்டியூர் எந்தை
2. திருமெய்யத்து இன்னமுதம் (திருமெய்யம்)
3. திருப்புல்லாணி எம்பெருமான் (திருப்புல்லாணி)
4. மதுரைக் கூடல் அழகர் (திருக்கூடல் என்னும் மதுரை)
5. திருமோகூர்க்காளமேகம் (திருமோகூர்)

6. திருமாலிருஞ்சோலை நின்ற வள்ளல் (திருமாலைருஞ் சோலை என்னும் அழகர் மலை)
7. வில்லிபுத்தூர் வேலர் பயந்த விளக்கு (ஸ்ரீவில்லிபுத்தூர்)
8. திருத்தண்காலூர் அப்பன் (திருத்தங்கல்)
9. ஆழ்வார் திருநகரி ஆதிநாதப் பெருமாள் (திருக்குறுகூர் என்னும் ஆழ்வார் திருநகரி)
10. திருக்கோளூர் வைத்தமாநிதி (திருக்கோவூர்)
11. திருபேரெயில் மகர நெடுங்குழைக்காதன் (தென் திருப் பேரை)
12. சீவைகுந்தத்து தேவன் (ஸ்ரீவைகுண்டம்)
13. வரகுணமங்கை விசயாசனர் (திருவரகுணமங்கை)
14. திருக்குளந்தை மாயக்கூத்தன் (திருக்குளந்தை)
15. திருப்புளிங்குடிக்காய் சினவேந்தன் (திருப்புளிக்குடி)
16. தொலைவிலிமங்கலத் தாமரைக் கண்ணன் (திருத்தொலை வில்லிமங்கலம்)
17. வானமாமலை என்னும் தோத்தாத்திரிநாதன் (திருவரமங்கை
18. குறுங்குடிக்குழகநம்பி (திருக்குறுங்குடி)

போன்ற வைணவ திவ்யதேசய 18 பாண்டிய திருப்பதிகளும் திருத் தலங்களும் பக்தர்களாலும் ஆழ்வார்களாலும் சிறப்பித்துப் புகழப் படுகின்றன.

நவதிருப்பதிகளைத் தவிர்த்த ஏனைய பாண்டி நாட்டுத் திருப்பதிகள் சற்று இடைவெளிவிட்டுக் காணப்படுகின்றன.

பாண்டியநாடன் மதுரையை வைத்து சிறப்பித்து தரிசிக்கப்படும் தலங்கள் திருக்கூடல், திருமாலிருஞ்சோலை, திருமோகூர், திருக்கோஷ்டியூர், திருப்புல்லாணி, திருமெய்யம் ஆகியவை ஆகும்.

திருநெல்வேலியை மையமாகக் கொண்ட பாண்டிய நாட்டுத் தலங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், திருத்தண்கால் திருவரமங்கை என்னும் வானமாமலை ஸ்ரீவைகுண்டம், திருவரகுணமங்கை, திருப்புளிங்குடி, திருத்தொலைவில்லி மங்கலம், திருக்குளந்தை, திருக்கோளூர், திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி, தென்திருப்பேரை, திருக்குறுங்குடி ஆகியன தற்போதைய பெயரில் வழங்கிவரும் திருத்தலங்களின் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பெயர் ஆகும்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தலவரலாறு

பாண்டி நாட்டுத் திருப்பதிகளின் திவ்யதேசங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிச்சிறப்பு காணப்படுகின்றன.

திருக்கோட்டியூர் எந்தை (திருக்கோஷ்டியூர்)

வான்பார்க்கும் வைங்கூழ் போல் வாளா உனது அருளே
யான் பார்க்க நீபார்த்து இரங்கினாய்-தேன் பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி ஊரானே, இன்னமும் என்
ஆசைத் திருக்கோட்டி யான் (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 42)

தலம் : திருக்கோஷ்டியூர்

மூலவர் : உரகமெல்லணையான், க்ஷீராப்திநாதன்

உத்சவர் : சௌம்ய நாராயணன்

தாயார் : திருமாமகள், நிலமாமகள், குலமாமகள் என்ற மூன்று பெயர் உண்டு.

தீர்த்தம் : தேவபுஷ்கரணி என்ற திருப்பாற்கடல்

விமானம் : அஷ்டாங்க விமானம்

தல வரலாறு

பிரம்மாண்ட புராணத்தில் இத்தலம் சிறப்பித்துப் பேசப்படுகிறது. இத்தலம் இருக்கும் பகுதிகளில் புராண காலத்தில் கதம்ப முனிவரின் ஆசிரமம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அறவழியை நாடாதவர்கள் இப்பகுதியில் நுழைந்தால் உயிரிழக்க நேரிடும் என்று கதம்ப முனிவரின் சாபம் இருந்ததால் அசுரர் நல்வழி செல்லாதவர் என இவர்கள் கதம்ப முனிவர் தவம் செய்யும் பகுதியில் நுழைய அஞ்சி வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இருக்க ஒரு சமயம் இரணியன் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்களும் முனிவர்களும் ஸ்ரீமன்நாராயணனைப் பாற்கடலில் சந்தித்து, இரணியனால் தங்களுக்கு ஏற்படும் கொடுமைகளைச் சொல்லி, தங்கள் அனைவரையும் காப்பாற்றும்படி வேண்டினார்கள். அப்போது எம்பெருமான் இரணியனும் அவனது ஆட்களும் நுழைய முடியாத கதம்ப மகரிஷியின் ஆசிரமத்திற்குத் தேவர்கள் அனைவரையும் வரும்படி சொன்னார்.

பெருமானின் ஆணைப்படியே கதம்பவனத்திற்கு பிரமன், சிவன் உள்ளிட்ட தேவர்கள், சப்தரிஷிகள் உள்ளிட்ட முனி கணங்கள் ஆகிய அனைவரும் ஒன்றுகூடினர். தேவர்கள் அனைவரும் கோஷ்டியாய் கதம்பவனத்தில் கூடிய காரணத்தால் இத்தலம் திருக்கோஷ்டியூர் என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

மேலும் திருக்கோஷ்டியூர் என்பதனைப் பிரித்தால் அது திருக்கு + ஒட்டியூர் என்று பிரியும். திருக்கு என்றால் பாவம் என்பது பொருள். கதம்பவனப் பகுதியில் நுழைந்த மாத்திரத்தால் ஒருவன் இம்மை,

மறுமையில் செய்த பாவங்கள் அனைத்தும் ஓடிவிடும் என்ற காரணத்தால் திருக்கோஷ்டியூர் என்று பெயர் பெற்றது.

தலத்தின் பெருமை

இரணியன் பிரம்மதேவனிடம் தனக்கு தேவர்களாலோ மனிதர்களாலோ பகலிலோ இரவிலோ எந்தவிதமான ஆயுதங்களாலும் மரணம் நேரக் கூடாது என்று வரம் பெற்றிருந்தான். பெருமான் நரசிம்மவதாரம் எடுத்து இரணியனை அழிப்பதாக அவதாரம் கொண்டார். இவை இரணியன் மகன் பிரகலாதன் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தான். இதைக் கண்ட இரணியன் கோபம் கொண்டு உன் நாராயணன் எங்கே இருக்கிறான் என்று வினவ பிரகலாதன் அவன் தூணிலும் இருப்பான்; அணுவினை சதகூறிட்ட துரும்பிலும் இருப்பான் என்று மறுமொழி அளித்தான்.

இதனால் சினம் கொண்ட இரணியன் ஒரு தூணினைப் பிளக்க அதிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீநரசிம்மன் அவதாரமான பெருமான் இரணியனை ஒரு மாலைப் பொழுதில், வாயிற்படியில் வைத்து தனது கூரிய நகங்களால் கிழித்துக் கொன்றார். இவ்வாறு திருக்கோஷ்டியூர் தலம் பெருமை வாய்ந்த தலமாகவும், சிறப்பு வாய்ந்த தலமாகவும் பேசப்படுகிறது.

இரணியவதம் முடிந்த பிறகு கதம்ப மகரிஷி பிரம்மனிடம் ஸ்ரீமன் நாராயணன் இரணியனை வதம்செய்த மங்கலஷக்ரகங்கள் தனக்கு வேண்டும் எனக் கேட்டார். அப்போது பிரம்மா தேவ சிற்பியான விஸ்வகர்மா மற்றும் அசுர சிற்பியான மயன் ஆகிய இருவரையும் அழைத்து தேவலோகத்தில் உள்ளது போன்ற மூன்று அடுக்குகள்

கொண்ட அஷ்டாங்க விமானத்தைக் கதம்ப வனத்தில் அமைக்கச் சொன்னார். அவ்வாறு எழுப்பப்பட்ட ஆலயத்தில் எம்பெருமானைப் பிரதிஷ்டை செய்ததாகவும் ஐதீகம். விஸ்வகர்மா, மயன் ஆகியோரால் செய்யப்பட்ட ஆலயமே தற்போது திருக்கோஷ்டியூரில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இரணிய வதம் முடியும் வரை தேவேந்திரன் கதம்பவனத்தில் தங்கி இருந்ததால் இரணியவதம் முடிந்த பிறகு முனிவரிடம் விடை கொள்வதற்கு முன் தேவேந்திரன், இந்திரலோகத்தில் தன்னால் பூஜிக்கப்பட்ட பேரழகு வாய்ந்த ஸ்ரீதேவி, பூதேவி, நிஷாதேவியுடன் கூடிய ஸ்ரீசௌம்ய நாராயணப் பெருமாளின் விக்ரகத்தைக் கதம்ப மகரிஷியிடம் கொடுத்ததாகவும், இந்திரனாலும் அதன்பின் கதம்ப மகரிஷியாலும் பூஜிக்கப்பட்ட ‘சௌம்ய நாராயணே’ தற்போது உத்சவமூர்த்தியாகத் திருக்கோஷ்டியூர் தலத்தில் சேவை சாதிக்கிறார் என்றும் சொல்லுவர்.

இவ்வாறு பெருமை வாய்ந்த தலமாகப் பக்தர்களால் சிறப்பித்துப் பேசப்படுகிறது திருக்கோஷ்டியூர்த் தலமாகும்.

108 திவ்ய தேசங்களில் இரண்டு திருப்பதிகளில் மட்டுமே அஷ்டாங்க விமானம் காணப்படுகிறது. இவை பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பெருமையாகக் கருதப்படுகிறது. ஒன்று மதுரை கூடலழகர் திருத்தலம் மற்றும் திருக்கோஷ்டியூர் ஆகிய இரண்டு தலங்களில் மட்டுமே எம்பெருமான் அஷ்டாங்க விமானத்தின் கீழ் சேவை சாதிக்கின்றார்.

திருக்கோஷ்டியூரில் உள்ள அஷ்டாங்க விமானத்தின் வடபகுதி அசுர சிற்பியான மயனாலும் தென்பகுதி தேவசிற்பியான

விஸ்வகர்மாவால் கட்டப்பட்டது என்றும் புராணங்கள் வாயிலாகத் தெரிகிறது. இந்தப் பெருமை மற்ற திவ்ய தேசங்களுக்குக் கிடையாது. இப்பெருமைக்குரிய திருக்கோஷ்டியூர் திருத்தலத்தை ந.சுப்பு ரெட்டியார் மனம் உருகி புகழ்ந்து வணங்கி கூறியுள்ளார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான திருக்கோட்டியூர் எந்தைப் பெருமானை ந.சுப்பு ரெட்டியார் அவர்கள் இயற்கை வர்ணனையுடன் ஆழ்வாரின் பாசுரங்களுடன் எம்பெருமானின் புகழைப் போற்றுகின்றார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் இரண்டாவது தலமாக திருமெய்யத்து இன்னமுதம் (திருமெய்யம்) சிறப்பித்துக் கூறப்படுகிறது.

திருமெய்யத்து இன்னமுதம் (திருமெய்யம்)

ஆளாய் உனக்கு அன்பாய் ஆசையாய் நாணிலியாய்
வாளா மனைவி என்று வாழ்வேனைக்-கேளாய்
திருமெய்ய மாயா சிலை கால் வளைத்து
வரு மெய்ய மாயா மதன் (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 43)

தலம்	: திருமெய்யம்
மூலவர்	: ஸத்யகிரிநாதன், ஸத்யமூர்த்தி
உத்சவர்	: மெய்யப்பன், ராஜகோபாலன்
தாயார்	: உய்யவர்த நாச்சியார், உஜ்ஸீவனத் தாயார்
தீர்த்தம்	: கதம்ப புஷ்கரணி, ஸத்ய தீர்த்தம்
விமானம்	: சத்யகிரி விமானம்
ஸ்தல விருட்சம்	: அரசமரம், பலாமரம்

தலவரலாறு

இத்தலம் இருக்கும் சிறிய மலைப்பகுதி ‘மெய்யம்’ என்று அழைக்கப்படுகிறது. எம்பெருமான் இங்கு கோயில் கொண்ட

காரணத்தால் ‘திரு’ என்ற அடைமொழியுடன் திருமெய்யம் என்ற பெயர் வழங்கப்படுகிறது. இத்தலத்தில் எம்பெருமான் நின்ற மற்றும் கிடந்த திருக்கோலங்களில் சேவை சாதிக்கின்றார். கிடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் பெருமாள், பள்ளிகொண்ட பெருமாள் என்ற திருநாமத்தில் போற்றப்படுகிறார். இத்தலத்தில் பெருமாள் வந்த விதம் இரண்டு ஐதீகங்கள் பேசப்படுகின்றன. நின்ற திருக்கோலத்தில் சேவை செய்யும் பெருமாள் சத்ய மகரிஷி செய்த தவப்பயனாலும், கிடந்த திருக்கோலத்தில் சேவை புரியும் பெருமான் ஆதிசேஷன் செய்த தவத்தின் காரணமாக வந்ததாகச் சொல்லுவர்.

புராண காலத்தில் இமயமலையின் வடபுறத் தாழ்வரையில் புஷ்ப யாத்திரை என்ற நதி ஓடியதாகவும் அதன் கரையில் சித்ரசிலை என்ற பாறையும் அப்பாறையின் அருகில் பத்ரவடம் என்ற ஆலமரமும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அம்மரத்தின் அடியில் முன்னொரு யுகத்தில் ஸ்த்ய மகரிஷி என்ற முனிவர் பரமனைக் குறித்து தவம் புரிந்தார். முனிவரின் தவத்தைக் கண்ட இறைவன் பரமன் நேரில் தோன்றி வேண்டுவது யாது என்று வினவினார். அதற்கு முனிவர் தான் நினைக்கும் போதெல்லாம் ஸ்ரீமன் நாராயணன் நேரில் தோன்றி சேவை சாதிக்க வேண்டும் என்று கூறினார். பரமன் ஒப்புக் கொண்டு சந்திரனும் ஆதிசேஷனும் தன்னைக் குறித்து முன்பு தவமிருந்த சத்யக்ஷேத்ரத்தில் சென்று மீண்டும் தவமியற்றி வருமாறு முனிவரிடம் கட்டளையிட்டான்.

முனிவரும் ஒப்புக் கொண்டு தனது சிறிய விருப்பமாக ஒன்றைப் பூர்த்தி செய்ய வேண்டினான். அதாவது இமயமலையில் தன்னுடன் இருக்கும் புஷ்பபத்திரா (நதி), சித்திரசிலை (பாறை), பத்ரவடம் (ஆல மரம்) ஆகிய மூன்றும் தன்னுடன் இரண்டற ஒன்றிவிட்டதால்

அம்மூன்றையும் தன்னுடன் சத்ய க்ஷேத்திரத்திற்கு அனுப்பி வைக்க வேண்டினார். பரமனும் ஒப்புக்கொண்டு நொடிப் பொழுதில் ஐராவதம் என்ற இந்திரனின் யானை நிறைவேற்றியது. இவை மூன்றும் சத்ய க்ஷேத்திரத்தில் இன்று புஷ்யபத்ராநதி இத்தலத்தின் புஷ்பகரணியாகவும், சித்ரசிலை என்ற பாறை மெய்ய மலையாகவும், பத்ரவடம் என்ற ஆல மரம் இத்தலத்தில் அரச மரமாகவும் வந்து சேர்ந்தது என்று சொல்லப் படுகிறது.

சத்யமுனிவருக்கும் புரூரவசுவிற்கும் எம்பெருமான் இத்தலத்தில் சத்யமூர்த்தியாக கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலேயே சேவை சாதித்ததாகச் சொல்லுவர். அந்தத் திருக்கோலத்திலேயே இன்றும் திருமெய்யம் தலத்தில் பெருமான் சேவை சாதிக்கின்றான்.

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள சகலவிதமான ஞானங்களும் தனக்கு வாய்க்கப்பெற வேண்டும் என்று ஆதிசேஷனால் ஆராதிக்கப் பட்ட தலம் திருமெய்யம். எனவே இத்தலம் அஞ்ஞான இருள் நீக்கி மோட்சம் தரக்கூடிய தலம் என பக்தர்களால் போற்றப்படுகின்றன.

ஆதிசேஷன் தன்னிடமுள்ள தமோகுணங்கள் நீங்கி சத்வகுணம் பெற ஸ்ரீமன் நாராயணன் குறித்து கடும் தவம்புரிந்தான். ஆதிசேஷன் தவத்தைக் கண்ட பரமன் ஹயக்கிரீவ வடிவத்தில் குதிரை முகம் கொண்டு காட்சி தந்தார். உடனே ஆதிசேஷன் எம்பெருமானுக்குப் பூஜை செய்து சத்வ குணங்களைப் பெற்று திருப்பாற் கடலில் சயனித்து இருப்பது போன்ற திருக்கோலத்தில் காட்சியளித்தார்.

அன்று முதல் ஸ்ரீமன் நாராயணன் ஆதிசேஷ சயனத்தில் பள்ளி கொண்டிருப்பது போன்ற திருக்கோலத்தில் அர்ச்சாவதார ரூபத்தில் திருமெய்யத்தில் சேவை புரிகின்றார்.

இத்தலத்தில் எம்பெருமான் ஒருகரத்தால் ஆதிசேஷனுக்கு அருள் செய்யும் பாவத்திலும் மற்றொரு கரத்தால் தன் மார்பில் உறையும் பிராட்டியாரைப் பாதுகாக்கும் பாவனையிலும் சேவை சாதிக்கிறார்.

இத்தலத்தின் சிறப்பு மகேந்திர, நரசிம்ம பல்லவன் காலத்தில் குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டதாகவும் இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் காலத்தில் வாழ்ந்த சாத்தன் மாறன் என்பவன் இத்தலத்தைப் புதுப்பித்ததாகவும் இவனது தாயான பெருந்தேவி என்பவர் இத்தலத்திற்கு நிறைய நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளார் என்பதும் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது.

இத்தலத்தை ந.சுப்புரெட்டியார் அவர்கள் தரிசித்து எம்பெருமாளின் ஆற்றலைப் பக்தியின் மூலம் பெற்று அவற்றின் பெருமையும் இயற்கை அழகையும் தரிசித்து ஆசி பெற்றுள்ளார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் மூன்றாவது தரிசனத் தலமாகத் திருப்புல்லாணி எம்பெருமான் புகழைப் பற்றிய தலவரலாறு:

திருப்புல்லாணி எம்பெருமான் (திருப்புல்லாணி)

மதயானை கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா விதயங் கரையும்-முதலாய
புல்லாணி மாலே புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி என் செவிக்கு மாறு

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 44)

தலம் : திருப்புல்லாணி

மூலவர் : ஆதி ஜெகந்நாதன், சக்கரவர்த்தித் திருமகன்

உத்சவர் : கல்யாண ஜெகந்நாதன்

தாயார் : கல்யாணவல்லி, பத்மாஸனி

தீர்த்தம் : இங்கு பத்து தீர்த்தங்கள் உள்ளன. அதில் முக்கியம்சம் உடையவை ஹேம, சக்கர, ஹம்ஸ, வருண, தரும, ஆதிசேது, ரத்னாகரம், ராம தீர்த்தம் போன்றவையாகும்.

விமானம் : கல்யாண விமானம்

ஸ்தல விருட்சம் : அஸ்வத்த விருட்சம் (அரசமரம்)

தல வரலாறு

இராவணன் சீதாதேவியைக் கவர்ந்து சென்று இலங்கையில் சிறை வைக்கிறான். அப்போது வானர சேனையுடன் சேதுக்கரையில் தங்கியிருந்த இராமன் இலங்கைக்கு சேனையுடன் எப்படி கடல் கடப்பது என்று யோசனை செய்தான். கடலுக்கு அரசனான வருணனைப் பிரார்த்தித்து 7 நாட்கள் தர்ப்பைப் புல்லான நாணலின் மீது சயனித்து பிரயோபவேசம் செய்தான். இவற்றால் தர்ப்பசயனம் என்ற பெயரில் வடமொழியில் இதனை அழைப்பர். இதனையே தமிழில் புல்லணை என்பர். திரு என்ற அடைமொழியையும் சேர்த்து திருப்புல்லணை என்றாயிற்று. அதுவே காலப்போக்கில் மருவி 'திருப்புல்லாணி' என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று.

இப்பெயர் வந்த விதம் குறித்து மற்றொரு ஐதீகமும் சொல்வது வழக்கம். புல்லர் என்ற மகரிஷி 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாட்சர மந்திரத்தினால் எம்பெருமானை வழிபட்டதால் முனிவரின் தவம் கண்ட பரமன் இங்குள்ள அரச மரத்தடியில் ஆவிர் பாவித்து அவருக்கு சேவை தந்த காரணத்தால்புல்லரின் நினைவாகப் புல்லாரண்ய க்ஷேத்திரம் என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

புல்ல மகரிஷிக்கு எம்பெருமான் இத்தலத்தில் கல்யாண ஜெகந்நாதராகத் தனது தேவிமார்களுடன் நான்கு புயங்களுடன், பஞ்சாயுதம் ஏந்தி சேவை சாதிக்கின்றார் என்பது ஐதீகம். கல்யாண ஜெகந்நாதரைத் தெய்வச்சிலையார் என்ற திருநாமத்திலும் அழைப்பது வழக்கம்.

தர்ப்பசயனத்தில் சேவை சாதிக்கும் இராமன் சக்கரவர்த்தித் திருமகன் என்ற திருநாமத்துடன் அழைக்கப்படுகிறான். திருப்புல்லாணியில் பெருமாள் நான்கு விதமாக காட்சியளிக்கிறார். இவ்விறைவனை வணங்கி வந்தால் இம்மை மறுமையில் துன்பம் நீங்கி இன்பம் பெருகுவதாக தரிசனம் கண்ட ந.சுப்புரெட்டியார் மனம் உருகி ஆழ்வாரின் பாசுரமான திருமங்கையாழ்வாரின் திருவாக்கில் எழுந்த

இலங்கு முத்தும் பவளக்
கொழுந்தும் எழில் தாமரை
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து
அழகாய புல்லாணி (பெரி. திரு. 93:10)

பாசுரத்தைப் பதிவு செய்து மனம் நெகிழ்கிறார். இயற்கையைத் தலமாகக் கொண்ட திருப்புல்லாணித் திருத்தலம் சிறப்பு வாய்ந்த தலமாகவும் புண்ணியத் தலமாகவும் பக்தர்களால் பேசப்படுகிறது.

திரேதாயுகத்தில் தயரதன் புத்திரப்பேறு வேண்டி புத்திர காமேஷ்டி யாகம் செய்த தலம் திருப்புல்லாணி. அதன் காரணமாக நான்கு வேதங்களும் இராமன் முதலான நான்கு புத்திரர்களாகத் தயரதனுக்கு வாய்க்கப் பெற்றனர் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கையாகும்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் நன்மை வாய்ந்தத் தலமாகவும் நான்காவது தலமாகவும் ந.சுப்புரெட்டியாரால் சிறப்பித்துக் கூறப்படுவது மதுரைக் கூடல் அழகர் திருத்தலம் ஆகும்.

மதுரைக்கூடல் அழகர் (திருக்கூடல் என்னும் மதுரை)

வாழ்விப்பான் எண்ணமோ வல்வினையில் இன்ன மென்னை
ஆழ்விப்பான் எண்ணமோ அஃதறியேன்-தாழ்வினைப்
பாடல் அழகார் புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழகா நின் குறிப்பு (108 திருப்பதியந்தாதி, 647)

தலம் : திருக்கூடல் என்னும் மதுரை

மூலவர் : கூடலழகர், சூரியநாராயணராக

உத்சவர் : சுந்தரராஜன்

தாயார் : மதுரவல்லி

தீர்த்தம் : ஹேம, புஷ்கரணி, சக்ர, க்ருதமாலாநதி, வைகை நதி

விமானம் : அஷ்டாங்க விமானம்

தல வரலாறு

ஆறுகள் சங்கமமாகும் இடங்கள் பாரத மண்ணில் பெருமையுடன் போற்றப்படுகிறது. வடநாட்டில் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று நதிகளும் சேர்ந்த இடம் திருவேணி சங்கமம் ஆயிற்று. தொண்டை நாட்டில் பாலாறு, சேயாறு, கம்பையாறு ஆகிய மூன்றும் சேர்ந்த இடம் திருமுக்கூடல் ஆயிற்று. அதே போன்று நெல்லையில் தாமிரபரணி, சித்ராநதி, கோதண்டராம நதி (கயத்தாறு) ஆகிய மூன்றும் சேர்ந்த இடம் முக்கூடல் ஆயிற்று.

வாமன அவதாரத்தின்போது பெருமான் தனது பாதம் ஒன்றினால் விண்ணுலகை அளக்கிறார். பெருமானின் பாதம் பிரம்மனின் சத்திய

லோகம் வரை செல்கிறது. உடனே பிரம்மன் தனது கமண்டல நீரால் பெருமானின் பாதத்தை அபிசேகம் செய்கிறான். பெருமானின் பாதத்தைக் கழுவிய புனித நீர் மதுரையம்பதியில் இரு கூறுகளாகப் பிரிந்து விழுகிறது. இதன் ஒரு தொகுதி வைகை ஆறாகவும், மற்றொரு தொகுதி திருமாலிருஞ்சோலையில் சிலம்பாறாகவும் பெருகிற்று. மதுரையில் விழுந்த வைகை நதி இரு பிரிவாய்ப் பிரிந்து மதுரையை அரண்போல் சுற்றி மீண்டும் ஒன்று சேர்வதால் திருக்கூடல் என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

இரண்டாகப் பிரிந்த வைகை நதியின் ஒரு பிரிவே கிருதமாலா நதி எனப் பெயர் பெற்றது. இக்கிருதமாலா நதியின் கரையில் தான் கூடலழகர் கோயில் கொண்டுள்ளார்.

வருண பகவான் ஒரு சமயம் மதுரையை அழிப்பதற்காக, திரண்ட மேகங்களை அனுப்பி மழை பொழியச் செய்தாராம். அப்போது அனைவரும் கூடலழகரைப் பிரார்த்தித்தனராம். உடனே பகவான் நான்கு மேகங்களை ஏவ அவை மதுரை நகரைச் சுற்றியும் மாடங்கள் போல் நின்று மழையைத் தடுத்து விட்டனவாம். அதன் காரணமாக இத்தலத்திற்கு திருக்கூடல் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

இத்தலத்தில் உறையும் பெருமான் நான்கு யுகத்தில் சேவை சாதிக்கின்றார். அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் போன்றவை ஆகும்.

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் கூடலழகப் பெருமாளே துவரைக் கோமான் என்ற பெயரில் சங்கப் புலவராக வீற்றிருந்து தமிழ் மொழியை வளர்த்ததாக ஆராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகின்றனர்.

பெரியாழ்வார், கூடலழகர் திருக்கோயிலுக்கு (பாண்டிய மன்னனுக்கு பரத்துவ நிர்ணய விளக்கம் அளித்த பின்பு) விஜயம் செய்தபோது, யானை மணிகளையே தாளங்களாகக் கொண்டு திருப்பல்லாண்டினை அருளிச் செய்ததாகச் சொல்லப்படுவது உண்டு. இச்சிறப்பிற்குரிய தலமாக மதுரைக்கூடல் அழகர்கோயில் இன்றும் சிறப்பித்துப் பக்தர்களால் பேசப்படுகிறது. இதனை,

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு (திருப்பல்லாண்டு, 1)

இத்தலத்தின் மீது வீற்றிருக்கும் இறைவன் பெருமான் மீது கொண்டுள்ள பக்தியாற்றலால் இப்பல்லாண்டுப் பாடல் ஆழ்வாரால் பாடப்பட்டது.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் ஐந்தாவது அம்சத் தலமாகக் கூறப்படுவது திருமோகூர்க் காளமேகம் என்னும் திருமோகூர் பெருமான் தல வரலாறு ஆகும்.

வாயால் மலர் கோதி வாவி தொறும் மேயுமோ
மேயாமல் அப்பால் விரையுமோ?-மாயன்
திருமோகூர் வாயின்று சேலுமோ நாளை
வருமோ, கூர்வாய் அன்னம் வாழ்ந்து
(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 46)

தலம் : காளமேகப் பெருமாள்

உத்சவர் : திருமோகூர் ஆப்தன், குடமாடு கூத்தன், மரகதி மணித்தடம், சுடர்கொள் ஜோதி

தாயார் : மோகூர்வல்லி, மோகனவல்லி, மேகவல்லி, நாச்சியார்

தீர்த்தம் : க்ஷீராப்தி புஷ்கரணி (திருப்பாற் கடல் தீர்த்தம்), பிரம்ம, பாபநாச ஸ்வர்கத்வாரா, நரகாசுர பரமன்

விமானம் : சதுர்முக (கேதகி) விமானம்

ஸ்தல விருட்சம் : அரச மரம்

தல வரலாறு

மோகன க்ஷேத்திரம் என்று போற்றப்படும் இத்தலம் பெருமான் எடுத்த மோகினி அவதாரத்துடன் சம்பந்தம் பெற்றிருப்பதால் மோகன க்ஷேத்ரம் என்றழைக்கப்படுகிறது. அதுவே காலப்போக்கில் மோகினி யூராகத் திரிந்து பின் மோகூர் என்று மாறியது என்றும் திரு என்ற அடை மொழியையும் சேர்த்து தற்போது திருமோகூர் என்று அழைக்கப்படுகிறது என நம்மாழ்வார் இத்தலத்தைத் தாள தாமரைத் தடம் அணிவயல் திருமோகூர் என்று சிறிய திருமடலில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

ஒரு சமயம் பிருகு முனிவர் இந்திரனுக்கு அளித்த சாபத்தால் தேவலோகத்தில் உள்ள செல்வங்கள் அனைத்தும் கடலில் சென்று மறைந்தது. இதனால் தேவர்கள் பலம் குறைந்து அசுரர்கள் மூர்க்க பலம் கொண்டு தேவர்களைத் தாக்கினர். அசுரர்களுக்குப் பயந்த தேவர்கள் பல இடங்களில் மறைந்து வாழத் தொடங்கினர்.

இறுதியில் தேவர்கள் அனைவரும் பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனைத் தொழுது தங்களைக் காத்து இழந்த செல்வங்கள் மீண்டும் கிடைக்க பெருமானை வேண்டினர். அப்போது பரமன், மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலில் அமுதம் கடைந்தால் அதன் மூலம் அனைத்து

நன்மைகளும் ஏற்படும் என்று கூறினார். அதன்படியே தேவர்கள் அசுரர்களைத் துணையாகக் கொண்டு அமுதம் கடைந்தனர்.

அப்போது எம்பெருமான் ஆமையாக அவதாரம் எடுத்து மந்திர மலை கடலில் அமிழ்ந்து விடாமல் தனது முதுகு ஓட்டின் மீது தாங்கிப் பிடித்தார். பின்னர் பாற்கடலிலிருந்து காளகூட விஷம், சந்திரன், உச்சைச் சிரவசு என்ற குதிரை, கற்பக விருட்சம், ஐராவதம் என்ற வெள்ளை யானை, அகலிகை, மகாலட்சுமி, கௌஸ்துபமணி என்று பலவும் படிப்படியாக வெளிப்பட்டது. இறுதியில் அமிர்தம் தோன்றியது.

அதைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அது தங்களுக்கே சேர வேண்டும் என்று சண்டை பிடித்தனர். இவர்களின் சண்டையைத் தீர்க்கும் பொருட்டு எம்பெருமான் மோகினி அவதாரம் எடுத்தார்.

பிறகு தேவர்களையும் அசுரர்களையும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து அமரும்படி செய்த மோகினி முதலில் தேவர்களுக்கு அமுதத்தைக் கொடுக்க ஆரம்பித்தாள். இதைக் கண்ட இராகு, கேது ஆகிய அசுரர்கள் இருவரும் இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதை உணர்ந்து தேவர்களைப் போல் உருமாறி, அவர்கள் இருந்த பகுதியில் அமர்ந்து அமிர்தத்தைப் பருகினர். அப்போது அவ்விருவரையும் சூரியன், சந்திரன் ஆகிய இருவரும் காட்டிக் கொடுக்க திருமால் அவர்கள்பால் சக்ராயுதத்தை ஏவுகிறார். இருப்பினும் அமுதம் பருகியதால் இருவரும் உயிர் பிழைத்து கிரகங்களாக உலவினர்.

அன்று முதல் சூரிய சந்திரனிடம் பகைமை கொண்ட ராகு, கேது இருவரும் கிரகணங்கள் என்ற போர்வையில் அவர்களைப் பீடித்து, பலம் இழக்கச் செய்கின்றனர்.

பெருமான் மோகினி அவதாரம் எடுத்தபோது அந்த அமுதத்தை தேவர்களுக்கு திருமோகூர் தலத்திலிருந்து வழங்கிய ஒரு துளி திருமோகூர் தலத்தில் விழுந்ததாகவும் அந்த இடத்தில் தேவர்களால் குளம் ஒன்று வெட்டப்பட்டதாகவும், அதுவே திருப்பாற்கடல் தீர்த்தம் (க்ஷிராப்தி புஷ்கரணி) என்ற பெயரில் இத்தலத்தில் சிறந்து விளங்குகிறது.

தேவர்களுக்கு அமுதம் கிடைக்க இத்தலம் காரணமாக அமைந்த படியால் இந்திரனின் கட்டளைப்படி தேவ சிற்பியான விஸ்வகர்மா இத்தலத்தில் பெருமானின் ஆலயத்தையும், கேதகி என்ற சதுர்முக விமானத்தையும் அமைத்ததாகச் சொல்லப்படுகின்றன.

பாற்கடலில் கடையப்பெற்ற அமுதத்தை எம்பெருமான், மோகினி அவதாரம் கொண்டு தேவர்களுக்கு வழங்கிய இடம் திருமோகூர். எனவே இத்தலம் மோகினி க்ஷேத்திரம் எனப் பேசப்படுகின்றது.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் ஐந்தாவது தரிசனமாகப் புகழ் பெற்ற பெருமானின் தரிசனத்தைக் கண்ட ந.சுப்புரெட்டியார் மனம் உருகி வணங்குகிறார்.

பாண்டிய நாட்டில் ஆறாவது தலமாக ந.சுப்புரெட்டியார் கூறுவது திருமாலிருஞ்சோலை நின்ற வள்ளல் என்ற தரிசனத் தலமாகும்.

பணிந்தேன் திருமாலைப் பாமாலை தாளில்
சிந்தேன் அருள் தஞ்சமாகத்-துணிந்தேன்
திருமாலிருஞ்சோலை சேர்ந்தேன் எனக்கு
வருமா லிருஞ் சோதி வான்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 41)

தலம் : திருமாலிருஞ்சோலை

மூலவர் : அழகர், கள்ளழகர், மாலிருஞ்சோலை நம்பி

உத்சவர் : சுந்தரராஜன், கள்ளழகர்

தாயார் : சுந்தரவல்லி, ஸ்ரீதேவி

தீர்த்தம் : நூபுரகங்கை என்ற சிலம்பாறு

விமானம் : சோமசுந்தர விமானம்

தல வரலாறு

திருமால் குடி கொண்டிருக்கும் சோலை என்ற காரணத்தால் திருமாலிருஞ்சோலை எனப் பெயர் பெற்றது.

இத்தலம் ரிஷபாத்ரி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இம்மலை, காளை மாட்டின் வடிவத்துடன் தோற்றமளிப்பதால் ரிஷபாத்ரி என்று பெயர் ஏற்பட்டதாகச் சொல்லுவர். திருவேங்கட மலையை உத்தர திருப்பதி என்றும் திருமாலிருஞ்சோலை மலையை தட்சிண திருப்பதி என்றும் அழைப்பது வழக்கம்.

108 திவ்ய தேசங்களில் திருமாலிருஞ்சோலை தொன்மை வாய்ந்த தலமாகக் கருதப்படுகிறது. மதுரைக்குச் செல்லும்பொழுது முதலில் மலைவளம் மிகுந்த சிறுமலை தோன்றும். இச்சிறு மலையின் இடது பக்கம் மதுரையும் வலது பக்கம் திருமால் குன்றாகிய திருமாலிருஞ் சோலை மலையை அடையலாம். அங்கு ஒரு பாதாள வழி உண்டு. அதற்குள் சென்றால் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசக்தி ஆகிய மூன்று பொய்கைகள் காணப்படுகின்றன.

இத்தலத்தில் சிலம்பாறு என்னும் நூபுர கங்கையின் பெருமை சிறப்பித்துக் கூறப்படுகிறது. எம்பெருமான் திரிவிக்ரம அவதாரம் எடுத்தபோது மண்ணுலகை ஒரு பாதத்தால் அளந்து, பின் விண்ணுலகை

மற்றொரு பாதத்தால் அளக்கிறார். அவ்வாறு விண்ணுலகை அளந்த பெருமானின் பாதங்கள், பிரம்மதேவன் வசித்து வரும் சத்திய லோகம் வரை நீண்டதாம். அப்போது பெருமானின் பாதத்தைப் பிரம்மதேவன் தனது கமண்டல நீரால் அபிசேகம் செய்ய, நீரில் ஒரு பகுதி பெருமான் பாதத்தில் அணிந்திருந்த பொற் சிலம்பில் பட்டுத் தெறித்து, அது நூபுர கங்கை என்ற சிலம்பாறாகத் திருமாலிருஞ்சோலை மலை மீது பெருகி ஓடிற்றாம். பெருமானின் சிலம்பில் பட்டுத் தெறித்த நீராகையால் இது சிலம்பாறு என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். இச்சிறிய நதி திருமாலிருஞ்சோலை மலை மீது எங்கிருந்து உற்பத்தியாகிறது என்று தெரியாமல் வற்றாத ஜீவநதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்நதியில் நீராடினால் சகலவிதமான பாவங்களும் நோய்களும் விலகிவிடுகின்றன.

இந்நீரினைக் கொண்டுதான் அபரஞ்சி என்ற உணர்ந்த பொன்னால் மூலிகைக் கலவையுடன் சேர்த்து வடிவமைக்கப்பட்டுள்ள திருமாலிருஞ் சோலை உத்சவ மூர்த்தியின் விக்ரகம் திருமஞ்சனம் செய்யப்படுகிறது.

திருமாலிருஞ்சோலை அழகருக்கு நடைபெறும் உத்ஸவங்களில் மிக முக்கியமாகக் கருதப்படுவது சித்ரா பௌர்ணமி விழா ஆகும். இதே சமயத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் சித்திரைத் திருவிழா நடைபெறும். இதனை அழகர் ஆற்றில் இறங்குதல் என்று பக்தர்கள் சிறப்பித்துக் கூறுவர்.

திருமாலிருஞ்சோலை திருக்கோயிலுக்குப் பாண்டிய மன்னர்கள் ஏராளமான திருப்பணிகள் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. திருவரங்கம் கோயிலைவிட திருமாலிருஞ்சோலை தலத்திற்கு செல்வங்கள் மற்றும் சொத்துக்கள் மிகவும் அதிகமாக உள்ளதாக ஐதீகம்.

திருமாலிருஞ்சோலையில் உறையும் கள்ளழகர் என்ற திருநாமம் கொண்ட உத்சவமூர்த்தி அபரஞ்சி என்ற மூலிகை கலந்த உலோகத்தால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மூலவரை விட உத்சவர் பெரும் புகழ் பெற்ற தலங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

திருமாலிருஞ்சோலை பெருமான் குடிகொண்ட பூங்கா வனமாகவே இன்றும் பக்தர்களால் சிறப்பித்தும் வழிபட்டும் காணப்படும் அற்புதத் தலமாகக் கருதப்படுகிறது. இத்தலத்தின் தரிசனமும் இயற்கை வனப்பும் ந.சுப்பு ரெட்டியாரின் மனதில் பக்தியாற்றலை மிகவும் தூண்டியதாகக் காணப்படுகிறது.

பாண்டிய நாட்டின் ஏழாவது திருப்பதிகளின் தன்மை வாய்ந்த தலமாக வில்லிபுத்தூர் வேயர் பயந்த விளக்குத்திருமாலின் தலத்தின் சிறப்பு:

குறித்து ஒருவர் கொண்டாடும் கொள்கைத்தோ கோதை
நிறுத்த ஊர் விட்டு சித்தர் நீடுர்-பிறப்பிலியூர்
தாழ் வில்லி புத்தூர் என்று ஐவர்க்குத் தானிரந்தான்
வாழ் வில்லி புத்தூர் வளம் (நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி, 48)

தலம்	: ஸ்ரீவில்லிபுத்தூர்
மூலவர்	: வடபத்திய சாயி, இரங்கமன்னார்
உத்சவர்	: இரங்க மன்னார்
தாயார்	: ஸ்ரீஆண்டாள் (கோதை நாச்சியார்)
தீர்த்தம்	: திருமுக்குளம்
விமானம்	: ஸம்சன விமானம்

தல வரலாறு

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் முன்னொரு காலத்தில் செண்பகக் காடுகள் நிறைந்திருந்தன. அப்பகுதியை மல்லி என்ற பெண் அரசாண்டு வந்தாள். அவளுக்கு வில்லி, கண்டன் என்ற இரு மகன்கள் பிறந்தனர். இருவரும் முந்தைய பிறவியில் முனிவர்களாகப் பிறந்து செண்பகக் காடுகள் நிறைந்த வில்லிவனத்தில் தவம் செய்து பூர்வ வினையின் பயனாகச் சபிக்கப்பட்ட முனிவர்கள் தனது அடுத்த பிறவியில் வில்லி, கண்டன் என்ற சகோதரர்களாகப் பிறந்தனர்.

அவற்றுள் இளையவனான கண்டன் வேட்டைக்குச் செல்லும் போது புலி ஒன்றினால் அடித்துக் கொல்லப்பட்டான். தனது சகோதரனைக் காணாது வருந்திய வில்லி பரமனைக் குறித்து வேண்டினான். அப்போது பரமன் வில்லியின் கனவிலே தோன்றி கண்டனின் மறைவைக் கூறியும் முன்பிறவியில் இருவரும் முனிவர்கள் என்பதைத் தெரிவித்தார்.

பின்பு பரந்தாமன் வில்லியிடம் செண்பகராண்யப் பகுதிகளை திருத்தி அதை ஒரு நகராக அமைத்து சேர, சோழ நாடுகளிலுள்ள அந்தணர்கள் பலரை அந்நகரில் குடியேற்றும்படி கூறினான். அதன்படியே வில்லியும் செய்தான். வில்லியால் உருவாக்கப்பட்ட நகரமாதலால் இப்பகுதிக்கு வில்லிபுத்தூர் என்ற பெயர் ஏற்பட்டது என்று கூறுவர்.

முன்னொரு காலத்தில் சுதபா என்ற முனிவர் திருமாலிருஞ் சோலையில் தண்ணீரில் மூழ்கி நின்று எம்பெருமானைக் குறித்து தவம் செய்து கொண்டிருந்தார். அங்கு துர்வாச முனிவர் சுதபாவைக் காண வெகு நேரம் காத்திருந்தார். அதைக் கவனிக்காத சுதபா ஆழ்ந்த தவத்தில்

ஈடுபட்டிருந்தார். கோபம் கொண்ட துர்வாசர் அவரை எப்போதும் நீருக்குள்ளேயே இருக்கும் மண்டுகமாகப் (தவளை) பிறக்கும் படி சாபம் தந்தார். இவை தவத்தில் இருந்த முனிவருக்கு நொடிப் பொழுதில் தெரிய வந்தது. எனவே தனது தவறுக்கு வருந்திய சுதபா துர்வாச முனிவரைப் பணிந்து தன்னைக் காக்கும்படி வேண்டினார்.

கொடுத்த சாபத்தைத் தன்னால் திரும்ப பெறமுடியாது என்றும் தனது சாபம் நன்மையிலேயே முடியும் என்றும் வராக க்ஷேத்ரம் என்று சொல்லப்படும் செண்பகராண்யப் பகுதியில் எம்பெருமானைக் குறித்து தவம் இருக்கும்படியும் அப்போது பெருமானே சுதபா முனிவருக்கு நேரில் காட்சி தருவார் என்றும் ஆசி கூறினார்.

அதன்படியே சுதபா முனிவர் செண்பகராண்யத்தில் தவம் செய்து வந்தார். அப்போது காலநேமி என்ற அரக்கன் செண்பகராண்யத்தில் தவம் செய்து வந்த முனிவர்களுக்கு பெரும் துன்பத்தை விளைவித்து வந்தான். இந்திரலோகத்தையும் விட்டு வைக்கவில்லை. இதனால் வருந்திய இந்திரன், தேவர்கள் அனைவரும் பாற்கடலில் பரமனைப் பார்த்து பணிந்து விமோசனம் வேண்டினர்.

அதற்குச் செவி சாய்த்த பகவான் தனது சக்ராயுதத்தை ஏவி காலநேமியை வதம் செய்து தேவர்களையும், செண்பகராண்யத்தில் தவம் புரியும் முனிவர்களையும் காத்தார். காலநேமியைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்ள சக்ராயுதம் தன்னைப் புனிதப்படுத்துமாறு பகவானை வேண்டியது. உடனே பெருமான் கங்கை, யமுனை, சரஸ்வதி மூன்று புனித நதிகளும் சக்ராயுதத்தைப் புனிதப்படுத்தின. மூன்று நதிகளும் எம்பெருமானை செண்பகராண்யத்திலேயே எழுந்தருளி சேவை சாதிக்க

வேண்டும் என்று வேண்ட பகவானும் அவ்வாறே திருவுள்ளம் கொண்டார்.

இதன் காரணமாகவே இப்பதி 'வடேசுபுரம்' என்றும், பெருமான் 'வட மகாதாமா' என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறார். (வட பெருங் கோயிலுடையான் என்பது பொருள்).

இத்தலத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி மூன்று நதிகளும் தங்களுடைய புனிதத் தன்மையில் ஒரு பகுதியை அத்தலத்தில் இருக்கும் திருமுக்குளத்தில் விட்டுச் சென்றதாக ஐதீகம். அதைக் குறிக்கவே இத்திருக்குளத்தின் பெயர் திருமுக்குளம் என்று வழங்கலாயிற்று.

காலநேமி போன்ற அரக்கர்களைப் பெருமான் தனது சக்ராயுதத்தால் அழித்து, பின்னர் சக்ராயுதத்தை கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய புனித நதிகளின் தீர்த்தத்தால் சுத்தம் செய்தபோது, அத்தீர்த்தத்தின் ஒரு பகுதி திருவில்லிபுத்தூரில் இருக்கும் வடபத்ரசாயி பெருமாள் கோயிலிலுள்ள திருக்குளத்தில் விழ அதுவே திருமுக்குளம் ஆகியது என்பது புராணச் செய்தியாகவும் இப்பெருமாள் பக்தர்களால் இன்றும் சேவிக்கப்பட்டு வணங்கப்படுகின்றன என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

ஒரு சமயம் திருப்பாற்கடலில் பெருமானின் தேவிகளாகிய ஸ்ரீதேவி, பூமிதேவி, நீளாதேவி ஆகிய மூவருக்கும் இடையே தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதம் எழுந்தது. அப்போது மூன்று பிராட்டிமார்களின் தோழிகளும் தங்களது தலைவியே உயர்ந்தவர் என்ற வாதத்தினை எடுத்து வைத்தனர்.

முதலாவதாக ஸ்ரீதேவியே உலகமாதா, அவளே சிறந்தவள். வேதங்களுக்கும் பெருமாளுக்கும் பிரியமானவள் எனவே ஸ்ரீதேவியே மூவரிலும் சிறந்தவள் எனக் கூறப்படுகின்றன.

இரண்டாவதாகப் பூமிதேவியே உயர்ந்தவள். பூமியைப் போல் பொறுமையும் சாந்தம் தவழும் முகமும் எந்நிலையிலும் கோபம் கொள்ளாதவள். எனவே பூமிதேவியே மூன்று தேவியருள் சிறந்தவள் என்றும், மூன்றாவதாக நீளாதேவியே ரஸரூபமானவள். இவளை முன்னிட்டே புராணங்களும் வேதங்களும் பெருமானை 'ரஸோ வைஸ' என்று புகழாரம் சூட்டுகின்றன. எனவே தேவியர் மூவரிலும் நீளா தேவியை சிறந்தவள் என்று விவாதம் ஒரு முடிவுக்கு வராமல் வளர்த்து கொண்டே சென்றதால், பொறுமை இழந்த ஸ்ரீதேவி திருப்பாற்கடலை விட்டு புறப்பட்டு, பூவுலகில் இருக்கும் தங்கால் என்னும் மலையினை வந்தடைந்து, தானே தேவியர் அனைவரிலும் சிறந்தவள் என்பதை நிரூபிக்க எம்பெருமானைக் குறித்து கடுந்தவம் புரிந்தாள். ஸ்ரீதேவியின் தவத்தை மெச்சிய பரமன் நேரில் தோன்றி தேவியர் மூவரிலும் ஸ்ரீதேவியே சிறந்தவள் என்று போற்றி திருமகளை இத்தலத்தில் ஏற்றுக் கொண்டார்.

தங்கால் என்ற மலையில் தங்கி திருமகள் தவம் செய்த காரணத்தால் இத்தலம் 'திருத்தங்கால்' என்று பெயர் பெற்றது. ஸ்ரீதேவியைப் பெருமாள் விரும்பி ஏற்றபோது மற்ற இரு பிராட்டிகளும் இத்தலத்திற்கு எழுந்தருளி ஸ்ரீதேவியின் பெருமையைப் போற்றினர்.

ஒவ்வொரு சதுர் யுகத்தின் முடிவிலும் ஏற்படும் பிரளய வெள்ளத்தில் எம்பெருமான் ஆலமரத்தின் இலை மீது ஒரு பாலகனாய் பள்ளிகொண்டதாய் புராணங்களில் பேசப்படுகின்றன. அத்தகைய பேறு

பெற்ற ஆலமரம் ஒன்று முன்னொரு யுகத்தில் சுவேதத்தீவு என்று சொல்லப்படும் வெள்ளையந் தீவில் இருந்து வந்தது.

அப்போது அந்த ஆலமரத்திற்கும் எம்பெருமானது படுக்கையாகத் திகழும் ஆதிசேஷனுக்கும் இடையே பெருமானின் அன்பிற்கு உரியவர்கள் யார் பெரியவர் என்ற போட்டி எழுந்ததாம். உடனே நியாயம் வேண்டி இருவரும் பிரம்மனிடம் சென்றனர்.

அதற்கு பிரம்மன் ஆதிசேஷனே சிறந்தவன். அவன் மீதுதான் பெருமாள் சதாசர்வ காலமும் பள்ளி கொண்டுள்ளார். ஆனால் ஆலிலையின் மீது பெருமாள் பிரளய வெள்ளத்தின்போது மட்டும்தான் பள்ளி கொள்கிறார். எனவே ஆதிசேஷனது தொண்டே சிறந்தது என்று தீர்ப்பு கூறினார்.

இதனால் வருத்தப்பட்ட ஆலமரம் பெருமானைக் குறித்துக் கடும் தவத்தில் ஆழ்ந்தது. அப்போது எம்பெருமான் ஆலமரத்தின் முன் தோன்றி வேண்டியது யாது என்று வினவ, அதற்கு அந்த ஆலமரம் எம்பெருமான் என்றென்றும் தனது மடி மீது தவழும் பாக்கியத்தை அளிக்க வேண்டும் என்று இறைஞ்சியது.

உடனே பெருமான் ஆலமரத்திடம் தென் தமிழ் நாட்டில் திருத்தண்கால் என்ற பதியில் ஸ்ரீதேவி தன்னைக் குறித்து தவம் செய்து வருவதாகவும் அப்பதியில் சென்று மலைவடிவம் எடுத்து ஆலமரம் அமரும்படியும் தான் தக்க தருணத்தில் அம்மலைக்கு எழுந்தருளி ஆதிசேஷனுக்கு அளித்த அதே பாக்கியத்தை ஆலமரத்திற்கும் அருளிச் செய்து சேவைபுரிவதாக வாக்களித்து அதன்படியே ஆலமரமும் திருத்தண்காலில் மலை வடிவில் வந்து தங்கியது.

தக்க தருணத்தில் ஸ்ரீதேவியை ஏற்றுக்கொண்ட பரமன் திருத்தண்கால் தலத்தில்மலை வடிவம் கொண்ட ஆலமரத்தில் எழுந்தருளி அருள் பாலித்தான்.

ஸ்ரீகிருஷ்ணரின் பேரனும், பிரத்யுமன்னின் பிள்ளையுமான அநிருத்தன் பாணாசுரனின் மகளான உஷையைத் திருமணம் செய்து கொண்டது. பாண்டிய நாட்டிலுள்ள திருத்தண்காலில் கண்ணபிரானே அநிருத்தனுக்கு உஷையைத் திருமணம் செய்து வைத்ததாகவும் பேரனின் திருமணத்தின்போது கண்ணனும் திருத்தண்காவிற்கு விஜயம் செய்திருக்கக்கூடியதாகச் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

இத்தலத்தில் பல நிகழ்வுகள் பெருமாளின் சிறப்பாகவும் இத்தலம் சிறப்பு வாய்ந்த, தொன்மை வாய்ந்த தலமாகவும் பக்தர்களால் சிறப்பாகப் போற்றப்படுகின்றன.

பாண்டி நாட்டுத் திருப்பதிகளில் ஒன்பதாவது திருத்தலமாக ஆழ்வார்திருநகரி ஆதிநாதப்பெருமாளின் தலவரலாறு:

வளந் தழைக்க உண்டாலென் வாச மணந்தாலென்
தெளிந்த கலை கற்றலென்சீ! சீ! குளிந்த பொழில்
தண்குருகூர் வாவிச் சடகோபன் ஊர் எங்கள்
வண் குருகூர் என்று எண்ணாத வாய்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 49)

தலம்	: திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி
மூலவர்	: ஆதிநாதன், ஆதிப்பிரான்
உத்சவர்	: பொலிந்து நின்ற பிரான்
தாயார்	: ஆதிநாதவல்லி, குருகூர்வல்லி
தீர்த்தம்	: பிரம்ம தீர்த்தம், தாமிரபரணி நதி

விமானம் : கோவிந்த விமானம்

ஸ்தல விருட்சம் : புளிய மரம்

தல வரலாறு

இத்தலம் திருக்குருகூர் என்றும், ஆழ்வார் திருநகரி என்றும் அழைக்கப்படுகிறது. நம்மாழ்வார் இத்தலத்தில் திருப்புளிய மரத்தின் அடியில் தங்கி ரிக்வேத சாரமாகத் திருவிருத்தத்தையும், யஜுர் வேத சாரமாக திருவாசிரியத்தையும் சாமவேத சாரமாகத் திருவாய் மொழியையும் அதர்வண வேத சாரமாகப் பெரிய திருவந்தாதியையும் அருளிச்செய்த காரணத்தால் அவருக்குப் பெருமை சேர்க்கும் வண்ணமாக ஆழ்வார் திருநகரி என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

திருக்குருகூர் என்று அழைக்கப்படுவதற்கு இத்தலத்திற்கு மூன்று காரணங்கள் உண்டு. பண்டைய தமிழ் நூல்கள் அனைத்திலும் இப்பகுதி 'குருகூர்' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டன.

முதல் காரணம்

ஒரு சமயம் பிரம்மன் திருமாலிடம் தான் பூவுலகில் தவம் செய்வதற்கு ஏற்ற சிறந்த இடம் ஒன்றினைச் சொல்லும்படி வேண்டினாராம். அதற்குப் பரமன், தான் தாமிரபரணி ஆற்றின் கரையில் சோலைகளும் வாவிகளும் நிறைந்த இரம்மியமான ஓரிடத்தில் ஆதிப்பிரான் என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளதாகவும் அவ்விடத்திலே சென்று தவம் செய்தால் சித்தி கிட்டும் என்றும் சொன்னாராம்.

அதன்படியே ஆதிப்பிரான் ஆலயத்தின் அருகில் பிரம்மதேவன் தவம் செய்து வந்ததாகவும் அப்போது எம்பெருமான் நேரில் தோன்றி

குருமுகமாய் நின்று 'குருகாத்தரமதர்ச்சனம்' என்னும் மறைபொருளை பிரம்மனுக்கு உபதேசம் செய்ததாகவும் அதன் காரணமாகக் குருகூர் என்ற பெயர் ஏற்பட்டு திரு என்ற அடைமொழியுடன் சேர்த்து பின்னாளில் திருக்குருகூர் என்று பெயர் ஏற்பட்டதாகச் சொல்லுவர்.

இரண்டாவது காரணம்

நம்மாழ்வாரின் தந்தையாகிய காரியார் திருவழுதி வளநாடன் பரம்பரையில் வந்து திருநெல்வேலியைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒரு காலத்தில் அரசாண்டார். காரியருக்குப் பாட்டன் முறை கொண்ட குருகன் என்ற அரசன் ஆதிப்பிரான் தலமிருந்த பகுதிகளை ஒரு காலத்தில் ஆட்சி செய்ததாகவும் அதன் காரணமாக இத்தலம் குருகாபுரி என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகவும் கூறுவர்.

மூன்றாவது காரணம்

'குருகு' என்ற சொல்லுக்குத் தமிழில் நாரை, கோழி, குருக்கத்தி, சங்கு என்று பல பொருள்கள் உண்டு. குருகாகிய சங்கு இத்தலத்தில் உறையும் பெருமானைத் தொழுது மோட்சம் பெற்ற காரணத்தால் அதன் நினைவாகக் குருகூர் என்று அழைக்கப்பட்டதாகச் சொல்லுவர்.

இவ்வாறு மூன்று விதங்களாக இத்தலத்தின் வரலாறு சிறப்பித்துக் கூறப்படுகிறது.

தாந்தன் என்ற அடியவர்க்கு இப்பெருமான் சேவையளித்த காரணத்தால் இத்தலம் தாந்தசேஷத்ரம் என்ற பெயரில் அழைப்பார். திரேதாயுகத்தில் இராமனின் இளவல் இலக்குவனாக அவதாரம் செய்தவனே ஆதிசேஷன். திருக்குருகூர் தலத்தில் உறங்காப் புளிய மரமாக நின்ற ஆதிசேஷனுக்கு எம்பெருமான் சேவை சாதித்த காரணத்தால் சேவிக்ஷேத்ரம் என்ற பெயரினையும் இத்தலம் பெற்றது.

இவை மட்டும் இன்றி வராக க்ஷேத்ரம் என்றும் தீர்த்த க்ஷேத்ரம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது இத்தலம்.

இத்தலத்தில் திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரி சேஷ க்ஷேத்திரம் எனப் பெயர் ஏற்பட்டு ஆதிசேஷனின் அம்சமான இலக்குவனே இத்தலத்தில் திருப்புளியாழ்வாராக (புளிய மரம்) அவதாரம் செய்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

இத்தலத்தின் பெருமானை வழிபடும் பக்தர்களுக்கு ஒரு துன்பமும் நோயும் ஏற்படாமல் அருள்பாலிப்பதாகப் பக்தர்கள் ஆழ்வார்திருநகரி என்ற திருக்குருகூர் ஆதிசேஷப் பெருமாளின் புகழைப் பற்றிக் கூறுகின்றன. ந.சுப்புரெட்டியாரும் இவ்வாறே இத்தலத்தின் பெருமையையும் புகழையும் உரைக்கின்றார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பத்தாவது தலமாகத் திருக்கோளூர் வைத்தமாநிதியின் தலவரலாறு:

பிறப்பற்று மூப்பும் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ விருப்பீர்-புறப்பற்றுத்
தள்ளும் கோளூர் அரவில் தாமோதரன் பள்ளி
கொள்ளும் கோளூர் மருவும் கோன்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 58)

தலம்	: திருக்கோளூர்
மூலவர்	: வைத்தமாநிதிப் பெருமாள், நிஷேய வித்தன்
உத்சவர்	: நச்சியப்ப பவித்திரர்
தாயார்	: குமுதவல்லி, கோளூர்வல்லி
தீர்த்தம்	: குபேர தீர்த்தம், தாமிரபரணி ஆறு
விமானம்	: ஸ்ரீகர விமானம்

தல வரலாறு

ஒரு சமயம் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இத்தலம் இருக்கும் பகுதியில் யுத்தம் ஒன்று ஏற்பட்டதால் அப்போது அதர்மம், தர்மத்திடம் தோற்று ஓடியதாம். அதன் காரணமாக இத்தலத்திற்கு 'அதர்ம பிசுனம்' என்று பெயர் ஏற்பட்டது. தோற்று ஓடிய அதர்மம் குபேரனிடம் சென்று, பார்வதி தேவியின் சாபத்தால் மறைந்து போன அவனது நவநிதியங்கள் இத்தலத்தில் நிரந்தரமாகத் தங்கி இருப்பதைச் சொல்லி கோள் மூட்டியதாம். அதன் காரணமாகத் திருக்கோளூர் என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

செல்வங்களுக்கு அதிபதியான குபேரன் இத்தலத்தில் உறையும் பெருமானைத் தொழுது பார்வதி தேவியின் சாபத்தால் அவன் இழந்த செல்வங்களின் ஒரு பகுதியை இத்தலத்தில் பெற்றதாக ஐதீகம்.

உமையவளின் சாபத்தைப் போக்கி இழந்த செல்வங்களை மீட்க குபேரன் திருக்கோளூர் வைத்த மாநிதிப் பெருமாளைக் குறித்து கடும் தவம் இயற்றினான். அப்போது ஒரு மாசி மாதம் சுக்லபட்ச துவாதசியில் குபேரனுக்கு நேரில் காட்சி தந்த பரமன் அவன் வேண்டியபடி இழந்த செல்வத்தின் ஒரு பகுதியை மீண்டும் அவனிடம் தந்தார். (குபேரன் இத்தலத்தில் இருக்கும் குபேர தீர்த்தத்தில் மூழ்கி, இழந்த செல்வத்தைப் பெற்றதாக ஐதீகம்).

இத்தலத்தின் சிறப்பாக பார்வதி தேவியின் சாபத்தால் நவநிதியங்கள் அனைத்தையும் இழந்த குபேரன், திருக்கோளூர் உறையும்

வைத்த மாநிதிப் பெருமாளை ஆராதனை செய்தே இழந்த செல்வங்கள் அனைத்தையும் பெற்றான்.

பாண்டி நாட்டுத் திருப்பதிகளின் பதினொன்றாவது தலமாக மகரநெடுங் குழைக்காதன் தல வரலாறு சிறப்பித்துப் பேசப்படுகிறது.

அரைசாகி வையம் முழுது ஆண்டாலும் இன்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர்! முறைசாரும்
தென்திருப்பேரைப் பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன் திருப்பேரைப் பதியாதார்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 52)

தலம்	: தென் திருப்பேரை
மூலவர்	: மகரநெடுங்குழைக்காதர், முகில்வண்ணன்
உத்சவர்	: முகில் வண்ணன்
தாயார்	: குழைக்காது வல்லி நாச்சியார், திருப்பேரை நாச்சியார்
தீர்த்தம்	: சுக்ர புஷ்கரணி, சங்க தீர்த்தம்
விமானம்	: பத்ரவிமானம்

தல வரலாறு

ஒரு சமயம் ஸ்ரீமன் நாராயணனின் மனம் முழுவதும் ஒரு சமயம் பூமிதேவிப் பிராட்டியிடம் இலயித்திருந்ததாம். பரமன் தன்னை விட்டுப் பிரிந்து பூமிதேவியிடம் மையல் கொண்டு நின்றதைக் கண்ட ஸ்ரீதேவி வருத்தம் அடைந்தாராம்.

ஸ்ரீதேவியோ பொன்னிறம் கொண்டவள். இதற்கு மாறாகப் பூமிதேவியோ கருமை நிறம் படைத்தவர். கோபம் கொண்ட ஸ்ரீதேவி பூமிதேவியும் தம்மைப் போன்று பொன்னிறம் கொண்டால் மீண்டும் பரமன் தன்னையே வந்தடைவான் என்று ஸ்ரீதேவி நினைத்தாராம்.

இது இவ்வாறு இருக்க துர்வாச முனிவர் ஸ்ரீதேவியைக் காண்பதற்கு விண்ணுலகம் சென்றாராம். அப்போது பிராட்டியின் முகம் வாட்ட முற்றிருப்பதைக் கண்ட துர்வாசர் அதற்கான காரணத்தை வினவினாராம்.

அதற்கு அவர் முனிவரிடம் பரமனின் மனம் பூமிதேவியிடம் அன்பாக இருப்பதைச் சொல்லி, பெருமானின் கடைக்கண் பார்வையை மீண்டும் தன்மேல் திரும்புவதற்கு வழி செய்ய வேண்டினாள்.

ஸ்ரீதேவியின் குழப்பத்தைக் கண்ட துர்வாசர் அதை நீக்க வேண்டி பூமிதேவியின் இருப்பிடத்தைத் தேடிச் சென்றாராம்.

துர்வாசர் பூமிதேவியின் இருப்பிடம் சென்றார். அப்போது பூமிதேவி பெருமானிடம் ஏதோ ஒரு சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார். அதனால் பெருமான் பூமிதேவியும் துர்வாசர் வந்ததைக் கவனிக்க வில்லை. அப்போது முனிவருக்கு ஸ்ரீதேவியின் ஞாபகமும், அவரிடம் கொடுத்த வாக்கும் நினைவுக்கு வந்தது.

உடனே பூமிதேவியிடம் கடுஞ்சினம் கொண்ட துர்வாசர் ஸ்ரீதேவியின் உருவத்தை அவர் பெறுமாறு சபித்துவிட்டார்.

பூமிதேவியே தான் செய்த தவறுக்கு துர்வாசமுனிவரிடம் மன்னிப்பு கேட்டு, பரிகாரம் வேண்ட, அதற்கு அவர் நீ தாமிரபரணியின் தென் கரையில் உள்ள கரிபதம் என்ற க்ஷேத்திரத்தில் உள்ள மத்ஸ்ய தீர்த்தத்தில் நீராடி பெருமாளைக் குறித்து தவம் செய்தால் உனது கரிய உருவினை மீண்டும் பெறும் காலம் சித்துக்கும் என்று கூறினார்.

துர்வாச முனிவர் சொன்னது போலவே பூமிதேவி பிராட்டியார், ஸ்ரீபேரை என்ற பெயருடன் (ஸ்ரீ என்றால் திருமகளைக் குறிக்கும். பேரை என்றால் உடலைக் குறிக்கும். ஸ்ரீதேவியின் உடல் நிறமான பொன்

நிறத்தை பூமிதேவிப் பிராட்டியார் பெற்ற காரணத்தால் ஸ்ரீபேரை என்னும் திருநாமம் உண்டாயிற்று.)

இத்தலத்திலுள்ள புஷ்கரணியில் நீராடி, எம்பெருமானைக் குறித்து ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாட்சர மந்திரத்தை ஜெபித்து தவம் செய்து வரலானார் பூமிதேவி. ஒருசமயம் பங்குனி மாதம் பௌர்ணமி தினத்தன்று பூமிதேவி புஷ்கரணியில் நீராடியபோது மீன் வடிவமுள்ள இரண்டு மகர குண்டலங்களைக் கண்டெடுத்தார்.

அக்குண்டலங்களைப் பூமிதேவி எம்பெருமானிடம் ஆத்மார்த்த பக்தியுடன் சமர்ப்பிக்க, அப்போது பெருமான் பூமிதேவிக்கு நேரில் சேவை சாதித்தார். அச்சமயம் பூமிதேவிக்குப் பொன்னிறம் நீங்கி கரிய நிறத்தை மீண்டும் பெற்றார்.

பூமிதேவி உகந்தளித்த மகர குண்டலங்களைப் பெருமான் விரும்பி ஏற்றதால் மகரநெடுங்குழைக்காதர் என்ற திருநாமம் பெருமானுக்கு வாய்க்கப் பெற்றது.

ஸ்ரீபேரை என்ற பெயருடன் பூமிதேவி இத்தலத்தில் தவம்செய்து பெருமான் அனுக்கிரகத்தைப் பெற்றதால் திருப்பேரை என்ற நாமம் இத்தலத்திற்கு வாய்க்கப்பெற்றது.

108 திவ்ய தேசங்களில் இரண்டு திருப்பதிகளின் பெயர் திருப்பேர், திருப்பேரை என்று போற்றப்படுகிறது. முதலாவது திருப்பேர் என்பது சோழநாட்டு திருப்பதியின் பெயர் ஆகும். இரண்டாவது திருப்பேரை என்பது பாண்டிய நாட்டுத் திருப்பதியின் அம்சமாகும். இவை எளிதில் அடையாளம் காண பாண்டி நாட்டு திருப்பதி தென்திருப்பேரை என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.

பூமிப் பிராட்டிய 'ஸ்ரீபேரை' (லஷ்மியின் உடல் என்பது பொருள்) என்ற பெயரில் எம்பெருமானின் எட்டெழுத்து மந்திரத்தை ஜெபித்து துர்வாச முனிவரால் ஏற்பட்ட சாபம் நீங்கப்பெற்ற தலமே தென் திருப்பேரை என்னும் பாண்டிய நாட்டுத் திருத்தலம் ஆகும்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பன்னிரண்டாவது தலமாகச் சிறப்பித்து கூறப்படுவது சீவைகுந்தத்து தேவன் என்னும் ஸ்ரீவைகுண்டம் தல வரலாறு:

தாருடுத்துத் தூது தலைக் கணியும் பேதை இவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன்-போருடுத்த
பாவைகுந்தம் பண்டு ஒசித்தான் பச்சைத் துழாய்நாடும்
சீவைகுந்தம் பாடும் தெளிந்து

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 53)

தலம்	: ஸ்ரீவைகுண்டம்
மூலவர்	: ஸ்ரீவைகுண்டநாதன், கள்ளப்பிரான்
உத்சவர்	: கள்ளப்பிரான், ஸ்ரீவைகுண்டநாதன்
தாயார்	: வைகுந்தவல்லி, பூதேவி
தீர்த்தம்	: பிருகு, கலச, தாமிரபரணி நதி தீர்த்தம்
விமானம்	: சந்திர விமானம்

தல வரலாறு

ஸ்ரீமன் நாராயணனால் படைக்கப்பட்ட பிரம்மன் படைப்புத் தொழிலைச் செய்பவர். இவர் சத்ய லோகத்தில் இருந்தபடியே சிருஷ்டி தொழிலைச் செய்து வந்தார். ஒரு சதுர்யுகத்தின் முடிவில் பிரம்மா வசித்து வந்த சத்தியலோகம், பூவுலகம் ஆகிய அனைத்திலும் பிரளய வெள்ளம் சூழ்ந்தது. அப்போது சோமுகன் என்ற அசுரன் சத்தியலோகம் சென்று

நான்முகனின் கையிலிருந்த படைப்புத் தொழில் செய்யத் தேவைப்படும் சிருஷ்டி இரகஸ்ய கிரந்தங்கள் அடங்கியுள்ள ஏடுகளைப் பலவந்தமாகப் பறித்துச் சென்றான்.

உடனே பிரம்மதேவன், ஸ்ரீமன் நாராயணனைக் (பரமனை) குறித்து தவம் செய்வதற்குப் புனிதமான இடம் ஒன்றினைத் தெரிவு செய்ய தமது கரத்திலிருந்து பிரம்பு ஒன்றைப் பிரம்மச்சாரி கோலத்தில் பூவுலகம் அனுப்பினார்.

தாமிரபரணி நதியில் இருக்கும் கரையில் ஜயிந்திரபுரம் என்ற இடத்திற்கு வந்த அந்த பிரம்மச்சாரி வாலிபன் தான வந்த வேலையை மறந்து அங்கேயே தங்கினான்.

தன்னால் பூவுலகம் அனுப்பப்பட்ட வாலிபன் திரும்பி வராததைக் கண்ட பிரம்மன், தன் கையிலிருந்த தண்டத்தைத் தவம் செய்ய ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து வருமாறு அனுப்பினார்.

பூவுலகம் சென்ற தண்டம் திரும்பி வந்து, தென் தமிழ்நாட்டில் தாமிரபரணி ஆற்றின் கரையில் சோலைகள் சூழ்ந்திருந்த இடம் ஒன்றினைத் தெரிவு செய்து பிரம்மனிடம் தெரியப்படுத்தியது.

உடனே பிரம்மனும் தாமிரபரணி ஆற்றின் கரையில் எம்பெருமானைக் குறித்து கடும் தவம் செய்வதில் ஈடுபட்டார். நான்முகனின் தவத்தை மெச்சிய பரமன் ஆதிசேஷன் குடைபிடிக்க, ஸ்ரீவைகுண்டத்தில் சேவை சாதிக்கும் அதே திருக்கோலத்துடன் நான்முகனுக்குக் காட்சி தந்தார்.

அப்போது நான்முகன் பெருமானைப் பணிந்து சிருஷ்டிரகஸ்ய கிரந்தத்தைத் தனக்கு சோமுகனிடமிருந்து மீட்டுத் தருமாறு வேண்டி

பெருமானிடம் தனக்குச் சேவை சாதித்த ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் அதே திருக்கோலத்தைத் தான் தவமியற்றிய தாமிரபரணி ஆற்றின் கரையிலும் சேவை சாதிக்க வேண்டும் என்று வேண்டினார்.

நாராயணனும் நான்முகன் கேட்டதற்காக அன்று முதல் தாமிரபரணி நதிக்கரையில் ஸ்ரீவைகுண்டவாசனாகச் சேவை சாதித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக இத்தலம் ஸ்ரீவைகுண்டம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது. பெருமானும் ஸ்ரீவைகுண்டநாதன் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறார்.

பொதுவாக எம்பெருமான் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருப்பதைக் காணமுடியும். ஆனால் நவ திருப்பதிகளில் ஒன்றான ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷனே பெருமானுக்குக் குடைப்பிடிக்கும் வண்ணத்தில் அமைந்துள்ள காட்சி இத்தலத்தின் சிறப்பு ஆகும்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் பதிமூன்றாவது தலமாக விளங்குவது வரகுணமங்கை விசயாசனம் என்னும் ஸ்ரீவரகுணமங்கை தலத்தின் தல வரலாறு:

காலமும் நோயும் கருதாத வன்னைமர்
வேலன் வெறியை விலக்குமின்கள்-மாலாம்
வரகுண மங்கையன் தாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 55)

தலம் : ஸ்ரீவரகுணமங்கை

மூலவர் : விஜயாசனப் பெருமாள்

உத்சவர் : விஜயாசனப் பெருமாள்

தாயார் : வரகுணவல்லி, வரகுணமங்கை, உபயநாச்சியார்

தீர்த்தம் : அகநாச, அக்கினி, தேவ புஷ்கரணி தீர்த்தம்

விமானம் : விஜயகோடி விமானம்

தல வரலாறு

இத்தலத்திற்கு திருவரகுணமங்கை என்று பெயர் வந்ததற்கான காரணம் இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இப்பெருமானுக்கு விஜயாசனம் என்று பெயர் வந்தவிதம் கூறப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் தேவா நதிக்கரையில் புண்ணிய கோசம் என்ற அக்கிரகாரத்தில் வேதவித் என்ற பெயர் கொண்ட அந்தணன் வசித்து வந்தான். சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது போன்று தனது தாய், தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இவன் ஒழுங்காகச் செய்து வந்தான்.

ஒரு சமயம் ஆஸணதை என்ற மந்திரத்தை ஜெபித்து எம்பெருமானைக் குறித்து தவமியற்றத் திருவுள்ளம் கொண்டான். அப்போது எம்பெருமான் கிழ வடிவில் அவன் முன் எதிர்பட்டு சக்யம் மகேந்திரம் என்னும் இரு மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் விளங்கும் வரகுணமங்கை என்னும் பதியே ஆஸணதை மந்திரத்தை ஜெபிப்பதற்கு மிகச் சிறந்த இடம் என்று எடுத்துச் சொன்னார்.

அதன்படியே வேதவித் திருவரகுணமங்கை தலத்தில் அன்ன ஆகாரம், நித்திரையின்றி எம்பெருமானைக் குறித்து கடும் தவம் இயற்றினான். அப்போது எம்பெருமான் அவனுக்கு நேரில் காட்சி தந்து ஆசிர்வதிக்கவும் அவன் பெருமானுக்கு நித்திய சூரியாய் சேவை செய்ய பரமபதத்தைச் சென்றடைந்தான்.

ஆஸணத் மந்திரத்தை ஜெபித்ததன் காரணமாக எம்பெருமான் இத்தலத்தில் சேவை தந்ததால் 'விஜயாசனர்' என்னும் திருநாமம் பெருமாளுக்கு உண்டாயிற்று என்று சொல்லுவர்.

வேதவித் என்னும் அந்தணனுக்கு இப்பெருமான் காட்சி தந்ததைப் போலவே ரோமச முனிவர், அக்கினி, சத்தியவான் ஆகியோருக்கும் நேரில் காட்சியளித்ததாகச் சொல்லப்படுகிறது.

இத்தலத்தின் சிறப்பாக ஶ்ரீவைகுண்டத்தில் நின்றகோலத்தில் இருக்கும் பெருமாளுக்குக் குடையாக நின்ற ஆதிசேஷன் அமர்ந்த திருக்கோலத்தில் இருக்கும் விஜயாசனப் பெருமாளுக்குக் குடையாக நின்ற தலமே திருவரகுணமங்கை.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பதினான்காவது தலமாகத் திருக்குளந்தை மாயக்கூத்தன் பெருமாள் தலம் திருக்குளந்தை (பெருங்குளம்) தல வரலாறு:

தனக்குடலம் வேறான தன்மை உணரான்
மனக்கவலை தீர்த்து உய்ய மாட்டான்-நினைக்கில்
திருக்குளந்தை யார் உரைத்த சீர்க்கீதை பாடும்
அருங்குளந்தை யாமலிருந்தால்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 56)

தலம் : திருக்குளந்தை (பெருங்குளம்)

மூலவர் : சோரநாதன், ஶ்ரீநிவாசன்

உத்சவர் : மாயக்கூத்தன்

தாயார் : குளந்தை வல்லித் தாயார் (கமலாவதி), அலமேலு மங்கை

தீர்த்தம் : பெருங்குளம்

விமானம் : ஆனந்தநிலைய விமானம்

தல வரலாறு

இத்தலத்திற்கு திருக்குளந்தை, பெருங்குளம் என்று பெயர் வந்ததற்கான காரணம் தெரியவில்லை. இத்தலத்தில் ஏரி போன்ற குளம் ஒன்று அமைந்திருப்பதன் பயனாக இப்பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

முன்பொரு காலத்தில் இத்தலம் இருக்கும் பகுதியில் தடாக வனம் இருந்ததாகவும் அங்கு வேதசாரன் என்ற அந்தணன், தனது மனைவி குமுதவல்லியுடன் இத்தலத்தில் பொய்கையில் நாள்தோறும் நீராடி பெருமானை வழிபட்டு வந்தனர். அப்போது அவர்களுக்குப் பெருமானின் திருவருளால் பெண் குழந்தை பிறந்து அதற்குக் கமலாவதி என்று பெயர் மேட்டி திருக்குளந்தை பெருமானின் மீது பக்தி செலுத்துமாறு செய்து வந்தனர்.

மணப்பருவத்தை எட்டிய கமலாவதி பெருமானையே மணப்பது என்று முடிவு செய்து பெருமானைக் குறித்து கடுந்தவம் இயற்றலானாள். அப்போது அஸ்மஸாரன் என்ற அரக்கன் கமலாவதியைக் கவர்ந்து சென்று இமயமலையில் இருக்கும் குகை ஒன்றில் சிறை வைத்தான்.

தனது புதல்வி மறைந்ததைக் கண்ட வேதசாரன் திருக்குளந்தை பெருமாளிடம் பூச நட்சத்திரம் கலந்த தை மாதப் பௌர்ணமி அன்று, இதுகுறித்து விண்ணப்பம் செய்து பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்து தனது மகளை மீட்டு வருமாறு வேண்டினார்.

உடனே பெருமாளும் தனது கருட வாகனத்தில் இமயமலை சென்று கமலாவதியை அசுரன் அறியாத வண்ணம் மீட்டு வந்தார். இதை அறிந்த அஸ்மஸாரன் திருக்குளந்தை வந்து பெருமானுடன் யுத்தம் செய்து பெருமான் அசுரனின் இரு கால்களையும் பற்றி, தரையில் அடித்து வதைத்து அசுரனின் உடல் மீது சோர நாட்டியம் ஆடியதாகவும்

இக்காரணத்தால் இத்தலத்தில் சோரநாதன் என்று பெயர் பெற்றதாகவும் ஐதீகம் (தமிழில் மாயக்கூத்தன் என்ற பெயரில் அழைப்பர்).

இத்தலத்தின் சிறப்பாகப் பெரியாழ்வார் மகளான கோதை நாச்சியாரை அரங்கன் மணம் செய்து கொண்டது போல் வேதசாரன் என்ற அந்தணரின் பெண்ணான கமலாதேவியைப் பெருமாள் மணம் செய்து கொண்ட தலம் திருக்குளந்தை.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் பதினைந்தாவது தலமாகவும் பெருமாள் சிறப்பாகவும் அமையும் தலம் திருப்புளிங்குடிக் காய்சின வேந்தன் தல வரலாறு:

தெளியும் பசும் பொற் சிறைக் காற்று வீச
விளியந் துயர் போய் விடுமே எளியேற்கு
அருளப் புளியங்குடி வாழ் அச்சுதனைக் கொண்டு
கருளப்பு ளிங்கு வந்தக் கால்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 54)

தலம்	: திருப்புளிங்குடி
மூலவர்	: காய்சின வேந்தர், பூமிபாலர்
உத்சவர்	: காய்சின வேந்தர்
தாயார்	: மலர்மகள், பூமகள், புளிங்குடிவல்லி
தீர்த்தம்	: இந்திர, வருண-நிருதி தீர்த்தம்
விமானம்	: வேதசார விமானம்

தல வரலாறு

இத்தலத்திற்கு திருப்புளிங்குடி என்று பெயர் வந்த வரலாறு சரியாக அறியப்படவில்லை. ஆயினும் தலத்திற்குப் பெயர் வந்த விதம் பற்றி பொதுவான கருத்து இங்கு கூறப்படுகிறது.

திருக்குருகூர் ஆதிநாதன் ஆலயத்தில் திருப்புளிய மரத்தின் கீழ் அமர்ந்த நம்மாழ்வார், திருப்புளிங்குடி பெருமானைப் பற்றி அதிக பட்சமாக 12 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ள காரணத்தால், திருப்புளியாழ்வாரின் நினைவுகூறும் வண்ணம் இத்தலத்திற்குத் திருப்புளிங்குடி என்று பெயர் ஏற்பட்டதாக சிலர் கருதுகின்றனர்.

இத்தலத்தின் சிறப்பாக இந்திரன் பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றதும், இந்திரன் தனது தோஷத்தைச் சிறுபகுதி பூமி, மரம், தண்ணீர், பெண் ஆகியோருக்குப் பங்கிட்டுக் கொடுத்து தோஷம் முழுவதும் நீக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

திருப்புளிங்குடி பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக வருணன், நிருதி ஆகிய இருவரும் வருண நிருதி தீர்த்தத்தை இத்தலத்தில் அமைத்தன் என்று கூறப்படுகிறது.

இத்தலத்தின் சிறப்பு தேவேந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் திருப்புளிங்குடி உறையும் காய்சின வேந்தன் பெருமாளைப் பூஜித்ததால் நீங்கியதாகச் சொல்வது மரபு.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் பதினாறாவது தலமாக விளங்குவது தொலைவிலிமங்கலத் தாமரைக் கண்ணன் தல வரலாறு:

வாயு மனைவியர் பூ மங்கையர்கள் எம்பிராற்கு
ஆயுதங்கள் ஆழி முதல் ஐம்படைகள்-தூய
தொலைவில்லி மங்கல மூர் தோள் புருவமேனி
மலைவல்லி மங்கலந்து வான்

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 50)

தலம்	: தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி)
முதலாவது தலம்	: தேவப்பிரான் சந்நிதி
மூலவர்	: தேவப்பிரான், ஸ்ரீநிவாசன்
உத்சவர்	: ஸ்ரீநிவாசன்
தாயார்	: உபய நாச்சிமார்கள்
தீர்த்தம்	: தாமிரபரணி, வருண தீர்த்தம்
விமானம்	: குமுத விமானம்

தல வரலாறு

முன்னொரு யுகத்தில் வித்யாதரன் என்று பெயர் கொண்ட தேவனும் அவனது மனையாளும் திருத்தொலைவில்லி மங்கலம் பதி இருக்கும் நந்தவனம், பொய்கை நிறைந்த இயற்கை சூழல் காட்சி கண்ட இடத்தில் காமக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஆகாய மார்க்கமாகக் குபேரன் சென்றபோது அவனைக் கவனியாதுபோல் காமவெறியில் திறைத்திருந்தான் வித்யாதரன். அதனால் கோபம் கொண்ட குபேரன் வித்யாதரனை வில்லாகவும் அவனது மனைவியைத் துலாமாகவும் (தராசு) மாறும்படியும் சபித்து விட்டான்.

தங்களது தவறையுணர்ந்த தேவ தம்பதியர்கள் இருவரும் குபேரனைப் பணிந்து சாபவிமோசனம் வேண்டினர். அப்போது வெகு காலம் வரை தம்பதியர் இருவரும் வில், துலாமாகப் பூமியில் புதைந்தபடி இருப்பர் என்றும், சுப்ரயர் என்ற முனிவர் அவ்விடத்திற்கு யாகம் செய்ய நிலத்தை பயன்படுத்தும்போது அவரது கரம் பட்டு சாப விமோசனம் பெறுவர் என்றும் கூறினான்.

இதேபோல் ஆத்திரேய கோத்திரத்தில் பிறந்த சுப்ரயர் என்ற முனிவர் இத்தலம் இருக்கும் பகுதியில் யாகம் செய்ய தமது கைகளால்

பூமியை உழுது சமப்படுத்தினார். அப்போது கொழுமுனை தரையில் பட்ட இடத்தில் நளி பொருந்திய துலாக்கோலும், வில்லும் கண்டு அவர் கையில் எடுத்தார். முனிவரின் கரம் பட்டவுடன் அவ்விரண்டும் வித்யாதரன் என்ற தேவனும் அவன் மனைவியும் சுப்ரபரைத் தொழுது இருவரும் தமது விருத்தாந்தங்களைச் சொல்லி தேவலோகம் சென்றனர்.

துலா, வில் ஆகிய இரண்டும் இவ்விடத்தில் சாப விமோசனம் பெற்ற காரணத்தால் துலா வில்லி மங்கலம் என்ற பெயர் பெற்று நாளடைவில் அப்பெயர் திரிந்து தொலைவில்லி மங்கலமாயிற்று என்று கூறப்படுகிறது.

சுப்ரபர் செய்த யாகத்தால் கிடைத்த அவிர் பாகத்தைத் தேவர்கள் அனைவரும் ஏற்றனர். பின்பு தேவர்களும் அப்பெரும் சேர்ந்து எம்பெருமானைத் தொழுதனர். அப்போது பெருமான் நேரில் தோன்றி சேவை சாதித்து தேவர்களின் விருப்பத்திற்கிணங்கப் பெருமான் 'தேவபிரான்' என்னும் திருநாமத்துடன் அன்று முதல் தொலைவில்லி மங்கலத்தில் எழுந்தருளினார் என்பது ஐதீகம்.

திருத்தொலைவில்லி மங்களத்தில் இரண்டாவது திருப்பதியான ஸ்ரீஅரவிந்தலோசனர் ஸ்தல வரலாறு:

இரண்டாவது தலம்	ஸ்ரீஅரவிந்தலோசனர் தலம்
மூலவர்	: ஸ்ரீஅரவிந்த லோசனன், செந்தாமரைக்கண்ணன்
உத்சவர்	: செந்தாமரைக்கண்ணன்
தாயார்	: கருந்தடங்கண்ணி நாச்சியார்
தீர்த்தம்	: அஸ்வினி தீர்த்தம்
விமானம்	: குமுத விமானம்

சப்ரப மகரிஷி செய்த யாகத்தின் பலனாய் திருத்தொலைவில்லி மங்கலத்தில் தேவர் பிரான் கோயில் கொண்டு சேவை புரிந்தார். அப்பெருமானுக்கு சுப்ரப மகரிஷி அன்றாடம் பூக்களைப் பறித்து பூசை செய்வதை வழக்கமாகக் கொண்ட தாமிரபரணி நதியில் நீராடி பெருமானின் நாமத்தை உச்சரித்து தாமரை மலர்களைப் பறித்து விதம் தேவப்பிரானுக்கு மிகவும் பிடித்தது.

ஒருநாள் தேவப்பிரான் சுப்ரபர் பூக்களைப் பறிக்கும் அழகை முனிவரின் பின் சென்று பார்த்தார். அதைக் கண்ட முனிவர் வினவ பெருமான் தாமரை மலரைக் கொய்யும் அழகைப் பார்க்கவே இவ்வாறு பின் தொடர்ந்ததாகக் கூறினார்.

அப்போது சுப்ரப மகிரிஷியின் விருப்பப்படியே பெருமான் அவ்விடத்திலேயே கோயில் கொண்டு தாமரை மலர்களை விருப்பத்துடன் பார்த்ததால் அரவிந்த லோசனன் என்ற திருநாமம் பெருமானுக்கு ஏற்பட்டதாம். அதுமட்டுமின்றி தன்னைத் தாமரை மலர்களால் தொழுபவர்களுக்கு சகல நன்மைகளும் அளிப்பதாகவும் பெருமான் அருளிச் செய்தாராம்.

இத்தலத்தின் சிறப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள நவ திருப்பதிகளில் ‘இரட்டைத் திருப்பதிகள்’ என்று போற்றப்படுவது திருத்தொலைவில்லி மங்கலத்தில் அமைந்துள்ள தேவப்பிரான் சன்னதியும், அரவிந்தலோசனப் பெருமாள் சன்னதியும் ஆகும். இவ்விரண்டு கோயில்களும் சேர்ந்து ஒரே திவ்விய தேசமாகப் போற்றப்படுகின்றது.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் பதினேழாவது திருத்தலமாகக் கூறப்படும் வானமாமலைத் தோத்தாத்திரிநாதன் தலவரலாறு:

வானோர் முதலா மரம் அளவா எப்பிறப்பும்
ஆனேற்கு அவதியிடல் ஆகாதோ-தேனேயும்
பூவரமங்கை புவிமங்கை நாயகனே
சீவர மங்கை அரசே (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 51)

தலம் : திருவரமங்கை என்னும் வானமாமலை

மூலவர் : தோத்தாத்திரிநாதன்

உத்சவர் : தெய்வநாயகன்

தாயார் : ஸ்ரீவரமங்கைத் தாயார்

தீர்த்தம் : இந்திரதீர்த்தம், சேற்றுத் தாமரைத் தீர்த்தம்

விமானம் : நந்தவர்த்தன விமானம் என்ற ஸ்ரீவைகுண்ட விமானம்

தலவரலாறு

திருமகள் திருவரமங்கை (ஸ்ரீவரமங்கை) என்னும் திருநாமத்துடன் இத்தலத்தில் உறையும் தோத்தாத்திரிநாதனை மணந்து கொண்ட காரணத்தால் திருமகளின் பெயரான ஸ்ரீவரமங்கை என்னும் திருநாமத்திலேயே இப்பதி அழைக்கப்பட்டதாகச் சொல்லுவர். ஸ்ரீநம்மாழ்வார் இப்பதியை ஸ்ரீவரமங்கல நகர் என்று மங்களாசாசனம் செய்துள்ளார். இத்தலம் இருக்கும் பகுதியைச் சுற்றிலும் வனங்களும் மலையும் சூழ்ந்திருக்கும் காரணத்தால் வானமாமலை என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

ஒரு காலத்தில் இத்தலத்தைச் சுற்றி நான்கு ஏரிகள் இருந்த காரணத்தால் 'நான்கு ஏரி' என்றும், அதுவே நாளடைவில் திரிந்து 'நாங்குனேரி' என்று மாறியது என்றும் சொல்லுவர். தற்போது இங்கு ஒரு ஏரி மட்டுமே உள்ளது. நான்குனேரி என்று அழைக்கப்படும் ஏரியின்

பின்புறம் அமைந்துள்ளது இத்தலம். ஆதியில் இத்திருக்கோயிலின் கருவறை ஏரிக்கு உள்ளேயே இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இப்போதும் ஏரியில் நீர் நிறைந்தால் கருவறையைச் சுற்றி இரண்டு அடி ஆழத்திற்குத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. மழைக் காலங்களில் தண்ணீரைக் கடந்து சென்றுதான் பெருமாளைத் தரிசனம் செய்ய வேண்டும்.

ஆதிசேஷன் இத்தலத்தில் தவமியற்றி திரு அணையாக இருக்கும் பாக்கியம் பெற்றதால் இத்தலம் 'நாகணைசேரி' என்றும் உரோமச முனிவர் தவமியற்றி பெருமானைத் தரிசனம் கண்டதால் 'உரோமச க்ஷேத்ரம்' என்றும் கூறுவர்.

வடமொழியில் இத்தலம் தோத்தாத்திரி என்ற பெயரில் அழைக்கப்படுவதால் தோத்தாத்திரிநாதர் ஆலயம் என்று தமிழில் அழைப்பர். இன்றும் வைணவ சமயப் பெரியவர்கள் இத்தலத்தைத் தோத்தாத்திரி என்ற பெயரிலேயே அழைப்பர்.

இத்தலத்தின் சிறப்பாக நவதிருப்பதிகளில் ஆழ்வார் திருநகரி தவிர வேறெங்கும் நம்மாழ்வாருக்கு மங்கள விக்கிரகம் கிடையாது. ஆனால் திருவரமங்கை என்னும் வானமாமலை தலத்தில் உள்ள சடாரியில் நம்மாழ்வாரின் திருஉருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இது நம்மாழ்வாரே நேரில் ஆசிர்வதிப்பதற்குச் சமானமாகக் கருதப்படுகிறது.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் இறுதியாகப் பதினெட்டாவது தலமாக விளங்குவது குறுங்குடிக் குழகநம்பி தல வரலாறு:

தாலத் திழிகுலத்துச் சண்டாள மானாலும்
மேலத் தவரதனின் மேன்மைத்தே-கோலக்

குறுங்குடி வாழ் மாயன் குரை கழற்கு ஆளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு

(நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 57)

தலம்	: திருக்குறுங்குடி
மூலவர்	: நின்ற நம்பி, குறுங்குடி நம்பி, பரிபூரணன், வடுகநம்பி, வீற்றிருந்த நம்பி, கிடந்த நம்பி
உத்சவர்	: அழகிய நம்பி, வைணவ நம்பி
தாயார்	: குறுங்குடிவல்லி நாச்சியார்
தீர்த்தம்	: திருப்பாற்கடல், பஞ்சதுறை, சிந்துநதி
விமானம்	: பஞ்சகேதக விமானம்

தல வரலாறு

இத்தலம் வானம க்ஷேத்திரம் என்ற பெயரினைப் பெற்று பெருமாள் எடுத்த வாமன அவதாரத்துடன் தொடர்பு கொண்ட காரணத்தால் திருக்குறுங்குடி என்று பெயர் பெற்றதாகச் சொல்லுவர்.

மகாபலிச் சக்கரவர்த்தியைச் சுதல லோகத்திற்குத் தனது பாதங்களால் அழுத்தி அனுப்பி தேவர்களைக் காப்பதற்குத் திருவுள்ளம் கொண்ட பரமன் காஸ்யப மகரிஷிக்கும் அதிதி தேவிக்கும் கிருதயுகத்தில் புரட்டாசி மாதம் சுக்கில பட்சம், சிரவண நட்சத்திரத்தில் துவாதசியன்று மகனாக அவதாரம் செய்தார். அப்போது வாமனரின் திருக்காதுகளில் குண்டலங்களும் புஜங்களில் தோள் வளைகளும் மார்பிலே ஸ்ரீவத்ஸம் என்ற மச்சமும் கால்களிலே தண்டையும், மார்பிலே வனமாலையும் தவழ்ந்தன.

சூரிய பகவான் காயத்திரி மந்திரத்தையும் பிரகஸ்பதி பிரம்ம சூத்திரத்தையும் வாமனருக்கு உபதேசம் செய்தனர். காஸ்யப மகரிஷி

தர்ப்பைப் புல்லைக் கொடுத்தார். சந்திரன் தண்டம் கொடுத்தான். தாயான அதிதிதேவி கௌபீனத்தைத் தந்தாள். பிரம்மதேவன் கமண்டம் அளித்தார். குபேரன் பிட்சாபாத்திரம் அளித்தான். பார்வதி தேவி முதன்முதலில் பகவானுக்குப் பிட்சை அளித்து கௌரவப்படுத்தினார்.

இத்தகைய சிறப்பும் பேறும் பெற்ற வாமன மூர்த்தியுடன் இத்தலம் பெற்ற தொடர்பின் காரணமாக வாமனரின் சிறிய உருவத்தை நினைவுறுத்தும் வண்ணம் குறுங்குடி என்று பெயர் பெற்றதாகவும் 'திரு' என்ற அடைமொழியுடன் 'திருக்குறுங்குடி' எனப் பெயர் பெற்றது என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

இத்தலத்தின் சிறப்பு திருமங்கையாழ்வார் கடைசியாக மங்களா சாசனம் செய்த தலம் திருக்குறுங்குடி. திருமங்கையாழ்வார் முக்திபெற்ற இடம் 'திருவரசு' எனப் போற்றப்படுகிறது. கழனிகளின் நடுவே அமைந்துள்ள இவ்விடத்தில் இன்றும் நித்திய பூஜைகள் நடைபெறுவதைக் காணலாம்.

தொகுப்புரை

'தல வரலாறு' என்னும் இவ்வியலில் பாண்டிய நாட்டு பதினெட்டுத் தலங்களின் சிறப்பும், தலம் தோன்றியதற்கான காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்திற்கான சிறப்பும், இறைவன் தோன்றியதற்கான காரணமும், திருமால் அவதாரங்களும் பற்றி கூறப்பட்டுள்ளன. தலத்திற்கான தீர்த்தம், விமானம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்திற்கும் ஆழ்வாரின் பாசுரங்கள் பாடப்பட்டுள்ளதையும் விளக்கும் வகையில் இவ்வியல் தொகுக்கப் பட்டுள்ளது.

இயல் - 2

வழிபாட்டு முறைகள்

வழிபாடு என்பது மக்கள் முதல் பிற உயிரினங்கள் வரை உள்ள அனைத்து உயிர்களும் இயற்கையையும் தெய்வத்தின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையும் மன ஆற்றலும் கொண்டு பூஜைகள், பரிகாரங்கள், சடங்குகள் மூலம் வழிபடும் மரபுகள் வழிபாடு ஆகும்.

பழங்காலத்தில் மனிதன் எதையும் சார்ந்து வாழாமல் கல்வியறிவு அற்றவனாகவே காணப்பட்டான். பிறகு காலப்போக்கில் காலம் மாற்றம் அடைய தன்னைத் தானே திருத்திக் கொண்டு நாகரிக மாற்றம் கொண்டான். பிறகு இயற்கையைத் தெய்வமாகப் போற்றவும் பக்தியாற்றல் பெருகியும் இன்று வரை அதிக கடவுள் நம்பிக்கையும் கொண்டு இறைவனை வழிபட ஆரம்பித்தான்.

இறை வழிபாட்டிற்காகப் பழங்காலத்தில் மன்னர்கள் பல கோயில்களைக் கட்டி பூசைகள் பல செய்து இறைவனை வழிபட்டனர். தங்களின் தேவைக்காகவும் இறை வழிபாட்டை மேற்கொண்டனர். தங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டாலும் நோய்வாய்ப்பட்டாலும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு நேர்த்திக்கடன் என்ற வழிபாட்டு முறையையும் கடைப்பிடித்தனர்.

ஆடு, மாடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுத்தும் மொட்டை அடித்தல், முடிகொடுத்தல், அலகு குத்துதல், தீ மிதித்தல் போன்றவற்றையும் இறைவனுக்குச் செலுத்தும் காணிக்கையாக மக்கள் செய்கின்றனர்.

மக்கள் மதங்களின் அடிப்படையில் இறைவனையும் பிரித்து வழிபடுகின்றனர். சைவ சமயம், வைணவம், புத்தம் (பௌத்தம்), கிறித்தவம், இசுலாம் போன்ற மதத்தினை மக்கள் இன்றும் தழுவியுள்ளனர். இவ்வாறு மதத்தினைத் தழுவிய மக்கள் இறைவனையும் பிரித்து வழிபடுகின்றனர்.

இறைவனை வழிபடுவது மட்டுமின்றி சடங்குகளும் சம்பிரதாயங்களும் பூசைகளும் மாறுபட்டு காணப்படுகின்றன. மக்களுக்குள் ஜாதி வேறுபாடுகளால் இறை வழிபாடும் வேறுபட்டு காணப்படுகின்றன.

ந.சுப்பு ரெட்டியார் வைணவ மதத்தைத் தழுவி 108 திவ்ய தேசங்களில் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் இறைவனான திருமாலில் திருத்தலத்தைத் தரிசித்தும் ஆழ்வார்களின் பாசுரங்களில் மெய் மறந்தும் பாண்டிய நாட்டின் இயற்கைச் சூழலில் தன்னையே அர்ப்பணித்தும் பதினெட்டுத் தலங்களையும் தனது திருவடி கரங்களால் படிந்தும் பணிந்தும் வழிபட்டு வருகிறார்.

பழங்காலம் முதல் இன்றைய காலகட்டம் வரை இறை வழிபாடு என்பது தொடர்ந்தே காணப்படுகின்றது. இன்று மக்கள் பக்தி ஆற்றலில் பெரிதும் தங்களை அர்ப்பணித்து வழிபட்டு வருகின்றனர். காரணம் தங்களுக்கு ஏற்படும் துன்பங்கள், நோய்களைப் போக்க இறைவன்

ஒருவனே துணை என்பதை அறிந்து கொண்டு மனதில் நம்பிக்கை கொண்டும் இறை வழிபாட்டில் சரணடைகின்றனர்.

வைணவ சமயத்தின் தூண்களாகவும் திருமாலின் பெருமைகளையும் இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர்கள் ஆழ்வார்கள். நாலாயிர திவ்யபிரபந்தம் என்ற பாசுரங்களின் வாயிலாகப் பன்னிரு ஆழ்வார்கள் திருமாலின் அவதாரங்களையும் புகழையும் வைணவ மதத்தின் தன்மையும் இந்த உலக மக்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இப்பாசுரங்களின் வாயிலாகவே வைணவ மதம் தழைத்தோங்கப் பட்டு இறைவன் பெருமான் உலக மக்கள் உள்ளத்தில் அருள் புரிகின்றார்.

வைணவ மதத்தின் முழுமுதற் கடவுளாக வைணவ மக்களால் வணங்கப்படுபவன் திருமால் ஆவான். இவன் மக்களைக் காப்பதற்காகப் பல அவதாரங்களைப் புரிந்துள்ளான். அவற்றுள் பத்து அவதாரங்கள் இன்றும் திருமாலின் சிறப்பையும் புகழையும் உலகறியச் செய்த அவதாரங்கள் ஆகும். விண்ணும் மண்ணும் போற்றக்கூடிய பூமிபாலகன் பெருமான். இந்த உலக மக்கள் அனைவரும் குழந்தையாகக் கருதி போற்றக் கூடியவன் பெருமான். இல்லை என்போர்க்கு இல்லை என்றும் இறைவன் இருக்கிறான் என்று நம்புவோர்க்குக் காட்சி தந்தும் கருணை புரியும் ஆதிஷேசன் பெருமாள் ஆவான்.

இவ்வாறு சிறப்பித்துக் கூறப்படும் பெருமானுக்கு வைணவ மக்கள் காலங்காலமாகப் பூஜைகள், வழிபாட்டுச் சடங்குகள், திருவிழாக்கள் போன்றவை தொன்றுதொட்டு இடைவிடாமல் செய்து வருகின்றனர். அக்காலம் முதல் இன்று வரை வம்சாவழியாக வைணவ மக்கள்

திருமாலுக்குத் தங்கள் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் மரபுகளாகச் செய்து வருகின்றனர்.

வைணவத் திருவிழாக்கள் (உற்ஸவங்கள்)

வருடந்தோறும் திவ்ய தேசங்களில் ஏராளமான உற்ஸவங்கள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் இறைவன் திருமாலை நினைத்து வைணவ மக்கள் கொண்டாடும் திருவிழாக்கள் மிகச் சிறப்பானதாகும். அவற்றுள் கிருஷ்ண ஜெயந்தி, கோகுலஷ்டமி, வைகுண்ட ஏகாதசி, சொர்க்கவாசல் திறப்பு, அழகர் ஆற்றில் இறங்குதல், மார்கழி மாத நோன்பு போன்றவை மிக முக்கிய சிறப்பு உத்ஸவங்கள் ஆகும்.

சித்திரை மாதம்

திருவெள்ளறை கோடைத் திருநாள், திருவந்திபுரம், திருவல்லிக் கேணி தலங்களில் கருடசேவை. திருமாலிருஞ்சோலை அழகர் ஆற்றில் இறங்குதல், திருவள்ளூர், திருவஹீந்திபுரம், திருக்கோஷ்டியூர், திருக்குடந்தை, திருக்கரம்பனூர், திருவல்லிக்கேணி ஆகிய தலங்களில் திருத்தேர். பச்சை வண்ணர், பவழவண்ணர் உத்ஸவம்.

வைகாசி மாதம்

திருக்கண்ணபுரம், கச்சி அத்திகிரி, ஆழ்வார் திருநகரி, திருச்சித்திர கூடம், தஞ்சை நீலமேகப் பெருமாள் ஆலயங்களில் கருடசேவை. திருக்கண்ணபுரம் திருத்தேர் போன்றவை சிறப்பாக நடைபெறும் உத்ஸவம் ஆகும்.

ஆனி மாதம்

திருவல்லிக்கேணி நரசிம்மரின் கருட சேவை மற்றும் தெப்போத்ஸவம்.

ஆடி மாதம்

ஸ்ரீவில்லிபுத்தூர், திருத்தண்கால், திருமலை ஆகிய தலங்களில் கருட சேவை. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் பெரியாழ்வார் (ஹம்ஸ வாகனம்).

ஆவணி மாதம்

காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள், திருநாங்கூர் தலங்களில் பவித்ரோத்ஸவம் ஆரம்பம். நாச்சியார் கோயில் திருக்கல்யாணம், திருநாங்கூர் கருட சேவை.

புரட்டாசி மாதம்

திருப்பதி கருட சேவை மற்றும் திருத்தேர். ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங் கோவிலுடையான திருத்தேர்.

ஐப்பசி மாதம்

திருவிந்தளூர் கருடசேவை.

கார்த்திகை மாதம்

திருச்சானூர் அலர்மேலு மங்கா தீர்த்தோத்ஸவம்

மார்கழி மாதம்

நாச்சியார் கோயில் கல் கருடசேவை, பச்சை வண்ணர் பவழ வண்ணர் கருடசேவை, நாச்சியார் கோயில் தீர்த்தவாரி, தெப்பம்.

தை மாதம்

தெப்பம் (திருப்புட்குழி), கருட சேவை (திருநாங்கூர் பதினொரு), கருட சேவை, திருவள்ளூர் திருத்தேர்.

மாசி மாதம்

திருப்புட்குழி, திருவரங்கம், திருக்கண்ணபுரம் மேல் அஹோபிலம் தலங்களில் கருட சேவை மற்றும் திருத்தேர், தீர்த்தவாரி, தெப்போத்ஸவம்.

பங்குனி மாதம்

திருவாலி-திருநகரிவேடுபறி, வானமாமலை தங்க கோரதம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கல்யாணம், திருவெள்ளறை திருத்தேர், நாச்சியார் கோயில் திருத்தேர்.

இதைத் தவிர திவ்விய தேசங்கள் அனைத்திலும் ஒவ்வொரு மாதமும் பலவிதமான உத்ஸவாதிகள் (திருவிழாக்கள்) கொண்டாடப் படுகின்றன.

வழிபாட்டு மரபுகள்

மக்கள் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையாலும் பக்தியாற்றலாலும் துன்பம், நோய் எற்படாமல் பாதுகாப்பது இறைவன் மட்டுமே என்பதை மனதில் உணர்ந்து நேர்த்திக்கடனாக, காணிக்கை செலுத்துவது, ஆடு, மாடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுத்தல், மொட்டை, பூசைகள், சடங்குகள் போன்றவற்றை இறைவனுக்குச் செலுத்துவது. இவை மாறாமல் தொன்றுதொட்டு காலங்காலமாக

முன்னோர்களால் தொடங்கப்பட்டு இன்றைய சந்ததியினர் வரை வம்சாவழியாக செய்து வருவது வழிபாட்டு மரபுகள் ஆகும்.

வழிபாடு என்பது இறை வழிபாடு, இயற்கை வழிபாடு என்று இரண்டும் கூறலாம். இறை வழிபாடு என்பது சிறு தெய்வம், பெரு தெய்வம் என்று கூறுவர். அவற்றுள் பெருந்தெய்வமான வைணவ மதத்தைச் சார்ந்த முழுமுதற் கடவுளாக விளங்கும் பெருமாள், திருமால், இராமன், கிருஷ்ணன், கண்ணன், விஷ்ணு என்று பல பெயர்களால் வைணவ மக்களுக்குரிய கடவுளாக வணங்கப்படுபவன் உலகளந்த நாயகன் விண்ணும் மண்ணும் போற்றக்கூடியவன் பெருமாள் ஒருவனே ஆவான்.

பெருமாளை வணங்கும் பக்தர்களுக்கு இப்பிறவியன்றி எப்பிறவியிலும் மோட்சம் கிட்டும் என்றே வைணவர்கள் கூறுகின்றனர். 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தால் இந்த உலகையே தனது கட்டுப்பாட்டில் கொண்டவன். இவனைப் புகழ்ந்து இவனது சிறப்புகளை உலகிற்கு எடுத்தியம்பியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். வைணவ மக்களுக்கு முழுமுதற் கடவுளாக விளங்கும் பெருமாளின் சிறப்பை நாலாயிர திவ்விய பிரபந்தம் என்ற நூலின் மூலம் பாசுரங்களை இவ்வுலகிற்கு எடுத்துக் கூறியவர்கள் ஆழ்வார்கள். வைணவத்தின் தூண்களாகவும் மற்றும் கடவுளாகவும் விளங்குபவர்கள்.

வைணவ மக்கள் இறை நெறியோடும் பாசத்தோடும் பக்தியோடும் தனது கரங்களை தலைமேல் கூப்பி நெஞ்சார்ந்த உணர்வோடு இறைவன் பெருமாளின் திருவடிகளில் தங்களைச் சரண்புகுத்த வேண்டும். அப்போது பெருமாள் பேரானந்தம் கொண்டு பக்தர்களின் குறைகளையும்

நோய்களையும் போக்கி அவர்களுக்கு மோட்சம் கொடுத்து முக்தியை அளிக்கிறான்.

இதன் காரணமாகவே இறைவன் பெருமாள் மீது வைணவ மக்கள் அதிக நம்பிக்கையும் பக்தியுணர்வும் பெருகி பூசைகள், சடங்குகள் மூலம் திருவிழாக்களாகக் கொண்டாடுகின்றனர். இவற்றை அதிகரித்து வழிபாடுகள் மரபு ரீதியாகவும் பரம்பரையாகவும் மக்களால் அதிகரிக்கப்பட்டன.

முன்னோர்களால் செய்யப்பட்ட சடங்குகள், பூஜை வழிபாடுகள் போன்றவை இன்றும் தொடர்ந்து செய்யப்படுகின்றன. இவை ஏதேனும் ஒரு காரணத்தால் சடங்குகள், பூஜைகள் தடைபட்டால் அதில் ஏதோ குறை இருப்பதாகவும் ஏதோ துன்பம் ஏற்படப்போவதாகவும் கருதப்பட்டு அதற்கு மாறாக பரிகாரம் என்ற சடங்கு சம்பிரதாயங்களே மக்கள் இன்றும் கடைப்பிடிக்கின்றனர்.

வைணவர்கள் அவர்களது சடங்குமுறையில் பல சாஸ்திரங்களைக் கடைப்பிடித்து வருகின்றனர். இறை வழிபாட்டிலும் சடங்குகளிலும் பல சாஸ்திரங்களும் சம்பிரதாய முறையிலும் வழிபாட்டு மரபுகளைக் கடைப்பிடித்துள்ளனர்.

உயிரைக் கொன்று ஊனை வளர்ப்பது பெரும் பாவமே. இப்பாவம் எந்நிலையிலும் கழிக்கப்படாது என்றே வைணவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாக இறைவன் திருமாலுக்கு எவ்வித அசைவமும் பலி கொடுப்பதோ நேர்த்திக்கடன் செலுத்துவதோ கிடையாது. பூசைகள், வழிபாட்டுச் சடங்குகள் போன்றவை சைவப் பொருட்களைக் கொண்டே இறைவன் பெருமாளுக்கு வைணவ மக்கள் செய்து வருகின்றனர்.

ஒரு கையில் சங்கும் மற்றொரு கையில் சக்கரமும் ஆதிஷேசன் குடையாகவும் தாமரை, பாற்கடலில் வீற்றிருக்கும் பெருமானுக்கு துளசி மாலை, வண்ண வண்ண பூக்கள், வெண்ணெய், நெய், பால், தயிர், அரிசி மாவு போன்ற பொருள்கள் கொண்டு மக்கள் பூஜை வழிபாடு செய்கின்றனர். கோயிலின் பெருமானுக்குப் பூஜை செய்யும் அர்ச்சகர் தமிழிலும் வடமொழியிலும் வேதங்களை உச்சரித்து வழிபாடு செய்கின்றார். இவை இன்றைய மரபு வழிபாடாகவும் கருதப்படுகின்றது.

ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரம் திருமாலுக்குரிய வேதம். ஆதலால் வைணவ மக்கள் தங்கள் துன்பத்தை நீக்கி இன்பம் பெறவும் இம்மை, மறுமையில் பிறவி மோட்சத்தைப் பெறவும் வீடுபேறு பெறவும் எட்டெழுத்து மந்திரத்தை உச்சரிக்கின்றன. இன்றும் இவை வைணவ மக்களின் பிரணவ மந்திரமாக உச்சரிக்கப்பட்டு வழிபாட்டு மந்திரமாகவும் கூறப்படுகின்றன. இவை மட்டும் இன்றி கோவிந்தா, கண்ணா, கிருஷ்ணா, முகுந்தா, ராமா, ஹரி, விஷ்ணு போன்ற பல பெயர்களைச் செல்லமாகப் பெருமாளுக்குச் சூட்டி மக்கள் வழிபடுகின்றனர்.

பூதத்தாழ்வார் திருமாலை நீரோதமனி நெடுமால் (கடல் போன்ற நீல நிறமுடையவன்) அரவணையான் (பாம்புப் படுக்கையை உடையவன் பூழியான் (சக்கரப் படையை உடையவன்) என்று வேறு பெயர்களால் போற்றுகின்றனர்.

ஆயிரம் கதிர்களை உடைய சூரியன், ஒளிவீசும் தாமரையில் உள்ள பிரமன், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் கஜேந்திரன் என்னும் யானை இவை மட்டுமின்றி பிற உயிர்கள் அனைத்தும் திருமாலை வணங்குகின்றன.

திரிவிக்கிரமனாய் பெரிய உருவத்தைக் கொண்ட திருமாலின் பெயரைக் கூறினால் புனிதர் ஆகலாம் என்றும் மக்கள் திருமாலின் பெயரைக் கூறி வழிபடுகின்றனர்.

திருமால் மீது மக்கள் அதிக பக்தி ஆற்றல் செலுத்துவதற்கு முக்கிய காரணம் வாமன அவதாரம் எடுத்துத்திரிவிக்கிரமனாய் நின்றது (வாமன அவதாரம்).

சீதைக்காக இராமனாய்ப் பொய்மானின் பின் சென்றது (இராமாவதாரம்). அர்ச்சுனனுக்காகத் தேரோட்டியது (கிருஷ்ணா வதாரம்), இரணியனை நகத்தால் கிழித்தது (நரசிம்ம அவதாரம்) போன்றவை காரணமாகக் கொண்டு திருமாலின் பத்து அவதாரங்களில் இவை மட்டும் முக்கிய அம்சமாகக் கொண்ட வழிபாட்டு அவதாரங்களாக மக்களால் போற்றப்பட்டு முக்கிய வழிபாட்டு மரபாக இன்றும் கருதப்படுகின்றன.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தன் சாபத்தைப் போக்க திருமாலையே வழிபட்டதாகக் கூறப்படுகிறது. பிற தெய்வங்களைவிட மேம்பட்டு நிற்பவன் திருமால்.

திருமால் அருளும் இன்பம்

பிற தெய்வங்களின் வாயிலில் நின்று அத்தெய்வங்களின் திருவடிகளைச் சிலர் விழுந்து வணங்குவர். அத்தன்மையோர் இடைப்பட்டதான சுவர்க்க இன்பத்தை மட்டுமே அடைந்தவர் ஆவார். ஆனால் கடல் நீர் போன்ற நீலநிற மேனியை உடைய திருமாலே தலைமையான சுவர்க்கத்தைவிட மேலான இன்பத்தைத் தருவது உன்னுடைய திருவடியாகும். அதனை எண்ணி வழிபட வல்லவர் இவ்வுலகில் எவரும் இல்லை.

எல்லோரும் வணங்கும் திருமால்

திருப்பாற்கடலில் பாம்புப் படுக்கையில் அறிதுயில் கொள்பவர் திருமால். அத்திருமாலை அவர், இவர் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதபடி அனைவரும் வணங்குகின்றனர். ஆராய்ந்துப் பார்த்தால் ஆயிரம் ஒளிக்கதிர்களை உடைய சூரியன், ஒளிவீசும் தாமரையை இடமாகக் கொண்ட பிரம்மதேவன் நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான் ஆகிய மூவரும் திருமாலை நாள்தோறும் இடைவிடாது தொடர்ந்து வணங்குபவர்கள் ஆவார். பிற லோகத்தில் வாழும் இவர்களே பெருமாளை வணங்கும்போது பூலோக மனிதர்களாகிய நாமும் பல குற்றங்களையும் பாவங்களையும் செய்கின்றோம். இவற்றை நம்மை விட்டு அகல திருமாலின் திருவடியில் இருகரம் கூப்பி சரணடைவோம் என்றும் மக்கள் திருமாலை வணங்குகின்றனர்.

பாம்புப் படுக்கையோன்

திருவனந்த ஆழ்வான் என்னும் பாம்பினைக் குளிர்ந்த படுக்கையாகக் கொண்டவர் திருமால். அவர் பாரதப் போரில் கண்ணபிரானாக நின்று அர்ச்சுனனுக்குத் தேரோட்டினார். மாயமானைப் பிடிக்கச் சென்று சீதையைப் பிரிந்து வருந்தி, காட்டில் இராமனாய் வெறுந் தரையில் படுத்துத் துன்புற்றார். இவ்விறைவனை நாமும் தொழுவோம்.

புண்ணியராகிப் பொலிவீர்

மேன்மையடையும் வழியை அறியாதவர்களே உங்கள் வயிற்றைப் பெரிய ஊர் போல வளர்த்துக் கொண்டு பழி பாவங்களைச் செய்கின்றீர்கள். உலகில் வாழ்வோரைப் புகழ்ந்து பேசுவதைக் கைவிடுங்கள். எட்டுத் திசைகளும் பெயர்ந்து போகும்படி வளர்ந்து நின்று நான்கு கைகளை உடையவன் திரிவிக்கிரமன். அவனுடைய

திருநாமங்களை ஓதுங்கள். எல்லா இடங்களுக்கும் சென்று திருமாலின் புகழைப் பாடி இவ்வுலகைப் புனிதமடையச் செய்யுங்கள். இவ்வாறு செய்தால் வீடுபேறு என்னும் மோட்சத்தைப் பெறும் புண்ணியராகப் போற்றப்படுவீர்கள் என்று கூறப்படுகின்றது.

இறைவனே மழையைப் பெய்விப்பான்

தன்னுயிர் இறைவனுக்கு அடிமைப்பட்டது என்பதை ஒருவன் அறியாமல் இருக்கலாம். ஆயினும் திருமால் அவன் மனத்தில் வந்து தோன்றுவான். அப்படிச் செய்யும் அத்திருமாலைத் தன் மனத்துள் நிலை பெறும்படி அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்நிலையில் திருமால் உயிருக்கு அருள் தருவான். காட்டிலுள்ள மேட்டை வெட்டி அதனை ஏரியாக மாற்ற மனிதனால் முடியும்; அன்று மழையைப் பெய்விக்க இறைவனை அன்றி வேறு யாராலும் முடியாது என்பதையும் மனதில் கொண்டு அத்திருமாலைப் புகழ்ந்து வணங்குகின்றனர்.

திருமாலின் மீது பெண்களுக்குரிய வழிபாட்டு முறைகள்

திருமாலுக்குரிய முக்கிய வழிபாட்டு மரபுகளை ஆண்டாளின் திருப்பாவை விளக்குகின்றன. ஒரு பெண் தன் வாழ்க்கையில் இன்பம் பெறவும் தீமை, வறுமை நீங்கி பேரின்பம் பெறவும் வாழ்வில் முக்தியை அடையவும் இவ்வழிபாடு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள். பெண் ஆழ்வாராகிய இவரை வைணவர்கள் நாச்சியார் என்று குறிப்பிடுகின்றனர். பெரியாழ்வார் அமைத்த துளசிப் பாத்தியில் அவரால் கண்டெடுக்கப் பட்டவரே ஆண்டாள்.

பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட பெருமைக்குரிய இவ் ஆண்டாள் நிலமகளின் அம்சமாவாள். ஆண்டாளின் இயற்பெயர் கோதை என்பதாகும். பெரியாழ்வார் கட்டிய மாலையை அவருக்குத் தெரியாமல் சூடிக் கொள்வாள். பின்பு தம் அழகைக் கண்ணாடியில் பார்த்த பின்னர் மாலையைக் கழற்றி வைத்து விடுவாள்.

ஒருநாள் இதனைக் கண்ட பெரியாழ்வார் இம்மாலை இறைவனுக்குச் சூடத் தகுதியற்றது என்று அணிவிக்கவில்லை. அன்று இரவு ஆழ்வாரின் கனவில் தோன்றிய திருமால் கோதை சூடிய மாலையே தமக்கு விருப்பமான மாலை என்று கூறினார்.

இறைவனைத் தம் மாலைவழி ஆண்டதால் ஆண்டாள் ஆனாள். அம்மாலையைத் தாம் அணிந்து பின்னர் கொடுத்ததால் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி' என்று சிறப்பிக்கப்பட்டார்.

பாவை வழிபாட்டு முறைகள்

கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் ஒருவரை ஒருவர் தூக்கத்திலிருந்து எழுப்புவர். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நீராடச் செல்வர். அந்நேரத்தில் தம்முடைய வழிபடு கடவுளின் திருவுருவாகிய பாவையைத் தம் மனத்துள் எண்ணுவர். தம் இயல்புகளைக் கூறி பாடலும் பாடி கூடி மகிழ்வர். அவை பாவைப் பாட்டாகக் கருதப்படுகின்றன. இவை தொன்மை வாய்ந்தது என்றும் பெண்களின் பக்தியாற்றலும், வழிபாட்டு மரபும் விளக்குவதாக அமைந்துள்ளன.

பெண்களுக்குரிய வழிபாடு (பாவை நோன்பு)

பாவை நோன்பிற்குரிய மாதம் மார்கழி மாதம் ஆகம். பெண்கள் திருமாலைக் கண்ணனாகப் பாவித்து இம்மாதம் முழுவதும் முக்கிய

வழிபாடாகச் சடங்கு முறைகளைக் கடைப்பிடித்து நோன்பினைப் பெண்கள் கடைபிடிக்கின்றனர்.

கண்ணனின் பெற்றோர்கள் தந்தை நந்தகோபாலன் தாய் யசோதை ஆவாள்.

திருமால், இவர் கார்மேகம் போன்ற உடல்; சூரியனைப் போன்ற சிவந்த கண்கள்; நிலவைப் போன்ற முகம் உடையவர். இவனைக் கருதி பெண்கள் மிகவும் பக்தியுணர்வைக் கருதி நெய், பால் உண்ணாமல், கண்களுக்கு மை தீட்டுதல், தலையில் பூச்சூடுதல், பெரியோர் விலக்கியதைச் செய்யாமல், கோள் சொல்லாமல் போன்றவற்றைப் பெண்கள் அகற்றி இறைவனை வழிபாடு செய்தனர். திருமாலுக்குரிய அடையாள மாலையான மிகுந்த மணம் வீசுகின்ற திருத்துழாய் (துளசி) மாலையை விரும்பி பெண்கள் இறைவனுக்குச் செலுத்தி வழிபட்டனர்.

பெண்கள் மட்டும் இன்றி முனிவர்களும் யோகிகளும் தேவர்களும் கூட தியானம் செய்தும் அரி என்னும் நாமத்தை மெதுவாகக் கூறி வழிபட்டனர்.

பாவை நோன்பினால் உலகிற்கு ஏற்படும் நன்மைகளாக நாட்டில் தீங்கு ஏற்படாது. மாதம் மூன்று முறை மழை பொழியும் வயல்களில் மீன் வளத்தோடு செந்நெல்லும் செழித்து வளரும் பசுக்கள் குடம் நிறையும்படி பால் சொரியும். எங்கும் செல்வம் நிறைந்து காணப்படும் இவை மட்டுமின்றி பாவை நோன்பால் திருமாலின் பரமபதத்தை அடையலாம்.

அதிகாலை ஒலிகள்

பேய்போல் உறங்குகின்ற பெண்ணே! ஆணும் பெண்ணுமாகிய ஆனை சாத்தன் (கரிக்குருவி), பறவைகள் ஒன்றுகூடிக் (கிசுகிசு) எனத் தமக்குள் பேசிக் கொள்கின்றன. அவற்றின் ஒலியை நீ கேட்கவில்லையா. மணம் வீசுகின்ற கூந்தலை உடையவர் இடைக்குல மகளிர் அவர்கள் தம் கழுத்தில் அச்சுத்தாலி (காசுமாலை) யையும் ஆமை வடிவத்தில் அமைந்த தாலியையும் அணிந்துள்ளனர். அத்தாலிகள் ஒலிக்கக் கைகளை அசைத்து மத்தைக் கொண்டு தயிரினைக் கடைகின்ற ஓசை உன் காதுகளில் கேட்கவில்லையா என்று இறைவன் திருமாலையும் கோதையையும் வேண்டி பெண்கள் வழிபடுகின்றனர்.

பாவை நோன்பின் பக்தியாற்றலைக் கண்ட பெருமாள் (திருமால்) அவர்களுக்குக் கருணை காட்டி குற்றங்களை அகற்றி அவர்களின் நோன்பை ஏற்று அவர்களுக்கு அருள்புரிகின்றான்.

துவாரகையில் வாசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்தவன் கண்ணபிரான். ஆயினும் அவன் ஆயர்பாடியில் நந்தகோபனின் குமரனாய் யசோதையின் இளஞ்சிங்கமாக வளர்ந்து வருகிறான். மாயம் செய்வதில் வல்லவனாக விளங்கும் கண்ணபிரான் பாண்டிய நாடான வட மதுரைக்குத் தலைவனாக விளங்குகிறான். தூய நீர்ப் பெருக்கெடுத்து வரும் யமுனைக் கரையே அவன் வளர்ந்த இடமாகும்.

ஆயர்குலத்தை ஒளிபெறச் செய்த அழகிய விளக்காவான். அப்பெருமான் கரிய மேகம் போன்ற நிறத்தையும் சந்திரனைப் போன்ற முகத்தையும், சூரியனைப் போன்ற ஒளிவீசும் கண்களையும் உடையவன். நாராயணன் என்னும் பெயருடைய அப்பெருமான் திருப்பாற்கடலில் அறிதுயில் கொண்டுள்ளான். அவனுடைய கையில் சக்கரப்படை உள்ளது. மற்றொரு கையில் வலம்புரியைத் தாங்கியுள்ளான். சாரங்கம்

என்னும் வில்லும் அவனுக்குரியது ஆகும். இப்பெருமைக்குரிய பெருமாளை நம் மனத்தில் தூய எண்ணத்தில் வைத்து அவனுக்குரிய பூசைப் பொருள்களைக் கொண்டு அவன் திருவடிகளைத் தொழுவோம் என்பதைப் பாவைநோன்பு விளக்குகின்றது.

பெற்ற தாயைவிட மிகுந்த நன்மை செய்வது, நல்ல குலத்தைத் தரும், செல்வத்தைத் தரும், துயரத்தைத் தரும், வீடுபேற்றைக் கொடுக்கும். இறையருளும் தர்ம சிந்தனையையும் தரும் மந்திரமாக விளங்குவது நமோ நாராயணாய என்னும் திருமந்திரம் ஆகும். இம்மந்திரத்தைத் தூங்கும்போதும் சொல்லலாம். துன்பம் வரும்போதும், துன்பம் இல்லாத நேரத்திலும் கூட சொல்வது வாழ்க்கைக்கு நன்மை பயக்கும். இது பாவத்தைக் கொல்லும் நஞ்சாகவும் விளங்கும் திருமாலின் திருமந்திரம் ஆகும்.

கண்ணன் அவதரித்த புண்ணிய பூமி ஆயர்பாடி. அங்கிருந்த ஆயரும் ஆய்ச்சியரும் குறையொன்றும் இல்லாதவர்கள். கண்ணபிரான் மீது ஆறாத அன்பு செலுத்திய பரம பாகவதர்கள் கிருஷ்ணனுடன் கலத்தலையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கருதிய வைஷ்ணவ சிரோன்மணிகள்.

ஆயர்பாடியில் நடந்த விழாக்கள் பல. அவற்றுள் ஒன்று தேவர்களின் தலைவனான இந்திரனை வணங்கும் வகையில் நடைபெற்ற அந்த இந்திர விழாவை நடத்துவதைக் கண்ணபிரான் கட்டளையின் காரணமாக நிறுத்தினார்கள்.

ஆயர்கள் இந்திரவிழாவை நிறுத்தியதைக் கண்ட இந்திரன் கோபம் கொண்டான். மேகங்களுக்கு அரசனான மேகநாதனே இந்திரன். அவன் தன்னிடமிருந்து 7 மேகங்களையும் அழைத்து இடைவிடாமல் மழை

பொழிந்து ஆயர்பாடியை அழித்துத் தள்ளுங்கள் என்று கட்டளை இட்டான். தேவேந்திரன் இட்ட கட்டளைப்படி மேகங்கள் மழை பொழியப் புறப்பட்டன. கடலுக்குச் சென்றன. அங்கிருந்த நீரை முழுக்க உறிஞ்சின; உடல் கருத்தன. ஆயர்பாடியை அடைந்து மழை பொழியத் தொடங்கின.

மழையால் அவதிக்குள்ளானார்கள் ஆயர்பாடியிலிருந்த ஆயரும் ஆய்ச்சியரும். அதைவிடக் கொடுமை அங்கிருந்த பசுக் கூட்டங்கள் மழையில் நனைந்து உடல் நடுங்கத் தொடங்கின. பசுவைக் காக்க நினைத்தார் கண்ணபிரான். அருகிலிருந்த கோவர்த்தனம் என்ற மலையைக் கையால் தூக்கினார். அந்த மலையை ஆயர்பாடியிலிருந்த பசுக் கூட்டங்களுக்குக் குடையாகப் பிடித்தார். மழையில் நனைந்து வருந்தியிருந்த பசுக்கள் தப்பின. இந்திரன் கர்வபங்கப்பட்டான் என்பது பாகவதம்.

இதனைக் குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன் என்று திவ்யப் பிரபந்தமும்,

குன்று குணிலாக் கனி உகுத்த மாயவன்
இன்று நம் மானுள் வருமேல் அவன் வாயில்
கொன்றைஅம் தீங்குழல் கேளாமோ தோழி

என்று சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன.

கண்ணபிரான் பசுக்கூட்டத்தைக் காப்பற்றியவன். அவன் குழல் ஊதக் கறவைக் கூட்டம் தன்னையும் தன் கன்றினையும் மறக்குமாம். காலைப் பரப்பிப் படுத்துக் கொண்டு செவியை ஆட்டி இரசித்துக் கேட்கும் என்கிறது திவ்யபிரபந்தம்.

கறவைக் கணங்கள் என்று மறந்து கால் பரப்பிட்டுச்

செவியாட்டகில்லாவே

என்பது ஆழ்வார் வாக்கு.

கோ என்றால் பசு என்று பொருள். அதைக் காப்பதால் கண்ணன் கோபாலன் ஆகிறான். கோவிந்தன் என்றும் குறிப்பிடப்படுகிறான். கண்ணபிரான் மலையைக் குடையாகப் பிடித்துக் காப்பாற்றியதை நினைவுகூரும் விரதநாள் கோவர்த்த விரதம் தீபாவளியை அடுத்து வடநாட்டில் கொண்டாடப்படுகின்ற விசேஷ நாள் இது.

க்ஷீராப்தி சயன விரதம் ஆஷாட மாதத்து வளர்பிறை ஏகாதசி நாளும் சாந்திரமான கார்த்திகை மாதத்து வளர்பிறை ஏகாதசி நாளும் பசு வழிபாட்டுக்கு மிகவும் பொருத்தமான நாட்களாகும். விரதமிருக்க விசேஷமான பலன்களைத் தரக்கூடியவன். இந்த நாள்களில் க்ஷீராப்தி சயன விரதம் மற்றும் கோவர்த்த விரதம் இருக்கலாம்.

மகாவிஷ்ணு திருப்பாற்கடலில் ஆடி மாதத்தில் அறிதுயில் கொள்ளச் செல்கிறார். கார்த்திகையில் விழிக்கிறார். இது தொடர்பாகப் பசுவையும் பசும்பாலையும் வணங்கி விரதம் இருக்கும் நாட்கள் க்ஷீராப்தி சயனவிரத நாட்களாகும். க்ஷீரம் என்றால் பால், பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவன் பரந்தாமன். இந்த நாள் தொடங்கி கார்த்திகை மாதம் வரை விரதமிருக்கலாம். பசுவையும் பெருமாளையும் வழிபடலாம்.

ஐம்படைத்தாலி

குழந்தைகள் பிறந்த ஐந்தாம் மாதத்தில் ஐம்படைத்தாலி என்ற அணிகலன் அணிவிக்கப்படும். காக்கும் கடவுளான திருமாலின் ஆயுதங்களான சங்கு, சக்கரம், வில், வாள், கதாயுதம் ஆகியவற்றின் வடிவமாக தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டு இவை செய்யப்படுகின்றன. இதனைக் குழந்தைக்கு

அணிவதால் எந்த தீய சக்திகளும் அண்டாது என்பது நம்பிக்கையாகும். இவை இன்றும் மக்களிடம் வழிபாட்டு மரபுகளாகக் கருதப்படுகிறது.

இவைபோன்ற பல ஆற்றல்களைக் கொண்ட பெருமானை மக்கள் மிகவும் விரும்பி ஏற்று இன்றும் வழிபடுகின்றன. அவற்றுள் கிருஷ்ணர் செய்த லீலைகள் சொல்லில் அடங்காதது. அவரது லீலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் இருக்கும். அவர் செய்த லீலைகளில் ஒன்றுதான் யமுனை நதியில் வசித்த ஐந்து தலை நாகமான காளிங்கனை அடக்கி, அதன் தலையில் நர்த்தனம் புரிந்தது. யமுனை நதியில் வசித்து வந்த காளிங்கனின் விஷ மூச்சுக் காற்றால் யமுனை நதியும் அதன் கரையில் இருந்த சோலைகளும் நஞ்சாகிப் போயின. இதனால் காளிங்கனை அங்கிருந்து கடலுக்குச் செல்ல கிருஷ்ணர் பணித்தார். அவன் மறுத்ததால் அவனை அடக்கி அவனது தலையில் நர்த்தனம் புரிந்தார். இந்தக் கதையை உணர்த்தும் ஒரு கருத்தாக மக்களின் மனதில் விளக்குவது.

மனித மனம் என்பதுதான் பாம்பு. மனிதனின் ஐம்புலன்களும் பாம்பின் ஐந்து தலைகள். இந்த ஐம்புலன்களின் வழியாகத்தான் மனம் என்ற பாம்பு, நஞ்சினைக் (தீமைகள்) கக்குகிறது. எனவே ஐம்புலன்களால் படமெடுத்து ஆடும் மனம் என்னும் பாம்பை நாம் அடக்கி ஒடுக்கி ஆளவேண்டும் என்பதுதான் இதன் உயர்ந்த தத்துவமாகும்.

மூன்று மணிகள்

பெருமாளின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று அமிர்தம் கிடைப்பதற்காகத் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலை கடைந்தனர். அப்போது கடலுக்குள் இருந்து பல பொருள்கள் வெளியே

வந்தன. அவற்றுள் மூன்று மணிகளும் அடங்கும். அவை கவுஸ்துபமணி, சிந்தாமணி, சூடாமணி ஆகியவையாகும்.

இதில் கவுஸ்துபமணி என்பது மகாவிஷ்ணுவின் திருமார்பில் அணிகலனாக இருக்கிறது. சிந்தாமணியைத் தேவலோகத் தலைவனான இந்திரன் பெற்றுக் கொண்டான். சூடாமணியானது ஜனக மன்னரின் வழியில் அவருக்கு முன் தோன்றிய நிமி என்ற மன்னனுக்கு வழங்கப்பட்டது.

இந்த சூடாமணியைத்தான் நிமி மன்னனின் பரம்பரையில் வந்த ஜனகர், சீதாதேவிக்குக் கொடுத்தார். அதைத்தான் இராவணனிடம் சிறைப்பட்டிருந்த காலத்தில் அசோகவனத்தில் தன்னைக் காணவந்த அனுமனிடம் இராமபிரானிடம் சேர்ப்பிக்கக் கூறினார் சீதாதேவி. இந்தச் சூடாமணியானது சூரியனைவிட அதிக ஒளியைக் கொண்டது.

சங்கில் பால் அருந்திய கிருஷ்ணன்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் என்னும் ஊரிலுள்ள வேணுகோபாலன் கோயிலில் ருக்மணி-சத்யபாமாவுடன் வேணு கோபாலன் நின்றகோலத்தில் அருள்பாலிக்கிறார். வேணுகோபாலன் சிலை நேபாளத்தில் உள்ள கண்டகி நதியில் கிடைக்கும் சாலிக்கிராமக் கல்லினால் ஆனது. கிருஷ்ண ஜெயந்தியன்று வேணுகோபாலனுக்குக் கண் திறப்பு மற்றும் சங்கில் பால் புகட்டும் வைபவம் நடக்கின்றன.

சூரியன் வணங்கும் கிருஷ்ணன்

மதுரை, திருப்பாலை என்னும் ஊரில் வெண்ணெய் உண்ட மாயவன், ராதாகிருஷ்ணனாக அருளும் கோயில் உள்ளது. மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தன் கிரகணங்களால் கண்ணனை வணங்கும் தலம் இது. கண்ணனின் புராண நாடியாக விளங்கும் இராதைக்கு இங்கே

தனி சன்னதி உள்ளது. வேண்டுவனவெல்லாம் நிறைவேற்றித் தருகிறான் இந்தக் கண்ணன்.

பூக்காத, காய்க்காத புளியமரம்

மதுரை குராயூர் கள்ளிக்குடியில் உள்ள கோயிலில் கிருஷ்ணன். வேணுகோபாலசுவாமி எனும் திருநாமத்துடன் கண்ணன் பாமா, ருக்மணியுடன் அருள்கிறார். ஆலய நந்தவனத்திலுள்ள புளியமரம் பூப்பதும் இல்லை, காய்ப்பதும் இல்லை. குழந்தைகள் கல்வியில் சிறக்க, இங்கு மாவிளக்கேற்றி வழிபடுகிறார்கள்.

கும்பாபிசேகம்

ஆலயங்களில் முக்கியமான நிகழ்ச்சி கும்பாபிசேகம் ஆகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிசேகம் செய்தால் பலன் அதிகமாகக் கிடைக்கும். இவற்றின் பலனாய் பஞ்சபூதங்களுக்குள்ளும் இறை சக்தி இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அருவமாக உள்ள இறைவனை உருவ வடிவில் கொண்டு வந்து வணங்குவதே இதன் கருத்தாகும். வானத்தில் (ஆகாயம்) அருவ நிலையிலுள்ள (நெருப்பு) வழியே, கும்பத்தில் (நீர்) கொணர்ந்து, விக்ரகம் (கல்) மீது ஊற்றும்பொழுது பஞ்சபூதங்களும் இணைந்து அதன் மூலம் இறை சக்தியை நமக்கு வழங்குகின்றன.

தெய்வங்களைப் பீடத்தில் அசையாமல் நிறுத்தும் அஷ்டபந்தன மருந்தில் என்ன சேர்ப்பார்கள் என்பது இங்கு கூறப்பட்டுள்ளது. அஷ்ட பந்தன கலவை தயாரிப்பதற்குக் கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருள்கள் தேவை.

கோயில் எழுப்புவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதிலிருந்து ஆலயம் எப்படி அமைய வேண்டும் என்பது வரை பல ஆகம விதிமுறைகள் இருக்கின்றன.

கோயிலைக் கட்டி முடித்த பிறகு தெய்வ மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஒரு பீடத்தின் மீது தெய்வ மூர்த்தத்தை வைத்து பிடத்திலிருந்து அகலாமல் இருப்பதற்காக, அஷ்டபந்த மருந்து சாத்துவார்கள். இந்த அஷ்டபந்த மருந்து தெய்வ மூர்த்தத்தைப் பீடத்துடன் அழுந்தப் பிடித்துக் கொள்ளும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தெய்வ மூர்த்தங்களுக்கு அஷ்டபந்தனம் சாத்த வேண்டும் என்பது ஆகம நியதி.

அஷ்டபந்தனம் வழிபாடு

கோயில்களில் அஷ்டபந்தன மருந்தை 12 ஆண்டுகளுக்கு மாற்ற வேண்டும் என்பது ஆகம நியதி. அதன்படி அனைத்து ஆலயங்களிலும் 12 வருடங்களுக்கு ஒருமுறை கண்டிப்பாக அஷ்டபந்த மகா கும்பாபிசேகம் செய்ய வேண்டும்.

உலக உயிர்களெல்லாம் நலமாக இருக்க வேண்டுமென்றால் மூல தெய்வ மூர்த்தம். தனது ஆதார பீடத்தில் ஆடாமல், அசையாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் உலகத்துக்கும் உலகில் வாழும் மக்களுக்கும் சிறப்பு. மூலவ மூர்த்தி தொடங்கி எல்லா தெய்வங்களின் திருமேனிகளும் பீடத்திலிருந்து அசையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அஷ்டபந்தன மூலிகை மருந்தைச் சாத்துகிறார்கள்.

அஷ்டபந்தனம் தயாரிப்பதற்காகவே தமிழில் வெண்பா ஒன்று பாடப்பட்டுள்ளது.

கொம்பரக்குச் சுக்கான்தூள் குங்கிலியம் கற்காவி

செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மெழுகு-தம்பழுது நீக்கி
எருமை வெண்ணெய் கட்டி நன்கிடித்து ஆக்கல் அட்டபந்தனம்
ஆம்

இந்த மூலிகை மருந்து பல நாள்களானாலும் கெடாத வகையில் தயாரிக்கப்படும். அஷ்டபந்த கலவை தயாரிப்பதற்குக் கொம்பரக்குச் சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன் மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருள்கள் தேவை. இந்த எட்டுப் பொருள்களையும் சேர்த்து உரலில் இட்டு இடிக்க வேண்டும். கொம்பரக்கு தொடங்கி ஒவ்வொரு பொருளாக உரலில் இட்டு இடிக்க வேண்டும். இடிக்கும்போது எருமை வெண்ணெய்யை சிறிது சிறிதாகச் சேர்த்து இடிக்க வேண்டும். அஷ்டபந்தன மருந்து கெட்டியாக கல் போன்றும் இருக்கக்கூடாது. குழைவாகவும் இருக்கக் கூடாது. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பதமான நிலையில் இருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் ஆதாரப் பீடத்தில் இருக்கும் இறைவனின் திருமேனியை நிலைநிறுத்த வசதியாக இருக்கும்.

இந்த மூலிகை மருந்துகளைக் கலந்து இடிப்பதற்கான பாத்திரங்கள், உரல், உலக்கை ஆகியவை மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும்.

இந்தப் பொருள்களை எந்தெந்த அளவு சேர்க்க வேண்டும், எவ்வளவு நேரம் இடிக்க வேண்டும் என்பதற்குக் காலஅளவுகள் உண்டு. அஷ்டபந்தனம் தயாரிப்பவர்களின் வாக்கு, மனம், செயல் இவை யாவும் இறைச் சிந்தனையிலேயே நிலைத்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

இந்த மருந்தை 100 ஆண்டுகள் வரை கெடாதவாறு தயாரிக்க முடியும். ஆனாலும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிதாகத் தயாரித்து

தெய்வ மூர்த்தங்களுக்கும் பீடத்துக்கும் இடையில் சாத்தி கும்பாபிசேகம் செய்வதென்பது நடைமுறையில் இப்போது வழக்கமாகியுள்ளது.

இவற்றின் பலனாய் எந்தவொரு தீங்கும் நோயும் நம்மைத் தீண்டாமல் இறைவன் பெருமாள் நம்மைக் காத்தருளுவான் என்பது ஐதீகம்.

கருங்கல்லில் தெய்வச் சிலைகளை வழிபடுவது

ஆகம விதிகளின்படி தெய்வ உருவங்களைக் கருங்கல்லில் சிலையாகப் பிரதிஷ்டை செய்து வழிபடுகிறோம். தினமும் முறையாகப் பூசை செய்து வரும் கோயில்களுக்கு நாம் சென்று தரிசனம் செய்யும் வேளையில் நம் உடலில் ஓர் சக்தி ஊடுருவிச் செல்வதை அனுபவப் பூர்வமாக உணரலாம். ஆகவேதான் பெரும்பாலும் சிலைகளைக் கருங்கல்லில் வடிவமைக்கிறார்கள். எந்த சக்தியையும் தன்வசம் இழுத்துக் கொள்ளும் தன்மை உடையது கருங்கல். இதில் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூதத் தன்மைகள் அடங்கியுள்ளன.

கல்லில் நீர் உள்ளதால்தான் குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமல் இருக்கிறது. நிலமும் இருப்பதால்தான் கல்லில் செடி, கொடிகள் வளர்கின்றன. கல்லில் நெருப்பின் அம்சமும் உண்டு. அதனால்தான் கற்களை உரசினால் தீப்பொறி பறக்கிறது. கல்லில் காற்றும் உண்டு. எனவேதான் கல்லில் தேரை உயிர் வாழ்கிறது.

ஆகாயத்தைப் போல் வெளியிலிருக்கும் சப்தத்தைத் தனக்கே ஒடுக்கி பின் வெளியிடும் சக்தி கல்லுக்கு உண்டு.

ஆகவேதான் கருங்கல்லில் கட்டப்பட்ட கோயில்களில் நாம் கூறுவதை எதிரொலிக்கும் அதிசயம் நடக்கிறது.

இக்காரணங்களினால்தான் இறை வடிவங்களைப் பஞ்சபூதங்களின் வடிவில் இருக்கும் கருங்கல்லில் வடிவமைத்து வழிபாடு செய்கிறோம்.

திருமாலின் முக்கியத் திருவிழாவாக மக்கள் வழிபடுவது

தமிழ்ப் புத்தாண்டு, இராமநவமி, இராமானுஜர் விழா, வைகாசி வசந்த உற்சவம், ஆனியில் திருமாலுக்கு ஜேஷ்டாபிசேகம், ஆடியில் பத்து நாட்கள் ஆண்டாள் பூரவிழா, ஆடி வெள்ளி, கடைசி வெள்ளி தாயாருக்கும் பெருமாளுக்கும் புஷ்பங்கி சேவை, ஆவணியில் வேணுகோபாலருக்கு 10 நாள்கள் விழா, வாமன ஜெயந்தி மூன்று நாட்கள், புரட்டாசி பவித்ர உற்சவம், தாயாருக்கு நவராத்திரி விழா, திருமாலுக்குத் தினப்படி திருமஞ்சனம், ஐப்பசி திருவோணத்தன்று முதலாழ்வார்களுக்கு 5 நாள் விழா, மணவாள மாமுனிகள் பத்து நாள் உற்சவம், கார்த்திகை தீப உற்சவம், மூன்று நாள் கைசீக ஏகாதசி, மார்கழியில் பகல்பத்து, வைகுண்ட ஏகாதசி.

இராப்பத்து, தைத் திருநாள், மாசியில் மகம், பங்குனி பிரம்மோற்சவம் என விழாக்களுக்குப் பஞ்சமில்லாதத் திருக்கோயிலாகத் திகழ்கின்றது.

காலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை, 8.30 மணி முதல் பகல் 12.30 மணி வரை, மாலை 4 மணி முதல் 5.45 மணி வரை மற்றும் இரவு 7 மணி முதல் 8.30 மணி வரை சுவாமி தரிசனம் செய்யலாம். விழாக் காலங்களில் இது மாறுபடும்.

இத்திருவிழாக்கள் யாவும் முக்கிய நிகழ்வுகளாகவும் மக்கள் இறைவன் மீதுள்ள பற்றையும் இறைவன் மக்களுக்கு அருளும் பக்தியையும் இறை நம்பிக்கையும் அங்கு பூசைகள் வழிபடும் முறைகள் போன்ற முக்கிய அம்சமாகத் திகழ்வதைக் குறிக்கும் விழாவாகும்.

நவராத்திரி வழிபாடுகள்

நவராத்திரி விழா ஆண்டுதோறும் புதுப்புது மாற்றங்களுடன் கொண்டாடப்படும் விழாக்களுள் ஒன்று. நவம் என்ற சொல்லுக்கு ஒன்பது என்றும், புதியது என்றும் பொருள் கொள்ளலாம்.

மகிஷாசுரனை அழிப்பதற்காக அம்மன் ஒன்பது நாள் போர் செய்து பத்தாம் நாள் வெற்றி பெறுகிறாள். மகிஷம் என்றால் எருமை; இது சோம்பல் மற்றும் அறியாமையின் சின்னமாகும். அறியாமையை அழித்த அம்பிகைக்குப் புரட்டாசி மாதம் பிரதமை திதியிலிருந்து ஒன்பது நாள் விழா கொண்டாடப்படுகிறது.

இந்த நாட்களில் தம்மைச் சூழ்ந்துள்ள அறியாமை என்னும் இருள் விலக அம்பிகையை இரவு நேரத்தில் பூசை செய்கிறோம். இருள் விலகி ஒளி பிறந்த பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடுகிறோம்.

ஒரு நாளில் பகல் என்பது சிவனின் அம்சமாகவும் இரவு என்பது அம்பிகையின் அம்சமாகவும் கருதப்படுகிறது. இரவும் பகலும் இல்லா விட்டால் நாள் என்பது கிடையாது. பகலில் உழைக்கும் உயிரினங்கள் இரவில் அம்பாள் தன் மடியில் கிடத்தி தாலாட்டி உறங்கச் செய்கிறாள்.

இரவெல்லாம் விழித்திருக்கும் உலகைக் காக்கும் அம்பிகைக்காக ஒன்பது நாள் இரவு மட்டும் திருவிழா கொண்டாடப்படுகிறது என்பர்.

நவராத்திரி பிறந்த கதை

சும்பன், நிசும்பன் என்ற அசுரர்கள் பிரம்மனின் அருளால் சாகாவரம் பெற்றனர். இருந்தாலும் தங்களுக்குச் சமமான பெண்ணால் மட்டுமே எங்களுக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்ற வரத்தைப் பெற்றிருந்தனர்.

எனவே தேவர்களை ஜெயித்தும் அதர்மங்களை விளைவித்தும் வந்தனர். அவர்களது அழிவு காலத்தில் ஆதிபராசக்தியிடமிருந்து கவுசிகியும் காளிகா என்ற காலராத்திரியும் தோன்றினர்.

காளிகாவுக்குத் துணையாக முப்பெரும் தேவியின் வடிவான அஷ்ட மாதர்களும் அஷ்ராத்திரிகளாகத் தோன்றினர்.

பிராம்மணி என்ற பிரம்ம சக்தி அன்ன வாகனத்தில் அட்சமாலை கமண்டலத்துடனும் வைஷ்ணவி என்ற விஷ்ணுசக்தி கருட வாகனத்தில் சங்கு, சக்கரம் கதை தாமரைப் பூவுடனும் மகேஷ்வரி என்ற சிவனின் சக்தி ரிஷப வாகனத்தில் திரிசூலம் மற்றும் வரத முத்திரையுடனும் கவுமாரி என்ற கார்த்திகேய சக்திமயூர வாகனத்தில் வேலாயுதத்துடனும் மாகேந்திரி என்ற இந்திரனின் சக்தி ஐராவதத்தில் வஜ்ராயத்துடன் வாராஹி என்ற வாராஹிருடைய சக்தி எருமை வாகனத்தில் கலப்பையுடனும் சாமுண்டா என்ற பைரவரின் சக்தி எம வாகனத்தில் கத்தியை ஏந்தியவளாகவும் நரசிம்மஹி என்ற நரசிம்மரின் சக்தி கூரிய நகரத்தை ஆயுதமாகவும் கொண்டு கமல பீடத்தில் தோன்றினார்கள்.

இவர்கள் காளிகா என்ற சண்டிகா தேவியுடன் ஒன்பது இராத்திரிகளாயினர். இந்த நவராத்திரி தேவதைகள் சும்ப, நிசும்பர்களை ஒழித்தனர். அசுரர்களின் கொடுமையில் இருந்து விடுபட்ட தேவர்கள் கவுசிகியான அம்பிகையையும் நவராத்திரி தேவதைகளையும் போற்றி துதித்தனர். இந்த வைபவம் நவராத்திரி எனப்படுகிறது.

படைத்தல், காத்தல், அழித்தல் அனைத்திற்கும் மூலமாக இருப்பவள் தேவியே. பரம சுகத்தையும் நீண்ட ஆயுளையும் சுபிட்சம் பெற வகை செய்யும் அனைத்துச் செல்வங்களையும் அருள்பவள் அவளே. முத்தொழில் புரியும் இம்மூர்த்திகளும் வணங்கும் பரம்பொருள் பராசக்தியே.

தினமும் அம்பிகையை வணங்கினாலும் புரட்டாசியில் வரும் நவராத்திரியில் வணங்குவது மிகுந்த பலனை அளிக்கும். புரட்டாசி மாதப் பிரதமை முதல் நவமி வரை நவராத்திரி காலமாகும்.

அதில் முக்குணங்களுக்கும் மூலமான சர்வ லோக நாயகியை ஒன்பது நாள்களும் பூஜிக்கும்போது முதல் மூன்று நாள்கள் துர்கா பரமேஸ்வரியையும் அடுத்த மூன்று நாள்கள் மகாலட்சுமியையும் கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதியையும் வணங்கினால் நாம் விரும்பியதைப் பெறலாம்.

கல்வி, இசை, புகழ், செல்வம், தானியம், வெற்றி, தண்ணீர் ஆகிய அனைத்தையும் சக்தியே தருகிறாள். ஆதிபராசக்தியைத் துர்க்கையாக நினைத்து வழிபட்டால் பயம் நீங்கும். இலட்சுமி வடிவில் தரிசித்தால் செல்வம் பெருகும். சரசுவதியாக எண்ணி வணங்கினால் கல்விச் செல்வம் சிறக்கும். பார்வதியாக வழிபட்டால் ஞானப்பெருக்கு உண்டாகும்.

எனவேதான் இந்நாட்களில் கொலுவும் வைக்கிறார்கள். தேவியை நடுவில் வைத்து இந்த உலகப் பொருள்களை எல்லாம் சுற்றிலும் வைக்கிறார்கள். இதற்குக் காரணம் தேவியால்தான் இந்த உலகம் இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்காகப் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ருத்திரன், சதாசிவன் ஆகிய சிவனின் மற்ற

வடிவங்களும், சரஸ்வதி, லட்சுமி, பார்வதி, மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய சக்திகளுக்குள் அடக்கமாக உள்ளனர்.

எனவே சக்தியை வழிபட்டாலே அனைத்துத் தெய்வங்களையும் வழிபட்டதாகப் பொருள்.

முப்பெரும் தேவியர் வழிபாடு
துர்க்கை

துர்க்கை நெருப்பின் அழகு, ஆவேசப் பார்வையுடன் அழகாகத் திகழ்கிறாள். வீரத்தின் தெய்வம், சிவகிரியை. இச்சா சக்தி என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். இவளைக் கொற்றவை என்றும் காளி என்றும் குறிப்பிடுவார்கள். வீரர்களின் போரின் தொடக்கத்திலும் முடிவிலும் துர்க்கையை வழிபடுவார்கள்.

மகிஷன் என்ற எருது வடிவம் கொண்ட அசுரனுடன் துர்க்கை ஒன்பது இரவுகள் போரிட்டாள். இவையே நவராத்திரி எனப்படுகின்றன. அவனை வதைத்த நாள் (விஜயதசமி), மகிஷனை வதைத்தவள் மகிஷாசுரமர்த்தினி. மகிஷாசுரமர்த்தினியின் திருக்கோலம் மாமல்ல புரத்தில் சிற்ப வடிவத்தில் இருக்கிறது.

நவதுர்க்கை

வனதுர்க்கை, சூலினி துர்க்கை, ஜாதவேதோ துர்க்கை, ஜவாலா துர்க்கை, சாந்தி துர்க்கை, சபரி துர்க்கை, தீப துர்க்கை, ஆசுரி துர்க்கை, லவண துர்க்கை இவர்கள் துர்க்கையின் அம்சங்கள் ஆவர்.

முதல் மூன்று நாள் நிவேத வினியோகம்; வெண்பொங்கல், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல் போன்றவை ஆகும்.

இலட்சுமி

இலட்சுமி மலரின் அழகு. அருள் பார்வையுடன் அழகாக விளங்குகிறாள். செல்வத்தின் தெய்வம், விஷ்ணு பிரியை. கிரியா சக்தி என்றும் அழைப்பதுண்டு.

இலட்சுமி அமுதத்துடன் தோன்றியவள்; பொன்னிற மேனியுடன் கமலாசனத்தில் வீற்றிருக்கிறாள். இவளை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டுகின்றன.

முக்கியமாக, இவள் செல்வ வளம் தந்து வறுமையை அகற்றி அருள் புரிபவள். இவளுக்குத் தனிக்கோயில் இருக்குமிடம் திருப்பதியில் உள்ள திருச்சானூர்.

அஷ்டலட்சுமிகள்

ஆதிலட்சுமி, மகாலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, சந்தான லட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, கஜலட்சுமி ஆகியோர் இலட்சுமியின் அம்சங்கள் ஆவார்கள்.

இடை மூன்று நாள் நிவேதன வினியோகம், கதம்ப அன்னம், தயிர் சாதம், தேங்காய் சாதம்.

சரஸ்வதி

சரஸ்வதி வையத்தின் அழகு. அமைதிப் பார்வையுடன் அழகாய்ப் பிரகாசிக்கிறாள். கல்வியின் தெய்வம் பிரம பிரியை, ஞானசக்தி என்றும் அழைக்கப்படுகிறாள்.

சரஸ்வதியை ஆற்றங்கரைச் சொற்கிழத்தி என்றும் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. இவளுக்குத் தனிக்கோயில் இருக்கும் ஊர் நாகை மாவட்டத்தில் உள்ள கூத்தனூர் ஆகும்.

விஜயதசமி

ஒன்பது நாள்கள் மகிஷாசுரனுடன் போரிட்ட தேவி, பத்தாம் நாள் அவனை வென்றாள். இந்நாளே விஜயதசமி வெற்றி தருகிற நாள். பல குழந்தைகளின் வித்யாரம்பம் இன்றுதான் ஆரம்பம். இன்று தொடங்கும் அனைத்து நல்ல காரியங்களுக்கும் வெற்றி நிச்சயம்.

நவராத்திரி நாட்களில் வழிபாடு செய்ய முடியாதவர்கள் சப்தமி, மகா அஷ்டமி, மகாநவமி ஆகிய மூன்று நாள்களில் மட்டுமாவது (7,8,9) தேவி வழிபாடு செய்யலாம். அதுவும் முடியாதவர்கள் மகா அஷ்டமி 8ஆம் நாளன்று நிச்சயம் தேவி வழிபாடு செய்ய வேண்டும்.

அஷ்ட சரஸ்வதிகள்

வாகிஸ்வரி, சித்ரேஸ்வரி, துளஜா, கீர்த்தீஸ்வரி, அந்தரிட்ச சரஸ்வதி, கட சரஸ்வதி, நீல சரஸ்வதி, கினி சரஸ்வதி ஆகியோர் ஆவார்கள்.

கடைசி மூன்று நாள் நிவேதன விநியோகம் எலுமிச்சை சாதம், பாயாசம், அக்காரஅடிசில் போன்றவை ஆகும்.

வைணவ நவராத்திரி

நவராத்திரி கொண்டாட்டத்தையொட்டி வைணவர்கள் திருமாலுக்கு ஒன்பது நாளும் ஒன்பது விதமான அலங்காரங்கள் செய்து வழிபடுவது வழக்கத்தில் உள்ளது. திருமாலின் மார்பிலேயே இலட்சுமி இருப்பதால் அவருக்கென தனி அலங்காரம் செய்வதில்லை.

முதல்நாள் - வெண்ணெய்த் தாழி கண்ணன்

இரண்டாம் நாள் - காளிங்கநர்த்தன கண்ணன்

மூன்றாம் நாள் - வேணுகோபாலன்

நான்காம் நாள் - வைகுண்டநாதன்

ஐந்தாம் நாள் - நாச்சியார் கோலம்

ஆறாம் நாள் - சாரங்கபாணி

ஏழாம் நாள் - இராஜகோபாலன்

எட்டாம் நாள் - ஸ்ரீரங்கநாதன்

ஒன்பதாம் நாள் - இராமர் பட்டாபிஷேகம்

போன்றவை ஆகும். ஒன்பது நாள்களும் சிறப்பாக மக்கள் பூஜைகள், சடங்குகள் செய்து நவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றனர்.

தொகுப்புரை

'வழிபாட்டு முறைகள்' என்ற இரண்டாவது இயலில் வழிபாடு பற்றியும் பண்டைய காலம் முதல் இன்றைய காலம் வரை இறைவன் திருமால் மீது மக்கள் கொண்டுள்ள பக்தி ஆற்றலை விளக்கும் வகையில் இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் இறைவன் திருமாலுக்கு மக்கள் செய்யும் பூசைகள், சடங்குகள், திருவிழாக்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இறைவன் திருமாலின் சிறப்புகள் பற்றியும், மக்கள் வழிபடும் முறைகள் பற்றியும், சாஸ்திரங்கள் பற்றியும் சிறப்பாக இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

இயல் – 3

வழக்காறுகள்

வழக்காறு என்பது பண்டைக் காலம் தொடங்கி இன்றைய காலம் வரை மக்கள் வாழ்க்கையில் நிகழக்கூடிய செயல்களும் அவர்கள் வாழ்க்கைக்கு எடுத்தியம்பக்கூடிய செய்திகளும் வழக்காறுகள் ஆகும்.

உள்ளதை உள்ளபடி கூறி யாவரும் புரிந்து கொள்ளும் தெளிவுடையனவாகவும், பண்பாடு, வரலாறு, பழக்கவழக்கம், சடங்குகள், வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், கலைகள், பழமொழி, விடுகதை, பாடல், நாடகம், கூத்து, ஆடல், கதைகள், கவிதை

ஆகியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் வாழ்க்கையின் பல்வேறு சூழல்களில் சூழல்களுக்கேற்பக் கூறப்படுவன வழக்காறுகள் ஆகும்.

நம் முன்னோர்களின் பண்பாடு மற்றும் வாழ்வியல் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டுவது வழக்காறு ஆகும். இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தும் பாமர மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளை இதிகாசம், புராணம் வழியாக எடுத்துக்காட்டுவது வழக்காறுகள் ஆகும்.

பாண்டிய நாட்டின் சிறப்பு

பதினெட்டு பூக்களிலிருந்து (தலங்கள்) கருத்துத் தேனைத் திரட்டிச் சுவையுறத் தேனடை என ஆக்கிச் சிந்திக்கச் சிந்திக்கத் தித்திக்கும் சிந்தனைகளை, நினைக்கநினைக்க இனிக்கும் வண்ணம் ந.சுப்பு ரெட்டியார் வைணவத்தின் சிறப்பையும் திருமாலின் பெருமைகளையும் ஆழ்வார்களின் பாசுரங்களையும் பாண்டிய நாட்டின் இயற்கை வளங்களையும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

வெள்ளா ரதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காடும்-உள்ளாரா
வாண்ட கடல் கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிய நாட் டெல்லைப் பதி (ஒ.ப.பா.)

என்ற பாடல் பாண்டிய நாட்டின் பதினெட்டுத் திருப்பதிகளின் தலங்களைக் குறிக்கின்றன. இவை பாண்டிய நாட்டின் எல்லைகளாகவும் விளங்குகின்றன என்பதைச் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

பராக்கிரம பாண்டியனின் பக்தி

காலம் 15 ஆம் நூற்றாண்டு திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்தான் பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னன்.

காசியில் தான் விசுவநாதர் ஆலயம் இருக்க வேண்டுமா? தென்காசியிலும் ஒரு ஆலயம் எழுப்புவோம் என் விஸ்வநாதருக்கு ஆலயம் எழுப்புகிறார். அந்த ஆலயத்தின் கிழக்குக் கோபுரத்தை ஒன்பது நிலைகளை உடைய இராஜ கோபுரமாக எழுப்புகின்றார் மன்னர்.

திருப்பணி வேலைகள் வேகமாக நடைபெற்று வந்தன. ஆனாலும் மன்னருக்கு நிம்மதி இல்லை. மனதில் ஒரு ஐயம் நிழலாடிக் கொண்டே இருக்கிறது. இவ்வளவு சிரமப்பட்டு கோயிலையும் இராஜ கோபுரத்தையும் ஏற்படுத்தி வருகிறோம். வருங்காலத்தில் கவனிப்பின்றி சிதிலமடைந்து விட்டால் என்ன ஆவது என்று கவலை கொண்டான் மன்னன்.

தன் கவலையை ஒரு பாடலாகக் கல்வெட்டில் பொறிக்கிறான் மன்னன்:

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவு பொன்னா னலயத்து
வாராதோர் குற்றம் வந்தாலப் போதங்கு தந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே

என்று பாடியுள்ளான். எதிர்காலத்தில் தென்காசியில் பொன்னாலயமாக விளங்கப் போகும் இந்த விசுவநாதர் ஆலயத்தில் ஏதாவது சிறு குறைகள், பழுதுகள் ஏற்பட்டு அதைச் சரி செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய காலில் இந்த பராக்கிரம பாண்டியன் உலகில் உள்ள அனைவரும் அறியுமாறு விழுந்து வணங்குகிறேன் என்பதாகும்.

காலில் விழுந்து வணங்கியது மட்டுமல்லாமல் அடுத்த பாடலில் இன்னும் ஒரு படி மேலே சென்று தென்காசி கோயிலின் புகழை உலகமெல்லாம் அறியுமாறு போற்றி திரிசேற் விளக்கெனக்

காப்பவர்களின் பொற்பாதங்களைத் தன் தலைமீது வைத்து தாங்குவதாகப் பராக்கிரம பாண்டியன் கூறியுள்ளான்.

ஆணவம் அழிந்த நிலையில் ஒரு அரசனின் வாக்குமூலம் இது. தான் கட்டிய கோயிலில் விழுந்த ஒரு செங்கல்லை எடுத்து வைப்பவர்களைக் கூட 600 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு அரசன் வணங்கிச் சென்றுள்ளான் என்பதை வழக்காறாகக் கூறப்பட்டுள்ளது. இவை பாண்டிய நாட்டில் வாழ்ந்த மன்னர்களின் சிறப்பாகவும் அவர்களின் மனத் தன்மையும், தெய்வ நம்பிக்கையும், இவர்களின் பக்தியாற்றலையும் விளக்குவதாக உள்ளன.

இவர்களுக்குப் பிறகு காலம் காலமாக மக்களும் தொன்று தொட்டு ஆலயங்களை இன்று வரை பாதுகாத்து வருகின்றனர் என்பதையும் உணரலாம்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

திருமாலிடம் பேரன்பு கொண்டவர்கள் வைணவர் எனப்படுவர். வைணவ சமய ஆச்சாரியர் ஆழ்வார் எனப்படுவர். இவர்கள் வேறு ஒன்றிலும் கருத்து ஊன்றாது திருமாலினது அளவற்ற கலியாண குணங்களில் ஆழ்ந்திருந்தமையால் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் பன்னிருவர்கள் ஆவார்கள். இவர்கள் திருமால் மீது கொண்ட பேரன்பின் மேலீட்டால் பாடிய நாலாயிரம் பாடல்களின் தொகுதிக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர். திவ்வியம் - மேன்மை; பிரபந்தம் - நூல்.

ஆன்ற தமிழ் மறை, திராவிட சாகரம் ஆகியவை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்களாகும்.

திருமாலாகிய விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகப் போற்றுவது வைணவ சமயமாகும். அத்திருமால் மாயோன், பெருமாள் என்னும் தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். வைணவ சமயம் பழமையும் சிறப்பும் மிக்க தமிழ்ச் சமயமாகும்.

பண்டைத் தமிழ் மக்கள் முல்லை நிலத்திற்குரிய தெய்வமாகத் திருமாலைப் போற்றியதைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் அறிவிக்கின்றன. திருமால் பக்தியில் ஆழ்ந்து திளைத்த ஆழ்வார்கள் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் நூலாகும். இவற்றுள் இரண்டாம் திருவந்தாதியைப் பாடிய பூதத்தாழ்வார் கூறுவது:

மனிதன் செயல், இறைவனின் செயல்

திடவை வெட்டி ஏரியை உருவாக்குவது மனிதனின் செயல். அவ் வேரியில் மழை நீரை நிரப்புவது என்பது கடவுள் திருமாலின் செயல் என்று கூறியுள்ளார்.

முதல் திருமொழியில் பெரியாழ்வார் கூறுவது:

கரிய நிறமுடைய காக்கையின் குரலை எவரும் விரும்ப மாட்டார். ஆயினும் அது கரைந்து விருந்தினர் வருகையைக் குறிக்கும் சகுனச் சொல்லை மட்டும் ஏற்றுக் கொள்வர். இதுபோல புள்ளிமானுக்கு உடம்பில் ஒரு புள்ளி அதிகமாக இருப்பதால் அது மானுக்குப் பாரத்தைத் தராது. அதுபோல ஏழு உலகங்களையும் உண்டு உமிழ்ந்த திருமாலாகிய இறைவன் நாம் செய்யும் சிறிய தவறுகளை மன்னித்து நம்மைக் காத்தருள்வான் என்பது வழக்காறு ஆகும்.

இயற்கையோடும் பிற உயிர்களோடும் ஒப்புமைப்படுத்தி மனிதனுக்கு இறைவன் திருமாலின் பெருமைகளை வழக்காறுகளாக பதிவு செய்துள்ளனர்.

பாண்டியர்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் தற்போதைய கேரள மாநிலத்தின் தென்பகுதியில் வாழ்கின்றனர் என்பது கூறப்பட்டுள்ளன. பழங்காலத்தில் உள்ள மக்களின் வாழ்வியல் முறைகள் அவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள், இறை நம்பிக்கைகள், பூஜைகள், வழிபாட்டு மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவை இதிகாசம், புராணம், வரலாறு, நாடகம், பாடல், ஆடல், பழமொழி, விடுகதை, கவிதை, கதை மூலமாகவும் இவற்றின் வெளிப்பாடாகவும் இன்றைய மக்களுக்கு வழக்காறாக எடுத்துக்காட்டப்படுகிறது.

மக்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியாற்றலை விளக்கும் வகையில் பக்தி இலக்கியம் படைக்கப்பட்டன. அவற்றுள் வைணவம் சிறந்த சமயமாகவும் அவற்றுள் தோன்றப்படும் முழுமுதற் கடவுளான திருமால் இவ்வுலகைக் காப்பவனாகவும் மக்களால் இன்று வரை போற்றப்படுகின்றன.

இவை மட்டுமின்றி வைணவ மதத்தின் பெருமையையும் திருமாலின் புகழையும் உலகிற்கு எடுத்துக்காட்டியவர்கள் ஆழ்வார்கள். இவர்களின் நாலாயிரம் பாசுரங்களின் புகழ் நாலாயிரம் திவ்ய பிரபந்தம் ஆகும்.

மற்றும் வைணவக் கடவுளான இறைவன் திருமாலின் புகழ் இவ்வுலக மக்கள் யாவரும் அறியும்படி படைக்கப்பட்ட பக்தி இலக்கிய நூலான மகாபாரதமும் இராமாயணமும் பிரமாண்ட படைப்பாகும். இவ்விரண்டு நூல்களும் சிறியவர் முதல் பெரியவர் வரையும் முதியவர்

முதலியோர் கண்டும் கேட்டும் இரசித்தும் உள்ளத்தில் இறைவன் திருமாலை நினைத்து உள்ளம் உருகும்படி உருவாக்கப்பட்ட வரலாறு ஆகும். இவை இன்று வழக்காறுகளாகவும் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

பழங்கால மக்களின் வாழ்வியல் முறை, போர், வீரம், இறைப் பக்தி, இறை நம்பிக்கை, வழிபாட்டு மரபுகள், பூஜைகள், வாழ்வியல் போக்கு, வாழ்க்கை வட்டச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவை நாடகம், பாடல் கலை, ஆடல், வரலாறு, கதைகள், கவிதைகள், பழமொழிகள், விடுகதை, புதினம், நாவல் வாயிலாக வழக்காறுகளாகப் பதியப்பெற்றுள்ளன.

அவற்றுள் பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் புகழ், இயற்கை, போர், வீரம், வாழ்க்கை வட்டச் சடங்குகள் பற்றிய பாடல், நாடகம், கதைகள், பழமொழி போன்றவை வழக்காறாகச் சில கூறப்படுகின்றன.

நாடகம்

முத்தும் அமிழ்தும் போல முத்தமிழுள் மூன்றாம் தமிழ் நன்றாம் தன்மையதாம். 'நடம' நடிப்பு என்னும் சொற்களடியாகப் பிறந்த நாடகம் எல்லோர் அகமும் நாடும் பான்மையதாகும். அகம் நாடும் நாடகமாம் இக்கலையில் நாடு இதன் அகத்துக் காணப்படும். வியத்தகு கலை நிலையே நிலை கண்டுணர எழுவதே நாடகக் கலையாகும்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று வடிவங்களை உடையது நமது செம்மொழி தமிழ். இயலும் இசையும் இணைந்த வடிவமே நாடகம் ஆகும். கருத்துக்களை நடித்துக் காட்டுவதற்கு நாட்டியம் என்றும், கதைகளை நடித்துக் காட்டுவதற்கு நாடகம் என்றும் கூறுவர். பாண்டியர்

கால நாடக வளர்ச்சியையும் கற்போர்க்கும் கேட்போர்க்கும் மனதில் கனிச்சுவை நல்கும் புதிய தரவுகளாகும்.

உலகின் மூத்த இனமாகிய தமிழ் இனத்தின் போற்றுதலுக்குரிய கலைகளுள் நாடகக் கலையும் ஒன்று. அவற்றுள் பாண்டிய நாட்டின் பகுதியில் கூறப்பட்டுள்ள நாடகம், சிற்பம், கல்வெட்டுகள் பற்றி இங்கு வழக்காறாகக் கூறப்படுகின்றன.

பாண்டியர் கால நாடகம்

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தெற்கே குமரி முனையை அடுத்து இலெமூரியா கண்டம் என ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்ததாகவும் அங்கே பாண்டியர் அரசாட்சியில் சங்கம் அமைத்து மொழி ஆராய்ச்சி நடைபெற்றதையும் பெருங்கடல் கோளினால் அந்த நாடு நகரங்கள் அழிவுற்றபோது நாடக, இசை, இலக்கண நூல்கள் பல அழிந்து போயின என்றும் தமிழ் இலக்கியங்களில் (இறையனார் அகப்பொருள்) பேசப்படுகின்றன.

களப்பிரர்களின் ஆட்சிக்குப் பின்னால் கி.பி. 575 முதல் கி.பி. 1400 வரை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களது வரலாறு நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளது.

பாண்டியர் கால சிற்பங்கள்

பாண்டியர் காலத்தில் இசை, நாடகம், கூத்து முதலான கலைகளின் வளர்ச்சிக்குக் கோயில்கள் பெரிதும் உதவிபுரிந்து வந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

பாண்டிய நாட்டில் பல செங்கல் கோயில்களையும் கற்றளிகளையும் மன்னர்களும் பிறரும் எடுப்பித்து வந்தமையால் சிற்பம், ஓவியம், இவற்றில் வல்லவர்களும், செப்புத் திருமேனி, கற்படிமங்கள்

அமைப்பவர்களும் அணிகலன்கள் செய்பவர்களும் நன்கு ஆதரிக்கப் பட்டனர்.

இக்கலைகளும் கோயில்களால் வளர்ச்சியுற்று வந்தன. சித்தன்ன வாசல், ஆனைமலை, திருப்பரங்குன்றம், கழுகுமலை முதலிய இடங்களில் கலைச் சிற்பங்கள் நிறைந்த பாண்டியர் காலத்து கோயில்கள் உள்ளன. இச்சிற்பங்கள் பாண்டியர் காலத்தில் நாடகக்கலை பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன.

பாண்டியர் கால கல்வெட்டுகளால் அறியும் நாடகக் குறிப்புகள்

சடையவர்மன் சீவல்லபன், சுந்தரபாண்டியன், கோச்சடைய வர்மன், குலசேகர பாண்டியன், சோனாடு வழங்கிய சுந்தர பாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் நாடகக் கலையில் அவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தமையைக் குறிப்பிடுகின்றன.

மாடக்குளக் கீழ் மதுரைக் கோயிலின் உள்ளும் அரண்மனையிலும் நாடகச் சாலைகள் இருந்ததாகச் சடையவர்மன் சீவல்லபனின் 22ஆம் ஆண்டு கல்வெட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் திருவேங்கை வாசலில் ‘அறஞ்சை அரிட்டன்’ என்ற சாந்திக்கூத்தனுக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருந்த செய்தி சுந்தரபாண்டியனின் 10ஆம் ஆண்டு கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ‘சாந்திக்குனிப்பம்’ என்று கூறப்படும் ஒருவகைக் கூத்தைப் பற்றிய செய்தியைச் சுந்தரபாண்டியனின் திருவொற்றியூர் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது.

கோச்சடையவர்மன் காலத்தில் பதிக்கப்பெற்ற திருநெல்வேலி உடையார் கோயில் கல்வெட்டில் அழகிய பெருமாள் தலைக்கோலி என்ற நடன மங்கையைப் பற்றிய செய்தி கூறப்படுகிறது.

இன்னொரு கல்வெட்டில் குலசேகரப் பாண்டியனின் இயல், இசை நாடகப் புலமை குறிப்பிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் கிடைத்த சோனாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் கல்வெட்டிலும் முத்தமிழ் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன.

இவற்றை நோக்கும்போது பாண்டியர் காலத்தில் நாடகம் ஓரளவிற்கு வளர்ச்சி பெற்றிருந்ததை அறியமுடிகிறது. நாட்டுப்புற கூத்துகளாக இருந்தவைதான் நாளடைவில் நாடகங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. ஆடல்கள் நடனமாகவும் கூத்துக்கள் நாடகமாகவும் வளர்ந்துள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

இன்று வரையில் முழுமையாகக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் முதலாவதாகத் தொல்காப்பியத்தில் நாடகம் என்ற சொல் ஒரு இடத்தில் மட்டுமே வருகின்றது.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்
(தொல். பொருள். அகத். நூ. 53)

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும்.

மனிதனது இன்ப வாழ்வைச் சிறப்பாக விளக்க முற்படுவது நாடக வழக்கமாகும். உணர்ச்சி விளக்கங்களைப் பொதுநிலையில் விளக்குவது உலகியல் வழக்கம் ஆகும். முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருள்களைப் பற்றியும் விளக்குவதால் நாடக வழக்கம் என்று கூறப்படுவதாக நச்சினார்க்கினியர் விளக்குகின்றார்.

பழமையான தெருக்கூத்துகளில் இன்று வரை சிறப்பித்துக் கூறப்படும் நாடகங்கள் மார்க்கண்டே நாடகம், அரிச்சந்திர நாடகம், மகாபாரதம், இராமாயணம், இரணிய வதம், கோவலன் நாடகம், சிறுத்தொண்டர் நாடகம், சத்தியவான் சாவித்திரி நாடகம், நல்லதங்காள் நாடகம், அல்லி அரசாணி நாடகம், வள்ளித்திருமணம் நாடகம், கட்டபொம்மன் நாடகம் போன்றவை பெரும் புகழை மக்களிடம் சேர்த்த நாடகங்கள் ஆகும்.

நாலாயிரத்தில் காணப்படும் கதைகள்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் எம்பெருமானின் பெருமையை விளக்க வந்த ஆழ்வார்கள் பல இடங்களில் கதைகளைச் சொல்வதன் மூலம் பெருமானின் சிறப்புகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். நமது இதிகாசங்கள், புராணங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றால் எம்பெருமானைப் பற்றி ஏராளமான கதைகள் கூறப்பட்டுள்ளன. இக்கதைகள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை எளிய நடையில் விளக்கி போதிக்கின்றன. அவற்றுள் பாண்டிய நாட்டு திருப்பதிகளின் வரலாறும் கதைகளாக இங்கு வழக்காறாக்கப் பட்டுள்ளன. அவை

சிலம்பாறு தோன்றிய கதை

பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலையைப் பற்றி மங்களாசாசனம் செய்யும்போது,

அலம்பா வெருட்டாக் கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ் படுத்துக் குலவிளக்காய் நின்ற கோன்மலை
சிலம் பார்க்க வந்து தெய்வ மகளிர்கள் ஆடும்சீர்
சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலையே
(பெரியாழ்வார்திருமொழி, **338**)

என்று குறிப்பிடுகிறார். இதன் பொருள் அரக்கர்கள் உயிர்களை ஓரிடத்தில் நிலைத்திருக்க முடியாதபடி அலைத்தும் வெருட்டியும் கொன்றும் திரிந்தனர். அவர்கள் குலம் அழியும்படி இட்சுவாகு குலத்தில் தோன்றிய இராமன் அழித்தான். அப்பெருமான் பெண்கள் சிலம்பு ஒலிக்கும்படி நீராடும் பெருமையை உடைய, சிலம்பாறு பாயும் திருமாலிருஞ் சோலையில் உறைகிறான் என்பதாகும்.

சிலம்பாறு என்றழைக்கப்படும் நூபுர கங்கை தோன்றிய விதம் பற்றிய கதை. திருமால் வாமன அவதாரம் எடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியை அழித்த சமயத்தில் தனது ஒரு பாதத்தால் மண்ணுலகையும் மற்றொரு பாதத்தால் விண்ணுலகத்தையும் அளந்தாராம். விண்ணுலகத்தை அளந்த சமயத்தில் பெருமானின் திருப்பாதம் பிரமனின் சத்தியலோகம் வரை நீண்டு சென்றதாம்.

அப்போது பிரமன் தனது கமண்டலத்திலுள்ள நீரினால் வாமனின் திருப்பாதத்திற்கு அபிசேகம் செய்ய, அக்கமண்டல நீர் வாமனின் காலிலுள்ள பொற் சிலம்பில் பட்டுத் தெரித்ததாம். அவ்வாறு தெறித்த நீர் திருமாலிருஞ்சோலையில் சிலம்பாறாகப் பெருகிற்று என்று கூறப்படுகிறது. இன்றைக்கும் திருமாலிருஞ்சோலை உறையும் அழகர் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்வதற்குத் தினமும் நூபுர கங்கையிலிருந்துதான் நீர் எடுத்து வரப்படுகிறது.

முன்பெல்லாம் தேவலோகத்துப் பெண்கள் நூபுர கங்கையில் நீராட வருவது வழக்கமாக இருந்ததாம். அவ்வாறு நீராட வரும் பெண்கள் அரக்கர்களுக்கு அஞ்சி, தாங்கள் நீராடிக் கொண்டிருப்பது தெரியாமல் இருக்கும் பொருட்டு தமது கால் சிலம்புகளைக் கழற்றிவிட்டு வருவார்களாம். பெருமான் அவதரித்து அரக்கர்களை வதைத்த பின்னர்

தேவ மகளிர்கள் காலில் சிலம்புடன் நீராடுவதைக் குறிக்கவே ஆழ்வார் சிலம்பார்க்க வந்து தெய்வ மகளிர்கள் ஆடும்சீர் சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ்சோலையே என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்.

இன்றும் இக்கதை பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் வரலாற்றையும் பண்பையும் புகழையும் விளக்குவதாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

மடல்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்நோக்கிலான இலக்கியங்கள் முகிழ்த்த காலம் சிற்றிலக்கியக் காலம். இக்காலத்தில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் படைக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று மடல் என்பதாகும். தலைவனும் தலைவியும் ஊழ்வினையால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர். இயற்கைப் புணர்ச்சியின் பின்பு தலைவன் பல்வேறு இடர்களைக் கடந்து தலைவியைச் சந்தித்து மீண்டும் செல்வான்.

இக்காலத்தில் தலைவன் தலைவி இருவருடைய உறவும் பலமாகத் தோழியின் பங்களிப்பு முக்கியமானது. இந்நிலையில் இற்செறிப்பின் காரணமாகவோ, தோழி தலைவனின் கையுறைப் பொருளை ஏற்காத நிலையில் தலைவியைச் சந்திக்க முடியாத சூழலில் இருக்கின்ற தலைவன் மடலேறியேனும் அவளை அடைய முயல்வான்.

அதனைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்படுவதே மடல் இலக்கியம். சங்க இலக்கியங்களில் மடல் குறித்த பாக்கள் குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இப்பாடல்கள் மடல் ஏறுவேன் என்னும் சிந்தனையை வெளிப்படுத்துகின்றனவேயன்றி மடல் ஏறியதாகக் குறிப்பிடவில்லை.

எத்தனைதான் காதல் துன்பம் வருந்தினாலும் மடல் ஏறும் வழக்கம் பெண்களுக்கு இல்லை. இதனை,

கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில் (குறள். 1137)

என்று திருக்குறள் குறிப்பிடுகிறது.

மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி லெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங் காழ்க்கொளினே

என்ற குறுந்தொகைப் பாடல் தலைவி கிடைக்காத துன்பத்தில் மடல் ஏறத் துணிந்த தலைவனின் நிலையைக் காட்டுகிறது.

மடல் என்னும் சொல் பனை முதலியவற்றின் ஏடு, பனங்கருக்கு, பூவிதழ், கிளை, கண்ணிமை, ஏற்றக்கழி, சிறுவாய்க்கால் முதலான பல பொருள்களைத் தருகிறது என்று தமிழ் மொழி அகராதி குறிப்பிடுகின்றது.

இம்மடல் திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் இரு இலக்கியங்களும் தலைவி ஒருத்தி திருமாலின் மேல் காதல் கொண்டு அவன் கிடைக்காத காரணத்தால மடல் ஏறத் துணிவதாக இலக்கியம் அமைந்துள்ளது. சிறிய திருமடலில் பாண்டிய நாட்டின் திருப்பதிகளில் ஒன்றான திருமாலிருஞ்சோலை திருமங்கையாழ்வாரால் சிறப்பித்துப் பாடப்படுகிறது. அவை

சீராருந் திருமாலிருஞ்சோலை திருமோகூர்
பாரோர்புகழும் வதரி வடமதுரை
ஊராயவெல்லாம் ஒழியாமே நானவனை (138:149)

என்ற பாடல் சிறப்பாகப் பேசப்படுகிறது.

துளசி இலையின் மகிமை

மனித உடலில் மிகக் கூடுதல் உறிஞ்சும் சக்தியுடையது காதின் பின்புறப் பகுதியாகும். துளசியின் மருத்துவக் குணங்களை நாம் நன்கறிவோம். இது மருத்துவக் குணங்களைக் கொண்டதால் பழங் காலத்து மக்கள் காதில் துளசி இலையை வைத்து வந்தனர். பழங்காலத்திலுள்ள வீடுகளில் துளசிமாடம் கட்டி துளசியை ஒரு புனிதச் செடியாகப் பராமரித்து வந்தனர்.

சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில் கிழக்குப் பக்கத்து வாசலுக்கு நேராக துளசிமாடம் கட்ட வேண்டும் என்று முன்னோர்கள் போதித்துள்ளனர். வீட்டின் தரையைவிடத் தாழ்ந்த மட்டத்திலாகாமல் குறிப்பிட்ட அளவில் துளசித் தரை அமைய வேண்டும்.

துளசியைத் தரையில் நடுவதற்குக் கிருஷ்ண துளசி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. துளசிச் செடிக்குப் பக்கம் அசுத்தமாகச் செல்வதாகாது. ஜெபம் செய்து கொண்டே அதன் பக்கம் செல்ல வேண்டும். துளசியைத் தினமும் மூன்று வேளை வலம் வரவேண்டும்.

மாலை நேரம், ஏகாதசி, செவ்வாய், வெள்ளி நாட்களில் துளசி இலையைப் பறிக்கக்கூடாது என்ற விதியுண்டு. பூஜைக்கல்லாமல் துளசியைப் பறிக்கக்கூடாது.

சில நோய்களுக்கு மருந்தாகவும் சிறு குழந்தைகளுக்கு சளி தொல்லை நீக்கும் அருமருந்தாகவும் துளசி இலை விளங்குகிறது. இது பெருமாளுக்கு உகந்ததாகவும் திருமால் விரும்பி ஏற்கும் துளசி மாலையாகவும் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றுவதன் காரணம்

இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தத்தில் ஸ்ரீஆஞ்சநேயர் ஸ்ரீராம, இலக்குவர்களைத் தனது தோளில் சுமந்தார். அதன் காரணமாக இராமபிரானால் போரில் எளிதில் வெற்றிபெற முடிந்தது. என்றாலும், தோளில் ஸ்ரீராம, இலக்குவர்களைச் சுமந்தபோது இராவணன் மற்றும் மற்ற அரக்கர்கள் விடுத்த அம்பினால் ஸ்ரீஆஞ்சநேயரின் உடலில் இரத்தக் காயங்கள் பல இடங்களில் ஏற்பட்டன. அப்பொழுது ஸ்ரீராமர் தனது கரத்தால் ஆஞ்சநேயரின் உடலில் வெண்ணெயைச் சாற்றினார்.

அதன் மூலம் ஸ்ரீஆஞ்சநேயரின் உடல் இரணங்கள் மறைந்து அவருக்குக் குளிர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு முதன்முதலில் ஸ்ரீஆஞ்சநேயருக்கு வெண்ணெய் காப்பு சாத்தியது ஸ்ரீராமர்தான். இந்த இனிய சம்பவத்தை (ராமபிரான் அன்போடு) அனுமனுக்கு வெண்ணெய் சாற்றியதை நினைவுபடுத்தும் விதமாகவும், வெண்ணெய்க் காப்பு சாற்றுகின்றனர். வெண்ணெய் சாற்றுவதன் மூலம் ஆஞ்சநேயரைக் குளிர்விப்பதற்காகவும் பக்தர்கள் இன்று வரை ஸ்ரீஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றி வழிபடும் மரபு கூறப்படுகிறது.

நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்கள் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நிகழ்வுகளையும் விளக்குவதாக அமைந்துள்ளன.

பழைய காலங்களில் முன்னோர்கள் சுபகாரியங்களையும் துன்ப நிகழ்வுகளையும் பாடல்களாகப் பாடியுள்ளனர். இவை மட்டுமின்றி தெய்வங்களைப் போற்றியும் தங்களது பக்தியாற்றலை வெளிப்படுத்தும் வகையில் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கைப் பற்றியும் பல பாடல்களைப் பாடியுள்ளனர். நாட்டுப்புற மக்கள் தங்களது மன

உணர்வுப்பூர்வமான பக்தியாற்றலை இறைவன் மீது செலுத்தும் வகையில் தெய்வப் பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள்

அந்த இராவணனுக்கு
அழகுத் தேரும் போச்சு
அந்த இராவணனும்
ஐயனெதிர் நின்றான்
இன்று போய் நீ நாளை
இனி வருவாய் நீயே
என்றார் இரகுராமர்

என்ற பாடல் நாட்டுப்புற மக்கள் பாடும் பாடல்களில் இதிகாச, புராண மாந்தர்களைத் தக்க இடத்தில் வைத்துப் போற்றியுள்ளார். கம்பனின் சொற்றொடரான 'இன்று போய் நாளை வா' என்பதன் கருத்து இராமாயண ஏற்றப்பாட்டிலும் காணப்படுகிறது.

ஓங்கினான் அனுமன்
தாண்டினான் கடலை
தாண்டிக் கடலேறி
தாயாரிடம் சென்றான்
தாயரம்மன் சீதை
தடவி முத்தம் தந்தாள்

என்ற பாடலை அனுமன் இலங்கையில் சீதையைக் கண்டான் என்பதை விளக்கும் வகையில் ஏற்றம் இறைப்போர் பாடினர்.

நாட்டுப்புறப் பாடல்கள் பெருந்தெய்வங்கள் மீதும் பாடப் படுவதுண்டு. கிராமிய மக்களும் நாட்டுப்புற மக்களும் உறங்கப் போகும் பொழுது,

அரியின்னு பாய் விரிச்சு

அச்சுதான்னு பேர் சொல்லி
கிருஷ்ணான்னு படுத்தவர்க்கு
ஒரு நாளுங் கேடில்லை
கோவிந்தான்னு படுத்தவர்க்கு
ஒரு நாளுங் குறைவில்லை

என்று இறைவன் திருமாலை வணங்கிப் பாடுகின்றனர்.

சித்திரைத் திருவிழாவின் தேரழகு

முத்துக் கண்ணாடி பதித்த சிங்காரம்
முன்னின்று பாரடி காணல் அலங்காரம்
சித்திரப் பதுமை சுற்றித் தொங்கும் ஒய்யாரம்
ஜொலிக்குது ரசகுண்டு மாணிக்க வயிரம்

என்ற பாடல் சித்திரை மாதம் வீதியில் உலாவரும் இறைவன் திருமாலின் உற்சவத்தைச் சிறப்பித்து விளக்குகின்றனர்.

அசுரரும் தேவரும் ஒன்றாய் கூடி பெண்ணே
அமிர்தம் கடைந்தார் ஆடல்தேடி அதை
அசுரர்க்கும் இல்லாமல் தேவர் அள்ளியுண்ட தாலேஇந்த
காட்சி பெருங்காட்சி

இந்தப் பாடல் நஞ்சுடேசுவரர் புராணச் செய்தியை விளக்குவதாக அமைந்த பாடல் ஆகும்.

இராமன் சீதை கல்யாணப் பாடல்

சீதைக்கும் இராமருக்கும்
செலுத்தி வந்த ஆலாத்தி
ஜெயமங்கலம் நித்திய சுபமங்கலம்

என்ற பாடல் இராமனுக்கும் சீதைக்கும் நடந்த திருமணத்தை நினைவு படுத்தும் வகையில் பாடப்பட்டுள்ளது.

பாண்டியர்கள் பற்றிய பாடல்

கருமலையிலே கல்லெடுத்து
காளையர் கொண்டு சேர்த்து
மருதைக் கோபுரம் தெரியக் கட்டி
மருது வாராரு பாருங்கடி

என்ற கும்மிப் பாடல் மதுரையை ஆண்ட பாண்டியர்களின் பெருமையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

தொகுப்புரை

'வழக்காறுகள்' என்ற இவ்வியலில் வழக்காறு என்பது பற்றியும் பாண்டிய நாட்டின் சிறப்பு, இயற்கை, பாண்டிய நாட்டு மக்களின் பக்தி, நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தின் சிறப்புப் பற்றியும், பாண்டியர் கால நாடகங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் பற்றியும், சிலம்பாறு தோன்றிய கதை, மடல் மற்றும் இறைவன் திருமால் மீது பாடப்பட்டுள்ள பாடல் பற்றியும் சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டு கூறப்பட்டுள்ளன.

முடிவுரை

'பாண்டிய நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறும்' என்ற இவ்வாய்வில் வைணவ மதத்தின் தன்மை, ஆழ்வார்களின் பாசுரங்களின் வாயிலாக வைணவத்தின் முழுமுதற் கடவுளான இறைவன் திருமாலின் சிறப்பையும் வைணவத்தின் சிறப்பையும் உலகிற்கு அறிமுகப்படுத்தி உலக மக்கள் யாவரும் சாதி மத வேறுபாடின்றி இறைவன் திருமாலின் மீது கொண்டுள்ள நம்பிக்கைப் பற்றி கூறப்பட்டுள்ளன.

திருமாலுக்கு நிகழக்கூடிய பூஜைகள், புனஸ்காரங்கள், வழிபாட்டுச் சடங்குகள், திருவிழாக்கள், வழிபாட்டுக் காலமுறைகள், பூசைப் பொருள்கள், வேதங்கள் பற்றியும் ஆழ்வார்களின் பாசுரங்கள் பற்றியும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

பழங்காலத்தில் தோன்றிய இதிகாசங்கள், புராணச் செய்திகள், சடங்கு முறைப் பாடல்கள், திருமாலின் திருமணப் பாடல்கள்,

மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களின் செய்திகள், இலக்கண, இலக்கிய நூற்பாக்கள், இலக்கணச் செய்திகள் போன்றவைப் பற்றி முழுமையாகக் கூறப்பட்டுள்ளன.

ந.சுப்புரெட்டியார் பாண்டிய நாட்டுத் தலங்களைச் சிறப்பித்துக் கூறும் பாண்டிய நாட்டின் இயற்கை வளம் பாண்டிய நாட்டின் சிறப்பு, திருமாலின் சிறப்பு, ஆழ்வாரின் பக்திச் சிறப்பு இவற்றைப் பற்றி மனமுருகிக் கூறியதைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

கதிர்முருகு (உரை.) **திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடல் பெரிய திருமடல்**
சாரதா பதிப்பகம்,
சென்னை.

சுப்புரெட்டியார்,ந. **பாண்டி நாட்டுத் திருப்பதிகள்**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

ஞானசேகரன்,நா. **இருபது நூற்றாண்டுகளில் தமிழ் நாடகக் கலை**
புத்தகச்சோலை பதிப்பகம்,
மயிலாடுதுறை.

தேவராஜன் **வைணவமும் ஆழ்வார்களும் பாகம் 1**
ஸ்ரீசெண்பகா பதிப்பகம்,
சென்னை.

தேவராஜன் **வைணவ திவ்விய தேசங்கள் 108, பாகம் 1**

ஸ்ரீசெண்பகா பதிப்பகம்,
சென்னை.

மருதநாயகம்,இரா. **நாட்டுப்புறவியல் வரலாறும் வளர்ச்சியும்**
அபிநயா பதிப்பகம்,
மயிலாடுதுறை.

\- ***தமிழ் செய்யுள் திரட்டு, பகுதி 1***
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி

நாளிதழ்கள்

1. *தினமலர், பக்தி மலர், நாள் 29.6.2017.*
2. *தினத்தந்தி, தமிழ் மாத ஜோதிடம், நாள். 9.5.2016.*
3. *தினகரன், ஆன்மிக மலர், நாள் 13.7.2019.*
4. *தினகரன், ஆன்மிக மலர், நாள். 17.8.2019.*
5. *மாலைமலர், நவராத்திரி வழிபாடு, 2012.*

வினாநிரல்

தகவலாளரின் பெயர் :

முகவரி :

வயது :

கல்வி :

தொழில் :

சாதி :

சந்தித்த நாள் :

1. பாண்டிய நாட்டின் சிறப்பு என்ன?
2. பாண்டிய நாட்டின் இயற்கை வளம் எவ்வாறு அமைந்துள்ளது?
3. வைணவர்களின் சடங்கு முறைகள் எவ்வாறு அமைந்துள்ளன?
4. பாண்டிய நாட்டின் பதினெட்டுத் தலங்களின் வரலாறு பற்றி கூறவும்.
5. பாண்டிய நாட்டுத் தலங்களின் சிறப்புகள், இறைவன் திருமாலின் சிறப்புகள் என்னென்ன?

6. பாண்டிய நாட்டுத் தலங்கள் குறித்துத் தோன்றிய கதைகள், புராணங்கள், இதிகாசங்கள் ஏதேனும் உண்டா? அவற்றைப் பற்றிக் கூறுங்கள்.
7. பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் தோன்றிய பாசுரங்கள் எவற்றை வலியுறுத்துகின்றன?
8. பாண்டிய நாட்டுத்திருப்பதிகளின் தலவரலாறு எவற்றைப் பற்றி விளக்குவதாக அமைந்துள்ளன?
9. வைணவர்களின் சிறப்பு பற்றி ஆழ்வார் கூறுவதைப் பற்றிச் சொல்லுங்கள்.
10. பாண்டிய நாட்டில் பதினெட்டு தலங்களுள் கூறப்படும் இறைவன் திருமாலின் புகழைப் பற்றிக் கூறுங்கள்?
11. வைணவர்கள் வழிபடும் முறைகள் பற்றிச் சொல்லுங்கள்.
12. வைணவர்களின் சடங்குமுறைகள் பற்றிச் சொல்லுங்கள்.
13. திருமாலிற்கு பூசை செய்யப்படும் பொருள்கள் என்னென்ன?
14. அர்ச்சகர்களால்கூறப்படும் வேதங்கள் எவை?
15. பூஜைக்கால முறைகள் எவ்வாறு அமைகின்றன?
16. எப்பொழுதெல்லாம் பூஜை நடைபெறுகின்றன?
17. எப்பொழுதெல்லாம் திருவிழாக்கள் நடைபெறுகின்றன?
18. இறைவன் திருமாலுக்கு என்னென்ன சடங்குகள் நடைபெறுகின்றன?
19. திருமாலை வணங்குவதினால் கிடைக்கும் பலன்கள் யாவை?
20. வீடுபேறு அடைவதற்கான வழிமுறைகள் உண்டா?
21. வைணவத் தலங்களைப் பற்றிய கதைகள் ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா?
22. ஆழ்வாரின் பாசுரங்கள் மற்றும் சிறப்புகள் என்னென்ன?

23. பாண்டிய நாட்டில் பழங்காலத்தில் தோன்றிய மன்னர்கள் வைணவ தலங்கள் பற்றி ஏதேனும் கூறியுள்ளாரா? அவை யாவை?

24. வைணவர்கள் பற்றிய வரலாற்றைக் கூறவும்.

25. வைணவச் சடங்குப் பாடல்கள் பற்றிக் கூறுங்கள்?

26. திருமாலின் திருமணப் பாடல் பற்றி கூறுங்கள்?

27. திருமாலுக்குரிய வேதங்கள் பற்றி கூறுங்கள்

28. திருமாலிற்குரிய மந்திரத்தின் பலன் பற்றி கூறுங்கள்.

29. திருமாலை வணங்குவதால் உண்டாகும் நன்மைகள் என்னென்ன?

30. முக்தியை அடையும் வழிகள் பற்றி கூறவும்.

தகவலாளர் பட்டியல்

வ.எண்	தகவலாளர் பெயர்	ஊர்	வயது	தொழில்	கல்வி	சந்தித்த நாள்
1.	சி.சுந்தரபெருமாள்	திருமயம்	48	அர்ச்சகர்	10ஆம் வகுப்பு	3.5.2019
2.	சு.காத்தபெருமாள்	மதுரை	65	,,	8ஆம் வகுப்பு	5.5.2019
3.	க.விஸ்வநாதன்	மதுரை	50	,,	9ஆம் வகுப்பு	7.5.2019
4.	பா.காசியய்யா	திருமோகூர்	70	,,	7ஆம் வகுப்பு	11.5.2019
5.	சா.முத்துக்கண்ணு	ஸ்ரீவில்லிபுத்தூர்	45	,,	இல்லை	15.5.2019
6.	த.கவிபாலன்	திருமாலிருஞ் சோலை	37	,,	5ஆம் வகுப்பு	23.5.2019
7.	க.பரதன்	திருக்கோளூர்	42	,,	இல்லை	2.6.2019
8.	இரா.விஷ்ணு	,,	70	,,	12ஆம் வகுப்பு	3.6.2019
9.	க.கண்ணன்	திருப்புல்லாணி	40	,,	8ஆம் வகுப்பு	10.6.2019
10.	கோ.பாலகுரு	திருக்கோஷ்டியூர்	55	,,	5ஆம் வகுப்பு	20.6.2019
11.	சா.இரவிக்கிருஷ்ணன்	,,	62	,,	இல்லை	25.6.2019
12.	ந.குருவர்ஷன்	வரகுணமங்கை	45	,,	10 ஆம் வகுப்பு	5.7.2019
13.	பா.தேவேந்திரன்	,,	57	,,	6ஆம் வகுப்பு	7.7.2019
14.	வி.சுவாமியய்யன்	திருப்புளிங்குடி	40	,,	2ஆம் வகுப்பு	15.7.2019

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கோபுரம்

பொற்றாமரைக் குளம்

அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம்



ஆயிரங்கால் மண்டபம்

மாரியம்மன் தெப்பக்குளம்

மதுரை அழகர் கோயில்

திருப்பரங்குன்றம் முருகன் கோயில்

திருமலை நாயக்கர் அரண்மனை



பாண்டியர்களின் மீன் சின்னம்

கூடலழகர் கோயில்

வீரராகவப் பெருமாள் கோயில்

காளமேகப் பெருமாள் கோயில்

கூடலழகர் கோயில் கோபுரம்

யோக நரசிம்மர்

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தொண்டைநாட்டு திருப்பதிகளை நேரில் கண்டும்,
பாசுரங்களை கற்றும், கேட்டும், துதித்தும் தாம் பெற்ற
அநுபவத்தினை இந்நூல் வாயிலாக மானசீகமாக திவ்வியதேச
யாத்திரைக்கு நம்மை இருப்பூர்திகளிலும், பேருந்துகளிலும்
அழைத்து செல்கிறார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-9-9

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் 1976

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் என் கிருஷ்ணசாமிரெட்டி
நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்



அணிந்துரை

(ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி)

மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்-நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவோர் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்தலைமேல் பூ.[1]

ஞானானந்த சொரூபனாய், ஞான சக்தியாதி கல்யாண குணங்களையுடையவனாய், தேசகால வஸ்து பரிச்சேத மில்லாதவனாய், தேஜோமயமான திவ்விய மங்கள விக்கிரகமுடையவனாய், எல்லாவுலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் கர்த்தாவாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயன்களை அளிப்பவனாய், இலட்சுமி பூமி நீளா நாயகனாய் இருக்கும் நாராயணன் சேதநருக்கு உவப்பான பொன், வெள்ளி, தாமிரம், சிலை, மரம், மண் முதலிய திரவியங்களையே திருமேனியாகவும், அவரிட்டதுவே பெயராகவும் கொண்டு, தேசகால அதிகார பேதமின்றி எல்லோராலும் கண்டு பற்றுதற்குச் சௌலப்பியம் சௌசீல்யம் கருணம் முதலிய நிறைய குணங்களுடைய அர்ச்சாவதாரமாக, இருந்த கோலம், நின்ற கோலம், கிடந்த கோலமாக, 'சொன்ன வண்ணம் செய்த பெருமாளாக', உலகோர் உய்யும் பொருட்டு இம்மண்ணுலகில் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றான்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருக்கோயில்களை நூற்றெட்டுத் திருப்பதிகளாகக் கொள்வது வைணவ மரபு. இத்திருப்பதிகள் பூர்வாசார்யர்களாலும், ஏனைய பெரியோர் களாலும் போற்றப்பட்டவை தியானிக்கப்பெற்றவை. இவ்வளவு சிறப்புப்பெற்ற திவ்விய தேசங்களை தரிசிப்பவர்களும்,

1. நூற்.திருப்.அந்.

இவைகளைப் பற்றிப் பெரியோர் அருளிய வாக்குகளைக் கற்பவர்களும், சிறப்பித்துப் பேசுகிறவர்களும், சிரவணம் செய்து கொண்டிருப்பவர்களுமாகிய திருமாலடியார்களின் பொற் பாதங்கள் 'என் தலைமேற் சூடும் மலராகும்' என்று பணிவுடன் போற்றுவர் அழகிய மணவாளதாசர்.

இந்நூலாசிரியர் டாக்டர் என். சுப்பு ரெட்டியார் அவர்கள் பழுதறவோதிப் பகவானின் கருணை வெள்ளம் கோக்கப் பெற்றவர்கள். இத்திருப்பதிகளை நேரில் கண்டும் அவற்றின் மீதுள்ள திருப்பாசுரங்களைக் கற்றும் கேட்டும் துதித்தும் தாம் இயற்றியுள்ள 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்னும் இந்நூலின் வாயிலாக இத்திருப்பதிகளின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே மானசீகமான திவ்வியதேச யாத்திரைக்கு நம்மைப் இருப்பூர்திகளிலும் பேருந்துகளிலும் அழைத்துச் செல்லு கின்றார். திருக்கோயில்களிலுள்ள மதில்கள் மண்டபங்கள் மூர்த்திகள் தீர்த்தங்கள் இவற்றையெல்லாம் சுற்றிக் காட்டுகின்றார், சுட்டியும் உரைக்கின்றார்; திருத்தலங்களின் வரலாறுகளையும் கூறுகின்றார். அத்துடன் நில்லாது ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமான்களை அநுபவித்த நெஞ்சு நெக்குருகும் சில பாசுரங்களையும் பாடி நம்மையும் அவ்எம்பெருமான்கள் எம்பெருமாட்டிகள் இவர்கள் எதிரே கொண்டு நிறுத்தி ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றார். இவற்றிற்கிடையே வைணவ சமயக்கருத்துகள் பலவற்றை நம் சிந்தையில் தூவி சிந்தனையையும் கிளறுகின்றார்.

இந்த நூலினைப் பயிலும் நாமும், இந்த நூலாசிரியரின் துணையின்றியே, தனியாக நம் குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரையை **உண்மையிலேயே** உடனே மேற்கொள்ளலாமா என்கின்ற எண்ணத்தை நம்மிடையே எழுமாறு தூண்டிவிட்டுக் கொண்டே நம்மையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றார். இந்நூலின் வாயிலாக நாமும் மானசீகமான நம்முடைய திவ்வியதேச யாத்திரையை நிறைவு செய்து கொண்டோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். அத்தகைய நூல் நிலைத்து வாழ்க.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் சைவக் குடும்பத்தில் தோன்றியவராயினும் வைணவத்தில் பற்றும் ஈடுபாடும் உடையவர்; ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டவர்; கண்ணன் கழல் இணைகள் நண்ணும் மனமுடையவர்.

தற்சமயம் திருப்பதியில் வாழ்பவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆராய்ச்சி செய்து நம்மாழ்வார் தத்துவத்தை ஆங்கில ஆராய்ச்சி நூலாக வடித்துத் தந்து 'டாக்டர்' (Ph.D.) பட்டம் பெற்றவர். குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரை செய்து தாம் அநுபவித்த இன்பப் பேற்றைப் பிறரும் பெற்று அநுபவிக்கவேண்டும் என்னும் எண்ணத்தின் விளைவாக இந்நூலையும் இதற்கு முன்னர் வெளிவந்த **'மலைநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூலையும் ஆக்கித் தந்திருக்கிறார்கள். மேலும், தாம் சென்று வந்த ஏனைய திவ்விய தேசங்கட்கும் இதுபோலவே தாம் படைக்கும் நூலின் வாயிலாக நம்மையும் மானசீக யாத்திரையில் உட்படுத்தித் தம்முடன் அழைத்துச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மலிவான நல்ல அச்சில் வெளியிடப் பெற்றுள்ளது. இதனை மனமுவந்து ஏற்று வெளியிட்டவர்கட்கும் என் பாராட்டு. இதனை எல்லோரும் வாங்கிக் கற்று, மற்றவர்கட்கும் கற்பித்து எம்பெருமான் திருவருள்பெற்று, இன்புற வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். வாழ்க 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' வளர்க இந்நூலாசிரியரின் சமயம் கலந்த தமிழ்த் தொண்டு!!

- கிருஷ்ணசாமி ரெட்டி

தொண்டை நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறுகளும்

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆய்வியல் நிறைஞர் (எம்..ஃ.பில்.,)

பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

ஆ. ஜெயாம்பிகா

பதிவெண்: **5945**

நெறியாளர்

முனைவர் சீமான் இளையராஜா

உதவிப் பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர்

நாட்டுப்புறவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010.

செப்டம்பர் - 2019

நன்றியுரை

"தொண்டை நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறுகளும்" என்னும் தலைப்பில் நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பளித்த தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும் மதிப்புறு பதிவாளர் (பொ) முனைவர் கு. சின்னப்பன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வு செய்ய எனக்கு வாய்ப்பளித்து இவ்வாய்வின் தொடக்கம் முதல் இறுதி வரை ஏற்பட்ட ஐயங்களை நீக்கி ஆய்வு செம்மையாக அமையும் வண்ணம் நல்வழி காட்டிய நாட்டுப்புறவியல் துறை உதவிப்பேராசிரியரும் என் ஆய்வு நெறியாளருமான முனைவர் சீமான் இளையராஜா அவர்களுக்கு என் நன்றியினை உரிதாக்குகிறேன்.

எனது ஆய்வினைச் செம்மையுறச் செய்த நாட்டுப்புறவியல் துறைத் தலைவரும் மொழிப்புல முதன்மையருமான பேராசிரியர் முனைவர் இரா. காமராசு அவர்களுக்கும், மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் ஆ. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் நா. மாலதி அவா்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

எனது ஆய்வுக்குத் தேவையான பல நூல்களைத் தந்து உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கும், துறை நூலப் பணியாளர் என் நன்றியை உரிதாக்குகிறேன்.

ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெறும் அளவிற்கு என்னை உயர்த்திய என் பெற்றோர் சு. ஆசைதம்பி, அ. அமுதா மற்றும் சகோதரர்கள் ஆ. மணிராஜ், ஆ. கார்த்திக் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்கு உதவிய ஆய்வியல் நிறைஞர் மாணவ, மாணவிகளுக்கும் என் நெருங்கிய நண்பர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வியல் நிறைஞர் ஆய்வினை பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகளில் மேற்கொள்ள எனக்கு உதவிகள் செய்திட்ட பேராசிரியர் சுப்புரெட்டியார் அறைக்கட்டளை திருமிகு டாக்டர் சு. இராமலிங்கம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டை செம்மையாக தட்டச்சு செய்த செ. தேவி அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஆ. ஜெயாம்பிகா

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகநானூறு
காஞ்சி.	-	காஞ்சிபுராணம்
திரு.	-	திருவாய்மொழி
தேசி.	-	தேசிய பிரபந்தம்
நடு. தலம். அமல.	-	நடு நாட்டுத் தலம் அமலனாதி
நூற்.	-	நூற்பா
நூற். திருப்.	-	108 திருப்பதிகள்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பரி.	-	பரிபாடல்
பா.	-	பாடல்
பெ. திரு. கண்ணி.	-	பெரிய திருமடல் கண்ணி
பெரிய. பூச. புரா.	-	பெரியபுராணம் பூசலார் புராணம்
பெரும்.	-	பெரும்பாணாற்றுப்படை
மணி.	-	மணிமேகலை
மூமுட்சு	-	மூமுட்சுபடி
மேலது.	-	மேற்குறியது
வில்லி.	-	வில்லிபாரதம்
ஸ்ரீ. வச. பூஷ	-	ஸ்ரீவசன பூஷணம்

பொருளடக்கம்

இயல்கள்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1-4
இயல். 1	தல வரலாறு	5-76
இயல். 2	வழிபாட்டு முறைகள்	77-104
இயல். 3	வழக்காறுகள்	105-123
	முடிவுரை	124-125
	துணைநூற்பட்டியல்	126-127
	பின்னணிணைப்பு	
	வினா நிரல்	128
	தகவலாளர் பட்டியல்	129
	நிழற்படங்கள்	130-132

முன்னுரை

காஞ்சிபுரம் மாவட்டம் தொண்டைமண்டலத்திலுள்ள பகுதியாகும். கோயில்கள் நிறைந்த பகுதியாகும். சைவமும் வைணவமும் நிறைந்த ஆலயங்கள் காணப்படுகின்றன. கள ஆய்வு மேற்கொண்டபோது அங்குள்ளநிலப்பகுதிகள், சாலைகள், மக்கள் வாழ்க்கைத் தரம், கல்வி நிலையங்கள், இயற்கை அமைப்பு, தொழில்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், உணவுமுறைகள், நாகரீகம், தொழில்நுட்பம் ஆகியவை பற்றி தெரியவந்தது.

மேலும் காஞ்சிபுரம் அதிகமாகப் புத்தமதம் தொடர்புடைய விகாரங்கள் அடிப்படையில் சான்றுகள் அழிக்கப்பட்டிருந்தன. சிவம் என்று அழைக்கப்படுவது புத்தர் படுக்கை என்பதாகும். அது பின்னர் திரிந்துகாஞ்சிபுரம் என்று மாறியது. புரம் என்பது சிற்றூர், மருதநிலம் தொடர்புடைய ஊரைக் குறிப்பதாகும். இன்று இலக்கியங்களில் படிக்கக் கூடிய காஞ்சி என்றசொல் நிலையாமையைக் குறிப்பதாகும். அன்றைய பல்லவ மன்னர்கள் போரில் வெற்றிகொண்டு இந்நகரை அடைந்து அங்கு இந்து சமயம் தொடர்பான கோயில்களை கட்டினர். புத்தமதத்தின் நிலையாமையை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

நாட்டுப்புறவியல் தகவல் சேகரிப்பில் புத்தசமயம் தொடர்புடைய மறைந்த வழக்குகளே கிடைத்தன. ஆங்காங்கே அருங்காட்சியகம் பகுதிகளில் காஞ்சிபுரம் தொடர்புடைய சான்றுகள் களமும் களப்பணியும் தலைப்பில் எழுதப்பட்டுள்ளன.

சுப்புரெட்டியார் இயற்றிய “தொண்டைநாட்டு வைணவத் திருப்பதிகள்” என்ற நூலை முதன்மை ஆதாரமாகவும், வைணவ தொடர்பான நூல்களையும் சான்றாகக் கொண்டு இவ்வாய்வேடு தொகுக்கப்பட்டுள்ளது. தொண்டைமண்டலம் காஞ்சிபுரம் அத்திவரதர், வரதராசபெருமாள், கச்சிகார்மேகம் ஆகியவற்றால் சிறப்பு அடைகிறது.

அறிஞர் அண்ணா, பச்சையப்ப முதலியார் ஆகியோர்கள் தோன்றிய காஞ்சிபுரம் இன்று ஆன்மிகத் தலமாகும்.

ஆய்வுத்தலைப்பு

"தொண்டைநாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறுகளும்" என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வின் நோக்கம்

தொண்டைநாட்டில் உள்ள வைணவதிருப்பதிகளின் கோவில்கள் தலவரலாறு, வழிபாட்டுமரபுகள், வழக்காறுகளைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச்சிக்கல்

தொண்டைநாட்டில் உள்ள வைணவத் திருப்பதிகள் அனைத்தும் சமஸ்கிருத நெறிப்படுகையிலான வழிபாட்டு முறைகளைக் கொண்டு திகழும் என்பதில் ஐயம் இல்லை. இருந்த போதிலும் இக்கோயில்கள் மரபுவழிபட்ட வழிபாட்டு முறைகள் உள்ளனவா? என்னும் ஆய்வுச் சிக்கலுக்கு விடை தேடும் வகையில் இவ்வாய்வு அமையும்.

கருதுகோள்

சுப்புரெட்டியார் எழுதிய தொண்டைநாட்டுத் திருப்பதிகள் எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு வைணவ கோயில்களின் சிறப்புகளை வெளிக்கொண்டு வருவதே கருதுகோள் ஆகும்.

சான்று மூலங்கள்

தொண்டைநாட்டின் சிறப்புகள் வைணவ திருப்பதிகளின் வழிபாடுகள் ஆகியவைகளே ஆய்வின் சான்று மூலங்கள் ஆகும்.

முதன்மைத்தரவுகள்

சுப்புரெட்டியார் இயற்றிய தொண்டைநாட்டுத் திருப்பதிகள் என்ற நூலும், 108 வைணவ தேசங்கள் என்ற நூலும் இவ்வியலுக்கு முதன்மைத்தரவுகள் ஆகும்.

துணைமைத் தரவுகள்

நாட்டுப்புறவியல் ஆய்வு சு. சக்திவேல் என்ற நூலும், தமிழர் வழிபாட்டு மரபுகள் ஆறு. இராமநாதன் என்ற நூலும், நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள் தே. லூர்து என்ற நூலும் துணைமைத் தரவுகள் ஆகும்.

ஆய்வுக்களம்

தொண்டை நாட்டிலுள்ள காஞ்சிபுரம் மாவட்டம் அதைச் சுற்றியுள்ள வைணவ கோயில்கள் ஆகியவை ஆய்வுக் களமாக அமைந்துள்ளன.

ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொண்டை மண்டல வைணவ திருப்பதிகளையும் அந்த நகரத்தின் வழிபாட்டு மரபுகளையும், வழக்காறுகளையும் உள்ளடக்கியுள்ளது.

1. **தலவரலாறு**
2. **வழிபாட்டுமரபுகள்**
3. **வழக்காறுகள்**

ஆகியவைகளாகும்.

1. தலவரலாறு

தொண்டைமண்டலத்தின் ஒன்றான காஞ்சிபுரம் வைணவத் திருத்தலங்களை அதிகமாகக் கொண்டுள்ளது. முதல் இயலில் 15 கோயில்களின் முழு வரலாற்றையும் அத்தலத்தின் சிறப்பையும்,

காஞ்சியின் வரலாற்றையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

2. வழிபாட்டுமரபுகள்

காஞ்சியில் உள்ள வைணவக் கோயில்களின் வழிபாடுகளையும் காஞ்சியின் தோற்றத்தை எந்தெந்த முறையிலும் எந்தப் பொருளிலும் பூஜைகள் செய்வது என்பதைப் பற்றி இரண்டாவது இயலில் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

3.வழக்காறுகள்

தொண்டைநாட்டின் வழக்காறுகள் நாட்டுப்புறவியலில் எவ்வாறு பொருத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கும் நிலையில் மூன்றாவது இயலில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுமுறை

கள ஆய்வுமுறை வரலாற்று ஆய்வுமுறை ஆகும்.

ஆய்வேட்டின் பயன்

இவ்வாய்வேடு மறைந்துபோன மற்றும் மறந்துபோன வைணவ திருப்பதிகளின் தலவரலாற்றையும் வழிபாட்டு பூஜைகளையும், வழக்காறுகளையும் சமூகத்திற்கு வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வேட்டின் பயனாகும்.

இயல் - 1

தல வரலாறு

களமும் களப்பணியும்

காஞ்சிபுரம் சென்னைக்கு அருகில் உள்ளது. பல்லவ மன்னர்களின் வருகைக்குப் பிறகு சைவம், வைணவம், மேலோங்கி காணப்பட்டது. வைணவக் கோவில்களின் வழிபாடுகள் இராமானுஜர் வருகைக்கு பிறகு பெருகியது. தொண்டை மண்டலத் திருப்பதிகள் என்னும் தலைப்பில் தலைப்பிற்கேற்ப களப்பணியும் மேற்கொண்டபோது காஞ்சிபுரத்தில் 15 கோயில்கள் காணப்படுகின்றன. காஞ்சீவரம் என்ற சொல்லில் சீவரம் என்பது புத்தர்களின் படுக்கை என்ற பொருளைத் தருகிறது. புத்த பீடங்கள் விகாரைகள் அதிகமாகக் காணப்பட்ட பகுதி 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இக்கோவில்கள் அனல்வாதம், புனல்வாதம், ஆகியவற்றிற்குட்பட்டபோது புத்த சிலைகளே பின்னர் வைணவ திருதலமாக உருவம் பெற்றுள்ளன. சீனப்பயணிகளின் வருகையால் புத்தமதம் வணிகத் தொடர்பால் வைணவமாக இந்து ஆரியர்களின் ஆதரவால் மாற்றம் பெற்றது. சுப்புரெட்டியார் அவர்கள் ‘தொண்டை மண்டலத் திருப்பதிகள்’ என்னும் நூலில் வெளியிட்டுள்ள தகவல்கள் நாட்டுப்புற வழக்காறுகள், வழிபாட்டு மரபுகள், தல வரலாறு, வைணவக் கோயில்களின் பூஜைகள், சிறப்புகள், மக்கள் வழிபடும் திருவிழாக்கள் ஆகியவைகள் இவ்வியலில் இடம்பெறுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டம் தொழில்கள், பக்தி, மன்னர்களின் கொடை, மக்களின் நம்பிக்கை காரணமாக ஆலயங்கள் எழுந்தன. பட்டு கைத்தறி நெசவுகளுக்குப் புகழ்பெற்ற மாவட்டமாக திகழ்கிறது. காஞ்சி நகரம் வரலாற்று புகழ் மிக்க நகரமாகவும், பல்லவ மன்னர்களின் மாமல்லபுரம் குடைவரைக் கோயில்கள், சுற்றுலாத் தலங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சோழப் பேரரசில் ஆரம்பத்தில் இருந்த காஞ்சி பகுதி பல்லவ மன்னர்கள் போரில் வென்று இதனைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட போது நூற்றுக்கணக்கான கோயில்களை

உருவாக்கினர். அதில்இடம் பெற்றுள்ளவைகளே வைணவத் திருப்பதிகள் ஆகும். ஆழ்வார்கள் வருகை,பாசுரம் இயற்றுதல் ஆகியவற்றின் காரணமாக நாலயிரத் திவ்விய பிரபந்த இலக்கியங்கள் மூலம் காஞ்சிபுரம் வைணவத்திலும் தொடர்புடைய தெய்வங்களுக்கும் மக்களின் வருகை பரவலானது.

காஞ்சிபுரம் மாவட்ட வரலாறு

ஆங்கிலேய பிரித்தானிய இந்திய அரசினர் 1788 ல் காஞ்சிபுரம் மாவட்டதிற்கு ஒரு மாவட்ட ஆட்சியரை அமைத்து 1859 வரை காஞ்சிபுரம் மாவட்டத்தின் நிர்வாகத் தலைமையிடமாக இருந்தது கருங்குழி. பின்னர் சைதாப்பேட்டைக்கு மாற்றப்பட்டது. 1859 முதல் 1968 வரை சைதாப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டத்தின் நிர்வாகத் தலைமையிடமாக விளங்குகியது. ஜீலை 1, 1968 முதல் காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையிடமாக விளங்கியது. ஜீலை 1, 1977 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தை, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. புதிய காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், வாலாஜாபாத் மற்றும் செய்யூர் என எட்டு வருவாய் வட்டங்களை கொண்டிருந்தது. வைணவத் திருப்பதிகள் வயிலாக ஆலயங்களில் உள்ள இறை வழிபாடுகள், தலபுராணம், கோவிலின் அமைப்பு, திருவுருவின் அமைப்பு, ஆழ்வார் பாசுரங்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுலகில் இம்மை, மறுமை இச்சுழல்களில் இறைவனைப் பின்பற்றி வைணவத்தில் உயரிய உண்மை கொள்கைகளைப் பக்தியின் வாயிலாக அறத்தையும் சேர்த்து வலியுத்துகிறது. திருமால் அவதாரங்களை நிரூபிக்க தமிழ்நாட்டில் ஆங்காங்கு ஆலயங்கள் எழுப்பப்பட்ட அதற்கான வழிபாடுகளின் மூலம் பக்தி, முக்தி, சக்தி ஆகியவற்றின் வெளிப்பாடாகப் பின்பற்றப்படுகிறது.

தற்பொழுதுள்ள காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. ஆவை கீழ்க்காணும் எட்டு வட்டங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. ஆவை, 1. காஞ்சிபுரம், 2.

செங்கற்பட்டு, 3. மதுராந்தகம். 4. திருக்கழுக்குன்றம், 5. செய்யூர், 6. தாம்பரம், 7. உத்திரமேரூர், 8. ஸ்ரீபெரும்புதூர் என்பனவாகும். காஞ்சிபுரத்தில் மொத்தம் நான்கு வருவாய்கோட்டங்கள் உள்ளன. அவை, 1. செங்கற்பட்டு, 2. மதுராந்தகம், 3. தாம்பரம், 4. காஞ்சிபுரம் ஆகியவை ஆகும்.

காஞ்சிபுரம் மாவட்டம் பத்து நகராட்சிகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. அவை பின்வருமாறு 1. செங்கற்பட்டு, 2. மதுராந்தகம், 3. தாம்பரம், 4. காஞ்சிபுரம், 5. ஆலந்தூர், 6. திருக்கழுக்குன்றம், 7. உத்திரமேரூர், 8. செய்யூர், 9. சோளிங்கநல்லூர், 10. ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பத்து நகராட்சிகள் ஆகும். இம்மாவட்டத்தில் பின்வரும் பதின்மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவை, 1. திருக்கழுக்குன்றம், 2. உத்திரமேரூர், 3. மதுராந்தகம், 4. காஞ்சிபுரம், 5. அச்சரப்பாக்கம், 6. குன்றத்தூர், 7. பரங்கிமலை, 8. பல்லவரம், 9. சித்தமூர், 10. காட்டாங்கொளத்தூர், 11. வாலாஜாபாத், 12. திருப்போரூர், 13. திரும்பெரும்தூர் ஆகியன ஆகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன. அவை, 1. செங்கற்பட்டு, 2. ஸ்ரீபெரும்புதூர், 3. சென்னை ஆகியன ஆகும். காஞ்சிபுரம் மாவட்டம் இருபத்துமூன்று பேரூராட்சிகளாப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, 1. திருக்கழுக்குன்றம், 2. ஊத்திரமேரூர், 3. மீனம்பாக்கம், 4. செவிலிமேடு, 5. அச்சரபாக்கம், 6. குன்றத்தூர், 7. செம்பாக்கம், 8. திருநீர்மலை, 9. சிட்லபாக்கம்,10. வாலாஜாபாத், 11. திருப்போருர், 12. இடக்கழிநாடு, 13. ஸ்ரீபெரும்தூர், 14. சோளிங்கநல்லூர், 15. மாதம்பாக்பம், 16. மாங்காடு, 17. மாமல்லபுரம், 18. நந்திவரம், 19. கூடுவாஞ்சேரி, 20. நந்தபாக்கம் ஆகியன ஆகும்.

தொண்டை மண்டல சிறப்புகள்

தொண்டை நாடு என்பது சங்ககால நாடுகளில் ஒன்று. தொண்டைமான் இளந்திரையன் இந்நாடடின் சங்ககால அரசன். பிற்காலச் சோழர்கள் தொண்டை நாட்டை கைப்பற்றிய பிறகு அதற்கு ஐயங்கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் சூட்டப்பட்டது. தொண்டை

மண்டலம் குறித்து தொண்டை மண்டல சதகம் என்ற நூலானது 17ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த படிகாசுப் புலவரால் இயற்றபட்டது.

இவை வடதமிழகத்தையும் தெற்கு ஆந்திரத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். தொண்டை நாடு தமிழகத்தின் வடகிழக்கு பகுதியிலுள்ளே வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளுர் மற்றும் தமிழகத்தின் தலைநகரான சென்னை ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாகும். தொண்டை நாடு நான்காம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆண்ட காஞ்சிபுரத்து பல்லவர்களின் தாய் நாடாகும். வடக்கில் வேங்கடம், தெற்கில் தென்பண்ணை ஆறு, மேற்கில் பவளமலை, கிழக்கில் வங்கக்கடல் ஆகியவை இதன் எல்லைகள். இது அருவாள்நாடு, அருவா-வடதலை நாடு என்று இரு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. அருவா-வடதலை நாட்டை'பாவித்கிரி' என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு 'திரையன்' என்னும் மன்னனும் தொண்டை நாட்டை காஞ்சிபுரத்தைக் தலைநகரமாகக் கொண்டு 'இளந்திரையன்' என்னும் மன்னனும் சங்ககாலத்தில் ஆண்டு வந்தனர் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பிற்காலச் சோழர்கள் தொண்டை மண்டலத்தை கைப்பற்றிய பிறகு அதை ஜயங்கொண்ட சோழர் மண்டலம் என்ற பெயரைக் கொண்டு அழைக்கலாயினர்.

காஞ்சிபுரக் கோயில்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்பது முதுமொழி. கோயில்கள் பண்டைய காலத்தில் ஆடல், பாடல், இசை, சிற்பம், ஓவியம், கவிதை, மருத்துவம் போன்ற பலகலைகளை வளர்க்கும் பல்கலைக் கூடங்களாக விளங்கின. இக்கோயில்களை நமது முன்னோர்கள இரண்டு நிலைகளில் உருவாக்கினர். முதலில் கோயில்களை அமைத்து பின்பு அவற்றின் உள்ளே கடவுள் திருவுருவங்களை நிறுவினர். தெய்வங்களின் திருவுருவச் சிலைகளை கண்டறிந்து அவ்விடங்களில் கோயில்களைக் கட்டினர். பண்டைய காலங்களில் சமுதாய நல நிலையங்களாகக் கோயில்கள் திகழ்ந்தன. அவை, மக்களின் வாழ்க்கையோடு இணைந்து வழிகாட்டும்

நல்லமைப்பாகத் திகழ்ந்தன. கோயில் பற்றிய ஆய்வுகளால் ஒரு நாட்டின் அரசியல், சமயம், கலை, பண்பாடு, சமூகம் முதலியவற்றின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு. இக்கருதுகோளினை அடிப்படையாக் கொண்டு காஞ்சிபுரம் வைணவத் திருப்பதிகள் திருக்கோயிலின் சிறப்பினை இவ்வியல் ஆராய்கிறது.

இந்தியாவில் மொத்தம் பராசக்தியின் 7 மோட்ஷபுரிகள் உள்ளன. அவற்றில் காஞ்சிபுரமும் ஒன்று. மேலும் காஞ்சி பட்டுக்கு மட்டுமல்ல, கலை, கலாச்சாரம் போன்றவற்றலும் சிறந்து விளங்கும் ஊராகும். காஞ்சிபுரம் நமது தமிழகத்தின் பாரம்பரியச் சின்னமாகவும் திகழ்கிறது.

காஞ்சிபுரம் வரலாறு

காஞ்சிபுரம் **"ஆயிரம் கோயில் நகரம்"**என்று அழைக்கப்படும் நகரம் ஆகும். இது பஞ்ச பூதங்களில் ஒன்றாக விளங்கப்படுகிறது.

"திருவாரூரில் பிறக்க முக்தி,

காஞ்சியில் வசிக்க முக்தி,

காசியில் இறக்க முக்தி,

திருவண்ணாமலையை நினைக்க முக்தி"[1]

என்னும் வரிகள் மூலம் காஞ்சியின் சிறப்பை அறிய முடிகிறது. பாலாற்றின் கரையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைந்துள்ள இந்நகரம் கச்சி என்றும் வழங்கி வந்தது. காஞ்சனம் என்ற பெயரில் இருந்து மருவி காஞ்சி ஆனது. காஞ்சனம் என்றால் பொன்னாலான நகரம் என்று பொருள். சங்ககாலத்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்த காஞ்சியை பல்லவர்கள் தங்களின் தலைநகரமாய்க் கொண்டு ஆண்டனர். பல்லவர்கள் காஞ்சியைப் **"பல்லவேந்திரபுரி"** என்றழைத்தனர். இவர்கள் காலத்தில் பனைமலை தலகிரிஸ்வரர் கோயில் மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகியன கட்டப்பட்டன.

பல்லவ அரசு கி.பி 949க்குப் பிறகு வீழ்ச்சி அடைந்து. காஞ்சியை இராட்டிரகூட மன்னன் கைப்பற்றி ஆண்டார் பின்னர். காஞ்சி சோழநாட்டின் ஒரு பகுதியாயிற்று. சோழர் காலத்தில் இதற்குத் “தொண்டைமண்டலம்” என்று பெயரிடப்பட்டது.

சோழர்களின் ஆட்சி 13ஆம் நூற்றாண்டின் மத்தியில் வீழ்ச்சி அடைய காஞ்சியை ஆற்காடு நவாப் தம் வசப்படுத்தினர். பின்பு, விஜயநகரப் பேரரசுடன் கிருஷ்ணதேவராயர் காலத்தில் காஞ்சிபுரம் மாவட்டமும் இணைக்கப்பட்டது. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்த சோழர் காலத்திலும், இவர்களுக்குபின் ஆட்சி புரிந்த விஜயநகர ஆட்சியிலும் புதிய ஆலயங்களை விரிவுப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. விஜயநகரப் பேரரசு முகமதிய மன்னர்களால் வீழ்ந்தபின் பாரதநாடு முழுவதும் இந்துக் கோயில்கள் சூரையாடப்பட்டன.

மூன்றாம் ஸ்ரீரங்கராயர் எனும் அரசப் பிரதிநிதியினால் இம்மாவட்டம் சீர்பெற்றுத் திகழ்ந்தது. இவரிடமிருந்து ஆங்கிலேயர் சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டுள்ள இடத்தை மானியமாகப் பெற்றனர். பிறகு, கோல்கொண்டா சுல்தான்கள் தென்கிழக்கு இந்தியா முழுவதையும் வெற்றி கொண்டதும் காஞ்சிபுரமும் அவர்கள் வசமாயிற்று. 18ஆம் நூற்றாண்டில் ஆதிக்கவெறி கொண்டு ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் மோதிய போர்களால் செங்கற்பட்டும் காஞ்சிபுரமும் பலத்த தாக்குதலுக்கு இலக்காயின. பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியுற்றனர். ஆங்கிலேயர்கள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். ஆங்கிலேயர் ஆட்சியும் 1947இல் முடிவுற்றது. சுதந்திர இந்தியாவில் காஞ்சிபுரம் தனித்துவம் மிக்க தொன்மையான கோயில்நகரமாகத் திகழ்கிறது.

மக்கள் தொகை

2011ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,64,265 மக்கள் காஞ்சிபுரத்தில் வசிக்கின்றார்கள். இவர்களில் 81,990 ஆண்கள் 82,275 பெண்கள். மக்களின் சராசரி கல்வியறிவு 88.35 ஆகும்.

இதில் ஆண்களின் கல்வியறிவு 93.14, பெண்களின் கல்வியறிவு 83.59 ஆகும். மக்கள் தொகையில் 14,464 ஆறு வயதுக்குட்பட்டோர் ஆவர்.

காஞ்சி மாநகரின் பல்வேறு பெயர்கள்

ஒரு காலத்தில் பல்லவர்களின் தலைநகரமாக மிகச் சிறப்புடன் விளங்கிய மாநகரம் காஞ்சிபுரம் ஆகும். பின்னர்,சோழர்கள், விஜயநகரப் பேரரசு, நாயக்கர் ஆகிய மன்னரகள் சிறப்புடன் ஆட்சி புரிந்த நகரம் இதுவாகும்.

காஞ்சி மாநகர் கோயில்களுக்கு சிறப்பு பெற்ற ஊர் ஆகும். இங்கு, பல்லவர், சோழர், விஜயநகரப் பேரரசர்கள் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட பல கோயில்கள் உள்ளன. இந்நகரம் தெற்கே விஷ்ணு காஞ்சி என்றும், வடக்கே சிவகாஞ்சி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவகாஞ்சியில் சிவன் கோயில்கள் அதிகம், விஷ்ணு காஞ்சியில் வைணவ கோயில்கள் அதிகம். இன்றளவில் சிவகாஞ்சியை பெரிய காஞ்சிபுரம் என்று அழைக்கின்றனர். இதே போல் விஷ்ணு காஞ்சியில் சொன்ன வண்ணம் செய்த பெருமாள், அஷ்ட புஜப் பெருமாள், வைகுண்ட பெருமாள், வரதராஜ பெருமாள் கோயில் போன்ற பலக்கோயில்கள் உள்ளன. இதனை சின்ன காஞ்சிபுரம் அல்லது விஷ்ணு காஞ்சி என்பர்.

இலக்கியங்களில் காஞ்சி

காஞ்சி மாநகரம் தென்னிந்தியாவின் மிகவும் பழமையான நகரங்களில் ஒன்றாகும். காஞ்சி நகரம் பற்றிய குறிப்பு சங்க இலக்கிய பாடல்களில் பல இடங்களில் பயின்று வருகின்றனர். சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுக்கு முன் தொன்டைமான் இளந்திரையன் காஞ்சி நகரத்தை ஆணடதை பரிபாடல் கூறுகின்றது. கி.பி 2ஆம் நுற்றாண்டு சங்க இலக்கியமான மணிமேகலை காப்பியத்திலும் இந்நகர் குறிப்பிடப்படுகிறது. கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் 8ஆம் நூற்றாண்டு வரைப் பல்லவர்களின் தலைநகராக விளங்கிய காஞ்சிபுரம், கலை மற்றும் தமிழ், சமஸ்கிருத மொழிகளின் கல்வியில் சிறந்து விளங்கியது.

பல்லவர்கள் ஆட்சிக்கு முன் இப்பகுதி தொண்டை மண்டலம் எனக் குறிப்பிடப்பட்டது.

பல்லவர்களின் ஆட்சி காலத்தில் காஞ்சிபுரம் அதன் தலைநகராகி உச்சப் புகழினை அடைந்தது. கி.மு இரண்டாம் நூற்றாண்டிலேயே பதஞ்சலி முனிவரால் காஞ்சி குறிப்பிடப் பெறுகிறது. **"நகரேஷு காஞ்சி"**- **"நகரங்களுள் காஞ்சி"** எனக் குறிபிட்டுச் சொல்லும் அளவிற்கு பண்டைக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய நகரம் காஞ்சி. பண்டைக் காலத்தில் இந்நகரம் வில் வடிவில், வேகவதி ஆறு எல்லையாய் அமைய, நிர்மாணிக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளன. சீன வரலாறு ஆசிரியர் யுவான் சுவாங் இந்நகரத்திற்கு பயணம் மேற்கொண்டர். அவரது குறிப்பின் படி காஞ்சி நகரம் ஆறு மைல் சுற்றளவிற்கு பரந்து விரிந்து இருந்தது எனவும், மக்கள் கல்வி, வீரத்தில் சிறந்து விளங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் காஞ்சி நகரத்திற்கு கௌதம புத்தர் வருகை புரிந்தனர் என்றும் கூறியுள்ளார்.

வேகவதி ஆற்றின் கரையில், வடநாடும் தென்னாடும் வணங்கிப் போற்றும் தொண்டைமான் இளந்திரையன் என்ற குறுநில மன்னனால் ஆளப்பட்ட பழைய நகரம் காஞ்சி மாநகரமாகும். இக்காஞ்சி மாநகரத்தை மேலும் செப்பம் செய்து கடிநகராக்கினான், கரிகால் பெருவளத்தான் எனும் சோழப் பேரரசன் சைவம், வைணவம்,சாக்கியம் போன்ற சமயங்கள் காஞ்சி மாநகரைக் கண்டிருக்கின்றன. தெய்வநலம் மணக்கும் திருநகரம் காஞ்சி மாநகரமாகும். திரும்பிய பக்கமெல்லாம் கோயில்களும் கோட்டங்களும் நிறைந்துள்ளன இந்நகரில் கச்சி ஏகம்பனே! என்றும் வணங்கி நிற்போர் பலர். புத்த சமயத்தைச் சார்ந்த அறவாண அடிகள் காஞ்சியில் வாழ்ந்தார். அறவாண அடிகள் தங்கியிருந்த அவ்விடம் இன்று **"அறவணஞ்சேரி"** என்றும் **"அறப்பணஞ்சேரி"** என்றும் வழங்கப்படுகிறது.

நாளாந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராக விளங்கியவர் காஞ்சியில் பிறந்த **"தருமபாலர்"** என்னும் தத்துவ ஞானி ஆவார்.

திருப்பருத்திக்குன்றம் என்னும் இடத்தில் சமணர்கள் நிறைந்து வாழ்ந்த காரணத்தால் அவ்வூர் **“சமணக்காஞ்சி”**என்று வழங்கப்படுகிறது.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்த பல்லவர்களின் காலத்தில் கலைமகளும், திருமகளும் ஒருங்கே கலந்து உறைந்திருந்த காரணத்தால் கல்விக் கரையிலாக காஞ்சி மாநகர் என்று அப்பர் சுவாமிகளால் புகழ்பெற்றது. முக்தி தரும் தலங்கள் ஏழனுள் முக்கியமானதும், புராண வரலாற்று பெருமைகள் நிறைந்ததுமான காஞ்சிபுரம் ஒரு கோயில் நகரமாகும்.

சிற்பக் கலையில் சிறந்து, கலை நுணுக்கத்தில் உயர்ந்து, வான்முட்டி நிற்கும் கோபுரங்கள் இங்கு ஏராளம் உள்ளன. சிற்பங்களைச் செதுக்கி, அழகு படுத்தப்பட்ட உயர்ந்த தூண்கள் அதன் எழிலை மேலும் கூட்டுகின்றன. எங்கு நோக்கினும் இறைவன் திருமேனிகள் மக்கள் எண்ணத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இம்மாநகர் ஆழ்வார்களும், நாயன்மார்களும், சீன நாட்டின் நல்லறிஞர்களும் போற்றி புகழ்ந்த பெருமை உடையது.

மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் மணிமேகலை துறவு பூண்டு இங்கு அறங்கள் பல செய்ததாகக் கூறப்படுகிறது. மணிமேகலையில் முப்பது காதைகள் கச்சி மாநகர் புக்க காதையில் அறவண அடிகள் மணிமேகலையிடம் காஞ்சி மாநகரம் அழகிழந்து போயுள்ளது. உயிர்களெல்லாம் மடிகின்றன. தவம் செய்வோருக்கு இந்நகரில் இல்லாது போனமையால் அவர்கள் இந்நகர் வந்துள்ளனர். ஆரிய உயிர்க்கு மருந்தாயிருப்பவளே! நீ அந்நாட்டில் மழை தரும் முகில் போலத் தோன்றி, அங்குள்ள உயிர்களைக் காப்பாற்றுவது உன் கடமை எனக் கூறினார். மணிமேகலை காஞ்சி மாநகர் அடைந்தாள். மணிமேகலை மாசாத்துவானை வணங்கித் தெய்வத் தன்மை பொருந்திய அமுது சுரபியைத் தன் கையிலே ஏந்தினாள். வானுலகமே இந்நிலவுலகில் வந்து இருந்தது போல வளம் சிறந்திருந்த அழகிய கச்சி மாநகரம் வறுமையால் அழகிழந்து

புல்லென்று ஆகிவிட்டத் தன் கண்டு மணிமேகலை மனம் கசிந்தாள். காஞ்சிநகரின் கோட்டை மதிலை வலம் வந்து பின் காஞ்சியின் நடுநகர் அடைந்தாள். பின் மன்னன் மணிமேகலை வரவிருந்த நகர வறுமையை எடுத்துரைத்தான். மணிமேகலை அனைவரும் சோறளித்தாள்,

"அங்கையின் ஏந்திய அமுத சுரபியை
வைத்து நின்று எல்லா உயிரும் வருக என
காணார், கேளார்,கால்துடமானோர்
பேணா மாக்கள், பேசார், பிணித்தோர்
அருந்தியோர்க் கெல்லாம் ஆருயிர் மருந்தாய்"[2]

மழை பெய்து உலகிற்கு வளம் தந்தது போல மணிமேகலை உணவு கொடுத்து பசிப்பிணி தீர்த்தாள். காஞ்சி நகரில் முக்காலத்தை அறிவிக்கும் கந்திற்பாவைத் தெய்வமும் துணையிளங்கிள்ளி என்பவனால் கட்டப்பட்டுள்ள புத்தலாயமும் தருமதனமும் உள்ளன. மேலும் மணிமேகலை அறவண அடிகள் பால் அறங்கேட்டுப் பல நாள் தங்கி மரித்த இடமும் இதுவே எனவம் கூறுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை

பத்துப்பாட்டுள் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சி மாநகரம் தாமரை மொட்டு போன்று அழகாயிருந்தது என்றும் அகன்ற தெருக்களை உடையது என்றும் புகழ்கிறது.

"நீல்நிற உருவின் நெடியோன கொப்பூழ்
நூன்முக உருவற் பயந்த பல்லிதழ்
தாமரைப் பொருட்டிற் காண்வரத் தோன்றிச்"[3]

பருமையாலும் இனிமையாலும் புகழ்பெறும் பலாப்பழமும் இதை விளைவிக்கும், பலாமரமும் போல் பெருமை கொண்டது காஞ்சி.

கலிங்கத்துப்பரணி

காஞ்சியில் நால்வகை படையோடும் புகழோடும் வீற்று இருந்த குலோத்துங்கனைப் பாடுகின்றது கலிங்கத்துப்பரணி.

தண்டியலங்காரம்

தண்டியலங்காரம் காஞ்சியை மயிலுக்கு ஒப்பிடுகிறது, இரு புறங்களிலும் ஏரிகள், இவை சிறகு போல் விரித்திருக்கின்றன, நடுவில் அமைத்த மதில் மயிலின வயிறு போல் இருந்து ஊர் முழுவதும் நிறைந்து விளங்கிய சோலைகள் மயிலின் விரிந்த தோகை அத்தியூர் வாயாக விளங்கியதாம்.

பெரியபுராணம்

காஞ்சியில் நேரில்கண்ட சேக்கிழார் பெரியபுராணத்துள் திருக்கமாக்கோட்டம் பற்றிய அறுபது பாக்களில் விவரிக்கிறார். காஞ்சியின் சிறப்புகளையும், அன்னை இறைவரை வழிபட்ட வரலாற்றையும், திருகாமக்கோட்டத்திலிருந்து இறைவன் தந்த இருநாழி நெல்லையும் கொண்டு அன்னை முப்பத்திரண்டு அறங்களைச் செய்து வருகிறாள் என்பதையும் திருகுறிப்புத்தொண்டர் தம் வரலாற்றில் விரிவாகக் கூறுகிறார்.

பலரும் போற்றும் காஞ்சி

காளிதகசன் காஞ்சி நகரை நகரேஷீ காஞ்சி என்கிறார். குாசி முதலான நன்னகரெல்லாம் காஞ்சிக்கு ஒவ்வா என்று வேதாந்த வேதாந்த தேசிகர் புகழ்கின்றார்.

"எழுந்திரை நதித்தவலை நனைந்த விங்கள்
இளநிலாத் திகழ்கின்ற வளர் சடையனே
கொழும்பவளச் செங்கணிவாய்க் காமகோட்டி
கொங்கையிணை அமர்பொழுது கோலம் கொண்ட
தழும்புவளே, வரைமார்பில் வெண்ணால்உண்டே
சாந்தமொடு சந்தனத்தின் இளறு தாங்கி
அழுந்திய செந்திருவின் வெண்ணீற்றானே
அவனாகில் அதிகை வீரட்டனாமே"[4]

என்கிறார் திருநாவுக்கரசர்.

காஞ்சி புராணத்தில் காஞ்சி மாநகர்

காஞ்சிபுராணத்தில் காஞ்சி மாநகர் காஞ்சி புவனசாரம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்திவாசம், சிவபுரம், இலயசித்து, சகலசித்து, கன்னி காப்பு, கலிசத்தி, ஆதீபீடம், என்று பன்னிரெண்டுப் பெயர்களால் குறிப்பிடுகின்றது.

> **"புவனசாரம்மும்மூர்த்திவாசம், விண்டுபுரம்: காஞ்சி:**
> **தவமார் கலிசித்தி: இலயசித்து: சகலசித்து: தபோமயஊர்**
> **கவினார் பிரமபுரம்: ஆதீபீடம்: கன்னிகாப்பு: வினைப்**
> **பவநோய் அறுக்கும் சிவபுரமாய் பகர் பன்னரெண்டு**
> **திருப்பெயர்த்தால்"**[5]

என்கிறது காஞ்சிபுராணம்.

காஞ்சி

கா- பரப்பிரம்மம், அஞ்சி - அஞ்சித்தல்- அர்சித்தல் அதாவது பரப்பிரம்மமாகிய சிவபரம பொருள் அர்ச்சிக்கப்படுவதால் காஞ்சி எனப்பட்டது. கா- பிரம்மதேவன் சோமயாகம் செய்து சிவபெருமானை வழிபட்டதால் காஞ்சி எனப்பட்டது. இவ்வாறு இருவகையாகவும் பொருள் கொள்வர்.

முப்புவனசாரம்

முன்று புவனங்களின் பிழிவாக (சாரமாக) இந்நகரம் விளங்குகிறது.

கச்சிக் கார்மேனி அருளாளர் தல வரலாறு

முத்தித் தரும் ஏழு நகர்களுள் 'காஞ்சி' என்று வழங்கப் பெறும் காஞ்சிபுரம் முக்கியமானது.திருக்கோவில்கள் நிறைந்த ஊர் வரலாற்று புகழ் பெற்றது. இந்த ஊரைத் தலைநகராகக் கொண்டே பல்லவர்கள் பல்லாண்டுகள் ஆட்சி புரிந்து வந்தனர்.

'அருளாளர் கச்சி' என்று அன்பாக ஆண்டவனின் பெயரைச் சேர்ந்தே தேசிகர் புகழ்வதைப் போலவே, ஏழை ஏதலர்களின் தூய மனத்தில் 'கஞ்சி

வரதப்பன்' நிலைத்து வாழ்கின்றான், வரதப்பனுடன் ஊரும் சேர்ந்து வாழ்கின்றது. 'கஞ்சி வரதப்பா!' என்றால், எங்கு வருதப்பா?' என்று கேட்கும் சொற்றொடர்கள் நாம் கேட்டுப் பழகியவை அன்றோ? காசி நகர் சந்துகளுக்குப் பெயர்போனது! காஞ்சியோ அகன்ற தெருக்களைக் கொண்டது அக்காலத்தில் நகர் அமைப்புப் பேரறிஞர் மிக அழகாகத் திட்டமிட்டு அமைத்துள்ளார். மாதவச் சிவஞான யோகிகள் இந்த ஊரின் அழகினைச் சமத்காரமாகப் போற்றியுள்ளார்.

"கச்சிமா நகர் ஓர் தட்டும்
கடவுளாட உலகோல் தட்டும்
வைச்சுமுன் அயனார் தூக்க
மற்றது மீது செல்ல
நிச்சயம் முறுகிக் தாழ்த்து
நிலமிசை விழும் இவ் வூரை
இச்சகத் தூர்களோடு"[6]

எண்ணுதல் மடமைப் பாற்றே.

வரதராசன் திருக்கோவில் கொண்டு சேவை சாதித்து வருகின்றான் நம்முடைய காஞ்சி யாத்திரையில் முதலில் அவனைக் காண விழைகின்றோம். காஞ்சிப் பேருந்து நிலையத்திலிருந்து அவன் திருக்கோயிலை நோக்கிச் செல்லும் நகரப் பேருந்து ஒன்றில் ஏறி அவனது திருக்கோயிலை அடைகின்றோம்.

எம்பெருமான் நாராயணனின் திருவருளால் நான்முகன் பதினான்கு உலகங்களுக்கும் தலைவரானான். பிறந்த குலச்செருக்கு, அடைந்த கல்விச் செருக்கு, பெற்ற அதிகாரச் செருக்கு முதலியவை அவன் ஞானக் கண்களை மறைத்தன. இங்ஙனம் அகந்தைத் திரைகளால் கவரப்பெற்ற நான்முகன் கறந்த பாலில் மறைந்து நிற்கும் நெய்யே போல் எல்லாப் பொருள்களிலும் உள்ளே உறைந்து நிற்கும் எம்பெருமானைத் தனது திறமையினால், செய்யக் கூடிய யோகத்தினால், காண முயன்றான்.

ஆனால், அங்ஙனம் மழுங்கிவிட்டது. இங்ஙனம் தடைசெய்த தன் கர்மம் கழிவதற்கு ஒரே வழி ஆயிரம் அசுவமேதயாகங்கள் புரிவதே என்பதை அசாரீயால் அறிந்தான். சத்திய விரதம் (மெய்விரதம்) என்னும் திருத்தலத்தில் செய்யப்பெறும் ஓர் அசுவமேத யாகம் ஆயிரம் அசுவமேத யாகங்களுக்கு நிகரானது என்பதையும் தெரிந்து கொண்டான்.

"திருமகள்மண் மகள்நீளை முதலா வெல்லாத்
தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கத்
தருமமிகு மூன்றுமுதல் அனைத்தும் தோன்றத்
தன்னனைய சூரியர்தன் அடிக்கீழ் வாழ
அருமறைசேர் அளவில்லா அவனி யின்கண்
அரவணைமேல் வீற்றிருப்பால் அனைத்தும் காக்கும்
மணியைக் கரிகிரிமேல் கண்டேன் என்றன்
கடுவினைகள் அனைத்தும்நான் கண்டிலேனே"[7]

அத்திகிரியை அடைந்த நாம் மேலும் ஆறுபடிகளை ஏறி கடந்து அத்திகரி அருளாளனின் கருவறைக்கு வருகின்றோம் நீண்டு உயர்ந்து நின்ற திருக்கோலத்தில் தங்கக் கிரீடமும் தங்கக் கவசமும் அணிந்த நிலையில் பக்தர்கட்குச் சேவை சாதிப்பதை காண்கின்றோம். எழில் வாய்ந்த இந்த வரதராசர் அருள் கொழிக்கும் திருமுக விலாசம் உடையவர். இவருடைய அழகில் சொக்கி நிற்கும் **வேதாந்த தேசிகர்,**

"ஐயுறவும் ஆர்இருளும்

அலவழியும் அடைந்தவர்க்கு

மெய்யருள்செய் திடுந்திருமால்

வேழமலை மேயனே"[8]

(ஐயுறவு-சந்தேகம் ஆர்இருள்-பூர்ண் அஞ்ஞானம் அல்வழி-தகாதவழி)

என்று மெய்யுருகி நிற்பதைக் காண்கின்றோம். திருகத்தியூரான் மீது ‘அருந்த பஞ்சகம்’, ‘மெய்விரதமான்மியம்’, ‘திருச்சின்ன மாலை’, ‘அடைக்கலப் பத்து’ ஆகிய சிறிய பிரபந்தங்களையும் அருளிச் செய்துள்ளார் இவர். இதற்கு அத்திகிரி அருள்முகிலைப் பூதத்தாழ்வார்.

மூலவரை வணங்கிய நம்முடைய கவனம் உற்சவர்மீது செல்லுகின்றது. இவர் பேரழகு வாய்ந்தவர். இவருடைய முகத்திலுள்ள வடுக்கள் யாவும் போரில் ஏற்பட்டதாகக் கூறுவர். சற்றுப் பின்சாய்ந்து மிடுக்காகக் காட்சி அளிக்கும் இவரைப் பல கோலங்களில் அணி செய்துப் பார்க்க விரும்புகின்றவர்கள் உற்சவ காலங்களில் சென்று சேவிக்க வேண்டும். வாகனங்களில் உலாவரும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும். முகம்மதியப் படையெடுப்பின் காரணமாக இந்த மூர்த்தி கி.பி. 1690 இல் திருக்கோயிலினின்றும் எடுத்துச் செல்லப்பெற்று உடையார் பாளையத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பெற்றது என்றும், மீண்டும் கி.பி. 1710 இல் தோடர்மால் என்பவர் மூலம்திருக்கோயிலுக்குக் கொண்டுவரப் பெற்றது என்றும் அறிகின்றோம். இதனை நினைவுபடுத்தும் விழா ஒன்று இன்று நடைபெற்று வருகின்றது.

திருக்கோயிலை விட்டு வெளியே வருமுன் திருக்கோயிலின் திருமுற்றத்திலுள்ள நாலுக்கால் மண்டபத்தில் சற்று அமர்ந்து வரதராசரின் பெருமையைச் சிந்திக்கின்றோம். சுவாமி தேசிகனின் திருப்பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

சொல்வண்ணம் செய்த பெருமாள் தலவரலாறு

எம்பெருமானுக்குப் பரமபதம் திருப்பாற்கடல், திருவரங்கம், திருமலை, காஞ்சி முதலான உகத்தருளின இடங்களில் இருப்பதைவிட மெய்யடியாருடைய இதய கமலத்தில் வாழ்வதே பெருவிருப்பாக இருக்கும் என்பதும், செவ்வியறிந்து அன்பர்களுடைய நெஞ்சில் குடியேறுவதற்காகவே மற்ற திவ்ய தேசங்களில் எம்பெருமான் வந்து தங்குகின்றான் என்பதும் வைணவர்களின் நம்பிக்கையாக இருந்துவரும் கருத்துகளாகும். அதாவது எம்பெருமான் பரமபுருஷர்தனமாகக் கொள்ளும் பக்தருடைய இதயவாசத்தை அடைவதற்குத் திவ்விய தேச வாசத்தை

ஒரு வழியாகக்(உபாயமாகக்) கொள்ளுகின்றான் என்பதும் தாற்பரியம். இதனையே பிள்ளை உலக ஆசிரியர்,

"அங்குத்தை வாசம் சாதனம் ;

இங்குத்தை வாசம் சாத்தியம்" 9

(சாதனம்-பயனை அடைவதற்குத் துணையாக இருப்பது; சாத்தியம்-அதனால் அடையும் பயன்)

என்று அருளிச் செய்துள்ளார். 'அங்குத்தை' என்றது அவ்விடத்தில் என்றபடி. அஃது ஈண்டுத் திவ்விய தேசங்களைக் குறிக்கின்றது. இங்குத்தை' என்பது இவ்விடம். இது, இங்கு ஞானியருடைய திருவுள்ளங்களைக் குறிக்கின்றது. இங்ஙனம் நம் சிந்தையில் சில தத்துவக் கருத்துகள் குமிழியிட்ட வண்ணம் வரதராசர் சந்ததியிலிருந்து பேருந்தில் வந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் பூதத்தாழ்வாரின்,

"நாகத் தணைக் குடந்தை வெஃகாத் திருஎவ்வுள்

நாகத்தணை யரங்கம் பேரன்பில்-நாகத்(து)

அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்

அணைப்பார் கருத்தன் ஆவான்" 10

திருவெஃகா மிகப்பழமையான திருக்கோயில், பெரும்பாணாற்றுப் படையில் இத்திருக்கோயில் பற்றிய குறிப்பு காணப்பெறுகிறது. இத்திருக்கோயில் எம்பெருமானைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்ற ஐந்து ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

கணிகண்ணன் பொருட்டுத் திருமழிசையார் சொன்ன வண்ணம் செய்தப் பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்ற பேரவா எவர் மனத்திலும் எழுதல் இயல்பேயன்றோ / பெருமாள் அன்பர்களின் தமிழுக்கு வசமாகிப் பின்சென்ற வரலாறு தமிழகத்தின் இதயத்தையே கொள்ளை கொண்ட வியப்பை எண்ணி உள்ளம் பூரிக்கின்றோம். இந்த வரலாறு சிவநேசச் செல்வாரன குமரகுருபரரின்

வாக்கிலும் இடம் பெற்றுப் பசுமை மாறாத தன்மை எய்தியதையும் சிந்திக்கின்றோம்.

பக்தரின் வேண்டுகோளுக்கிரங்கி ‘உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமானும்’ உடனே படுக்கையைச் சுருட்டிக் கொண்டு பெரிய பிராட்டியாருடன் ஆழ்வாரைப் பின் தொடர்ந்து பயணமானாராம். முன்னே சீடன், பின்னே குருநாதர் இறுதியாகப் பெருமாள் இப்படி இவர்கள் மூவரும் போவதைக் கண்டு பக்த கோடிகளும் சாதி சனங்களும் இவர்களைத் தொடர்ந்து சென்றனர்.

இராமனைப் பிரிந்த அயோத்தி போலாகிவிட்டது. காஞ்சி மாநகரம் ஸ்ரீ இதனைக் கண்ட பல்லவவேந்தன் தன் மதியீனத்திற்குக் கழிவிரக்கம் கொண்டு கணிகண்ணனைத் தேடி சென்று நகர் திரும்புமாறு வேண்டினான். கணிகண்ணனும் ஆழ்வாரும் பெருமாளை நோக்கி,

“கணிகண்ணன் போக்கொழிந்தான் ; கதருபூங் கச்சி
மணிவண்ணா! நீகிடக்க வேண்டும் ;- துணிவுடைய
செந்தாப் புலவனும் செலவொழிந்தேன்; நீயும்உன்தன்
பைந்தநாகப் பாய்படுத்துக் கொள்”[11]

என்று முன்பு பாடிய பாசுரத்தையே மாற்றிப் பாடினார். எம்பெருமானும்,பக்த கோடிகளும், பிறகு ஊர் திரும்பினர். பொலிவிழந்த நகரமும் முன்போல் ‘நிறைந்தசீர் நீள்கச்சி’ யாகப் பொலிவுற்றது. தாம் சொன்னவாறு செய்த பெருமாள்’ என்று புதிய திருநாமம் சூட்டினார். இந்த வரலாறு ‘குரு பரம்பராப் பிரபாவம்’ என்ற நூலில் உள்ளது. இந்த வரலாற்றைச் சிந்தித்த வண்ணம் பேருந்தை விட்டு இறங்கிக் திருக்கோயிலை நோக்கி வருகின்றோம்.

மே மாதத்தில் காலைக் கதிரவன் கனன்று எழுகின்றான். இக்கதிரவனின் தோற்றம் முதல் நாள் மாமல்லபுரம், திருவிடஎந்தை முதலான இடங்கட்குச் சென்றபோது சுடு வெயிலில் துன்பப் பட்டதை நினைவிற்குக் உணர்கின்றது. இந்த நினைவு நம்மாழ்வாரின் பாசுரத்தை நினைக்கத் தூண்டுகின்றது.

"நானிலம் வாய்க் கொண்டு நல்நீர்

அறமென்று கோதுகொண்ட

வேனில்அம் செல்வன் சுவைத்துஉமிழ்

பாலைகடந்த பொன்னேஹீ

கால் நிலம் தோயந்து, விண்ணோர்தொழும்

கண்ணன் வெஃகா உது அம்பூந்

தேன் இளஞ் சோலைஅப் பாலது

எப்பாலைக்கும் சேமத்ததே".[11]

என்பது ஆழ்வார் பாசுரம். 'நகர் காட்டுதல்' என்பது இப்பாசுரத்தின் துறை. தலைவன் தலைவியை உடன் கொண்டு இடைவெளியிலுள்ள பாலை நிலத்தைக் கடந்து தன் ஊருக்கு ஏகுகின்றான். அப்பொழுது அவளுக்கு வழிநடை இளைப்புத் துன்பம் தோன்றாதிருக்கும் பொருட்டு அவளை நோக்கி அதோ தெரிகின்றதே நகர், அதுதான் நாம் அடைய வேண்டிய இடம் என்று கூறுதல் இத்துறையின் இலக்கணம்.

நான்முகன் எம்பெருமானைச் சேவிப்பதற்காகக் காஞ்சியில் அசுவமேத யாகம் தொடங்கினான். மனைவி இல்லாமல் யாகம் செய்யக் கூடாது என்ற சாத்திர விதியை அறிந்த நான்முகன் தன் துணைவியை அழைத்து வருமாறு தன் உத்தம புத்திரனான வசிட்டனை அனுப்பினான்.

அங்ஙனமே வசிட்டன் தவம் புரியும் நாமகளை நாடி அவளை வருமாறு வேண்ட, அவள் ஊடல் நீங்காததால் வர மறுத்துவிட்டாள். நான்முகன் சாவித்திரி முதலிய மற்ற மனைவியரை வைத்துக்கொண்டு யாகத்தைத் தொடங்கினான். யாகத்தில் தேவர்கள் மரியாதை செய்யப் பெறுவதைக்கண்ட அசுரர்கள் சினமுற்று இந்த யாகத்தைக் கலைக்க எண்ணினர். அவர்கள் தவம் புரியும் சரசுவதி தேவியிடம் சென்று கலகம் மூட்டினர். அவளும் கடுஞ்சினம் கொண்டு சரசுவதி நதிக்குத் தென் திசையில் 'வேகவதி' என்னும் வேறொரு நதியாகப் பெருகி நான்முகனின் யாகசாலையை அழிக்க முற்பட்டாள்.

இந்நிலையில் பக்தர்களை கைவிடாத எம்பெருமான் நான்முகன்மீது கருணை கொண்டு அந்த வெள்ளத்தின் நடுவில் பாம்பணையோடு தானும் ஓர் அணையாகக் குறுக்கே பள்ளிகொண்டான். இதனை,

“அன்று நயந்த அயமேத மாவேள்வி

பொன்ற உரை அணங்கு பூம்புனலாய்-கன்றிவர”[13]

திருவட்டபுயகரத்து எம்மான் தலவரலாறு

வைணவ தத்துவப்படி எம்பெருமானுக்கு உருவம் உண்டு. அது திவ்விய மங்கள விக்கிரகம் என்று வழங்கபெறும். இத்திருமேனியின் அவயவசோலையுடன் அவ்வவயவங்களில் அணியப்பெற்றுள்ள திவ்விய ஆபரணங்களும் திவ்விய ஆயுதங்களும் சேர்ந்து அதன் அழகினைப் பன்மடங்கு உயர்த்துகின்றன.

இந்தத் திருமேனியின் அழகு அடியார்களின் மனத்தைக் கவர்ந்து பிச்சேற்றி அவர்களைப் படுத்தும்பாடு சொல்லும் தரமன்று. ஆழ்வார்கள் ஞான நிலையிலிருந்து தரமான தன்மையிலும் பிரேம நிலையில் பெண்தன்மையை அடைந்து பெண் பேச்சாகப் பேசும் நிலையிலும் அருளியுள்ள பாசுரங்களிலிருந்து இதனை நன்கு அறியலாம்.

எம்பெருமானின் திருவடிகளில் அணியப்பெறும் நூபுரம் முதல் திருமுடியில் அணியப்பெறும் திருவபிடேகம் வரையிலும் உள்ள ஆபரணங்கள் எண்ணிறந்தவை. நாம் உலகில் காணும் ஆபரணங்கள் எண்ணிறந்தவை.

நாம் உலகில் காணும் ஆபரணங்களுக்குள்ள தோற்றம், அழிவு போன்ற குற்றங்களும், அவயங்களுக்குப் பொருந்தாத தன்மையும் போன்று இத்திவ்வியாபரணங்கட்கு இல்லை. ஆயினும், உலகிலுள்ள மற்ற ஆபரணங்கட்கு இல்லாத மென்மை, அழகு, ஒளி முதலியன இவ்வாபரணங்களுக்கு உண்டு. இதை தவிர, பரமபதத்திலுள்ள நித்திய சூரிகளே எம்பெருமானின் விருப்பத்திற்கேற்பப் பிரகிருதி சம்பந்தமே இல்லாத ஒவ்வோர் ஆபரண வடிவத்தை மேற்கொண்டு அவனுடைய திவ்விய அவயங்களில் அமைந்து மேற்கொண்டு அவனை உவப்பிக்கின்றனர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. இந்த

முறையைப் பற்றியே பகவானுடைய ஆபரணங்களுக்குத் ''திவ்வியபரண ஆழ்வார்கள்'' என்னும் திருநாமமும் வழங்கிவருகின்றது.

எம்பெருமானுடைய திவ்வியாயுதங்களும் எண்ணிறந்தவை. எம்பெருமானுக்கு எண்ணிறந்த கல்யாண குணங்ககளிருப்பினும் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேசு ஆகிய ஆறுகுணங்கள் மட்டிலுமே சிறப்பாய்க் கூறப்பெறுகின்றன. அங்ஙனமே, ஆயுதங்கள் பலவாயினும், சங்க, சக்கரம், கதை, வாள், வில் ஆகிய ஐந்து ஆயுதங்கள் மட்டிலுமே சிறப்பாய்ப் புகலப் பெறுகின்றன. எம்பெருமானை வெறுத்து நிற்கும் பிரதிகூலருக்கு இவை ஆயுதங்களாகத் தோன்றும். அவனை விரும்பி நிற்கும் அனுகூலருக்கே அவை அழகிய ஆபரணங்களாகக் காட்சி அளிக்கும். அதனாற்றான் ஆழ்வார்.

"கூர்ஆர் ஆழி வெண்சங்
கேந்திக் கொடியேன்பால்
வாராய், ஒருநான் மண்ணும்
விண்ணும் மகிழவே"[14]

(கூர்ஆர்.கூர்மை பொருந்திய)

என்று இறைஞ்சுவதைத் காண்கிறோம். நித்திய சூரிகளே ''திவ்வியாயுதாழ்வார்கள்'' எனப் பெயர் பெற்றுள்ளனர்.அவை எம்பெருமானுடைய ஆயுதங்கள் என்னும் நிலைக்கேற்ப ஞான சக்தி முதலிய குணங்களையும் பெற்றுள்ளன.

நாம் இத்தலத்து எம்பெருமானைச் சேவிக்கச் சென்றபொழுது 'பகல்கத்து-இராப்பத்து' உற்சவம் நடைபெற்ற காலமாக இருந்தது. முதலில் மகாமண்டபத்தில் எழுந்தருளியிருந்த ஆழ்வார்களைச் சேவித்து விட்டுக் கருவறையை நோக்கி விரைகின்றோம். எம்பெருமான் நல்ல முறையில் அலங்கரிக்கப் பெற்றிருந்தான். இயற்கை எழில் கொண்ட திருமேனி ஆடை அணிகளின் சேர்க்கையால் பேரழகுடன் பொலிந்தது. நம்மை மறந்து மூர்த்தியின் என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோல அழகில் நம்மையே பறிகொடுக்கின்றோம்.

நாமும் பரகால நாயகியின் நிலையிலிருந்துகொண்டு எம்பெருமானுடைய திருமேனியின்அழகில் ஈடுப்பட்டு நிற்கின்றோம். நாம் சிந்தனை உலகில் சஞ்சரித்த வண்ணம் இருக்கின்றோம்.

இங்ஙனம் சிந்திக்கின்றோம் திருவிட எந்தையைச் சேவிக்க வந்தபொழுது முகங்காட்டாமல் ஆழ்வார் நாயகியைத் துடிக்கவிட்ட நிலையை எண்ணுகின்றோம். அவள் பட்டபாடுகளைத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் இந்தத் திருப்பதியில் ஆழ்வார் நாயகிக்கும் பரம போக்கியமாகச் சேவை சாதித்த நிலையையும் சிந்திக்கின்றோம் பரகாலநாயகி உறக்கம் வராமல் எம்பெருமானை நினைத்த வண்ணம் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கின்றான். அவள் ஊனக்கண் முன்னே.

“மின்இலங்கு திருவுருவும், பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், பாயும்,
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி”[15]

(கரி-குவரயாபீடம் என்ற யானை)

நிற்கும் எம்பெருமானை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அறிந்துகொள்ளாமல் இருக்கவும் மனம் வரவில்லை. சொந்த அறிவு அவளது ஆராய்சிசிக்குத் துணை செய்யவில்லை. யார் என்ற வினவவும் வாய் செயற்படவில்லை. அவர் திருமுகத்தை நேரே பார்த்துப் பேச முடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் முகம் நோக்கி வாய் எழும்ப முடியாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது அவளுக்கு.

‘இவர் நம் தலைவராவே இருத்தல் கூடும்’ என்று நெஞ்சிலே ஓர் எண்ணமும் தோன்றினமையால் வினவமுடியாத நாணம் இவளை ஆட்கொண்டு விடுகின்றது. இன்னாரெனத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமோ அதிகரித்துவிடுகின்றது. இந்நிலையில் அருகிலிருக்கும் வேறொருவரை நோக்கி ‘இப்பெரியார் யார்? என்று வினவுகின்றாள். அதற்கு எம்பெருமானே ‘நான் அட்டபுயகரத்தேன்’ என்று மறுமொழி கூறுகின்றன்.

எம்பெருமானே வினாடிக்கு வினாடி தன் திருக்கோலத்தை மாற்றி மாற்றிக் காட்சி அருள்கின்றான். அதனால் இவளுடைய வினாவும் மாறி மாறித் தொடுக்கப பெறுகின்றது. எல்லா வினாக்கட்கும் எம்பெருமானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்றே விடைதருகின்றான்.

படுக்கையறையில் இங்ஙனம் பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பது தாய்மார் தோழிமார் செவியில் படுகின்றது. உடனே அவர்கள் பரகால நாயகியின் பள்ளியறைக்கு விரைந்து வந்து "நங்காய், ஏதாவது மன மயக்க ஏற்பட்டதா? இவை என்ன பேச்சுக்கள்?" என்று வினவிகின்றனர். ஒன்றும் மனமயக்கம் இல்லம். ஒரு பேரருளாளரைச் சேவிக்கப் பெற்றேன் 'இவர் யார்?' என்று வினவினேன். அட்டபுயகரத்து எம்மான் 'நான் தான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி தருகின்றான்.

இதனை நீங்களே காணுங்கள் என்று கூறுகின்றான் ஆழ்வார் நாயகி. இங்ஙனம் பரகாலநாயகி தன் தோழிமார்க்கும் அன்னைமார்க்கும் நடந்த வரலாறு கூறுவதாக இந்த எம்பெருமான்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள திருமொழியில் அடங்கிய காட்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நம் மனத்திரையில் அமைகின்றன.

அரியுருவக் காட்சி : அன்று பிரகலாதன் பொருட்டு 'பேழ்வாய் வாள்எயிற்றுக் கோளரியாயத்' தோன்றிய பொழுது திரிபுரம் எரித்த சிவபெருமனும் மலர்மிசை மேல் வீற்றிருக்கும் நான்முகனும் அந்தப் பயங்கர உருவத்தைக்கண்டு வியந்தனர். மூன்று உலகத்திலுள்ளவர்களும் கடல் ஒலிபோல் வழிபாட்டு ஒலிகளை முழங்கிக்கொண்டு அப்பேருருவத்தை வணங்கினர்.

நெருப்புப் போன்ற உளைமயிர்களோடு கூரியவாள் போன்ற கோரப்பற்களோடும் தோன்றிய நரசிங்கம் இரணியனது மார்பினைப் பிளந்த காட்சியைக் கண்டு வியந்தனர். அந்த நரசிங்க உருவத்தில் எம்பெருமான் ஆழ்வார் நாயகிக்குக் காட்சி தருகின்றான். இவள் 'ஆர்கொல்' என்று அயலில் நின்ற ஒருவரை வினவ எம்பொருமானே 'நான் அட்ட புயகரத்தேன்'என்று

மறுமொழி பகர்கின்றான். இந்த காட்சியில் ஈடுபட்டு மகிழ்வுற்ற நிலையில் திடீரென்று காட்சி மாறுகின்றது.

உலகளந்த பெருமாள் தலவரலாறு

எம்பெருமான் திருவடிகளையே சரணமாகக் கொண்டவர்கள் ஆழ்வார் பெருமக்கள். ஆழ்வார்களில் தலை சிறந்தவரான நம்மாழ்வார் “பேய்ச்சி முலையூடு அவளை உயிர்உண்டான் கழல்கள் அவையே சரண் ஆகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்” என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதைக் காண்கிறோம். இவரே பிறிதோர் இடத்தில் “கோலமாம் என் சென்னிக்கு உன் கமலம் அன்ன குரை கழலே” என்று அத்திருவடிகளைத் தலையாணியாகக் கொண்டதாகக் கூறுகின்றார்.

உலகளந்த காலத்தில் நல்லார் - பொல்லார், பாவிகள்-உத்தமர் என்று வேறுபாடு காட்டாமல் எல்லார் தலையிலும் பொருத்தி அவர்கட்கு வீடுபேறு அளித்த திருவடிகளன்றோ இவைகள்? உலக சாரங்க முனிவரின் திருத்தோள்களில் வீற்றிருந்த வண்ணம் அழகிய மணவாளனைச் சேவித்தபொழுது இத்திருவடிகளன்றோ முதன் முதலாகத் திருப்பாணாழ்வாரின் கண்ணில் பட்டவை? “நீள்மதிள் அரங்கத்து அம்மான் திருக்கமலபாதம் வந்து என் கண்ணிலுள்ளன ஒக்கின்றதே” என்பதால் பெரிய பெருமாளின் திருவடிகளின் அழகு அவர்மேல் விழுந்து அவர்தம்மைப் பரவசமாக்கியதைக் காண்கிறோம். காஞ்சி ஞானப்பிரகாசர் திருமடத்திலிருந்த வண்ணம் இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில்,

“அடிமூன்றில் இவ்வுலகம் அன்று அளந்தாய் போலும்
அடிமூன்று இரந்து அவனிகொண்டாய் ; படிநின்ற
நீர்ஓத மேனி நெடுமாலே நின்அடியை
யார்ஓத வல்லார் அறிந்து”[16]

(அடி-திருவடி; அளந்தாய் போலும்-அளந்து கொள்பவன் போல; அவனி- பூமி; இரந்து- யாசித்து; அறிந்து- நன்கு தெரிந்து; ஓதவல்லார்- பேசவல்லவர்கள்)

என்ற பாசுரம் நினைவிற்கு வருகின்றது. ஆம்'' உண்மையே. அத்திருவடிகளின் பெருமையைப் பேசுவதற்கு உலகிலுள்ள மொழிகளின் வளம் போதாது நமக்கும் ஏன்? வழிவழி வரும் மானிடவர்க்கத்திற்கும் - ஆயுள் போதாது. இந்தத் திருப்பாசுரத்தை நினைத்த வண்ணம் காஞ்சிப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள உலகளந்த பெருமாள் திருக்கோயிலை நோக்கி வருகின்றோம்.

இந்த உலகளந்த பெருமாள் கோயில் பெரிய காஞ்சியில் (சிவகாஞ்சி) நான்கு இராஜவீதிகள் சூழ ஊரின் நடுவே அமைந்துள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் நான்கு ஃபர்லாங் தொலைவில் உள்ளது இத்திருக்கோயில்.

இதன் கீழ்த்திசையில் வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலும் மேற்குப் புறமாகப் காமாட்சி திருக்கோயிலும் அமைந்துள்ளன. உலகளந்த பெருமாள் கோயிலுன் வெளிப் பிராகாரத்தில் மூன்று சந்நிதிகள் உள்ளன. இவையும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றவை. முதலில் பிராகாரத்திலுள்ள எம்பெருமான்களைச் சேவிக்க முற்படுகின்றோம்.

திருக்காரகம்: இது தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. மேகத்தின் தன்மைகள் போன்றவற்றைக் கொண்ட திருக்குணங்கள் நிறைந்த எம்பெருமான் கோயில் கொண்ட தலமாதல் பற்றி இதற்குக் 'காரகம்' என்ற திருநாமம் பெற்றதாகக் கூறுவர் பெரியோர். ஆகவே, மேகத்திற்கும் எம்பெருமானுக்கும் உள்ள சில பொதுத் தன்மைகளை சிந்திக்கின்றோம்.

1. மின்னலுள்ள பொழுது மேகத்தில் நீர் நிரம்பியிருக்கும் எம்பெருமானுக்கும் பிராட்டியுன் கூடியிருக்கும் காலத்தில் கருணைவெள்ளம் விஞ்சியிருக்கும். ''இவன் சந்நிதியாலே காகம் தலை பெற்றது அது இல்லாமையால் இராவணன் முடிந்தான்'' என்ற மூமுட்சுப்படி வாசகம் காண்க.
2. பெய்யாத காலத்தில் வறப்பது மேகம்' எம்பெருமானும் திரௌபதிக்கு ஆபத்தில் அருகேயிருந்து உதவபப்பெறாமைக்காக நெஞ்சுலர்ந்து பேசினான்.

3. “எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்” என்றவாறு பயிர்கள் வேறு புகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருப்பது மேகம். அங்ஙனமே எம்பெருமானும் “களைவாய் துன்பம் களையாது” என்று வேறுபுகலிடம் இல்லதவர்களால் எதிர்பார்க்கப் பெறுபவனாக இருப்பான்.
4. மேகம் பெய்யும் காலத்தை அறுதியிடவல்லார் எவரும் இலர். பெய்யவேண்டிய காலத்தில் பெய்யா தொழியும் பெய்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காலத்தில் பெய்யவும் கூடும்: எம்பெருமானும் அப்படியே வந்தாய் போல வாராதாய் வாராதாய்போல் வருவானே. திரௌபதிக்கு ஆபத்திலே வந்து முகங்காட்டா தொழிந்தான். எதிர்பாராத நிலையில் “தாவியன்றுலகம் எல்லாம் தலைவிளாக் கொண்டான்.”
5. மேகம் தூதுவிடப்பெறும் பொருளாக அமையும் எம்பெருமானும் “இன்னார் தூதன் என நின்றான்.”
6. மேகம் மாரிகாலத்தில் இடி முழ்க்கிப் பெய்யாதும் போய்விடும் பெய்யுங்காலத்தில் ஆடம்பரமின்றி பெய்யும். எம்பெருமானும் குசேலனுக்கு **அருள்புரிந்து இங்ஙனமே அன்றோ?**

இங்ஙனம் பல ஒற்றுமைகளைக் கண்டு மகிழலாம். இச்சந்நிதி எம்பெருமானைத் திருமங்கை மன்னன் மட்டிலுமே “உலகம் ஏத்தும் காரகத்தாய்” என்று மூன்று சொற்கள் கொண்ட ஒரே தொடரால் மங்களா சாசனம் செய்துள்ளார். தெற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு நின்ற திருகோலத்தில் பத்மா மணி நாச்சியாருடன் சேவை சாதிக்கும் கருணாகர பெருமானை வணங்குகின்றோம். இந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நம் சிந்தையில் எழுகின்றது.

“ஓராதார் ‘கல்வி உடையேம்: குலம்உடையேம்:
ஆரா தனமுடையேம் ; யாம் என்று-நீர் ஆயன்
பூங்கா ரகம் காணப் போதுவார் தாள்தலைமேல்
தாங்கார் அகங்காரத் தால்”[17]

(ஓராதார்- ஆராயாதவர்; ஆராதனம்- இறைவனுக்குப் படைத்தல் ; ஆயன்- கண்ணன்'' பூ காரகம்- அழகிய காரகம்; போதுவார்- வருவாள் ; தாள்-திருவடி)

என்ற பாசுரத்தை ஓதுகின்றோம். இங்ஙனம் ஓதுங்கால் ''வஞ்ச முக்கறும்புகள்'', 'நம்மேல் என்றும் தலைக்காட்டலாகாது' என்று எண்ணியவண்ணம் எம்பெருமானை வழிபடுகின்றோம் அடுத்து அடுத்த சந்நிதியை நாடி வருகின்றோம்.

திருக்கார்வானம்: இந்தச் சந்நிதி உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் நுழைவாயிலைக் கடந்தவுடன் வலப்புறமாக வெளிப் பிராகாரத்தில் அமைந்துள்ளது. மேகத்தின் தன்மைகள் யாவும் இத்தலத்து எம்பெருமானிடத்தும் அநுசந்திக்கத் தக்கவையாக இருக்கும்.

இந்த எம்பெருமானைத் திருமங்கை யாழ்வார் மட்டிலும் :கார்வானத்து உள்ளாய்'' என்ற சொற்றொடரால் மங்களசாசன் செய்துள்ளார். நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுக மண்டலங் கொண்டு கமலவல்லி நாச்சியாருடன் சேவை சாதிக்கும் கள்வன்எம்பெருமானை வணங்குகிறோம்.

"தாலேலோ என்று ஆய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலே எவ்வாறு பசியாற்றினாள்? –மாலே பூங்
கார்வானத்து உள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வானம் உண்டாய்நீ பண்டு."[18]

திரவிக்கிரம் சேவை கற்பனையில் நம்மை அந்த அவதாரம் எடுத்த காலத்திற்கே கொண்டு செலுத்தி விடுகின்றது. நம்மை மறந்த நிலையில் அந்த மூர்த்தியின் திருமேனி அழகில் ஈடுபடுகின்றோம். அந்த அவதாரத் திருமேனி அழகில் திருமங்கையாழ்வார் ஆழங்கால் பட்டுப் பாடியருளிய பாசுரம் நம் சிந்தையில் குமிழியிட்டெழுகின்றது.

"ஒண்மிதியில் புனல்உருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர' அவுணன் உள்ளத்து
எண்மதியும் கடந்துஅண்டம் மீது போகி

இருவிசும்பி னூடுபோய் எழுந்து மேலைத்

தண்மதியும் கதிரவனும் தவிரஓடி

தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு

மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை

மலர்புரையும் திருவடியே வணங்கினேனே''[19]

(ஒண்மிதி- ஓரடியில்; புனல்- ஆவரணநீர்; கால்- திருவடி; ஒருகாலும்-மற்றொரு திருவடி; அவுணன்- மாவலி; விசும்பு- ஆகாயம் ; தவிர ஓடி- கடந்து சென்று; தாரகை-நட்சத்திர மண்டலம்; மலர்புரையும் - தாமரை மலரை ஒத்த)

என்ற பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

பாசுரத்தின் சில சொற்களின் நயத்தில் நம் அறிவு ஈடுபடுகின்றது. எம்பெருமானின் திருப்பாதங்களைத் திருவடி என்று பெருமையாகச் சிறப்பித்து பேசாது பாசுரத்தின் முதல் அடியில் அவற்றைக் கால் என்று குறிப்பிட்டதற்குக் காரணமென்ன என்று ஆராய்கின்றது. இதற்குப் பிரதிவாதி பயங்கரத்தின் உரை கைகொடுத்து உதவுகின்றது.

''ஆழவார் இங்குக் கால் என்றது வெறுமனன்று: ஒரு கருத்துத் தோன்றவே இப்படி அருளிச் செய்தது: அதாவது சம்சாரிகளின் 'ஒருவருடைய கால் நம் தலையில் பட்டதே' என்று வெறுத்திருந்த தத்தனையொழிய 'கோலமாம் என் சொன்னிக்கு உன் கமலம் அன்ன குரைகழலே (திருவாய் மொழி 4.3 :6) என்றாற்போல் உகந்து கொண்டார்களில்லையே: அன்னவரது கருத்தாலே 'கால்' என்றது, என்ற விளக்கம் நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

''காமருசீர் அவுணன் உள்ளத்து எண் மதியும் கடந்து'' என்ற சொற்றொடரின் நயத்தினையும் சிந்திக்கின்றோம். அழகெலாம் திரண்டுருண்ட வாமனன் 'மூவடி நிலம் தா' என்று கேட்டான் மாவலியோ, ''மூவடி நிலந்தானே இவன் கேட்பது? அதைக்கொடுப்போம் அது தவிர மற்ற நிலம் எல்லாம் நம்முடையது தானே என்று நினைத்துக் கொண்டிருந்தான். மூவடி மண்ணை இரந்து பெற்ற வாமனன் நிலவுலகம் முழுவதையும் ஒரே அடியால் அளந்து

தள்ளிவிட்டான். ஆயினும் சலியாத மாவலி 'பூமி போயினும் மேலுலகம் நம்முடையது தானே' என்று எண்ணிக் கொண்டிருந்தான். மேலுலகத்தையும் மற்றொரு திருவடியால் அளந்து தள்ளியவுடன், 'எண் திசையும் கீழும் மேலும் முற்றவும் இழந்தோமே' என்று வருந்தினான். இதுவே 'அவுணன் உள்ளத்து எண் மதியும் கடந்து' என்ற தொடரின் கருத்தாகும்.

ஆழ்வார் கருத்தினைச்சிறிதும் குறையாது அறிந்த வியாக்கியாதா கூறுவதைக் காண்போம் "நானும் அடியேன் என்கிறதை விட்டு பகவத் விபூதியை அபஹரித்து ஔதார்யத்தை ஏறிட்டுக்கொண்டு யஜ்ஞத்திலே இழியப்பெற்றிலேனே என்கிறார்", என்பதில் அவ்வமானத் திருவுருவத்தைக்காணும் பேறு பெறாத ஆழ்வாரின் ஏக்கத்தைக் காண்கிறோம்.

இப்பாசுரத்தில் "இருவிசும்பினூடுபோய்' என்பதே போதுமாயிருக்க, "அண்டமீது போகி ... எழுத்து" என்று விதந்து கூறியன் கருத்தையும் சிந்திக்கின்றோம். அதற்கு உரையாசிரியை மன்னன் பெரிய வாச்சன்பிள்ளை கூறும் விளக்கம் இது: "ஸ்ரீ வாமனுடைய விஜயத்தில் தமக்குண்டான ஆதராசியத்தால்(மிக்க அன்பாலே) அளக்கும் பிரதேசத்துக்குக் கொண்டைக்கோல் நாட்டுகிறார்". 'பாம்பின் கால் பாம்பறியும்' என்ற உண்மையை இவ்வுரையில் கண்டு மகிழ்கின்றோம்.

திருமங்கையாழ்வார்கள் வாமன-திரிவிக்கிரம அவதராத்தை மிக அழகாகக் கூறும் பெரிய திருமடல் பகுதியையும் நன்குச் சிந்திக்கின்றோம்.

"தன் உருவம் ஆரும் அறியாமல் தான் அங்குஓர்

மன்னும் குறள் உருவில் மாணியாய்-மாவலிதன்

பொன் இயலும் வேள்விக்கண் புக்கிருந்து போர் வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து – நெஞ்சுருக்கி

'என்னுடைய பாதத்தால் யான் அளப்ப மூவடிமண்

மன்னா தருக' என்று வாய்திறப்ப-மற்றவனும்

என்னால் தரப்பட்டது' என்றலுமே அத்துணைக்கண்

மின்னார் மணிமுடிபோய் விண்தடவ –மேல்எடுத்த

பொன்னார் கனைகழல்கால் ஏழலகும் போய்க்கடந்தங்கு

ஒன்றா அசுரர் துளங்க-செல நீட்டி

மின்னிவ் அகலிடத்தை மாவலியை வஞ்சித்துத்

தன்னுலகம் ஆக்குவித்த தாளானை”[20]

(குறன் உரு-வாமனன்; மாணி-பிரமச்சாரி; பொன் இயலும்- தங்க தானம் செய்யும்படியான; போர் வேந்தர் மன்னன்-மாவலி; வஞ்சித்து-மயக்கி; வாய்திறப்ப-வாய் திறந்து கேட்க; அத்துணைக் கண்-அந்தக் கணத்தில்; விண்தடவ –ஆகாயத்தை அளாவ; கனைக்கழல்கால்-வீரத்தண்டை அணிந்த திருவடி; துளங்க- துன்பப்படும் படி; மன்னும்-நிலை பெற்ற; தாளானை-திருவடிகளையுடைவனாய்)

என்ற பாடற்பகுதியிலுள்ள வருணனையை நினைந்து வியப்பும் வெகுட்சியும் ஒருங்கே தோன்ற அதில் பெரிதும் ஈடுபட்டு நிற்கின்றோம். திரைப்படத்தில் ஊனக் கண்ணால் காணும் இக்காட்சியில் மனம் ஆழங்கால் பட்டு நிற்கின்றது.

இந்தச் சந்நிதியில் தீர்த்தமும் திருத்துழாயும் பெற்று, சடகோபம் சாதிக்கப் பெற்றுத் தெளிவு பெற்ற நிலையில் திவ்வியகவி வருகின்றது.

“நேசத்தால் அன்று உலகை நீர்வார்க்க வைத்து அளந்த

வாசத்தால் என் தலைமேல் வைத்திலையேல்-நாத்தால்

பாரகத்துள் அன்றியான் பாழ்நரகில் வீழ்ந்துஎன் கொல்?

ஊரகத்துள் நின்றாய் உரை.”[21]

(நேசத்தால் -கருணையினால்; அன்று- முன்னாளில்; வாசத்தால்-நறுமண முடைய திருவடி(மெய்யாடியார் அருச்சித்த திருத்துழாய் முதலியவற்றின் சம்பந்தத்தால் மணம் வீசும்) ; நாசத்தால் -நாசமடைந்து; வீழ்ந்து என கொல்-வீழ்ந்தால்தான் என்ன; உரை-கூறுவாய்)

என்ற பாசுரத்தை ஓதி உளங்கரைகின்றோம். அய்யங்கார் நிலையில் நாமே இருந்து எம்பெருமானை வினவுவது போன்ற உணர்ச்சியுடன் திருக்கோயிலினின்றும் வெளிவருகிறோம்.

பிராகாரத்தில் ஓரிடத்தில் மன அமைதியுடன் அமருகின்றோம். திருக்கோயில் அலுவலர் ஒருவருடன் உரையாடுகின்றோம், சில செய்திகளையும் அறிகின்றோம். ஆண்டுதோறும் பெரிய திருவிழா தைத் தினங்களில் (சனவரி - பிப்ரவரி) நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதசியன்று முற்பகல் திருப்பாடகம், திருப்பவளவண்ணம், பச்சை வண்ணம், ஊரகம், பரமேச்சுர விண்ணகரம், திருத்தண்கா ஆகிய தலத்து எம்பெருமான்கள் யாவரும் பெரியதிருவடியின் மீது இவர்ந்து நான்கு இராஜவீதிகளிலும் உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆயிரக்கணக்கான மெய்யடியார்களும் ஊர்ப்பெருமக்களும் வேற்றூர் வாசிகளும் கங்கைகொண்டான் மண்டபத்தருகே கருடசேவைக்காகக் காத்திருக்கும் காட்சி அற்புதமாக இருக்கும்.

உலகளந்த பெருமாள் கோயில் மிகப்பழமையானது. பெருமையுடையது. ஆயினும், கவர்ச்சிகரமான சித்திர வேலைபாடுகளும் அற்புதமான சிற்பக்கலை நுட்பங்களும் அமைந்த திருக்கோயில் அன்று இது. என்றாலும், கருவறைக்கு மேலுள்ள விமானம் மிகவும் கவர்ச்சிகரமானது என்றே சொல்ல வேண்டும். இந்தச் செய்திகளை அறிந்த வண்ணம் மனநிறைவு பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

வைகுண்டப் பெருமாள் தலவரலாறு

ஈசுவரன் உயிர்களக் காக்குங்கால் கருணையே வடிவாகவுடைய பெரிய பிராட்டியாரின் கூட்டுறவு மிகவும் இன்றியமையாதது என்பது வைணவ தத்துவம்.

> **“(ஈசுவரன்) ரட்சிக்கும்போது பிராட்டி**
>
> **சந்நிதி வேண்டுகையாலே, இதிலே**
>
> **ஸ்ரீ சம்பந்தமும் அசந்தேயம்”**[22]

என்ற முமுட்சுப்படி வாக்கியத்தால் இதனை அறியலாம். ஆகவே, பிராட்டியுடன் இருக்கும் ஸ்ரீமந்நாராயணனையே சரணம் அடைய வேண்டும் என்பது வைணவ சம்பிரதாயமாக வழங்கிவருகின்றது. ஆழ்வார்களுள் சிறந்தவரான நம்மாழ்வார் இதனைக் கருதிதான் "'அகல கில்லேன் இறையும்' என்று அலர்மேல்மங்கை உறைமார்பன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தார்'' என்று அறிகின்றோம். ஈசுவரன் சேதநரைக் காக்குங்கால் சேதநரின் அளவற்ற குற்றங்களைக் கண்டோ, அல்லது தனது சுவாதந்தரியத்தாலோ அவர்களைப் புறக்கணிக்கவும் கூடும். அவ்வமயம் ஈசுவரனுக்குச் சேதநரிடம் கருணை பிறக்குமாறு வேண்டியதை வேண்டியாங்குச் சொல்லிப் 'புருஷகாரம்' செய்யும் பிராட்டியார் அருகில் இருந்தே ஆகவேண்டும். அப்போதுதான் எம்பெருமான் தடையின்றிக் காத்தல் தொழிலை மேற்கொள்வான்.

கணவருக்குத் தொண்டு பூண்டொழுகும் தம் இயல்பிற்கேற்ப, ,அவரை மகிழ்வித்தற் பொருட்டு அவர் படுக்கையையும் குழந்தையைக் காக்கும் தம் இயல்பிற்கேற்ப அம்மகவின் தொட்டிலையும் விடாது பற்றி நிற்கும் தாயாரைப் போன்று இருப்பது பெரிய பிராட்டியாரின் நிலை.

"ஸ்ரீ நந்தகோபரையும் கிருஷ்ணனையும்

விடாத யசோதரைப் பிராட்டியைப் போலே"[23]

என்பது முமுட்சுப்படி வாக்கியம். யசோதைப் பிராட்டியார், மனைவியார் என்னும் தம் நிலைக்கேற்ப புதல்வனைக் காத்தற்குக் கண்ணனையும் விடாமல் எங்ஙனம் தக்கமுறையில் பரிபாலித்து வந்தனரோ, அங்ஙனமே பிராட்டியாரும் ஈசுவரனையும் சேதநரையும் பற்றிக் கொண்டு செயலாற்றுவர் என்பதனை நாம் அறிதல் வேண்டும். சீவகோடிகளின் அன்னை அன்றோ எம்பிராட்டி?

இங்ஙனம் ஒரு பக்கம் சேதநரையும், மற்றொருபக்கம் எம்பெருமானையும் திருத்துவதில் எந்த முறையை மேற்கொள்வார் பிராட்டி?

"இருவரையும் திருத்துவது

உபதேசத்தாலே"[24]

என்று கூறுகின்றது ஸ்ரீவசனபூஷணம்.

பெண்மைக்கு இயல்பாக அமைந்த குணங்கள் அன்பும் அருளும். அன்பினால் பிராட்டியார் உலகத்தைத் தம்வசப்படுத்தி உயிர்களைத் திருத்தி அமைக்கின்றார். மற்றொரு குணமாகிய அருளால் உயிர்களை இறையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனர். இவ்விரு பண்புகளாலும் பிராட்டியாருக்கு ஒரு தனி அழகு உண்டாகின்றது.

அவ்வழகால் ஆண்மைத்தன்மை வாய்ந்த இறையைத் தம் வசப்படுத்துகின்றார். அவ்வழகில் ஈடுபட்ட இறைவன் இவர் சொற்படி நடக்க உடன்படுகின்றான். சிரீய குணங்கள் வாய்ந்த இப்பெண்மை நமக்கு நன்மையேயன்றித் தீமையைப் புரியாது என்றும் நம்பிக்கை ஆண்மைக்கு உண்டாகின்றது. இதனால் ஆண்மை வாய்ந்த இறைவன் பெண்மை வாய்ந்த பிராட்டியாரின் கருத்தின்படிச் செயலாற்றுகின்றான். இவர், தம் அருளினால் இறைவனிடம் கொண்டுசெல்லும் சேதநர்(உயிர்கள்) யாவரும் பெறாப்பேறு பெற்று இன்பந்துய்க்கின்றனர். இவ்விடத்தில்

"உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை

அருளாலே திருத்தும்; ஈசுவரனை அழகாலே திருத்தும்"[25]

என்னம் ஸ்ரீவசனபூஷன வாக்கியங்கள் நம் நினைவுக்கு வருகின்றன : அவற்றையும் சிந்திக்கின்றோம். இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்தவண்ணம் வைகுண்டப் பெருமாள் சந்நிதியை நோக்கி வருகின்றோம்.

வைகுண்டப் பெருமாளைத் திருமங்கையாழ்வார் மட்டிலுமே ஒரு பதிகத்தால் மங்களசாசனம் செய்துள்ளார். கோயிலின் எல்லையை நெருங்க நெருங்க ஆழ்வார் பாசுரங்கள் நம் சிந்தையில் குமிழியிட்டெழுகின்றன.

"சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவைஊறுஒலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நாரணன் நான்முகனுக்(கு)
இடம்தான் தடஞ்சூழ்ந் தழகாயகச்சி
பல்லவன் வில்லவன் என்றுலகில்

பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்

பல்லவன் மல்லையர் கோன்பணிந்த

பரமேச்சுர விண்ணக ரமதுவே" 26

(வன்சொல்-வேதம்; பணிந்த-அடிமை செய்த; பல்லவன்- வில்லவன் என்போர் அரசர்கள்; மல்லையர்; கோன்-கடல் மல்லையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன்)

என்பது முதற்பாசுரம். சாதாரண சொற்கள் கூட அச்சொற்கள் குறிக்கும் பொருள்களுள் அந்தராத்மாவாய் உறையும் எம்பெருமான் அளவும் சொல்லி நிற்கும் என்பது நாம் அறிவோம். ஞானேந்திரியங்களால் அநுபவிக்கப் பெருபவன் எம்பெருமான். முத்தொழில்களையும் மூன்றுருக்கொண்டு நிர்வகிக்கின்றன இவன். இத்தகைய பெருமான் பல்லவமன்னனின் கையங்கரியம் பெற்று பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருப்பாற்கடலில் அழகெல்லாம் திரண்ட கோலத்துடன் திருவனந்தாழ்வவான் மீது பள்ளிகொண்டு திருக்கண் வளர்ந்தவனும் திருவத்திமாமலையில் வரந்தருமா மணிவண்ணணாய்- வரதராசனாய்- எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானே பரமேச்சுர விண்ணகரத்தில் வைகுண்ட நாதனாக் காட்சி தருகின்றான் என்று கூறுவதில் எம்பெருமானின் வியூக அர்ச்சைத் திருமேனிகள் பேசப்பெறுகின்றன. இப்பாசுரத்தில் "வர்ந்தரு மாமணி வண்ணன்' என்ற சொற்றொடர் அத்திகிரி அருளாளனைக் குறிப்பதாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். ஆகவே, இப்பாசுரம் கச்சித்திருப்பதியரால் இரட்டித்து ஓதப்பெறுகின்றது.

அடுத்த பாசுரத்தில் எம்பெருமான்

"அண்டமும், எண்திசையும், நிலவினும்,

அலைநீரொடு வான்எரி கால்முதலா

உண்டவன் எந்தை பிரான்" 27

என்று குறிக்கப்பெறுகின்றனர். பிரளயப் பெருங்கடலில் சிக்கி தத்தளிக்கும் இந்த உலகங்களையெல்லாம் பாலனாக இருந்து திருவமுதுசெய்து ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் அண்ணலின் சாமர்த்தியம் பேசப்பெறுகின்றது.

இங்ஙனம் ஆபத்துக் காலத்தில் அனைத்தையும் தம் திருவயிற்றில் வைத்து நோக்கிய பெருமான் சம்சாரப் பெருங்கடலில் தவிக்கும் நம்மை நோக்குவான் வேண்டி பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வார் பெறவைத்த குறிப்பாகும். ஈண்டு எம்பெருமானின் காத்தல் தொழில் பேசப்பெறுகின்றது என்பது தெளிவு.

ஆனையின் துயர்தீர்த்த அருஞ்செயலும், காளியன் நாகத்தின் கொழுப்பை அடக்கிய தீரச்செயலும் அடுத்து சந்திக்கப்பெறுகின்றன.

"தூம்புடைத் திண்மை வன்தான் களிற்றின்

துயர் தீர்த்து அரவம்வெருவ முனநாள்

பூம்புனல் பொய்கை புக்கான்"

(தூம்பு துளை ; கை-துதிக்கை: வன்தாள-வரியகால; களிறு-யானை; அரவம்-காளிய நாகம் ; வெருவ –அஞ்சம் படியாக; பூம்புனல் -அழகிய நீர்; பொய்கை- குளம்)

என்பது இந்நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பாசுரப் பகுதி. மீனமர் பொய்கை நாள்மலர் கொய்யுங்கால் முதலையினால் அடர்ப்புண்ட கான்அமர் வேழத்தின் இடரைத் தீர்த்தருளின் பெருமான் இந்திரியங்களாகிய பல முதலைகளின் வாயில் அகப்பட்டுத் தவிக்கும் நம்மையும் காத்தருள்வான் என்பது குறிப்பு. காளியன் அப்பொய்கையில் வந்து சேர்வதற்கு முன்னரே கசேந்திரன் இருந்த நிலையைக் கூறுவதால் 'பூம்புனல்' எனப்பட்டது என்பதாகக் கருதுகின்றோம்.

அடுத்த நான்கு பாசுரங்களிலும் எம்பெருமானின் நரசிம்மாதாரம், வாமன-திரிவிக்கிரமாவதாரம், இராமவதாரம், கிருஷ்ணவதாரம் ஆகிய நான்கு அவதாரங்களின் வீரச் செயல்கள் அநுசந்திக்கப்பெறுகின்றன.

"திண்படைக கோளரி யின்உருவாயத்

திறலோன்அக லம்செருவில் முனநாள்

புண்படப் போழ்ந்த பிரான்''[29]

(திண்படை-கூரிய ஆயுதம் (நகம்): கோள்-வலிமிக்க: அரி-சிங்கம்: திறலோன்-மகா பலசாலி: அகலம்-மார்பு: செரு-போர் போழ்ந்த –கிழித் தெறிந்த: பிரான்-எம்பெருமான்)

என்பது நரசிம்மமூர்த்தியின் அநுசந்தானம். பிரகலாதன் பொருட்டுக்கூரிய நகங்களையும் கோரப்பறகளையும் கொண்ட நரசிங்க மூர்த்தியாகத் தோன்றி இரணியனது மார்பினைப்பிளந்த எம்பெருமானின் வீரச்செயலைக் காட்டி நிற்பது இச்சொல்லோவியம். இரணியன் தன்னைப் பலவாறு இழிவாகப் பேசிய போதெல்லாம் எம்பெருமான் சினங்கொண்டு யாதும் செய்யவில்லை.

பக்தி உணர்வு கிளர்ந்தெழுந்த வண்ணம் பரமபதத்தில் வீற்றிருப்பது போன்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் பரமபத நாதனையும் வைகுந்தவல்லித் தாயாரையும் வணங்குகிறோம். திருமங்கையாழ்வார் அருளியுள்ள பத்துப் பாசுரங்களையும் அவன் சந்நிதியில் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். இந்நிலையில் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரம் நினைவுக்கு வருகின்றது.

"பதத்தமிழால் தன்னையே பாடுவித்து என்னைத்தன்
பதத்து அடியார்க்கே ஆட்படுத்தான்-இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலஆன்
வரமேச்சு உரல்அணைந்த மால்''[30]

(பதத்தமிழ் -பக்குவமான தமிழ்: பதத்து அடியார் -திருவடிகளில் தொண்டு பூண்டவர் ஆட்படுத்தல்-அடிமையாக்குதல்: இதத்த-நன்மை செய்கின்ற: ஆன்-பசு: மேச்சு-மேய்த்து(மரூஉ): உரல் அணைந்த –உரலில் பிணிப்புண்டிருந்த: மால்-திருமால்)

என்ற பாசுரத்தை ஓதுகின்றோம். " எனக்கு யாதொரு தகுதியில்லாதிருக்கவும், எம்பெருமான் தன்னுடைய கருணையால் எனக்கு அத்தகுதியை நல்கி வேதங்களாலும் அளவிட்டுக் கூறமுடியாத தன்னைப்பற்றிக் கவிபாடித்

துதிக்கும்படி செய்து என்னைத் தன் அடியார்க்கு ஆட்படவும் செய்தான்'' என்று கூறும் கவிஞரின் அடக்கப் பண்பைப் போற்றுகின்றோம். ''என்னால் தன்னை இன் கவி பாடிய ஈசனை'', ''என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்த நாதனே'' என்பன போன்ற நம்மாழ்வார் பாசுரங்களே திவ்வியகவி தன் பாசுரத்தை அமைக்கத் துணை செய்திருத்தல் கூடும் என்றும் சிந்திக்கின்றோம்.

இத்திருக்கோயிலின் விமானம் 'முகுந்த விமானம்' என்று வழங்கப்பெறுகின்றது. விமானத்தில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. மேல் தளத்திலுள்ள (குசைளவ குடடிடிச) சந்நிதியில் எம்பெருமான் அனந்தாழ்வான்மீது சயனத்திருக்கோலத்தில் காட்சி அளிக்கின்றான். அதற்கு அடுத்துள்ள மேல்தளத்தில் (ளுநஉடிஇன குடடிடிச) அவன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான்.

கீழ்ச்சந்நிதியில் (ழுசடிரஇன குடடிடிச) இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமான் பரத்துவ நிலையைக் காட்டுவதாகும். இடைத்தளத்திலுள்ள அவன் வியூக நிலையைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். இந்தச் சந்நிதியைத் திவ்வியப்பிரபந்தம் 'பரமேச்சுர விண்ணகரம்' என்று குறிப்பிடும். பரமேச்சுரன் (பரமபத நாதன்-தேவாதி தேவன்) எழுந்தருளியிருக்கும் திவ்விய நகரமாதல்பற்றிப் 'பரமேச்சுர் விண்ணகரம்' என்று வழங்கி வருகின்றது. இதனைக் கட்டுவித்தவன் பல்லவ மன்னன் பரமேசுவர வர்மன் என்பவன். இவனுடைய தந்தை இராஜசிம்மன் என்பவனே காஞ்சிக் கைலாசநாதர் கோயிலை நிறுவியன் இரண்டு கோயில்களும் சிற்பக்கலைக்குப் பெயர் போனவை. பல்லவமன்னர்களின் வரலாற்றுப் பரம்பரையை ஆராய விரும்புபவர் இரண்டு கோயில்களும் கல்லிலே உருவாகியிருக்கும் வரலாற்றினை எளிதாக அறிந்துகொள்ளலாம்.

தீப்பேற்றின் காரணமாக இந்த இரண்டு கோயில்களும் மைய அரசின் ஆதரவில் ''நீலப் பலகையின் பாதுகாப்பில்'' உள்ளதை எண்ணி வருந்துகின்றோம். தந்தை சிவபக்தன்: மகன் திருமால் அடியான். இங்ஙனம் தந்தையிடமும் மகனிடமும் நிலைத்து நின்ற சமரச மனநிலையை மெச்சுகின்றோம்.

வயிரமேகனின் இந்த உயர்ந்த திருமால்பக்தியைப் போற்றும் முறையில் திருமங்கையாழ்வார் பாசுரந்தோறும் ஒருமுறைக்குப் பன்முறை அம்மன்னனின் பெயரையும் புனைந்து பேசுவதைக் காண்கின்றோம்.

மன்னனின் பக்தியை உவந்து அவனை ஆழ்வார்புகழ்ந்ததாகக் கொள்ளவேண்டுமேயன்றி ஆழ்வார் 'நாகக்கொண்டு மானிடம் பாடும்' கொள்கையுடையவர் அல்லர் என்பதையும் உணர்கிறோம். இந்த எண்ணங்களுடன் மன அமைதியுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்

காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும் தலவரலாறு

தென்னகத்தில் திருக்கோயில்கள் நிரம்பிய நகரங்கள் இரண்டு. ஒன்று காஞ்சிபுரம் மற்றொன்ளு திருக்குடந்தை குடமூக்க என வழங்கப்பெறும் கும்பகோணம். எங்குப் பார்த்தாலும் பூங்காக்கள் மலிந்து காணப்படும் பெங்களுரையும் மைசூரையும் ''பூங்கா நகரங்கள்''(Garden Cities) என்று வழங்குவதைப்போலவே, இந்த இரண்டு நகரங்களையும் ''கோயில் நகரங்கள் (Temple Cities) என்ற வழங்கலாம். இவற்றுள் காஞ்சி மிகப் பழம்பெரும் பெருமை வாயந்தது. இயேசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே இதன் வரலாறு தொடங்குகின்றது பதஞ்சலியின் மாபாடியத்திலும், பெரும்பாணாற்றுப்படையிலும், மணிமேகலையிலும் இந்நகரத்தைப்பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் இந்நகரம் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சிபுரி, கச்சி முதலிய பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. பழைய கல்வெட்டுக்களில் கச்சிப்பேடு என்று வழங்கப்பெறுவதையே 'காஞ்சி' என்று கருதுகின்றனர் வரலாற்று அறிஞர்கள். தமிழகத்து ஞானச் செல்வர்கள் இந்நகரைத் தம் நூல்களில் 'கச்சி' என்றே வழங்குகின்றனர். எனினும், இன்று எங்ஙனும் பெருவழக்காக இருப்பது 'காஞ்சிபுரம்' என்ற பெயரேயாகும். 'காஞ்சிபுரம் பட்டு' இந்நகரத்தின் பெயரைப் பாமரமக்கள் உள்ளத்திலும் நிலைக்கச்செய்துவிட்டது.

சுமார் ஐந்து மைலுக்கு மேல் நீண்டிருப்பது இந்நகரம். இதனை இரண்டு கூறுகளாக்கிச் சிவகாஞ்சி(பெரிய காஞ்சி), விஷ்ணு காஞ்சி (சின்ன காஞ்சி) என்று பெயரிட்டுள்ளனர்.

பெரிய காஞ்சியில் உள்ள பெரிய கோயில் ஏகாம்பரநாதர் கோவில் சின்ன காஞ்சியில் உள்ள பெரியகோவில் வரதராசர் திருக்கோயில். இந்த இரண்டு பகுதிகளிலும் திருமால் ஆலயங்கள் உள்ளன. ஆயினும், பெரிய காஞ்சியில்தான் அதிகமான சிவாலயங்கள் இருக்கின்றன. சுமார் முப்பதுக்கு மேற்பட்ட சிவாலயங்களும், இருபதுக்கும் மேற்பட்ட திருமால் கோயில்களும் இந்த இரு பகுதிகளிலும் இருப்பனவாகத் தெரிகின்றது.

காஞ்சியில் பதினெட்டு திவ்விய தேசங்கள் உள்ளனவாக வைணவர்களிடையே வழங்கும் பேச்சு ஒன்று உண்டு. ஆயினும், ஆழ்வார்களால் மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் பதினான்கே காஞ்சியில் உள்ளன.

இவற்றைத் தவிர, காஞ்சிமா நகருக்குப் புறம்பே சுமார் ஏழுகல் தொலைவில் உள்ள 'திருப்புட்குழி' என்ற திவ்விய தேசமும் ஆழ்வாரால் மங்களாசாசனம் பெற்றது. இன்று நாம் காஞ்சி நகரில் சிறியனவும் பெரியனவுமாகவுள்ள திவ்விய தேசங்களில் திருப்பாடகம், திருநிலாத்திங்கள் துண்டம், திருக்கள்வனூர், திருவேளுக்கை, திருத்தண்கா, திருப்பவளவண்ணம் ஆகிய ஆறு திவ்விய தேசங்களையும், நகருக்குப் பறம்பேயுள்ள திருப்புட்குழியையும் சேவிக்கப் போகின்றோம்.

திருக்கள்வனூர் : இந்தத் திவ்வியதேசம் காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயிலினுள் உள்ளது. பலரை வினவியும் ஒருவருக்கும் இந்த எம்பெருமான் - கள்வன்- எழுந்தருளியிருக்கும் இடம் சரியாகத் தெரியவில்லை. காமாட்சி அம்மன் கோயிலினுள் இருக்கும் உட்கோயில்களும் சந்நிதிகளும் திக்குத் தெரியாதபடி அமைந்து கிடப்பதால் தேடிக் காண்பதில் மேலும் சங்கடம் அதிகமாகின்றது.

குற்ற விசாரணைத்துறை (ஊ.ஐ.னு.) அலுவலர்போல் ஒருவாறு விசாரித்துக் கொண்டு தேடியதில் இவர் திருக்கோயிலினுள் அர்த்தமண்டத்தின்

நுழைவாயிலின் இடப்புறச் சுவரிலுள்ள மாடம் ஒன்றில் எங்கே திருடிவிட்டு ஒளிந்து கொண்டிருக்கும் கள்வனைப்போல் ஒளிந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இது கருதியே இவரைத் திருமங்கையாழ்வாரும் "கள்வா!" என்ற ஒரே தொடரில் மங்களாசாசனம் செய்தனர் மேலும் குமுதவல்லித் தாயாரை மணந்துகொள்ளும் பொருட்டு அவர் விதித்த நிபந்தனையாகிய நாள்தோறும் 1008 பாகவதர்கட்குத் திருவமுது செய்வித்தல் என்ற பணியைச் செவ்வனே நிறைவேற்றும் பொருட்டுக் கள்வர் கூட்டத் தலைவராக நின்று பொள்ளையடித்த பெருமானன்றோ இவர்? வேறு ஆழ்வார்கட்கும் இந்த எம்பெருமான் கிட்டவில்லை. திருநகரியில் திருப்புளியாழ்வாரின் கீழிருந்து கொண்டு மானசீகமாக மங்களாசாசனம் செய்து நம்மாழ்வாரையும் அவர் பாசுரங்களில் அகப்படாது ஏமாற்றிவிட்ட 'கள்வன்' இந்த எம்பெருமான்.

திருக்கள்வனூர் எம்பெருமானின் திருநாமம் ஆதிவராகப் பெருமாள் என்பது. நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் இந்த எம்பெருமானையும், அருகில் பக்கத்துச் சுவரில் இன்னொரு மாடத்தில் காட்சி அளிக்கும் அஞ்சிலைவல்லி நாச்சியாரையும் வணங்குகின்றோம்.

பிறர் அறியாதபடி காரியஞ்செய்பவனைக் கள்வன் என்று கூறுவது உலகவழக்கு என்பதை நாம் அறிவோம். எம்பெருமானும் "இராமட மூட்டுவாரைப் போலே உள்ளே பதிந்துகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போருமவனா கையாலே" கள்வன் எனப்படுகின்றான் என்று எண்ணுகின்றோம். உண்மையில் அப்பெயர் அவனுக்கே தகும் என்றும் உடன்படுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

1. **'யதோக்த காரீ' என்ற திருமால் ஆலயத்தை 'வெஃகா' என்று குறிப்பிடுகின்றது-வரி-(290-91).**
2. **'ஜைன காஞ்சி' தான் 'சின்ன காஞ்சி' ஆயிற்று என்பர் ஆய்வாளர்கள் தொ.நா-5**

திருவேளுக்கை: இந்தத் திவ்விய தேசம் சின்ன காஞ்சிபுரத்தில் உள்ளது. ‘வேளிருக்கை’ என்பது ‘வேளுக்கை’ எனமருவி வழங்கி வருகின்றது. இது வடமொழியில் வேதாந்த தேசிகர் பணித்த துதியொன்றில் ‘காமாஸிகா’ என்று வழங்கப்பெறுகின்றது. நாம் தங்குமிடத்திலிருந்து குதிரைவண்டியில் இத்திருத்தலத்திற்கு வருகின்றோம். திருக்கோயில் மிகச் சிறியது. மிகுந்த சிரமத்துடன் இதன் இருப்பிடத்தைக் கண்டறிகின்றோம்.

இந்த எம்பெருமானுக்குக் கைங்கரியம் சரியாக நடைபெறவில்லை. திருவிளக்கு போடுவதற்குக் கூட சரியான ஆள் இல்லை என்றால் இதர கைங்கியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? இந்த எம்பெருமானைப் பேயாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

“மன்னம் மதிள்கச்சி

வேளுக்கை ஆளரியை”[31]

(ஆள்அரி-நரசிம்மம்)

என்பது திருமங்கையாழ்வாரின் திருவாக்கு. பேயாழ்வார் இத்திருப்பதியோடு வேறு சில திருப்பதிகளையும் சேர்த்துப்பேசி இனியராக்கின்றார்.

“விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்

மண்ணகரம் மாமாட வேளுக்கை – மண்ணகத்த

தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி

தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு”[32]

(விண்ணகரம்-ஒப்பிலியப்பன் சந்ததி; திருவெஃகா-சொன்ன வண்ணம் செய்த பெருமாள் இருப்பிடம் ; மண்நகரம் - பூமியிலுண்டான வைகுந்த மாநகர் போன்ற; மா மாடம் பெரிய மாளிகை; தன் கோடடி-திருக்கோட்டியூர்)

‘மண்ணகரம் மாமாடம் வேளுக்கை’ என்ற இந்த ஆழ்வாரின் திருவாக்கையொட்டியே திருமங்கையாழ்வார் ‘மன்னு மதிள்கச்சி வேளுக்கை’ என்றார் போலும். இங்குக் கூறிய ஏழு திருப்பதிகளிலும் எம்பெருமான் எளிமையும்

சீலமும் தோன்ற எழுந்தருளிருப்பதாக ஆழ்வார். பிரபத்தி செய்வதற்கு வேண்டுபவையான வாத்ஸல்யம், திருக்குணங்கள் நிறைந்த இடம் அர்ச்சாவதராமே என்ற சாத்திர உண்மையை வற்புறுத்தவே இவர் இங்ஙனம் கூறியிருப்பதாகக் கருகின்றோம்.

திருக்கடிகை அக்காரக்கனிதலவரலாறு

இறைவன் தன் ஞானசக்தியினால் எங்கும் பரவி எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கின்றான். அந்த ஞான சக்தியினாலேயே எல்லாப்பொருள்களுள்ளும் நிறைந்த விளங்குகின்றான். வைணவ சமயத்தில் இறைவனின் இவ்விருத்தன்மைகளும் 'வியாபகத்துவம்', அந்தர்யாமித்துவம்' என்று வழங்கப்பெறும். இவ்விரண்டுமே திருமந்திரத்தின் 'நாராயண' என்ற சொல்லின் சிறப்புப் பொருள்களாகும். நம்மாழ்வாரின்,

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற் கும்பிரான்"[33]

(நெறிமையால்-சேக்ஷ - சேக்ஷி பாவமாகின்ற முறை தவறாமல்)

என்ற திருவாய்மொழிப் பாசுரப்பகுதி இதனை நன்கு விளக்குகின்றது. 'தன்னுள் அனைத்துலகும் நிற்க' என்றது வியாபகத் தன்மையை. 'தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்பது. அற்தர்யாமியாக இருக்கும் நிலைமையைக் கொண்டு அவனே எல்லாப் பொருள்களாகவும் இருக்கின்றன என்று கூறுவதும் உண்டு.

"அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ"[34]

என்ற பரிபாடல் அடியினால் இதனை அறியலாம்.

இங்ஙனம் எங்கம் பரவிநிற்கும் முதற்பொருளாகிய இறைவன் அடியார்களின் துன்பங்களைக் களைந்து அவர்க்கு வேண்டுவன செய்யும்பொருட்டு இராமன்,கிருஷ்ணன் முதலிய அவதாரங்களை மேற்கொள்கின்றான். நாம் நல்வினை தீவினை இவற்றின் வயப்பட்டு அவற்றின் பயனை அநுபவிப்பதற்கென்றே பிறக்கின்றோம் அங்ஙனம் நம்மைப் பிறப்பில்

பல்பிறவிப் பெருமான்". 'பிறப்பில்லாதவர்' என்றது நம்மைப்போல் வினை காரணமாகப் பிறக்கு தன்மையில்லாதவர் என்பதைக் குறிக்கின்றது.

ஆனால், அடியார்களின் பொருட்டுப் பல பிறப்புக்களை மேற்கொள்பவராதலின் 'பல்பிறவிப் பெருமான்' என்று குறிப்பிடப் பெறுகின்றார். அவரை அங்ஙனம் பிறக்கும்படிச் செய்த தலைவர் ஒருவரும் இல்லை என்பது ஈண்டு அறியத்தக்கது. இக்கருத்தினை,

"முதன்முறை இடைமுறை
கடைமுறைத் தொழிலில்
பிறவாப் பிறப்பிலை
பிறப்பித்தோர் இலையே"[35]

என்ற பரிபாடல் பகுதி தெளிவாக விளக்கி நின்கின்றது.

முதல் நாள் திருதணி முருகனைச் சேவித்த நாம் மறுநாள் அதிகாலையில் நன்னீராடித் தூய ஆடைகளை அணிந்து கொண்டு இத்தலத்திற்குப் புறப்பட ஆயத்தமாகின்றோம். இஃது அரக்கோணம், சித்தூர், திருத்தணி முதலியவற்றின் நடுவில் அமைந்து தமிழகத்தின் தற்போதைய வடஎல்லையாக உள்ளது. திருத்தணியிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு. அதிகாலையில் ஐந்தரை மணிக்குப் பேருந்து நிலையத்திற்கு வந்து வண்டி ஏறுகின்றோம்.

சுமார் ஒன்றரை மணி நேரத்தில் பேருந்து சோழசிங்கபுரத்தை அடைகின்றது. சோழநாட்டைப் போலவே தொண்டை நாடடிடையில் நரசிங்கப் பெருமான் தங்குவதற்குச் சிறந்த இடமாக இருப்பதனால் இவ்வூர் 'சோழசிங்கபுரம்' என்ற பெயர் பெற்றது என்பர் ஒருசாரர்.

பிற்காலச் சோழமன்னர்களில் ஒருவன் இங்குச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து கோயில் ஒன்றை எழுப்பியதால் இவ்வூர் 'சோழசிங்கபுரம்' என்று வழங்கலாயிற்று என்றும் திரிபடைந்தது என்றும் கூறுவர் பிறிதொருசாரர். ஊரின் நடுவிலேயுள்ள சிவாலயம் ஒன்றை இதற்குச் சான்றாகவும் காட்டுவர்

இவர்கள். எனினும், இன்று நரசிம்மமூர்த்தியே பெரும்புகழ் பெற்றிருப்பதனால், நாம் இத்தலம் ‘சோழசிங்கபுரம்’ என்று வழங்குவதையே சிறப்பாகக் கொள்வாம்.

சங்ககாலத்தில் தமிழகத்தில் சோழநாட்டை ஆண்டு வந்தவன் கரிகாற் பெருவளத்தான் என்று வழங்கப்பெறும் கரிகாற்சோழன் ‘பட்டினப்பாலை’ என்றும் பாட்டின் பாட்டுடைத் தலைவன். இவனுடைய காலம் கி.மு முதல் நூற்றாண்டு என்றும், கி.பி இரண்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். இவன் சோழவள நாட்டை 48 கோட்டங்களாகப் பிரித்தான் என்றும், அவற்றுள் கடிகையைச் சேர்ந்த பகுதி முழுவதும் கடிகைக் கோட்டம் என்று வழங்கப்பெற்றது என்றும் அறிகின்றோம். பல்லவர்கள் காலத்தில் (கி.பி.650-750) இப்பகுதி பல கலைகளையும் வடமொழியையும் கற்பிக்கும் இடமாக பல்கலைக் கழகமாக-வழங்கி வந்தது என்பதையும் தெரிந்து கொள்ளுகின்றோம்.

ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் இத்திவ்விய தேசம் மிகவும் வளம் பெற்றிருந்தது. அடர்ந்து நெருங்கியிருக்கும் எழில் மிகுந்த சோலைகள், நறுமணம் மிக்க நந்தவனங்கள், பல்வேறு விதமாகப் படர்ந்துள்ள கொடிகள், இவற்றிடையே ‘தென்னாதென’ என இன்னோசை செய்து கொண்டிருக்கும் வண்டுகள் - இவை பேயாழ்வார் அன்று கண்ட காட்சிகள்.

“பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயிலபோல் - வண்டு
வளங்கிளரும் நீளச்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் தன்விண் நகர்”[36]

(பண்டு – தன்னை ஆட்கொள்வதற்கு முன்பு ; கொண்டு – இருப்பிடமாகக் கொண்டு ; உறைவார்-வாசம் செய்பவர் ; வளம் கிளரும்-திரள் மிக்கருக்கும் ; நீள்-பரந்த; வண்பூ-அழகிய பூக்களையுடைய; இளங்குமரன் - என்றும் இளையவனாக இருப்பவன்)

என்பது பேயாழ்வாரின் பாசுரம். பாசுரத்தின் ‘வண்டு, வளங்கிளரும் நீள் சோலை வண்பூங் கடிகை’ என்ற பகுதியால் இத்தலத்தின் பண்டைய நிலைமையை

அறியலாம். வைகுண்டபதியான எம்பெருமானுக்குத் திருப்பாற்கடல், திருவேங்கடம், திருக்கடிகை முதலிய திருப்பதிகள் கோயிலாக அமைந்திருந்தன; இப்போது அவன் தன் நெஞ்சம் ஒன்றையே கோயிலாகக் கொண்டு விட்டான் என்பதாகப் பேசுகின்றார் ஆழ்வார். இப்பாசுரத்திற்கு இன்னொரு விதமாகவும் பொருள் கூறலாம். திருப்பாற்கடல், திருவேங்கடம் முதலிய திருப்பதிகளை விட வண்டுவளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகையிலே அதிகமாக அன்புகொண்டு அஃதொன்றையே தன் இருப்பிடமாகக் கொண்டுவிட்டான் என்பதாகவும் கொள்ளலாம்.

எம்பெருமானார்(இராமாநுசர்) இத்தலத்திற்கு எழுந்தருளினபோது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரத்தைக் கொண்டு இங்குள்ள எம்பெருமானை மங்களாசாசனம் செய்ததாக வரலாறு உண்டு. அப்பாசுரம்:

“எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில்,மற்(று)
எக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேத விமலர் விழுங்கும்,என்
அக்காரக் கனியே! உன்னை யானே” 37

(மன்னில்-பொருந்தியிருக்கப்பெறில் ; மிக்கார்-சிறந்தவர் ; வேத விமலர்-வேதம் வல்ல பரமைகாந்திகள்; விழுங்கும் காணில்’ என்பதுபோல் விழுங்குதல்)

இதில் எம்பெருமானோடு சேரப்பேறும் பேற்றினைத் தவிர வேறொன்றையும் தாம் விரும்பவில்லை என்று தம் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகின்றார் ஆழ்வார்

இந்த இரண்டு பாசுரங்களையும் அவன் சந்நிதியிலேயே ஓதி ஓதி உளங்கரைந்து தக்கானையும் தாயரையும் சேவித்து, பிரசாதங்களைப் பெற்றுத் திரும்புகின்றோம் அடிவாரத்திற்கே வந்துவிடுகின்றோம். அடுத்து, பக்கத்தில் சின்னமலை எனப்படும் குன்றில் தக்கானுக்கும் மிக்கானாக விளங்கும் யோக ஆஞ்சநேயர் திருக்கோயில் கொண்டிருக்கும் மலையை நோக்கி நடக்கின்றோம். அந்த குன்றினையுடைய அவைாரத்தில் சிறிது தூரம் நடந்து சுமார் 200 அடி உயரமுள்ள மலையில் படிகளில் வழியே ஏறிப்போதல் வேண்டும்.

இந்த மலையிலுள்ள படிகள் புதுப்பிக்கப்பெறவில்லை. 'கவிநாயகனின்' பிரதான வாயிலும் வடக்கு நோக்கியே அமைக்கப் பெற்றுள்ளது. ஆயினும், கோயிலினுள் அவனது சந்ததி மேற்க நோக்கிய வண்ணம், தம்முடைய வீர உணர்ச்சியை யெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு, தமது தலைவனைப் போலவே யோக நிலையில் எழுந்தருளியுள்ளார் இராமதூதர். யோக நிலையிலுள்ள அஞ்சனை மைந்தனை இத்தலத்தைத் தவிர பிற இடங்களில் கண்டல் அரிது என்று சொல்லுகின்றனர்.

இந்தத்தலம் இரண்டு ஆசாரியர்கள் வாழ்ந்து திகழ்ந்த இடமாகும். மணவாள மாமுனிகளின் முக்கிய சீடர் எறும்பியப்பா என்பவர். இவர் இத்தலத்துக்குச் சுமார் 2 கல் தொலைவிலுள்ள எறும்பி என்ற ஊரில் பிறந்தவர். வரதாச்சாரியர் என்பது இவரது திருநாமம். அக்காலத்து மக்கள் இவரை 'அப்பா' என்றே அழைப்பது வழக்கம். ஆதலால் வெர் பிறந்த எறும்பி என்ற ஊரின் பெயறையும் சேர்த்து 'எறும்பி யப்பா' என்று வழங்கலாயினர். அவர் இத்தலத்து எம்பெருமானுக்குக் கைங்கரியம் புரிந்துள்ளார். இவர் கடிகை எம்பெருமானைக் குறித்து 'அமிர்த பலாவளி சதகம்' என்ற இனிய நூலை வடமொழியில் அருளியுள்ளார். இவர் பெயரால் நிறுவப்பெற்றுள்ள 'எறும்பி அறநிலையத்தின்(Erumbi Special Trust) கட்டளையொன்றால் பங்குனி உத்தரதன்று 'ஹனுமத் ஜயந்தி' என்ற உற்சவம் நடைபெற்ற வருகின்றது.

இத்தலத்து எம்பெருமானுக்குக் கைங்காரியம் செய்த இரண்டாவது ஆசாரியர் தொட்டையாச்சாரடியர் என்பவர். இராமாநுசர் தாம் நிறுவிய வைணசக் கோட்பாடுகள் இந்நிலவுலகம் முழுவதும் தழைத்தோங்க நியமித்தருளிய 74 சிம்மாசனாதி பகுதிகளில் முதல்வர் முதலியாண்டான் என்பதை நாம் அறிவோம். அவருடைய திருக்குமரர் கந்தாடையாண்டான் என்பவர். அவரது வழித்தோன்றல்களில் பத்தாம் தலைமுறையில் வந்தவர் கந்தாடை தேவராசார்யர். அவரது திருக்குமரர் குமாரபெரியப் பங்கார் என்பவர். இவரது மகனாரே சுவாமி தொட்டையாச்சாரியர். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் காஞ்சி வரதராசப்பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவர். இவர் 'வையம் கண்ட

கச்சித் திருநாள்' என்ற பெரும்புகழ் பெற்ற காஞ்சி தேவப்பெருமாள் வைகாசித் திருநாளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தவறாது எழுந்தருளுவது வழக்கம்.

ஒரு முறை திருமேனி பாங்கில்லாமையால் அங்குச் செல்ல முடியவில்லை. மூன்றாம் திருநாள் காலையில் காஞ்சி எம்பெருமானின் கருடசேவையை மனத்தில் எண்ணியவாறு தக்கான் குளக்கரையில் நித்திய கர்மாநுஷ்டானம் செய்த வண்ணம் வரதராசனை ஐந்து சுலோகங்கள் கொண்ட 'தேவராஜ பஞ்சகம்' மூலம் துதித்துத் தம் ஆற்றாமையை வெளியிட்டார் என்றும், அவரது பக்தியை உவந்தருளிய எம்பெருமான் கருடன் மீது அவருக்குக் காட்சி அளித்தான் என்றும் வரலாறு உண்டு.

எவ்வுள் கிடக்கும் பெருமலைதலவரலாறு

"தேன்உடைக் கமலத்து அயனொடு தேவர்
சென்று சென்று இறைஞ்சிட, பெருகு
வானிடை முதுநீர்க கங்கையின் கரைமேல்"[38]

(கமலம்- தாமரை : அயன் நான்முகன்)

இருப்பது வதரிகாச்சிரமம். இங்ஙனம் திருமங்கையாழ்வரால் சிறப்பிக்கப்பெற்ற திருவதரிக்காச்சிரமத்தில் சாலி ஹோத்ரர் என்ற மாமுனிவர் ஒருவர் இருந்தார். நீண்ட காலம் மகப்பேறு இன்றி இருந்த இவர்களுடைய பெற்றோர்கட்குச் சாலியாகத்தின் பயனால் பிறந்தவராதலால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. சாலி என்பது சம்பாநெல். ஒரு ஹோமத்திற்கு இருபத்தெட்டு சாலி நெற்கள் வீதம் நாளொன்றுக்கு ஆயிரம் ஹோமம் செய்வதாயும், இப்படி ஓராண்டு அனுட்டிப்பதாகும் சங்கற்பித்துக் கொண்டு செய்யப்பெற்ற ஹோமத்தின் பயனாகப் பிறந்தவர் இந்த முனிபுங்கவர்.

ஒரு சமயம் இம்முனிவர் மோட்சத்தை அடைய விருப்பமுடையவராக தவம் செய்ய உறுதி கொண்டு வீக்ஷாரண்யத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்த நாள் தை அமாவாசை. அன்று மாலை அங்குள்ள ஹ்ருத்தாபநாசன தீர்த்தத்தில் (மன நோய் தீர்க்கும் தீர்த்தம்) நீராடி ஓராண்டுக் காலம் பட்டினி

கிடந்து மௌனத்துடன் தவம் செய்ய வேண்டும் என்று சங்கற்பித்துக்கொண்டு தவத்தைத் தொடங்கினார் தீர்த்தத்தின் வடகரையில். நீண்ட நாள் உணவின்றி இருந்தமையால் அவருடைய உடலும் மிகவும் இளைத்தது. அடுத்து தை அமாவாசையும் வந்தது. அன்று அதிகாலை தொடங்கி பொறுக்கிச் சேர்த்த நெல்லை மூன்று பிடி அரிசியாக்கினார்; ஓராண்டுக் காலமாக அனுட்டித்துவரும் மௌன விரதத்தையும் உபவாசத்தையும் அன்றுடன் நிறைவு செய்ய நினைத்தார். மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தனி இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு அரிசியைச் சோறாக்கினார். அந்தச் சோற்றை ஆண்டவனுக்குப் படைத்து அதனை நான்கு கூறுகளாக்கி ஒரு கூறினை அதிதிக்காக வைத்து அதிதியை எதிர்நோக்கி வண்ணம் காத்திருந்தார்.

அந்தச் சமயத்தில் எம்பெருமான் வயது முதிர்ந்த அந்தனர் வடிவங்கொண்டு, இடக்கையில் தண்டம், குடை இவற்றுடனும் வலக்கையில் கமண்டலத்துடன், செருப்பக்காலுடனும் நீண்ட தூரம் பயணம் செய்து வருவதால் பசியினாலும் நீர்விடாயாலும் களைப்புற்ற நிலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து கொண்டிருந்தார். அந்த கோலத்தில் வரும் அதிதியைக் கண்ட முனிவர் தரித்தரன் தனத்தைக் கண்டதைப்போல் களிப்புற்றோர். ஆதிதியை முறைப்படி வணங்கி அவருக்கு அர்க்கியம், பாத்யம், ஆசமனீயங்கள் சமர்ப்பித்து நன்கு ஆராதித்து அவருடைய திருவடி கழுவிய தீர்த்தத்தை உண்டு அவரைக் கிழக்கு முகமாக வீற்றிருக்கச் செய்து அதிதியின் கூறான உணவை அவருக்கு இட்டார். கிழவரும் அதனை விரைவில் உண்டு மேலும் தேவையுள்ளவர்போல் காணப்பட்டார். முனிவரும் மூன்று கூறுகளையும் ஒவ்வொன்றாகப் படைத்தார். நான்காவது பகுதியை உண்டபின்னர்தான் பசியடங்கி மனநிறைவு கொண்டார் அதிதி.

உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டல்லவா? ஆகவே, வந்த அதிதி ''முனிவரே, எவ்வுள்ளில் (எந்த இடத்தில்) இளைப்புத் தீர நாம் உறங்கலாம்? அந்த இடத்தைக் காட்டும்'' என்று கேட்டார். முனிவர் தம்முடைய பர்ணசாலையைக் காட்டி ''இந்த உள்ளிலே திருக்கண் வளர்ந்தருள்க. அடியேன் தேவரீரின் அருகிலிருந்துகொண்டு திருக்கரத்தைப் பிடித்திடுகின்றேன்'' என்று

விண்ணப்பித்து அவருடைய அருகில் அமர்ந்தார். அதிதியோ சயனித்துக் கொள்வதற்குத் தெற்குப் பக்கம் தலையைச் சாய்த்தார். கணநேரத்திற்கு எம்பெருமான் முனிவருக்குத் தமது அசாதாரணமான திவ்விய மங்கள உருவத்தைக் காட்டி அவர் கோரிய சாயுச்சிய பதவியையும் அவருக்கு அளித்தார். அன்று முனிவருக்குக் காட்சி அளித்த அதே நிலையில் இன்றளவும் சயனித்துக் கிடக்கின்றார். நம் போலிருக்கும் சேவை சாதித் தருளுகின்றார். எம்பெருமான் 'தாம் சயனித்துக் கொள்ள வேண்டிய உள் எவ்வுள்?' என்று வினவ, முனிவரும் 'இவ்வுள்ளிலேயே திருக்கண் வளர்ந்தருள்க' என்று விண்ணப்பிக்க, எம்பெருமானும் அவ்விடத்தில் சயனித்துக் கிடந்தைமையால் எம்பெருமானுக்கு "எவ்வுள் கிடந்தான்" என்று திருநாமம் வழங்கலாயிற்று. திருமங்கையாழ்வாரும் 'எவ்வுள் கிடந்தான்" என்றும், 'எவ்வுள் பெருமலை' என்றும் மங்களாசாசனம் செய்துள்ளார்.

"நாகத்தணைக் குடந்தை வெஃகா திருவெவ்வுள்

நாகத்தணை அரங்கம் பேர் அன்பில்" 39

என்று நாகத்தணைமேல் பள்ளிகொண்டிருக்கும் தலங்களாகக் கும்பகோணம், காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில், திருவரங்கம், திருப்பேர் நகர் (கோவிலடி), அன்பில் முதலான இடங்களைக் குறிப்பிடுங்கால் திரு எவ்வுள்ளையும் சுட்டியுரைக்கிறார்.

அந்த 'திரு எவ்வுள்' என்ற திவ்விய தேசத்திற்கு இன்று நாம் புறப்படுகின்றோம். 'திரு எவ்வுள்ளூர்' என்று அன்று பெயர் பெற்ற தலம் இன்று திருவெள்ளூர் என்ற பெயரால் வழங்கி வருகின்றது. 'திரு எவ்வுள்ளூர்' என்ற பெயர் மருவி திருவெள்ளூர்' எனத் திரிந்து வழங்கி வந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டில் இதுவும் ஒன்று. இது சென்னைக்கு வடமேற்கில் 30 கல் தொலைவில் உள்ளது. சென்னை அரக்கோணம் தென்னிந்திய இருப்பூர்தி வழியல் திருவெள்ளூர் நிலையத்திருந்து இரண்டு கல் தூரத்தில் உள்ளது. நிலையத்திலிருந்து பேருந்து வசதி உண்டு.

குதிரை வண்டி, மாட்டு வண்டிகளும் கிடைக்கும். சென்னையிலிருந்து பேருந்து மூலம் இவ்வூரை அடையலாம், இருப்பூர்திப் பயணம் செய்தும் இவ்வூருக்குப் போகலாம். நாம் பேருந்து மூலமே இவ்வூருக்கு வருகின்றோம்.

பேருந்தில் வந்து கொண்டிருக்கும் போதே ஆழ்வார்களின் பாசுரங்கள் நம் சிந்தையில் குமிழியிடத் தொடங்குகின்றன. முதலில் திருவெள்ளுருக்கு அருகில் சென்னைக்குச் செல்லும் நெடுஞ்சாலையிலுள்ள திருமழிசை என்ற ஊரில் திருவரித்த 'பக்திசாரர்' என வழங்கும் திருமழிசையாழ்வாரின் பாசுரம் நம் நினைவுக்கு வருகின்றது.

"நாகத்(து) அணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்(து) அணை அரங்கம் பேர்அன்பில்-நாகத்(து)
அணைப்பற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன் ஆவான்"40

நாகம்- ஆதிசேடன்: குடந்தை-கும்பகோணம்: வெஃகா-யதோக்தகாரீ சந்நிதி (காஞ்சி: அரங்கம்-திரு அரங்கம்: பேர்-திருப்பேர் நகர்: அன்பில்,இலாலுகுடிக்கு அருகிலுள்ளது: ஆதிநெடுமால்-சர்வேசுவரன்: அணைப்பார்-அன்பர்)

திருக்குடந்தை, திருவெஃகா, திருவெவ்வுள்ளுர், திருவரங்கம், திருப்பேர்நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய இடங்களில் அரவணைமீது கிடந்தருள்வது அன்பர்களுடைய இதயத்தில் புகுவதற்காகவே என்று காரணங் கற்பிக்கின்றார் ஆழ்வார். எப்பொழுதும் எம்பெருமானுடன் அணைந்தேயிருக்க வேண்டுமென்று ஆசையுடையவர்கள் 'அணைப்பார்' எனப்படுவார்கள். அவர்களுடைய திருவுள்ளத்திலே பொருந்தின வனாக ஆவதற்காவே இருக்கும் எம்பெருமான் 'கருத்தன் ஆவான் என்று சுட்டப்பெறுகின்றான்.

இவ்விடத்தில் பிள்ளை உலகாசிரியரின் இன்சுவை மிக்க சூத்திரங்களையும் நினைந்து போற்றுகின்றோம்.

" திருமாலிருஞ் சோலைமலையே' என்கிறபடியே,
உகந்தருளின் நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும்

விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்"[41]

என்பது ஒரு சூத்திரம். " தெற்குத் திருமலையையும் திருப்பாற்கடலையும் என் தலையையும் ஒக்க விரும்பா நின்றான் ஸ்ரீ வைகுண்டத்தையும் திருவேங்கடத்தையும் என் சரீரத்தையும் ஒக்க விரும்பா நின்றான் என்றாரிறே ஆழ்வார்:

இப்படி ஒரோர் விருப்பத்தைப் பண்ணினான் என்ற இது எல்லாத் திருப்பதிகளிலும் பண்ணிய விருப்பத்தை ஒரோர் அவயவத்திலே பண்ணி நின்றான் என்னுமதற்கும் உபலட்சணம்" என்ற அதன் உரைப்பகுதியையும் சுவைக்கின்றோம். மேலும்,

"அங்குத்தை வாசம் சாதனம்:

இங்குத்தை வாசம் சாத்தியம்"[42]

(அங்குத்தை –அவ்விடத்தில்: சாசனம்-பயனை அடைவதற்குத் துணையாக இருப்பது: இங்குத்தை-இவ்விடம்: சாத்தியம்-அதனால் அடையும் பயன்)

என்ற மற்றொரு சூத்திரத்தையும் நினைக்கின்றோம். உகந்தருளின் நிலங்களிலே எம்பெருமான் விரும்பி வசிப்பது தக்க உபாயங்களாலே மக்களை அகப்படுத்திக் கொள்ளுகைக்கு: இம் மக்கள் திருந்த இவர்கள் மனங்களிலே தான் வசிக்கப்பெற்றது அந்தத் திவ்விய தேசங்களிலே நின்று பண்ணின கிருஷியின் பலன் ஆகும்.

ஆகவே, திவ்விய தேசங்களின் வாசம் உபயமாகவும், பக்தர்களுடைய இதயத்தின் வாசமே புருஷார்த்தமாகவும் (பயனாகவும்) இருக்கவும் என்றும், இது கிடைத்தவிட்டால் எம்பெருமானுக்குத் திவ்விய தேசவாதத்தில் விருப்பம் குறைந்துவிடும் என்றும் பெறவைக்கும் இன்சுவைமிக்க சூத்திரத்தின் பொருளையும் எண்ணி மகிழ்கின்றோம். அதற்கு "நாகத்தணைக் குடந்தை" என்ற பாசுரத்தையும் மூலமாகக் கொண்டதாகும். "மலைமேல் தான் நின்று என் மனத்துள் இருந்தானை" என்று நம்மாழ்வார் கூறுவதும் இச்சாதன-சாத்தியத்தைக் குறித்ததேயாகும். இக்கருத்துகள் எழும் நிலையில் பேருந்து திருமழிசையை வந்து அடைகின்றது. ஆழ்வார் பிறந்த ஊருக்கு வரும் பேறு

கிடைத்தமைக்கு மகிழ்கின்றோம். அவ்வூர் திருக்கோயில் கோபுரத்தைக் கண்டு ஒரு ‘கும்பிடு’ போடுகின்றோம்.

நின்றவூர் நித்திலம்தலவரலாறு

இராஜ சிம்மன் என்றும் பல்லவ அரசன் மிகுந்த சிவபக்தியுடையவன். சுமார் 1250 ஆண்டுகட்கு முன்னாக் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு அரசோச்சியவன் இன்று நீலப்பலகையின்(Blue Board) ஆதரவில் பாதுகாக்கப்பெறும் கைலாச நாதர் கோயிலைக் கட்டியவன். அவன் திருப்பணி தொடங்கிய அன்றே பூசலார் நாயனார் என்பவர் ஒரு கோயில் அமைக்க எண்ணினார். வெறும் கை முழம் போடுமா? கையில் ‘வெள்ளையப்பன்’ இல்லாது எப்படிக் கோயில் எழுப்புவது? மானசக் கோயில் ஒன்று எழுப்புகின்றார் தர்மனத்தகத்தில்.

“இமைபொழுதும், என்நெஞ்சில் நீங்காதான் தான் வாழ்க” என்று மணிவாசகர் குறிப்பிடும் ஆண்டவருக்கு அவன் இருக்கும் இடத்திலேயே கோயிலை எழுப்பிய பெருமை பூசலார் ஒருவருக்கே உண்டு. “உள்ளுவார் உள்ளத்தாய்” என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடும் அந்தர்யாமித்துவத்திற்குக் கோயில் எழுப்பியதாக வைணவ சமயத்தில் வரலாறு ஒன்றும் இல்லை. காடவர்கோன் காஞ்சியில் அமைத்த கற்றளி வேலையும் பூசலார் ‘நெடிதுநாள் நினைந்து செய்த’ சிந்தை ஆலயத்’ திருப்பணியும் ஒரே நாளில் நிறைவு பெறுகின்றன. இலிங்கப் பிரதிட்டை செய்து குடமுழுக்க விழா நடைபெற நாளையும் குறிப்பிடுகின்றான் பல்லவமன்னன். அன்று இரவில் சிவபெருமான் அரசனது கனவில் தோன்றி,

“நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புதுவோம் ; நீயிங்(கு)
ஒன்றிய செயலை நாளை

ஒழிந்துபின் கொள்வாய்''43

என்ற கூறி மறைந்தார். திடுக்கிட்டெழுந்த அரசன் பூசலார் வாழும் ஊரை அடைந்தான். அந்த ஊரில் ஆலயம் கட்டப்பெறும் சின்னம் ஒன்றும் தெரியவில்லை. ஊராரை விசாரித்துப் பூசலார் இருக்கும் இடம் அறிந்து அவரையே நேரில் உசாவினான் அவர் கனவையும் அவருக்கு எடுத்தியம்பினான். அரசன் கூறியதைக் கேட்ட பூசலார் இறைவனுடைய பெரும் கருணைத் திறத்தினைக் கேட்டுப் பேரானந்தம் அடைந்தார். தம்மையும் இறைவன் ஒரு பொருளாக மதித்தான் என்று எண்ண எண்ண அவர் மனம் பூரிப்பால் பெருகிற்று. அரசனும் பூசலாரின் பக்தியையும் இறைவனது பேரருளையும் கண்டு வியப்புற்றான். பூசலார் மன்கோயிலின் நினைவாகப் பிற்காலத்தார் ஒரு சிறிய கோயிலை எழுப்பியுள்ளனர்.இந்தப் பூசலாரைச் சேக்கிழார் பெருமான்,

"நீண்டசெஞ் சடையி னார்க்கு
நினைப்பினால் கோயி லாக்கிப்
பூண்டஅன்பு இடைஅ றாத
பூசலார் பொற்றாள் போற்றி''44

என்று மகிழ்ந்து போற்றுகின்றார்.இந்தப் 'பூசல் அன்பன்' வாழ்ந்த ஊர் திருநின்றவூராகும். எவ்வுள் கிடந்தானைச் சேவித்த நாம் திருநின்றவூர் எம்பெருமானைச் சேவிக்க அவாக் கொள்ளகின்றோம். எப்படியோ திருமங்கையாழ்வாருக்குத் தப்பிவிட்ட திருத்தலத்தை நாம் கண்டுகளிக்க வேண்டும் என்ற அவா நம்மை உந்துகின்றது.

திருவெள்ளூரிலிருந்து பேருந்து மூலம் இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம். மாலை 3-40க்கு வண்டியேறி 4-மணிக்குத் திருநின்றவூர் நிலையத்திற்கு வருகின்றோம். நிலையத்திலிருந்து தென்திசையில் ஒரு கல் தொலைவிலுள்ளது திருநின்றவூர் என்னும் திருப்பதி. நிலையத்திலிருந்து நேர்வழி உண்டு: சரியாக வண்டி வசதி இல்லை. எவரும் அதை எதிர்பார்ப்பதும் இல்லை. நாமும் வாகன வசதி ஒன்றையும் எதிர்பாராமல் நடையைக் கட்டுகின்றோம்- குறுக்கு வழியாக, அரைமணி நேரத்தில் திருக்கோயிலை அடைகின்றோம்.

ஊர் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஊரே. இதனால் செல்வச் செழிப்புடைய ஊராக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். இதனால் இந்த வூருக்கு இலக்குமி பொருந்திய தலம் எனப் பொருள்படும் 'திருநின்றவூர்' என்ற பெயர் ஏற்பட்டதோ என்ற ஊகத்தில் இறங்குகின்றோம்.

இந்தத் தலத்திற்கு எந்த ஆழ்வாரும் வந்து இத்தலத்து எம்பெருமனை மங்களாசாசனம் செய்யவில்லை. எண்பத்தாறு திவ்விய தேசங்களைச் சேவித்த திருமங்கையாழ்வார் கூட இங்கு வராதது ஏனோ என்று சிந்திக்கின்றோம். ஆயினும், இந்த ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை இரண்டு பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இந்தவூர் எம்பெருமானுக்கப் 'பத்தராவிப் பொருமாள்' என்ற பெயரும் உண்டு என்று கேள்வியுற்றிருக்கின்றோம். பக்தர்களின் உயிருக்கு உயிராய் இருப்பவர் என்பது இதன் பொருள். அர்ச்சாவதார சேவராசிகரான திருமங்கையாழ்வாருடைய பாசுரத்தைப் பெறவேண்டும் என்ற இத்தலத்து எம்பெருமான் இந்த ஆழ்வார் திரக்கடல் மல்லை எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பொழுதும், திருக்கண்ணமங்கை எம்பெருமானுக்குச் சொல்மாலைகள் சாத்தும்கோதும் அந்தர்யாமியாக ஆழ்வார் திருவுள்ளத்தில் சேவை சாதிக்கின்றார். ஆழ்வாரும் கிடைத்தற்கரிய முத்து கிடைத்ததே என்ற பெருமகிழ்ச்சியுடன், எக்களிப்புடன், "நின்றவூர் நித்திலத்தை" என்றும், "நின்றவூர் நின்ற நித்திலத்தொத்தினை" என்றும் மங்களாசாசனம் செய்தருளுகின்றார். இரண்டாவது திருக்குறிப்பில் அந்த எம்பெருமான் சேவை சாதிக்கும் திருக்கோலத்தையே காட்டிவிடுகின்றார். 'நின்றநித்திலத்தொத்து' என்ற தொடரில் எம்பெருமானின் 'நின்றிருக்கோலம்' காட்டபட பெறுவதைக்கண்டு பேரானந்தம் அடைகின்றோம் ஆழ்வாரின் திருவுள்ளத்தில் அந்தர்யாமியாகக் காட்சி அளித்தபோதும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்திலேயே காட்சி அளித்த அற்புதத்தையும் சிந்திக்கின்றோம். ஆழ்வார் இந்தத் திவ்விய தேசத்திற்கு வந்து மங்களா சாசனம் செய்தது போன்ற பெருமையையும் பெற்றவிடுகின்றார்.

‘‘என்னால் தன்னை இன் தமிழ் பாடிய ஈசன்’’, ‘‘தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்’’, ‘‘என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்தநாதன்’’ என்று நம்மாழ்வார் குறிப்பிடும் ‘தன்னை என்னாக்கும்’’ எம்பெருமானின் தடங்கருணைத் திறத்திணை வியந்து போற்றுகின்றோம்.

திருமங்கையாழ்வார் இத்திருப்பதிக்கு வந்ததாகச் கருதுவோரும் உண்டு. ‘‘ஆழ்வார் எவ்வுள் கிடந்தானை சேவித்து பின்பு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருள்வதற்கு முன்னே திருநின்றவூரைச் சேர்ந்தார்.

அல்லிக்கேணி அச்சுதன்தலவரலாறு

பண்டு நடைபெற்ற பாரதப் பெரும் போரில் பார்ததனுக்குத் தேரூர்ந்து கீதையை உபதேசித்த வரலாற்றை நாம் அறிவோம். அன்று பார்த்தனுக்கு அஞ்ஞான இருளை அகற்றிய கீதையின் பொருள் இன்று பாரிலுள்ள மக்கட்ளெல்லாம் பயன்பட்டு வருகின்றது. பாரதப் போரின் முதல் நாளில் போர்த் தொடக்கத்திலே. எதிர் நின்ற வீரர்கள் யாவரும் தன் உறவினராய் இருக்கக் கண்டு, மனம் சோர்ந்து, வாள் தடக்கை வில்நெகிழத் திகைத்துத் தேர்த்தட்டில் இருக்கின்றான் பார்த்தன். சாரதியாக அமைந்த கண்ணன் தத்தவப் பொருளை விளக்கி அவன் மயக்கத்தைப் போக்கத் தொடங்குகின்றான்.

‘‘பலன் கருதாது உன் கடமைகளைச் செய்யக் கடவாய்’’ என்பதே அவன் உரைத்த தத்துவத்தின் சாரம். பாரதக் கதையில் கண்ணன் அர்ச்சுனனுக்குக் கீதையை உபதேசம் செய்ய நேர்ந்த இடமும் காலமும் மக்கள் மனத்தில் ஆழப்பதிய வேண்டியவை அன்று அர்ச்சுனனுக்குக் காட்டின் கீதையின் ஒளியில் நாம் நடந்து வாழ்க்கையை நடத்த வேண்டியவர்கள்.

‘‘அர்ச்சுனா, இப்போது உன் மனம் மாயையின் வசப்பட்டள்ளது. அதுதான் இப்போது உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றைப் பிறிதொன்றாகவும் காட்டி நிற்கின்றது. மனம் அந்த மாயையின் ஆற்றலுக்கு உட்படும்பொழுது, பொருள்களின் நிலையை உள்ளபடி அறியும் தத்துவ ஞானம் உன்னிடம் தோன்றவில்லை.

மாயையின் ஆற்றலால் உன்னிடம் இப்போது தோன்றியுள்ளது விபரீத ஞானம். அதன் காரணமாகவே, நித்தியமான ஆன்மாவுக்கு யாதொரு தொடர்பும் படாமல் அநித்தியமான உடலையே பற்றிய தாய் முதலியோரிடத்துச் சுற்றத்தவர் என்ற பொய் அன்பு உன்னிடம் நிலைபெற்று நிற்கின்றது'' என்று கூறுகின்றான். மேலும், அவன் தரும் விளக்கம்: "வெற்றி வீரனே, இந்த மனம் மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகளின் துணைக்கொண்டு ஊற்றின்பம், சுவை, ஒளி, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் துய்க்கின்றது. இங்ஙனம் அநுபவிக்குங்கால் அது சத்துவம், இராஜசம், தாமசம் என்ற முக்குணங்களுடனும் ; காமம், கோபம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் வேறு ஆறு உணர்ச்சிகளுடனும் நல்லுறவுகொண்டு ஆட்சி புரிகின்றது. இதனால் தூய நல் அறிவன் என்ற தோன்றல் (புருஷன்) தோன்றுவதற்கு வழி இல்லாது போகின்றது. இங்ஙனம் ஐம்பொறிகட்கு வசப்பட்டு அவற்றின் புலன்களிலே முக்குணங்களோடும் மற்றும் பல தீய சிந்தைகளோடும் மனத்தை அதன் போக்குப்படி யதேச்சையாக விட்டிடாமல் அடக்கிவைத்தால் தத்துவ ஞானம் தோன்றும்''.

இன்னும் கேட்பாயாக:

"அந்தநல் அறிவன் தன்னை
அறிந்தவர் அறிஞ ராவார் ;
தந்தையால் வகுக்கப் பெற்ற
சராசரப் பொருள்கள் தோறும்
வந்தஆன் தீம்பால் நெய்போல்
உயிர்க்குஉயிர் ஆகி வாழும்
பந்தம்அது உணர்ந்து நேரே''[45]

(அறிவன்-சுத்த ஞானம் என்ற புருஷன் ; தந்தை- இறைவன் ; சரம் அசரப் பொருள்கள்-இயங்கு திணைப் பொருள்களும் நிலைத்திணைப் பொருள்களும்; ஆன்வந்த தீம்பால்-பசுவினிடமாக வந்த இனியபால் ; உயிர்க்கு உயிராகி-

சீவான்மாக்களுள்ளும் உறையும் பரமான்மாவாய் ; பந்தம் அது- உறவினை(சரீர – சரீரிபாவனை)

எல்லாச் சீவான்மாக்களிடத்தும் பரமான்மா ஒரு தன்மையாகப் பொருந்தியிருக்கையில் அவற்றுள் சிலவற்றைப் பகையாகவும், சிலவற்றை நட்பாகவும் கருதுவது மாயசெயலேயன்றி வேறு அன்று என்பதை உணர்வாயாய.''

''மேலும் கூறுகின்றேன், கேள்:

''உம்பரும் முனிவர் தாமும்
யாவரும் உணரா ஒன்றை
இம்பரின் உனக்கு நானே
இசைவுற உணர்த்தா நின்றேன் ;''[46]

''ஐம்பெரும் பூதத் தானும்
அமைத்தன் உடலம் யார்க்கும்
நம்பனும் ஒருவன் உள்ளே
ஞானியாய் நடத்து கின்றான்''[47]

(உம்பர்-தேவர் ; ஒன்றை – ஒரு தத்துவப் பொருளை; இம்பர் -இவ்விடத்து; இசைவு உற – பொருந்தும்படி; உடலம் -உடல்கள் ; யார்க்கும் -எல்லாப் பிராணிகட்கும் ; நம்பன் - இறைவன்)

கடைப் பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பனவற்றினுள்ளே மனிதன் புகுந்து அவற்றைக் கொண்டு பல்வேறு தொழில்களை நடத்துவதைப்போலவே, இறைவனும் உயிருள்ள பொருள்களிடத்தும். அந்தர்யாமியாகத் தங்கிருந்து தொழில் நடத்துகின்றான் என்பதைத் தெளிவாயாக.

''என்னை நீ புகலக் கேண்மோ
எங்குமாய் யாவும் ஆகி
மன்னிய பொருளும் யானே;
மறைக்கெலாம் முடிவும் யானே''[48]

(புகல-சொல்ல; கேண்மா-கேட்பாயாக; மன்னிய-அழியாது நிலைபெற்ற; பொருள்-பரம்பொருள்; மறை –வேதம்)

இங்ஙனம் தான் உபதேசித்த உண்மைப் பொருள் பார்த்தனுக்குக் கட்புலனாகி அவனுடைய திகைப்பைத் தீரவொழித்தற்குத்தன் நிலையை "விசுவரூபமாகக்" காட்டுகின்றான் பார்த்தசாரதியாகிய கண்ணன். இதனை வில்லிபுத்தூரார்,

"நின்னிடை மயக்கும் இந்த
நேயமும் ஒழிக்' என்று
தன்னிலை அவற்குக் காட்டித்
தத்துவம் தெளிவித் தானே."[49]

(மயக்கு-திகைப்பு; நேயம்-உறவினரென்னும், நண்பினரென்றும் கொண்ட அபிமானம் ; தத்துவம்-உண்மை உணர்வு)

என்று விளக்குகின்றார்.

நீர்மலை நீர்வண்ணன்தலவரலாறு

எம்பெருமான் எண்ணற்ற கல்யாண குணங்களையுடையவன் என்பது வைணவர்களின் கொள்கை. இவற்றுள் எம்பெருமாட்டியின் கருஷகாரத்தின் ஊன்றுதலினால் அவனிடம் மறைந்து கிடந்த வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி முதலான குணங்கள் தலையெடுத்து நின்று சேதநனுக்கு உதவுகின்றன என்பதாகச் சாத்திரங்கள் கூறும். ஈண்டு வாத்சல்யம் என்பது, கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. சுவாமித்துவம் என்பது, உடையவனாய் இருக்கும் இருப்பு. சௌசீல்யம் என்பது, உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக் கலத்தல். சௌலப்பியம் என்பது, அறிவு. சக்தி என்பது, சாமர்த்தியம். இந்த ஆறினுள் முதலில் குறிப்பிட்ட நான்கு குணங்களும் சேதநன் இறைவனைப் பற்றுவதற்குத் துணை செய்யக்கூடியவை. இறுதியாகவுள்ள இரண்டு குணங்களும் பகவான் தன்னை வந்தடைந்த சேதநனுடைய காரியத்தைச் செய்வதற்குப் பயன்படுபவை.

ஈண்டு குறிப்பிட்ட 'முமுட்சுப்படி' என்னும் நூலே, "இங்கச் சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாதாரம்" என்று குறிப்பிடுகின்றது. கண்ணன் கீதையில், பரமபுருடனாகிய தன்னை மலர்கள் முதலிய பொருள்களைக் கொண்டு வழிபட்டு வாழவேண்டும் என்று கருதும் சேதநன் தன் கையில் கிடைத்ததொன்றைத் திருமேனியாய் ஏறியருளப் பண்ணி "எம்பெருமானே, இங்கு நீர் எழுந்தருளியிருக்க வேண்டும்" என்று வேண்டும்போது அதற்கு இணங்கித் தான் பரநிலையில் செய்யும் விருப்பத்தை அந்தத் திருமேனியில் செய்யும் விருப்பத்தை அந்தத் திருமேனியில் செய்து

மேலே குறிப்பிட்ட குணங்கள் யாவற்றையும் அர்ச்சை வடிவதாக எழுந்தருளியிருக்கும் எல்லா எம்பெருமான்களிடமும் காணலாம் என்பது மணவாள மாமுனிகள் போன்ற ஞானச் செல்வர்களின் திருவுள்ளம். இந்த எண்ண அலைகள் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் சென்னையிலிருந்த நிலையில் திருநீர்மலை என்ற திவ்விய தேசத்தை நோக்கிப் புறப்படுகின்றோம்-இருப்பூர்தியில் வண்டியில் சென்று கொண்டிருக்கும் பொழுதே அத்தலத்து எம்பெருமான் நம் மனத்தில் அந்தர்யாமியாக எழுந்தருளி விடுகின்றான்.

நீர்மலை நீல்வண்ணனை இரண்டு ஆழ்வார்கள் 'சொல்மாலைகளால்' மங்களாசாசனம் செய்துள்ளனர் பூதத்தாழ்வார்,

"பயின்றது அரங்கம், திருக்கோட்டி; பல்நாள்
பயின்றதுவும் வேங்கடமே; பல்நாள் பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்."[50]

(பயின்றது-பழகி வாழ்ந்தது; பலநாள்-அநாதி காலம் ;அணி-அழகு; திகழும்-விளங்கும் ; மணி-நீலமணி; மால்-எம்பெருமான்)

என்று போற்றியுரைப்பர். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு எம்பெருமான் கோயில்கொண்டுள்ள திவ்விய தேசங்களில் திருவரங்கம், திருக்கோட்டியூர், திருமலை என்னும் சிலவற்றைப் பேசி அநுபவிக்கும் போது 'அணி திகழும்

என்னும் சோலை அணி நீர்மலை' என்று சிறப்பித்து இந்தத் திவ்விய தேசத்தைக் குறிப்பிடுகின்றார்.

'எழில்கொழிக்கும் சோலைகளை உடையதாய் இந்நிலவுகினுக்கு ஆபரணம் போன்றதாய் இருப்பது திருநீர்மலை' என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். மேலும் திருவரங்கம், திருவேங்கடம், திருக்கோட்டியூர் ஆகிய திவ்விய தேசங்களைப் போலவே, திருநீர்மலையும் மிகப் பழமையான திருப்பதி என்பதும் இந்த ஆழ்வார் வாக்கினால் தெளிவாகின்றது.

திருநீர்மலை எம்பெருமான்மீது திருமங்கையாழ்வாருக்கு ஒரு தனி அன்பு உண்டு. இதனைப் பல பாசுரங்களில் வெளியிடுகின்றார். நாயகி நிலையில் இருந்து பேசுவதை, "போதுமோ நீர்மலைக்கு என்னும்" என்றும், "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்" என்றும், "நீர்மலை என்று வாய்வெருவினான்" என்றும் அவளுடைய திருத்தாயார் வாக்கில் காணலாம். ஆழ்வார் நாயகி திருநாகைத் திருப்பதி எம்பெருமான் பேரழகில் ஈடுபட்டுத் தமது நெஞ்சைப் பறிகொடுத்து நிற்கின்றாள். தன்மை மறந்தது போல் திருப்பதியையும் மறக்கின்றான். அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் இனங்கண்டு கொள்ள முடியவில்லை.

"முடிச்சோதி யாய்! உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?" 51

(முடிக்சோதி-கிரீடத்தின் பேரொளி, முகச்சோதி-திருமுகமண்டலத்தின் பேரொளி,அடிசத்சோதி- கழலிணையின் பேரொளி)

என்று நம்மாழ்வார் கூறுவது போல், முகத்தை நேரே பார்த்து முன்னலையாக்கிச் சொற்கள் கூறமுடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுவதால் நீர்தலையார் கொல்? என்று ஐயுறுகின்றாள். தலைவனது உருவெளிப்பாட்டில் நலியும் தலைவி தோழியிடம் சொல்லுவதுபோல் இப்பாசுரம் அமைந்துள்ளது.

திருஇடஎந்தை எம்பெருமான்தலவரலாறு

“சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்” என்ற கொள்கையில் ஊற்றமுடைய ஆழ்வார்கள் எம்பெருமானின் அநுபவத்தைப் பலவிதமாகப் பெறுவர் அவர்களிடம் ஞானம் மீதூர்ந்து நிற்கும்பொழுது எம்பெருமானின் திருநாமங்களைச் சொல்லியநுபவிப்பர், அவனுடைய திவ்விய மங்கள வடிவழகை வருணித்து அனுபவிப்பவர், அவ்விடங்களில் ஆதாரம் மிக்க பாகவதர்களின் பெருமைகளைப் பகர்ந்து அநுபவிப்பவர். அவர்களிடம் பக்தி மீதூர்ந்து நிற்கும்பொழுது அது காதலாகக் பரிணமித்துத் தாமும் தாமான நிலையை இழந்து பிராட்டி மாருடைய தன்மையை அடைவர். அந்நிலையக் கேற்பப் பாசுரங்களம் வேற்றுவாயாலே வெளிப்படும். இந்நிலைமைகளையே ‘ஆசாரிய ஹிருதயம்’,

“ஞானத்தில் தம்பேச்சு;

பிரேமத்தில் பெண்பேச்சு”[52]

(பிரேமம்-காதல்,அன்பு)

ஆழ்வார்கள் நாயகி நிலையிலிருந்து பேசும் பொழுது தாய் சொல்லுவதுபோலவும், தலைமகள் சொல்லுவது போலவும், தோழி சொல்லுவது போலவும் பாசுரங்கள் அமையும். இங்ஙனம் பாசுரங்கள் பலவிதமாக வெளிவந்தாலும் பாசுரங்களைப் பகர்பவர் ஆழ்வார்களேயாவர். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பிரிந்து சென்றாலும், அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்குமாப்போலே, இம்மூன்று நிலைமைகளில் ‘சொல்மாலைகள்’ வடிவு கொண்டாலும், “மன்னுமா மாட மங்கையர் தலைவன்

மானவேல் கலியன் வாயொலிகள்” என்று ஆழ்வார் பரசுராமாகவே தலைக்கட்டும். நாயகி வாக்காக வடிவு கொள்ளும் பதிகங்களின் இறுதிப் பாசுரம் ஆழ்வார் தாமான நிலையிலிருந்து பேசுவது போலவே நிறைவுபெறும்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் திருமல்லையிலிந்து சற்றேறக்குறைய ஐந்து கல் தொலைவிலுள்ளது இத்திருப்பதி. இதுவும் கடற்கரைப் பகுதியிலுள்ளது. மாமல்லபுரத்திலிருந்து சென்னைசெல்லும்

பேருந்தில் ஏறிச் சென்று இவ்வூரருகில் இறங்கி ஒரு ஃபர்லாங் தூரம் நடந்து சென்றால் திருக்கோயிலை அடையலாம். திருவிடவெந்தை மிகவும் சிறிய ஊரே ஆனால் அழகான சூழ்நிலையில் அமைந்துள்ளது. இந்தத் திருப்பதி எம்பெருமான் திருமங்கையாழ்வாரால் மங்காளாசாசனம் செய்யப் பெற்றுள்ளார். இந்த ஆழ்வாரைத் தவிர வேறு ஆழ்வார்கள் இத்தலத்து எம்பெருமானைப் பாடவில்லை. ஆனால் இவர் திரமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தை மிகவும் கவர்ந்தவராகக் காணப்பெறுகின்றார். திருமலைக்குச் சென்று ஏழுமலையானை மங்களாசாசனம் செய்யும் பொழுதும் இவர் இந்த ஆழ்வாரின் திருவுள்ளத்தில் இடம் பெற்றிருந்தமையைக் காணலாம்.

“ஏத்துவார்தம் மனத்துள் ளான், இட
வெந்தை மேவிய எம்பிரான்,
தீர்த்தநீர்த் தடம்சோலை சூழ்திரு
வேங்க டம்அடை நெஞ்சமே”[53]

(ஏத்துவார்தம்-துப்பவர்களுடைய ;மேவிய-பொருந்திய ;தடஞ்சோலை-பெரியசோலை) என்ற பாசுரப்பகதியால் இதனை அறியலாம்.

திருக்கோயிலை நோக்கி நடந்து செல்லும்போது திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் ஒன்றின்பின் ஒன்றாக நம் சிந்தையில் எழத்தொடங்குகின்றன. இத்திருப்பதி எம்பெருமானைப்பற்றிய பதிகம் ‘தாய்ப்பாசுரங்களாக’ நடைபெறுகின்றது. இதனால் ஆழ்வாரிடம் நாயகியின் நிலை ஒரு புறத்திலும் தாயின் நிலை மற்றொரு புறத்திலும் எழுவதைக் காண்கின்றோம் பெற்றோர் அல்லது உறவினர்கள் துணையின்றி தானாகவே புணர்ந்து தலைவனுடைய மேம்பாட்டிலே மிகவும் ஈடுபட்டுத் தான் பிறந்த குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் ‘அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழேன்’ என்ற பதற்றத்தையுடைய வளாயிருப்பவள் மகள் பெற்ற வளர்த்துப் பெண் பிள்ளை தக்க பரவம் எய்தினவுடன் தலைசனிடமுள்ள அன்பின் மிகுதியால் அவளிருப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமென்று பதறுங்கால் படிகடந்து புறப்படுதல் தான் பிறந்த குலத்தின் பெருமைக்கச் சிறிதும் பொருந்தாதென்று தடுத்து

நிற்பவள் தாய். இந்த இரண்டு மனநிலைகளும் ஆழ்வார் மனத்தில் நடைபெறுவதால் எம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வார்க்கு விரைவு உண்டானமையும், தாம் பதறக்கூடாது என்கின்ற எண்ணம் உண்டானமையும், புலனாவதை அறியலாம். அப்பெருமானுடைய வைலக்ஷண்யத்தை(தனிச்சிறப்பினை) நோக்கும் பொழுது பதற்றமும்,தம் சொருபத்தை நோக்குமளவில் தாம் பதறக் கூடாது என்ற எண்ணமும் உண்டாகும்.

இந்த இரண்டு வகையான மனநிலைகளும் பாசுரங்களில் நிழலிடுவதைக் காணலாம். இங்குத் தாய் நிலையிலுள்ளது ஆழ்வாருடைய அந்தக்கரணங்களுள் ஒன்றான 'நெஞ்சம்' அல்லது 'மனம் என்பதையும், அவ்வந்தக் கரணங்களுள் வேறுபட்ட சீவான்மாகிய ஆழ்வார் தாமே இங்குத் 'தலைவியாகக்' கூறுப்பெற்றவர் என்பதையும் எண்ணி உணர்தல் வேண்டும்

கடல் மல்லைக் கிடக்கும் கரும்பு தலவரலாறு

தெய்வீக வாழ்க்கை வாழ்ந்த மக்களின் பேச்சுக்கே ஒரு தனியான வேகம் உண்டு. அவர்களுடைய உபதேச மொழிகளுக்கு உள்ள ஆற்றல் வெறும் படிப்பும் அறிவும் படைத்தவர்களின் அறவுரைக்கு இருப்பதில்லை. அத்தகைய முனிபுங்கவர்கள் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பேசுகின்றது. பழங்காலத்து முனிவர்களைப் போன்றவர் நம்முடைய காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ணன். அவர் நூல் ஒன்றும் எழுதவில்லை; சொற்பொழிவும் செய்யவில்லை. தூய்மையான துறவியாக வாழ்ந்து மறைந்த பெரியார் அவர். பக்தியுன் தம் அருகில் அமர்ந்து கேட்ட சீடர்களுடன் பேசிய பேச்சே அவருடைய அருள் மொழிகள் ; திருமொழிகள். அப்படி அவர் பேசியவற்றைக் கேட்ட சீடர்கள் பிறகு அந்தத் திருமொழிகளை எழுதி வைத்துள்ளனர்.

ஒரு சமயம் பகவான் இராமகிருஷ்ணர் இவ்வாறு சொன்னார்: பசு பால் தருகின்றது. இந்தப் பால் பசுவின் உடலில் ஓடும் குருதியில் கலந்து அதன் உடல் முழுவதுமே உள்ளது. ஆயினும், பசுவின் காதைப் பிழிந்தால் பால் வருமா? வராது. பசுவின் மடியிலுள்ள காம்புகளில் தான் பால்சுரக்கும். உலகமெல்லாம் கடவுள் என்பது உண்மையே. ஆயினும் பசுவின் உடலில் பால் சுரக்கும் மடியைப்

போன்றது திவ்விய தேசங்களின் மகிமை. அங்கே பக்தர்கள் சென்று அந்தத் தலங்களில் சுரக்கும் பக்தியைப் பெற்று, பகவானை அடைகின்றனர்.

தலைமுறை தலைமுறையாகப் பலப்பல பக்தர்கள் தவமும் தியானமும் செய்த அந்தத் திருத்தலங்களில் ஆண்டவன் தன் தரிசனத்தை எளிதில் கிட்டும்படி செய்கின்றான். எண்ணற்ற பக்தர்களுடைய தவம், செபம், தியானம், பூசை, பிராத்தனை இவற்றின் ஒளி அங்கே படிந்து கிடக்கின்றது. அஃது அவ்விடம் பக்தியுடன் செல்லும் மக்களின் உணர்ச்சியைத் தன் மயமாக்கும். பக்தர்களின் கால் தூசி பட்டாலுமே போதும் என்று சொல்வதன் தத்துவம் இதுதான்.

கோடிக்கணக்கான பக்தர்கள்-படித்தவர்கள், படிப்பில்லாத பாமர மக்கள்- விழுந்து புரண்டு வழிபட்ட இடங்களுக்குத் தனியொரு ஆற்றல் உண்டு. உலக வாழ்க்கையையும் ஆசைகளையும் நீக்கியவர்கள் உள்ளம் உருகி ஆடியும் பாடியும் புனிதமாக்கிய தலங்களுக்கு நாமும் சென்று நம் உள்ளத்தை ஆண்டவன் திருவடிகளில் சமர்ப்பித்தால் நம்முடைய கல்மனம் உருகும். ஆகவே அத்தகைய இடங்களில் எங்கும் பரவி நிற்கும் ஈசனை எளிதில் காணலாம்.

“எந்த இடத்தில் பூமியைத் தோண்டினாலும் நீர் எடுக்கலாம். ஆனால் சில இடங்களில் ஏற்கனவே கிணறும், குளமும், வாவியும், ஏரியும் தயராக உள்ளன. அவற்றை நாம் அடைந்து எளிதாக நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ளலாம் அல்லவா? இத்தகைய நீர் நிலைகளைப் போன்றவையே திருக்கோயிலும், திவ்விய தேசங்களும். அவ்விடங்களை அடைந்து நம் பக்தி வேட்கையைச் சிரமமின்றித் தணித்துக் கொள்ளலாம்.

இத்தகைய திவ்விய தேசங்களைச் சரியான முறையில் பயனபடுத்திக் கொள்ளுதல் நம் கடமை. மாடுகள் வயிறு நிறையப் புல்லை மேய்ந்து விட்டு ஓரிடத்தில் படுத்து அசைபோடுவது போல் புண்ணியத் தலங்கட்டுப் போய் பூசை பிராத்தனை முதலிய வழிபாடுகளைச் செய்தான பிறகு தல மகிமையின் பயனாக அடைந்த புனித எண்ணங்களை நாம் அசைபோட வேண்டும். யாத்திரை முடிந்ததும் கடமை தீர்ந்துவிட்டது என்று கருதிப் பக்தியையும் புனித

எண்ணங்களையும் அங்கேயே விட்டுவிடாமல் தனிமையான இடத்தைத் தேடி அமர்ந்து தியானத்தில் மனத்தைச் செலுத்துதல் வேண்டும், அடைந்த பக்தியை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில் அடைந்த பயனை விரைவில் இழந்து விடுவோம்.''

"ஆடிப்பாடி அரங்க ஓ என்று
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆடநாம்பெறில், கங்கைநீர்குடைந்து
ஆடும்வேட்கைஎன் ஆவதே"[54]

என்ற 'பெருமாள் திருமொழியின்'(2:2) பகுதியில் இத்தகைய கருத்து

அமைந்துள்ளமை கண்டு மகிழலாம்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் 'மகாபலிபுரம்' (மாமல்லபுரம்) என்ற தலத்தை நோக்கிப் புறப்படுகின்றோம். ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளிய தொண்டை நாட்டுத் தலங்களுள் இதுவும் ஒன்று. இந்த ஊருக்குச் சென்னையிலிருந்தும் செல்லலாம். செங்கற்பட்டிலிருந்தும் செல்லலாம். பேருந்து வசதி உண்டு. 'கோயில் நகரமாகிய' காஞ்சி யாத்திரையை முடித்துக் கொண்டு இங்கு வரலாம். காஞ்சியிலிருந்து நேர் பேருந்து வழி உள்ளது. நாம் காஞ்சியிலிருந்து பேருந்து மூலம் மாமல்லப்புரத்திற்குப் போகின்றோம்.

திருஅயிந்திரபுரத்துத் தெய்வநாயகன் தலவரலாறு

எம்பெருமானுடைய அர்ச்சவதாரம் எப்பொழுதும் நம்மருகில் நிலைப்பெற்றுக் கண்ணால் கண்டுகளிப்பதற்கு இடந்தருகின்றது.

"அண்டர்கோன் அணிஅரங்கண் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே."[55]

என்ற திருப்பாணாழ்வாரின் அனுபவம் அதனை நன்கு உறுதி செய்கின்றது. நாம் எம்பெருமானைப் பற்றுவதற்கு எம்பெருமானுடைய சௌலப்பிய குணமே நமக்குத் துணையா உள்ளது. அந்த சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்.

அர்ச்சவதாரத்தில் எம்பெருமான் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாக இருத்தலைக் காண்கிறோம். இங்ஙனம் ஆயுதங்களை எப்பொழுதும் தாங்கிக் கொண்டிருத்தல் வன்மைமிக்க வீரனுடைய செயலாகும். தன்னை வந்தடைந்த பக்தர்களின் விரோதிகளைப் போக்குவதற்கு இப்படைகள் பயன்படுகின்றன. இவ்வாயுதங்களைத் தாங்கும் வன்மை மட்டிலும் போதிய தன்று, விரோதிகள் இன்னவை என்பதையும் அவற்றைப் போக்கும் முறைகளையும் நன்கு அறிந்தவனாய் இருத்தல் வேண்டும். எனவே, எம்பெருமான் தன்னைப் பற்றின் நம்முடைய காரியத்தைச் செய்யும் பொழுது பயன்படுபவையான ஞானம். சக்தி என்ற திருக்குணங்கட்கு ஒளி தருபவை திவ்விய ஆயுதங்கள் என்று அறிகின்றோம்.

நாம் செய்த குற்றங்களை நினைத்து “அந்தோ! இத்தனைப் பிழைகளை இழைத்த நாம் எங்ஙனம் அத்துணை உயரிய எம்பெருமானைச் சென்றடைவது?” என அஞ்சி அகலாதிருத்தற் பொருட்டே அவருடைய திருக்கை அபயமுத்தரையுடன் சேவை அளிக்கிறது.

இஃது உங்கள் குற்றங்களை நினைத்து நீங்கள் மனங்கவன்று அஞ்சுதல் வேண்டா, என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன் என்னும் அன்பைக் காட்டும் வாத்சல்யத்தின் அறிகுறியாகும். எம்பெருமான் தலையில் கவித்திருக்கும் இரத்தின் முடி அவன் எல்லா உலகங்கட்கும் தலைவனாயிருப்பதனை அறிவிப்பதாகும்.அன்பர்களைக் காணுங்கால் எம்பெருமானுக்கு உண்டாகும் முகமலர்ச்சியும் புன்சிரிப்பும் அவர்களுடன் புரையறக்கலக்கும் சீலகுணத்தைத் தெரிவிப்பனவாகும். ஆசனபதுமத்தில் அழுந்தி நிற்கும் எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளும் அனைவரும் பற்றுதற்கு இடம் தந்து நிற்கின்றன. இத்தன்மை எம்பெருமானின் சௌலப்பியத்தை வெளிப்படுத்துகின்றது.

“திருக்கையிலே பிடித்த திவ்வியாயுதங்களும், வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆசனபத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்”

என்று முமுட்சுப்படி வாக்கியத்தில் குறிப்பியப்பெறும் எம்பெருமானின் நிலையே நமக்குப் புகலிடமாகும். “க்யூ” வரிசையில் பல மணிநேரம் நின்று நடந்து சென்று திருவேங்கடமுடையானைச் சேவிக்கும் எண்ணற்ற பக்தர்கள் இந்த அநுபத்தைப் பெற்றிருப்பார்கள் என்பது உறுதி. இங்ஙனம் அவனைச்சேவிக்கும் பக்தர்கள்,

“முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?”[56]

என்று நம்மாழ்வார் பெற்ற அநுபவத்தைத் தாமும் பெறுவதை நன்கு உணர்வார்கள்.

திருப்பாதிரிப் புலியூரில் ஒரு விடுதியில் தங்கி அதிகாலையில் நீராடி, தூய ஆடைகள் அணிந்து திருக்கோயிலுக்குப் போகச் சுத்தமாக இருக்கும் நம் மனத்தில் மேற்கூரிய கருத்துகள் குமிழியிட்ட வண்ணம் உள்ளன. இந்த நிலையில் பேருந்து ஒன்றில் ஏறி மேற்குத் திசையில் சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள ‘திரு அயிந்திரபுரம்’ என்ற திவ்விய தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

திருக்கோவலூர்த் தீங்கரும்பு தலவரலாறு

வைணவ சமயத்தவர் தத்துவங்கள் மூன்று எனக் கொண்டனர். அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்பன. ஆழ்வார்களின் பாசுரங்களில் இத்தத்துவங்களைக் காணலாம். இவற்றுள் சித்தாகிய உயிரும், அசித்தாகிய பிரகிருதியும் இறைவனாகிய தலைவனுக்கு உடலாக அமைந்தள்ளன என்பது இந்த மூன்று தத்துவங்களும் இயைந்த நிலையை விளக்கும் கொள்கையாகும். சரீர-சரீரி பாவனை (உடல்-உயிர்உறவு) என்ற இந்தக் கொள்கையைச்

சித்தாந்தப்படுத்தி முதன் முதலாக வெளியிட்டவர் இராமாநுசர். வேத வியாசர் அருளியுள்ள பிரம்ம சூத்திரங்களின் நாடி நரம்புகளையெல்லாம் நன்கறிந்த, ஆழ்வார்களின் பாசுரங்களின் தோய்ந்து நின்று இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்தினார் அந்த உத்தம சீலர். வடமொழி வேதங்களிலும் உபநிடதங்களிலும் தெளிவு ஆகாதிருந்த பகுதிகள் யாவும் ஆழ்வார்களின் பாசுரங்களினால் தெளிந்தனவாக் கூறுவர் வேதாந்த தேசிகர்.

“செய்யதமிழ் மாலைகள்நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே”[57]

(தெளியாத மறை நிலங்கள் -விளங்கலாமலிருந்த வேதப் பகுதிகள்)

என்பது அவரது திருவாக்கு. இந்த உடல்-உயிர் உறவுக் கொள்ளைக்கு ஆழ்வார்களின் பாசுரங்களே வழி அமைத்தன வாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக,

“உடல்மிசை உயிர்எனக்
கரந்தெங்கும் பரந்துளன்”[58]

நடுநாட்டுத்தலம். பேருந்துகளிலும் பிற இடங்களிலும் பிழையாக திருக்கோவிலூர் என்று எழுதப் பெற்றுள்ளது. என்ற திருவாய்மொழிப் பாசுரப்பகுதியில் இக்கருத்து வந்துள்ளமை காணலாம்.

இறைவனுடைய உடலை வைணவர்கள் திவ்விய மங்களவிக்கிரகம்’ என்று பாராட்டிப்பேசுவர். அஃது எல்லையற்ற பேரொளியினைக் கொண்டதாய், கண்டாரை ஈர்க்கும் தன் மங்கள குணக் கூட்டங்கட்குக் கொள்கலமாய் இருப்பதாகக் கொள்வர் அவர்கள்.

அசித்தை எம்பெருமான் உடலாகக் கொண்டிருப்பதால், எங்கெங்கெல்லாம் அழகு கொழிக்கின்றதோ அங்கங்கெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டிருப்பான் என்று கருதித் தமிழர்கள் இறைவனுக்குக் கோயில் எடுத்து

வழிப்பட்டனர் என்று கூடக் கருத இடம் உண்டு. பெருபாலும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்து வழிபட்ட 108 எம்பெருமான்களும் அழகு தவழும் இடங்களிலேயே திருக்கோயில் கொண்டு சீவான்மாக்கள் கடைத்தோறும் கருத்துடன் அவர்களிடம் கருணை வெள்ளமிட்டோடச் செய்கின்றனர். இத்தகைய திருப்பதிகளுள் நடுநாட்டைச் சார்ந்த திருக்கோவலூர் என்ற திவ்விய தேசமும் ஒன்றாகும்.

தென்னிந்திய இருப்பூர்தி வழியில், விழுப்புரம் காட்டுப்பாடி வழியில், விழுப்புரத்திலிருந்து சற்றேறக்குறைய இருபத்தைந்து கல் தொலைவிலுள்ளது இத்திருப்பதி. விழுப்புரத்தில் தங்கி, அதிகாலையில் நான்கு மணிக்கு நன்னீராடித் தூய ஆடைகளை உடுத்திக் கொண்டு புறப்படுகின்றது. அதிகாலையில் ஐந்து மணிக்கு வண்டி புறப்படுகின்றது. திருவண்ணாமலையில் தங்குபவர்கள் திருவண்ணாமலையிருந்து இறங்கலாம்.அருகிலுள்ள அரகண்டநல்லூர் இருப்பூர்தி நிலையத்தில் இறங்கும் நாம் சுமார் இரண்டு கல் தொலைவினைக் கடந்து திருக்கோவலூரை அடைதல் வேண்டும். திருக்கோவலூர் ஒரு சிற்றூரே. எனினும், அதில் மேலூர், கீழுர் என்ற இருபகுதிகள் உள்ளன. இரண்டு ஊர்களும் ஆற்றின் தென்கரையில் உள்ளன. ஆற்றையொட்டியிருப்பது கீழுர். கீழுரில் தென் பெண்ணையாற்றங்கரையில் வீரட்டானேச்சவரம் என்ற ஒரு பெரிய சிவன்.

கோயில் உள்ளது, அதையும் பார்க்கலாம். அப்பர் பெருமானும் ஞான சம்பந்தரும் பாடிய தலம் இது. சிவபெருமான் அசுரர்களை வதை செய்த எட்டு வீரட்ட தலங்களில் இதுவும் ஒன்று. மேலூரில்தான் திருமால் ஆலயம் உள்ளது. அது பெண்ணையாற்றுத் தென்கரையில் உள்ளது, பாலத்தின்மூலம் ஆற்றைக்கடந்துதான் மேலூரை அடைதல் வேண்டும், ஆற்றில் நீர் இல்லாத பொழுது ஆற்றின் குறுக்கே நடந்தும் போகலாம். திருக்கோவிலூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மாட்டு வண்டி, குதிரை வண்டி வசதிகள் உள்ளன.

தொகுப்புரை

காசி நிகருக்கு இணையான காஞ்சியில் அமைந்துள்ள வைணவத் திருப்பதிகளின் தோற்றம், தலவரலாறு, காஞ்சிபுரத்தின் தோற்றம் ஆகியவற்றை

பற்றியும் குறிப்பிட்டுள்ளது. களமும் களப்பணியும் என்பதில் ஆய்கூ மேற்கொண்ட போது தொண்டை மண்டலம் அவற்றின் இயற்கை வயங்கள், மக்கள்தொகை, சிறப்பு, ஆழ்வார் பாசுரங்கள், வைணவத் தலங்கள் ஆகியவை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. காஞ்சிபுரத்து குறுநில மன்னர்கள், பல்லவ மன்னர்கள் ஆரசாட்சி ஆகியவைகளை பற்றி கொடுக்கப்பட்டுள்ளது. வைணவ திருப்பதிகள் வரலாற்றில் தொண்டை மண்டலம் பற்றிய இலக்கிய பதிவுகள், வரலாற்று சான்றுகள் ஆகியவை குறிக்கப்பட்டுகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம் புத்த மதத்திலிருந்து வைணவ வழிபாடாக மாற்றம் அடைந்தது பற்றிம், சுப்புரெட்டியார் குறிப்பிட்ட தொண்டை மண்டலத் திருப்பதிகள் என்னும் நூலிலிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு வைணவ கோயில்களின் சிறப்பு, மூலக்கூறு, உற்சவம், காஞ்சிபுரம் சார்ந்த தடயங்கள் கள ஆய்விலும், செவிவழியாகவும் திரட்டப்பட்ட தகவல்கள் இவ்வாய்வேட்டின் இயலை கட்டமைக்கப் பெறிதும் துணையாய் இருக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. காஞ்சிபுராணம்	-	பா. எண். 5
2. மணிமேகலை	-	பா. எண். 12
3. பெரும்பாணாற்றுப்படை	-	பா. எண். 7
4. காஞ்சிபுராணம்	-	பா. எண். 9
5. மேலது,	-	பா. எண். 13
6. தேசி. பிரபந்த.	-	பா. எண். 7
7. மேலது,	-	பா. எண். 8
8. மேலது,	-	பா. எண். 11
9. ஸ்ரீவச. பூஷ.	-	பா. எண். 13
10. நான். திருவந்.	-	பா. எண். 20
11. மேலது,	-	பா. எண். 3
12. திருவருந்	-	பா. எண். 5
13. தேசி. பிரபந்த.	-	பா. எண். 5
14. திருவாய்	-	பா. எண். 6,1:9
15. திருநெடுந்.	-	பா. எண். 5
16. இரண். திருவந்.	-	பா. எண். 7
17. நூற். திருபந். அந்	-	பா. எண். 9
18. மேலது,	-	பா. எண். 11
19. திருநெடுந்.	-	பா. எண். 9
20. பெரி. திருமடல். கண்ணி	-	பா. எண். 15
21. நூற். திருப். அந்.	-	பா. எண். 10
22. முமுட்சு.	-	பா. எண். 1
23. மேலது,	-	பா. எண். 7
24. ஸ்ரீவச. பூஷ.	-	பா. எண். 1
25. மேலது,	-	பா. எண். 6
26. மேலது,	-	பா. எண். 2, 9:1
27. பெரிய. திரு.	-	பா. எண். 2, 9:4

28. மேலது,	-	பா. எண். 2, 9:6
29. பெரி. திது.	-	பா. எண். 2. 9:6
30. நூற். திருப். அந்.	-	பா. எண். 5
31. பெரி. திருமடம் கண்ணி.	-	பா. எண். 9
32. மூன். திருவந்.	-	பா. எண். 11
33. திருவாய்	-	பா. எண். 9, 6:4
34. பரிபாடல்	-	பா. எண். 8
35. மேலது,	-	பா. எண். 7
36. முன். திருவந்.	-	பா. எண். 12
37. திருவாய்	-	பா. எண். 2, 9:8
38. பெரி. திரு.	-	பா. எண். 1, 4:2
39. நான். திருவந்.	-	பா. எண். 21
40. மேலது,	-	பா. எண். 10
41. ஸ்ரீவச. பூஷ	-	பா. எண். 2
42. மேலது,	-	பா. எண். 6
43. பெரியபுராணம் பூசலார் புராணம்	-	பா. எண். 13
44. மேலது,	-	பா. எண். 20
45. வில்லிபாரதம்	-	பா. எண். 3
46. மேலது,	-	பா. எண். 2
47. மேலது,	-	பா. எண். 10
48. மேலது,	-	பா. எண். 12
49. மேலது,	-	பா. எண். 3
50. இரண். திருவந்.	-	பா. எண். 5
51. திருவாய்	-	பா. எண். 3, 1:4
52. ஆசாஹிரு	-	பா. எண். 10
53. பெரி. திரு.	-	பா. எண். 1, 8:4
54. மேலது,	-	பா. எண். 2
55. நடுநாட்டுத் தலம் அமலனாதி	-	பா. எண். 1
56. திருவாய்.	-	பா. எண். 3, 1:1

57. தேசி. பிரபந். - பா. எண். 40

58. திருவாய். - பா. எண். 1. 1:7

இயல் - 2

வழிபாட்டு மரபுகள்

வழிபாடு என்பது வழி + பாடு என்பது பொருள்படுகிறது. வழி என்பது தேடுவதற்குரியப் பாதை ஆகும். பாடு என்பது துன்பம் நீங்க மேற்கொள்ளும் பயன் ஆகும். வழிபாடு என்பது ஆற்றுப்படுத்துவதற்குரிய முறையாகும். வைணவம் தொடர்புடைய இறைவன் திருமாலின் அவதாரங்களையும், அவரோடுத் தொடர்புடைய ஆழ்வார்கள், ஆஞ்சநேயர் இவற்றை வழிபடும்போது இம்மை மறுமை முற்பிறவியில் செய்த பாவங்களை நீக்கி இப்பிறவியில் மகிழ்வையும், நிம்மதியையும் அடைய நாம் ஆராதிப்பதாகும்.

பூஜைகள் மேற்கொண்டு இறைவனுக்குச் சந்தனம், பால், துளசி, பன்னீர் இவற்றால் பூஜைகள் செய்து அபிஷேகம் மேற்கொள்ளும் போது சிலைகள் வடிவில் இருக்கும் உருவங்கள், பீடகங்கள், சிற்பங்கள், கல்தூண்கள் ஆகியவைத் தேய்மானத்திலிருந்து மீளும் தன்மையை அடைகின்றன.

கட்டிடங்களின் அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள கிரீடம், சிலைகள் இவைகளுக்கு தீபம் ஏற்றி, பொங்கல் வைத்து, தட்டில் தீப ஆராதனை காட்டி மந்திரங்கள் மேற்கொண்டு இறைநாமம் உச்சரிக்கும் போது மன அமைதி கிடைக்கிறது. கருவறை குளிர்ந்த நிலையில் இருக்கும். புனரமைப்பதற்கான ஆலய நிர்மானப் பணிகள் வேள்விகள் மேற்கொண்டு யாகசாலை பூஜைகள் வழி அர்ச்சனை செய்யப்படுகிறது. திருக்கோயில் இந்துசமய அறநிலையத் துறை வழியாகப் பூஜைகள் நடத்தப்படுகின்றன. புரான, இதிகாச அடிப்படையில் இறைவனுக்கு நிகழ்த்தக் கூடிய சம்பிரதாயங்கள் நடக்கின்றன. சனிக்கிழமைகள் தோறும் திருமாலுக்குச் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன.

ஆழ்வார்கள் வீற்றிருக்கக் கூடிய கோயிலில் அவர்களுக்கென இருக்கும் நட்சத்திரங்களில் வழிபாடு நடத்துகின்றனர். வழிபாடு ஆலயங்களில் தீட்டுக் கழிக்கவும், இறைவனின் உருவங்களை இன்னும்

மேன்மை படுத்தவும் நடத்தப்படுகின்றன. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரிய கும்பிடு விழா நடத்துகின்றனர். ஆண்டுக்கொருமுறைப் புரட்டாசி மாதங்களில் முப்பது நாட்களும் பூஜைகள் நடத்துகின்றனர். மார்கழி வைகுண்ட ஏகாதசி பூஜைகளில் சொர்க்க வாசல் திறப்பு நடைபெறுகிறது.

இராமானுஜர் வைணவத்தை மேம்படுத்தியதால் அவருக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. வைணவம் தொடர்பான ஆலயங்களில் திருமால், இலக்குமி, ஆஞ்சநேயர் ஆகியோருக்கும் விழா நடைபெறுகிறது. திருமால் தெப்பக் குளத்தில் உலா வருகிறார். இறைவனை ஆற்றில் நீராட வைத்து சந்தனம், பால், தயிர் இவற்றால் பூஜைகளைச் செய்து இறைவனைக் குளிர்விக்கின்றனர். திருமால் புராண, இதிகாச அடிப்படையில் மந்திரங்களும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களின் பாசுரங்களுடம் ஆலயங்களில் ஓதப்படுகின்றன. திருமாலுக்குக் கொண்டைக் கடலை மாலை, நாமம் சாற்றி வழிபாடு மேற்கொள்கின்றனர். பெருந்தெய்வமாகக் கருதப்படும் வைணவத் திருத்தலமான காஞ்சிபுரத்தில் திருமால் பல்லாக்கில் வீதி உலா வரச் செய்தல், நேரில் பவனி வரச் செய்தல், மகாபாரத, இராமாயண முக்கிய நாட்களில் சிறப்பு பூஜைகள் மேற்கொள்கின்றனர்.

சூரிய, சந்திர கிரகணங்களில் ஏற்படும் நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்துகின்றனர். திருமால் தெய்வத்திற்குத் திருமஞ்சன சேவை, ஊஞ்சல் உற்சவத் திருவிழா, சாய இரட்சைத் திருவிழா ஆகியவைகள் நடை பெறுகின்றன. நமோ நாராயணாய நாமத்தில் வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு திருமாலுக்கு அர்ச்சனை செய்யப்படுகிறது. திருமாலுக்குக் காலில் தெய்வமாகச் சில இடங்களில் கருப்புசாமி இருப்பதையும் காணலாம். நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டில் இருக்கும் கருப்புசாமியே திருமால் என்று மக்கள் நம்புகின்றனர். திருமால் பத்து அவதாரங்களின் தத்துவங்கள் அப்படையில் சிற்பங்கள், ஓவியங்கள் அமைந்துள்ளன. திருமால் வழிபாடு 108 திவ்விய தேசங்களுக்கும் பொதுவான முறைகளே பின்பற்றப்படுகின்றன.

விஜய நகரப் பேரரசுக் காலத்தில் வைணவம் தழைத்தோங்கியது. பல்லவ மன்னர்கள் காலத்தில் சைவம், வைணவக் கோயில்கள் உருவாகின.

தமிழர் வழிபாட்டு முறைகள்

இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், தொல்பொருட்கள், குகை ஓவியங்கள், சிதைந்தும் சிதையாமலும் நிற்கும் கோயில்கள் போன்ற சான்றாதாரங்களைக் கொண்டு பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை தமிழர் தம் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு மரபுகளையும் அறிந்துகொள்ள முடியும்.

இனக்குழு மக்களிடையே ஆங்காங்கே வழிபாடுகள் நிகழ்ந்த நிலை; ஆரியர்களின் வருகையால் ஆரிய – திராவிட தெய்வங்கள் கலந்த நிலை; வழிபாடுகள் சைவ, வைணவ சமய நிறுவனங்களாக வளர்ச்சி பெற்ற நிலை; பௌத்த சமண மதங்கள் வந்து செல்வாக்கு பெற்ற நிலை; சைவ, வைணவ சமயங்கள் மக்கள் இயக்கமாகச் செயல்பட்டு அந்த சமயங்களின் செல்வாக்கை வேரறுக்க முயன்ற நிலை; கிருத்துவ இசுலாமிய நிறுவன சமயங்கள் வந்து வேரூன்றிய நிலை; என்று இவ்வாறு தமிழகத்தில் பல்வேறு வழிபாட்டு முறைகள் வளர்ந்து நிலை கொண்டிருப்பதை அறிகிறோம்.

காஞ்சியின் பெருமைகள்

பெருமாளின் பெருமைகளைக் கூறும் 108 திவ்ய தேசங்களில் 14 திவ்யதேசங்கள் ஒரே ஊரில் இருக்கின்றன. இந்த பெருமையைப் பெற்றத் திருத்தலம் காஞ்சிபுரம் ஆகும். பெரிய காஞ்சீபுரத்தில், திருப்பாடகம், திருநிலாத்திங்கள் துண்டம், திருஊரகம், திருநீரகம், திருக்காக்கரம், திருக்கார்வானம், திருக்கள்வனூர், திருப்பவனவண்ணம், திருப்பரமேச்சுவர விண்ணகரம் ஆகிய கோயில்களும், சின்ன காஞ்சீபுரத்தில் திருக்கச்சி, திருஅட்டபுயக்கரம், திருத்தன்கா, திருவேளுக்கை, திருவெக்கா ஆகிய தலங்களும் உள்ளன.

திருமால் பெருமை

திருமாலின் புகழ்பெற்ற தலங்கள் நான்கு அவை பண்டரிபுரம், உடுப்பி, திருப்பதி, திருவரங்கம். பண்டரிபுரத்தில் திருமால் நாத பிரம்மா உள்ளார். எனவே அங்கே எப்போதும் பஜனை கேட்டுக் கொண்டே இருக்கும். உடுப்பியில் திருமால் அன்ன பிரம்மா, எந்நேரமானாலும் இங்கு வயிறார உணவு கிடைக்கும்.

திருப்பதியில் திருமால் காஞ்சனா பிரம்மா காணிக்கையாகப் பணம் கொட்டி கொண்டே இருக்கும். திருவரங்கத்தில் திருமால் ஜனப்பிரம்மா, எந்த நேரமும் அங்கே பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

மூன்று மணிகள்

அமிர்தம் கிடைப்பதற்காக தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து திருபாற்கடலை கடந்தனர். அப்போது கடலுக்குள் இருப்பது பலப் பொருட்கள் வெளியே வந்தன. அவற்றுள் மூன்று மணிகளும் அடங்கும். அவை கவுஸ்துபமணி, சிந்தாமணி, சூடாமணி ஆகியவையாகும். இதில் கவுஸ்துபமணி என்பது மகாவிஷ்ணுவின் திருமார்பில் அணிகலனாக இருக்கிறது. சிந்தாமணியை தேவலோகத் தலைவனான இந்திரன் பெற்றுகக் கொண்டான். சூடாமணியானது, ஜனக மன்னரின் வழியில், அவருக்கு முன் தோன்றிய நிமி என்ற மன்னனுக்கு வழங்கப்பட்டது.

இந்த சூடாமணியைத் தான், நிமி மன்னனின் பரம்பரையில் வந்த ஜனகர், சீதாதேவிக்குக் கொடுத்தார். ஆதைத் தான் ராவணனிடம் சிறைப்பட்டிருந்த காலத்தில், அசோகவனத்தில் தன்னை காணவந்த அனுமனிடம், ராமபிரானிடம் சேர்பிக்கக் கூறினார் சீதாதேவி. இந்த சூடாமணியானது சூரியனை விட அதிக ஒளியைக் கொண்டது.

ஸ்ரீசத்யநாராயண பெருமாள் கோயில் நங்கநல்லூரில் அமைந்துள்ளது. இங்கு மூலவரின் பிராகாரத்தில் ராகு, கேது கிரகங்களுக்கு இடையே ஏனைய ஏழு கிரகங்களும் இருக்கின்றன. இப்படி இருப்பது கால சர்ப்பதோஷம் எனப்படும். அவ்வாறு தோஷம்

இருப்பவர்கள் இங்கு வந்து பரிகாரம் செய்தால் தோஷங்கள் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தின் மற்றோர் பெயர் ‘கஞ்சிவரம்’ என்று பெயர் அதற்கு ஒரு காரணம் உள்ளது. இந்த ஊரில் கால் ஆட்டினால் கஞ்சி வரும் என்று பேச்சு வழக்கில் ஒரு சொல் உண்டு.

இதை ஒரு நபர் கேள்விப்பட்டு இந்த ஊருக்கு வந்து திண்ணையில் அமர்ந்து கால் அசைத்து கொண்டிருந்தார். ஆனால் கஞ்சி வரவில்லை. கால் அசைந்தால் கஞ்சி கிடைக்கும் என்று தம் அறிந்ததை அந்த ஊரில் கூறி கஞ்சி வராதது குறித்துக் கேட்டார். அதற்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இதற்கு விளக்கம், இந்த ஊரில் நெசுவுத் தொழில் செய்பவர்கள். காலின் மூலமாக செய்வார்கள். அதனால் காலாட்டிக் கொண்டிருந்தாலும் வேலை வேளைக்கு உணவு முன்னால் வந்து சேரும். இதைத்தான் கால் ஆட்டினால் கஞ்சி வரும் என்பர்.

பல்லி தோஷம் நீக்கும் காஞ்சி

ஒரு முறை காஞ்சி மகாப் பெரியவர் வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு விஜயம் செய்தார். பெருமானை தரிசித்து விட்டு திரும்புகையில் கோயிலின் இரண்டாவது பிராகாரத்தில் வைத்து அவரது உச்சந்தலை மேல் பல்லி விழுந்தது. பின்னால் வந்த அவரது சீடர் ஒருவர் அதைத் தட்டிவிட்டார். உடனே உடன் வந்த ஊர் பிரமுகர்கள் சுவாமி. உச்சந்தலையில் பல்லி விழுந்தால் மரணம் என்று பல்லி சாஸ்திரம் கூறுகிறதே, இதற்கு பரிகாரம் ஏதும் செய்யக்கூடாதா என்று கேட்டதற்கு, இது சத்திய விரத சேஷத்திரம் (காஞ்சிபுரம்) இந்த மண்ணில் பல்லி தோஷம் என்பதே கிடையாது என்று அருளினார்.

மலரில் அவதரித்த மழலைத் தாயார்

பிறகு முனியவ் புத்திர பாக்யம் கேட்டு மகாலட்சுமியை வேண்டி தபசு இருந்தார். அதன் பயனாக வரதராஜபெருமாள் கோயில் பொற்றாமரைக் குளத்தில் மகாலெட்சுமி தாமரை மலர் மீது மழலையாக

அவதரித்தாள். அவளை எடுத்து பெருந்தேவி என நாமம் கொடுத்து வளர்த்து ஆளாக்கினார் பிறகு முனிவர் பருவம் வந்த மகளை பெருமாளே ஆட்கொள்ள வேண்டும் என வேண்டினார். ஆந்த வேண்டுதலின் காரணமாக வரதராஜ பெருமாளே தேவியை ஆட் கொண்டார்.

ஏற்கனவே வரதராஜபெருமாளுக்கு ஸ்ரீதேவி, பூதேவி, மலையாள நாச்சியார் (மலையை ஆளும் நாச்சியார்) மூன்று தேவிகள் இருப்பதால் இத்தேவியை பெருந்தேவி என அழைத்து வந்தனர். இந்த பெருந்தேவி தாயாருக்கு படிதாண்டா பத்தினி என்றொரு சிறப்பு நாமமும் உண்டு. காரணம் எந்த விழாவானாலும், உற்சவம் ஆனாலும் கோயில் ராஜகோபுரத்தை தாண்டி இந்த பெருந்தேவி தாயார் வெளியே செல்வதில்லை.

உற்சவம் மற்றும் விழாக்களில் ராஜகோபுரத்தை தாண்டிச் செல்லும் நிகழ்ச்சிகளில் ஸ்ரீதேவி, பூதேவி, மலையாள நாச்சியார் ஆகியோர் மட்டுமே செல்கின்றனர்.

பல்லிகளாக மாறிய பாலகர்கள்

ஸ்ரீ ஸ்ருங்கி பேரர் என்ற முனிவரின் இரண்டு மகன்கள், கௌதம முனிவரிடம் சீடர்களாக இருந்தனர். கௌதமருக்கு பணிவிடைகள் செய்து வந்தனர். ஒருநாள் ஆசிரமத்தில் கௌதமர் பூஜைக்கு தயாராகிக் கொண்டிருந்தநேரம் பூஜைக்கு வைத்திருந்தத் தீர்த்தத்தில் பல்லி இறந்து மிதந்து கிடந்தது. இதனால் கோபம் கொண்ட கௌதமர், ஸ்ரீஸ்ருங்கி பேரர் மகன்கள் இருவரையும் பல்லிகளாக போகக் கடவீர்களாக என சபித்தார்.

தவறை உணர்ந்துவிட்டோம் சுவாமி, எங்களை மன்னித்து அருள வேண்டும். சுவாமி, நாங்கள் சாபம் விமோசனம் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அதற்கு கௌதமர், நீங்கள் இருவரும் சத்திய விரத சேஷத்திரமான காஞ்சிக்கு சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் வரதராஜப் பெருமாளை வழிபட்டால் சாப

விமோசனம் பெறலாம். அதோடு உங்களுக்கு மோட்சமும் கிட்டும் என்று கூறினார். இதையடுத்து ஸ்ரீ ஸ்ருங்கு பேரர் மகன்கள் இருவரும் காஞ்சிபுரம் வந்து வரதராஜப் பெருமாளை வழிபட்டனர். வரதராஜப் பெருமாள் அவர்களுக்கு சாப விமோசனம் அளித்தார். மேலும், இருவரின் ஆத்மா வைகுண்டம் செல்லும். அதே நேரம் உங்களின் சரீரம் பஞ்ச உலோகங்களாக எனக்கு பின்புறம் இருக்கட்டும். என்னை தரிசிக்க வருபவர்கள். உங்களையும் தரிசித்து சகல தோஷங்களும் நீங்கப் பெறுவார்கள் என்றும் அருளினார். அதன்படி இந்த ஆலயத்தில் தங்கம் மற்றும் வெள்ளியால் ஆன பல்லி உருவங்கள் பஞ்ச உலோகங்களால் அமைக்கப்பட்டுள்ளது.

அத்திவரதர் தோற்றம்

படைப்புத் தொழில் புரிந்து வந்த பிரம்மா, வழக்கம் போல் தியானம் மேற்கொண்ட போது அவர் மனது ஒரு முகப்படவில்லை. மாறாக பல்வேறு சிந்தனைகளால் சிதறடிக்கப்பட்டது. அவரது மனம் அது வேறொன்றும் இல்லை. காத்தல் தொழில் புரிந்து வரும் பகவான் மகாவிஷ்ணுவை நேரே உருவாய் காண வேண்டும். என்ற ஆவல் அதுவே அவரது மனம் ஒரு நிலையாகததற்குக் காரணம்.

பிரம்மன் ஆசை கொண்டதை அறிந்த அனந்தன், அசரீரியாக பேசினார். “பிரம்மா! உனக்கேன் இந்த தருணத்தில் இந்த எண்ணம் உருவானது” என்றார்.

“தாமோதரா, தங்களை நேரில் காணவேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும்” என்றார். “சரி உன் எண்ணப்படியே ஆகட்டும் என்றுரைத்த சதுர்புஜன்”, நீ, ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தான் அனந்தனை நேரில் காண முடியும் என்றார்.

திகைத்து நின்றத் திசை முகன் திருமாலிடம் “ஒரு அஸ்வமேத யாகத்தைச் செய்து முடிப்பதே பெரும் காரியமாகுமே எவ்விதம் என்னால்

ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்ய முடியும். என்னால் மட்டுமல்ல எவராலும் அது இயலாத காரியமாயிற்றே" என்று கூறினார்.

அதற்கு அனிருந்தன், "பிரம்மனே! பூமியில் சத்திய விரத சேஷத்திரம் என்றொரு இடம் உள்ளது. அங்கு ஒரு முறை செய்ததற்குச் சமமாகும். ஆங்கே ஒரு பொற்காசு தானம் செய்தால், ஆயிரம் பொற்காசுகள் தானம் செய்ததற்கு நிகராகும். அவ்வாறே அங்கு ஒரு பொய்சொன்னாலும் ஆயிரம் பொய்கள் சொன்னதற்கு நிகராகும். அத்தகைய சத்தியவிரத சேஷத்திரத்திற்குச் சென்று நீங்கள் ஓர் அஸ்வமேத யாகத்தைச் செய்தால் அது ஆயிரம் அஸ்வமேத யாகங்களுக்குச் சமமாகும். உன் எண்ணப்படி அனந்தனை நேரில் காணலாம்" என்று கூறினார்.

நான், உம்மை காண தொடங்கும் யாகம் எந்த இடையூறும் இன்றி சிறப்புற அமைய பகவானே எமக்கு அருள்புரிய வேண்டும் என்று வேண்டினார். பின்னர் சத்தியவிரத சேஷத்திரத்தை நோக்கிச் சென்றார் பிரம்மா.

சத்தியவிரத சேஷத்திரம் வந்த பிரம்மன் வேள்விச் சாலையையும் உத்திரவேதியையும் அமைந்தான். தனது அன்றாட தேவைகளுக்காகவும் தான் வந்து போனதை நினைவூட்டும் விதமாகவும் இருக்க, சத்தியவிரத சேஷத்திரத்தில் ஓர் அழகான நகரையும் உருவாக்கினான்.

காஞ்சிபுரம் கா = அஞ்சி + புரம் + கா என்றால் பிரம்மன், அஞ்சித்தல் என்றால் பூஜித்தல், புரம் நகரம் என்று பொருள். பிரம்மன் பூஜித்த நகரம் என்பதால் காஞ்சிபுரம் என்று ஆயிற்று.

"திருவாரூரில் பிறக்க முக்தி,
காஞ்சியில் வாழ முக்தி,
காசியில் இறக்க முக்தி
திருவண்ணாமலையை நினைக்க முக்தி" [1]

என்ற வரிகள் மூலம் காஞ்சியின் சிறப்பை அறிய முடிகிறது.

தீயாய் எழுந்த வரதராஜர்

கார்மேக வண்ணனை காண்பதற்காக கமலாசனன் (பிரம்மன்) காஞ்சியில் சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் அஸ்வமேத யாகம் தொடங்கினான்.

வேள்விச் சாலையில், கிழக்கு முகமாக அமர்ந்து யாகம் செய்யத் தயாரானார் நான்முகன் ரிஷிகள், புரோகிதர்கள், வேத விற்பன்னர்கள் அயத்தமாகினர். புரோகிதரான வசிஷ்டர் அவ்விடம் வந்ததும் "உண்ணத யாகம் நடத்தும் போது உரியவளை அழைக்க வேண்டாமா? மகத்தான வேள்வி நடத்துகையில் மனைவி உடனிருக்க வேண்டாமா?" என்று கேள்வி எழுப்பினர் வேள்வி தொடங்கும் வேளையிலே இப்படி ஒரு கேள்வியா என்றெண்ணிய வேதந்தன் "ஊடல் ஏற்பட்டதன் காரணமாக விலகி சென்ற வித்யா, சரஸ்வதி நதிக்கரையில் தவம் புரிகிறார்" என்றார். அப்படியா என்றதும் பிரம்மாவின் மற்ற மனைவிகளான சாவித்ரி, காயத்ரி இருவரையும் பிரம்மாவோடு அமர வைத்தார். அஸ்வமேதயாகம் ஆரம்பமானது.

விளக்கொளி பெருமாள் தோற்றம்

பிரம்மா யாகம் செய்வதையும் அதற்கு தன்னை அழைக்காமல் இருப்பதையும் அறிந்த அன்ன வாகனி, சாந்த சொரூபிணி கலைமகள் கடுஞ்சினம் கொண்டாள். யாகத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு தனது சக்தியால் சந்திரனையும், சூரியனையும் கிரகிக்க வைத்து சத்தியவிரத சேஷத்திரத்தையே (காஞ்சிபுரம்) இருளில் மூழ்கும்படிச் செய்தாள். இருளால் சூழப்பட்ட காஞ்சியில் யாகம் செய்ய முடியாமல் தவித்தார் பிரம்மா.

வேள்வி இடையூறின்றி நடக்க அருள் புரியுமாறு விஷ்ணுவை வேண்டினார் வேதரஞ்சகன். அன்றைய தினம் சித்திரை மாதம் சுவாதி நட்சத்திரம் நிறைந்த நன்னாள். பொழுது சாய்ந்து நாளிகை இரண்டு கடந்த நிலையில் விண்ணில் விளக்கு ஒளி போல் ஜோதியாய் தோன்றினார். திரிவிக்கிரமன் திருமால். பிரம்மனின் யாகம் தடையின்றி

நடந்தேற ஒளி கொடுத்து அருளினார். சூரிய சந்திரர்களின் ஒளி கிடைக்காத வண்ணம் இருந்தத் தடைகளை நீக்கினார். மீண்டும் உலகம் வெளிச்சமாகியது. இதைக் கண்டு பொங்கி எழுந்த புனிதவதி சரஸ்வதி, தன் சக்தி முழுவதையும் பிரயோகித்து அக்னி வடிவில் மாய நலன் என்ற ஒருக் கொடிய அரக்கனைப் படைத்தாள்.

அக்னி வடிவில் யாகத்தை அழிக்க எழுந்தான் அசுரன் யாக குண்டத்தில் அவனைத் தடுத்துப் பெருமாள் தனது கையில் தீபம் போல் ஏந்தியாகசாலைக்கு மேலும் வெளிச்சம் வருமாறு அருளினார். இவ்வாறு அக்னியைக் கையில் தீபம் போல் ஏந்தி நின்றதால் விளக்கொளிப் பெருமாள் (தீபப்பிரகாசர்) என அழைக்கப்படுகிறார்.

விளக்கொளிப் பெருமாள் மூலவராக தலம் சத்திய விரத சேஷத்திரத்தில் (காஞ்சிபுரம்) உள்ளது.

அஷ்டபுஜப் பெருமாள்

காஞ்சி நகரமே இருளில் மூழ்கிய வேளையில் திருமால் விளக்கொளியாக வந்து ஒளிதந்து பிரம்மாவின் யாகம் தொடர்ந்து நடைபெற அருள்புரிந்தார்.

யாகம் தொடர்ந்து நடைபெறவே, மேலும் கோபம் கொண்ட அசுரர்கள், கையில் பல்வேறு ஆயுதங்களை ஏந்தியப்படி யாகச்சலையையே அழிப்பதற்காகப் புறப்பட்டு வந்தார்கள். யாகம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் அனைவரும் அசுரர்கள் படையெடுத்து வருவதைக் கண்டு அஞ்சி ஓடினார்கள். மீண்டும் திருமாலின் உதவியை நாடினார் பிரம்மா. அப்போது எட்டு திருக்கரங்களில் எட்டு ஆயுதங்களை ஏந்தியபடி அஷ்டபுஜப் பெருமாளாகத் திருமால் அங்கே தோன்றினார்.

வேகவதி ஆறு தோற்றம்

எட்டுக் கரங்களில் எட்டு ஆயுதங்களோடு வந்து அசுரர்களைத் தாக்கி விரட்டினார் திருமால். பிரம்மாவின் யாகம் மீண்டும் அமைதியாக நடைபெறத் தொடங்கியதுத் திருமாலால் விரட்டப்பட்ட அசுர சக்திகள், சரஸ்வதி நதிக்கரையில் இருந்த சரஸ்வதி தேவியை அண்டினார்கள்

“உங்களை விட்டுவிட்டு சாவித்ரி, காயத்ரி என்னும் மற்ற மனைவியரோடு உங்கள் கணவர் பிரம்மா, யாகம் செய்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அதை வேடிக்கை பார்க்கலாமா? நீங்கள் அதை தடுக்க வேண்டாமா? என்று பலவாறு சரஸ்வதியிடம் அவர்கள் வேகவதி என்னும் நதியாக மாறினாள். பிரம்மாவின் யாகச் சாலையை அழிப்பதற்காகப் புறப்பட்டுவந்தாள்.

சொன்னவண்ணம் செய்த பெருமாள்

வேகவதி வெள்ளம் பொங்கி வருவதைக் கண்டு யாகம் செய்துக் கொண்டிருந்த முனிவர்கள் அஞ்சி ஓடினார்கள். மீண்டும் திருமாலின் உதவியை நாடினார் பிரம்மா. அப்போது வேகாசேது என்றத் திருநாமத்துடன் அந்த வேகவதி நதிக்குக் குறுக்கே அணையாக வந்து சயனித்தார். திருமால் வேகாசேது என்றழைக்கப்பட்ட அந்த பெருமாள், பின்னாளில் திருமழிசை ஆழ்வாரின் பாடலுக்குக் கட்டுப்பட்டு அவர் பின்னே சென்றபடியால், ‘சொன்ன வண்ணம் செய்தப் பெருமாள்’ என்று பெயர் பெற்றார்.

பிரம்மா, சரஸ்வதி இருவரையும் அழைத்துப் பேசி, சமாதானப்படுத்தி, இணைத்து வைத்தார் திருமால், சரஸ்வதி, சாவித்ரி, காயத்ரி ஆகிய மூவருடன் தனது அஸ்வமேத யாகத்தைத் தொடர்ந்து செய்தார் பிரம்மா.

தனது பாவங்கள் அனைத்தும் தீருவதற்காகவும், இறைவனைக் குறித்த தியானம் நன்கு கைகூடுவதற்காகவும் பிரம்மா மேற்கொண்ட அந்த வேள்வி, சித்திரை மாதம் வளர்பிறை சதுர்த்தசியில், ஹஸ்த நட்சத்திரத்தில், ஞாயிற்றுக் கிழமையன்று இனிதே நிறைவு பெற்றது.

யாக வேதியில் இருந்து ஆயிரம் சூரியன்கள் உதித்தாற்போல் வரதராஜப் பெருமாள் புண்ணியகோடி விமானத்துடன் தோன்றிப் பிரம்மாவுக்குக் காட்சியளித்தார். கிழக்கு நோக்கி யாகம் செய்த பிரம்மாவைப் பார்த்தபடி மேற்கு மூலமாக வரதராஜர் தோன்றினார்.

நெருப்பில் தோன்றியபடியால் இன்றும் வரதராஜர் உற்சவரின் முகத்தில் தீக்காயங்களைக் காணலாம்.

"சுகலேசம் எண்ணிய சூழ்வனை தீர்க்க
துணிந்தயனார்
அகலாத அன்புடன் கொணட அயமேத
வேள்வியின் மேல்
புகலோங்கு பொன்மலை அன்னவோர்
புண்ணிய கோடியுடன்
பகலோன் பகல்விளக்காகப் பரஞ்சுடர்
தோன்றியதே![2]

என்று வரதராஜப் பெருமாள் தோன்றிய விதத்தை வேதாந்த தேசிகன் பாடுகிறார்.

அத்திவரதர் அனந்த ஸரசுக்குள் இருந்ததின் வரலாறு

வரதராஜப் பெருமாளை உருவமாக கண்டு பிரம்மித்த பிரம்மன் அதே உருவத்தை அத்தி மரத்தில் உருவாக்கு பிரதிஷ்டை செய்து பூஜித்ததை எண்ணி மகிழ்ச்சிக் கொள்ளாத நாளே இல்லை. அந்த மன சந்தோஷத்தின் பால் மீண்டும் சத்தியசேஷத்திரம் (காஞ்சிபுரம்) வந்தார் பிரம்மா.

அத்தி வரதர் முன் தன் மனநிறைவின் காரணமாக யாகம் ஒன்றை செய்தார். அந்த யாகத்தில் உருவான தீச்சுடர், அத்தி வரதப் பெருமாளின் மேல்பட்டுப் பெருமாளின் அங்கம் குறைப்பட்டது. அதைக் கண்டு அதிர்ந்து போனார் பிரம்மா. "வரதா உனது கருணையால் எனது யாகசாலையில் அக்கினிக்கு நடுவே தோன்றிக் காட்சியளித்து எனக்கு அருள்புரிந்தாய். ஆனால் இன்று எனது கவனக் குறைவால் உன் திருமேனி இப்படி ஆகிவிட்டதே! என்று வருந்தினார்.

அப்போது பிரம்மாவிடம் அத்தி வரதர் "பிரம்மா! திருமேனியில் குறைவு கொண்டு விகிரஹமாக இவ்விடம் நின்றருள்வது நன்றன்று மேலும் யாகத்தீயார் ஏற்பட்ட சூட்டைத் தனித்துக் கொள்ள கோயிலின்

நூற்றுக்கால் மண்டபத்துக்கு வடக்கே உள்ள அனந்தஸரஸ் என்னும் பொய்கைக்குள் இருக்கும் நீராழி மண்டபத்துக்குள் என்னை வைத்து விடு அந்தப் பொய்கைக்குள்ளே நான் இளைப்பாறுகிறேன்" என்று கூறினார்.

"நான் செய்த ரூபத்தை நானே பார்க்க முடியாமல் செய்து விட்டேனே பகவானே"! என்று கூறிய பிரம்மனிடம், "வருத்தம் கொள்ளாதோ ஆண்டுக்குள் அறுபது முடிந்ததும் என்னை எப்படி வைத்தாயோ அப்படியே எடுத்து வசந்த மண்டபத்தில் வைத்து பூஜித்துக் கொள். ஒரு மண்டலத்துக்கு மேல் அவ்விடம் வைக்காதே" என்று கூறினார்.

அத்திவரதரின் ஆணையை ஏற்ற பிரம்மா அத்தி வரதனை ஒரு வெள்ளிப்பேழையில் வைத்து அனந்தஸரஸ் பொய்கையிலுள்ள அந்த நாலுகால் மண்டபத்துக்குள்ளே எழுந்தருளிப் பண்ணினார்.

அத்திவரதர் அவ்விடம் வாசம் கொள்வதால் எந்தக் காலத்திலும் அந்தப் பொய்கையிலுள்ள நீர் வற்றியதே இல்லை.

வரதராஜ பெருமாள் கோயில் இப்போது இருக்குமிடம் முன்னர் அத்தி மரங்கள் சூழ்ந்த யானை வடிவான மலையாக இருந்தது. இதனால் அத்தி மரங்கள் சூழ்ந்த மறை (கிரி) என்பதால் இத்தலம் அத்திகிரி என்றழைக்கப்பட்டது. இதன் காரணமாக இவ்விடம் எழுந்தருளும் வரதராஜப் பெருமாலுக்கும் அத்திகிரி வரதராஜர் என்ற நாமம் உண்டு. அதுவே அத்திவரதர் என சுருங்கலாயிற்று.

அனந்தஸரசுக்குள் அத்தி வரதரை எழுந்தருளச் செய்துவிட்டதால், மூலவருக்கு எங்கு போவது என்று தவித்தனர். இந்த நிலையில் அத்தி வரதருக்கு கைங்கர்யம் செய்யும் ஆச்சார்யர்களில் ஒருவரின் கனவில் வந்த வரதர், சத்தியவிரத சேஷத்திரத்திலிருந்து (காஞ்சிபுரம்) தென்கிழக்குத் திசையில் சில மைல் தொலையில் உள்ள பழை சீவரம் என்னும் ஊரில் மலைமேல் தன்னைப்போலவே ஒரு பிரதிபிம்பமாக ஒரு வரதர் இருப்பதாகவும் அவரை கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து பூஜித்துக் கொள்ளும்படியும்.

தன்னை 40 வருடங்களுக்கு ஒரு முறை வெளிக்கொண்டுவந்து, ஒரு மண்டல காலம் வெளியில் பூஜை செய்து விடும்படியும் ஆணையிட்டிருக்கிறார். அதன்படியே அவர்கள் பெருமாள் கூறிய அதே இடத்தில் இவரைப் போலவே ஒரு பிரதிபிம்பமாக இருந்தவரை கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து (தற்போது உள்ள மூலவர்) இவரைத் தண்ணீருக்குள் எழுந்தருளியச் செய்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இன்றும் வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட தினத்தன்றுக் காஞ்சியில் உள்ள வரதராஜப் பெருமாள் காஞ்சியிலிருந்து பழைய ரீவரத்திற்கு பாரிவேட்டை உற்சவமாக சென்று வருவது இதன் அடிப்படையில் தான்.

வசந்த மண்டபத்தில் பள்ளி கொண்டிருக்கும் நிலையில் உள்ள பெருமாளுக்கும், தற்போது உள்ள மூலவருக்கும் சாத்தப்படும் அனைத்து திரு ஆபரணங்களும் சாத்தப்பட்டிருக்கின்றன. மூலவரின் தங்க கீரிடம், அத்திவரதரின் ஸரஸிற்கும் நூற்றுக்கு நூறுபொருந்தியிருப்பது தெய்வீகச் செயலாகும்.

பெருமாளின் பிற வழிபாடு

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள வேணுகோபாலன் கோயிலில் ருக்மிணி – சத்யபாமாவுடன் வேணுகோபாலன் நின்ற கோலத்தில் அருள்கிறார். வேணுகோபாலன் சிலை நேபாளத்தில் உள்ள கண்டகி நதியில் கிடைக்கும் சாளக்ராமக் கல்லினால் ஆனது. கிருஷ்ண ஜெயந்தியன்று வேணுகோபாலனுக்கு கண் திறப்பு மற்றும் சங்கில் பால் புகட்டும் வைபவம் நடக்கின்றன.

திருவண்ணாமலை அருகேயுள்ள செங்கம் என்னும் ஊரில் வேணுகோபாலன் பார்த்தசாரதி, செம்பொன்ரங்கப் பெருமாள் ஆகியப் பெயர்களுடன், பத்மாவதி, ஆண்டாளுடன் கண்ணன் அருட்பாலிக்கிறார் தன் பரம பக்தனான ஏழை ஒருவனுக்கு புதையலை காட்டிய கிருஷ்ணன் இவர்.

கடலூர், புதுப்பாளையத்தில் ஆயர்பாடியில் மாடுகளை மேய்த்த கண்ணன் ராஜகோபாலனாக செங்கமல்லி நாச்சியாருடன்

அருட்பாலிக்கிறார். இத்தலத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால் திருப்பதி பெருமாளுக்கு நேர்ந்து கொண்ட காணிக்கைகளை இத்தலத்தில் சேர்த்து வேண்டுதலை நிறைவேற்றலாம் என்பது காலம் காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் உள்ள கிருஷ்ணன் கோயிலில் மூலவர் கோபிநாதராகவும் உற்சவர் கிருஷ்ணராகவும் தாயார் கோபம்மாளாகவும் அருட்பாலிக்கிறார் மரங்கள் மற்றும் கால்நடைகளைக் காப்பதில் இந்த கண்ணன் நிகரற்றவன்.

சென்னை ஆதம்பாக்கம் சாந்தி நகரில் உள்ளது பாண்டுரங்கன் கோயிலில் கருவறையில் சிரித்த முகத்துடன் அருள்கிறான் கண்ணன். பண்டரிபுரத்தில் உள்ளது போலவே இருக்கிறது இக்கோயிலின் கோபுர அமைப்பு.

மதுரை, திருப்பாவை எனும் ஊரில் வெண்ணெயுண்ட மாயவன் ராதாகிருஷ்ணனாக அருளும் கோயில் உள்ளது. மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தன் கிரகணங்களால் கண்ணனை வணங்கும் தலம் இது. கண்ணனின் பிராணநாடியாக விளங்கும் ராதைக்கு இங்கே தனிச் சந்நதி உள்ளது வேண்டுவதையெல்லாம் நிறைவேற்றித் தருகிறான் இந்தக் கண்ணன்.

மதுரை குராயூர் கள்ளிக்குடியில் உள்ள கோயிலில் கிருஷ்ணன், வேணுகோபாலசுவாமி எனும் திருநாமத்துடன் கண்ணன் பாமா, ருக்மணியுடன் அருள்கிறார். ஆலய நந்தவனத்திலுள்ளப் புளியமரம், பூப்பதும் இல்லை, காய்ப்பதும் இல்லை. குழந்தைகள் கல்வியில் சிறக்க இங்கே மாவிளக்கேற்றி வழிபடுகின்றன.

அஷ்டபந்தனம் என்றால் என்ன?

கோயில்களில் அஷ்டபந்தன மருந்தை 12 வருடங்களுக்கு மாற்ற வேண்டும் என்பது ஆகம நியதி. அதன்படி அனைத்து ஆலயங்களிலும் 12 வருடங்களுக்கு ஒருமுறைக் கண்டிப்பாக அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.

உலக உயிர்களெல்லாம் நலமாக இருக்க வேண்டுமென்றால், மூல தெய்வ மூர்த்தம், தனது ஆதார பீடத்தில் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் உலகத்துக்கும் உலகில் வாழும் மக்களுக்கும் சிறப்பு. மூலவ மூர்த்தித் தொடங்கி, எல்லா தெய்வங்களின் திருமேனிகளும் பீடத்திலிருந்து அசையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அஷ்டபந்தன மூலிகை மருந்தைச் சாத்துகிறார்கள்.

அஷ்டபந்தனம் தயாரிப்பதற்காகவே தமிழில் ஒரு வெண்பா பாடப்பட்டுள்ளது. **"கொம்பரக்குச் சுக்கான் தூள் குங்கிலியம் கற்காவி செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மெழுகு – தம்பழுது நீக்கி எருமைவெண்ணெய்கட்டி நன்கிடித்து ஆக்கல் அட்டபந்தனம் ஆம்"**3 இந்த மூலிகை மருந்து பல நாள்களானாலும் கெடாத வகையில் தயாரிக்கப்படும். அஷ்டபந்தன கலவை தயாரிப்பதற்குக் கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருள்கள் தேவை.

இந்த எட்டுப் பொருள்களைச் சேர்த்து, உரலில் இட்டு இடிக்க வேண்டும். கொம்பரக்கு தொடங்கி ஒவ்வொரு பொருளாக உரலில் இட்டு இடிக்க வேண்டும். இடிக்கும்போது எருமை வெண்ணெய்யை சிறிது சிறிதாகச் சேர்த்து இடிக்க வேண்டும். அஷ்டபந்தன மருந்து கெட்டியாகக் கல்லு போலவும் இருக்கக் கூடாது. குழைவாகவும் இருக்கக் கூடாது. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பதமான நிலையில் இருக்க வேண்டும். இப்படி இருந்தால் தான் ஆதாரப்பீடத்தில் இருக்கும் இறைவனின் திருமேனியை நிலைநிறுத்த வசதியாக இருக்கும்.

இந்த மூலிகை மருந்துகளைக் கலந்து இடிப்பதற்கான பாத்திரங்கள், உரல், உலக்கை ஆகியவை மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். இந்தப் பொருள்களை எந்தெந்த அளவு சேர்க்க வேண்டும். எவ்வளவு நேரம் இடிக்க வேண்டும் என்பதற்குக் கால அளவுகள் உண்டு. அஷ்டபந்தனம் தயாரிப்பவர்களின் வாக்கு, மனம்,

செயல் இவையாவும் இறைச் சிந்தனையிலேயே நிலைத்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

இந்த மருந்தை 100 ஆண்டுகள் வரை கெடாதவாறு தயாரிக்க முடியும். ஆனாலும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிதாகத் தயாரித்து, தெய்வ மூர்த்தங்களுக்கும் பீடத்துக்கும் இடையில் சாத்தி, கும்பாபிஷேகம் செய்வதென்பது நடைமுறையில் இப்போது வழக்கமாகியுள்ளது.

அட்ட புயகரது அம்மன் வழிபாட்டு முறைகள்

தெய்வங்களை பீடத்தில் அசையாமல் நிறுத்தும் அஷ்ட பந்தன மருந்தில் என்னென்ன சேர்ப்பார்கள்? அஷ்டபந்தன கலவை தயாரிப்பதற்குக் கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருள்கள் தேவை.

கோயில் எழுப்புவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதிலிருந்து ஆலயம் எப்படி அமைய வேண்டும் என்பது வரை பல ஆகம விதிமுறைகள் இருக்கின்றன. கோயிலைக் கட்டி முடித்த பிறகு, தெய்வ மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஒரு பீடத்தின் மீது தெய்வ மூர்த்தத்தை வைத்து, பீடத்திலிருந்து அகலாமல் இருப்பதற்காக, ‘அஷ்ட பந்தன மருந்து’ சாத்துவார்கள். இந்த அஷ்ட பந்தன மருந்து, தெய்வ மூர்த்தத்தைப் பீடத்துடன் அழுந்தப் பிடித்துக்கொள்ளும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தெய்வ மூர்த்தங்களுக்கு அஷ்டபந்தனம் சாத்த வேண்டும் என்பது ஆகம நியதி.

உலகளந்த பெருமாள் வழிபாட்டு முறைகள்

ஆலயத்தின் நாயகனாக விளங்கும் திரிவிக்ரம சுவாமிகளின் பிரமாண்டத் திருக்கோலம் நம் கண்ணுக்கும், கருத்துக்கும் வியப்பூட்டுகிறது. இவரே உலகளந்தப் பெருமாள் என அழைக்கப்படுகின்றார். வலது காலை உயரத் தூக்கி, இடது திருவடியில் நின்று புன்னகையுடன் சேவை சாதிக்கின்றார். வலது கையில் சங்கு,

இடது கையில் சக்கரம் ஏந்தி ஞானத்தை அருள்கின்றார். (பொதுவாக வலது கரத்தில் சக்கரம், இடது கரத்தில் சங்கு இருப்பது வழக்கம்).

ஓரடியால் வானத்தை அளந்தும், மற்றொரு அடியால் பாதாள உலகை அளந்தும், மூன்றாவது அடியை எங்கே வைப்பது என மகாபலியை கேட்கும் விதமாக வலது கையை வைத்துள்ளார். மேலே உள்ள திருவடியை பிரம்மா ஆராதனை செய்ய, கீழே உள்ள திருவடியை லட்சுமி, பிரகலாதன், மகாபலி, நமச்சு மகாராஜா ஆகியோர் பூஜை செய்கின்றனர்.

சுக்ராச்சாரியார், மிருகண்டு மகரிஷி, அவரது பத்தினி, முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், கருடன் ஆகியோர் கருவறையின் வலது பக்கமும், இடது பக்கமும் காட்சித் தருகின்றனர்.

மூலவரின் திருமேனி 21 அடி உயரம் கொண்ட பழமையான தேவதாருவால் (மரத்தால்) ஆனதாகும். இவருக்கு உலகளந்தப் பெருமாள், ஆயனார், இடைக்கழி ஆயார் என பல்வேறு திருநாமங்கள் உண்டு. எம்பெருமான் பச்சிலை மூலிகைகளைக் கொண்டு வண்ணம் பூசப்பட்டுப் பேரழகனாக வீற்றிருக்கிறார்.

விழாக்கள்

தமிழ் புத்தாண்டு, நாமநவமி, ராமானுஜர் விழா, வைகாசி வசந்த உற்சவம், ஆனியில் திருமாலுக்கு ஜேஷ்டாபிஷேகம், ஆடியில் பத்து நாட்கள் ஆண்டாள் பூர விழா, ஆடி வெள்ளி, கடைசி வெள்ளி தாயாருக்கும், பெருமாளுக்கும் புஷ்பங்கி சேவை, ஆவணியில் வேணுகோபாலருக்கு 10 நாட்கள் விழா, வாமன ஜெயந்தி மூன்று நாட்கள், புரட்டாசி பவித்ர உற்சவம், தாயாருக்கு நவராத்திரி விழா, திருமாலுக்கு தினப்படி திருமஞ்சனம், ஐப்பசி திருவோணத்தன்று முதலாழ்வார்களுக்கு 5 நாள் விழா, மணவாள மாமுனிகள் பத்து நாள் உற்சவம், கார்த்திகை தீப உற்சவம் மூன்று நாள், கைசீக ஏகாதசி, மார்கழியில் பகல் பத்து, வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து, தைத்

திருநாள், மாசியில் மகம், பங்குனி பிரம்மோற்சவம் என விழாக்களுக்கு பஞ்சமில்லாத் திருக்கோவிலாகத் திகழ்கின்றது.

காலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை, 8.30 மணி முதல் பகல் 12.30 மணி வரை, மாலை 4 மணி முதல் 5. 45 மணி வரை மற்றும் இரவு 7 மணி முதல் 8.30 மணி வரை சுவாமி தரிசனம் செய்யலாம். விழாக் காலங்களில் இது மாறுபடும்.

வைகுண்ட பெருமாள் வழிபாட்டு முறைகள்

மோட்சம் என்பதனை சைவர்கள் 'கயிலாயம்' என்பார்கள். வைணவர்கள் 'வைகுண்டம்' என்பார்கள். காஞ்சீபுரத்தில் கயிலாயநாதர் திருக்கோவிலும் உள்ளது. அதுபோல வைகுண்டநாதப் பெருமாள் திருக்கோவிலும் இருக்கிறது. இந்த இரண்டு திருக்கோவில்களிலும் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி நாளில் காஞ்சீபுரம் கயிலாயநாதர் திருக்கோவிலில் வழிபட்டு, பின்னர் அருகிலுள்ள பரமேஸ்வர விண்ணகரம் எனும் வைகுண்டநாதப் பெருமாள் ஆலயத்திலும் வழிபாடு செய்ய வேண்டும்.

வைகுண்டநாதனின் பரமபத வாசலை காப்பவர்கள், ஜெய – விஜயர்கள் ஆவர். இவர்கள் கயிலாயநாதர் அனுக்கிரகத்தால் பூலோகத்தில் பிறப்பெடுத்து, தங்கள் பரமபத நாதனான வைகுண்டநாதருக்குக் காஞ்சீபுரத்தில் ஆலயம் அமைத்தனர். வைகுண்ட ஏகாதசி நாளில் இந்த ஆலயத்தில் வழிபடுவது, ஒருவரது ஆயுட்காலத்திற்கு பிறகு வைகுண்ட பதவி பெற்றுத் தரும் என்கிறார்கள்.

ஈசன் அருளியபடியே மன்னனுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு பல்லவன், வில்லவன் என்று பெயரிட்டு வளர்த்தான். அவர்கள் சிறு வயதில் இருந்து மகாவிஷ்ணுவை பூஜித்து வந்தனர். வாலிப வயது வந்த போது பல்லவனும் வில்லவனும், காஞ்சீபுரத்தில் கயிலாயநாதர் ஆலயத்தின் வடக்கு மூலையில் அஸ்வமேத யாகம் செய்தனர். அவர்களுக்கு வைகுண்டத்தில் இருக்கும்

வடிவிலேயே மகாவிஷ்ணு அருள் பாவித்தார். அவர் காட்சி அளித்த இடத்திலேயேப் பெருமாள் கோவிலும் கொண்டார்.

அந்த திருத்தலமே தற்போதைய காஞ்சீபுரத்தில் உள்ள ‘பரமேஸ்வர விண்ணகரம்’ என்னும் திருத்தலமாகும். ‘விண்ணகரம்’ என்றால் ‘வைகுண்டம்’ என்று பொருள். வைகுண்டத்தில் அருளும் அதே திருக்கோலத்தில், பரமபதநாதராய் மேற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் இறைவன் காட்சித் தருகிறார். வைகுந்தவல்லி தாயார் கிழக்கு பார்த்த வண்ணம் தனிச்சன்னிதியில் அருள்கிறார். இங்கு ஆலயக் கருவறை மூன்று அடுக்குகளாக அமைந்துள்ளது.

அதில் பெருமாளின் நின்ற திருக்கோலத்தை மேல் தளத்திலும், பல்லவனுக்கும், வில்லவனுக்கும் காட்சி தந்து அமர்ந்த திருக்கோலத்தை கீழ் தளத்திலும், வடக்கே தலை வைத்து தெற்கில் திருப்பாதம் நீட்டிண வண்ணம் அருளும் சயனித்த திருக்கோலத்தை நடு தளத்திலும் கண்டு வழிபடலாம். மகாவிஷ்ணு மூன்றுக் கருவறைகளில் தனித்தனியாய் அருளும் அமைப்பினைக் கொண்டது இத்தலம். நான்காவதுக் கருவறையும் இங்கு உள்ளதாம். ஆனால் நான்காவதுக் கருவறையில் எதுவும் இல்லை.

ஏகாதசி மற்றும் சனிக்கிழமைகளில் இத்தலப் பெருமாளை வழிபட்டால், சகல மேன்மைகளும் நம் வாழ்வில் வந்து சேரும் என்கிறார்கள். சகல மணல் பாறைகளால் ஆன, அதிக படைப்பு சிற்பங்கள் நிறைந்த குடைவரை கோவில் அமைப்பினை உடையது இத்திருத்தலம். பெரும்பாலும் அனைத்து விஷ்ணு ஆலயங்களிலும் வைகுண்ட ஏகாதசி நாளில் பரமபத வாசல் திறப்பார்கள். ஆனால் இங்கு ஜெய விஜயர்களே ஆலயம் அமைத்ததால், இத்தலத்தில் வைகுண்ட ஏகாதசி நாளில் தனியாக சொர்க்க வாசல் எனும் பரமபத வாசல் கிடையாது.

வைகுண்ட ஏகாதசி நாளில் இத்தலக் கருவறை தீபத்தில் பசுநெய் சேர்த்து வைகுண்டநாதரை வழிபடுவதை சிறப்பாகச் சொல்கிறார்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் குழந்தை பாக்கியம் பெறவும்,

பிறந்த குழந்தைகள் ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழவும், குழந்தைகளுக்கு நல்லறிவு, ஒழுக்கம் வாய்க்கவும் முதலில் இங்குள்ள கயிலாயநாதர் ஆலயத்தில் வழிபட்டு, அதன்பின்னர் பரமபத நாதரான வைகுண்ட நாதரை வழிபட வேண்டும் என்கிறார்கள். இத்திருத்தலத்தில் சர்ப்ப தோஷங்கள் உள்ளவர்கள், ஆயில்யம் நட்சத்திர நாட்களில் வந்து வழிபட சர்ப்ப தோஷங்கள் அகலும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும் வழிபாட்டு முறைகள்

காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும் 79 என பாசுரத்தை ஓதுகின்றோம். ஏம்பெருமான் நான்கு யுகங்களிலும் நான்கு நிறமாயிருக்கிறபடியைச் சாத்திரங்கள் பேசுகின்றன. அதனை உளங்கொண்டு அய்யங்கார் கூறுவதைச் சிந்திக்கின்றோம். 'பாலின் நீர்மை, செம்பொன் நீர்மை, பாசியின் பசும்புறம் போலும் நீர்மை, பொற்புடைத் தடத்து வண்டு விண்டுலாம் நீல நீர்மை என்றிவை நிறைந்த காலம் நான்குமாய்' என்ற திருமழிசைப் பிரானின் பாசுரப் பகுதியும், 'திருவடியில் கருநெடுமால் சேயன் என்றும், திரேதைக்கண் வளைஉருவாய்த் திகழ்ந்தான் என்றும் பெருவடிவில் கடல்அமுதம் கொண்ட காலம்' (வளைஉரு – வெள்ளைநிறம்) என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரப் பகுதியும் அய்யங்கார் பாசுரத்திற்கு மூலமாக அமைந்திருப்பதையும் சிந்திக்கின்றோம். இந்த நிலையில் தீர்த்தம் திருத்துழாய் பெற்றுத் திரும்புகின்றோம். இத்திருக்கோயிலுக்கருகில் பச்சை வண்ணர் சந்நிதி உள்ளது. அங்குச் சென்று அப்பெருமானையும் சேவிக்கின்றோம். திருப்புட்குழி: இந்தத் திவ்விய தேசம் காஞ்சியிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் ஏழு கல் தொலைவிலுள்ளது. நெடுஞ்சாலையில் இறங்கி உட்புறமாகவுள்ள குறுக்குச் சாலையின் வழியாக நான்கு ஃபர்லாங்கு தூரம் நடந்து சென்று இத்திருப்பதியை அடைதல் வேண்டும். பெரிய உடையார் என்று வழங்கப்பெறும் சடாயு சீதாப்பிராட்டியை இராவணன் கவர்ந்து கொண்டு சென்றபொழுது அவனை வழிமறித்து அவனுடன் கடும்போர்

விளைத்தபொழுது இராவணன் சங்கரன் அளித்த வாளால் அவருடைய சிறகுகளைவெட்டி வீழ்த்தி அவனைக் குற்றுயிராக விட்டுச் சென்றான் என்றும், சீதையைத் தேடிவந்த இராமலக்குமணர்கள் சடாயுவைக் கண்டனர்.

கடல் மல்லை கிடக்கும் கரும்பு வழிபாட்டு முறைகள்

இந்தக்கோயிலும் கடல் சீற்றத்தினால் அழிந்துவிடக் கூடாது என்ற தொலைநோக்குடன், விஜயநகர மன்னர்களில் ஒருவரான பராங்குசன் 14 ஆம் நூற்றாண்டில் கடல் பகுதியிலிருந்து தள்ளி மாமல்லபரம் நகருக்கு மத்தியில் எம்பெருமானுக்கு ஒரு திருக்கோயிலை எழுப்பி அதில் கடற்கரைக் கோயிலிலிருந்த எம்பெருமானைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துள்ளார்.

இத்தலத்தின் எம்பெருமானுக்கே தற்போது ஆகம விதிகளின்படி அனைத்து பூஜைகளும் நடைபெறுகின்றன. எம்பெருமான் வலது திருக்கரததைத் தன் திருமார்பின் மீது உபதேச முத்திரையாக வைத்து திருக்காட்சித் தருவது அற்புத தரிசனமாகும்.

மாமல்லபுரம் தலச் சிறப்புகள்

பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்ட மாமல்லபுரம், பல்லவ மன்னர்களின் கட்டடக் கலைக்குச் சிற்பக்கலைக்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆகும். 7 ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆட்சிக்காலத்தில் முக்கிய துறைமுக நகரமாகவும் விளங்கியுள்ளது மாமல்லபுரம்.

முதலாம் மகேந்திரவர்மனுக்குப்பின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாம் நரசிம்ம பல்லவனின் பட்டப்பெயரே மாமல்லன் ஆகும். அவரது பெயரைப் போற்றும் வண்ணம் பிற்காலத்தில் இத்தலம் மாமல்லபுரம் என்று வழங்கலாயிற்று. தற்போது மகாபலிபுரம் என்று வழங்கப்படுகின்றது.

கி.பி 640 ஆம் ஆண்டு நரசிம்ம பல்லவ மன்னரின் ஆட்சிக்காலத்தில் யுவான்சுவாங் என்ற சீன யாத்திரிகர் கடற்கரை துறைமுகமான மாமல்லபுரத்திற்கு வந்து சென்றுள்ளார்.

கி.பி. 81 - 96 ஆம் ஆண்டுகளில் அலெக்ஸாண்டிரியாவைச் சார்ந்த வணிகர் பெரிப்ளுஸ் என்பவர் தமது செங்கடல் பயணக்கையேடு என்ற நூலில் மாமல்லபுரம் மற்றும் புதுச்சேரி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் கோணகர்களின் வாணிபக் கப்பல்கள் நிதிக்குவியலோடு வந்து நம் நாட்டப் பொருள்களையும் யானை களையும் ஏற்றிச் சென்றன என்றும் எண்ணற்ற கலங்கள் வந்து சென்று கொண்டிருந்த இக்காட்சி கடலிலே ஓவியத்தைத் தீட்டிக் கொண்டிருந்தது போலிருந்ததாகவும் தமது பாசுரத்திலே மங்கை மன்னன் குறிப்பிட்டுள்ளது அக்காட்சியை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது.

திரு வயிந்திர புரத்து தெய்வ நாயகன் வழிபாட்டு முறைகள்

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக திருமலையில் அருளாட்சி செய்பவர் வேங்கடேச பெருமாள். முற்காலத்தில் தென்குமரி முதல் வடவேங்கடம் வரை விரிந்து பரந்திருந்த தமிழகத்தின் ஓர் எல்லையில் குமரி அம்மனும், மற்றோர் எல்லையில் வேங்கடாசலபதியும் அருளாட்சி செலுத்தி வந்தனர். மாநிலப் பிரிவினைக்குப் பிறகு திருப்பதி ஆந்திர மாநிலத்துக்குச் சென்றுவிட்டாலும்கூட, தமிழர்களின் கண்கண்ட தெய்வமாகவும், இன்னும் சிலருக்குக் குலதெய்வமாகவும் விளங்குகிறார். அதுமட்டுமல்ல, தமிழகத்து திருவில்லிபுத்தூருக்கும் ஆந்திரத்து திருப்பதிக்கும் ஆன்மிக ரீதியிலான பரிவர்த்தனையும் இருக்கவே செய்கிறது.

தமிழகம் முழுவதும் வாழும் பக்தர்களுக்கு வேங்கடேசப் பெருமாள் காலகாலமாக அருள்பாலித்த நிகழ்வுகள் ஆயிரம், பதினாயிரமுண்டு. அதனால் தான், தமிழகத்தின் பல இடங்களில், ‘பிரசன்ன வேங்கடாசலபதி’ என்னும் பெயரில் பல கோயில்கள்

தோன்றின. குறிப்பாக, உடையவர் ஸ்ரீராமானுஜர் தமிழகத்தின் வைணவத் திருத்தலங்களை ஒருங்கிணைத்ததுடன், அந்தக் கோயில்களில் என்ன வகையான ஆகமங்கள் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் வகுத்தளித்தார். குறிப்பாக, திருமலை திருப்பதியில் அவர் வகுத்த வழிபாட்டு முறைகளே இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

திருமலை வேங்கடவன் ஆலயத்தில் தினம்தோறும் அதிகாலையில் சுப்ரபாத சேவை நடைபெறுவது மரபு. ஆனால், மார்கழி மாதம் முழுவதும் திருமலை ஆலயத்தில் அதிகாலையில் ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாசுரங்களையே பாடுகின்றனர்.

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பூமிதேவியின் அம்சமாகப் பெண்ணாகப் பிறந்தவர். மற்ற ஆழ்வார்கள் தங்களை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் வைத்து பாசுரங்கள் பாடினாலும், ஆண்டாள் இயல்பிலேயே பெண்ணாக இருந்த காரணத்தினால், ஆண்டாள் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்து பாடிய பாசுரங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

திருவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட ஆண்டாள், இறைவனிடம் ஆழ்ந்த அன்பு கொண்டதுடன், இறைவனே தனக்குக் கணவராக அமைய வேண்டும் என்று விரும்பினாள். அந்த எண்ணமே, பெரியாழ்வார், வடபத்ரசாயிக்கு அணிவிக்கத் தொடுக்கும் மாலையை, அவர் அறியாமல் சூடிப்பார்த்து அழகு பார்த்தாள். அவள் சூடிய மாலையே பிறகு வடபத்ரசாயிக்கு அணிவிக்கப்பட்டது. வடபத்ரசாயிக்கும் ஆண்டாள் சூடிக் களைந்த மாலையே உகந்ததாக இருந்தது. இறைவனைக் கணவராக அடையவேண்டி, மார்கழி மாதம் பாவை நோன்பு அனுஷ்டித்து, திருப்பாவைப் பாசுரங்களைப் பாடி வழிபட்டாள். பின்னர், தன்னை ரங்கநாதர் ஏற்றுக்கொண்டால், கள்ளழகருக்கும், வேங்கடனுக்கும் வேண்டிக் கொண்டாள். ஆண்டாள், தான் விரும்பியபடியே ரங்கநாதருடன் ஐக்கியமாகிவிட்டாள்.

ஆண்டாள் வேண்டிக்கொண்டதை நிறைவேற்றும் விதமாக, திருவில்லிபுத்தூர் ஆண்டாளுக்கு அணிவித்த மலர்மாலை, சித்திரை மாதம் பௌர்ணமியன்று கள்ளழகருக்கும், புரட்டாசி மாத பிரம்மோற்சவத்தின்போது வேங்கடேச பெருமாளுக்கும் சகல மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு, சமர்ப்பிக்கப்படுகின்றன.

மார்கழி மாதத்தில் அனைத்து பெருமாள் கோயில்களிலும் திருப்பாவை பாசுரங்கள் பாடுவது வழக்கம். அதேபோல், திருமலை வேங்கடவன் திருக்கோயிலிலும் மார்கழி மாதம் சுப்ரபாதத்துக்குப் பதிலாக, ஆண்டாள் அருளிய திருப்பாவை பாசுரங்கள் பாடப்படும். பாசுரங்களை திருமலை பெரிய ஜீயர் சுவாமிகளுடன் பட்டாசார்யர்கள் சேர்ந்து பாடுவார்கள். திருமலைக் கோயிலில் அனைத்து மாதங்களிலும் அதிகாலை சுப்ரபாதம் பாடுவது என்ற மரபை மாற்றி, மார்கழி மாதம் முழுவதும் ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களைப் பாடும் மரபு எப்போது ஏற்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லையென்றாலும்கூட, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள், இறைவனிடம் கொண்டிருந்த பிரேம பக்தியை அங்கீகரிக்கும் விதமாக, மார்கழி மாதத்தில் திருப்பாவை பாசுரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடப்படுகிறது.

ஆண்டாள் வேண்டிக்கொண்டபடி, இன்றைக்கும் திருமலையில் புரட்டாசி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தின்போது, கருடசேவை உற்சவம் நடைபெறும் நாளில், திருவில்லிபுத்தூரிலிருந்து திருமலைக்கு ஆண்டாளுக்கு அணிவித்த மாலை, பட்டுப் புடவை மற்றும் ஆண்டாள் தோளை அலங்கரிக்கும் கிளி ஆகியவை சகல மரியாதைகளுடன் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வேங்கடவனுக்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆண்டாளின் மாலை, மரியாதைகளை ஏற்றுக்கொண்டதற்குப் பதிலாக, வேங்கடேச பெருமாளுக்கு அணிவிக்கப்பட்ட பட்டு வஸ்திரம், மாலை மற்றும் இரண்டு வெண்குடைகள் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தொகுப்புரை

அச்சம் தரும் இயற்கைப் பொருள்களும், நிகழ்ச்சிகளும் நம் முன்னோர்களின் தெய்வங்களாக உருவாக்கப்பட்டன. இக்காலத்தில் துன்பங்களில் இருந்து காக்கும் தெய்வங்கள் காவல் தெய்வமாகவும் காக்கும் தெய்வமாகவும், நோய் நொடிகளை நீக்கும் தெய்வமாகவும் உருகித்து அத்தெய்வங்களின் செயல்களுக்கு ஏற்ப உருவம் கொடுத்து வழிபடும் வழக்கத்தை உருவாக்கினா்.

பண்டைத் தமிழர்களிடம் நிலைப்பெற்றிருந்த நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடாக மாறியது எனலாம். மேலும், பெருந்தெய்வத்தை வணங்க இயலாத மக்கள் வழிப்பாட்டிற்காகத் தாம் விரும்பிய இடத்தில் தெய்வ குறியீடுகள் அமைத்து வழிப்பட்டனர். இவற்றை நாட்டுப்புறத் தெய்வங்கள் என்று அழைப்பர். அச்சமும் நன்றி உணர்ச்சியுயே மக்களிடையே தெய்வ வழிபாட்டு நம்பிக்கையினை வளர்த்தன என்பது இறைவன் குறித்த சிந்தனையாக உள்ளது என்பதும் சங்க இலக்கிய காலத்தில் நால்வகை நில அடிப்படையில் இறைச்சிந்தனை இருந்ததும் விளக்கப்பட்டது.

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே நிலம், நீர், காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களைக் கணக்கிட்டு ஒவ்வொறின் வெளிப்பாடாகவும் தெய்வங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அத்தெய்வங்களின் தோற்றம், வகைகள், கோவில் அமைப்பு, உருவ வழிபாடு, விழாக்கள், பூஜை முறைகள், படையல் பொருட்கள் போன்றவையும் வழிபாட்டுக்கு உரியனவாக அமைந்துள்ளன.

அருவமாகவும், அருவுருவமாகவும் உள்ள இயற்கைக்கு உருவம் கொடுத்து வணங்கியதைத் தொடர்ந்து இறந்து விட்ட முன்னோர்கள், உயிரற்ற கற்கள், பாறைகள், நீர் நிலைகள், தாவர வகைகள், விலங்குகள் ஆகியவை தெய்வங்களாக மதிக்கப்பட்டிருக்கின்றன. மழை வேண்டியும், திடீரென்று தோன்றும் வெள்ளம், மழையில்லாததால் ஏற்படும் வறட்சி, தீர்க்க முடியாத கொல்லை நோய் ஆகிய அழிவுகளில் இருந்து காக்க வேண்டி வழிபட்டதாலும் காலம்தோறும் நம் நாட்டில்

நாட்டுப்புற தெய்வங்கள் மிகுதியாகத் தோற்றம் கண்டுள்ளன. நாடோடி வாழ்வை விட்டு நிலையாக ஓர் இடத்தில் வாழ தொடங்கிய காலத்தில் தான் தெய்வம் குறித்த சிந்தனை உண்டாகித் தெளிவான கொள்கைகளுடன் மனிதன் வாழத் தொடங்கினான் எனலாம்.

மனிதன் வாழ்வோடு பிணைந்துள்ள சக்தியாலும் தொல் பழங்காலத்தில் மனித இனம், உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்கு இயற்கையையே சார்ந்திருந்தது. இயற்கைக் கருவிகளையே பயன்படுத்தியது பின்னர் உலோக காலத்தில் பயன்பட்ட அல்லது தன் முன்னோர் பயன்படுத்திய கருவிகளுக்கு ஒருவித மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தான். மனித வாழ்வு வளர்ச்சி அடைந்து வருகின்றபோது தன் வாழ்வு செழிக்க உதவியவற்றை அவன் தெய்வமாகவே எண்ணத் தலைப்பட்டான்.

இவ்வாறு அவன் வாழ்வில் இயற்கை பெருபங்கு ஆற்றியதால் பண்டைய மனித இனத்தில் முதலில் இயற்கை வழிபாடே தோன்றியிருக்க வேண்டும். அளப்பரிய சக்தியின் உண்மைநிலை உணர்ந்த பின்னரே பெருந்தெய்வ நிலை பிறந்திருக்க வேண்டும். இன்று பெரும்பாலும் அனைத்து கோயில்களும் கிழக்கு முகம் பார்த்த வாசலாக உள்ளன. பெருந்தெய்வங்களுக்கு சில உள்ளன. வழிபாடு பூஜைகள் தினம் தோறும் ஆலயங்களில் நடந்த வண்ணம் உள்ளன. சிறப்பு பூஜைகள் திருவிழாக்காலங்களில் நடைபெறுகின்றன.

சான்றெண் விளக்கம்

1.	தினகரன் (ஆன்மிக மலர்)	29.06.2019	-	ப. 3
2.	மேலது,	29.06.2019	-	ப. 5
3.	மேலது,	29.06.2019	-	ப. 6

இயல் - 3

வழக்காறுகள்

மானுடம் தொடங்கிய காலம் முதலே நாட்டுப்புற வழக்காறுகள் தோன்றிவிட்டன. மக்களின் நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் இவற்றின் அடிப்படையில் எழுந்த படைப்புத்திறன் மிக்க வழக்காறுகள் இலக்கியமாகப் பரிணமித்தன. இலக்கியத்தின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் விளங்குவது வரலாறு ஆகும். இதனைக் கொண்ட காலப்பகுப்பு அமைகிறது. நாட்டார் வழக்காறுகள் இன்றளவும் நடைமுறையில் வழங்கிக் கொண்டிருப்பதாகும். காலம் காலமாக மரபுரீதியாகப் பின்பற்றக் கூடியதாகும். வழக்காறுகளை இரண்டு வகைப்படுத்தலாம். வாய்மொழி வழக்காறுகள், எழுத்து மொழி வழக்காறுகள் ஆகியவைகளாகும். வாய்மொழி வழக்காறுகளான கதைப்பாடல்கள், தாலாட்டு, தெம்மாங்கு பாடல், திருமணப்பாடல், ஒப்பாரிப்பாடல், கதைப்பாடல், காப்பியம், நாட்டார் கதைகள், மரபுக் கதைகள், பழமொழி, விடுகதை, நாட்டார் நம்பிக்கைகள், குழந்தை வழக்காறுகள், நாட்டார் விளையாட்டுகள் ஆகியவை வழக்காறுகளில் இடம் பெறுகின்றன. நாட்டார் வழக்காற்றியில் என்ற சொல்லின் தோற்றத்திற்கு முன்னரே நாட்டார் வழக்காறுகள் வழக்கிலிருந்தன. நாட்டார் வழக்காறு என்பவை பழங்காலப் பண்பாட்டு எச்சங்களாகும். நாகரிகத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் பழைய நிலையில் நாட்டார் என்றுமே இதனால் இவர்கள் விவசாயிகளுக்குச் சமமானவைகள் என்றும் கருதப்பட்டனர். மக்களின் மரபுவழிப் படைப்புகளே வழக்காறுகளாகும்.

வாய்மொழி கலையே நாட்டார் வழக்காற்றில் என்று வரையறுக்கலாம். நாட்டார் வழக்காறுகளில் சில கண்டிப்பாக எழுதப்பட்டனவயாகத் தான் இருக்கின்றன. இசை நடனம் முதலியவற்றுடன் தொடர்புடைய ஒன்றாகும். ஆனால் வெளிப்படுத்தும் முறையில் வேறுபட்டதாகும். வழக்காறுகளே நமது தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை வெளிகொணர்கின்றன. உலகம் தோன்றிய காலத்திலிருந்து மனிதன் மூதாதையரின் சடங்குகள், இலக்கியங்கள், ஏடுகள், சுவடிகள், வைத்திய முறைகள் ஆகியவற்றின் மூலம் வழக்காறுகளைப் பின்பற்றினர். மனிதனின் ஜோதிடம் கையெழுத்துப் பிறதிகள்

ஆவணங்கள், வாய்மொழி மரபுகள் ஆகியவை வழக்காறுகளைத் தாங்கி நிற்கின்றன. வழக்குகள் ஆற்றல் படுத்துவதாகும்.

தொண்டை நாட்டு வழக்காறுகள்

தமிழகம் சங்ககாலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, பல்லவர்கள் என்ற பிரிவுகளைக் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. இந்நாடுகளை முறையே சேரனும், சோழனும், பாண்டியனும் மற்றும் பல்லவர்கள் ஆண்டு வந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலமாக அறியமுடிகின்றது. மேலும் அவை தொண்டை நாடு, தொண்ட நாடு என்னும் உட்பிரிவுகளைக் கொண்டும் விளங்கின. தொண்டை நாட்டில் சென்னிமலைக்கு அருகில் உள்ள 'தமிழ்நாட்டின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்வதற்காக பல சான்றுகள் கொடுமணல் அகழாய்வில் கிடைத்துள்ளன. சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் தொண்டை நாடு பற்றிய குறிப்புகள் உள்ளன. பக்தி இலக்கியங்களிலும் தொண்டை நாடு பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன.

சம்பந்தர் தேவாரம் விஜமங்கலம்' என்ற ஊரைக் குறிக்கிறது. இவ்வூர் தொண்டை நாட்டில் உள்ள 'விஜயமங்கலம்' என்ற ஊரைக் குறிக்கிறது. தொண்டை நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் போன்ற புகழ்பெற்ற பாடல் தலங்கள் உள்ளன. கல்வெட்டுகளில் முதன்முதலில் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் 'தொண்டை நாடு' என்ற குறிப்புக் காணப்படுகிறது. பல்லவர்களின் செப்பேடுகளான வேள்விக்குடிச் செப்பேடு ஆகிய, சீவரமங்கலசெப்பேடு, சின்னமனூர் செப்பேடு, தளவாய்புரச் செப்பேடு ஆகிய செப்பேடுகள் தொண்டை நாடு பற்றிக் குறிப்பிடுகின்றன. முதலாம் பராந்தகச் சோழன் கல்வெட்டுக்களில் தொண்டை நாடு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. கல்வெட்டுகள் தொண்டை நாட்டைக் 'தொண்டை வீர சோழ மண்டலம்' என்று குறிப்பிடுகின்றன. இவ்வாறு தொண்டை நாடு சங்க காலத்திலிருந்தே வரலாற்றுச் சிறப்புமிக்க நாடாக இருந்து வந்திருக்கிறது.

தொண்டை நாட்டின் எல்லைகள்

தொண்டை நாட்டின் எல்லைகள் பற்றிச் சங்க இலக்கியங்கள் சான்றுகள் கிடைக்கவில்லை. தொண்டை நாட்டுப் பற்றிக் குறிப்பிடும் தொன்மையான சான்று தொண்டை மண்டல சதகமே. தொண்டை நாட்டு எல்லைகளைக் குறிக்கும் இந்நூலின் பாடலைக் கீழ்வருமாறு காணலாம்.

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர்

குடக்குப் பொருப்பு வெள்ளிக்குன்று-கிடக்கும்

கழித்தண்டலை மேவு காவிரிசூழ் நாட்டுக்

குளித்தண்டலை யளவு தொண்டை"[1]

தொண்டை நாட்டு எல்லைகளைப் பற்றிய குறிப்புகள் பழம் பாடல்களிலும் கிடைக்கின்றன.

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குத்

குடக்கு வெள்ளிபட பொருப்புக்குன்று-கிழக்குக்

கழித்தண்டலை சூளும் காவிரிசூழ் நாடா

குளித்தலை யளவும் தொண்டை"[2]

மேற்கண்ட பாடல்களிலும் தொண்டை நாட்டு எல்லைகளைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

"வடக்கே –தலைமலை, பெரும்பாலை

தெற்கே- வைகாவூர்

மேற்கே-வெள்ளிமலை

கிழக்கே- கழித்தண்டலை(குளித்தலை)"[3]

மேற்கூரிய பாடல்களிலும் தொண்டை நாட்டின் வடக்கெல்லையானது. தலைமலை என்றும், பெரும்பாலை என்றும் இரண்டு விதமாகக் கூறப்பட்டுள்ளன. தொண்டை நாட்டில் கோவையைச் சார்ந்த கோபிச்செட்டிபாளையத்தில் உள்ள மலைப்பகுதிகளுக்கிடையே தலைமலை' என்ற ஊர் இருப்பதாகவும். சேலத்திலுள்ள தொப்பூர் மலைப்பகுதிகளுக்கிடையே பெரும்பாலை இருப்பதாகவும் டாக்டர்.எம். ஆரோக்கியசாமி குறிப்பிடுகின்றார். பண்டைய தொண்டை நாடு காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, திருவள்ளூர் போன்ற தாலுக்காவைக் கொண்டதாக இருக்கின்றது என்கிறார் கோவைகிழார்.

தொண்டை நாட்டின் அரசியல் வரலாறு

சங்க காலத்தில் தொண்டை நாட்டைப் பேரரசர்கள் யாரும் ஆட்சி செய்யவில்லை. பேகன், குமணன், நன்னன், பழையன், போன்ற குறுநில மன்னர்களே ஆட்சி செய்துள்ளார்கள். தொண்டை நாட்டை இரட்டை மரபினர் ஏழுமன்னர்கள் ஆட்சி செய்துள்ளார்கள் என்று 'தொண்டை தேச ராசாக்கள்' என்ற நூல்கள் குறிப்பிடுகிறது. இந்த இரட்டர்களை 'இராட்டிரகூடர்' என்றும் 'களப்பிரர்' என்றும் குறும்பர்கள் என்றும் ஆய்வாளர்கள் பல்வேறு விதமாகக் கருதுகிறார்கள். இரட்டர்களுக்குப்பின் கங்கவம்சத்தினர் தொண்டை நாட்டை ஆட்சி செய்தார்கள். கி.பி 9-ம் நூற்றாண்டுவரை கங்கர்களும்,பல்லவர்களும் தொண்டை நாட்டை அடிக்கடி படையெடுத்து வந்த போதிலும் நிலையான ஆட்சியை ஏற்படுத்தவில்லை. கி.பி 894 ல் தொண்டை நாட்டை முதலாம் ஆதித்தன் கைப்பற்றி தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். இவனைத் தொடர்ந்து தொண்டை நாட்டை பல்லவர்களும் ஏறத்தாழ கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். தொண்டை பல்லவர்களுக்குபின் தொண்டை நாட்டு மன்னர்கள் அரசியலில் தலையிட்டனர்.கி.பி 1263ல் ஜடாவர்மன் முதலாம் வீரபாண்டியனும் தொண்டை நாட்டைக் கைப்பற்றினார். இவர்கள் இருவரும் ஜடாவர்மன் இரண்டாம் வீரபாண்டியனைத் தொண்டை நாட்டில் தனது பிரதிநிதியாக ஆட்சியில் அமர்த்தினர். இவனுக்குப்பின் பல்லவர் மன்னர்கள் பிரதிநிதியாகப் பலர் தொண்டை நாட்டை ஆட்சி செய்தனர்.

விஜயநகர ஆட்சியில் சங்கவம்வத்தினர், உம்மத்தூர் உடையார்கள், ஆறவீடு வம்சத்தினர் ஆட்சி நடைபெற்றுள்ளது. இதன்பின் மதுரைநாயக்கர் ஆட்சி சிறிது காலமும், மைசூர் உடையார்கள் ஆட்சியும் நடைபெற்றுள்ளது. பொதுவாகத் தமிழகத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த குறிப்பிட்ட பேரரசை ஓரளவு சார்ந்தே தொண்டை நாட்டு அரசியல் நிலைபெற்றிருந்தது. இதனால் தொண்டை நாட்டில் அரசியல் அதிகாரம் நிலையற்றதாகவும், கட்டிறுக்கமற்றதாகவும் நெகிழ்ச்சித்தன்மை உடையதாகவும் விளங்கியது.

தொண்டை நாட்டின் இயற்கை அமைப்பு

தொண்டை நாடு நாற்புறங்களிலும் மலையரண்களால் சூழப்பட்டு தென்கிழக்கில் மட்டும் சிறிதுபாகம் பரந்தவெளியாக நிற்கின்றது. நாட்டைச் சுற்றியுள்ள மலைச்சரிவுகளிலும், அடிவாரங்களிலும் அடர்த்தியான காடுகள் காணப்படுகின்றன. தொண்டை நாட்டில் பழனிமலை, ஆனைமலை, தலைமலை,சிவன்மலை, சென்னிமலை, கொல்லிமலை போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட மலைக்குன்றுகள் இருப்பதாக டாக்டர் எம். ஆரோக்கியசாமி குறிப்பிடுகின்றார். தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரிய வளமான மலையான நீலகிரிமலை, வெள்ளிங்கிரிமலை, ஆனைமலை, சேர்வராயன்மலை போன்ற மலைகள் தொண்டை நாட்டின் எல்லையொட்டியே உள்ளன.தொண்டை நாட்டில் மிகப்பெரிய ஆறாக ஓடுவது காவேரியாகும். இந்நாட்டைக் காவேரி வடகிழக்காக ஊடறுத்துச் செல்கிறது. தொண்டை நாட்டின் மேற்கில் பவானி, நொய்யல், அமராவதியும் கிழக்கில் மணிமுத்தாறும், காவேரியின் உபநதியாக ஓடுகின்றன. இந்நதிகளுக்குச் சிறுவாணி,கல்லாறு, குன்னூராறு, காஞ்சிநதி, நீலிப்பள்ளம், வண்ணாற்கரை, நள்ளாறு, குதிரையாறு, சண்முகநதி, உப்பாறு முதலிய பல உபநதிகள் உள்ளன.

தொண்டை நாட்டுக் குடிமக்கள்

தொண்டை நாட்டைச் சார்ந்த மலைப்பகுதிகளில் வேட்டுவர், இருவர், மலசர், புலையர் போன்ற பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களது

வாழ்க்கைமுறை மத்திய, மாநில அரசுகளின் உதவியால் பெரிதும் மாறி வருகிறது. தொண்டை நாட்டில் கம்மவார், முதலியார், செட்டியார், குறும்பவர், போயர், தேவேந்திகுலவேளாளர், வன்னியர், தேவர் போன்ற பல்வேறு இனமக்களும், மலையாளம், உருது, கன்னடம், தெலுங்கு போன்ற பல்வேறு மொழிபேசும் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு தொண்டை நாடு பல்வேறு வகையான குடிமக்கள் ஒன்றிணைந்து வாழும் நாடாக விளங்குகின்றது.

நாட்டுப்புறவியல்

'Folklore' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு மக்களுடைய அல்லது நாட்டிலுடைய அல்லது ஓர் இனத்துடைய கற்றல் மற்றும் அறிவு சிறப்பாக, பழங்காலத்திருந்து வழிவழியாக வழங்கி வருவது என அகராதி அடிப்படையில் பொருள் கூறுகின்றனர். 'Folk' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஒரு குறிப்பிட்ட குழு அல்லது ஒரு பிரிவைச் சேர்ந்த மக்கள் என்று பொருள் கொள்கின்றனர். 'Lore' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வழக்காறு என்ற சொல் ஈடானது. தனிமனிதன் மற்றும் பலர் இணைந்து தொடர்ந்து செய்கின்ற பழக்கங்களே வழக்கங்களாகின்றன. 'வழக்காறு' என்பதில் வாய்மொழி வழக்கிலுள்ள பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் முதலியவற்றையும் மக்கள் வழக்கத்திலுள்ள நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றையும் அடக்கலாம். சுருக்கமாகச் சொன்னால் 'Folk' என்ற சொல் படைப்பவர்களையும் 'Lore' என்ற சொல் படைக்கப்படுவனவற்றையும் குறிக்கின்றன. தமிழில் 'Folklore' என்ற சொல்லைக் குறிக்க நாட்டுப்புறவியல், வழக்காற்றியல், நாடோடிக்கலை, நாடோடிப்பாடல்கள், பாமரர் பாடல்கள், வாய்மொழி இலக்கியம் போன்ற பல்வேறு தொடர்கள் முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்தன. தற்போது நாட்டுப்புறவியல், வழக்காற்றியல் என்ற கலைச் சொற்கள் நிலைபேறாக்கும் பெற்றுவருகின்றன. நாட்டுப்புறவியல் பற்றிய அறிஞர்கள் வரையறைகளைப் பின்வருமாறு காணலாம்.

"மானிடவியல் முறையில் நாட்டுப்புறவியல் என்ற வார்த்தைக்குப் புராணக் கதைகள், கட்டுக்கதைகள், நாட்டுப்புறகக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள்

கலையின் பாற்பட்ட கணக்கற்ற கூறுகள் போன்றவைகள் பற்றிய அறிவு என்று பொருள் கொள்ளலாம். இவை எல்லாம் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும். இலக்கியத்தைப் போல நாட்டுப்புறவியலும் கலைவடிவம் கொண்டது. இது இசையோடும், ஆடலோடும், ஓவியத்தோடும், கைத் தொழில் பொருட்களோடும் தொடர்புடையது. ஆனால் வெளிப்படுத்துமுறை வேறுபட்டிருக்கும் என்பார் வில்லியம் ஆர். பாஸ்கம் முறையான கல்விப் பகிர்வினாலன்றி, கூட்டு மனநிலையில் வெளிப்பாடாய் பயன்படும் தன்மை மட்டுமே கொண்டு ஒரு குழுவினரிடையே தலைமுறை தலைமுறையாய் கைமாறும் அனைத்துப் பயன்பாட்டுக் கூறுகளை நாட்டுப்புறவியல் எனும் பிரிவிற்குள் அடங்குவதாகக் கொள்ளலாம் என்றுரைப்பார் முனைவர் மு. இராமசாமி.

நாட்டுப்புற வழக்காறுகள்-புறப்பணிகள்

பொதுவாக நாட்டுப்புற வழக்காறுகளை ஆசிரியரற்று, எழுத்திலக்கண வரையறை அற்றது. பேச்சு வழக்கில் பாடப்படுவது, வாய்மொழியாக மட்டும் வழங்கப்படுவது, நெடுங்காலமாக வழங்கி வருவது, அச்சிடப்படாதது, கட்டாகப் படைக்கப்படுவது போன்ற சில இயல்புகளின் அடிப்படையில் வரையறுத்து வந்தனர். இவ்வியல்புகளில் சிறிது மாறுபட்ட நாட்டுப்புற வழக்காறுகளையும் அண்மைக்கால ஆய்வுகளில் கண்டறிந்தனர். உதாரணமாக, தமிழில் சில கதைப்பாடல்கள் ஆசிரியர் பெயர்களுடன் கிடைக்கின்றன. சேலம், வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 'கொலைச்சிந்து' என்ற நாட்டுப்புற வழக்காறு அச்சிட்ட புத்தகங்களாகக் கிடைக்கின்றது. இதனால் நா.வானமாமலை, எழுதியவர் பெயர் தெரிவதால் மட்டுமே அது நாட்டுப்புறப்பாடல் தன்மையை இழந்துவிடாது என்பார். மேலும் வாய்மொழிப்பாடல், எழுதப்படாதபாடல், தூய் பாடல் என்பெதெல்லாம் நாட்டுப்பாடலின் சிருஷ்டியையும் பரவுதலையும் பற்றிய அறியாமையால் எழுந்தது....... இப்பொழுது வாய்மொழி எழுத்துருவம் பெறும் காலம், எழுத்தறிவு நாட்டுப்புற மக்கள் குழுவினரிடையே வளர்ச்சி பெற்று வருகிறது. எனவே வாய்மொழி பரவுதல்(டீசயட வசயஇளஅளைளைடைஇ) என்று கண்களை மூடிக்கொண்டு நாட்டார் இலக்கியத்திற்கு வரம்பு விதித்தல் கூடாது என்றும் நா. வானமாமலை கூறியுள்ளார் தே.லூர்து ஆறு. இராமநாதன் ஆகியோர்

ஆசிரியரற்றது, வாய்மொழிப் பரவுவது போன்ற பண்புகள் நாட்டுப்புற இயலின் புறப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், நாட்டுப்புற வழக்காற்றை வரையறுப்பதற்கான துல்லியமான வரையறைகள் அல்ல என்றும் எடுத்துக்காட்டியுள்ளனர். உலகில் ஒவ்வொரு பண்பாட்டுச் சூழலுக்கேற்ப நாட்டுப்புற வழக்காறுகள் வழக்கில் இருப்பதால் உடனடியாக நாட்டுப்புற வழக்காற்றுக்குரிய தன்மைகளை மிகச் சரியாக வரையறுத்தல் இயலாததாகும். குறிப்பாகப் பல்வேறு கலாச்சாரங்களை ஒருமுகப்பட்டு வாழும் இந்தியாவில் நாட்டுப்புற வழக்காற்றியலை மிகத் துல்லியமாக வரையறுப்பதற்குப் போதுமான ஆய்வு இன்னும் வளரவில்லை எனலாம். இந்நிலையில் மேலே சொன்ன பண்புகள் நாட்டுப்புற வழக்காறுகளை அடையாளம் காணுவதற்கு உதவி செய்யும் கருவிகளாகக் கருதலாமே ஒழிய, அதனையே வரையறைகளாக் சுருக்கிக் கொள்ள வேண்டியதில்லை.

நாட்டுப்புறவியல்-வகைபாடு

தமிழ் நாட்டுப்புற ஆய்வாளர்கள் நாட்டுப்புற வழக்காறுகளைப் பல்வேறு வகையில் வகைப்பாடு செய்துள்ளனர். சு.சண்முகசுந்தரம் நாட்டுப்புற இயலை 1.பாடல்கள் 2.கதைகள்3.ஆடல்கள் 4.கூத்துக்கள் 5.பழமொழிகள் 6.விடுகதைகள் 7.கதைப்பாடல்கள் 8.விளையாட்டுகள் 9.தேவதைக் கதைகள் 10. நம்பிக்கைகள் 11.பழக்கவழக்கங்கள் 12. கைவினைக் கதைகள் 13. நடைஉடை பாவனைகள் 14. சடங்குகள் 15. புராண இதிகாசங்கள் எனப் பதினைந்து வகைகளாக வகைப்படுத்தியுள்ளார். நாட்டுப்புற இயலை, 1. செயல்வகை (Action Type), 2. அறிவியல்வகை(Social Type) 3. மொழியியல் வகை (Linguistic Type) 4. இலக்கியவகை (Literature Type) என நாட்டு வகையாக சு.சக்திவேல் வகைப்படுத்தியுள்ளார். பொதுவாக நாட்டுப்புறவியலை,

அ. வாய்மொழி சார்ந்தவை(Verbal Art)

ஆ. வாய்மொழி சார்ந்தவை(Non –Verbal Art)

இ. வாய்மொழி சார்ந்தவை மற்றும் வாய்மொழி சாராதவை (Verbal and Non Verbal)

என மூன்றாவது வகைப்படுத்துவர். இதன் அடிப்படையில் ஆர். எம். சுந்தரம் நாட்டுப்புறவியலை விரிவாக வகைப்படுத்தியுள்ளார் அவ்வகைப்பாட்டைக் கீழ்வருமாறு காணலாம்.

மேற்கண்ட வகைபாட்டில் தாலாட்டு, ஒப்பாரி, கதைப்பாடல் ஆகிய வாய்மொழி சார்ந்த வழக்காறுகள், மாறிச் வெல்லும் அமைப்புடைய கவிதை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வழக்காறுகள் இசையோடும் பின்னிப்பிணைந்த வழக்குகளாக உள்ளன. விடுகதை, பழமொழி ஆகியவை வாய்மொழி சார்ந்த உரைநடை வழக்காறுகளாக வகைப்படுத்தப்பட்டு இருப்பதும் சில விடுகதைகள் கவிதையாகவும் உள்ளன. எனவே மேற்கண்ட வகைபாடு ஒரு நெகிழ்ச்சியான வகைப்பாடு என்றே கருதலாம். நாட்டுப்புறவியலின் எல்லை விரிந்த பரந்திருப்பதினால் அதனை முழுமையாக வகைப்படுத்துதல் என்பது கடினமான ஒன்றேயாகும். எனினும், வகைப்பாடுகள்(Classification) நாட்டுப்புறவியலின் எல்லையையும், இயல்பையும் புரிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிகின்றன.

தொண்டை நாட்டு வழக்காறுகள்

தமிழகத்தின் பிற பகுதிகளில் வழக்கிலுள்ள நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் போன்ற வழக்காறுகள் தொண்டை நாட்டிலும் வழக்கிலுள்ளன. தொண்டை நாட்டின் பண்புகளைச் சிறப்புடன் வெளிப்படுத்தும் புகழ்பெற்ற வழக்காறுகளும் சில உள்ளன. ‘தொண்டை மலிந்தால் எங்கு மலியும்’‘தொண்டைக்குள்ள கல்வீடு’‘தொண்டைக்கு மொறையுமில்லை கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை’ என்பது போன்ற பழமொழிகளைக் கொங்கு நாட்டின் வழக்காறுகளாகக் கருதலாம். இதுபோன்ற தொண்டை நாட்டு வழக்காறுகள் சிலவற்றைக் கீழ்வருமாறு காணலாம்.

தெய்வப் பாடல்கள்

தொண்டை நாட்டில் சிறுதெய்வம் மற்றும் பெருந்தெய்வம் பற்றிய பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தொண்டை நாட்டில், சிறுதெய்வங்களுக்கு

அதிக முக்கியத்தும் தருகின்றனர். மாரியம்மன், பட்டத்தரசி அம்மன், கருப்பராயன், காளி, போன்ற தெய்வங்களுக்கு மிகுதியாகப் பாடல்கள் உள்ளன.

மாரியம்மன்

மாரியம்மன் பற்றி நூற்றுக்கணக்கானத் தமிழ், கன்னடம், தெலுங்குப் பாடல்கள் தொண்டை நாட்டில் பாடப்படுகின்றன. மாரியின் வடிவம், அம்மனின் உடுக்கை, செயல்கள் ஆகியவற்றைப் பற்றி இப்பாடல்கள் விவரிக்கின்றன. குழுவாக அல்லாமல் தனியாகப் பாடப்படும் மாரியம்மன் அழைப்புப்பாடல்கள் சில பாடப்படும்போதே உருவாக்கப்படுகின்றன. இப்பாடல்களைப் பொருத்தவரை பாடுதல், யாத்தல் ஆகிய இருசெயல்களும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. எதிர் பார்கிற செயல் நடக்குமா, நடக்காதா என்று அறிய மாரியம்மனிடம் பூ கேட்கும் வழக்கம் தொண்டை நாட்டில் உண்டு. மாரியம்மனிடம் பூ கேட்கும் போது பறையொலியுடன் பாடல்களைப் பாடுவர். அம்மன் பூ கொடுக்காதபோது தெய்வத்தைத் திட்டுகின்ற பூசாரிகளும் உண்டு. இவர்கள் பூ கொடுத்தே ஆக வேண்டும் என்று இரண்டு அல்லது மூன்று நாட்கள்வரைப் பிடிவாதமாகப் பறையைக் கொட்டிக் கொண்டு ஒரே இடத்தில் உணவும், நீருமின்றி அமர்ந்திருப்பர். தொண்டை நாட்டில் வருடம் ஒருமுறை மாரியம்மனுக்கு விழா எடுத்துத் தீக்குடம் இறக்குவதும் பரவலாக வழக்கமாகும்.

பட்டத்தரசி அம்மன்

அரிசாங்களின் தலைமை இட தெய்வமாகக் கருதப்படும் பெண் தெய்வம் பட்டத்தரசியம்மன். இவ்வம்மன் கொலுிருக்கும் கோயில், இவருடைய ஆடை அணிகலன்கள், தங்கப்பல்லாக்கில் வருதல், மல்லிகைச்செண்டு வீசப்படல், கோயிலில் மக்கள் கூடிக் கும்மியடித்தல் முதலான செய்திகள் பட்டத்தரச்சியம்மன் பாடல்களில் இடம்பெறுகின்றன. தெலுங்கு பேசும் அரிசனமக்களிடையே காணப்படும் பட்டதரச்சியம்மன் பாடல்கள் கன்னடம் பேசும் அரிசனமக்களிடையே ‘பட்டாளம்மா’ என்ற பெயரில் காணப்படுகின்றன. பெயர்களை மட்டும் மாற்றம் செய்து கொண்டு ஆண் தெய்வத்திற்குரிய பாடலைப் பெண்தெய்வத்திற்கும்,

பெண்தெய்வத்திற்குரிய பாடலை ஆணுக்குமாக மாற்றிக் கொள்ளும் மரபும் உள்ளது.

கருப்பராயன் பாடல்

தொண்டை நாட்டுக் கிராமங்களில் கறுப்புச்சாமி புகழ் பெற்ற தெய்வமாகும், சில கறுப்பராயன் கோயில்களில் மரத்தடியில் கல்லும், வேலும் மட்டுமே உள்ளன. சில இடங்களில் மரத்தினுள் வேலைப் பாய்ச்சி, அம்மரக்கிளையில் ஒரு சங்கிலியைத் தொங்கவிட்டு அம்மரத்தின் இருப்பிடத்தைக் கறுப்பராயன் இருப்பிடம் என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர். இன்னும் சில இடங்களில் வேலோ, சங்கிலி இணைப்போ இல்லாத மரங்கள்கூட கறுப்பராயன் இருப்பிடம் என்று கூறப்படுகின்றது. சில இடங்களில் கறுப்பராயனுக்குக் கோயில்கள். கறுப்பராயன் கோயில்கள் பெரும்பாலும் ஊரை விட்டுத் தள்ளி அமைந்துள்ளன. அங்கிருந்து கறுப்பராயன் ஊரைக்காத்து வருவதாக மக்கள் கருதுகிறார்கள். பெரும்பாலான கறுப்பராயன் கோயில்களில் மண்ணாலான பெரிய குதிரை உருவம் ஒன்று தனியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. காவல்பணிக்குக் கறுப்பராயன் குதிரை மீது ஏறிப் புறப்படுவதாக நாட்டுப்புற மக்கள் கருதுகிறார்கள். கறுப்பராயன் வேட்டைநாயுடனும், வேறு சில இடங்களில் கத்தி, வாள், ஈட்டி ஆகிய படைக்கலன்களுடனும் காணப்படுகிறார். பொதுவாக, கறுப்பராயனின் ஆவியே பேய்பிடித்தவர்களைப் பிடித்துக்கொண்டிருப்பதாகவும் நாட்டுப்புற மக்கள் கருதுகின்றனர். பேயோட்டும் பாடல்களில் இவர் புகழ்ப்படுகிறார். கறுப்பராயன் ஆளுமை நாட்டுப்புற மக்களின் மதிப்பீட்டில் வேறுபட்டதாக உள்ளது. மது, இறைச்சி, மங்கை முதலிய விருப்பங்களை உடைவராக உள்ள கறுப்பராயனுக்குத் தீய ஒழுக்கமே நடைமுறை வாழ்க்கையாக உள்ளது. சில குலத்தார்களுக்குக் குலதெய்வமாகவும் கறுப்பராயன் விளங்குகிறார். கறுப்பராயன் போன்ற பல கிராமதெய்வங்களும் குல தெய்வங்களும் தொண்டை நாட்டில் வழக்கில் உள்ளன.

விழாப் பாடல்கள், சடங்கு பாடல்

கொங்கு நாட்டில் ஆடிமாதத்தில் பதினெட்டாம் பெருக்கத்திலும், தைமாதத்தில் பொங்கலை ஒட்டி வருகிற பூ நோன்பிலும் கிராமத்துப் பெண்கள் மிகுதியும் பங்கு கொள்வார்கள். இவ்விழாக்களின்போது பெண்கள் கூடைகளில் பூக்களையும், மங்கலப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு ஆற்றிற்குச் செல்வார்கள். அங்கு கன்னிமார் பூசை நடத்திவிட்டு வீடு திரும்புவார்கள். அப்போது 'ஓலையக்கால்' என்ற பாடலைப் பாடுவார்கள். ஒரு பெண் முன்னெடுத்துப் பாட மற்ற பெண்கள் ஒவ்பொரு வரி முடிவிலேயோ, அல்லது நான்குவரி முடிவிலேயோ 'ஓலே' என்ற ஒலியெழுப்புவார்கள். இப்பாடலைப் பின்வருமாறு காணலாம்.

"ஓலையக்கா கொண்டையில ஒரு சாடு தாழம்பூ

தாழம்பூச் சிற்றாடை தலைநிறைய முக்காடு

நாழி நாழி நெல்குத்தி நடுகிணற்றில பொங்க வைத்து

நாட்டாரைக் கூட்டமிட்டு நடந்துபோறதா ஓலையக்கா

உற்றரறியாமே உறவாட வல்லவையா

தட்டரறியாமெ தாலிபண்ண வல்லவையா

அடுப்புப் புகையாம ஆக்கிவிட வல்லவையா

தாயோட சீராடி நாயோடப் போறாளாம்"[4]

'ஓலையக்கா பாடலை செங்கோ வரதராசன் கதைப்பாடல் என்று குறிப்பிடுகிறார். இப்பாடலை கோவைக்கிழார் கதைப்பாடல் என்று குறிப்பிடவில்லை. ஆய்வாளரின் களஆய்வில் 'ஓலையக்காள்' பாடல் கதைப்பாடலாகக்கிடைக்கவில்லை. எனினும் இப்பாடல் விரிவான களஆய்வுக்குரியதாகும். இப்பாடல் கொங்குநாட்டில் புகழ்பெற்ற நாட்டுப்புறப் பாடலாகும்.

தொண்டை நாட்டில் மார்கழி மாதத்திலும், பிள்ளையார்நோன்பிலும் வீட்டின் முற்றத்தில் சாணிப்பிள்ளையாரைப் பூசணிப்பூவால் தலையில் அலங்கரித்து அவற்றை இறுதிநாளில் ஆற்றில் விடுவார்கள். இப்போது பாடப்படும் பாடல் தொண்டை நாட்டில் புகழ்பெற்ற பாடலாகும். அப்பாடலைக் கீழ்வருமாறு காணலாம்.

“வட்ட வட்டப் பிள்ளையாரே

வாழைக்காய் பிள்யைாரே

உண்ணுன்ணு பிள்யைாரே

ஊமத்தங்காய்ப் பிள்ளையாரே

சிந்தாமல் சிதறாமல் பொறித்தேனே பூவே

சிற்றாற்றுத் தண்ணீரிலே போறையே பூவே

வாடாமே வதங்காமே வைத்திருந்தேன் பூவே

வறட்டாற்று மேட்டிலே போறையே பூவே” [5]

அண்ணன்மார் கதைப்பாடல்

தொண்டைநாட்டுக் கதைப்பாடல்களில் அண்ணன்மார் சுவாமிக் கதைப் பாடல் மிகப் புகழ்பெற்ற பாடலாகும். இக்கதைப்பாடலை உடுக்கை அடித்துக்கொண்டும், உடுக்கை இல்லாமலும் பாடுவார்கள். அண்ணன்மார் கதைப்பாடல் கோயில்களிலும், விழாக்காலங்களிலும், திருமணவீடுகளிலும் இழவு வீடுகளிலும் பரவலாகப் பாடப்படுகிறது. இக்கதைப்பாடல் நிகழ்கலை வடிவமாகவும் தொண்டை நாட்டில் வழக்கில் உள்ளது. அண்ணன்மார்க்குக் கொங்கு நாட்டில் பல கோயில்கள் உண்டு. எனினும் கரூரிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் உள்ள வீரமலைச்சாரல் - வீரப்பூரில், அண்ணன்மார் மாண்டு படுகளமாயினர் எனத் தொண்டைநாட்டு மக்கள் கருதுகின்றனர். அவ்வூரில் பொன்னர், சங்கர், நல்லதங்கம், வீரவாகு, சாம்புவன் ஆகியோருக்குக் கோயில்கள் உள்ளன. மாசித்திங்கள் சிவராத்திரி கழிந்த ஏழாம் நாள் இரவு அண்ணன்மாரின் படுகள

விழா வீரமலைச் சாரலில் ஆண்டுக்கொருமுறை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தொண்டை நாட்டுக் கிராமங்களிலிருந்து அண்ணன்மாரின் படுகள விழவிற்கு மக்கள் பலர் யாத்திரையாகத் திரண்டு செல்வார்கள். அண்ணன்மார் கதை பாடுகின்ற தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கதைபாடகர்கள் வீரமலைச்சாரலில் படுகளத்தன்று கதை படிப்பதைத் தங்களின் தொழிற்முறைக் கடமையாகக் கருதுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் படுகளம்நோக்கிப் புறப்படுகின்ற பக்தர்கள், அண்ணன்மார் வரலாற்றில் இடம் பெறும் ஒவ்பொரு பகுதிகளையும் தரிசித்துச் செல்லுகின்றனர். இப்படிப்பட்ட கதைப்பாடலோடு தொடர்புடைய ‘புனிதயாத்திரை’ தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை எனலாம்.

அண்ணன்மார் சுவாமி வழிபாட்டில் பன்றி குத்துதல் ஒரு முக்கியச் சடங்காகும். இதனை ‘சலகை குத்துதல்’ என்றும் கூறுவார்கள். பொன்னர், சங்கர் இருவரும் வேட்டுவர்களின் பன்றியை வேட்டையாடச் செல்கின்ற கதை நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் உண்மையான பன்றியைக் குத்திவழிபடுவர். இக்கதையின் இறுதிப் பகுதியாகிய படுகள நிகழ்ச்சியாகும். கதைப்பாடகன் அண்ணன்மார் படுகளமாகிய விழுகின்ற காட்சியைப் பலவாறாக விவரித்துப் பலமணி நேரம் பாடும்போது பார்வையாளர்களில் பலர் அண்ணன்மாரின் ஆவி ஆட்கொண்டதாக எண்ணி நிலத்தில் சரிந்து வழவர். இவர்களின் உடலை வெள்ளை ஆடையால் மூடுவர். பிறது தீர்த்தம் தெளித்து கதைப்பாடகன் வீழ்ந்து கிடக்கும் பார்வையாளர்களை உயிர்ப்பித்து எழச்செய்வான். இவ்வாறு பக்தர்களைப் படுகளம் விழச்செய்தலும், படுகளம் வீழ்ந்தோரை உயிர்ப்பித்தலும் அண்ணன்மார் கதைப்பாடல் நிகழ்ச்சியில் இன்றியமையாச் சடங்காகும். படுகள நிகழ்ச்சியில் மயங்கி விழும் பார்வையாளர்களின் எண்ணிக்கையின் அளவைப் பொறுத்து அண்ணன்மார் கதை பாடும் கதைப்பாடகனின் பெருமை மக்களிடையே உயர்கிறது.

நிகழ்கலைகள்

நாட்டுப்புறக் கலையானது நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த உயிர் ஊற்றாகும். நாட்டுப்புற மக்களின் அழகியல்

உணர்வுகளின்வெளிப்பாடாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன. தமிழக நாட்டுப்புறக் கலைகளைப் பலவாறாகப் பாகுபடுத்தி அறிஞர்கள் ஆராய்ந்து உள்ளனர். தமிழக நாட்டுப்புறக் கலைகளைக் கதை சார்ந்த கலைகள், கதைசாராக் கலைகள் என்று பாகுபடுத்துவர். கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம் போன்ற கலைகளைக் கதை சாராக் கலைகள் என்றும் பாகுபடுத்தலாம். தமிழக நாட்டுப்புறக் கலைகளை வி.அய்.சுப்ரமணியம் 1. ஆடுவோர் கலை 2. ஆட்டுவிப்போர் கலை எனப் பாகுபடுத்துவார். தெருக்கூத்து, கரகாட்டம் போன்ற கலைகள் ஆடுவோர் கலைகளாகும். ஆட்டுவிப்போர் கலைகளில் தோற்பாவைக்கூத்து கட்டை பொம்மலாட்டம் போன்ற கலைகள் அடங்கும். தமிழகத்தில் பரவலாக இருக்கக்கூடிய கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து, காவடியாட்டம் போன்ற நிகழ்கலைகள் கொங்க நாட்டிலும் பெருவழக்காக உண்டு. சேலம் மாவட்டத்தில் உள்ள கட்டை பொம்மலாட்டம் (String Puppet) தமிழகத்தின் பிற பகுதிகளில் இல்லாத ஒரு அரிய நிகழ்கலை வடிவமாகும். சேலத்தில் ஓமலூர்க்கு அருகில் உள்ள ‘காருவள்ளி’ என்ற ஊரில் பல பொம்மலாட்டக் குழுக்கள் உள்ளன. அந்த ஊரில் உள்ள பெரும்பாலான மக்கள் பொம்மலாட்டக் கலைஞர்களாக விளங்குகின்றனர். பொதுவாக ‘ஶ்ரீ இராமவிலாச கட்ட பொம்ம நாடகசபா’ அல்லது ‘ஶ்ரீ லட்சுமி விலாச கட்டபொம்ம நாடக சபா’ என்ற பெயரிலேயே பொம்மலாட்டக் குழுக்கள் இயங்குகின்றன. ஒவ்வொரு பொம்மலாட்டக் குழுவிலும் பத்து முதல் பதினைந்து நபர்கள் வரை பணியாற்றுகின்றனர். இக்குழுவினர் ஒரு பெரிய நாடகக் கம்பெனி போல தை மாதம் முதல் ஆடி மாதம் வரை ஊர், ஊராகச் சென்று நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். லவகுசா, நல்லதங்காள், அரிச்சந்திரன், மார்க்கண்டேயன், ஒட்ட நாடகம், பவளக்கொடி போன்ற பல நாடகங்களை நடத்துகின்றனர். தஞ்சை, மாயவரத்திலும் ஓரிரு சட்டை பொம்மலாட்டக் குழுவினர்கள் (String Puppet). ஆனால் அக்குழுக்கில் பொம்மைகளை ஆட்டுவோர்(Puppeters) நாடகக் கதைப் பாடல்களைப் பாடுவதில்லை. ஆர்மோனியப் பாடகர்கள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்களைப் பாட அப்பாடல்களுக்கேற்ப பொம்மைகளைப் பிறர் ஆட்டுவார்கள். சேலம் பகுதிகளில் பொம்மையை ஆட்டுவோரே நாலலைக்கட்டை உச்ச சுதியில் அப்பாத்திரத்திற்குரிய நாடகட கதைப் பாடலைப்

பாடுவார்கள். சேலம் பொம்மலாட்டத்தில் முகவீணை என்ற குழலிசை இடம்பெறுவது சிறப்பானது. சேலத்தில் தெருக்கூத்தும் புகழ் பெற்ற நிகழ்கலை வடிவமாகும். தமிழகத்தில் புரிசைக் கண்ணப்பத்தம்பிரான் புகழ்பெற்ற கூத்துக் கலைஞர் ஆவார். இவருடைய கூத்திற்கும் சேலம் பகுதியில் ஆடுகின்ற தெருக்கூத்திற்கும் உடை, ஆட்டமுறை, கதை சொல்லும் முறை வேறுபாடு உண்டு. இவ்வாறு தமிழகத்தின் பிற பகுதியிலிருந்து வேறுபட்டதும், தனித்தன்மையுடையதுமான பல நாட்டுப்புற வழக்காறுகளும், நிகழ்கால வடிவங்களும் தொண்டைநாட்டில் இன்றும் வழக்கில் உள்ளன. நாட்டுப்புற ஆய்வில் ஒரு தனிப்பட்ட நாட்டினுடைய, ஒரு தனிப்பட்ட குழுவினுடைய வழக்காறுகளைப் பற்றிய ஆய்வினை 'இனப் பண்பாட்டு நாட்டுப்புறவியல் (Ethnography of Folklore) என்ற குறிப்பிடுவார்கள். தமிழ் நாட்டுப்புற ஆய்வில் தே. லூர்துவின் பழமொழி பற்றிய கட்டுரை இனப் பண்பாட்டு வழக்காற்றியல் ஆய்வில் முன்னோடியாகும். இத்தகைய ஆய்விற்கு வழக்காறுகளின் பாடங்கள் மட்டும் போதாது. பாடங்கள் வழங்கப்படும் சூழல்கள் பற்றிய முழுவிவரங்களும் களஆய்வில் திரட்டப்படவேண்டும் என்பார் தே.லூர்து. எனவே தொண்டை நாட்டில் விரிவான ஆழமான களஆய்வு மேற்கொள்ளப்படும்போது தொண்டை நாட்டுக்குரிய இனப் பண்பாட்டு வழக்காறுகள் பற்றிய முழுவிவரங்களையும் அறிய இயலும்.

தொண்டை நாட்டில் நாட்டுப்புறவியல் களஆய்வு

பொதுவாகத் தமிழகத்தின் தென்மாவட்டங்களிலும் வங்கக் கடற்கரையை யொட்டியுள்ள காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம் போன்ற சில மாவட்டங்களிலும் வழக்காறுகள் சேகரிக்கப்பட்ட அளவு தொண்டைநாட்டில் சேகரிக்கப்படவில்லை. மதுரை காமராசர் பல்பலைக்கழகம், பாளையங்கோட்டை தூயசவேரியார் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறவனங்களில் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு பிறந்து வளர்ந்ததால் தென் மாவட்டங்களில் வழக்குக்காறுகள் மிகுதியாகச் சேகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. தொண்டை நாட்டைப் பொறுத்தவரை க.கிருட்டினசாமி, பிரெண்டாபெக், செங்கோவரதராசன் ஆகியோரது களஆய்வுத் தரவுகள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன. 'தமிழர்

நாட்டுப்புறப் பாடல்கள்’ என்ற பொதுத்தலைப்பில் வெளிவந்துள்ளன. ஓரிரு நூல்களில் தொண்டை நாட்டுப்புற வழக்காறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் நா.வானமாமலையின் ‘தமிழர் நாட்டுப்பாடல்கள்’ என்ற தொகுப்பில் கு.சின்னப்ப பாரதி, வாழப்பாடி சந்திரன், சடையப்பன் ஆகியோர் சேகரித்த தொண்டை நாட்டுப்புற வழக்காறுகள் இடம்பெற்றுள்ளன. மேலும், கொங்கு நாட்டில் வழக்கில் உள்ள கொலைச்சிந்துக் கதைப்பாடல்கள் ஆய்வேடுகளிலும் நூல்வடிவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொடக்க காலத்தில் தொண்டைநாட்டு வழக்காறுகள் மீது ஆர்வம் கொண்டடு எழுதியவர்களில் கோவைக்கிழார் குறிப்பிடத்தக்கவர். அவருடைய ‘எங்கள் நாட்டுப்புறம்’ என்ற நூல் களஆய்வு அடிப்படையில் எழுதப்படாவிட்டாலும் அவர் காலத்து நாட்டுப்புற வழக்காறுகள் சிலவற்றை அந்நூலில் பதிவு செய்துள்ளார். கொங்க நாட்டு வழக்காறுகளில் தனித்தன்மை பெற்ற அண்ணன்மார் சுவாமி கதைப்பாடல் குறித்த ஆய்வில் சக்திகனல், கோ.ந.முத்துக்குமாரசாமி ஆகியோர் ஆய்வாளர்கள் பலர் தொண்டைநாட்டில் திரட்டியுள்ள பல வழக்காறுகள் நூல் வடிவம் பெறாமல் ஆய்வேடுகளாகவே உள்ளன. இப்பின்னணியில் தொண்டைநாட்டில் வழக்கில் உள்ள கதைப்பாடல்களைத் திரட்டும் நோக்கில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அக்களப் பணியின் அணுகுமுறையினையும், அனுபவங்களையும் விரிவஞ்சிச் சுருக்கமாக கீழ்வருமாறு தொகுத்துக் காணலாம்.

அவ்வூரில் திருமான் என்ற அண்ணன்மார் கதை பாடும் தொழில்முறைக் கலைஞர் ஒருவர் இருந்தார். அவருக்குக் கருப்புசாமி பாடிய பாடல்கள் தெரியவில்லை. எனினும் கருப்புசாமி பாடும் கதைப்பாடல்களைத்தான் முன்னர் கேட்டிருப்பதாகவும் திருமான் கூறினார். கருப்புசாமி கதைப்பாடும் போது திருமான் ‘பின்பாட்டு’ பாடி உதவி செய்தார். அவ்வூரில் பின்பாட்டு பாடுவதைப் ‘பன்னாங்கு’ பாடுதல் என்று குறிப்பிடுகின்றனர்.

தொகுப்புரை

வழக்காறுகளின் வழி பண்டையத் தமிழர் பழக்க வழக்கங்களினால் அறிய முடிகிறது. வாய்மொழி வழக்காறுகள் மக்களிடையே பரவி வருவதையும் அறிய

முடிகிறது. வழக்காறுகளைப் பற்றி ஆராய்வதன் மூலம் மொழியோடு, வாழ்வோடு இணைந்த ஆய்வாக வழக்காறுகள் வாழ்வியலோடு இணைந்து காணப்படுகின்றன. தொண்டை மண்டலத்தில் கோவில்களிலும், மக்களிடத்திலும் வழங்கி வந்த வழக்காறுகள் பற்றி அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. அகநானூறு - பா. எண். 9, 3:6
2. குறுந்தொகை - பா. எண். 7, 13: 19
3. சுப்புரத்தினம் மா. பெரியார் மாவட்டம்
   கல்வெட்டு அரசியர் சமூகப்பொருளாதார ஆய்வு - ப. எண். 27
4. சிலப்பதிகாரம், உரைபெறு கட்டுரை - பா. எண். 12: 47
5. சம்பந்தர் தேவாரம், விசயமங்கை பதிகம் 7. - ப. எண். 47

முடிவுரை

தொண்டைநாட்டு வைணவத் திருப்பதிகள் என்ற தலைப்பில் முதல் இயலில் களமும் களப்பணியும் என்ற பொருண்மையில் காஞ்சிபுரம், தொண்டைநாடு இவற்றின் அமைவிடம், சிறப்புகள், வரலாறு, காஞ்சிபுரம் கோயில்கள், இலக்கியப் பதிவுகள், மக்கள்தொகை, காஞ்சி மாநகரின் பல்வேறு பெயர்கள், வைகுண்டப் பெருமாள், திருவட்டபுயகரத்து எம்மான், உலகளந்தபெருமாள், வைகுண்டப் பெருமாள், காஞ்சியில் ஆறு புறம், திருக்கடிகை அக்காரக்கனி, எவ்வுள் கிடக்கும் பெருமலை,நின்றவூர் நித்தலம், அல்லிக்கேணி அச்சுதன், நீர்மலைநீர்வண்ணன், திருஇடந்தை எம்பெருமான், கடல்மல்லைக் கிடக்கும்கரும்பு, நாட்டுத்தலங்கள், ஆயிந்திரபுரத்துத் தெய்வநாயகன் தலவரலாறு, திருகோவலூர்த் தீங்கரும்பு, வைணவக் கோவில்கள் ஆகியவை பற்றிய தலவரலாறுகள், தெய்வத் தோற்றுக் கதைகள், ஆழ்வார் பாசுரங்கள், கோவில் அமைப்புமுறைகள், தெய்வத்தின் சிறப்புகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. வைணவக் கோயில்களான இவை பெருந்தெய்வ வழிபாட்டின் அடிபப்டையில் அமைந்துள்ளதைக் காணலாம், இராண்டாவது இயலான வழிபாட்டு மரபுகள் தலைப்பில் வழிபாடு பற்றிய விளக்கம், வழிபாட்டின் சிறப்பு, தமிழர் வழிபாட்டுமுறைகள், மரபுரீதியான வழிபாடு, காஞ்சியின் பெருமைகள், திருமால் பெருமை, மூன்றுமணிகள், பல்லிதோஷம் நீக்கும் காஞ்சி, மலரில் அவதரித்த மழலைத் தாயார், பல்லிகளாக மாறிய பாலகர்கள் ஆகியவை குறித்த செய்திகளும் அரிய தகவல்களும் அடங்கி உள்ளன. அத்திவரதர் பற்றிய செய்திகளும், தீயால் எழுந்த வரதராஜர் வரலாறும், விளக்கொளிபெருமாள் தோற்றமும், அஷ்டபுஜப் பெருமாள் சிறப்புகளும், வேகவதி ஆறு தோற்றமும், சொன்னவண்ணம் செய்த பெருமாள் கதையும், புராணப் பின்னணி வரலாறுகளும், அத்திவரதர் அனந்தசரசுக்குள் இருந்தவரலாறு, காஞ்சிபுரத்தில் அத்திவரதர் வழிபாடு, புனைவுகள் பெருமாளின் பிற வழிபாடுகள் பற்றிய செய்திகளும், அட்டபுயகரத்து அம்மன் வழிபாடுமரபுகள், உலகளந்த பெருமாள்

வழிபாடுகள், விழாக்கள், மாமல்லபுர தலச்சிறப்புகள் ஆகியவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. வழிபாட்டுமரபுகள் பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை ஆகம விதிகளின் படிநடை பெறுகின்றன. நாட்டுப்புற வழக்காறுகள் என்ற மூன்றாவது இயலில் கிராமப்புற தெய்வங்களான மாரியம்மன், முனீஸ்வரன், கருப்பராயன், காளிஅம்மன் போன்ற தெய்வங்கள் பற்றிய தோற்றக் கதைகளும், பாடல்களும், வரலாறுகள் அவற்றின் வழிபாட்டு பூஜைகளும், தெய்வங்கள் பற்றிய பாடல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம்மூன்று இயல்களில் அடங்கிய முதன்மைச் செய்திகளுக்கு சுப்புரெட்டியார் எழுதிய தொண்டைநாட்டு வைணவத் திருப்பதிகள் என்ற நூலில் இடம் பெற்றசெய்திகளே சான்றுகளாகத் திகழ்கின்றன. மேலும் கள ஆய்வுத் தகவல்களும் அடங்கியுள்ளன.

துணை நூற்பட்டியல்

சுப்புரெட்டியார். ந	2018	**தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** அண்ணாநகர், சென்னை.
தேவராஜன். தே.ந.ச	2002	**வைணவமும், ஆழ்வார்களும்** ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை – 600 017.
தேவராஜன். தே.ந.ச	2006	**108 வைணவ திவ்விய தேசங்கள் (பாகம்.1, 2)** ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை – 600 017.
வேங்கடகிருஷ்ணன்	1981	**தொண்டை நாட்டுத் திருத்தலங்கள்** **கீதாசார்யன்,** மூன்றாம் ஆண்டுமலர், சென்னை.
சக்திவேல். சு	1992	**நாட்டுப்புற இயல் ஆய்வு,** மணிவாசக பதிப்பகம், சென்னை.
இராமநாதன். ஆறு	2017	**தமிழர் வழிபாட்டு மரபுகள் (நாட்டுப்புறதெய்வ வழிபாட்டு ஆய்வு)** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

தினகரன்	(ஆன்மிக மலர்)	29.06.2019	(ப. 3,4,5,6)
தினகரன்	(ஆன்மிக மலர்)	03.08.2019	(ப. 5)
தினத்தந்தி	(ஆன்மிக மலர்)	17.07.2019	
தினகரன்	(ஆன்மிக மலர்)	17.08.2019	
தினமலர்	(ஆன்மிக மலர்)	29.06.2017	
தினத்தந்தி	(ஆன்மிக மலர்)	05.04.2016	

வினா நிரல்

1. காஞ்சிபுரத்தின் சிறப்புகளை பற்றி சொல்லுங்கள்?
2. காஞ்சிபுரத்தின் வைணவ திருப்பதிகளின் வழிபாடு எவ்வாறு நடைபெறுகிறது?
3. வழிபாடு செய்யும் போது என்னன்ன பொருட்கள் வைத்து பூஜை செய்வீர்கள் என்று சொல்லுங்கள்?
4. காஞ்சிபுராணத்தில் கூறப்படும் ஒற்றுமை வேற்றுமை என்னன?
5. அத்திவரதர் பற்றி நீங்கள் தெரிந்ததை சொல்லுங்கள்?
6. வைணவ திருப்பதிகளின் பொதுவாக காணப்படும் செய்திகளை சொல்லுங்கள்?
7. வரதராஜ பெருமாள் பற்றி உங்களுக்கு தெரிந்ததை சொல்லுங்கள்?
8. காங்சிபுரத்தின் வழக்காறுகள் பற்றி சொல்லுங்கள்?
9. வைணவ திருப்பதிகளில் காணப்படும் திருவிழாக்கள் பற்றி சொல்லுங்கள்?
10. தொண்டைமண்டலத்தின் சிறப்புகளைப் பற்றி சொல்லுங்கள்?
11. காஞ்சியின் வரலாறு பற்றி சொல்லுங்கள்?
12. காஞ்சிபுரத்தை பற்றி கூறும் நூல்களை பற்றி சொல்லுங்கள்?
13. திருமாலின் பெருமையை பற்றி சொல்லுங்கள்?
14. காஞ்சியில் பல்லி தோஷம் நீக்கும் விதத்தை பற்றி சொல்லுங்கள்?
15. சொன்ன வண்ணம் செய்த பெருமாள் வழிபாடு பற்றி சொல்லுங்கள்?
16. அத்திவரதா் அனந்த ஸரசுக்குள் இருந்ததின் வரலாற்றை பற்றி சொல்லுங்கள்?
17. காஞ்சி வைணவத்தின் வார விழாக்களைப் பற்றி சொல்லுங்கள்?
18. மாமல்லபுரம் தலச் சிறப்புகள் பற்றி சொல்லுங்கள்?
19. தொண்டை நாட்டின் அரசியல் வரலாற்றினை பற்றி சொல்லுங்கள்?
20. தொண்டை நாட்டின் குடிமக்கள் பற்றி சொல்லுங்கள்?
21. தொண்டை நாட்டின் இயற்கை அமைப்பு பற்றி சொல்லுங்கள்?
22. தொண்டை நாட்டின் நிகழ்கலைகள் பற்றி சொல்லுங்கள்?

தகவலாளர் பட்டியல்

வ. எண்	பெயர்	முகவரி	வயது	கல்வி	தொழில்	சாதி	சந்தித்த நாள்
1.	வேணுகோபால்	காஞ்சிபுரம்	55	12	கோயில் வழிபாடு	பிராமணர்	15.6.19
2.	பார்த்தசாரதி	திருக்கோவிலூர்	73	-	”	”	”
3.	நந்தகோபாலன்	”	60	7	”	”	16.6.19
4.	ஸ்ரீகிருஷ்ணா	உத்திரமேரூர்	57	10	”	”	”
5.	கோபாலன்	சோளிங்கபுரம்	72	3	”	”	17.6.19
6.	ஸ்ரீகந்தன்	சோளிங்கபுரம்	66	5	”	”	18.6.19
7.	ஸ்ரீராமன்	பிள்ளையார் பாளையம்	69	6	”	”	19.6.19
8.	ராமானுஜர்	காஞ்சிபுரம்	79	-	”	”	”
9.	ஸ்ரீஅம்பி	காஞ்சிபுரம்	58	3	”	”	”
10.	சீனு	மாமல்லபுரம்	56	10	”	”	”

நிழற்படங்கள்

அத்திவரதர்

உலகளந்த பெருமாள்

வைகுண்ட பெருமாள்

அல்லிகேணி அச்சுதன்

வரதராஜ பெருமாள்

LIFETIME ACHIEVEMENT

First Paper: *என்ன ஆச்சரியம்?* "Enna Aacharyam !" [1949]

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : 135 + 1
Papers Published : 200 [Tamil 173 + English 27]
Endowments established: 10
Endowment Lectures : 12
Awards received: 8
Prizes won : 14
Titles conferred : 8

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2019 (leading to PhD)

ISBN: 978-81-943850-2-8
9 788194 385028

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]